பட்டினத்துப் பிள்ளையார்

திருப்பாடல்கள்

முதற் பகுதி

கழக வெளியீடு

பட்டினத்துப் பிள்ளையார்
திருப்பாடல்கள்

(முதற் பகுதி)

விளக்கவுரை :

கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர்
ப. இராமநாத பிள்ளை

Ed. : Feb. 1967

PATTINATHUP PILLAIYAR TIRUPPAADALKAL

PART ONE

PAARI ACHAKAM, MADRAS-1.

பதிப்புரை

செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவத்து இறை நூல் எனப்படும் மறைகள் பன்னிரு திருமுறைகளாகும். இவை வழிபாட்டு நூலெனவும் வழங்கப்பெறும். இவற்றின் பிழிவாகிய மெய்கண்ட நூல்கள் வரம்பிலின்ப நூல்கள் எனப்படும். "வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்பது காண்க.

பன்னிரு திருமுறைகளுள் "பட்டினத்துப் பிள்ளையார்" திருவருளால் பாடியருளிய திருப்பாடல்கள் பதினொராந் திருமுறைக்கண் தொகுக்கப்பட்டுள்ளன. இத்திருமுறையில் இறைவனுள்ளிட்ட அருளாசிரியர்கள் பன்னிருவராவர். அவர்களால் பாடியருளப்பட்ட பனுவல்கள் நாற்பதாகும். அவற்றின் திருப்பாடல்கள் ஆயிரத்து நானூற்றெண்பத் (பக்கம் 15) தெட்டாகும்.

பிள்ளையார்தம் பனுவல்கள் பதினொராம் பகுதியில் தொகுக்கப்பட்டுள்ளன. அவை ஐந்தாகும். அவ்வைந்தும் ஒருபுடையொப்பாகச் "சிவயவசி" (பக்கம் 28) என்னும் பெருமறையின் அமைவாகும். மேலும் அவ்வைந்தும் முறையே சீல முதல் நான்கும் அவற்ருலாம் பெறுபேறும் அவற்றை விளக்கும் பான்மையும் காணலாம். பின்னும் அறம், பொருள், இன்பம், வீடென்னும் உறுதிப் பொருள் நான்கும் நன்கு வலியுறுத்தப்பட்டுள்ளன. இல்லறத்தின் மாண்பும் அடிப்படையும், அதன் வாயிலாக அமையும் துறவறத்தின் துப்பும் உணர்த்தப்பட்டன. பொய்த்தவம் விடுத்து மெய்த் தவமாம் பத்தி நெறியும், அதன் உயிராம் திருவைந் தெழுத்தும், இவற்றின் காவலாம் சிவனடியார் திருத் தொண்டும் திறம்படத் தெளித்துரைக்கப்பட்டுள்ளன. இவ் வனைத்தும் செந்தமிழன்பர்களுக்கும் செந்நெறிச் செல்வர்

களுக்கும் வாழ்க்கைக் கருவூலவைப்பாகும். பிள்ளையார் காலம் இரண்டாம் வரகுணன் காலமாகிய ஒன்பதாம் நூற்றாண்டென்பர்.

இவ்வரிய நூலுக்குக் கழகப் புலவர், சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்களைக்கொண்டு திருமுறை சித்தாந்த நூல்களின் சிறந்த முந்நூற்றுக்கு மேற்பட்ட மேற்கோள்களுடன் விளக்கவுரை எழுதுவித்து முதற்பகுதியாக இது வெளிவருகிறது. பிற்காலத்துப் பாடல் களும் பெருமழைப் புலவர் திரு. பொ. வே. சோமசுந்தரனார் விளக்கவுரையுடன் தொடுத்து வெளிவருகிறது. உரை யாசிரியர்களுக்குக் கழகத்து நன்றி உரித்தாகுக.

அன்பர்கள் யாவரும் வாங்கி ஓதியும் ஓதுவித்தும் இன்பமெய்துவாராக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

முன்னுரை

"பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்
ஆருந் துறக்கை அரிதரிது—நேரே [போல்
மனத்துறவும் அப்படியே மாணு இவற்றில்
உனக்கிசைந்த வாறென்றே ஓர்."

—தாயுமானவடிகள், உஅ. உடல் பொய்யுறவு-௩௭.

நற்றவ நாற்குலப் பாகுபாட்டிற்கு அடிப்படை வித்துப் போன்று திகழ்பவர் விழுமிய வேளாண் குலத்து விழுச் செல்வரேயாவர். இவர் பிள்ளையென்னும் பெரும் பெயருடன் அழைக்கப் பெறுவர். பிள்ளை யென்னும் திருப்பெயர் சிவ பெருமானுக்கு உரியதாகும். அம் முறையில் அப் பெருமானின் அறிவாற்றற்றொடர்புக்கும், அருள் அடியார்க்கும் அத் திருப் பெயர் வழங்கிவரும் வாய்மையறிக.

அவ்வுண்மை வருமாறு :

அதிராவடிகள் பாடியருளிய "மூத்த பிள்ளையார் திருமும் மணிக்கோவை" நம்பியாண்டார் நம்பிகள் பாடியருளிய "ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி" முதலியனவற்றான் உணரலாம்.

வேளாளரின் ஒரு பிரிவே வாழ்க்கை நூலாகிய தனித் தமிழ்த் திருமாமறையும், வழிபாட்டு நூலாகிய தனித்தமிழ்த் திருமாமுறையும், வரம்பிலின்ப நூலாகிய மெய்ந்நூல்களும் திருவருளான் ஆக்கியும், அறிவுறுத்தியும், அம்முறையான் வழி பாடியற்றியும், இயற்றுவித்தும் வரும் இயல்பு வாய்ந்த சைவ அந்தணர் பிரிவாகும். அதுபோல் கொண்டு விற்றலாகிய வணிகம் புரிவோர் சைவச் செட்டியாராவர். நாடு காப்போர் சைவ வேந்தராவர். உழுதும் உழுவித்தும் உண்போர் சைவ வேளாளர் எனவும், பிள்ளைமார் எனவும் சிறப்பாக அழைக்கப் பெறுவர்.

சிவபெருமான் திருவருளின் திருத்தூண்டுதலால் வெளிப் போந்துள்ள தனித்தமிழ்த் திருமாமுறைகள் பன்னிரண் டாகும். இவை செந்தமிழுக்கு உயிர் என்னும் சிறப்புத் தோன்ற அத் தமிழின் பன்னிரண்டு உயிரெழுத்துப் போன்று பன்னிரண்டாக அமைந்து திகழ்வனவுங் காண்க.

இத் திருமுறைகள் பன்னிரண்டுக்கும் இலக்கணம் போன்று அமைந்து திகழ்வன வரம்பிலின்ப மெய்ந்நூலாம்

தனித்தமிழ்ச் சிவஞான போதநூலின் நூற்பாப் பன்னிரண்டும் ஆகும்.

அவற்றுள் பதினொராம் நூற்பா, விழுமிய முழுமுதல்வனும் தென்றமிழ்ச் சிவபெருமான் ஆருயிர்கள் உய்யும் பொருட்டு அவ்வுயிர்களுடன் ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்கும் மெய்ப் புணர்ப்புத் தன்மையில் அவ்வுயிர்கள் அழுந்தியறியும் நுகர் புலன்களைத் தானும் அழுந்தாதறிவன் என்பதாம். அது வருமாறு :

"காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காணஉள் ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே."

—சிவஞானபோதம், நூற்பா, கக.

இந் நூற்பாவின் முதலதிகரண மேற்கோள் : "ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை யுணரு மேன்றது." இதன்கண் அவனும் காண்பன் என்பது, பெறப்படுதல் காண்க.

நல்லாசான் மாணவச் செல்வனுக்கு ஓதுவிக்குங்கால் தான் ஓதுவது போன்று, பாட்டுவிக்குங்கால் தான் பாடுவதும் வேண்டுமாகலான் அம்முறையில் முதல்வனும் செவ்விவாய்ந்த ஆருயிர்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடுதற் பொருட்டுத் தான் பாடியருளுதலும் வேண்டும். இவ்வுண்மை வருமாறு :

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணு தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே."

—சு. கூ௫-௯.

(ஆட்டுவித்த லாம்படைப் புங்காப் படக்கொடுக்கும் ஓட்டல்மறைஅுன் றருளொன் றின்பு.)

முதல்வன் அருளிய திருமுகப் பாசுரம் வருமாறு :

"மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற

கன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
குரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்குஞ் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே."

—௧௧-திருமுகப் பாசுரம்-௧.

(இத் திருப்பாட்டின் அடிகள் பன்னிரண்டாகும். இப் பன்னிரண்டடியும் மூவகை நந்நான்காகப் புலனுகின்றன. இம் மூவகையும் ஒருபுடை யொப்பாக அன்பு, அறிவு, ஆள்வினை என்னும் இச்சை ஞானம் கிரியையின் புலப்பாட்டுக் குறிப்பு மாகும்.) அடி பன்னிரண்டால் திருமுறை பன்னிரண்டென் பதும், பதினோராந் திருமுறை அருளாசிரியர் பன்னிருவர் என்பதும் குறிப்பிற் புலனும்.

பதினோராந் திருமுறைக்கண் காணப்படும் பட்டினத்துப் பிள்ளையார் பனுவல் ஐந்தாகும். அவை முறையே ௧. கோயில் நான்மணிமாலை உ. திருக்கழுமல மும்மணிக் கோவை ௩. திரு விடை மருதூர் மும்மணிக் கோவை ௪. திருவேகம்ப முடை யார் திருவந்தாதி ரு. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது என்பன.

௧. கோயில் நான்மணிமாலை :

இது கடை முதலாகத் தொடங்கலெனப்படும் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. இதன்கண், "அம்பலத்தே கூத்துகந்தான் கொற்றக்குடைச்" சிறப்பும் "தொண்டர்க் கேவல் செய்து வாழ்தல் களிப்புடைத்" தென்பதும், "உடை யான் உயர்தில்லை அம்பலமே" மொழிவதல்லால் "பிறர்பால் இச்சை உரையோம்" என்பதும், முதல்வன் "திருமணச் சிறப்பும், பத்துறுப்பும், விரையாக்கலியெனும் ஆணையும், தமர் பெயரெழுதிய வரிநெடும் புத்தகத்து என்னையும் எழுத வேண்டுவன்" என்பதும், "ஆதரித்த மாலும் அறியாத் திருவடி" என்பதும், "திருநடச் சிறப்பும்" "நஞ்சுண்ட நயமும்" "ஆடும் அம்பலக்கூத்தனைப் பாடுதல் பணிதல் இலாதவர்" மறலியை மறந்த மதியினர் என்பதும், "பாம்பு

தேரையை வவ்வு" மொப்பும் முறையே எட்டுத் திருப்பாட்டுக்களிலும் காணப்படும். கக ஆம் திருப்பாட்டில் காதலித்த நங்கையின் கையறுநிலை காணப்படும். கஉ ஆம் பாட்டில் இருவர் தேடியும் அறியாவண்ணம் செறிந்த முதல்வன் யாவருங் காண அம்பலத்தாடுதல் அத்துணை வியப்பன்று; பொக்கமிக்க தன்னெஞ்சகத்து நுழைந்ததே வியப்பென்பதும் காணப்படும்.

கரு ஆம் திருப்பாட்டில் முதல்வனைக் "கரன், அரன், தரன், புயன், தில்லை, இறை, அரசு என்னும் எழுவகை மந்திர மொழிகளால் வழுத்தி எழுவகைப் பிறப்பும் உய்யுமயனும் உயர்வற உயர்ந்த உயர் தொண்டில் புகாது "இளைய மட மங்கையர் தம் குழல், நுதல், நகை, முலை, இடை, அடி" என்னும் ஆறு[1] உறுப்புக்களையும் அவ்வவற்றிற்கியைந்த அரிய உவமைகளுடன் உளமயங்கிக் கூறிப் பிறப்பினை வறிதாக்கிச் "சிலர்நர குறுவர் அறிவின்றியே" என்பன தெளித்துக் காட்டப்பட்டன.

கசு ஆம் திருப்பாட்டில் "மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்" என உடம்பினைக் கடலோடும் நாவாயாகச் சிறந்த முறையில் உருவகித்து அக் கலம் கவிழா முன்னம் "அருளென்னும் நலத்தார் பூட்டித், திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்" என அருளினர்.

உ0 ஆம் திருப்பாட்டில் உழவு முதலாம் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் பல்வகைத் தொழில்களும், "ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றுப், கடவுட் கண்ணுதலின்" திருமேனிக்கண் பாதமுதலாகச் சொல்லப்படும் எழுவகை இயல்புகளும் "கண்ணிடைப் பொறித்து மனத்திடை அழுத்தியாங்கு, உள்மகிழ்ந் துரைக்க உறுதவஞ் செய்தனன்" அதனல் "பெறுதற் கரியதோர் பேறு பெற்றேற்கு, உறுதற் கரியதும் உண்டோ" என்பதம் காணப்படும்.

உரு ஆம் பாட்டில் தில்லை மடமங்கையர் தம் வடிவெழுதும் அருமை காணப்படும்.

உசு ஆம் திருப்பாட்டில் "தாளின் ஏவல் தலையின் இயற்றலும், ஐந்தெழுத் தவைஎஞ்சிந்தையிற் கிடத்தி, கனவினும் நவிற்றும் காதலேம்" எனலும், தொண்டெலாம் முதல்வன் தொண்டே புரிதலும், எங்குஞ் சிவனிறைவெய்திடப் பெறலும் சிவன்றன் முழு முதன்மையும் பிறவும் ஓதப்பட்டுள்ளன.

---

1. 'இகல்வேந்தன்' கலித்தொகை க0அ.

உஅ ஆம் பாட்டில் "ஆடும் பிரானை அடைந்து பணியாதார் பிணமெனப் பேர்பெற்றுச் சாவர்" என்பது காணலாம். உஅ ஆம் பாட்டில் ஞாலத்து நிலையாமையும், வாழ்வு முதலிய பலவும் மாறி மாறி வருதலும், ஆசைச் சங்கிலியாற் பிணிப்புண்டு பிறந்திறந்துவரும் துன்பெய்தற்குப் "பன்மீன், விட்டில், யானை, புள், வண்டு ஐந்தும் ஐம்பொறியொப்பாகவும் தானே சமைத்த தன்னூற் சிறையில் அகப்பட்டுத் தடுமாறும் தன்மை சேர் துந்துழியொப்பும், இவை நீங்க" "மறவா மனத்து மாசறு மடியார்க்கு, அருள்சுரந்தளிக்கும் அற்புதக் கூத்தனை இறைவன் என்று எஞ்ஞான்றும் வழுத்தல் வேண்டும்" என்பதும் காணலாம். துந்துழி - சிலந்தி.

ஙஉ ஆம் பாட்டில் "இளமை, மூப்பு, மரணம்" முதலிய வற்றின் நீக்கமும் வரவும் கடிதினெய்துதற்குரிய ஒப்பும், நன்று, தீது, ஒன்றினும் படாதனவாகிய செய்கையின் இயல்பும், சிவபெருமானின் அருமையும், எளிமையும் "அருள் நடங்குயிற்றும் ஆதிவானவனே, இரப்பதொன்றுடையம், நின்வயின் நினைக்குமா நினைக்கப்பெறுதல் அருளல்வேண்டும்" என்பதும் பெறப்படும்.

ஙங ஆம் பாட்டில் "அம்பலத்தை வந்திப்பார் வேண்டாத வாழ்வு வானோர் பணிய மணியாசனத்திருத்தல்" என்பது காணலாம். ஙச இல் சிவபெருமான் "சடுலநஞ்சுண்டிலனேல் தேவர் அன்றே மாள்வர்" என்பது பெறப்படும்.

ஙரு ஆம் பாட்டில் "ஆனுச்செல்வத்து வானோர் இன்பம் அதுவே எய்தினும் எய்துக, நிரயம் சேரினும் சேர்க" இன்னும் "மாறுபட்ட தன்மை பலவஞ்செய்தினும் எய்துக, "வேண்டலும் வெறுத்தலும் இன்றி" இருப்பது "நின் அடியரொடுங் குழுமித், தெய்வக்கூத்தும் நின் செய்ய பாதமும், அடையவும் அணுகவும் பெற்ற, கிடையாச் செல்வம் கிடைத்தலான்" என்பது காணலாம்.

ஙகூ ஆம் பாட்டில் உலக வாழ்க்கையின் உறும் இழிவும் இன்னலும், "தில்லைநகரிற் செம்பொன் அம்பலமேவிய சிவனை நினைக்குஞ சதுரே" சிறந்ததென்பதும் காணலாம்.

சo ஆம் திருப்பாட்டில் தனித்தமிழ் மந்திரமாம் போற்றித் தொடர் இருபத்தைந்து காணப்படுகின்றன. அவற்றை நான்கு முறையோதி நம கையால் பூச்சொரிந்து வழிபடின் நூறு நிறை போற்றி அருச்சனையாகும்.

அவை வருமாறு :

க. ஆழி உ. அளகை ங அளித்தல் ச அருந்தல் ரு. வீரம் சா. கண்ணுதல் எ. உரித்தல் அ. கோலம் கூ. நெரித்தல் க0. தண்டம் கக. பரிகலம் கஉ. உண்டல் கங. கைவளம் கச. சேவகம் கரு. ஒப்பனை கசா. செஞ்சடை கஎ. நீளம் கஅ. சூலம் கக. ஏறு உ0. பாகம் உக. மாநகர் உஉ. அம்பலம் உங. நாடகம் உச. பூவடி என்பனவாம். இவற்றுடன் ஈற்றின்கண் "போற்றி போற்றிநின் பொலம்பூ வடிக்கே" என வருவதன்கண் ஒருபோற்றி கூட இருப்பதுஞ் சேரப் போற்றித் தொடர் இருபத்தைந்தாகும். இப்போற்றித் தொடர்களால் சிவபெருமானின் விழுமிய முழுமுதற்றன் மையும், அவன் தண்ணளி மிகுதியால் செய்தருளிய அருளுந் தெறலும் ஆகிய நன்மைப் பாகுபாடுகளும் நன்கு உணரலாம்.

உ. திருக்கழுமல மும்மணிக்கோவை.

இத்திருவூராம் நன்னகர் "ஞானசம்பந்தர்" திருவருளால் திருத்தோற்றமுற்றருளிய திருப்பதியாகும். ஊழிகளிலும் அழியாது நிலைத்து நிற்கும் பழியிலாப் புகழ்ப்பதி. இம்முறையில் ஊழிகள் பன்னிரண்டிலும் அழியாது நின்ற அருமைப் பாடுடையது. அப்பன்னிரண்டு திருப்பெயரும் வருமாறு :

"பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருப் பெருநீர்த்தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ்சிரபுரம் புறவஞ்சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய முள்ளிட்டங்காதியாய
பரனூர் பன்னிரண்டாய் நின்றதிருக்கழுமலம் நாம் பரவுமூரே".
—உ, எ0-க.

இத்திருப்பாட்டை முதலாகக்கொண்டு திகழும் திருப்பதிகம் "செழியனும் பிள்ளையார்தம் திருமேனி காணப்பெற்று, விழியுற நோக்கலாலே வெம்மை நோய் சிறிது நீங்கி அழிவுறு மனநேர் நிற்க அந்தணர் வாழ்வை நோக்கிக் கெழுவுறு பதியாதென்று விருப்புடன் கேட்டபோது" திருவாய் மலர்ந்தருளியதாகும். அவ்வுண்மை வருமாறு :

"பொன்னிவளந் தருநாட்டுப் புனற்பழனப் புறம்பணைசூழ்
கன்னிமதிற் கழுமலநாம் கருதுமூர் எனச் சிறந்த
பன்னிரண்டு பெயர்பற்றும் பரவியசொல் திருப்பதிகம்
தென்னவன்முன் பருள்செய்தார் திருஞான சம்பந்தர்."
—கஉ, சம்பந்தர், எ௫ச.

"பிரமபுரம்" முதலிய பன்னிரு திருப்பெயரைப் பக்கம் அஎ-ஓம் காண்க.

முதல் திருப்பாட்டின்கண் அப்பனும் அம்மையும் இணைந்து வீற்றிருந்தருளும் இயல்பினுக்கு உவமமொடுபடுத்த ஒப்பனையும், ஞானசம்பந்தர்க்குத் திருமுலைப்பால் அளித்தருளிய சிறப்பும், அப்பெருமானார் "அவனைக் காட்டுவன், அப்ப வானார், தோஒ டுடைய செவியன் என்றும், பீஇ டுடைய பெம்மான் என்றும், கையில் சுட்டிக் காட்ட, ஐயநீ வெளிப் பட்டருளினை ஆங்கே." எனத் திருவாய் மலர்ந்தருளிய திறனும் வழுத்தப்பட்டுள்ளன.

ச ஆம் திருப்பாட்டில் வாலாமையோடு கிடந்த சிந்தையை வாலிதாக்கிக் "கீழ்மையில் தொடர்ந்து கிடந்த என் சிந்தைப் பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச், சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு, எந்தைக் கிருக்க இட்டனன்" என்னும் எழிலும், பிறவும் காணலாம்.

எ ஆம் திருப்பாட்டில் தாய் தந்தையர்க்கு மகவாப் பிறத்தலும், தாய் தந்தையராகி மகவினைப் பெறுதலும் ஆகிய பிறப்புக்கள் அளவில்லன என்பதும், அஞ்செழுத்தின் அருமையும், அடியரொடு பயிலும் பெருமையும் "இயன்றதோர் பொழுதில் இட்டது மலராச், சொன்னது மந்திரமாக என்னையும், இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின், கடற்படா வகை காத்தல்நின் கடனே" என்னும் வேண்டுகோளும் ஈண்டிய சிறப்போடு காணலாம்.

அ ஆம் பாட்டில் "முக்கட்பெருமான் கழுமலத்தைக் கைதொழாதார், முழுமலத்தை ஓர்கிலார் எனவும், கo ஆம் பாட்டில் "முன்னாள் நிகழ்ந்த பன்னிருகத்து வேறு வேறு பெயரின் ஊறின்றியன்ற, மையறு சிறப்பின் தெய்வத்தன்மைப் புகலிநாயக" எனவும், "திருவருள் நாட்டம் கருணையிற் பெறலும், யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி, மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை" எனவும், அதற்காம் ஓவிய ஒப்பும் காணப்பட்டுள்ளன.

கஉ ஆம் திருப்பாட்டில் தோணிபுரேசர் திருவடி வழிபாட்டிற்கு "ஏதம் பெறுவிடில் நெஞ்சுண்டு" என்னும் இனிமையும், எளிமையும் ஏற்றமும் கூறப்பட்டமை காணலாம்.

பழம் பதிப்புக்களில் பன்னிரண்டு திருப்பாட்டுக்களே காணப்படுகின்றன. அவற்றுடன் இக்கோவை நிறைவுறு

மாறில்லை. எஞ்சிய பாடல்கள் அந்தாதித் தொடைமுறையால் அமையப்பெற்றும் நடை முதலியவற்றால் வேறுபடாதும் காணப்படுகின்றன கொண்டு பின்னுள்ளோர் பதித்த பதிப்புக் களில், அவற்றையும் சேர்த்து நிறைவு செய்துள்ளனர்.

௧௩ ஆம் திருப்பாட்டில் "சைவ சித்தாந்தத் தெய்வ வாகமக்" குறிப்பும், அஞ்சலென்னும் திருக்கையும், சிவகுரவன் திருவருளால் எழுந்தருளிச் செய்யும் சிறப்பனைத்தும் திருப் பாற்கடல் கடைந்தெடுத்த திருவமுதுடன் இணைத்துக்காட்டும் ஒப்பும், இன்பம் பெறுமியல்பும் இயம்பப்பட்டுள்ளன.

௧௬ ஆம் பாட்டில் உடம்பினை நாவாயாக உவமமுடன் மிகச் சிறப்பாக உருவகிக்கப்பட்டுள்ளதும், பிறப்புத் துன்பம் நீங்கிப் பெருமான் திருவடிச் சிறப்புறப் புணையென "வீற்றினி திருக்க வேற்றமெய்ப் பிரணவத், தோணியே பற்றெனத் துணிந்து, காணுறு மறிவொடு கண்டுகொண் டேனே" என்பதுங் காணலாம்.

௧௯ ஆம் பாட்டில் ஓவியர் செய்யும் அழகிய தொழிலின் சிறப்பும் ஓவிய வனப்பும் காட்டப்பட்டுள்ளன. பலவகை ஒப்புக்களுடன் "மொழிதரு மிரத குளிகைதற் சேர்ந்த, காளிமச் சிருணம் நீளியற் கனகம் ஆமெனக் கூறும் தோமறு மொழியும்," கருட தியானம் கூறுமுகத்தால் "பேதையேன் பாசத் தீவினை யகற்றித், திருவருட் செல்வம் பெருகுமா றுதவி, யளித்தருள் பேரின்ப மாகும், கழித்திடு முத்திக் காழிவான் கனியே" எனச் சித்தாந்த முடிவும் ஓதப்பட் டுள்ளன.

௨௧ ஆம் திருப்பாட்டில் "நீறுந் திருவெழுத்தோரைந்தும் கண்டியும் நித்த நித்தம், தேறும் பொருளென் றுணராதார்" மாயச்செருக்கினராவர் என்பதும், அவர் மீண்டும் மீண்டும் பிறந்து பிறந்துழல்வர் என்பதும் கூறப்பட்டுள்ளன.

௨௨ ஆம் பாட்டில் "மம்மரிற் பெரிய வானவர் குழுவை மெய்ப்பொருளென்று" கருதுவோர்க்குக் கறவாக் கற்பசுவை, அருஞ்சுவைப் பால்கொளப் பெருஞ்சுரை வருடும், பேதையர் ஒப்புக் கூறப்பட்டுள்ளது. இது போன்று வியத்தகு ஒப்புப் பலவும் கூறப்பட்டுள்ளன. "இந்திர னெனப்பொலி மந்திர வாவி யின்" ஒப்பு எழிலுறக் கூறப்பட்டுள்ளது.

௨௫ ஆம் பாட்டில் ஆணவமல ஆற்றலின் குறிப்பாம் முயல கனைக் கரும்பாக்கி அரைத்த அரிய நிலை கூறப்பட்டுள்ளது.

"உண்ணீர் பெற்ற தண்ணீர்ப் பந்தர்" முதலாகிய நகரச் சிறப்புப் பலவுங் கூறப்பட்டுள்ளன. சிவபெருமான் "ஏந்தெழிற் புவன வேந்தர்" என்பதுங் காணலாம். வினைக்கீடாக ஆருயிர்கள் துய்க்குந் துய்ப்பினை "மூவகைப் பண்டியிலேற்றிப், பொன் னிலம், நிரயம், இந்நிலமென்னும், இடந்தொறும் ஆங்கவை அடங்கவைத் தவற்றுள், ஒரு சிலவற்றை நின் திருவடி வீட்டில் சேர்த்தனை" என்னும் சிறப்புங் கூறப்பட்டுள்ளது.

உஅ ஆம் பாட்டில் "சேயவர் சொலும் மொழி, குழலினு மியாழினு மழகிதா மெனும் ஒப்பும், இந்திரன் அரசு வீற்றிருக் குஞ் சிறப்பும், நான்முகன் "நெருங்கிய புவனப் பெருக்கினைத் தனது, திண்ணிய மனத்திடை எண்ணியாங் கியற்றுவதும்," நிலையாமை யொப்பும், மாட மாளிகைச் சிறப்பும், பிறவும், காணப்படுகின்றன.

இக்கோவையும் கோயில் நான்மணிமாலை போல் மண்ட லித்து முடிவதுஉங் காண்க.

ரு. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை

முதல் திருப்பாட்டில் "வலம்புரி நெடுமால் ஏனமாகி நிலம்புக்கு ஆற்றலின் அகழத் தோற்றுது நிமிர்ந்து நின்ற சிவ பெருமான்" "பத்தி அடியவர் பச்சிலை யிடினும், முத்தி கொடுத்தருள்பவன்" என்பதும், பெண்ணொரு கூற்றுப் பெருங்கோலப் பெற்றியும், அதன் திரு அடையாளச் சிறப்புக் களும், பொருந்திய "இருவயின் உருவும் ஒருவயிற்றாகி" என்பதும், "திருவடி பரவுதும் யாமே நெடுநாள், இறந்தும் பிறந்தும் இளைத்தனம், மறந்தும், சிறைக்கருப் பாசயஞ் சேரா, மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே" என்பதும் பிறவும் காணலாம்.

உ ஆம் பாட்டில் "பொருள் குலன் புகழ்திறன், அருள் அறிவு அனைத்தும், மருதா என்பார்க்கு வரும்" என்பது காணலாம்.

ச ஆம் பாட்டில் பிறப்பு இறப்பினால் பிறக்கும் உயிர்க்கும், இறக்கும் உயிர்க்கும் உண்டாந் துன்பமும், பிறர்க்குண்டாம் துன்பமும் "உற்பவந் துடைத்தல் நிற்பிடித் தல்லது, பிறி தொரு நெறியில் இல்லை" என்பதும், அந்நெறிக்குரிய ஒழுக்கங் களும் பிறவும் கூறப்பட்டுள்ளன.

எ ஆம் பாட்டில் உலகியல் ஒழுக்கச் செம்மைகளும், கற்பு நிறை மேம்பாடுகளும், வழிப்பேறுகள் வந்துழி வந்துழி மறுத்

தனர் ஒதுங்கலும், மெய்த்துறவுகளின் இயல்பும், மேம்பாடு களும் ஓதப்பட்டுள்ளன.

கo ஆம் பாட்டில் "உழப்பின் வாரா உறுதிகள் உளவோ, கழப்பின் வாராக் கையற வுளவோ" என்பதும், உழைக்கும் வழிமுறைகளும், அதனால் பெறும் பயன்களும், அப்பயன்களுள் சிறந்ததாகிய" அஞ்செழுத்தருங்காயும் "அது பழுத்துச்" "சேணுயர் மாணிக்கத் தீங்கனி" யாவதும், அது கைவந்து செம்மாந்திருப்பதும், இத்தகைய நன்னெறியில் வாராதார், "ஐம்புல வேடர் ஆறலைத் தொழுகத்," தமக்கும் பிறர்க்கும் உதவா, திமைப்பிற் கழியும் இயற்கையர்" ஆவரென்பதும் பிறவும் ஓதப்பட்டுள்ளன.

கஉ ஆம் பாட்டில் "மருதப்பிரான் கழல் மேவுதற்குச்" செய்ய வேண்டிய திருப்பணிகளும் பூணவேண்டிய நன்னெறித் துணைகளும் நவிலப்பட்டுள்ளன.

கந ஆம் பாட்டில் உடம்பின் அனைத்துறுப்புக்களும் தேடிப்பார்க்கினும் உயிரினைக் காண்பது அரிதென்பதும், "தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின், மாயப்படலங் கிறித் தூய ஞானநாட்டம் பெற்றபின் நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும், என்னையுங் கண்டேன்" என்பதும் பிறவும் காணலாம்.

கச ஆம் பாட்டில் "அஞ்செழுத் துன்னலும் பச்சிலை நேர் தலும் நீர் நிரப்புதலும்" ஆகிய சிவ வழிபாட்டின் எளிமையும் இனிமையும் கூறப்பட்டுள்ளன. இத்திருப் பாட்டு, செந்நெறிச் செல்வர்கள் பன்னிரு திருமுறைகளின் பண்பார் திருவருளா சிரிய முதல்வர்களுக்கு ஒவ்வொரு திருப்பாட்டாகவும், நால்வர் முதல்வர்களுக்கும் கூடுதல் திருப்பாட்டு நான்காகவும், அறிவில் சிலமுதல் ஆம்படிகள் நான்கிற்கும் நான்கு திருப்பாட்டாகவும் கொண்டு ஐம்பாற்கும் ஏழைந்து திருப்பாட்டு நாளும் ஓதி வருதல் வேண்டும். அம்முறையில் பதினாறும் எண் முறைக் கண் அருச்சித்தல் என்னுந் தலைப்பில் அமைந்துள்ளது. ஈரெட்டறம் முவ்வியல்பும் நாற்படிஎண் பண்புயர்நான், கோரெட்டாய் நின்றசிவற் கோது. அறம்பதினாறு[1] அன்பறிவு ஆள்வினை ந. சீலம். நோன்பு, செறிவு, அறிவு எனப் படி நான்கு, தன்வயத்தனாதல் முதலிய பண்பெட்டு, அறிவிற் சிலமுதல் நான்கு ஆக முப்பத்தைந்து.

1. 'ஒழுக்கம்', சிவஞானசித்தியார்-உ. உ-உo.

கஙு ஆம் பாட்டில் தலைவன் தலைவியது நலம் பாராட்டுதல் சிறப்புற நவிலப்பட்டுள்ளது.

கசு ஆம் பாட்டில் வையமீன்ற அன்னையாம் வனப்பாற்றலின் அழகொப்பனைகளும், அவர்தம் ஆற்றலின் ஆயிரங்கோடியில் ஒரு கூறுகத் திகழும், மூத்தபிள்ளையார், இளையபிள்ளையார் தன்மைகளும், இவர்களை உடைய உடையானும் சிவபெருமானின் திருவடி தொழுது சிறப்புறுத உயிர்களாகிய பாவிகள் நல்லவை இருக்க அவற்றை விடுத்து அல்லவை கொண்டு அல்லலுறுவான் அடையும் தன்மைக்குரிய ஒப்புக்கள் பலவும் அழகுற அமையப்பட்டுள்ளன.

ககூ ஆம் பாட்டில் "பத்தியாகிப் பணைத்த மெய்யன் பொடும், நொச்சியாயினும் கரந்தையாயினும் பச்சிலையிட்டுப் பரவுந்தொண்டர், கருவிடைப் புகாமற் காத்தருள் புரியும், திருவிடை மருத திரிபுராந்தக" என்பதும், இவ்வுண்மை உணராது சிலர் புறத்துறவு பூண்டும், சமண் முதலாம் புன்னெறிபுக்கு ஒவ்வாக் கடுந்தவமென அவம் புரிந்தும் பயனிழப்பர் என்பதும், அஞ்செழுத் தெண்ணும் அருள்நெறியொழுகும் செம்பொருட்டுணிவினராம் நல்லார் வனப்புறமனையறம் பேணி 'ஐந்துபுலன்களும் ஆர ஆர்ந்து, மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந்தோங்கி, இவ்வகை இருந்தோமாயினும் அவ்வகை, மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது சிந்தை நின்வழிச் செலுத்தலின் அந்த, முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறப், நின்னது பெருமையன்றே' என்பதும், பிறவும் ஓதப்பட்டுள்ளன.

உக ஆம் பாட்டில் "கொன்றைத் தளையான் இடைமருதன் அடியாரடி சார்ந்தவர்" பிறப்பு முதலிய எவ்வகைத் துன்ப[1]மும் எய்தார் என்பது காணலாம்.

உஉ ஆம் பாட்டில் "கடவுளின்" தன்மையும், அக்கடவுள் உணர்வுக் குணர்வாய் நின்று துய்ப்பிக்கும் பேரின்பப் பெரும் பொருள் என்பதும், அதற்குரிய அழகிய ஒப்புமைகளும், அப்பேரின்பம் அடைதற்குத் தடையாயுள்ள பொருள்களும், அத்தடைகள் நீங்குவதற்கு "நின்னை யடைந்த அடியார் அடியார்க்கு, என்னையும் அடிமையாகக் கொண்டே இட்ட பச்சிலை கொண்டு, காத்தருள் செய்ய வேண்டும், நீத்திரண் டன்ன செஞ்சடை யோனே" என்பதும் ஓதப்பட்டுள்ளன.

---

1. 'வானந்துளங்கிலென்'. ச-ககஉ-அ.

உரு ஆம் பாட்டில் "சுடர்விடு சூலம் ஏந்துதல் முதலாக அழல்விழிக் குறளினை அமுக்கினை" ஈறுகப் பதினறுவகைச் சீர்த்திகள் பலவகை விளக்கங்களுடன் பகரப்பட்டுள்ளன. மேலும் சிவபெருமான் திருவடியினை நினைவார் ஆற்றுஞ் செய்கைக்குச் செய்யுஞ் செயல் நோக்கியன்று பயனருளல்; கருத்து நோக்கி என்பதனை "அருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்த, கல்லால் எறிந்த பொல்லாப் புத்தன், நின்னினை ந் தெறிந்த அதனால், அன்னவன் தனக்கும் அருள்பிழைத் தின்றே" என்னும் அருமைத் திருமொழியான் உணரலாம்.

உஅ ஆம் திருப்பாட்டில் "பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னிச்" சிறப்பும் "அயிராவணத்துறை" அணியும், "நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து, பெரும்பதம் பிழையா வரம் பல பெற்றோர், இமையா நெடுங்கண் உமையாள் நங்கை" முதலா "தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்" ஈறுகிய இருபத்தெண்மராம் வான்பெருந் தேவர்களும், மூன்றுகோடி முனிவர்களும் என்பதும் வழுத்தப்பட்டன.

மேலும் "வித்தகப் பாடல் முத்திறத் தடியரும், திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும், அத்தகு செல்வத் தவமதித் தருளிய, சித்தமார் சிவவாக்கிய தேவரும்" என ஐவர்தம் அருண்முறையும் ஓதப்பட்டுள்ளன. நால்வர் : சீலமுதல் நாற்படியர்.

பின்னும், "வெள்ளை நீறு மெய்யிற் கண்டு, கள்ளன் கையில் கட்டவிழ்ப் பித்தல்" முதலாகப் "புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்தல்" ஈறுகவுள்ள எண்குணமும் எய்தி இன்புறுதற் கேதுவாகிய செயற்கருஞ் செயல்கள் எட்டும் திருவருளால் புரிந்தருளிய "பெரிய அன்பின் வரகுண தேவர்" தம் பேருட் பெற்றியும் பேசப்பட்டுள்ளது.

அன்பால் அவிழ்த்தல் அளித்தலுடன் தூவலும்
இன்பால் நுகர்தல் இரத்தலொடு—துன்பகலத்
தானே எடுத்தல் அமைத்தல் கொடுத்தல்பெண்
பானேய் வரகுணரெண் பண்பு.

௩௦ ஆம் திருப்பாட்டில் "மருதஅப் பாமதி யொன்றுமில்லேன், சிரத்தினு மாய்என்றன் சிந்தையு ளாகிவெண் காடனென்னும், தரத்தினுமாயது நின்னடியாந் தெய்வத் தாமரையே" என்னும் திருவடிச் சிறப்பும் திருவெண்காடர் என்னும் திருப்பெயரின் திருக் குறிப்பும் ஓதப்பட்டுள்ளமை காண்க.

ச. திருஏகம்பமுடையார் திருவந்தாதி

முதல் திருப்பாட்டில் "மெய்த்தொண்டர்" செய்யும் திருத்தொண்டின் விழுப்பம் விளக்கப்பட்டுள்ளது.

அ ஆம் திருப்பாட்டில் "நல்லீர்களன்பு பூண்டு கலந்து நலந்தர, அரனுர் கச்சி ஏகம்பங் கண்டு பூசித்து நின்மின்களே" என்பது கூறப்பட்டுள்ளது.

கூ ஆம் திருப்பாட்டு முதல் பெரும்பகுதி திருச்சிற்றம்பலக் கோவையாரை யொத்து அகப்பொருட் பாடல்களே மிக்குள்ளன. முழுப்பாடல்களுக்கும் திருச்சிற்றம்பலக் கோவையார்த் திருப்பாட்டுக்களை ஒப்புக்காட்டின் மிக விரியும் என்றஞ்சிச் சிற்சில திருப்பாட்டுக்களே ஈண்டுக் காட்டப்பட்டுள்ளன. அது கொண்டு அன்புடன் ஓதுவாரும் ஓதுவிப்பாரும் ஏனைய வற்றுக்குரிய திருப்பாட்டுக்களை அமைத்துக் கொள்ளுதல் அமைவுடைத்தாகும்.

கக ஆம் திருப்பாட்டில் "தனமிட்டுமை தழுவத்தழும் புற்றவர்" என்பது காணலாம். ௩௦ ஆம் பாட்டில் "குடை நிழற்கீழ் நின்று பொலியினும் கம்பர் நன்னீறு நுதற்கிலரேல்" என்றும் "அரசும் முரசும் பொலியா இருநிலத்தே" என்பதுங் காணலாம். ௩க ஆம் பாட்டில் "மறை அங்கம் வேள்வி வல்லார் ஆயினும், ஏகம்பர்த் தொழாதார் வேட்டுவராம்" என்பதும், ௩உ ஆம் பாட்டில் "கடையராயினும் ஏகம்பர்த் தொழுவார் உத்தமர்" என்பதும் கூறப்பட்டுள்ளன. ௩எ ஆம் பாட்டில் சடை முடியின் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. ௪௩ ஆம் பாட்டில் "முஞ்சி வடத்தொரு கோவணம்" எனக் கோவணச் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. ௪௬ ஆம் பாட்டில் "வரத்தைத் தருகம்பர் ஆடுவர் எல்லியும் மாநடமே" என்பது காணலாம். ௪எ ஆம் பாட்டில் "தில்லையம்பலம், காளத்தி, கச்சிஏகம்பர்" எம்பிராற்கினியன என்பது காண்க. ௪அ ஆம் பாட்டில் சண்டேசுரர் அன்பு (உ௪௫) குறிக்கப்பட்டுள்ளது. ௫௦ இல் பலி வந்திட அஞ்சும் பான்மை பகரப்பட்டது. ௫௫ இல் மார்க்கண்டேயர் வரலாறு குறிக்கப்பட்டுள்ளது. ௫௬ இல் அகத்தியனுர் வழிபட்ட வாய்மை கூறப்பட்டுள்ளது.

௫எ ஆம் பாட்டில் க. பனிமலை உ கொல்லிமலை ௩. சிராமலை ௪. விந்தமலை (௫அ) ௫. திருமலை ௬. மந்தரமலை எ. இந்திரநீலமலை அ. திருப்பரங்குன்றம் கூ. மகேந்திர மலை (௫கூ) க௦. கருங்குன்றம் கக. வெண்ணெய் மலை கஉ. திருச்செங்குன்றும் க௩. நீலமலையும் க௪. கொடுமுடியும் க௫. கழுகுமலையும் க௬.

பழமலையும் ஆகிய திருப்பாட்டுக்கள் மூன்றினாலும் மலைகள் பதினாறும் அவ்வவற்றின் வரலாறு (பக்கம் உசகூ-உ௫க)களும் செவ்விதிற் கூறப்பட்டுள்ளன

சூ0ஆம் திருப்பாட்டில் க. திருக்குற்றாலம் உ. திருநெய்த்தானம் ந. திருத்துருத்தி ச. திருவேள்விக்குடி ௫ திருத்தோணிபுரம் சூ திருப்பழனம் எ. திருவாரூர் அ. திருவிடைமருதூர் (சூக) கூ. திருச்சோற்றுத்துறை க0. திருவியமம் கக. திருப்புகலூர் கஉ திருப்புறம்பியம் கந. திருப்பூவணம் கச. திருவெண்காடு க௫. திருப்பாச்சிலாச்சிராமம் கசூ. திருஅதிகை (சூஉ) கஎ. திருவாவடுதுறை கஅ திருநல்லம் ககூ. திருநல்லூர் உ0. திருக்கடம்பூர் உக. திருக்கடம்பந்துறை உஉ. திருப்புன்கூர் உந. திருப்பராய்த் துறை உச. திருஎதிர்கொள்பாடி (சூந) உ௫. திருவல்லம் உசூ. திருமாற்பேறு உஎ. திருப்பாசூர் உஅ. திருவழுந்தூர் உகூ. திருப்பெரும்பேறு ந0. திருவொற்றியூர் (சூச) நக. திருவோத்தூர் நஉ. திருஆமாத்தூர் நந. திருப்புலிவலம் நச. திருவில்வலம் ந௫. சீகாழி நசூ. திருப்பனங்காடு நஎ. திருமாகறல் (சூ௫) நஅ. திருக்கருகாவூர் நகூ திருக்கச்சியூர் ச0. திருவான்மியூர் சக. திருவூறல் சஉ. திருப்பனையூர் சந. திருப்பள்ளியின் முக்கூடல் சச. திரு ஆலங்காடு ஆகிய திருப்பாட்டுக்கள் ஆறினாலும் சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருவூர்கள் நாற்பத்து நான்கும், அவ்வவற்றின் வரலாறு (பக்கம் உ௫க-உ௫சூ) களும் செவ்விதின் ஓதியருளப்பட்டன. இவ்வாற்றால் திருமலை பதினாறும் திருவூர் நாற்பத்து நான்கும் நாம் நன்குணரத் திருவாய் மலர்ந்தருளினமை காண்க.

எசூ ஆம் திருப்பாட்டில் "கச்சியின்வாய் நெல் நடுவோரொலி, செந்நெல் குவிப்போர் ஒலி, கருப்பாலை ஒலி, கடலின் ஒத்து ஒலிக்கும்" என்பது கூறப்பட்டுள்ளது.

எஅ ஆம் பாட்டில் நகர்வளம் கூறுதல் காணலாம். அஉ ஆம் பாட்டில் "மலைமங்கை கண்ணார எண்ணூன்கறம்" இயற்றிய தன்மையும், விமானமும் கூறப்பட்டுள்ளன. அந ஆம் பாட்டில் திருமாலின் திருக்கோவிலும் சிறப்புங் கூறப்பட்டுள்ளன. அ௫ ஆம் பாட்டில் "உமையோடித் தழுவ வளைக்கை வடுப்பட்டமை" கூறப்பட்டது.

அஅ ஆம் பாட்டில் கார்காலச் சிறப்புக் கூறப்பட்டது. கூ0 ஆம் பாட்டில் "வாட்டமுற்ற பயிரார் புயல் பெற்ற" ஒப்புச் சொல்லப்பட்டுள்ளது. கூக ஆம் பாட்டில் ஏறுகோள் இயல்பு கூறப்பட்டுள்ளது.

கூஅ ஆம் திருப்பாட்டில் "நாளும் விடாது அடிமை நின்று செய்வார்" மேன்மேலும் நன்ருக மிக்குச் செய்யுந் தன்மை விளம்பப்பட்டது. கூகூ, க00 ஆம் திருப்பாட்டுக்கள் முறையே "ஏகம்பர் ஏதுமிலாத எம்மைப் பூட்டிவைத்தார் தமக்கன்பு அது பெற்றப்பதிற்றுப்பத்துப் பாட்டி வைத்தார்" என்பதும் "போதம் பொருளாற் பொலியாத புன்சொற் பனுவல்களும், வேதம் பொலியும் பொருளாமெனக் கொள்வர் மெய்த் தொண்டரே" என்பதனல் அவையடக்கமும் ஓதப் பட்டன.

ரு. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது

இச் சிறந்த பகுதிகளில் செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவப் பான்மை முற்றும் சீரிய முறையில் ஓதப்பட்டுள்ளன. இவை நேரிசையாசிரியப்பாவான் இயன்றன.

முதற்கண் அண்டத்தின் இயல்பும், அதனைத் திருவுருவாகக் கொண்டியக்கும் விழுமிய முழுமுதல்வனும் சிவபெருமானின் உலகுமாய் நிற்கும் உருவக ஒப்பும், உலகத்தின் தோற்ற வொடுக்கமும், ஆருயிர்களின் பிறப்பியல்பும் பிறவும் ஓதப்பட்டுள்ளன. "முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி, அத்திறத்தைம்பொறி அறுவகைச் சமயமோ, டேழுலகாகி எண்வகை மூர்த்தியோ, டுழிதோ றூழி எண்ணிறந்தோங்கி, எவ்வகை அளவினில் கூடிநின்று, அவ்வகைப் பொருளும்நீ ஆகிய இடத்தே" என்பதுங் காண்க.

இரண்டாவதன்கண் பெண்ணொரு கூறும், சிவபெருமானின் தண்ணளியால் அவன் எல்லா நெறியினருக்கும் அவரவர் வேண்டியாங்கு வினைபயன் அளித்தற் பொருட்டுப் பள்ளி வகுப்புப் போன்று அவரவர் தெய்வமாய் நின்றருளுதலும், அங்ஙனம் நின்றருளுதல் அப்பெருமானின் நீங்கு நிலையாம் இயைபென்னும் தடத்தம் எனவும், அம்முறையில் "அடைபற்றிய பளிங்கு போலும், ஒற்றிமாநகர் உடையோய் உருவே" என்றும் ஓதியருளினர்.

மூன்ருவதன்கண் சிவபெருமானின் நிலைக்களத்தெல்லாம் இயங்கும் நிலையில் அவை அவனுக்கு உறுப்பாம் எனவும், மூவெயில், தக்கன் வேள்வி, வானவர்கோன், நான்முகன், மன்மதன், இராவணன், கூற்றுவன் ஆகிய எழுவரையும் நன்னெறிப்படுத்தற் பொருட்டுத் தக்கவாறுறுத்தருளுதலும், நின்றிடத்திருந்தே நினைப்பளவானே நிகழ்த்துவித்தருளு

தலும், இவையே அப்பெருமானின் ஆள்வினை யெனவும், அதனல் "நிகழ்ச்சியின் நிகழின் அல்லது, புகழ்ச்சியிற் படுப் பரோ பொருளுணர்ந்தோரே" எனவும் உரைக்கப்பட்டன காண்க.

நான்காவதன்கண், "பூமகன் முதலா இருள்துணையாக் கையில் இயங்கு மன்னுயிர்" எல்லாவகையாலும் ஒத்த நிலை யினவே என்பதும், அவையனைத்தும் நின் திருவருள் நிலைக் களத்தே தோன்றி யொடுங்கினும் வேறாய் நின்றனை எனவும், இதனை "ஒவாத் தொல்புகழ் ஒற்றி யூர, மூவா மேனி, முதல்வ நின்னருள், பெற்றவர் அறியி னல்லது, மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே" என்பதனல் வலியுறுத்தியும் ஓதப் பட்டமை காண்க.

ஐந்தாவதன்கண் தனித்தமிழ் மறைமுறைகளாகிய இறை நூல்களும், அவற்றின்கண் விளங்கும் மந்திரங்களும், நின் "உறைவிடம் உள்ளம்" ஆதலும் "பணிவோர் மனத்திடை (இன்ப) வாரி ஆகிய வனப்பும்" "அன்பின் அடைந்தவர்க் கணிமையும்" இவ்வுண்மை "கண்டவர் தமக்கே ஊனுடல் அழிதல், உண்டென உணர்ந்தனம்" எனவும் ஓதப்பட்டமை காண்க.

ஆருவதன்கண், "தூமதி சடைமிசைச் சூடுதல்" முதலா "எண்வகை மூர்த்தி" ஈருகச் சொல்லப்படும் எழு வகைப் பொருள்களின் இயல்புருவக உண்மையும், "நிலம்நீர்" முதலாக "வண்ணமும் வடிவும்" ஈருகவுள்ள அளப்பரும் பெரு மைகளும் மெய்ந் நூல்களால் எடுத்துக் கூறவும் "தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த, சொற்பொருள் வன்மையின் சுழலும் மாந்தர்க்கு, ஆதியாகிய அறு தொழிலாளர் ஓதல் ஒவா ஒற்றி யூர, சிறுவர்தம் செய்கையிற் படுத்து, முறுவலித் திருத்திநீ முகப்படு மளவே" என்பதனல் இறைவனின் இன்னருளும் ஓதப்பட்டுள்ளன. "அறு தொழிலாளர்" என்ப தன் உண்மை; "இறைபணி நிற்பார்" செய்யும் செயற்பயன் செய்தவர்க்கின்றிச் செயப்பட்டார்க்குறுதலால் "அறு தொழி லாளர்' எனப்பட்டனர் என்பதாம்.

ஏழாவதன்கண் சிவபெருமானின் அளப்பரும் பெருமை யும், நிலையும், ஆள்வினைத்தன்மையும், ஐந்தொழில் அருண்மை யும், "பல்வகைக் குணனும்" "ஈங்கிது மொழிவார் யாஅர் தாஅம், சொல்நிலை சுருங்கின் அல்லது, நின்இயல் அறிவார் யார்இரு நிலத்தே" என எடுத்து மொழிதலும் காண்க.

எட்டாவதன்கண் "நிலத்திடைப் பொறையாய்" ஆக்கையின் பசி நிலையும், இளமைநிலையாமையும் யாக்கையின் அமைவும், அவ்வுயிர் பிறவிப் பெருங்கடல் நீந்துதற்குப் புணையாகிய "நாவாயாகிய நாதனின் பாதம்" எனவும், அத்தகைய நாவாயின் உறுப்புக்களும், அதனைச் செலுத்தும் முறைமையும், அதற்குறுந் தடைகளும், தடைநீக்கிச் செலுத்தும் தன்மையும் ஓதி "நெருங்கா அளவில் நீள்கரை ஏற்ற, வங்க யாத்திரை போக்குதி போலும், ஓங்குகடல் உடுத்த ஒற்றியூ ரோயே" எனவும் அருளப்பட்டமை காண்க.

ஒன்பதன்கண் "ஒற்றி யூர உலவா நின்குணம், பற்றி யாரப் பரவுதல்" அருமையுடைத்தெனவும் குழவி நிலையினைத் தாயுணர்ந்தருளுவள் என்பதும், "கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது, எட்டனை யாயினும் யான் அவிழ்க் கறியேன்" என்பதும் "தந்தையும் தாயும்" முதலாகத் "தோற்றம்" ஈறாக "என்றிவை முதலா விளங்குவ எல்லாம், ஒன்ற நின் அடிக்கே ஒருங்குடன் வைத்து, நின்றனன் தமியேன் நின்னடி அல்லது, சார்வு மற்றின்மையின்" எனவும் "எய்துதற்கரியோய் யான்இனிச், செய்வதும் அறிவனோ தெரியுங் காலே" எனவும் ஓதிச் செந்தமிழ்ப் பொதுமறையிற் காணப்படும் சிறந்த "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச், சார்தரா சார்தரு நோய்" (௩௫௯) என்பதன் உண்மைச் சித்தாந்தப் பொருள் தெருட்டியமை காண்க.

பத்தின்கண் "காலற் சீறிய கழலோய் போற்றி என்பது" முதலாகப் "பொருளே போற்றி போற்றி என்றுனை" என்பது ஈறாக ஓதப்பட்டுள்ள தனித்தமிழ்ப் போற்றியா மந்திரத் தொடர் இருபத்தொன்பதும் இனிதுற ஓதிப் பூத்தூவிப் பொய்யொழித்து மெய்யணைந்து வழிபாடியற்றி வாழ்வதே பிறவிப் பெரும் பயனாகும் என்றருளினர். இவ்விருபத்தொன்பது போற்றித் தொடர்களிலும் சிவபெருமானின் முடிவிலாற்றலும் பேரருளுடைமையும், அனைத்திற்கும் ஆதியாதலும், வரம்பிலின்பம் கொடுத்து வாழ்வித்தலும், இயைபினால் எல்லாமாய் நின்றருளலும் ஆகிய பேரருட்டிறம் பேசப்பட்டமை காண்க. மேலும் பெண்ணாண் என்று பேசப்படும் பெற்றியின் இயல்பினை "வெம்மை தண்மைஎன் றிவைகுணம் உடைமையில், பெண்ணோ டாண் எனும் பெயரோய் போற்றி" என்பதன்கண் அருளினர்.

மேலும் செம்பொருட்டுணி வெனப்படும் சித்தாந்த சைவச் செந்நெறியின்கண் பதின் ஆக்கமென்னும் தசகாரியத் தத்துவத்தின் இயல்பு சீர்மிகு சிறப்புடைத்தாம். அவையே

மெய்யடியார்கள் விழைந்து குழைந்து புரியும் மேலாம் செய்கையுமாகும். அவற்றை ஒருபுடையாக இவ் ஒருபா ஒருபஃதென்னும் இப் பகுதி யியம்புகின்றது.

பதின் ஆக்கம் என்பது தத்துவரூபம், தத்துவதெரிசனம், தத்துவசுத்தி எனவும், ஆன்மரூபம், ஆன்மதெரிசனம், ஆன்ம சுத்தி எனவும், சிவரூபம், சிவதெரிசனம், சிவயோகம், சிவ போகம் எனவும் கூறப்படுவனவாம். இம் மூன்றும் பொருள், பொருளியல்பு, பொருட்பயன் எனப் புகலலாம். இவற்றை மாதவச் சிவஞான முனிவரனுர் தாமருளிய தனித்தமிழ்ச் சிவஞானபோதப் பேருரைக்கண் (நூற்பா, கூ. விளக்கம்) திரியக் காண்டல், இரட்டுறக் காண்டல், தெளியக் காண்டல் என மொழிந்தருளினர்.

முதற்றிருப் பாட்டில் காணப்படும் "ஏழுலகாகி" என்னுந் தொடரால் மெய்யெனப்படும் தத்துவரூபங் குறிக்கப் படும். இதன் திரிவுகாட்சி யென்பது தத்துவக் கூட்டங்களின் மெய்ம்மை உணராது அவற்றிற்கு அறிவுள்ளன போற் காண்பது திரிபு. மேலும் ஞாலமும் உடலும் இயற்கை யென் றலும் திரிபாகும். தத்துவங்கள் அறிவில் பொருள்கள் என் றெண்ணல் இரட்டுறக் காண்டலாகும். அஃதாவது ஞாலமும் உடலும் இறைவனருளால் மாயாகாரியமாக ஆக்கப்பட்டவை எனக் கோடல்; இவற்றொடு திருவருட்டுணையால் மீண்டுங் கூடாமல் நிற்கப் பயிலல் தெளிவாகும். அஃதாவது ஞாலங் கடலாகவும் உடல் கப்பலாகவும் மீகாமன் நடப்பாற்றலாகவுங் கொண்டு திருவடிப்பெருங்கரை சேரவேண்டுமென எண்ணல்.

ஞாலமுடல் தாமியற்கை நல்குமிறை காரியமாய்க்
காலமுற என்றல் கரைஏறச்—சீலமுறக்
கண்ணுங் கடல்கலம்போ லென்றல் திரிபிரட்டல்
நண்ணுந்தெளி வெண் நீங்கல் நாடு.

தெளிவெண் நீங்கல்: நீங்க எண்ணல் தெளிவென்க.

இரண்டாந் திருப்பாட்டில் "அணங்கிய அவ்வவர்க் கவ்வகையாகி" என்பதனல் இரட்டுறக் காண்டலும், மூன்ற வதன்கண் "ஆள்வினை" என்பதனுல் தெளியக் காண்டலும் பெறப்படும்.

நான்கு முதல் ஆறு முடியவுள்ள திருப்பாட்டில் ஆவிக் குரிய மூன்றுங் காணப்படும் கேவலம் எனப்படும் புலம்பின் நீக்கமாய் நிற்புழித் தோன்றும் அறிவு ஆவித்திரிவாகும். அஃதாவது, ஆவியறிதற்குத் துணையே உடலாகிய மெய் எனக் கோடல். தோன்றிய அறிவாய்த் தன்செயல் அற்று நிற்றல்

இரட்டுறக் காண்டல். அஃதாவது அச்சிவன்தாளாகிய சிவகுரு அறிவிக்க அறிதல் எனக் கொள்ளுதல். சிவத்தின்கண் அடங்கி நிற்றல் தெளியக் காண்டலாம்.

ஆவியறி யத்துணைமெய் ஆமென்றல் அச்சிவன்ருள்
மேவியறி விக்குமறி வாலறிதல் — தாவில்திரு
ஐந்தெழுத்தின் மெய்யால் அடங்கிநடு வாதல்திரி
புந்திரட்ட லாந்தெளிவிங் கோர்.

நான்காவதன்கண் "இருள்துணை யாக்கையில் இயங்கு மன்னுயிர்" எனவும், ஐந்தாவதன்கண் "உறைவிடம் உள்ளம்" எனவும், ஆறுவதன்கண் "ஓதல் ஒவா ஒற்றியூர" எனவும் வருவனவற்ருல் மேலன புலப்படும்.

ஏழுமுதல் பத்து முடியவுள்ள திருப்பாட்டுக்களில் சிவ பெருமான் இயைபு (நடத்தம்) நிலைமையில் எல்லா வடிவமும் தாணுய்த் திருவருள் வடிவாய், ஆன்மாக்களை உய்யக்கொள் பவன் ஆவன் என உயிருட் காண்டல் சிவரூபம். அஃதாவது இயைபினுல் எட்டுருவாய் நின்றருளல். சிவபெருமானின் திருவடி, திருமுகம், திருமுடி முதலியன திருவருளால் யான் என தென்றலறல், எங்குஞ் சிவமாய்த் தோன்றல், உரையிகந்த சுகம் எனக் கோடல், அவ்வின்பத்தழுந்தல் சிவனுண்மைத் தெரிசனம். அஃதாவது எல்லாம் அருளியக்கம்தானென்றல் என்ப.

எப்பொருளுக்கும் அவனன்றி அசைவில்லை எனக் கோடலொடு அப் பொருளோடிசைவது சிவ யோகம். அஃதாவது திருவடியில் அணைய எண்ணுதல் என்க. எல்லா நுகர்வுகளும் தன்னின்பமாக நுகர்வித்தல் சிவபோகம் எனப் படும். அஃதாவது பேரின்பப் பெருந்துய்ப்புச் சொல்லல் அரி தென்றலாம்.

எண்பே ருருவென்றல் இவ்வியைபாந் தானென்றல்
கண்ணி யருளியக்குங் காணென்றல்—எண்ணின்
திரிபோ டிரட்டுறல் சேர் வெண்ணலொடு சொல்லல்
அரிதென்றல் பேரின்பத்துய்ப் பன்பு.

ஏழாவதன்கண் "நின்இயல் அறிவோர் யார்இரு நிலத்தே" எனவும், எட்டாவதன்கண் "நாவா யாகிய நாத நின் பாதம்" எனவும், ஒன்பதாவதன்கண் "நின்றனன் தமியேன் நின்னடி அல்லது, சார்வுமற் றின்மையில்" எனவும், பத்தாவதன்கண் தனித்தமிழ் மந்திரமாம் "போற்றித்" தொடர்கள் புகன்று, அம்மந்திரமே பேரின்ப வாயிலெனவும் ஓதப்பட்டமை கொண்டு மேலன புலன்கொள லாகும்.

சிறப்பாக உளங்கொண் டோதத்தக்கனவற்றுள் சில வருமாறு: "குடைகொண்டிவ் (பக்கம்-கூ) வையம்" என்பதனுல் தொண்டர் பெருமையும், "நானே பிறந்து" (கஅ) என்பதனுல் பிறவிப் பெரும்பயனும், "நெறிதரு குழலே" (ரு0) என்பதனுல் தகாதனவும் தக்கனவும் இன்ன என்பதும். "ஆளெனப் புகுதின்" (சஎ) எனவும், "உழப்பின் வாரா" (கஎரு) எனவும், "ஓராதே அஞ்செழுத்தும்" (கஅச) எனவும், "புண்ணிய புராதன" (ககூ0) எனவும், தொடங்கும் திருப்பாட்டுக்களான் தனித்தமிழ்த் திருவைந்தெழுத்தின் சிறப்பும், தென்னகத்தாராம் தென்றமிழ் நாட்டார் செய்து போதரும் சீரிய இல்லற மாண்பும், பிறவும், "அருளுவாழி" (கூச) "ஒன்றிஞெடொன்று" (ககூரு) என்பனவற்ருல் வேண்டத்தக்க வேண்டுகோள்கள் பலவும், "வானேர்பணிய" (கூஅ) "வாழ்ந்தனம் என்று" (ககூஅ) என்பனவற்ருல் மெய்த்துறவின் மேலாம் சிறப்பும், "வாழ்வாக வுந்தங்கள்" (கூகூ) "விளம்புவன்" (கசகூ) என்பனவற்ருல் "செத்துச் செத்துப் பிறக்கும்" சிறு தெய்வ வாழ்க்கையின் சிறுமையும், அதனை வழிபடுவோரின் மெய்யுணர்வு நோக்கமில்லாப் பொய்ம்மையும், "ஈரவேரித்தார்" (எக) "தெய்வத் தாமரை" (கடுரு) என்பனவற்ருல் கிடையாச் செல்வம் சிவபெருமானின் திருவடிப் பேறென்பதும், "கருமுதல் தொடங்கி" (கூரு) "செருக்குடன்" (கஉகூ) என்பனவற்ருல் சிவபெருமானை எழுந்தருள வேண்டலும், "அருள் பழுத்தளிந்த" (கூகூ) "அடிசார்ந்தவர்க்கு" (உ00) என்பனவற்ருல் வழிபாட்டெளிமையும், "புண்ணிய" (ககூ0) என்பதனுல் மனையறம் பேணும் மாபெரும் மாண்பும், "கொண்டலின்" (உக0) என்பதனுல் மறந்தும் புறந்தொழா வாய்மையுடன் சிவபெருமானின் திருவடிவத் தொண்டும், சிவனடியார் தொண்டும், அல்லும் பகலும் ஒல்லுவகை யோவாது உட்கொள்ளும் சிவன்நினைவும், அதன் வாயிலாகப் புறத்துக் காண்பன கேட்பன அனைத்தும் சிவன் சிறப்பெனவே தெளிந்து அவ்வவற்றிற்குத் தக்கவாறு வழங்கலும் வழிபடலும் செய்துய்ந்த பெரிய அன்பின் வரகுணதேவர் தம் சொல்லொணு மாண்பும் பிறவும் ஓதப்பட்டுள்ளன.

கோயில் சிகரம் வகரம் கழுமலமாம்
ஆயின் இடைமருது யவ்வாகும்—தாயருள்சேர்
ஏகம்பம் வவ்வாம் எண்ணுதிரு வொற்றியூர்
பாகம்பிரி யாச்சிவ்வாம் பண்பு.

அன்பன்,
ப. இராமநாதன்.

பட்டினத்துப் பிள்ளையார் வரலாறு

பட்டினத்துப் பிள்ளையார் விழுமிய வேளாண்குல முதல்வர். இவர் திருவருளால் தோற்றமுற்ற திருவூர் காவிரிப்பூம்பட்டினமாகும். இது கடலொடு காவிரி கலப்பதால் இப் பெயர்பெற்றது. கரிகால் பெருவளத்தான் முதலிய முடிசேர் வேந்தர் தலைநகரமாக அமைந்துள்ளது. இதற்குப் "புகார்" என்னும் ஒரு சிறப்புப் பெயரும் உண்டு. அந் நகரார் ஒன்று வேண்டிப் பிறநகர் புகாராதலின் அஃது அப்பெயர் பெற்றது.

பிள்ளையாரின் தந்தையார் திருப்பெயர் சிவநேசர் என்ப. அருமைத் தாயார் திருப்பெயர் ஞானகலையம்மை. இருவர் தம் தவப்பேற்றால் தலைப்பிள்ளையாக ஒரு பெண்மகவு பிறந்தது. பின்னும் இருவரும் ஆண்மகவு ஒன்று வேண்டிக் கடுந்தவம் புரிந்தனர். அத் தவப்பேற்றால் பிள்ளையார் சிவனடிமறா நினைவுடன் திருத்தோற்றமுற்றனர். இவர்க்குத் "திருவெண்காடர்" என்னும் திருப்பெயர் சூட்டினர். சிறப்புச் செய்தனர்; சீராட்டிப் பாராட்டி வளர்த்தனர். பிள்ளையாரும் எண்ணெண் கலையும் பண்ணுற எளிதிற் கற்று மிக்க திறலோராயினர்.

தந்தையார் பிள்ளையார்தம் ஐந்தாண்டுப் பருவத்தில் சிவனடி எய்தினமையால் எல்லாம் அருமைத் தாயார் வாயிலாகவே பெற்று வந்தனர். பின் சிவபூசை புரியும் பெருங் காதல் கொண்டனர். அன்னையாருக்கும் அறிவித்தனர். அன்னையாரும் இணங்கினர். திருவருளால் ஒரு முதிய அந்தணர், சிவலிங்கம் அமைந்த ஒரு சம்புடத்தைக் கொண்டுவந்து பிள்ளையார் கையிற் கொடுத்துப் பூசை புரிவித்தனர். அச்சம்புடம் பண்டைப் பிறப்பிற் பிள்ளையார் தனித்தமிழ் மந்திரமாம் போற்றி மறையோதிப் பூத்தூவிப் பூசை செய்த சிவக்கொழுந் தமைந்த தவஞ்சார் சம்புடம் என்ப. இது திருவிடைமருதூர்ச் சிவனருளால் அவ்வந்தணர் வழிக் கிடைத்ததென்ப.

சிவ பூசை செய்புமுறை தனித்தமிழ் மறைமுறைகளின் வாயிலாகவென்னும் உண்மை வருமாறு:

"பொய்யாத வாய்மையாற் பொடிபூசிப்
போற்றிசைத்துப் பூசை செய்து
கையினல் எரியோம்பி மறைவளர்க்கும்
அந்தணர்தம் கருப்ப றியலூர்க்

கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலுங் கொகுடிக் கோயில்[1]
ஐயனையென் மனத்தினால் நினைந்தபோ
தவர்நமக் கினிய வாறே."

—எ. ௩0-௬.

மறை - "சிவசிவ" என்னும் தனித்தமிழ் நான்மறை.

"நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே."

முறை-தனித்தமிழாகமம். —க. ௬௧-க.

பிள்ளையாரும் நாடொறும் வழுவாது சிவபூசையினை நயந்து புரிந்துவந்தனர். சம்புடத்தின் மூடி மற்றெவராலும் திறக்க முடியாமையானும், பிள்ளையார் திருக்கை வைத்தவுடன் அம்மூடி தானாகவே திறந்தமையானும், அச்சம்புடம் அவர்க்குரிய தென்பது தானேவிளங்கும். பிள்ளையார்க்கு மணப் பருவம் வாய்த்ததும் சிவனருளால் மிகுந்த சிறப்புடன் திருமணம் நிகழ்ந்தது. வாழ்க்கைத் துணையாய் வாய்த்த வனப்புறும் அம்மையாரின் திருப்பெயர் "சிவகலை அம்மையார்." அவரும் காவிரிப்பூம்பட்டினத்தவரே. அவர்தம் தந்தையார் திருப்பெயர் சிவசிதம்பரஞ் செட்டியார். தாயார் திருப்பெயர் சிவகாமியம்மையார்.

இருவரும் கருத்தொருமித்த காதலராய்க் கடவுளடிபேணி அடியார் அருந்தொண்டும், விருந்தோம்பலும், ஈகையும், திருமுறையோதும் சிறப்பும் மேற்கொண்டு மனையறம் பேணி வந்தனர். அம்முறையான் ஆண்டுகள் முப்பத்தைந் தகன்றும் பிள்ளையாருக்குப் பிள்ளைபேறின்றாயிற்று. பிள்ளையாரும் திருவிடை மருதூரின்கண் திருக்கோவில்கொண்டு திகழும் மருதவாணர் மலரடியை மனங்கொண்டு தொழுது வரங்கிடந்தனர். அப் பெருமான் திருவருளால் ஓர் ஆதிசைவ ஆசிரியர்க்குக் கிடைத்த அருமை மகவொன்றினை அவர் அன்புடன் நிறுத்துக் கொடுப்ப அதன் எடைக்குப் பொன்னும் மணியும் பொலிவித்துப் பிள்ளையார் அப் பிள்ளையினை அன்பினால் மகன்மைக் கொண்டார். அப் பிள்ளைக்கு மருதவாணரென்னும் திருப்பெயர் சூட்டினர்.

---

1. 'பெருக்காறு' ௬. எக-ஒ.

அன்பு மகனை அணிபூட்டி ஒப்பனை செய்து காதலிரு வரும் கனிந்தவுளத்துடன் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். விளையாட்டுப் பருவத்துப் படகொன்றில் தோழருடன் ஏறிக் கடலில் நெடுந்தூரஞ் சென்று மீண்டனர். மீளும் போது ஒரு பெருமீன் படகினை விழுங்க ஆரவாரஞ் செய்து வந்தது. அதுகண்டு தோழர் யாவரும் அச்சங் கொண்டனர். மருதவாணர் அம்மீனைக் காலாலுதைத்துக் கொன்றனர். அதன்கண் நின்றும் ஒரு கந்தருவன் தோன்றினன். தோன்றி அடியேன் ஒரு முனிவர்தம் ஒறுப்புரையால் இந்நிலையடைந் தேன். தேவரீர்தம் திருவடிப்பேற்றால் உய்ந்தேன் என்று தொழுது மொழிந்து விடைபெற்றுச் சென்றனன். வியத்தகு செயல் புரிந்த மருதவாணரும் விளையாட்டுத் தோழருடன் கரையேறி வீடுவந்து சேர்ந்தனர்.

பின் உரியபருவத்துக் கலை பயில்வித்தனர். கலையனைத்தையும் மிக எளிதாகவும் இனிதாகவும் ஓதாதுணர்வார் போன்று உணர்ந்தனர். மிக்க இளம் பருவத்தே மருதவாணர் மணி மதிப்பறியும் மாண்பினராயினர். காளைப்பருவத்துக் கடல் கடந்து பெரும்பொருள் திரட்டி மீளும் கருத்தினராயினர். முதற்கண் மறுத்த தாய் தந்தையர் பின் இணங்கி வணிகப் பண்டங்களுடன் புதியதொரு கப்பலில் தக்க துணைவருடன் நன்னாளால் வழிகூட்டி அனுப்பினர். அவரும் ஒரு பெருந் தீவையடுத்துப் பண்டமாற்றுச் செய்து பெரும்பொருள் திரட்டினர். அத் தீவின்கண்ணே திருக்கோவில், திருமடம், அறச்சாலை, தங்கும் விடுதி, பூங்கா, குளம் முதலிய பல அமைத்துப் புகழ் பெற்றனர். சில நாள்கழித்து ஊர் திரும்பும் நிலையில் மருதவாணர் இருந்தனர்.

இந் நிலையில் உடனுகை வெவ்வேறு கப்பல்களில் வந்தவர் பல்வேறு தீவுகளிற் சென்று பண்டமாற்றுச் செய்து பெரும் பொருள் திரட்டிப் பல்வகைப் பண்டங்களுடன் திரும்பினர். நம்மருதவாணர், அறஞ்செய்ததுபோக எஞ்சிய பொருளுக்கு எருவும், அவற்கடலையும் தம் கப்பலில் நிரப்பியிருந்தனர். ஏனையார்கண்டு திடுக்கிட்டனர். யாவரும் நன்னாள்கொண்டு புறப்பட்டனர். வழியில் பெரும்புயல் ஏற்பட்டது. இருள் மிகுந்தது. யாவரும் நெறியறியாது திகைத்தனர். உணவுப் பொருள்களும் செலவாகிவிட்டன. குளிரும் மிகுந்தது. அந் நிலையில் நம்மருதவாணர்பால் ஒப்பந்தம் எழுதிக்கொடுத்துக் குளிர்காய எருவும், உண்ண அவற்கடலையும் பெற்றுத்துன்பம் நீங்கி இன்புற்றிருந்தனர். ஒப்பந்தம் எருவுக்கு எடைக்கு எடை திரும்பக் கொடுப்பதென்பதாம்.

எல்லாரும் இனிதாக ஊர்வந்து சேர்ந்தனர். வந்தவருள் ஒருவர் பட்டினத்துப்பிள்ளையார்பாற் சென்று மருதவாணர் சித்தகிலை திரிந்தனரெனக்கூறினர். அவரும் வருந்திக் கப்பலில் எருவும் அவற்கடலையும் இருக்கக் கண்டு நீங்காத்துன்பம் எய்தினர். மருதவாணர்தம் பெட்டியைத்திறந்து பார்த்தனர். அப்பெட்டியினகத்து ஒரு எருவும் ஓலையும் இருக்கக் கண்டனர். எருவைப் பிட்டுப்பார்த்தனர். முழுவதும் விலை மதித்தற்கரிய செம்மணிகள் எனப்படும் மாணிக்கங்கள் இருந்தன. கப்பலிலுள்ள மூடைகளும் அவ்வாறே யிருந்தன. அவற்கடலைகளும் பொன் விரவியிருந்தன. பட்டினத்துப் பிள்ளையார் அகமிக மகிழ்ந்தனர். துணைவரனைவரும் தாம் பெற்ற எருவின் உண்மையறியாது எரித்துவிட்டோமே என்று வருந்தினர்.

பட்டினத்துப் பிள்ளையார் தம்மகனுரைக் காணவேண்டு மென்னும் பெருவேட்கையுடன் வீடுவந்து சேர்ந்தனர். திரு மகனுரைக் காணவில்லை. அருமை மனைவியாரை வினவினர். அவரும் அருமைமகனுர் நல்கிய கைப்பெட்டி ஒன்றை அவர் பால் கொடுத்து, இதனைத் தங்கள்பால் ஒப்புவிக்க நம்மகனுர் மொழிந்தனர் என்று கூறினர். திருவெண்காடர் மிக்க ஆவலுடன் அப்பெட்டியினை வாங்கித் திறந்து நோக்கினர். அதனகத்துக் காதற்ற ஊசி யொன்றும், ஓர் ஓலைச்சுருளும் இருந்தன. அவ்வோலையில் "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்னும் தொடரும் எழுதப்பட்டிருந்தது.

அதனைக்கண்ணுற்றதும் திருவருளால் நம்பிள்ளையார்க்குச் செவ்விவந் தெய்தியது. உடனே அகம்புறம் ஒத்த துறவுநிலை அடைந்தனர். அடைந்து "வேதத்தி னுட்பொருள் மண்ணுசை (இரண்டாம்பகுதி, பொது-கக)" எனத்தொடங்கும் பாட்டைப் பாடிக்கொண்டு வெளியேறினர். இப்பொது என்னும் தலைப் பில் அறுபத்தொரு பாட்டுக்கள் காணப்படுகின்றன. அவற் றுள் சிறந்த சில பாட்டுக்கள் வருமாறு:

க. வீடு நமக்குத் உ. கையொன்று ௩. சொல்லினும் ச. வினைப்போகமே ரு. மனையாளும் சு. ஒன்றென்றின்றிரு எ. என்செயலாவதி அ. அட்டாங்க கூ. எரிஎனக் க௦. அழுதாற் கக. ஓங்காரமாய்நின்ற கஉ. அஞ்சக்கர க௩. வெட்டாதசக்கரம் கச. உரையிட்ட" என்பனவாம். மேலும் க. திருச்செங்காடு உ. திருவொற்றியூர் ௩. திருவிடை மருதூர் ச. திருக்கழுக் குன்றம் ரு. திருக்காளத்தி சு. கயிலாயம் எ. மதுரை முதலிய திருவூர்களுக்குத் தனித்தனியே ஒன்றும், சிலவும்,

பலவுமாகிய பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றிலும் சிறந்த சில பாட்டுக்கள் உள. அவை வருமாறு:

க. ஐயுந் தொடர்ந்து உ. காடேதிரிந்தன்ன ௩. பொன்னுற் ௪. வாளால் ரு. விடப்படுமோ "நல்லாரிணக்கமும்", "மாயநட்டோரையும்", "பூதங்களற்றுப்" என்பன. இவை போன்றனவும். க. கோயிற்றிருவகவல், உ. கச்சித்திருவகவல் ௩. திரு ஏகம்பமாலை ௪. திருத்தில்லை ரு. பொது ஆகியவற்றில் காணப்படும் பாடல்களும் தாயாருக்குச் செய்த ஈமக்கடன் பற்றியனவும் பிறவும் இரண்டாம் பகுதியில் காணப்படுவன. இவை பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்களுடன் ஒப்பு நோக்கின் பொருத்தமில்லாமை எவர்க்கும் எளிதிற் புலனுகும். எனினும் "காதற்ற ஊசி" "என்செயலாவது" முதலிய சில தனிப்பாட்டுக்கள் வரலாற்றுச் சான்றுகக் காணப்படுவன. அதுகொண்டு ஏனையவற்றையும் விலக்காது சேர்த்துள்ளனர் போலும் முன்னேர். இவைநிற்க.

பிள்ளையார் பெருந்துறவு பூண்டகாலைத் தாயார் கேட்டுக் கொண்டபடி இறுதிக் கடன்களைத் தாமே முற்றுவிப்பதாகக் கூறி ஆறுதல் மொழிந்தனர். பின் தங் கணக்காகிய சேந்தனுரை நோக்கித் "தம் பெருஞ் செல்வங்களை யாவருங் கொள்ளை கொள்ளும்படி திறந்துவிடுக" என்று ஆணைநல்கினர். அவரும் அங்ஙனமே செய்தனர். இவ்வுண்மை உணராத மன்னன் எஞ்சியிருந்த பொருள்களைக் கைப்பற்றிக்கொண்டு சேந்தனுரையும் சிறைவைத்தனன். சேந்தனுர் தம் மனைவியாரும் தம் அருமை ஆண்மகவொடும் வேற்றூரிற் சென்று கூலிவேலை செய்து பிழைத்திருந்தனர்.

பின் நம் பிள்ளையார் ஊர்ப்பொதுமடத்திற் சென்று நிட்டையிலிருந்தனர். மன்னன் அடிகள்பால் வந்து இத்தகைய ஆண்டிக்கோலத்தைப் பூண்ட காரணம் யாதென வினவினன். அடிகள் மிகச் சுருக்கமாக "நீர் நிற்க நாம் இருக்க" என்று விடைபகர்ந்தனர். மன்னன் யாதுங் கூருது போயினன். அடிகள் பசிவந்தபோது பிச்சை எடுத்துண்டு நிட்டையிலிருந்தனர். மேலும்,குப்பைமேற்கிடத்தல், தங்காலிற் கயிறுகட்டிச் சிறுவரைக்கொண்டு இழுப்பித்தல் முதலிய விளையாட்டுக்களை இடையிடையே புரிந்துவந்தனர். கண்டவர்பலரும் பழிப்பாராயினர். இதனைப் பொருத அடிகளின் உடன் பிறந்தாள், நஞ்சுகலந்த அப்பஞ் செய்து அடிகளுக்குக் கொடுத்தனர். அடிகள் உண்மையுணர்ந்து அதனை அவ்வம்மையார் வீட்டுக்கூரையின் மீது எறிந்தனர். உடனே வீடுதீப்பற்றிக்

கொண்டது. யாவரும் அஞ்சினர். அப்பொழுது "தன்வினை தன்னைச் சுடும் ஒட்டப்பம் வீட்டைச் சுடும்' என மொழிந்தனர் என்ப.

பின் அடிகள் திருவெண்காடு சென்று அங்கு வழிபாடியற்றிக்கொண்டிருந்தனர். அக்காலை தாயார் திருவடியடைந்தனர். அவருக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை எழிலுற இயற்றினர். பின்பு அடிகள் தமிழ்நாடெங்குஞ் சென்று வழிபட்டுப் போந்தனர். அப்பால் வடநாடு சென்றனர். அங்குள்ள உஞ்சேனை மாகாளம் சென்று இறைவனை வழிபட்டனர். ஊர்ப்புறத்தேயுள்ள பிள்ளையார் கோயில் ஒன்றில் நிட்டைகூடியிருந்தனர். கள்வர்பலர் அவ்வழியாகக் களவுசெய்யப் போந்தனர். போங்கால் கடவுளைத்தொழுதுசென்றனர். அரண்மனையிற் சென்று களவு செய்தனர். திரும்பும் பொழுது விலைவரம்பில்லா முத்து மாலையொன்றைப் பிள்ளையார்மேல் வீசி எறிந்தனர். அம்மாலை அடிகள் திருக்கழுத்தில் விழுந்தது. பொழுது விடிந்ததும் காவலர்கள் அடிகளைக் கள்வரென்று கட்டியிழுத்துச் சென்று அரசன் முன் நிறுத்தினர். அரசனும் ஆராயாது கழுவிலேற்ற ஆணையிட்டனன். கழுவினடியில் கொண்டுவந்து நிறுத்தினர் அடிகளும் கழுமரத்தை நோக்கி "என் செயலாவது" எனத் தொடங்கும் தனிப்பாட்டைப் பாடினர். திருவருளால் கழுமரம் தீப்பற்றி எரிந்துவிட்டது. அரசன் இதனையுணர்ந்து மிகவும் அஞ்சினன். அடிகள் திருவடியில் விழுந்து வணங்கினன். அடிமையாயினன்.

அடிகள் மன்னனை மாதவஞ்சார் தென்திசைச் சிறப்பு நோக்கித் திருவிடைமருதூருக்குப் போய் இறைவனை வணங்குமாறு பணித்தனர். மன்னனும் திருவிடைமருதூர் சென்று இறைவனை வணங்கினன். துறவியாயினன். அடிகளும் பல திருவூர்களை வணங்கிக்கொண்டு திருவிடைமருதூர் வந்து இறைவனை வணங்கி அங்குத் தங்கியிருந்தனர். அடிகள் தம் திருநோக்கால் ஞானம்பெற்று மன்னன் மேலைக் கோபுரவாயிலிற் றங்கி நிட்டை புரிந்தனன். இம்மன்னனே பத்திரகிரியார் எனப் பகரப்படுகின்றனன். அடிகள் கீழைக் கோபுரவாயிலிற் றங்கியிருந்தனர்.

பத்திரகிரியார் நாளும் பிச்சை எடுத்துக்கொண்டுவந்து அடிகளுக்குத் திருவமுது செய்வித்து எஞ்சியதைத் தாமும் உண்டு தவம்புரிந்து வந்தனர். ஆதரவற்ற ஒரு பெண்நாயும் ஆங்கு அவரை விடாது இருந்தது. அதற்கும் எஞ்சிய பிச்சையினை இட்டு வந்தனர். திருவோடும் கையில் இருந்தது. இவ்

வாறிருக்கும் நாளில் ஒருநாள் மருதவாணர் ஒரு சித்தராய் எழுந்தருளி வந்து அடிகள்பாற் சோறிடுக என்று கேட்டனர். அடிகள் மேலைக்கோபுரவாயிலில் ஒரு குடும்பி இருக்கின்றனன், அவன்பாற் போய் வினவுக என்றனர். சித்தரும் பத்திரகிரியார்பால் வந்து அடிகள் கூறியதை மொழிந்தனர். பத்திரகிரியாரும் உண்மையுணர்ந்து திருவோட்டை வீசியெறிந்தனர். அது நாயின் மண்டையிற்பட்டு உடைந்தது. நாயும் இறந்தது.[1] பின் சித்தராய் வந்த மருதவாணர் மறைந்துவிட்டனர்.

அடிகள் பத்திரகிரியாரை ஓடு கைக்கொண்டமையாற் குடும்பி என்று கூறினாரல்லர். நாயொன்று தொடர்ந்தமை பற்றி நவின்றருளியதாகும். அடிகள் திருவிடைமருதூர் மும்மணிக்கோவை ஏழாந்திருப் (பக்கம்-கசுக) பாட்டில் திருவோடு கொள்ளுந்திறம் ஓதியருளினர். எனவே அந்நவிற்சி திருவோட்டினைக் குறித்ததன்றென்பது புலனும்

அடிகளாரின் எச்சில் திருவமுதுண்ட நாய் காசி மன்னன் பால் பெண்மகவாய்த் தோன்றிற்று. அப்பெண்மகள் மிக்க எழிலுங் குணமும் கடவுட்பற்றுமுடையவளாக இருந்தனள். பண்டை நினைவுங்கொண்டிருந்தனள். பருவம் வாய்த்ததும் மன்னன் மணம் நிகழ்த்தவேண்டு மென்று உன்னினன். அம்மங்கை அதனை மறுத்துத் தன்னைத் திருவிடைமருதூரி லுள்ள பத்திரகிரியார்பால் ஒப்புவிக்கும்படி வேண்டினள். காசி மன்னன் அவ்வாறே செய்தனன். பத்திரகிரியார் அத் தவஞ்சார் பெண்மணியை அடிகள்பால் அழைத்துவந்து தொழு வித்து அடிகளே! தங்கள் எச்சிலமுதுண்ட இப்பெண்ணுக்குப் பிறவி வரலாமோ என்று வேண்டிக்கொண்டனர். அடிகள் திருவருளை அகமுற நாடினர். அப்பொழுது பேரருட் பெருஞ் சுடர் ஒன்று தோன்றியது. அதன்கண் பத்திரகிரியாரும் அத்தவப் பெண்ணும் புகுந்து திருவடியிற் கலந்தனர். இங்ஙன முள்ள கதை பரவைவழக்காய் வழங்குவது காண்க.

இவ்வருள் நிகழ்ச்சியைக் கண்ணுற்ற அடிகள் மருத வாணர்பால் தன்னையும் திருவடிக்கீழ்ச் சேர்ப்பித்தருள வேண்டு மென்று விண்ணப்பித்துக் கொண்டனர் மருத வாணரும் ஒற்றியூர் வருக எனப் பணித்தருளினர். அடிகளும் விடைகொண்டு ஒற்றியூர் நோக்கிப் புறப்பட்டனர். இடையே திருவெண்காடுவந்து சேர்ந்தனர். சேந்தனார் தம் மனைவியையும் மகனையும் கண்டனர். சேந்தனரின் சிறைநிலையுணர்ந்தனர்.

1. 'மற்றுந்' திருக்குறள், கூசுஙி.

அடிகள் மூத்தபிள்ளையாரை வேண்டிக்கொண்டனர். பிள்ளையாரும், சிறைநீக்கிச் சேந்தனாரை அடிகள்முன் வருமாறு செய்தருளினர். சேந்தனாரும் குடும்பத்துடன் அடிகள் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். அடிகளும் சேந்தனாரை நோக்கி அருள்புரிந்து நீ தில்லைத் திருப்பதி சென்று விறகுத்திருத் தொண்டியற்றிக் குடும்பத்துடன் வாழ்கவென்று பணித்தனர். அவரும் அவ்வாறே செய்து திருத்தொண்டு புரிந்தனர். சேந்தனார் தில்லையில் விறகுவிற்று வாழ்ந்து அடியவர்கட்குத் திருவமுதசெய்வித்து வந்தனர். ஒருநாள் அம்பலவாணர் அடியார் திருக்கோலத்துடன் எழுந்தருளி வந்து சேந்தனாரிட்ட ருளிய அமுதுண்டனர். அம்பலத்திற் கொண்டு களிநிறைந்த பொதியை வைத்தனர்.

கூத்தப் பெருமானார் மன்னற்கும் மாண்பு சேர் தில்லை வாழந்தணர்க்கும் சேந்தனார் நிலைமையைக் கனவில் அருளினர். உடனே யாவரும் சேந்தனாரைச் சென்றுகண்டு வழிபட்டு வியந்தனர். பின்னர்த் திருவிழாவின் போது பெருமழை பொழிந்து தெருவெல்லாம் சேறாகி விட்டன. தேர் செல்வதற்கு வழியில்லாமல் எல்லாரும் வருந்தினர். சேந்தனார் திருவருளால் **திருப்பல்லாண்டுத்** திருப்பாட்டுப் பாடினர். திருத்தேர் தானாகவே சுற்றிவந்து நிலை நின்றது. இவ்வுண்மையினைச் சேந்தனார் பாடியருளிய வரும் திருப்பாட்டின் திருக்குறிப்பான் உணர்க:

"ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்திரனுந்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டுகூறுதுமே,"

கூ. திருப்பல்லாண்டு—கஉ

மேலும், ஒன்பதாம் திருமுறைக்கண் சேந்தனார் திருவீழிமிழலைமீது கஉ பாட்டும், திருவாவடுதுறைமீது கக பாட்டும் திருவிடைக்கழிமீது கக பாட்டும் பாடியருளினர். குடும்பத்தோடு கூத்தப் பெருமான் திருவடி நீழலை எய்தினர்.

பட்டினத்தடிகள் இறுதியாகத் திருவொற்றியூரை அடைந்தனர். பெருமான்மீது ஒருபாஒருபஃது பாடியருளினர். திருவொற்றியூரின்கண் மிக்க தீவிர நிலையில் வீற்றிருந்தருளினர். ஒருநாள் ஏகாலியச் சிறார்க்கு விளையாட்டுக் காட்டுவதாகக் கூறித் தம்மையொருகுழியிற் புதைக்குமாறு செய்தனர். பின் வெளிவந்தனர். யாவருங்கண்டு வியந்தனர். மீட்டும் ஒரு

முறை புதைக்கச் செய்தனர். பின்பு சிவக்கொழுந்து வடிவமாக முளைத்து நின்றனர். அடிகளார் முன்னமே மந்திர வடிவம் எய்தினமையின் இத்திருவருள் நிகழ்ச்சி நிகழ்ந்தமை புலனும். அடிகளார்க்குத் திருவொற்றியூர்க் கடலருகே ஒரு பெருந்திருக் கோவில் அமையப்பட்டுள்ளது. நாள் விழாவும் சிறப்புவிழாவும் நன்கு நிகழ்ந்தவருகின்றன. அடிகள்தம் குருபூசைநாள் ஆடித் திங்கள் உத்திராட நன்னளாகும்.

அடிகள்தம் மனைவியார் அடிகள் திருவடிகளை உள்கிவந்த அருந்தவப்பேற்றால் முன்னமே சிவபெருமான் திருவடியை அடைந்தனர். அடிகள் சிவமாம் பெருவாழ்வு எய்தியமை கேட்டுக் காவிரிப்பூம் பட்டினத்து மெய்யன்பர்களும், உறவினரும், ஊரவரும் ஆகிய அனைவர்களும் வந்து அடிகள்தம் சிவக் குறியினைக்கண்டு வியந்து வழிபட்டுய்ந்தனர் என்ப.

பட்டினத்துப் பிள்ளையார் பாருணர ஒற்றியூர்
ஒட்டித் திருவடிக்கண் உய்ந்தமைதான்—மட்டிலருள்
தந்தவுடல் வையம் தழைபொருள்கள் ஆருயிர்க்கு
வந்தவொற்றி என்றுணர்த்தும் வாழ்வு.

(ஒற்றி: ஈண்டு இரவல்.)

பார்புகழும் பட்டினத்துப் பிள்ளையார் பண்பணைத்தும்
யார்புகழ வல்லார் இருநிலத்தில்—தேரோடப்
பல்லாண்டு பாடியருள் சேந்தனார் பிள்ளையார்
எல்லாரும் வாழ்க இனிது.

அன்பன்,
ப. இராமநாதன்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

பட்டினத்துப் பிள்ளையார் திருப்பாடல்கள்

—: ❋ :—

க. கோயில் நான்மணிமாலை

வெண்பா

திருச்சிற்றம்பலம்

பூமேல் அயன்அறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம்—பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கோற்றக் குடை.

(இதன் பொருள்.) *செந்தாமரை மலரிலிருக்கும் படைப்போன் ஆகிய அயனாலும் அறிய முடியாத திருமுடியினை இயல்பாகவுடையவன் சிவபெருமான்; அத்திருமுடிமேல் திகழ்ந்துகொண்டிருப்பது அவன் றன் தூய வெள்ளிய கொற்றக்குடை; அத்தகைய திருக்குடையினை நாமே புகழ்ந்து அளவை நாட்டுவோம்! செந்தமிழ்த் திருமாமறை திருமாமுறைகளால் புகழ்வோர் தம் புகழ்மறைகளைத் திருச்செவியாரக் கேட்டு உகந்தருள்பவனும், தில்லைத்திருநகரைச் சிறப்புறைவிடமாகக் கொண்டு மகிழ்பவனும், திருச்சிற்றம்பலம் எனப்படும் பொன்னம்பலத் தின்கண் திருவைந்தொழிலின் அருட்பெருந்திருக்கூத்தினை இடையறு தியற்றுதற்குக் கழிபேருவகை கொள்பவனும் அச்சிவபெருமானே.*

(விளக்கம்.) "கோயி ணன்மணிமாலை" *என்பது கோயிலுக்குக் கூறிய நான்காகிய மணியினது மாலை என்பதாகும். கோயில் என்பது திருத்தில்லைத் திருவூரைக் குறிக்கும். கோயில் என்பது பெரியோன் உறையும் உறையுளாகும். பெரியோன் விழுமிய முழுமுதல்வனும் சிவபெருமான் ஒருவனே. அவ்வுண்மை "பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்" (சிலப்பதிகாரம், ரு. இந்திரவிழவூரெடுத்த காதை, வரி-கசுக) என்பதனுன் உணரலாம்.*

நான்மணி மாலையென்பது, நால்வகைப் பாக்களாலாகிய மாலையென்பதாகும். நால்வகைப்பா வெண்பா, கலித்துறை, ஆசிரிய

விருத்தம், ஆசிரியப்பா: என்பன. மாலை என்பது பெரிது என்பதாகும். மால் - பெரிது. மல்குதல் - பெருகுதல். நான்மணிமாலை இம்முறையாற் றொடுக்கப்படுவ தென்னு முண்மை வருமாறு:

> "மன்னிய வெண்பா கலித்துறை மன்னர்பா
> முன்னியமுப் பான்மும் மணிமாலை—மன்விருத்தம்
> நாட்டிய நாற்பது நான்மணி மாலையாம்
> ஈட்டியவந் தாதியா யெய்ந்து."

—வச்சணந்திமாலை-கசு.

பெரும்பாலும் மும்மணிக்கோவை யெனவும், நான்மணிமாலை யெனவும் வரும் வாய்மை காண்க.

"வெண்கொற்றக் குடையும், நவமணி முடியும், சிங்காதனமும் மன்னர்க்கே யுரிய சிறப்படையாளமாம். அதுபோலப் பிரபஞ்சம் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய ஒருபெரு வெண்கொற்றக் குடையும், எவற்றையும் ஒருங்கே ஓரியல்பான் அறியும் பேரறிவாகிய ஒரு பெருஞ்சுடர் முடியும். எவற்றினையும் அங்கங்கே உயிர்க்குயிராய் நின்று செலுத்து மியல்பாகிய ஒருபெருஞ் சிங்காதனமும்." என்பன.

—சிவஞானபோதம் அ. நூற்பா, சிவஞானமுனிவர் பேருரை.

குடையும் முடியும் இருக்கையும் முறையே அறிவு அன்பு ஆற்றல்களின் அடையாளங்களாகும். மன்னரின் சிறப்படையாளமாகிய வெண்கொற்றக்குடை அவர்தமக்கு நிழல்தருதற் பொருட்டன்று. குடிகளின் வருத்தந் தீர்தற்பொருட்டேயாம். அவ்வுண்மை வருமாறு:

> "நளியிரு.................................
> ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
> மாக விசும்பின் நடுவுநின் றாங்குக்
> கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
> வெயின்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
> குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ"

—புறநானூறு, நடு.

எனவே "கூத்தகந்தான் கொற்றக்குடை" மாமாயையாகும். இம்மாயை சிவபெருமானின் நேர் இயக்கமாகும். இம்மாயை நால்வகை ஓசைக்குங் காரணமாயது. அதனால் அறிவு விளங்குவதற்குத் துணையாகும் என்பது பெறப்படும். அதுபற்றியே "மாயாதனு விளக்காம்" என்னும் சிவஞானபோத வெண்பாவும் தோன்றிய தென்ப.

"கோயில்" எனப்படும் தில்லைமாநகர் உலகின் நடுக்கோட்டையொட்டியதாகும். அதனால் பூமிக்கு இடைகலை, பிங்கலையாகிய இரண்டு நாடிகளுக்கு நடுவே சுழுமுனை நாடியாகிய நடுநாடி முடிவிடமாதலால் இப்பெயர் பெற்ற தென்ப. அவ்வுண்மை வருமாறு:

> "நாடரு நடுவி னாடி நலங்கிளர் தில்லை நேர்போய்க்
> கூடுமங் கதனின் மூலக் குறியுள ததற்குத் தென்னர்

மாடுறு மறைகள் காணு மன்னுமம் பலமொன் றுண்டங்
காடுது மென்று மென்று னென்னையா ளுடைய ஐயன்."
—கோயிற் புராணம்-பதஞ்சலி சருக்கம், ௭௧.

பூதவெளிபோன்று பொன்மன்று அவ்வெளியினையும் உள்ளடக்கி நிற்கும் அருள்வெளி, அறிவுப் பெருவெளி. இவ்வுண்மை வருமாறு :

"சன்மார்க்கம் ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானொன் றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன் றுள் பார்த்த போதங்
கென்மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள எனக்குந் தானே
கண்டவுடன் ஆனந்தங் காண்ட லாகும்."
—தாயுமானவர், ஆகாரபுவனம், ௧௨.

வெளி - எல்லாவற்றிற்கும் இடங்கொடுத்து நிற்பது. எல்லாவற்றோடும் விரவிநிற்பது. எல்லாவற்றையுங் கடந்து நிற்பது. எல்லாவற்றோடும் விரவி நிற்பினும் தோய்வற நிற்பது. நிலம், நீர், நெருப்பு, உயிர் (காற்று) ஆகிய நான்கினுக்கும் மேலாய் நிற்பது வெளி. அது போல் தில்லைமன்று நால்வகைச் சமயத்திற்கும் மேலாய் நிற்பது. நால்வகைச் சமயமாவன, ௧. புறப்புறம் ௨. புறம் ௩. அகப்புறம் ௪. அகம். இந் நான்கும் முறையே இறையுண்மை இல்லார் இறையுயிரே என்பார், இறைகோலம் பேற்றியை பில்லார், என்று சொல்லப் படும் நால்வகைக் கொள்கையினர்தம் கோட்பாடாகும்.

மேலும் பொன்னம்பலம் தில்லைத்திருச்சிற்றம்பலம் எனவும், வழங்கப்பெறும். இவ்வுண்மை வருமாறு :

"எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குல் மங்கை கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி என்னை ஆளுடை ஒருவ போற்றி."
—அ. காருணியத்திரங்கல், ௭.

"பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின்
பிறங்குபேர் அம்பல மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலில் நடுவினில் கடையில்
அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம் பலம்முன்
திருஅணுக் கன்திரு வாயில்."
—௧௨. தடுத்தாட்—௧0௪.

சேக்கிழாரடிகள் முன்னுள்ள தென்றமிழ்ப்பயனுயுள்ள திருமா முறைகள் பதினொன்றனையும் அருமறையென ஈண்டருளிச் செய்தனர். அம் முறையா னோக்கின் ஆறுந்திருமுறை நிற்பது நடுவணதாகும். அத்திருமுறைக்கண் முதலில் தொடங்கும் திருப்பதிகம் "அரியானை அந்தணர்தஞ் சிந்தையானை" எனத் தொடங்குவதாகும். இத்திருப் பதிகத்தின் திருப்பாட்டுக்கள்தோறும் "பெரும்பற்றப் புலியூரானை" என்னும் பெருமாமறை ஓதப்படுவது காண்க.

இரண்டாம் திருப்பதிகம் "மங்குல்மதி தவழும் மாடவீதி" எனத் தொடங்குவதாகும். அதில் திருப்பாட்டுக்கள்தோறும் "புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே" என்னும் திருச்சிற்றம்பலத் திருமாமறை காணப்படும். இம் முறைகொண்டு நோக்கின் முதற்றிரு முறை திருஞானசம்பந்தப் பெருமானுர் அருளியதாகும். அப்பெருமா னுர் அருளிய திருமுறைகள் மூன்று. முதல் திருமுறைத் தொடக்கம் திருப்பிரமபுரம். இரண்டாந் திருமுறைத் தொடக்கம் திருவலஞ்சுழி. மூன்றாந் திருமுறைத் தொடக்கம் "கோயில்" அத் திருப்பதிகம் "ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்" என்று தொடங்குவது. அதன்கண் "அந்தணர் பிரியாத சிற்றம்பலம்" என்னும் திருமாமறை வந்துள்ளது காண்க.

பதினோராந் திருமுறை யீற்றின்கண் காணப்படுவது "கோயிற் திருப்பண்ணியர் விருத்தம்." அதன் கடையினில் திகழும் திருப் பாட்டு வருமாறு.

"கைச்செல்வ மெய்திட லாமென்று பின்சென்று கண்குழித்தல்
பொய்ச்செல்வர் செய்திடும் புன்மைகட் கேயென்றும் பொன்றவில்லா
அச்செல்வ மெய்திட வேண்டுதி யேல்தில்லை யம்பலத்துள்
இச்செல்வன் பாதங் கருதிரந் தேனுன்னை யென்னெஞ்சமே."

—கோயில் திருப்பண்ணியர் விருத்தம், எ0.

இதன்கண் காணப்படும் தில்லையம்பலம் திருச்சிற்றம்பலமே. எனவே முதல், நடு, கடை என்னும் மூன்றிலும் திருச்சிற்றம்பலம் வந்துள்ளமை காண்க.

இனி "அன்பர்தம் சிந்தையில் அலர்தல்" என்னுங் குறிப்பு "கோயிற் திருப்பண்ணியர் விருத்தத்தின்" பின் திருத்தொண்டர் திரு வந்தாதி, ஆளுடைய பிள்ளையார், திருநாவுக்கரசர் இவர்கள் மேலுள்ள பாமாலைகள் காணப்படுகின்றன. "செப்பத் தகுபுகழ்த் தில்லைப்பதி" எனத் திருத்தொண்டர் திருவந்தாதியில் வருவது கொண்டுணர்க.

இனி நாவலந் தீவினுள் சிறந்து விளங்குகின்ற பலவற்றுள்ளும் தனிமிகச் சிறந்து விளங்குவன ஐவகை மன்றங்கள். அவை மணி, பொன், வெள்ளி, செம்பு, மண் என்பன. இவற்றை மன்றம் என்னுஞ் சொல்லுக்கு அடையாக்கி மணிமன்று, பொன்மன்று, வெள்ளிமன்று, செப்புமன்று, ஓவியமன்று எனவழங்குப. இவற்றைத் தன்னகத்துக் கொண்டுள்ள திருவூர்கள் முறையே வருமாறு: க. திருவாலங்காடு, உ. திருத்தில்லை ங. திருக்கூடல் (மதுரை) ச. திருநெல்வேலி ரு. திருக்குற்றாலம் என்பன. மண்-சுதைமண்; ஓவியம்.

இவ்வைந்தும் ஒருபுடை யொப்பாக முறையே க. பேறு, உ. அறிவு ௩. செறிவு ௪. நோன்பு ரு. சீலம் என்னும் நன்னெறி நாற்படியும் நலமுங்குறிப்பனவாகும். திருக்குற்றால முதல் திருத்தில்லை வரையுள்ள நான்கும் நன்னெறி நாற்படியின் குறிப்பாகும். திருவாலங்காடு திருவடிப்பேற்றின் திருக்குறிப்பாகும். பேரொடுக்கத்தின்பின் அன்பர்க்களிக்கும் திருவடிப்பேறு, அவரவர்தம் நற்றவப் பேற்றால் இடையே நிகழினும் பேரொடுக்க நீர்மையினையே நம் பெரியோர் பேசுவர். அம்முறையில் அமைந்தது காரைக்காலம்மையார் பாடியருளிய "மூத்த திருப்பதிகங்கள்" இரண்டும். அம்மையாரும் தம்மைப் **பேயார்** என்றே திருவருளால் கூறியருளினர். இவை கொண்டு திருவாலங்காடு திருவடிப்பேற்றின் திருக்குறிப்பெனத் தெளிதல் எளிது. மேலும் திருவாலங்காட்டில் நிகழ்த்தும் திருக்கூத்து மேல்நோக்கிய திருக்கூத்தாகும்.

மேல் நோக்கிய திருக்கூத்தென்பதனை ஊர்த்துவ தாண்டவம் எனக் கூறுப. இவ்வைவகை மன்றமும் ஒருபுடை யொப்பாகத் திருக்குற்றாலமுதலாக "நமசிவய" என்னும் நற்றமிழ் மறையாந் திருவைந்தெழுத்தின் திருக்குறிப்பாம் என்றலும் ஒன்று.

காப்போன் படைப்போன் ஆகிய இருவரும் முறையே செல்வச் செருக்கும் கல்விச் செருக்கும் மிக்குடையவர். அதனால் இருவரும் தம்முட் சண்டையிட்டனர் அவர்கட்கு உண்மை யுணர்த்தும்பொருட்டுச் சிவபெருமான் அழலுருவாய் நின்றருளினன். அவ்வுண்மை வருமாறு :

"பிரமன் அரியென் றிருவருந்தம் பேதைமையாற்
பரமம் யாம்பரமம் என்றவர்கள் பதைப்பொடுங்க
அரனார் அழலுருவாய் அங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்கம் ஆடாமோ."

(பேதைமை – ஆணவம்) —அ. திருத்தோணோக்கம், கஉ.

"தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் துதித்துய்ந்த படிவிரித்தார்."

—கஉ. சம்பந்தர், எஅ

தில்லைத் திருச்சிற்றம்பலக் கூத்தனைப் பாடுவதே பிறவிப் பயன். அது வருமாறு :

"கூட வேடத்த ராகிக் குழுவிலென்
வாடி யூனை வருத்தித் திரியிலென்
ஆடல் வேடத்த னம்பலக் கூத்தனைப்
பாட லாளர்க்கல் லாற்பய னில்லையே."

—ரு. ககக-எ. (க)

கட்டளைக் கலித்துறை

குடைகோண்டிவ் வைய மேலாங்குளிர்
வித்தேரி போற்றிகிரிப்
படைகோண் டிகல்தேறும் பார்த்திவ
ராவதிற் பைம்போற்சோன்றைத்
தோடைகோண்ட வார்சடை அம்பலத்
தான்தோண்டர்க் கேவல்சேய்து
கடைகோண்ட பிச்சைகோண் டுண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே.

(இ - ள்.) வெண்கொற்றக் குடையினுல் மண்ணுலகம் முழுவதும் ஆளும் வேந்தன் அருளொடும் ஆளுபவனுவன்; அவ்வேந்தன் அம்மட்டுமன்றி ஆழிப்படையினுல் அச்சுறுத்திப் பகையையுங் குற்றத்தையும் தலைகாட்ட வொட்டாமல் நீக்குதலும் செய்வன். அத்தகைய பெருநிலை வேந்தனுக வாழ்வதினும் பசிய கொன்றை மலர் மாலை யணிந்த, நீண்ட திருச்சடையினையுடைய தில்லைத் திருச்சிற்றம்பலவன் திருவடிக்கு மீளா அடிமையாய்த் தொண்டுபூண்டொழுகும் மெய்யடியார்கட்கு ஆளாய் அவர்தம் அருளாணை வழி நின்று ஏவல் பூண்டொழுகி மெய்யன்பர்கள் வீடுகள்தோறுஞ் சென்று அவர்கள் அன்பொடும் இடும் பிச்சையுணவினை ஏற்றுண்டு இங்கு வாழ்தல் மிக்க களிப்பினைத் தருவதாகும்.

(வி - ம்.) வையம்—மண்ணுலகம். குளிர்வித்து-நிழலச்செய்து. அஃதாவது துன்பமின்றி மக்களும் மற்றுயிர்களும் இன்பமொடு வாழச் செய்வது. இகல் - பகை. தெறும் - வருத்தி யொழிக்கும். தொடை—தொடுக்கப்படும் மாலை. கடை - வீடு. களிப்பு - உள்ளத்துவகை.

வையங்காக்கு மன்னன் நிலை மிக்க சிறப்புடையது. அந்நிலை அறத்தின் வழுவாது ஒழுக வேண்டிய அருமைப் பாடுமுடையது. அறத்தின் வழுவாது ஒழுகுவதற்கு அறவாழி அந்தணன் தாட்கு நீங்கா அன்பும் வழிபாடும் என்றும் இடையறுது இயற்றிக் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வழிபாடு முட்டின்றி நிகழ்வதற்கு அடியாரிடம் பேரார்வங் கொண்டொழுகுதல் வேண்டும். ஆட்சிக்கு இன்றியமையாத சட்ட நூல் போன்று ஆண்டவன் திருவடி வழிபாட்டிற்குச் சட்டநூல் போன்று திகழ்பவர் மெய்யடியார்களே. அவ்வுண்மை;

"சண்டீசப் பெருமானுர்" தன் தாதை தாள்களை மழுவால் துணித்தமை.

"எம்பிரான் சம்பந்தன்" பையவே சென்று பாண்டியற்காகவே எனப்பணித்தமை.

"வேல் நம்பி கோட்புலியார்" சுற்றமெலாங் கொன்றமை.

"எறிபத்த நாயனுர்" யானையையும் பாகரையும் கொன்றமை.

"செருத்துணை நாயனுர்" கோச்சிங்கர் உரிமைப் பெருந்தேவியின் மூக்கரிந்தமை.

இவை போன்ற மெய்யடியார்களின் தூய்ய திருச்செயல்களால் அறியலாம். மேலும் இவற்றை அவ்வம்மன்னர்கள் ஏற்றுக்கொண்டமையினாலும் நன்கு விளங்கும். அவை வருமாறு: புகழ்ச்சோழமன்னர் "குழையணி காதினனுக் கன்பராங் குணத்தின் மிக்கார், பிழைபடின் அன்றிக் கொல்லார்" எனப் பேசியமையாலும்.

காடவர்கோன் கழற்சிங்கர் தன் பட்டத்துத் தேவியாராகிய "மட்டவிழ்குழலாள் செங்கை வளையொடுந் துணித்தா ரன்றே" என வருகின்றமையானுங் காண்க.

வையங்காக்கு மன்னன் உடம்பையும் உடைமையையுமே காப்பன். மெய்யடியார்கள் இவற்றோடு மன்னற்கு மரிய உயிரையும் உய்வித்து வாழச் செய்வர். அதனால் மெய்யடியார்கள் வேந்தரினும் மிக்காராவர் என்பதுதெளிவு. மெய்யடியார்கள் "வையக முற்றும் துயர் தீர்கவே" என நாளும் வாழ்த்தும் நல்லருள் உள்ளத்தர்: அவர் எவ்வுலகத் தார்க்கும் உரியவராவர்.

மெய்யடியார்கட்குத் தொண்டு செய்யும் திருத்தொண்டர்க்கும், அம்மெய்யடியார்கட்கும் உண்டியும், உடையும், உறையுளும், உறையும் உவந்தளிப்பது தங்கடமையும் உரிமையும் எனக்கொண்டு நாளும் பணி செய்து வருவது உலகோர் தொண்டாகும். உறை-மருந்து.

மேலும் நில்லாவுலகின் நிலையா வாழ்க்கையினை மெய்யடியார்களே சொல்லாலும் செயலாலும் எல்லார்க்கும் நேரில் காட்டும் மேன்மையர். புத்தசமணத் துறவிகளும் நிலையா வாழ்க்கையினை உணர்த்தினர் எனினும், எய்த வேண்டிய நிலையான கடவுள் வாழ்க்கையினை உணர்ந் தாருமல்லர்; உணர்த்தினருமல்லர். நால்வர் முதலாகிய திருமுறையாசிரியன்மார்களும், திருவள்ளுவ நாயனரும் இரண்டினையும் செம்மை பெற இயன்முறைவழாது தந்தருளினர்.

வையமெலாம் என்பது ஒருமையிற்பன்மை வந்த வழுவமைதி. குடைகொண்டு, படைகொண்டு இவற்றில் காணப்படுங் கொண்டு என்பன மூன்றன் சொல்லுருபுகள். திகிரி - வட்டம். திகிரிப்படை - வட்டமாகிய சக்கரப்படை படை - படுத்தல். இது கொல்லுதல் என்னும் தொழிலைக் குறிப்பதால் பின்மொழியாகு பெயர் என்ப. பார்த்திவன் - மண்ணுள் மன்னன். பார்த்திவம் - மண். பார்த்திவம்- நிலம். பார் - நிலம்.

பைம்பொற் கொன்றை என்றதன்கண் பசுமை வாடாமையையும் பொன்மை நிறத்தையும் குறிக்கும். செம்மை கருமை முதலிய நிறத்தினின்று பிரித்தலால் இது பிறிதினியைபு நீக்கிய அடை. தெய்வத்திற் கிடப்பட்ட பூ முதலியன வாடுவதில்லை. அதுபோல் தெய்வத்திற்குச் சூட்டிய மாலையும் வாடுவதில்லை.

"நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை."

—யாப்பருங்கலக்காரிகை, உ0. (உ)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

களிவந் தமுதூறிக் கல்மனத்தை எல்லாங்
 கசியும் படிசெய்து கண்டறிவார் இல்லா
வெளிவந் தடியேன் மனம்புகுந்த தென்றால்
 விரிசடையும் வெண்ணீறுஞ் செவ்வானம் என்ன
ஒளிவந்த பொன்நிறமுந் தொல்நடமுங் காட்டும்
 உடையான் உயர்தில்லை அம்பலமொன் றல்லால்
எளிவந் தினிப்பிறர்பாற் சென்றவர்க்குப் பொய்கொண்
 டிடைமிடைந்த புன்மொழியால் இச்சையுரை யோமே.

(இ - ள்) பேரின்பம் பெருகிய அமுதமானது இடையறாது ஊற்றெடுத்துத் திருவருளால் அடியேன் மனத்தை முற்றும் கசியும்படி செய்வித்துவரும் அப்பதிப்பொருளின் தன்மை இத்தகையதென்று கண்டறிவார் இல்லாத அருட்பெருவெளி. அப்பெருவெளி அடியேன் மனம் புகுந்தருளிய தென்றால் அவனுக்கே யுரிய திருவெண்ணீறும், அந்திவானத்தையொத்த விரிந்த திருச்சடையும், செவ்வான் போன்ற அழகிய நிறமமைந்த திருமேனியும், தொன்மை ஐந்தொழிற் றிருக்கூத்தும், அடியவர் பொருட்டுப் படியின்மிசைக் காட்டியருளும் உயிர்ப்பொருளும் உயிரில் பொருளுமாகிய எல்லாவற்றையும் தனக்கு உடைமைப்பொருளாக உடையவன், உயர்ந்த தில்லைத் திருச்சிற்றம்பலம் ஒன்றை யல்லாது, எளிமைகொண்டு இனிமேல் பிறர்பாற் சென்று பொய்யாற் புனைந்து அவர்க்கில்லாதவற்றையும் இடையே புகுத்திப் புகழும் புன்மொழிகளாகிய பாடல்களை மறந்தும் பாடோம்.

(வி-ம்.) களி - பேரின்பம். அமுது - துன்பம் நீக்கி இன்பம் ஆக்கி நிலைபெறுவிக்கும் மருந்து. அணைந்தின்புறும் ஒன்றை அறிந்து அறிவிக்கும் இயல்பு உலகியற் பொருள்களுக்கே யில்லை. அங்ஙன மிருப்பதனால் உலகங்கடந்த உண்மையறி வின்பப் பெருவெளியாம் ஒப்பில்சிவனை அறிவதெப்படி? அதனால் கண்டறிவாரில்லா வெளி என்றனர். தொன்னடம் - அநாதியானநடம். காலம்கணிக்கமுடியா இயல்பினதாகிய நடம். ஆதலில் தொன்னடம் எனப்பட்டது.

சிவபெருமான் தோற்ற ஒடுக்கங்களாகிய அழிவினை யில்லான். சார்பினால் தோன்றும் உயிர்த்தன்மை யுடையனுமல்லன். அவன் திருவடி யின்பமும் அழிவினை எய்தாதது. அதனால் அவன் அமுதென வழங்கப்படுகின்றனன். அவ்வுண்மை வருமாறு:

“ஐவணமாம் பகழியுடை யடல்மதனன் பொடியாகச்
செவ்வணமாம் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி
மையணவு கண்டத்து வளர்சடையெம் மாரமுதை
எவ்வணநான் பிரிந்திருக்கே னென்னாரு ரிறைவனையே.”

—எ. ருக-உ.

'உயர்ந்த தில்லை' என்பது தில்லைத்திருவூர் எல்லாத் திருவூர்களினும் மிக்கதென்பதாம். கோயில் எனத் தனித் திருப்பெயர் பெற்றுத் திகழ்தலானும் பிறவாற்றானும் அறியலாம் அதன்மேலும் அத்திருவூர்ச்சிறப்பு யாம வழிபாடும், அவ்வழிபாட்டின்பின் ஆண்டே புக்குறைதலும் ஆகிய வழக்குண்மையானும் பெறப்படும். அது வருமாறு :

''சந்தித்த கோவணத்தர் வெண்ணூல் மார்பர்
சங்கரரைக் கண்டீரோ கண்டோ மிந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய வேறிப்
படுதலையில் என்கொலோ எந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையும் தாமு மெல்லாம்
மணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே.''

(யாம வழிபாடு - நள்ளிருள் வழிபாடு.) —௬. ௨-௧.

தில்லையம்பலவாணனைப் பாடுதலன்றிப் பிறர்பாற் சென்று பொய்புனை பாடலாற் புகழ்ந்து இகழுறேன் என்னும் உண்மை வருமாறு :

''வஞ்ச நெஞ்சனை மாசழக்கனைப் பாவியை
வழக்கில்லியைப்
பஞ்ச துட்டனைச் சாதுவே யென்று
பாடினுங்கொடுப் பாரிலை
பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புகலூரைப்பாடு
மின் புலவீர்காள்
நெஞ்சில் நோயறுத் துஞ்சுபோவதற் கியாதுமையுற
வில்லையே.''

—௭. ௩௪-௫. (௩)

இணைக்குறளாசிரியப்பா

உரையின் வரையும் பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையுங் கடந்து
தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினுந் தில்லைமன் றினும்நடம்
ஆடும் அம்பல வாண நீடு
குன்றக் கோமான் றன்திருப் பாவையை
நீல மேனி மால்திருத் தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று பெருமநின்
தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரில்

தழங்குந் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை யாறும் போய்தீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்
வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையுஞ்
செய்வயல் தில்லை யாகிய தொல்பெரும் பதியும்என்
றொருபதி னாயிரந் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்
அமரர் முன்புகுந் தறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்
தென்னையும் எழுத வேண்டுவன் நின்னருள்
ஆணை வைப்பிற் காணுநு அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டுங்
கானில்வால் நுளம்புங் கருடனா தலினே.

க—அ. உரையின்...னான்று

(இ-ள்.) சொல்லளவும் பொருள் அளவும் ஆகிய இருவகையான அளவைகளையும் கடந்து (நின் திருவடிப் பேரின்பத்துய்ப்பினால் அவ்வின்ப வயப்பட்டுத்) தம்மை மறந்து நின் திருவடிகளையே இடையறாது நினைப்பவர்களுடைய செம்மைமனத்திலும், தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண்ணும் திருக்கூத்தியற்றியருளும் அம்பலவாணனே; உலகத்திலுள்ள மலைகளிலெல்லாம் மிக்க வுயரமுடையதும், பனிநீங்காததும், தனிவள முடையதும், ஆங்காங்கே பெய்யும் இயல்பாகிய பனிகள் சிவக்கொழுந்தின் றேற்றமுறுதலும், என்றும் பொன்றா திருத்தலும் ஆகிய சிறப்புடையமலை இமயமலை. அம்மலையின் தலைவன் குன்றக் கோமான். அவன் திருப்பாவையினை, அந்நங்கை திருமாலின் திருத்தங்கையுமாவள்; அம்மால் நீலமேனியை உடையவன். செய்தவப் பேற்றால் திருமணம் புணர்ந்து உலகுக்கருள் செய்த காலத்து.

(வி - ம்.) சிவபெருமான் சிறந்தோங்கி வீற்றிருக்குமிடம் மெய்யடியார்தம் தூயவுள்ளமே. அவ்வுண்மை வருமாறு :

"விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்கள் ஓதி எழுத்தஞ்சும்
கண்ணி னாற்கழல் காண்பிட மேதெனில்
புண்ணி யன்புக லூருமென் னெஞ்சமே."

—ரு. சசு-ரு.

உலகீன்ற அன்னை மலையரையன் பொற்பாவை யாயினள் என்பது புராணம். ஒருவர்செய் பெருந்தவப்பேற்றால் சிவன்திருவாற்

நல் அன்பறிவுமிக்க ஆருயிர்களைப்பற்றிக் கொண்டு அவர்தம் பக்கல் தவப்பயனாய் நண்ணுதலும் உண்டு. அங்ஙனம் நண்ணிய பேரறிவுப் பேருயிர் அவ்வுடலின் அகத்துறைந்தியங்கும் அவ்வுயிரி னகத்துத் திருவருளாற்றல் இயக்கி இயங்கும். அத்தொடர்புபற்றி அவ்வருளையே மிக்கெடுத்துக் கூறுப. இது முகமனெனப்படும் உபசாரம். அவ்வுண்மை "அத்துவாமூர்த்தியாக" எனத் தொடங்கும் சிவஞானசித்தியாரின் திருப்பாட்டா னுணர்க. ஒருவர்தம ஒப்பின்மை நோக்கி தரைமே விருக்கச் செய்தல் கூடாதென்று தரையின்மேல் மணையிடுவர். அதன்மேலும் பூம்பட்டு விரித்துப் பூவும் பரப்புவர். அதுபோல் தரை, தரைமேல் மணை, மணைமேல் பூம்பட்டு என்பனவற்றிற்கு ஒப்பாக மலையரையன் பொற்பாவையைத் தொடர்புபடுத்துங்கால், தரை யொத்துவிளங்குவது உலகம், மணையை ஒத்து விளங்குவது அப் பாவையின் எழிலுடல், பூம்பட்டையொத்து விளங்குவது அப்பாவை யின் இன்னுயிர். அப்பூம்பட்டின்மேல் வீற்றிருப்பாரை யொத்துக் காணப்படுவது திருவருளாற்றல்.

இவ்வுண்மை "காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்" எனவரும் சிவஞான சித்தியார் திருமொழியான் உணரலாம். மேலும் சிவபெருமான் "மாயா உருவினன் மாயா வுருவினை, ஏயான் எய்ந்தவர் எம்ம னோரே" எனவரும் சைவவாதி நிராகரணம் வரி உசு, உள ஆல் இதுநன்கு தெளிவாகும்.

"குன்றக்கோமான் தன்திருப்பாவையைத்" திருமணம் புணர்ந்த வாய்மை வருமாறு :

"மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ.

—அ. திருச்சாழல் கரு.

கண்ணுதலோன் கண்ணுதலால் காணப்படும் உலகவொழுக் கங்கள். கண்ணுதலோன் என்னுந் திருக்குறிப்பு சிவபெருமான் திருவுள்ளத் திருக்குறிப்பால் உலகுயிர்கள் எல்லாவற்றையும் இயைந் தியக்குவோன் என்பதாம். கண்ணுதல் - கருதுதல்; திருவுள்ளத் திருக்குறிப்பு.

அ—உ0. **பெருமநின் . பந்தருள்**

(இ - ள்.) பெருமானே! நின்னுடைய பூந்தாள் விரிந்த கொன்றைமலர் மாலையும், குற்றமில்லாத மறஞ்செறிந்த வெள்ளிய விடைக்கொடியும், போரையொப்ப ஒலிக்கின்ற உடுக்கைப் பறையும், பேரோசை யிடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய வான்புனல் யாறும், பொய்யில்லாத நீக்கமுடியாத மறைமுறைகள் எனப்படும் திரு ஆணையும்,[1] வரிசை வரிசையாக அமைந்துள்ள இரண்டாயிரம் பெரிய கொம்புகளையுடைய, தூய வெண்மை நிறமும், செவ்விய கண்களையு முடைய அயிராவண மென்னும் யானையும், பண்ணியல்பு நன்கு

1. 'தந்தமர்க.' கஉ. கோட்புலி. ௪.

பொருந்திய மறைக்குதிரையும், உயர்நிலை உலகமாகிய சிவபுரமும், அழிவில்லாத பொன்வண்ணமான பெரிய மேருமலையும், செவ்விய வயல்களாற் சூழப்பட்ட தில்லைத் திருச்சிற்றம்பலமாகிய பழைமை வாய்ந்த பெருமைமிக்க திருவூரும் என்று புகழ்ந்தெடுத்தோதுவதோடு அளவில்லாத ஒப்பற்ற பதினாயிரக் கணக்கான திருப்பெயர்களையும் காதலுரிமையாற் கசிந்து கண்ணீர் மல்கப் பாடி மெய்யன்பர்கள் மொய்த்திருக்கும் திருமணப்பந்தருள் :

(வி - ம்.) பெரும - பெருமானே. தார் - திருவடையாள மாலை. விடை - ஏறு; காளை. வரைதல் – நீக்குதல். நிரை – வரிசை. மா - பெரிய. மருப்பு - கொம்பு. வேழம் - யானை. ஈண்டுச் சிவபெருமான் ஊர்ந்து வரும் இரண்டாயிரங் கொம்புகளையுடைய வெள்ளையானை. இதனை அயிராவணம் எனவும், ஐராவதம் எனவும் வழங்குப. வரை - மலை. வேழம் - யானை. புரவி – குதிரை. பதி - ஊர்.

இதன்கண் வேந்தற் கமைந்த பத்து உறுப்புக்களாகிய தசாங்கம் அமைந்துள்ளன. அவை வருமாறு: க. தார் உ. கொடி ௩. பறை ௪. யாறு ரு. யானை ௬. புரவி எ. நாடு அ. மலை ௯. ஊர் ௧௦. பேர் என்பன. இவற்றுடன் திருவாணை என்னும் செங்கோன்மை கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளது. பெரும ஈறுகெட்டு நின்ற அண்மைவிளி. பத்துறுப்பு வருமாறு :

“ புல்லு மலையாறு நாடூர் புனைதார்மா
கொல்லுங் களிறு கொடிமுரசம்—வல்லகோல்
என்றிவை நஞ்செழுத்தோ டேலா வகையுரைப்ப
நின்ற தசாங்கமென நேர்.”

—வச்சணந்திமாலை-செய்—௧௯.

எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்தின்கண்ணும், மெய்கண்ட நூல்களுள் ஒன்றாகிய நெஞ்சுவிடுதூதின் கண்ணும் பத்துறுப்பு வருமாறு காண்க.

மறம் - வீரம். விடைத் தேவர்க்குரிய வீரம் வருமாறு :

“ சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறாங் கொடி.”

—அ. திருத்தசாங்கம், ௧௦.

“ ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப.”

—புறநானூறு, கடவுள் வாழ்த்து.

காரணம் பற்றி ஓதப்பெறும் இறைவன் திருப்பெயர் எண்ணில. அஃது “ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலாற் காயிரம், திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ” எனவரும் திருவாசகத் திருமாமறையா னுணர்க.

உக-உசு. அமரர்...கருடனுதலின்

(இ - ள்.) தேவர்கள்முன் தலை வணங்கிப் புகுந்து சென்று, அறுகுசாத்தி நின்திருவடிக்கண் மெய்யன்பு நீங்கா உரிமையுடைய நின்தமர் திருப்பெயர் எழுதியுள்ள எழுத்துக்களையுடைய நீண்ட பெரிய புத்தகத்தில் மிகவுந் தாழ்வான நாயனைய அடியேன் பெயரை யும் எழுதிக்கொள்ளுமாறு பணித்தருள வேண்டுவல். நின் திருவரு ளாணை கிடைக்கப்பெறின் கண்ணுக்குத் தெரியாத மிக நுண்ணிய வணுவும், வானத்தை யளாவும்படி மிகப்பேருருவத்ததாய்க் காணப் படும். சிறிய வெண்கொசுகும் அதுபோல் வானத்தில் பறந்து செல்லுங் கருடனாய்ச் சிறந்து பறக்கும். வால்-வெண்மை.

(வி - ம்.) அறுகிடுதல்: திருமணத்தின்போது மணமக்களுக்குச் சான்றோர் அறுகம்புல்லும் அரிசியுங் கலந்து தூவி வாழ்த்துதல். இவ் வுண்மை வருமாறு:

" அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன் றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே."

—அ. திருப்பொற் சுண்ணம், ஓ. (௪)

வெண்பா

ஆதரித்த மாலும் அறிந்திலனேன் றஃதறிந்தே
காதலித்த நாயேற்குங் காட்டுமே—போதகத்தோல்
கம்பலத்தான் நீள்நாக கங்கணத்தான் தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி.

(இ - ள்.) யானைத்தோலை நகத்தா லுரித்துப் போர்வையாகப் போர்த்தருளியவனும், நீண்ட பாம்புகளைக் கங்கணமாகப் பூண்ட ருளியவனும், அழகிய பெரும்பற்றப் புலியூரின்கண் விளங்காநின்ற திருச்சிற்றம்பலத்தில் திருக்கூத் தாடுபவனும் ஆகிய கூத்தப் பெரு மான் தன்னை விழைந்து மால்கொண்ட திருமாலுக்கும் தன் திருவடி யினைக் காணுமாறு கொடுத்தருளினன். அதனால் மாலும் அறிந்திலன் என்னும் தன்மை உலகறியுண்மையாயிற்று. இந் நிலையினை அறிந் திருந்தும் நாயினுங் கடைப்பட்ட அடியேனும் அத்திருவடியினைக் காதலிப்பே னயினேன். அச்செம்பொனடியிணையை நாயேன் காணு மாறு காட்சிதந்தருள் வனோ?

(வி - ம்.) மால் - ஆசை; மயக்கம். மால் செருக்கினால்தேட லுற்றமையின் காணானயினன். மால்வழிபட்ட உண்மை வருமாறு:

"மானுட மடங்கலை வலிதபக் கோறலின்
ஐயிரு பிறப்பினும் அரியருச் சித்தலின்".

—அரதத்த சிவாசாரியார் - சுலோகபஞ்சகமொழி பெயர்ப்பு.

யானைப்பசுந்தோல் போர்த்திடின் போர்த்தவர் உடன்மாள்வர் சிவபெருமானின் முதன்மை யானைத்தோல் போர்த்தும் சாவாம விருந்தமையாற் புலனும். யானை ஆணவச் செருக்கு மிக்குள்ளது.

அதனை அடக்கி நல்வழிப்படுத்துவதே தோலை யுரித்த லென்பதாம். உலக வழக்கில் ஒருவனை அடக்கி நல்வழிப்படுத்துங் குறிப்பினை அவனுணர "உன் முதுகுத்தோலை உரித்து விடுவேன் பார்" எனக் கூறுதலாற் காண்க.

" ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்"

—சிலப்பதிகாரம், கஉ. வேட்டுவவரி.

சிவபெருமான் செய்தருளிய மறத்தண்ணளி எட்டிடத் தென்ப. அவற்றுள் யானைத்தோல் போர்த்ததும் ஒன்று. அது "மாவழுவூர்" என்பதாம். எட்டிடக் குறிப்பு வருமாறு:

" பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் கொறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே." (௫)

கட்டளைக் கலித்துறை

அடியோன்று பாதலம் ஏழிற்கும் அப்புறம் பட்டதிப்பால்
முடியோன்றிவ் வண்டங்கள் எல்லாங் கடந்தது முற்றும்வெள்ளைப்
பொடியோன்று தோளெட்டுத் திக்கின் புறத்தன பூங்கரும்பின்
செடியோன்று தில்லைச்சிற் றம்பலத் தான்றன் திருநடமே.

(இ - ள்.) சிவபெருமான் திருநடம் புரியுங்கால் அவர்தம் திருவடியொன்று பாதாள மேழினுக்கும் அப்பாற்பட்டது; இப்பால் திருமுடியானது அண்டங்கள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது; திருமேனி முழுவதும் திருவெண்ணீறு காணப்படும்; திருத்தோள்கள் எட்டுத் திசைகளையுங் கடந்தன. அழகிய இன்பக் கரும்புகள் நிலைத்தும் நிறைந்தும் விளங்குகின்ற வயல்களாற் சூழப்பட்டுள்ள தில்லைத் திருச்சிற்றம்பலத் துறையும் சிவபெருமானின் திருநடத்தின் சிறப்பு நிகழும்போது.

(வி - ம்.) வெள்ளைப் பொடி - திருவெண்ணீறு. திக்கு - திசை. திருக்கூத்தியல்பின் சிறப்பினை அம்மையார் ஓதுவது வருமாறு:

" அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும்—கடக

மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்ரு தரங்கு.''

—கக. காரைக்காலம்மை, அற்புத—எஎ (சு)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நடமாடி ஏழுலகும் உய்யக் கோண்ட
நாயகரே நான்மறையோர் தங்க ளோடுந்
திடமாட மதில்தில்லைக் கோயில் கோண்ட
செல்வரே உமதருமை தேரா விட்டீர்
இடமாடி இருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க் குடன்நிற்க இயல்வ தன்று
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுண்டா யங்கருந்தீ நஞ்சுண் டீரே.

(இ - ள்.) திருக்கூத்தியற்றி ஏழுலகங்களையும் உய்யக்கொண்டருளிய முதல்வரே, நான்கு மறை வல்லாரோடும் திண்ணிய மாளிகைகளும் மதில்களும் திகழ்கின்ற கோயிலெனப்படும் தில்லைத் திருச்சிற்றம்பலத்தினைச் சிறப்புறைவிடமாகக் கொண்டருளிய செல்லாத செல்வரே! உம்முடைய அருமை பெருமைகளைத் தெளியாதிருந்தீர்; உம்முடைய இடத்திருப்பக்கத்தில் வீற்றிருந்தருளும் திருவருளன்னையும் உமது திருக்கூத்தை விலக்கா விட்டால், எளியேன்போல்வார்கள் எங்ஙனம் விலக்குதல் கூடும்? பெரிய மாலை யணிந்த முடியினைச் சாய்த்து வானோர் பணிந்து புகலிடம் வேண்டப் புகல் கொடுத்தருளி அவர் பொருட்டுக் கண்டாரைக் கொல்லும் கொடிய நஞ்சினை உண்டருளினீர். செல்லாத செல்வம் - விட்டு நீங்காத செல்வம்; அருள்.

(வி — ம்.) நாயகர் - முதல்வர். உய்தல் - பிழைத்தல். செல்வம்- திருவடிப் பேரின்பம். தேரு: தேருது - ஈறுதொக்குநின்றது. இடமாடி: இடம் + மாடு. இகரம் சாரியை.

சிவபெருமான் புரிந்தருளும் திருக்கூத்துத் திருவெழுத்தைந்தால் ஆகும் சிறப்பிற்று. இஃது ஆருயிர்கள் உய்யும்பொருட்டு அவ்வுயிரின்கண் ஆடியருள்வது. அவ்வுண்மை மெய்கண்ட நூல்களுள் ஒன்ருகிய உண்மை விளக்கத்தின்கண் வரும் "தோற்றம்" "மாயைதனையுதறி" "பரையிடமா" என வருவனவற்ருற் காண்க.

சிவபெருமானின் திருவாற்றல் தனிப்பெரு முதல்வியாவள். இவளே வனப்பாற்றல்; பராசத்தி. இப்பராசத்தி சிவத்தில் ஆயிரத்திலொருகூறு யமரும். இவ் வனப்பாற்றலினின்று நடப்பாற்றலாகிய ஆதிசத்தி தோன்றும். இவ்வாற்றல் ஆருயிர்கட்கு உலகிய லின்பங்களையூட்டும். இந்த ஆதிசத்தி பராசத்தியின் ஆயிரத்தில் ஒரு கூறும். ஆதிசத்தியினின்று அன்பறிவு ஆற்றல்கள் தோன்றும். அன்பு - இச்சை. அறிவு - ஞானம். ஆற்றல் - கிரியை. இச்சாசத்தி ஆதி

சத்தியில் ஆயிரத்தில் ஒரு கூறாய்ப் படைப்பு முதலியவற்றைச் செய்ய விழைவு கொண்டிருப்பது. ஞானசத்தி இச்சா சத்தியில் ஆயிரத்தி லொருகூறு.

ஞானசத்தி அனைத்துயிர்களினுடைய வினைகளையும், அவற்றிற் கீடான உடல், உறுப்பு, உலகம், உண்பொருள்களை மாயாகாரியமாக உண்டாக்கியருள உணர்வுறும். கிரியாசத்தி ஞானசத்தியில் ஆயிரத் தில் ஒரு கூறு. இது படைப்புமுதலிய ஐந்தொழில்களையும் புரியும். இத்திருவருள் ஆற்றல்கள் ஐந்தும் வடிவுரு வான்றிலை. வடிவுருசிலை-நிஷ்களம்.

உலகினுக்கு விட்டுநீங்கா வினைமுதற்காரணமாகிய தாதான்மிய சத்தி ஆதிசத்தி எனப்படும். அவ்வறிவாற்றல் சிவபெருமானின் இடப் பாகத் தமர்ந்தருள்வள். சிவம் வலப்பாலமர்ந்தருள்வன். இருவர் திறமும் நீலமும் பொன்மையுமாகும். அதுவருமாறு :

"நீல மேனி வாலிழை பாகத்
தொருவன் இருதா ணிழற்கீழ்
மூவகை யுலகும் முகிழ்த்தன முறையே."

—ஐங்குறுநூறு, கடவுள்வாழ்த்து (எ)

நேரிசை யாசிரியப்பா

நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணந்
தன்முதன் முருக்க நென்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த
தேரையை வவ்வி யாங்கி யான்முன்
கருவிடை வந்த வொருநாள் தொடங்கி
மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயிற்றலை யன்ன எயிற்றிடைக் கிடந்தாங்
கருள்நனி யின்றி யொருவழி ரேம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி
அயர்த்தனன் இருந்தும் போலும் பெயர்த்துநின்
றெண்டோள் வீசிக் கண்டோர் உருகத்
தோல்லெயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலோ இலமே.

க—எ. நஞ்சுமிழ்......கிடந்து

(இ - ள்.) பெருநஞ்சினை உமிழ்ந்து உயிர்க் கொலைபுரியும் கடுஞ் சினமிக்க பெரும்பாம்பு, தன் உயிரைக் கொல்ல அருகில் காலம் பார்த்துப் பதுங்கியிருக்கின்றது; அதனை நேரே யுணராது நெற்

பயிரின் அடியில் சுற்றிக்கிடந்த சிறிய நீர்ப்பாம்பு, தன்வாயருகுவந்த சிறுதேரையைப் பிடித்துக் கவ்வியது போன்று, அடியேன் முற்காலத்தில் கருவிடைத்தோன்றிய அக்காலந் தொடங்கி, என்னுடைய முடிவு காலத்தைக் கணக்கிட்டு நோக்குவதில் சிறிதுந் தளராது மறவா நினைவோடிருக்கும் மறலியாகிய எமன், அழகும் ஒழுங்குமில்லாத கோரப் பற்களையுடையன். அவனுடைய வேல்போலும் கூரிய பற்களின் இடையே யான் விட்டுநீங்காது கிடந்து;

(வி - ம்.) மாசுணம் - பெரும்பாம்பு. நஞ்சுமிழ்பற்கள் நான்கென்ப. அவை வருமாறு; காளி, காளாத்திரி, யமன், யமதூதன் என்ப. நஞ்சுமிழ்வாயில்கள் வருமாறு:

பசியுற்றகாலம், அஞ்சுநேர்ந்த காலம், நோவுற்ற காலம், பல்லின்கண் நஞ்சுமிக்குப் பெருகிய காலம், பிறரால் மிதிபட்ட காலம் ஆகியவை என்ப. பகுவாய்-பிழந்த பெருவாய். வெஞ்சினம்-கடுஞ்சினம். தன்முதல் - தன்உயிர். முருக்க-கொல்ல. நென்முதல்-நெற்பயிரின்வேர்.

எ—கசு. 'ஆங்கு'...'இலமே'

(இ - ள்.) அவ்விடத்து இரக்கமென்பது இம்மியுமின்றி என்னுடைய ஒருவயிற்றினைப் பேணுதற்பொருட்டுப் பலவுயிர்களையும் கொன்று வலிமையொடு தின்று, சோர்ந்திருந்தும் பழைமையாகிய மதில்களால் சூழப்பட்ட தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண் நின்று ஒருதிருவடியினை ஊன்றியும், ஒரு திருவடியினைத் தூக்கியும் கண்டவர் உள்ளம் காதலித்துக் கசிந்து உருக எட்டுத் திருத்தோள்களையும் வீசியாடும் அம்பலக் கூத்தனார் திருவடியினைப் பாடுதலும், நினைப்பதும், பணிதலும் விடாது செய்து வருகின்றனம்!

(வி-ம்.) ஆங்கு - உவமஉருபு. நனி . மிகுதி. செகுத்தல் - கொல்லுதல். மாசுணமாகிய பெரும்பாம்பு எமனுக்கும் நீர்ச்சிறுபாம்பு ஆருயிர்க்கும், தேரை இரக்கமற்ற அவ்வுயிர்கள் கொன்று தின்னும் புலாலுக்கும் ஒப்பாயின.

நாள் என்பது அக்காலத்தை உணர்த்தினமையின் சினையாகு பெயர். ஊனுண்ணுங் கொடுமையோன் அருளினை எய்தாது அல்லலுறுவன். அது வருமாறு:

"தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்."

—திருக்குறள், உடுக.

எண்டோள் வீசியாடுதல் வருமாறு:

"கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
எண்டோள் வீசிநின் றாடும் பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ." —சு. கூ-உ.

கவ்வியாங்கு - ஆங்கு உவமப்பொருள் குறித்துநின்றது. எயிற்றிடைக்கிடந்தாங்கு—ஆங்கு—இடப்பொருள். இருந்தும், உம்மைஇழிவு சிறப்பு. முதுமை என்னும் பண்பு ஆதி நீண்டு மூது என நின்றது. உருக என்னும் வினையெச்சம் ஆகும் என்னும் பெயரெச்சங் கொண்டது. (அ)

வெண்பா

இலவிதழ்வாய் வீழ்வார் இகழ்வார் அவர்தங்
கலவி கடைக்கணித்துங் காணேன்—இலகுமொளி
ஆடகஞ்சேர் அம்பலத்தே ஆளுடையார் நின்றுடும்
நாடகங்கண் டின்பான நான்.

(இ - ள்.) பேரொளி விளங்குகின்ற உயர்ந்த பொன்னாலமைந்த தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண்ணே அனைத்துயிர்களையும் செவ்வி நோக்கி ஆட்கொண்டருள் பவனாகிய சிவபெருமான் தென்முக நோக்கி அம்மைகாண நின்றாடும் திருக்கூத்தினைத் திருவருளால் கண்டு அன்பு பூண்ட அடியேன் (கொண்டபே ரின்புக்கு அளவன்று) இலவ இதழ்போலும் செவ்விய வாயினையுடைய பொதுமகளிரைப் புணர விரும்புவோர் பெரியோரால் இகழப்படுவர். அத்தகையார் கூட்டத்தினை அடியேன் கடைக்கண்ணாலும் நோக்கேன்.

(வி - ம்.) "ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்பூநதம்" என உயர்ந்த பொன் நால்வகைப்படும். சிவபெருமான் திருவடிப் பேரின்பம் தெவிட்டாதது. உணர்ந்தார்க்கும் புதிதாக உணரவொண்ணாதிருப்பது. ஆனால் தேனுண்ட வண்டென நுகர்ந்துகொண்டிருக்கும் திருவினது. இவ்வுண்மை வருமாறு:

"உணர்ந்தார்க் குணர்வரி யோன்றில்லைச்
சிற்றம் பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ்
வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும்
போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழ லாளல்குல்
போல வளர்கின்றதே."

—அ. திருக்கோவையார், க. (க)

கலித்துறை

நானே பிறந்து பயன்படைத் தேன்அயன் நாரணன்எங்
கோனே எனத்தில்லை அம்பலத் தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியேன் தீமைஎல் லாமறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத் தேவந்து சந்திக்கவே.

(இ - ள்.) படைப்போனாகிய அயனும் காப்போனாகிய நாராயணனும் எம் தலைவனே யென்று போற்றிசைத்துத் தொழும்படி, தில்லைத் திருச்சிற்றம்பலத்தினிடமாக எழுந்தருளித் திருக்கூத்தியற்றியருளும் பேரின்பப் பெருந்தேனே, அடியேனை ஆட்கொண்டருளத் திருவுள்ளங்கொண்டு அடியேனுக்குள்ள ஆணவம் மாயை காமம் எனப்படும் பொல்லாங்குகளையெல்லாம் அறுத்தருளி எளியேன் உள்ளத்தே மிக்கோங்கி வீற்றிருந்தருளுமாறு திருவருளால் நாயேன் பிறந்த பிறவிப் பெரும்பயன் அடைந்துள்ளேன்.

(வி - ம்.) தேன் : சிவபெருமானின் திருவடித் தேன் என்னும் பொன்றா எழிற்றேன். அனைத்தெலும்பும் உள்நெக உருக்குந் தேன். இவ்வுண்மை வருமாறு :

"தினைத்தனை யுள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ."

—அ. திருக்கோத்தும்பி, ௩

தானே வலியவர் தாட்கொள்ளு முண்மை வருமாறு :

"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரு முயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே."

—அ. திருவேசறவு, ௧0

மக்கட் பிறப்பொழித்து ஒழிந்த பிறப்புக்க ளனைத்தும் சிவனினைப்பெய்தும் வாய்ப்பின்மையால் மேலோங்கி நற்பிறப்பெய்துதல் கூடாதாகும். எனினும் தற்செயலாகச் சிவன் தொடர்பு ஏற்பட்டுவிட அப்பிறப்பு மேலோங்கி நற்பிறப் பெய்துதற்கு வாயில் ஏற்படும். அவ்வுண்மை வருமாறு :

" எப்பிறப்பும் மேலோங்க எம்மான் தொடர்பெய்தும்
அப்பிறப்பி னோரறியா ரஃது."

" புல்லா யனேகவுருப் போனபினர் நல்லறுகம்
புல்லாய்ப் பிறக்கவது போம்."

" பூமரங்க ளாய்ப்பிறந்து புண்ணியனுக் கானமையாற்
போமரத்தி னூர்பிறவி போம்."

" புண்ணிய தீர்த்தத்துட் புழுவாய்ப் பிறக்தமையால்
கண்ணும் புழுப்பிறப்புக் காண்."

" புள்ளா யனேகவுருப் போயபினர்ப் புட்பிறவி
விள்ளுநதி தோய விரைந்து."

"திட்டமிரு கப்பிறப்பிற் றுதைந்து நெடுங்காலம்
கட்டப் படுமுயிரார் காண்."

"எல்லாவுருவு மெடுத்தெடுத்து நல்வினையால்
நல்லா வுருவாகு நாடு."

"ஆனைந்தும் ஐம்முகனுக் கபிடேக புண்ணியத்தால்
ஆனுருவை நீங்கு மணி."

"ஆனுருவ நீக்குதலு மளவில்சிவ புண்ணியத்தால்
மானிடரா யிங்ஙன் வரும்."

இவையும் இவை போன்று சித்தாந்த தரிசனம் பசுவியல் (கடு-உரு) தலைப்பில் வருவன பலவுங்கண்டு கொள்க.

மேலும் மக்கட் பிறப்பும் நல்வாழ்வு எய்துதற்குரிய இடமுதலன வருமாறு:

"நரர்பயில் தேயந்தன்னின் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியத்தா லுகும்
தரையினில் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே."

"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெற லரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவார் அருள்பெற் றாரே."

—சிவஞானசித்தியார், உ. ச-கஅ—கக.

மெய்யன்பர் நெஞ்சம் மேலாம் முதல்வ னிருப்பிடமாம்:

"வானத்தா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்
தானத்தா னென்பாருந் தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தானென்பன் யான்."

ப. கக. அம்மை, அற்புதத்—௬ (க0)

கழிநெடிலடி யாசிரியச் சந்த விருத்தம்

[தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்]

சந்து புனைய வெதும்பி மலரணை
தங்க வெருவி இலங்கு கலையொடு
சங்கு கழல நிறைந்த அயலவர்
தஞ்சொல் நலிய மெலிந்து கிளியொடு

பந்து கழல்கள் மறந்து தளிர்புரை
பண்டை நிறமும் இழந்து நிறையொடு
பண்பு தவிர அனங்க னவனொடு
நண்பு பெருக விளைந்த இனையன
நந்தி முழவு தழங்க மலைபெறு
நங்கை மகிழ அணிந்த அரவுகள்
நஞ்சு பிழிய முரன்று முயலகன்
நைந்து நரல அலைந்த பகிரதி
அந்தி மதியொ டணிந்து தி(ல்)லைநகர்
அம்பொன் அணியும் அரங்கில் நடநவில்
அங்கண் அரசை யடைந்து தொழுதிவள்
அன்று முதலெதிர் இன்று வரையுமே.

க—உ. சந்து...இனையன

(இ - ள்.) மிக்க குளிர்ச்சிதரும் தன்மையுடைய சந்தனத்தைக் குளிர்ச்சியுண்டாகும்படி பூசினும் வெப்பம் அடைந்து வருந்துவள். மலர்ப்பள்ளியில் தங்கவும் அஞ்சுவள்; விளங்குகின்ற உடுத்த ஆடை நெகிழவும், பூண்டவளை கழலவும் நிற்கும் இவளது கோலத்தைக் காணும் அயன் மாதர்கள் நிறைந்து கூறும் பழிச்சொல்லால் வருந்திக் கிளியும் பந்தும் கழலும் அம்மனையும் மறந்துபோய், மாந்தளிரை யொத்த அவள்தன் மேனியின் பழைய நிறமும் நீங்கி, திண்மை மிக்க தன்கற்புடன் அடக்க முதலிய சிறந்த பண்புகளும் ஒழிய, ஐங்கணைக் கிழவனாகிய மன்மதன்பால் நட்புமிக நைகின்றனள். இத்தகைய இன்னல்கள் நேர்ந்தன.

ரு—அ. நந்தி...வரையுமே

(இ - ள்.) நந்திதேவர் குடமுழா முழக்கவும், மலையரையன் தவமிருந்துபெற்ற உலகீன்ற அன்னையாகிய நங்கையானவள் ஆருயிர் களின் பொருட்டுக் களிப்பெய்தவும், கையிலும் உடம்பிலும் அணிந் துள்ள பாம்புகள் நஞ்சினைக் கக்கவும், முயலகன் வருந்தி ஓசையிட்டு நசுக்குண்டொலிக்கவும், அலைகளையுடைய வான் கங்கையாகிய சலமகள் அசைந்து நிற்கவும், (தன்னால் புரக்கப்படும்) அந்தி வானத் துத் தோன்றும் பிறைமதியைத் தாங்கித் தில்லைத் தொன்னகரின்கண் காணப்படும் அழகிய பொன்னால் வேயப்பட்ட திருச்சிற்றம்பலத்தின் கண் நடம்புரிந் தருளுகின்ற அழகிய பெருந்தண்ணளிக் கண்களை யுடைய பெருவேந்தனுருக் கெதிர்சென்று திருவருளால் (என்மக ளாகிய) இவள் தொழுது வணங்கினள். அந்நாள் தொட்டு இன்று வரையும்.

(வி - ம்.) சந்து - சந்தனம். புனைய - பூச. வெதும்புதல் - வெப் பங் கொள்ளுதல். மலரணை - மலர்விரித்தபள்ளி. வெருவி - அஞ்சி. கலை - ஆடை. சங்கு - சங்கினாலாகிய வளையல். சொல் - அம்பலும்

அலருமாகிய பழிமொழி. நலிய - வருத்த. முரன்று - ஓசையிட்டு. நரல — ஒலிக்க. அரங்கு - கூத்துமேடை.

எதிர்நின்று என்பதனை அரசொடுங் கூட்டிப் பொருள் கொள்க. அரசை என்பது அரசுக்கு என நான்கனுருபேற்று நின்றது. உருபு மயக்கம்.

அணை - படுக்கை. இஃது இலவு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிற்றூவி, அன்னத்தூவி என்னும் ஐவகைப் பொருள்களால் தனித் தனியாக்கப்படுவது. அதனால் இப்படுக்கைக்கு ஐந்தணையமளி என்னும் பெயர் வழங்கப்படும்.

முறையுறக் காதல் கொண்டார் தம்மை மறந்து காதல் வண்ண மாகவே நிற்பர். அதனால் அவர்கள் ஊண், உறக்கம், விளையாட்டு முதலிய ஒன்றையும் விரும்பார். இந்நிலைமை அப்பர் பெருமானு ருளிய "தன்னை மறந்தாள்" (முன்னம்—௬. ௨௫-௭) என்னும் திருமாமறையா னுணரலாம்.

விடா நினைப்புடன் தன்னை மறந்து இருக்கச் செய்பவனும் தலைவனேயாம். இவ்வுண்மை வருமாறு:

"முன்னே யுரைத்தான் முகமனே யொக்குமிம் மூவுலகுக்
கன்னையு மத்தனு மாவா யழல்வண நீயலையோ
உன்னை நினைந்தே கழியுமென் னாவி கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பெறுயெம் பிரானுன்னை வேண்டியதே."

—௪. ௧௧௨ - ௩.

"என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்— புன்னை
விரசுமகிழ் சோலைவியன் நாரையூர் முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்."

—௧௧. நம்பி, நாரை - ௧. (௧௧)

நிலைமண்டில ஆசிரியப்பா

வரையொன்று நிறுவி அரவொன்று பிணித்துக்
கடல்தட வாக மிடலொடும் வாங்கித்
திண்தோள் ஆண்ட தண்டா அமரர்க்
கமிர்துணு அளித்த முதுபெருங் கடவுள்
௫ கடையுகஞ் சென்ற காலத்து நெடுநிலம்
ஆழிப் பரப்பில் ஆழ்வது பொறாஅ
தஞ்சேல் என்று செஞ்சே லாகித்தன்
தெய்வ உதரத்துச் சிறுசெலுப் புரையிற்
பௌவம் ஏழே பட்டது பௌவத்தோ

டுலகு குழைத் தொருநாள் உண்டதும்
உலக மூன்றும் அளந்துழி ஆங்கவன்
ஈரடி நிரம்பிற்று மிலவே தேரில்
உரைப்போர்க் கல்ல தவன்குறை வின்றே
இனைய னாகிய தனிமுதல் வானவன்
கேழல் திருவுரு வாகி யாழத்
தடுக்கிய ஏழும் எடுத்தனன் எடுத்தெடுத்
தூழி யூழி கீழுறக் கிளைந்துங்
காண்பதற் கரியநின் கழலும் வேண்டுபு
நிகில லோகமும் நெடுமறைத் தொகுதியும்
அகில சராசரம் அனைத்தும் உதவிய
பொன்னிறக் கடவுள் அன்ன மாகிக்
காண்டி லாதநின் கதிர்நெடு முடியும்
ஈங்கிவை கொண்டு நீங்காது விரும்பிச்
சிறிய பொதுவின் மறுவின்றி விளங்கி
ஏவரும் காண ஆடுதி அதுவெனக்
கதிசயம் விளைக்கும் அன்றே அதிசயம்
விளையாது மொழிந்த தெந்தை வளையாது
கல்லினும் வலிதது நல்லிதிற் செல்லாது
தான்சிறி தாயினும் உள்ளிடை நிரம்ப
வான்போய் அச்ச மாயா வாசை
மிடைந்தன கிடப்ப இடம்பெறல் அருமையில்
ஐவர் கள்வர் வல்லிதிற் புகுந்து
மண்மகன் திகிரியில் எண்மடங்கு சுழற்ற
ஆடுபு கிடந்த பீடில் நெஞ்சத்து
நுழைந்தனை புகுந்து தழைந்தநின் சடையுஞ்
செய்ய வாயும் மையமர் கண்டமும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
எடுத்த பாதமுந் தடுத்தசெங் கையும்
புள்ளி யாடையும் ஒள்ளிதின் விளங்க
நாடகம் ஆடுதி நம்ப கூடும்
வேத நான்கும் விழுப்பெரு முனிவரும்
ஆதி நின்திற மாதலின் மொழிவது

பெரியதிற் பெரியை யென்றும் அன்றே
சிறியதிற் சிறியை யென்றும் அன்றே
சடு. நிறைபொருள் மறைகள் நான்குநின் அறைகழல்
இரண்டோடும் அறிவினில் ஆர்த்து வைத்த
மறையவர் தில்லை மன்றுகிழ வோனே.

க—கச. வரையொன்று...வானவன்

(இ - ள்.) பெரிய மந்தர மலையினை மத்தாக நாட்டி வாசுகி என்னும் பாம்பினை நாணாக - கயிறாகக்கட்டி, கடல் தாழியாக; வலிமையொடு கடைந்த உறுதியால் தோள்களையுடைய தேவர்கட்கு சாவாமருந் தெனப்படும்தேவாமிர்த உணவைக் கொடுத்த முதுபெருங் கடவுளாகிய திருமால், ஓர் ஊழி முற்றும் சென்ற பொழுது, நீண்ட இவ்வுலகம் பெரிய கடலினுள் ஆழ்வதைக் கண்டனன். கண்டவும் உள்ளம் பொறாது, உலகோரை நோக்கி அஞ்சற்க என்று சொல்லிச் செவ்விய சேல்மீன் வடிவினை எடுத்துக்கொண்டு கடலுள் புகுந்து தன்னுடைய தெய்வத்தன்மை பொருந்திய வயிற்றிலுள்ள சிறிய செதிளின் பள்ளத்தில் எழு கடலையும் அடக்கினன்; அதுவல்லாமலும் ஒரு கற்பத்தில் கடலுடன் உலகங்களை யெல்லாம் திரட்டி உண வாக்கினன், சிறிய உருக்கொண்டு மூவடி யளந்த காலத்து மூன்று உலகங்களும் அவனுடைய இரண்டு பாதங்களுக்கும் நிரம்பியதில்லை. ஆராய்ந்து பார்க்குமிடத்து, சொல்லுவார்க்கன்றி அவன் குறை வில்லை. இத்தன்மையாகிய தனி முதல் வானவன்.

(வி - ம்) வரை - கீற்று. மூங்கிலின் வரைக்குப்பெயராகி, பின் அம் மூங்கில் நிறைந்துள்ள மலைக்குப் பெயராயிற்று. இஃது இருமடி யாகுபெயர். தடவு—தடா—தாழி; பானை, மிடா

தடா வென்பது சொல். அச்சொல்லி னிறுதி 'டா' என்னும் சொல்லின் இரண்டு மாத்திரை ஒரு மாத்திரையாகி 'ட' என நிற்கும். அப்பொழுது தட எனவாகும். அதனுடன் உகரம் சேர்ந்த விடத்து தடவு என்றாகும். இதனை விளக்கும் நூற்பா வருமாறு :

"குறியத னிறுதிச் சினைகெட வுகர
மறிய வருதல் செய்யுளு ளுரித்தே."

—தொல், எழுத்து - உசுசு.

செஞ்சேல் - செம்மை நிறமுடைய சேல்மீன். செலு - மீன் செதிள். செதிள் - செதில் - மீனின் மேலிடமுள்ள பிராலுறுப்பு. புரை - பள்ளம். பௌவம் - கடல் திருமால் மாவலியினிடம் சிறிய வுருவொடு சென்று மூன்றடிமண் வேண்டினன். வேண்டிப் பெறப் போங்காலத்து பெரியவுரு எடுத்து அளந்தனன். அளக்குங் காலத்து உலக மூன்றும் அவனது இரண்டு பாதங்களுக்கும் போதாதாயிற்று.

கரு—உகூ கேழல்...அதிசயம்

(இ - ள்.) பன்றி உருக்கொண்டு ஆழ்ந்த கடலில் அடுக்காக விருந்த எழுலகங்களையும் எடுத்துப் பண்டுபோல் நிறுத்தினன்; இவ்

வகையாகப் பலமுறை எடுத்து நிறுத்திப், பற்பல ஊழிதோறும் கீழ் உலகம் அடைய அகழ்ந்தும் காணுதற்கரிய நின் திருவடியும், தான் விருப்பங்கொண்டு, எல்லா உலகங்களையும், விரிந்த மறைத்தொகுதிகளையும் இயங்குதிணை, நிலைத்திணையாகிய அனைத்துயிர்களையும் படைத்த பொன்னிறத்தினையுடைய நான்முகன் அன்னப் பறவையின் உருக்கொண்டு தேடியுங் கண்டுகொள்ளற் கரிய உன்னுடைய திருவருட் கதிர்களையுடைய நெடுமுடியும், இத் திருத்தில்லையில் இத் திருவடியுந் திருக்கழலுங் கொண்டு நீங்குதலின்றித் திருவருள் புரிய விழைந்து, நுண்மை வாய்ந்த திருச்சிற்றம்பலத்தின்கண், குற்றம் ஒரு சிறிது மில்லாமல் வெளிப்படையாக நன்கு திகழ்ந்து, மெய்யன்பு கைவந்த நற்றவஞ்சேர் அனைவர்களும் கண்டு களித்துப் பேரின்பம் எய்தும்படி திருக்கூத்தியற்றி யருளுகின்றாய்.

(வி - ம்.) அயனும் மாலும் முடியும் அடியும் அறிய முடியாதபடி சிவபெருமான் அழலுருவாய் நின்றமைக்குக் காரணம் அவ்விருவர் தம் செருக்கேயாம். தேவர் நிலையினைத் தவப்பேற்றால் திருவாணையால் பெற்றுளார். எனினும், ஆணவத்தன்மையாம் செருக்கு அவருக்கும் முனைத்தெழும். அஃதுயிரியல்பே. இவ்வுண்மை வருமாறு :

"எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்."

—திருக்குறள், ௬௪௪.

செருக்கினால் இழிபிறப்பும் பழி மொழியும் எவரும் எய்துவர் என்னும் உண்மை தெய்வநிலை யடைந்த இருவரும் பன்றியும் பறவையுமாயினமையான் உணரலாம். இவ்வுண்மை வருமாறு : பக்கம், ௫.

திருச்சிற்றம்பலம் என்பது அழகிய நுண்ணிய அறிவுப் பெருவெளி யென்பதாம். நுண்மை பெரும்பரப்புடையது. பெரும்பரப்பு—வியாபகம்.

உரு—௩௫. அதுவெனக்...சடையும்

(இ - ள்.) அடியேனைத் தந்தையாகக் காத்தருள்பவனே மேற்கூறியது எளியேனுக்கு எஞ்ஞான்றும் வியப்பினைத் தாராது; ஆனால் தேவரீரையும், நும் மெய்யடியார்களையும் படர்ந்து, பாடிப், பரவிப், பணியாது, கல்லைக்காட்டினும் வன்மையுடையது, அது நல்ல வழியிலும் செல்லாது; தான் மண் எனப்படும் அணுவின் தன்மைபது, அவ்வுருவத்துடனிருக்கும் அதன் அகநிலை முற்றும் மிகுந்த பொய்ம்மையும், வெருவுங்காரியமும், அழிவில்லாத பெருவேட்கையும், மிகுதியும் குவிந்து கிடப்ப, ஐம்பொறிகளாகிய கள்வர்கள், தாமாகவே வலிய வந்து குயவன் சுற்றிவிட்ட சக்கரம் சுழல்வதைக் காட்டிலும், எட்டுப்பங்கு மிகுதியாய் ஆட்டச் சுழன்று கொண்டிருந்த பெருமை சிறிதுமில்லாத எளியேன் நெஞ்சத்தில் இடமில்லாமையால், நீயே இடம் அமைத்துக்கொண்டு நுழைந்து புகுந்தருளினை;

(வி - ம்.) அதிசயம் - வியப்பு. வளையாது - வணங்காது; தொழாத. மிடைந்தன - நெருங்கின; குவிந்தன. மண்மகன் -

குயவன். திகிரி - சக்கரம். ஆடுபு - ஆடி. பீடு - பெருமை. நுழைதல்-புகுதல்.

மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் பொறிகள் ஐந்தும் "ஐம்புலவேடர்" எனவும், "ஐவர் கள்வர்" எனவும் பொருந்தாத் தொழில்பற்றிக் கூறப்படுவர். இவ்வுண்மை வருமாறு :

"வளைத்துநின் றைவர் கள்வர் வந்தெனை நடுக்கஞ் செய்யத்
தளைத்துவைத் துலையை யேற்றித் தழலெரி மடுத்தநீரில்
திளைத்துநின் றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்துநின் றாடுகின்றே னென்செய்வான் தோன்றினேனே.'

—ஏ. எகூ—சு.

ஆசை பிறவிப் பெரும்பிணிக்கு வித்து; நிரம்பா நீர்மையுடையது. அதனால் மாயா ஆசை என்றனர். இவ்வுண்மைகள் வருமாறு :

"அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாப் பிறப்பீனும் வித்து." —திருக்குறள், ௩௬௧.

"ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்." —திருக்குறள், ௩௭0.

௩௫—௪௭. "தழைந்தநின்"..."மன்றுகிழவோனே"

(இ - ள்.) பெருமானே! தழைந்துள்ள நின் திருச்சடை முடியும், கொவ்வைச் செவ்வாயும், திருநீலகண்டமும், நெற்றியின்கண் விளங்குகின்ற ஒப்பில் திருக்கண்ணும் எடுத்த பொற்பாதமும் ஆருயிர்களனைத்திற்கும் அஞ்சற்க என உறுதியளித்தருளும் செம்மை நிறம் வாய்ந்த திருக்கையும், புள்ளிகளையுடைய புலித்தோ லாடையும், செவ்வையாக விளங்க, திருக்கூத்தியற்றி யருளுகின்றாய். அதுவே அடியேனுக்கு மிக்க இறும்பூதினை உண்டாக்குமன்றே? உறுப்புக்களுடன் கூடியுள்ள நான்கு வேதங்களும், மிகப்பெருஞ் சிறப்பு வாய்ந்த முனிவர்களும் முழுமுதல்வனே உன்னுடைய திருவடித் திறத்தின ரல்லரோ! ஆகையினாலல்லவோ, எக்காலத்தும் பெரிய பொருள்கள் எல்லாவற்றிற்கும் பெரியை நீயே, அதுபோல் நுண்ணிய பொருள்களாகிய சிறியவை எல்லாவற்றிற்கும் சிறியையும் நீயே, என்று இன்புற இயைந்து போற்றிசைத்துத் தொழுவது, நிறைந்த பொருள்களடங்கிய மறைகள் நான்கினையும், ஒலிக்கும் திருக்கழலை அணிந்துள்ள திருவடியிரண்டுடனும் தம் அறிவாகிய இடத்தில் நின்னருளால் நிலைபெற வைத்துள்ள, செந்தமிழ் மறைவல்லார் ஒல்லும்வகை ஓவாது வணங்கும் தில்லைத்திருச்சிற்றம்பலத்திலுள்ள, அம்பொன் மன்றத்திற்குரிய அம்பலவாணனே!

(வி - ம்.) தழைத்த - செழித்த; அருள்மிகுத்த. மை - கருமை; நீலம். கண்டம் - கழுத்து. தடுத்த - அஞ்சற்க எனத் தடுத்த. ஆதி-எல்லாவற்றிற்குங் காரணன்.

சிவபெருமான் புலித்தோலை அரையிற் கட்டியருளினன் என்னும் உண்மை வருமாறு :

"பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து"

என நம்பியாரூரரும்,

"கோயில் சுடுகாடு கொல்புலித் தோல் நல்லாடை"

என மணிவாசகப் பெருமானும் ஓதியருளியது காண்க.

"பெரியதில் பெரியை" என்பது எல்லாப் பொருள்கட்கும் சிவபெருமானே தாங்கும் நிலைக்களனாக விருப்பதால் அவனே பெரியன் என்பது தானே பெறப்படும். "சிறியதில் சிறியை" என்பது, எல்லாப் பொருட்கும், உள்நின்று ஓவாதியக்குதலாலும், அனைத்துயிர்கட்கும் உயிர்க்குயிராய் அகத்தகலாது உடனின்று ஊக்குவித்தியக்குதலாலும் பெறப்படும். இவ்வுண்மை வருமாறு:

"அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோர்
அண்டமாஞ் சிறுமைகொண் டடியேன்
உண்டவூண் உனக்காம் வகையெ னதுள்ளம்
உள்கலந் தெழுபரஞ் சோதி
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லிற்
குறுகலர் புரங்கள்மூன் றெரித்த
கண்டனே நீல கண்டனே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே."
—௯. கருவூர்த்தேவர், கங்கை—௬.

புலித்தோலாடையின் திருக்குறிப்புச் சினமகற்றுஞ் சிறப்பினதாகும்.

'எடுத்தபாதம்' எனினும் தூக்கிய திருவடியெனினும் ஒன்றே. இதனைக் குஞ்சிதபாதம் எனவுங் கூறுப. குஞ்சித்தல் - கால் தூக்கி வளைத்தல். தூக்கிய திருவடி வளைவாயிருப்பது ஒங்கிய நிழலும் நீங்காத் தலைமறைவும், மீளா அடிமையாய் அவ்வுயிர்களை வளைத்துக்கொண்ட வள்ளன்மையும் வழங்குந் திருக்குறிப்பாகும். இவ்வுண்மைகள் வருமாறு:

"குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே."
—௪. அக-௪.

"முருகார் நறுமலர் இண்டை தழுவிவண் டேமுரலும்
பெருகா றடைசடைக் கற்றையி னாய்பிணி மேய்ந்திருந்த
இருகாற் குரம்பை யிதுநா னுடைய திதுபிரிந்தால்
தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே."
—௪. கக௪-உ. (௧௨)

வெண்பா

கிழவருமாய் நோய்முப்புக் கீழ்ப்பட்டுக் காமத்
துழவரும்போய் ஓயுமா கண்டோம்—மொழிதெரிய
வாயினல் இப்போதே மன்றில் நடமாடும்
நாயனு ரேன்றுரைப்போம் நாம்.

(இ - ள்.) கழிகாமத் தன்மையராய் அத்தொழிலேயே தொழிலாகக் கொண்டு உழன்று வந்த காளையர், இன்பத் துறையில் எளியரான காரணத்தால், நீங்காப் பிணிக்கும் கிழத்தன்மைக்கும், உட்பட்டு, ஐம்பொறிகளும் வலியற்றுப் போய்க் கோலூன்றித் தள்ளாடி நகர்ந்து செல்லும் பெருங் கிழவராய்ச் செயலற்று ஓயும் நிலைமையைக் கண்டோம்; அதனுல் நல்ல நிலைமையாக இருக்கும் இப்போதே; ஓதும் மொழி நன்ருக விளங்கும்படி வாயினல் தில்லைச் திருச்சிற்றம்பல மன்றின்கண் ஐந்தொழிற் றிருக்கூத் தியற்றியருளும், விழுமிய முழு முதல்வ னென்று நாம் ஓதுவோமாக.

(வி - ம்.) கீழ்ப்படுதல் – அடங்குதல்; உட்படுதல். காமத்து உழவர்: புலனடக்கமின்றி அளவிறப்பக் கூடி நலனிழக்குந் தொழிலினர். ஓய்தல் - இளைத்தல். நாயகன் என்னும் சொல் நாயன் என மருவிற்று என்ப. ஆயன் என்பது போன்று நாயன் என்பதே சொல். நயன்: நயனுடையவன் நாயன்.

உடம்பின் தன்மையினைப் படிப்படியாக ஆண்டு குறித்து விளங்குவ தொன்று வருமாறு:

இட்டமிகு மிளமைநல் லீரைந்தாண் டதனி
　　லிருபதினில் வளர்ச்சியுமுப் பதுவருடத் தழகும்
உட்டகைய மேதைபுநாற் பதுவருடத் துடலி
　　லொண்வலியு மைம்பதினி லறுபதினிற் றூதுந்
திட்டியுமங் கெழுபதினி லெண்பதினிற் செவியுந்
　　திகழ்மனமுந் தொண்ணூறிற் சிவனுநூற ளவில்
விட்டகலும் விரவியுதித தொடுங்குவதென் றுணர்ந்தோர்
　　வீணுள்பட் டொழியாமல் விரும்புவர்நற் றவமே.

வாதம், பித்தம், ஐ (சிலேத்துமம) ஆகிய மூன்றும் ஒன்றனையொன்று நெருங்கி மிக்கோங்குவதால் உடலுக்கு நோய்கள் உண்டாகும். அவற்றுள் ஐ எனப்படும் சிலேத்துமம் மேலோங்க நரை, திரை யுண்டாகும். ஐ ஆனது பித்தத்தைச் சாரில் உணவு செல்லாது அதனுல் எழுவகை முதற் பொருள்களும் தளர்ச்சியுறும். முதற்பொருள்கள்—தாதுக்கள். பித்தம் வாதத்தை நெருக்கின் வாதங் குறையும்: அதனுல் கண்ணொளி கெடும்; மேலும் நடத்தல், நிற்றல், ஓடல் கெடும். மூச்சுமேனோக்கில் காது மந்தமும் மேல் மூச்சும் உண்டாகும்.

இளமை இன்பம் அகவை (வயது) இருபது வரை. அகவை இருபது நீங்க வளர்ச்சி நீங்கும்; முப்பதில் அழகு அகலும்; நாற்பதில்

அறிவு திரியும். ஐம்பதில் உடல் வலி குறையும்; அறுபதில் தாதுக்கள் கெடும்; எழுபதில் கண்கள் கெடும். எண்பதில் செவிப்புலன் கெடும். தொண்ணூறில் மனம் கெடும். நூறில் உயிர் நீங்கும்.

உடம்பின் நிலையினை வருமாறுணர்க :

" உறைகின் றனரைவர் ஒன்பது வாயிலோர் மூன்றுளதால்
மறைகின்ற என்பு நரம்போ டிறைச்சி உதிரமசை
பறைகின்ற தோல்போர் குரம்பை பயனில்லை போயடைமின்
அறைகின்றதெண்புனல் செஞ்சடைக் கொண்டோன் மலரடிக்கே."

—கக. சேரர், பொன், எஉ.

எழுவகை முதற் பொருள்கள் வருமாறு :

க. சாரம், உ. செந்நீர், ௩. ஊன், ச. கொழுப்பு, ரு. எலும்பு, சூ. மூளை, எ. வெண்ணீர், இவற்றை முறையே இரசம், இரத்தம், மாமிசம், மேதசு, அத்தி, மச்சை, சுக்கிலம் எனவுங் கூறுப. 'ஓர் மூன்று' என்பது தலை இடை கடை ஆகிய முப்பண்புகள் (சாத்து விகம், இராசதம், தாமதம்).

மந்திரங்களைக் கணிக்கு முறை மூவகைப்படும் அவை மனத்தின் கண் எண்ணுவது, தன் செவிக்குக் கேட்க ஒலிப்பது, பிறர் செவிக் குங் கேட்க வொலிப்பது என்பனவாம். இவற்றை எண்ணம், இயைத்தல், இயம்பல் எனக் கூறலாம். எண்ணம் மனத்தான் இயைத்த லாம் தன்செவிக்குள் நண்ணுபிறர் காதியம்பல் நாடு. தான் பெற்ற இன்பம் பிறரும் பெற வேண்டும் என்னும் நன்னோக்கமே எல்லாருங் கேட்கும்படி எடுத்தியம்புவது. அது 'மொழி தெரிய' என்பதனால் பெறப்படும். அது வருமாறு :

" ஓதவன் நாமம் உரையவன் பல்குணம் உன்னைவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன் வாழ்க்கை திருந்தச்சென்று
மாதவ மாகிடு மாதவ மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்னான் அதுகொண் டொழியினி ஆரணங்கே."

— கக. சேரர் - பொன்—ருச. (க௩)

கட்டளைக் கலித்துறை

நாமத்தி னால்என்றன் நாத்திருத் தேன்நறை மாமலர்சேர்
தாமத்தி னால்உன் சரண்பணி யேன்சார்வ தேன்கொடுநான்
வாமத்தி லேயொரு மானைத் தரித்தொரு மானைவைத்தாய்
சேமத்தி னால்உன் திருத்தில்லை சேர்வதோர் செந்நெறியே.

(இ - ள்.) இடது திருக்கையில் ஒரு மான் கன்றினையும், அவ் விடப் பக்கத்து மான் போலும் உமை யம்மையாரையும் முறையே ஏந்தியும், வைத்தும் அருளியவனே ! உன் திருப்பெயராகிய திருவைந் தெழுத்தினைக் காதலுடன் ஓதுதலினால் அடியேனுடைய நாவினைத்

திருத்திக்கொண்டே யில்லை, தேனிறைந்த நறுமணங் கமழ்கின்ற பெருமைமிக்க மலர்மாலை தொடுத்து மெய்யன்புடன் சாத்தி வழிபடு வதனால் அடிகளின் திருவடிகளைப் பணிந்து வணங்குதல் செய்யேன்; அரணாகக் கொண்டு அடிகள் எழுந்தருளி யிருக்கும் திருத்தில்லையினை அடைவதாகிய ஒப்பற்ற வீடுபேற்றிற்குக் காரணமாகிய செந்நெறி யினை எவ்வகை ஆதரவுகொண்டு அடியேன் அடைவது?

(வி - ம்.) தாமம் - மலர்மாலை. நாமம் – திருவைந்தெழுத்து. சரண் – அரண்; புகலிடம். வாமம் - இடப்பக்கம். உலகீன்ற அன்னை யாம் உமையம்மையாரை, உலகுய்தற் பொருட்டுத் தன் திருமேனியில் ஒரு கூறாய் இடது பக்கத்தில் வைத்தருளினன்: இடது திருக் கையின்கண் உள்ள மான், சிவபெருமானின் திருக்கண்ணை நோக்கிக் கொண்டிருக்கிறது. மான் நாததத்துவம். இது சிவபெருமானின் நேர் திருக்குறிப்பால் தொழிற்படுவதாகும். அதுவே அவர் திருக் கண்ணை நோக்கி நிற்பதன் கருத்தாகும். விந்து தத்துவம் அன்னை யின் நேர் தொழிற்பாடு ஆகும். இம்மான் மறி இறைவனை நோக்கு வதற் கொரு குறிப்புங் கூறுவர்.

அம்மையின் திருக்கண்களுக்கு ஒவ்வாமை கண்டு நாணமுற்று மான் முகத்தைத் திருப்பிக்கொண்ட தென்பதாம். நாவின் பழக்க மிகுதியால் ஒல்லும்வகை யோவாது நாக்குத் திருவஞ்செழுத்தை ஓதிக்கொண்டே யிருக்கும். அவ்வுண்மை வருமாறு:

"அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம
அஞ்செழுத் தறியஎப் பொழுதும்
எண்ணிய நாவே இன்சுவை பெருக
இடையறா தியம்புமென் றிதனைத்
திண்ணிய உணர்விற் கொள்பவர் மற்றுப்
பற்றிலேன் எனச்செழுந் தமிழால்
நண்ணிய அன்பின் பிணிப்புற நவின்றார்
நமச்சிவா யத்திருப் பதிகம்."

—கஉ. எயர்கோன், ௬எ.

'நாமத்தினால்' அறிவுத் தொண்டும், தாமத்தினால் சீலமும், சரண் பணிதலால் செறிவும், மானை வைத்தாய் என்பதனால், நோன்பும் பெறப்படும்.

என்கொடு என்பது என்கொண்டு என்பதன் இடைக்குறை.
மருஉ. (கச)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

நெறிதரு குழலை யறலென்பர்கள்
நிழலெழு மதியம் நுதலென்பர்கள்
நிலவினும் வெளிது நகையென்பர்கள்
நிறம்வரு கலசம் முலையென்பர்கள்

அறிகுவ தரிதிவ் விடையேன்பர்கள்
அடியிணை கமல மலரேன்பர்கள்
அவயவம் இனைய மடமங்கையர்
அழகியர் அமையும் அவரேன்சேய
மறிமழு வுடைய கரனேன்கிலர்
மறலியை முனியும் அரனேன்கிலர்
மதிபொதி சடில தரனேன்கிலர்
மலைமகள் மருவு புயனேன்கிலர்
செறிபொழில் நிலவு தி (ல்)லையேன்கிலர்
திருநடம் நவிலும் இறையேன்கிலர்
சிவகதி யருளும் அரசேன்கிலர்
சிலர்நர குறுவர் அறிவின்றியே.

(இ - ள்.) *உலகத்து உய்யும் அறிவிலாத சிலர், இளமை வாய்ந்த மங்கையர் மயலால் அவர் தம் உறுப்புக்களை அளவிறப்பப் புனைந்து பாராட்டுவர். அவை வருமாறு :*

வகிரினையுடைய கூந்தலைக் கருமணலின் ஒழுங்கு என்பார்கள்; நெற்றியினை ஒளியுள்ள பிறைத்திங்கள் என்பர்; பற்களை நிலவைக் காட்டிலும் வெண்மை நிறம் உடைய தென்பர்; முலைகளை ஒளி வளரும் பொற்கலசம் என்பர்; இவ் வகையான இடுப்பு உண்டோ இல்லையோ என அறிதல் அருமை என்பர்; இரண்டு கால்களையும் செந்தாமரை மலரென்பர்; இத்தன்மையாகிய இளமை வாய்ந்த பேரழகினையுடைய மங்கையரின் உறவு யாது பயன் தரும்; அவருடன் கொண்டுள்ள தொடர்பு போதும்; இனி வேண்டுவதில்லை.

மான் கன்றினையும், மழுப்படையினையும் தாங்கிய திருக்கைகளையுடைய கடவுளே என்று ஓதார்; நமனையும் முனிந்தகற்றும் அரனென்று மொழியார்; இளந்திங்களைத் தாங்கிய திருச்சடையினையுடையவ னென்கிலர்; அடர்ந்த சோலைகள் சூழ்ந்து திகழ்கின்ற திருத்தில்லை என்று நவிலார்; ஐந்தொழில் திருக்கூத்தினை அசைவின்றி இடையறாது நசையுடன் புரிந்தருளும் விழுமிய முழுமுதல்வன் என்று புகன்றிலர்; என்றும் பொன்றுப் பெரும் பேறும் சிவன் திருவடி நிலையருளும் வேந்தே என்று விளம்பிலர்; (இங்ஙனம் ஓதுவதே பிறவிப் பெரும் பயன் எனக் கருதும்) நல்லறிவு இல்லாதார் இருளுலகெய்தி எல்லையிலா இன்னலுற்று அழுந்துவர்.

(வி - ம்.) *நெறி – ஒழுங்கு; வகிர். கூந்தலுக்குரிய குழற்சி, சுருள், நெளிவு முதலியனவும் நெறி எனப்படும். அறல் – ஆற்று நீரால் அறுத்தோடப்பட்ட மணலிலே வளைவாகக் காணப்படும் கருமணல் ஒழுங்கு. நிழல் – ஒளி. நுதல் – நெற்றி. நகை – பல். இடை – இடுப்பு. கமலம் – தாமரை. அமையும் – போதும்; சாலும். கரன் – கையுடையன். மடம் – இளமை. மறலி – நமன், சடிலம் – சடை. மருவுதல் – தழுவுதல். திலை – தில்லை. நவிலுதல் – புரிதல்; செய்தல்; ஆடுதல்.*

குழலை ஐம்பாலாகக் கூறுவர். அவை, பனிச்சை, குழல், சுருள், கொண்டை, முடி என்பன. பனிச்சை - பின்னி விடுதல். குழல் - சுருட்டி முடித்தல். சுருள் - பின்னே சொருகல், கொண்டை - பக்கமாக முடித்தல். முடி - உச்சியின் முடித்தல். அறல் ஆகுபெயராகக் கருமணலைக் குறித்தது. இதில் முடிமுதல் அடிவரை ஒவ்வோர் உறுப்பாக வனப்புறுத்தப்பட்ட வாய்மை காண்க.

இடையினை அறிகுவதரி தென்பது கட்புலனாகா நுண்மையும், மேலுறுப்புக்களைத் தாங்குதலால் உண்மையும் கொண்டு கூறுவதாகும். கமலம்: கம் - நீர். அலதி - பூஷயதிதி கமலம். நீரைப்பூசிப்பது. கமல மலர்: இருபெயரொட்டு முன் மொழியாகு பெயர். அறிகுவது; கு சாரியை,

பெண்கள் பிறவிப்பிணி நீக்குதற்குப் பெருந்துணையாய்க் காரைக் காலம்மையார், மங்கையர்க்கரசியார், திலகவதியம்மையார் முதலியோர் போன்று தாங்களும் பிறப்பறச் செய்யும் சிவ வழிபாடாம் நற்றவம் மேற்கொண்டொழுகும் நல்லாராயிருப்பின் அவர்கள் உயிர் உய்யும் வழித்துணையாவர். அவர்களைக் காணுங்கால் எத்தகையார்க்கும் உடலழகும் உறுப்பழகும் அவர்களுடையன எனக் கருதும் கருத்துத் தோன்றாது. ஆனால் அங்ஙனம் ஆக்கியமைத்தருளிய சிவபெருமானின் திருவருள் வெளிப்பாடே அவர்கள் கண்ணினுங் கருத்தினும் தோன்றா நிற்கும். ஓவியவல்லான் கைபுனை திறத்தை ஓவியவல்லானை உற்று நோக்குவர். அதுபோல் சிவ வழிபாட்டினரே சிவவழி பாட்டு நங்கையரைக் கண்டால் அங்ஙனங் கருதிக் கடவுளைத் தொழுவர். இவ்வுண்மைகள் வருமாறு:

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

—திருக்குறள், ௩௫௫.

"யாழின் மென்மொழி யார்மொழிந் தெதிர்கழல் வணங்கக்
காழி வாழவந் தருளிய கவுணியர் பிரானும்
குழூ[1]மாகிய பரசம யத்திடைத் தொண்டு
வாழு நீர்மையீர் உமைக்காண வந்தனம் என்றார்"[1]

—௧உ. சம்பந்தர், ௬௭௩.

அஞ்சியகலும் தன்மை வருமாறு:

"பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன் தொழும்பரோ டழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்துங்காணச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே."

—அ. அச்சப்பத்து, ௫.

---

1. மங்கைக்கரசி. ௩. ௧௨0—௧.
,, அங்கணேந்தரு. ௧உ. சம்பந்தர்—௬௫அ.

"இம்மாயப் பவத்தொடக்காம் இருவினைகள் தமைநோக்கி
உம்மாலிங் கென்னகுறை உடையேன்யான் திருவாரூர்
அம்மானுக் காளானேன் அலையேன்மின் நீர்என்று
பொய்ம்மாயப் பெருங்கடலுள் எனுந்திருத்தாண் டகம்புகன்றார்."

—கஉ. அப்பர் - சஉரு.

"மாதரவர் மருங்கணைய வந்தெய்தி மதனவசக்
காதலவர் புரிந்தொழுகுங் கைதவங்கள் செய்திடவும்
பேதமிலா ஒருணர்வின் பெரியவரைப் பெயர்விக்க
யாதுமொரு செயலில்லா மையில்இறைஞ்சி எதிரகன்றார்."

—கஉ. அப்பர் - சஉச.

" சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் திறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன்."

எனவும்,

" மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன்."

எனவும்,

" மின்கணினார் நுடங்குமி டையார் வெகுளி வலையி லகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனை."

எனவும்,

மணிவாசகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய மாமறையானும் உணர்க.

எல்லாக் கடவுளரையும் தன்னுள் ஒடுக்கித் தானே தனித்து நிற்றலால் அரன் என்பர்.

மலைமகள்: மலைக்கு மகள் நான்கன் தொகை. மலைபோலும் மகள் என்றலும் ஒன்று. (கரு)

நேரிசை யாசிரியப்பா

அறிவில் ஒழுக்கமும் பிழிதுபடு பொய்யுங்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனுந்
தோல்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
ரு கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலனெனுங் கோண்மீன் அலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்குந்
துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து

நிறையெனுங் கூம்பு முரிந்து குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலங்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த போதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக
தோல்லெயில் உடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை அம்பல வாணநின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.

க—சு. அறிவில்...தொடர

(இ - ள்.) ஆவதறியும் அறிவுகொண்டு செய்யாத நடையும், உள்ளத்தை வேறுபடுத்தும் கள்ளமாகிய பொய்யும், கொடுமையைச் செய்கின்ற நோயின் கூட்டமும், துன்பத் தொகுதிகளும், இவ்வகை யான பல பொல்லாச் சரக்குக்களை ஏற்றிக்கொண்டு, தீவினை என்கின்ற அடிப்பட்ட மாலுமி, அம்மரக்கலத்தை அது நிலைத்த நிலையினின்று, தாயின் கருப்பை யென்கிற பெரிய பட்டினத்து, ஒப்பற்ற துறைமுகத்தை நோக்கிப் பெருங்கடலுள் செலுத்த, அக்கடல்வெள்ளத்துள் செல்லத் தொடங்குகையில், ஐம்பொறிக ளென்னும் கொல்லுந்தன்மை வாய்ந்த வலிமைமிக்க சுறாமீன்கள் சுழன்று அம்மரக்கலத்தைக் காலம்நோக்கித் தீங்கு செய்யப் பின்பற்ற

எ—கஉ. பிறப்பெனும்...சிறைக்கலம்

(இ - ள்.) பிறப்பென்று சொல்லப்படுகின்ற மாயாகாரியப் பெருங்கடலுள் மிகுதியாகச் சென்று, வருத்துகின்ற துன்பமாகிய பெரியமலையில் அலைகளின் பெருக்கினால், நிலைபெயர்கையில், பிளவுபட்டுக் மோதப்பட்டு, மனவொடுக்க மென்னும் பாய்மரம், குறைதலில்லாத அறிவு என்று சொல்லப்படுகின்ற நீண்ட பாயினைக் கிழித்து. தீமை நெருங்கிய, மாயம் என்னும் பெயர்பெற்ற, உடம்பு என்கிற காவலாகிய மரக்கலம்,

(வி - ம்.)

"மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணா
துனையுனு முணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே"

—ச. ச-உசு.

இத்திருப்பாட்டில் மதனெனும் பாறைதாக்கி என்பது 'நெடுங்கல் வீழ்த்து' என்பதனோடு ஒத்துநிற்பது காண்க. வரும் திருப்பாட்டுங் காண்க :

"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே."

—அ. திருச்சதகம், உஎ.

ருக—கக. கலங்குபு...செய்யே

(இ - ள்) கலங்கி வீழ்ந்து கேடெய்துவதற்குமுன், முருக்க விழ்ந்து மணங்கமழ்கின்ற கொன்றை மாலையினைத் திங்களுடன் சூடி யருளிய திருச்சடையின்கண் படத்தினையுடைய பாம்பினை அழகுபெற அணிந்த தேவர்தம் முதல்வனே, பழைமையாகிய மதியமை மதில் களாற் சூழப்பட்ட தில்லைத்திருச்சிற்றம்பலத்தை இடமாகக்கொண் டருளும் தலைவனே, கால மல்லாக் காலத்தும் மலர்கின்ற தும்பை மலர்மாலை யணிந்துள்ள தில்லைத்திருச்சிற்றம்பலத்தின்கண் திகழ்ந் தருள்பவனே தேவரீருடைய திருவருள் என்கின்ற நல்ல வடத்தைப் பூட்டித் திருவடியென்று சொல்லப்படும் அழியாப் பெருங்கரையினைச் சேர்த்துமாறு தண்ணளி புரிவாயாக:

(வி - ம்.) கலங்குபு - கலங்கி. கவிழா - கவிழ்ந்து. அலங்கல்- மாலை. மதி: ஆருயிரின் அடையாளம். சடிலம் - திருச்சடை. பை - பாம்புப்படம். நாயகன் - முதல்வன், காவலன் - தலைவன். வம்பு - புதுமை; காலமல்லாக் காலம். எயில் - மதில். தார் - வடம். நெடுங்கரை - அழியாப் பெருங்கரை.

தில்லைக்கண் தும்பைமலர் தெய்வத்தன்மையான் எக்காலத்தும் பூக்கும். அதனால் வம்பலர் தும்பை என்றனர். தும்பையின் இயல்பு கார்காலத்தும் பனிக்காலத்தும் மலரும்; வேனிற்காலத்து அழியும்.

'தேவநாயகன்' பிறப்புஇறப்புக்கட்கு உட்பட்ட தேவர்களுக்குப் பிறப்பும் இறப்புமில்லாத கடவுளே முதல்வனாவன். இவ்வுண்மை வருமாறு:

"தேவர்கோ வறியாத தேவதேவன்."

—அ. திருச். ருO.

"அவன்கண்டாய் வானோர் பிரானாவா னென்றும்
அவன்கண்டாய் அம்பவள வண்ணன்—அவன்கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பால் நன்னெஞ்சே
மெய்த்தமர்ந் தன்பா யிரு."

—கக. அம்மை, அற்புதத்–கரு. (கசு)

வெண்பா

[வேறுபாடுகண்டு வினய செவிலிக்குத் தோழி கூறியது:]

செய்ய திருமேனிச் சிற்றம் பலவருக்கென்
தையல் வளைகோடுத்தல் சாலுமே—ஐயன்தேர்
சேயே வருமளவிற் சிந்தாத மாத்திரமே
தாயே நமதுகையிற் சங்கு.

(இ - ள்.) செந்நிறங் கொண்ட திருமேனியையுடைய தில்லைத் திருச்சிற்றம்பலமுடைய செல்வற்கு எளியேனுக் குரியமகள் கையிற் றங்காது சங்கவளை கழன்று தாமாக வீழ்வது பொருந்துமோ? விழுமிய முழுமுதல்வன் ஊர்ந்து வரும் பெருந்தேர் நெடுந்தொலைவில் வரும் பொழுதே கழன்றுவிடுதலின்றி அமைந்துநின்றதே வியப்பு. தாயே நம் கையிலுள்ள சங்க வளையல்கள்.

(வி - ம்.) செய்ய - சிவந்த. தையல் - மகள். சாலும் - அமையும். ஐயன் - தலைவன். சேய் - சேய்மை - தொலைவு. சிந்துதல் - கழன்று விழுதல். வளை: ஆகுபெயர்.

செவிலித்தாயும் தோழியும் கூறியகூற்ருக அமையுந்துறை. அம் என்பதில் மகரம் குறைந்து நின்றது. வேட்கைமிகுதியால் வளை சோரும். (௧எ)

கட்டளைக் கலித்துறை

[கொன்றைமாலையை விரும்பிய தலைவிக்குத் தோழி கூறியது.]

சங்கிடத் தான்இடத் தான்தன தாகச் சமைந்தோருத்தி
அங்கிடத் தாள்தில்லை அம்பலக் கூத்தற் கவிர்சடைமேல்
கோங்கிடத் தார்மலர்க் கோன்றையென் ருயெங்கை நீயும்ஒரு
பங்கிடத்தான் வல்லையேல் இல்லையேல்உன் பசப்போழியே.

(இ –ள்.) திருத்தில்லையின் திருச்சிற்றம்பலத்தின்கண் பேரின்பப்பெருங்கூத்துச் செய்தருளும் கூத்தப்பெருமானுக்குரிய இடது பாகத்தில் சங்கைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் திருமால் மூலவாற்றலாக அமைந்திருக்க, அதே இடப்பாகத்தில் உமையம்மையாரும் உள்ளாளாக எனக்குத் தங்கையே, விளங்குந் திருச்சடைமீதுள்ள மணம் அமைந்த அக்கொன்றைமாலையினை விரும்பினுய், அவ்விருவருங் கொண்ட பங்கேயல்லாமல் நீயும் ஒருபங்குபெற வன்மையுடையளாயின் முயலுக. இல்லையேல் வேட்கைமிகுதியால் உனக்குண்டாகியுள்ள பசப்பினை நீக்கிவிடுவாயாக.

(வி - ம்.) சங்கு - பாஞ்சசன்னியம். இது திருமாலுக்குரியது. ஒருத்தி - சிவனை விட்டுநீங்காப் பேராற்றலாகிய உமையம்மையார்.

அவிர்-விளங்குகின்ற. கொங்கு - மணம். இடத்து - அமைத்த. தார் - மாலே.

எங்கை என்றதால் தலைவி பரத்தையை நோக்கிக் கூறியதாம். இடப்பக்கம் திருமாலமைவது திருவருளாற்றலின் திருக்குறிப்பாகும். இடப்பக்கங் கூறவே இனம்பற்றி வலப்பால் படைப்போன் பெறப்படும். வலப்பால் அறிவாற்றலின் திருக்குறிப்பாகும். இங்குக் கூறப்படும் திருமாலும் படைப்போனும் மூலப்பகுதியிலுள்ளவர்களல்லர். சிவபெருமானே படைத்தல் காத்தல்கள் புரியத் தானே கொள்ளுந்திருவுருவாகும். இவற்றைக் கீழுள்ள மாலுக்கும் அயனுக்கும் கூறுவது ஏற்றுரையாகும். ஏற்றுரை - முகமன் (உபசாரம்).

மால் இடப்பாற் காணப்படும் உண்மைவருமாறு :

"இடமால் வலந்தான் இடப்பால் துழாய்வலப் பாலொண்கொன்றை
வடமா விடந்துகில் தோல்வலம் ஆழி யிடம்வலமான்
இடமால் கரிதால் வலஞ்சே திவனுக் கெழினலஞ்சேர்
குடமா விடம்வலங் கொக்கரை யாமெங்கள் கூத்தனுக்கே"

—கக. பொன்வண்ணம்-

"ஒருபா லுலகளந்த மாலவனு மற்றை
ஒருபா லுமையவளா மென்றால்—இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து.

—கக. அம்மையார், அற்புதத்-சக. (கஅ)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

[தலைவி தலைவன் வாராமை குறித்து வருந்திக் கூறியது.]

ஒழிந்த தெங்கள்உற வென்கொலோ எரியில்
ஒன்ன லார்கள்புரம் முன்னொர்நாள்
விழுந்தெ ரிந்துதுக ளாக வென்றிசெய்த
வில்லி தில்லைநகர் போலியார்
சுழிந்த வுந்தியில் அழுந்தி மேகலை
தொடக்க நின்றவர் நடக்கநோந்
தழிந்த சிந்தையினும் வந்த தாகிலுமோர்
சிந்தை யாயொழிவ தல்லவே.

(இ – ள்.) அடியேனுக்கும் தில்லைநகர்க்கண் உள்ளார்க்கும் நேர்ந்த உறவு நீங்கியது. இஃதென்ன புதுமை; தீயினால் பகைவரின் முப்புரங்களையும் முன்னொரு கற்பத்தில் எரிந்து அழிந்து புழுதியுண்டாக வெற்றி கொண்ட வில்லைத் தாங்கிய கூத்தப்பெருமான் எழுந்தருளி யிருக்கும், தில்லைத்திருவூரை யொத்த பெண்களது.

சுழியினைப் பெற்ற கொப்பூழின்மூழ்கி அங்கு நின்று நீங்கமுடியாமல் மேகலையென்னும் அணிதொடக்க, அதனால் தடைப்பட்டு நின்று, கால்கள் வருந்துமென மனம் நொந்து, தன்நிலையினின்று மாறி மனதானது இப்போதும் என்பொருட்டு வந்ததாகிலும் ஒரு வழிப் பட்ட மனமாக அஃதொழியாதாகும்.

(வி - ம்.) என்கொலோ : கொல் வியப்பிடைச்சொல். எரியில் - எரியினால். ஒன்னலர், ஒன்றலர் - பொருந்தாதார். அறத்தொடு பொருந்தாதார். 'தில்லைநகர் போலியார்'—தில்லைநகரை யொத்த மாதரார். தில்லைநகர் கண்டார்க்கு நீங்கா இன்பந்தரும் நீர்மையது. இதைப்போல் இப்பெண்களும் இன்பந்தரும் இயல்பின ரென்க. புரம் என்னும் பால்பகா அஃறிணைப் பெயர் ஈண்டு முப்புரங்களை யுணர்த்திற்று.

"தாருகாக்ஷன் கமலாக்ஷன், வித்துன்மாலி" முதலிய அசுரர் இருக்கையே அன்றிச் செருக்குற்ற வேறு புரங்களையும் நீறு செய் தருளினன். அவை வெவ்வேறு காலங்களாகும். அக் குறிப்புத் தோன்ற 'ஒரு நாள்' என்றனர்.

விண்டுவை அம்பாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், நான் முகனைத் தேரோட்டியாகவும், கொண்டு கொண்ட வென்றி யொன்று. வேதங்கள் தேராகவும், மறைமுடிபு குதிரைகளாகவும், பெருமாட்டி யாரைத் தேர்ப்பாகராகவும், ஓங்காரம் குதிரைச் சாட்டையாகவும். காலச்சக்கரம் வில்லாகவும், மாயை நாணாகவும், பாசுபதம் படை யாகவும் கொண்டு பகாக்ஷனை வென்றது. விண்டலம் தேராகவும், காற்றுக் குதிரைகளாகவும், தீ வில்லாகவும், திங்கள் நாணாகவும், வருணன் அம்பாகவும், முருகவேன் தேர்ப்பாகராகவும் கொண்டு சத்த தந்துவின் புரத்தை வென்றது.

நாள் ஆகுபெயராகக் கற்பத்தை யுணர்த்திற்று.

"எண்கோவை மேகலை காஞ்சி யெழுகோவை
பண்கொள் கலாபம் பதினாறு—கண்கொள்
பருமம் பதினெட்டு முப்பத் திரண்டு
விரிசிகை யென்றுணரற் பாற்று."

இதனால் மேகலை எட்டுக் கோவை கொண்டதென்க. (கக)

நேரிசையாசிரியப்பா

அல்லல் வாழ்க்கை வல்லிதிற் செலுத்தற்குக்
கைத்தேர் உழந்து கார்வரும் என்று
வித்து விதைத்தும் விண்பார்த் திருந்துங்
கிளையுடன் தவிரப் பொருளுடன் கொண்டு
ரு முளைமுதிர் பருவத்துப் பதியென வழங்கியும்
அருளா வயவ ரம்பிடை நடந்தும்

இருளுறு பவ்வத் தெந்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்றுபார்த் தியங்கியும்
ஆற்றல் வேந்தற்குச் சோற்றுக் கடன்பூண்டுந்
தாளுழந் தோடியும் வாளுழந் துண்டும்
அறியா வொருவனைச் செறிவந்து தெருட்டியுஞ்
சொற்பல புனைந்துங் கற்றன கழறியுங்
குடும்பப் பாசம் நெடுந்தொடர்ப் பூட்டி
ஐவர் ஐந்திடத் தீர்ப்ப நொய்திற்
பிறந்தாங் கிறந்தும் இறந்தாங்கு பிறந்துங்
கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்குங்
கோப்புட் செய்கை ஒப்பின் மின்போல்
உலப்பில் யோனிக் கலக்கத்து மயங்கியும்
நெய்யெரி வளர்த்துப் பெய்முகில் பெயல்தரும்
தெய்வ வேதியர் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றுங்
கடவுட் கண்ணுதல் நடமுயன் றெடுத்த
பாதப் போதும் பாய்புலிப் பட்டும்
மீதியாத் தசைத்த வெள்ளெயிற் றரவுஞ்
சேயுயர் அகலத் தாயிரங் குடுமி
மணிகிடந் திமைக்கும் ஒருபே ராரமும்
அருள்பொதிந் தலர்ந்த திருவாய் மலரும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமுங்
கங்கை வழங்குந் திங்கள் வேணியுங்
கண்ணிடைப் பொறித்து மனத்திடை யழுத்தியாங்
குள்மகிழ்ந் துரைக்க வுறுதவஞ் செய்தனன்
நான்முகன் பதத்தின் மேல்நிகழ் பதந்தான்
உறுதற் கரியதும் உண்டோ
பெறுதற் கரியதோர் பேறுபெற் றேற்கே.

க—அ அல்லல்...இயங்கியும்

(இ - ள்.) துன்புக்கு உறைவிடமாகிய இல்வாழ்க்கையினை, வலிமையொடு நடத்தி வருதற்கு, மழைக்காலம் இனி வரும் என்று, கையிலுள்ளதாகிய ஏரின் முயற்சியாகிய உழுதற்றொழிலைச் செய்து விதைகளை விதைத்தும், வானத்தின் மழையைப் பார்த்திருந்தும் நெற்பயிர் நாற்றுக்குள் முதிர்ந்து நடும் பருவ காலத்தில் மயக்கத்தைச் செய்கின்ற பூமியினிடம் செய்யப்பட்ட கழனியில் சென்று, அறி

வுடையோரால் கொள்ளத்தகாத அப்பொருளைக் கூலியாகக் கொண்டு, நண்பர் முதலிய உறவினருடன் நடவுத் தொழிலியற்றுக என மிகுதியாகத் தந்தும், இருளடைந்த கடலில், மரக்கலத்தைச் செலுத்தி, மீகாமனுக்கு அடையாளமாகவுள்ள மலையின் குறிப்பை நோக்கி, அலைகள் நெருங்கிய, பரந்த துறைமுகத்துச் சென்று வாணிகம் புரிந்தும்,

(வி - ம்.) அல்லல் - துன்பம். கைத்து-கையகத்துள்ளது. 'கை' முதனிலை. 'து' முடிநிலை, ஒன்றன் படர்க்கை. 'த்' சந்தி. ஏர் - உழவு தொழில்.

உழவு தொழில் எல்லாவற்றினும் சிறந்தது மட்டு மன்றி எல்லார்க்கும் உயிர் நிலைக்கச் செய்யும் வண்மைத் தொழிலுமாகும். இவ்வுண்மை வருமாறு :

"உழவினுற் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை."

—திருக்குறள், க0ங௬.

ஏரி. குளம், கால்வாய் முதலிய ஆற்று நீர்ப்பாய்ச்சலுள்ள நீர் நிலைத்துணையின்றி விதைத்து வானம் பார்த்திருக்கும் நீர்நிலை வாழ்க்கை துன்பந் தருவதேயாம். அவ்வுண்மை வருமாறு :

"வித்திவா னேக்கும் புன்புலங் கண்ணகன்
வைப்பிற் ருயினு நண்ணி யாளும்
இறைவன் ருட்குத வாதே."

—புறநானூறு, க அ

வையம் - உலகம். வரம்பு – வரப்பு. அஃது ஆகுபெயராக விளை வயலைக் குறிக்கும். அறிவுடையோர் தாமே முயன்று பிறர்க்கடிமையில்லாது உழைத்துண்பதையே நன்கு மதிப்பர். அவ் வுண்மை வருமாறு :

"தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த
துண்ணலின் ஊங்கினிய தில்."

—திருக்குறள், க0௬ரு.

"வித்தினையுண் ணுது விளைவினையே உண்ணுமுயிர்
அத்தன் அறுதிசிவம் ஆதியருட்—சத்தியாம்
சொல்லும் பரத்துவமும் தூக்கிற்சிவ சத்திக்கே
புல்லும் சிவன்பாற் புனைவு.

௬—க அ. ஆற்றல்...மயங்கியும்

(இ - ள்.) மிக்க படைவலி யுடைய, வேந்தனுக்குச் சோற்றுக்கடன் பூண்டு போர்புரிந்தும், பல்வேறு தொழில்களை நினைந்து பல இடங்களில் ஓடித்திரிந்தும், வாட்போர் செய்தும், அதனால் வாழ்க்கையினை நடத்தியும், முன்பு பழக்கமில்லாத ஒருவனை, அடுத்து நெருங்கித் தன்னியல்பினைத் தெளிவித்தும், பலவகையான பாமாலைகள்

பாடியும், தான் அருமையாகக் கற்ற செய்யுட்களைக் கேட்போன் களிப் படையும்படி சொற்பொழிவாற்றியும், இல்வாழ்க்கை யென்னும் பாச மாகிய நீண்ட சங்கிலியை மாட்டி, ஐம்பொறிகளாகிய கடுங்கண் மறவர் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமை யுறாது. ஐவே றிடங்களில் இழுக்க, எளியேன் வலியிலும் அவர்களே சால வலியராதலின் எளிமையாகவே, பிறந்தது போன்று இறந்தும், இறந்தது போன்று பிறந்தும், கண்ணி மைப் பொழுதில் தோன்றி அதுபோல் கண்ணிமைப் பொழுதில் மறையும் நீர்க்குமிழியையும் வேறொன்றையும் ஒப்பிட முடியாத மின் னலையும் ஒத்த தொழில்களையுடைய, அளவுபடாத பிறவியின் கலக் கத்தில் மயங்கியுழன்றும்,

(வி - ம்.) வேந்தன் - மன்னர்க்கு மன்னன். பாசம் - கயிறு. தொடர் - சங்கிலி. நொய்து - எளிமை. கணம் - கண்ணிமைப் பொழுது. கரக்கும் - மறையும். கொப்புள் - நீர்க்குமிழி. ஒப்பில்- ஒப்பில்லாத. உலப்பில் - அளவில்லாத. யோனி - பிறப்பு.

ஐம்பொறிகளாகிய ஐவரும் மிக்க வலியர் என்னும் உண்மை வருமாறு:

"மெய்யுளே விளக்கையேற்றி வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோ ருபாயம்பற்றி யுகக்கின்றே னுகவாவண்ணம்
ஐவரை யகத்தே வைத்தீர் அவர்களே வலியர்சாலச்
செய்வ தொன்றறிய மாட்டேன் திருப்புகலூரனீரே."

—ச. ௰ச—கூ.

கக—௩௪. நெய்யெரி...பேறுபெற்றேற்கே

(இ - ள்.) நெய் சொரிந்து முத்தீ வளர்த்து, மழையைப் பெய் யத்தக்க மேகத்தைப் பெய்யும்படி செய்விக்கும், தெய்வத்தன்மை பொருந்திய அந்தணர் மூவாயிரவர் எழுந்தருளியிருக்கும் திருத்தில்லை யாகிய பழம்பதியில், திருச்சிற்றம்பலமாகிய பொன்மன்றில், ஐந் தொழில் அருட்பெருங் கூத்தியற்றும் மூதறிவின்கண் கண்ணுதலாகிய திருக்குறிப்பினால் எல்லாம் இயற்றியருளும் கண்ணுதற் கடவுள், திரு நடமியற்றத் திருவுள்ளங் கொண்டருளித் தூக்கிய திருவடித் தாமரை யும், பாய்கின்ற சினஞ் சிறந்த புலித்தோல் உடையும் மேலே விரித்து இறுக்கிக் கட்டிய, வெண்மையாகிய பற்களையுடைய பாம்பும், செம்மை யான உயர்ந்த விரிவினையுடைய, ஆயிரந் தலைகளிலும், மாணிக்கங் கள் தங்கி விளக்கமிக்குப் பொலிகின்ற ஒப்பில்லாத பெரிய பாப் பணியும், தண்ணளி நிறைந்து மலர்ந்துள்ள, மலரை யொத்துத் திகழும் திருவாய் மலரும், திருநெற்றியில் விளங்குகின்ற ஒற்றைத் திருக்கண்ணும் சலமகள் உலாவும் இளந்திங்கள் சூடிய திருச்சடையும் கண்ணில் பதித்து, மனதின்கண் அழுந்த வைத்து, அவ்விதத் திலேயே, உளங்களித்து, கணிக்க, மிக்க தவத்தினை அடியேன் திரு வருளால் செய்து முடித்தேன்; பிறவிப் பிணிப்புள்ளோரால் அடை தற்கு அருமையாகிய பெரும் பேற்றினைத் திருவருளால் பெற்ற அடி யேனுக்கு, நான்முகன் உலகிற்கு மேலாகிய, மாறுதலில்லாத நிலை யான உண்மைத் திருவடிப் பேற்றினை எய்துதற்கு, அருமையாகவும் உளதாகுமோ? ஆகாது; எளியதென்க.

(வி - ம்.) எரி - வேள்வித் தழல். முகில் - மேகம். வேதியர் - மறையவர்; அந்தணர். மூதூர் - பழையவூர். ஆடகம் - பொன். பொது - அம்பலம்; மன்று. நாடகம் - திருக்கூத்து. மீது — மேல். கங்கை - சலமகள்; "முற்சின மருவு திரோதாயி" வேணி - திருச்சடை. கண்ணுதல் - கருதுதல்.

கண்ணுதற் கடவுள் என்பதற்கு நெற்றிக் கண்ணையுடைய கடவுள் என்றலுமொன்று.

தில்லைவாழந்தணர் மூவாயிரவர் என்னுங் குறிப்பு வருமாறு :

"செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வவே தியர்களானூர்
மும்மைஆ யிரவர் தாங்கள் போற்றிட முதல்வனாரை
இம்மையே பெற்று வாழ்வார் இனிப்பெறும் பேறொன்றில்லார்
தம்மையே தமக்கொப்பான நிலைமையால் தலைமை சார்ந்தார்."

—கஉ. தில்லை வாழந்தணர், அ.

பண்டைச் செந்நெறி யொழுக்கம் தலை நின்று திருமுறை பேணி வழிபாடோம்பி வழிவழிச் சிறந்து வந்த தில்லைவாழ்ந்தணர் திருஞான சம்பந்தப் பெருமானூர்க்குக் கண்ணுதற் பெருமானூர் திருவுருவாகக் காணும்படி அம்மை அம்பலவாணர் காட்டியருளினர். அவ்வுண்மை வருமாறு :

"நீலத்தார் கரிய மிடற்றூர் நல்ல
நெற்றிமே லுற்ற கண்ணினூர் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம்
சேர்தலாற் கழற்சேவடி கைதொழக்
கோலத்தா யருளாயுன காரணங் கூறுதுமே."

—ந. க—ந.

தில்லை மூவாயிரவரும் சம்பந்தப் பெருமானூர்க்குக் கணநாதராய்த் தோன்றிய வுண்மை வருமாறு

"அண்டத் திறைவர் அருளால் அணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களும்
தொண்டத் தகைமைக் கணநாதராய்த் தோன்றக்
கண்டப் பரிசுபெறும் பாணர்க்குங் காட்டினூர்."

—கஉ. சம்பந்தர், கஎ0. (உ0)

வெண்பா

பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் சேவிலியர்கள்
சுற்றோட வோடித் தொழாநிற்கும்—ஒற்றைக்கைம்
மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்றேர்போங்
கோமறுகிற் பேதைக் குழாம்.

(இ - ள்.) ஒன்றாகிய தும்புக் கையினையுடைய விலங்காகிய யானை உருவினைக்கொண்ட அசுரன் மயங்கி வருந்த, வெகுண்டருளிய தில்லைத் திருச்சிற்றம்பல வாணனின் குதிரைகள் பூட்டிய தேரானது, செல்லுகின்ற சிறந்த திருவீதியில் பேதைப் பருவப் பெண்கள் அவனுடைய ஒப்பிலா அழகினைக்கண்டு வணங்கிக் கும்பிடும் பொருட்டுப் பெரு வேட்கையால் பெற்றோராகிய நற்றாயர் இளையரென் றெண்ணிச் செல்ல வொட்டாது பிடித்துக்கொள்ளவும், அவரினின்று நீங்கி (ஓடக்கண்டு)ச் செல்ல, வளர்ப்புத் தாயாராகிய செவிலியர்கள் சூழ்ந்து ஓட அவர்களையும் தப்பி விரைவாக ஓடிச்சென்று தொழுது நிற்கும்.

(வி - ம்.) பெற்றோர் : அருந்தவமிருந்து ஈன்றோர். ஒற்றை - ஒன்று. கை - தும்புக்கை. மா - விலங்கின் பொது. மறுக - மயங்கி வருந்த. மான் - குதிரை. பேதை - முதற்பருவம்.

பெண்களின் பருவம் எழென்ப. அவை வருமாறு :

"பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பெண்ணென
மற்றிவை யேழும் பொற்றொடி மாதர்க்
குருவம் பற்றிய பருவம் ஆண்டேழொடு
பன்னொன்று பன்மூன்று பத்தொன்பஃதோ
டையைந்து முப்பத்தொன் றெண்ணைந்தே."

—பிங்கலம், கூசக.

இப்பருவ முறைகளின் சிறப்பியல்புகளைச் சேரமான் பெருமாள் நாயனார் பாடியருளிய திருக்கைலாய ஞான உலாவின்கண் காண்க.

மக்கட் பேற்றின் சிறப்பு வருமாறு :

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

—திருக்குறள், சுக.

அருந்தவத் தாய் தந்தையர் பெறற்கரும் பேறு பெற்றமையால் பெற்றோர் எனப்பட்டனர். பேறு இம்மை, உம்மை, அம்மை என மூவகைப்படும். இம்மை - இப்பிறப்பு. உம்மை - மேற்பிறப்பு. அம்மை - திருவடிப்பேறு. இவ்வுண்மை வருமாறு :

"குழைக்கலையும் வடிகாதில் கூத்தனார் அருளாலே
மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக்கிழத்தி யார்தம்பால்
இழைக்கும்வினைப் பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்
பிழைக்குநெறி தமக்குதவப் பெண்கொடியைப் பெற்றெடுத்தார்"

—சுஉ. மானக்கஞ்சாறர், கக.

நற்றவப் பிள்ளைப் பேற்றால் சுற்றமெலாம் ஈடேறும் வாய்மை வருமாறு :

"மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயருள் அரசே போற்றி.''

—அ. போற்றிவரி, கக அ—க,

'தொழாநிற்கும்' இதன்கண் தொழா என்பது செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; தொழுது. நிற்கும் – விட்டு நீங்க மனமில்லாது பெயராது நிற்கும். போம் - போகும் என்னும் எச்சத்தின் உயிர்மெய் கெட்டது.

'பேதை'—பேதைமை என்பதன் ஈறுகெட்டது. அப்பருவப் பெண்களுக்குப் பண்பாகு பெயர். குழாம் என்பதில் ஆம் சாரியை. (உக)

கட்டளைக் கலித்துறை

[கூதிர்கண்டு நற்றாய் இரங்கிக் கூறியது.]

பேதையெங் கேயினித் தேறியுய் வாள்பிர மன்றனக்குத்
தாதைதன் தாதையென் றேத்தும் பிரான்தண் புலிசைப்பிரான்
கோதையந் தாமத்தண் கொன்றை கொடானின்று கொல்லவெண்ணி
ஊதையுங் காருந் துளியோடுங் கூடி உலாவியவே.

(இ - ள்.) திருவருளாணையால் படைக்குந் தொழில் பெற்றுள்ள நான்முகனுக்கும், அவனுக்குத் தந்தை முறையாக வழங்கப்படும். மாலுக்கும், தந்தையென்று இருவராலும் ஏத்தப்படும் முழு முதல்வன், குளிர்ந்த திருப்புலியூராகிய அறிவுப்பெரு வெளியினைச் சிறப்பிடமாக் கொண்டு பலவகைப்பட்ட நறுமண மலர்மாலைகளைச் சூடியவன் இப்பொழுது, தான் விளைபயனால் விழையும் திருக்குறிப்பால் அணிந்துள்ள கொன்றை மலர்மாலையைக் கொடுத்தருள்வான் அல்லன். அதனால் அவன் மாட்டு மிக்க காதல் கொண்டுள்ள என்மகட்கு வாடைக்காற்றும் மேகமும், நீர்த்துளிகளுடன் கொல்லக் கருதி அச்சமின்றி உலாவின. இனி அவள் எங்ஙனந் தெளிந்து உய்வாள்.

(வி - ம்.) பேதை ஈண்டுப் பருவங் குறியாது பொதுவாய்ப் பெண் எனக் குறித்தது. தேறி - தெளிந்து. உய்தல் - பிழைத்தல். தாதை – தந்தை. பிரான் - பெருமான்; முதல்வன். கோதை - மலர் மாலை. ஊதை – வாடைக்காற்று.

பருவமுறை யாண்டு வருமாறு:

"பகருங்கா லைந்தேழ் பதினொன் றுபன்மூன்
றகலாத பத்தொன்பா னையந்—திகலாத
முப்பத்தொன் றீரிருபான் பேதை முதலோர்க்குச்
செப்புவராண் டெல்லைத் திறம்.''

—வச்சணந்தி மாலை—உகூ.

பேதை - அறியாமை. அறியாமைப் பண்பினள் என்றலும் ஒன்று. அங்ஙனங் கொள்ளுங்கால் ஆகுபெயர் எனக்கொள்க. காதல் கொண்

டவர் ஊணும் உறக்கமும் அற்று அதுவே நினைவாய் வாடி வருந்துவர். காதல் நோய்க்கு மருந்து காதல் கைகூடுவதேயாம். அது கிடைக்கப் பெறுவிடின் தெளிந்து உய்தல் அரிது என்ப. அக்குறிப்பே "பேதை எங்கேயினித் தேறியுய்வாள்" என்பதாம்.

புலிக்கால் முனிவர் சிவக்குறி நிறுவி வழிபட்டுய்ந்தமையால் புலியூர் என்னும் பெயராயிற்று. பெரும்புலர் காலை யெழுந்து இருளில் மரமேறிப் பூசைக்குப் பூப்பறிக்க வேண்டிய நிலைமையில் புலிக்காலும் புலிக்கையும் திருவருளின்பால் வேண்டிப் பெற்றன ரென்ப. அம் மட்டுமன்றி நகங்களில் ஒளியுடைக் கண்களும் பெற்றன ரென்ப.

புலி என்பது புல்லி என்பதன் இடைக்குறை. புல்லுதல் - தழுவுதல். சிவபெருமானை அகத்தும் புறத்தும் காதலால் மிகத்தழுவி வாழ்தல். கால் என்பது வழி. கை என்பது தொழில். எனவே சிவனெறியும் சிவத்தொண்டும் பூண்டொழுகும் செம்பொருட்டுணிவின் நல்லார் என்பதும் ஒன்று. இவர் உபமன்னிய மாமுனிவரின் திருத் தந்தையாராவர். அவ்வுண்மை வருமாறு:

"பொருவ ருந்தவத் தான்புலிக் காலனும்
அருமு னிஎந்தை அர்ச்சித்தும் உள்ளது
பெருமை சேர்பெரும் பற்றப் புலியூரென்
றொருமை யாளர்வைப் பாம்பதி ஒங்குமால்."

—கஉ. திருமலைச் சிறப்பு, ௩௧. (உஉ)

கழிநெடிலடி யாசிரியச்சந்த விருத்தம்

[தலைமகன் தலைமகளது உறுப்புக்களின் நன்மையைப் புனைந்து கூறியது.]

உலவு சலதி வாழ்விடம் அமரர் தொழவு ணவென
நுகரு மொருவ ரூழியின் இறுதி யொருவ ராழிய
புலவு கமழ்க ரொடிகை யுடைய புனிதர் பூசுரர் [தோர்
புலிசை யலர்செய் போதணி பொழிலின் நிழலின் வாழ்வ
கலவ மயில னூர்சுருள் கரிய குழலி னூர்குயில்
கருது மொழியி னூர்கடை நெடிய விழியி னூரிதழ்
இலவில் அழகி யாரிடை கொடியின் வடிவி னூர்வடி
வெழுது மருமை யாரென திதய முழுதும் ஆள்வரே.

(இ - ள்.) தேவர்கள் விடமெழக் கண்டு அடுங்காலமென்று பெரிதும் அஞ்சித் திருவடியிணைக்கண் வந்து முறையிட்டுத் தொழ, அத் தொழுகையினை நோக்கியருளி உலவுகின்ற பெருங்கடலின்கண் நீங்காது தங்கியுள்ள கண்டாரைக் கொல்லும் கொடு நஞ்சினை உண்ணும் உணவாக அமுதுசெய்தருளும் ஒப்பற்றவர், அனைத்தும் ஒருமிக்க ஒடுங்கிய பேரொடுக்க காலத்தில் முடிவில் தனித்து நிற்பவர்.

ஆழமாகிய முடை நாற்றம் மணக்கின்ற தலைமாலையினைக் கலனாகப் பூண்டருளிய இயற்கைத் தூய்மையினை யுடையர்; நிலத்தேவர்களாகிய மறைவல்லார்களால் போற்றிசைத்துப் புகழப்பட்ட திருப்புலியூராகிய தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண், மலர்தலைச் செய்கின்ற மலர்களால் அழகு பெற்ற சோலையினது நிழற்கண் வாழ்வா ராகிய ஒரு தோகையினையுடைய மயிலின் சாயலை யுடையவரும், குயில்களும் தம் மினமென்று எண்ணும்படியான இனிய மொழியினையுடையவரும், பரந்த கோடியாகிய கடையினையுடைய கண்களையுடையவரும், இலவ மலரைப்போல் செந்நிறம் பொருந்திய இதழ்களை யுடையவரும் ஆகிய அழகினைப் பெற்றவரும், இடையானது, பூங்கொடி போல் வடிவினை யுடையவரும், உருவம் எழுதவதற்குங் கூடாத அருமையை உடையவரும் ஆகிய இவர் என்னுடைய நெஞ்சகமுற்றும் மீளா அடிமையாகக் கொண்டு ஆளாநிற்பர்.

(வி – ம்.) சலதி - கடல், சலத்தையுடையது. 'இ' வினைமுதற் பொருளீறு. உணு, உகரம்பெற்று உணவு எனவும் வரும். "தெய்வம் உணாவே" எனத் தொடங்கும் தொல்காப்பிய நூற்பாவின்கண் உணா என்னும் சொல் வருவது காண்க. நீர், கரை மோதுதலின் உலவு சலதி என்றனர். அமரர்: அடிமைத் தொழில் செய்யும் அரிமுதலாகச் சொல்லப்படும் தேவர்கள். தொழ என்னும் எச்சம் காரணப் பொருட்டு.

சிவபெருமான் ஒருவரே எல்லாவற்றையும் தன் திருவருட் பெரு நிறைவில் ஒடுக்கி, அத்திருவருளைத் தன்கண் ஒடுக்கித் தான் தனித்து நிற்பர். அத் திருக்குறிப்பே 'ஊழியினிறுதி யொருவர்' என்பதாம். அவன் ஊழிதோ றூழி அழியாது உயர்ந்து நிற்கும் ஒருவனாவன். அது வருமாறு :

"ஒருகாலத் தொன்றாகி நின்றவ் வடி
ஊழிதோ றூழி உயர்ந்தவ் வடி
பொருகழலும் பல்சிலம்பும் ஆர்க்கும் மடி
புகழ்வார் புகழ்தகைய வல்லவ் வடி
இருநிலத்தார் இன்புற்றங் கேத்தும் மடி
இன்புற்றார் இட்டபூ ஏறும் மடி
திருவதிகைத் தென்கடில நாடன்னடி
திருவீரட் டானத்தெஞ் செல்வன் னடி."

—சு. சு—டு.

தலைமாலை அணிதல் சிவபெருமான் ஒருவனே பிறப்பு இறப்பு இல்லாத முழு முதல்வன் என்னும் உண்மையினை உணர்த்துவதாகும். திருமாலுள்ளிட்ட தேவர்கள் அனைவர்களும் பிறப்பு இறப்புக்கட்கு உட்பட்ட உயிரினங்களே.

இலவு, முதலாகு பெயராக மலரை யுணர்த்தும். விழி முதனிலைத் தொழிலாகுபெயர். அன்பு செய்தார்க்கு அன்பு செய்யப்பட்ட பொருளின் உருவும் எழிலும் பிறவும் உள்ளத்தை விட்டகலாது நின்று அவ்வன்புப் பயிரைப் பெருக வளர்க்கும் பெற்றியன. அன்பால் விளையும் இன்பதனால் அவ்வின்பந் தரும் பொருளைப் பெண்ணெனப்

புகல்வது முறைமையாம். பெண் என்பது உயிரினைப் பேணும் தன்மையுடைய தென்பதாம். அவ்வுண்மை வருமாறு:

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

—திருக்குறள், ருசு.

அம் முறையில், 'மொழியும், விழியும், குழலும், இயலும், இடையும், பிறவும் பாராட்டிப் பேசப்பட்டன.

இதனால் ஆருயிர் இறைவனது திருவுருப்புக்களைப் புறத்துக் கண்டு வழிபட்டாங்கு அகத்து இடையறாது உள்கி அதுவதுவாய் நிற்கும் பேரின்பநிலை தானே அமையும். அந்நிலை ஈண்டுக் கூறப் பட்டது. (உங)

இணைக்குற ளாசிரியப்பா

ஆளெனப் புதிதின்வந் தடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்
ஐந்தெழுத் தவையெஞ் சிந்தையிற் கிடத்தி
நனவே போல நாள்தோறும் பழகிக்
கனவிலும் நவிற்றுங் காதலேம் வினைகேடக்
கேட்பதும் நின்பெருங் கீர்த்தி மீட்பதும்
நின்னெறி யல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதியென
அருத்தி செய்திடுவ துருத்திர சாதனம்
காலையும் மாலையுங் கால்பெயர்த் திடுவதுன்
ஆலயம் வலம்வரு தற்கே சால்பினிற்
கைகோடு குயிற்றுவ தைய நின்னது
கோயிற் பல்பணி குறித்தே ஓயா
துருகி நின்நினைந் தருவி சோரக்
கண்ணிற் காண்பதெவ் வுலகினுங் காண்பன
வெல்லாம்
நீயே யாகி நின்றதோர் நிலையே
நாயேன்
தலைகோடு சார்வதுன் சரண்வழி யல்லால்
அலைகடல் பிறழினும் அடாதே அதனால்]
போய்த்தவ வேடர் கைத்தகப் படுத்தற்கு

வஞ்சச் சோல்லின் வார்வலை போக்கிச்
சமயப் படுகுழி சமைத்தாங் கமைவயின்
மானுட மாக்களை வலியப் புகுத்தும்
ஆறு விரதத் தகப்படுத் தாழ்த்து
வளைவுணர் வேனக்கு வருமோ வுளர்தரும்
நுரையுந் திரையும் நோப்புறு கோட்பும்
வரையில் சீகர வாரியுங் குரைகடற்
பெருத்துஞ் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணில வாகி யிருங்கடல் அடங்குந்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை யடங்கும்நீ
ஒன்றினுந் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்
வானோர்க் கரியாய் மறைகளுக் கெட்டாய்
நான்மறை யாளர் நடுவுள்புக் கடங்கிச்
செம்பொற் றில்லை மூதூர்
அம்பலத் தாடும் உம்பர்நா யகனே.

க—சு. ஆளெனப்...காதலேம்

(இ - ள்.) விழுமிய முழுமுதல்வனே, புதிதாக அடிமையென்று வந்தடைந்த நிலையினேம் அன்று. முதல்வனே நின் திருவடியின்கண் காதல் பூண்டு அத் திருவடித் தொடர்பாகிய அடிமைத் தொழிலினைத் தலையின்கண் ஏற்றுச் செய்து முடித்து, வழி வழியாக அடிமை செய்து வரும் நற்றவ நற்குல ஒழுக்கத்தினை யுடையேம். அடியேம் வாயினுற் சொல்லப்படுவது தேவரீர் திருமேனியே திருவுருவமான திருவைந் தெழுத்தாகும். அத்திருவைந் தெழுத்தினைத் திருவருளால் எங்கள் தாழ்வான உள்ளத்தின்கண் அழுந்தச் செய்து, விழிப்பு நிலைபோல, ஒவ்வொரு நாளும் அதனிடைப் பயின்ற பயிற்சி மிகுதியால் கனவின் கண்ணும் நயந்து ஓதித் தொழும் மிக்க காதலையுடையேம்.

(வி – ம்.) ஆள் - அடிமை. அத்த - முதல்வ; தந்தையே. தாள் - திருவடி. ஏவல் - கட்டளை. மரபு - கால்வழி. நனவு - சாக்கிரம். கனவு - சொப்பனம். காதல் - பெருகும் பேரன்பு.

வழி வழியாக வந்து பல பிறப்பிடையும் நின் திருவடிக்கு அடிமை செய்து வந்துள்ளோம்; அதனுல் இடையே வந்த புத்தடியோம் அல்லோம். இவ்வுண்மை வருமாறு :

“ படைக்கல மாகவுன் னுமத் தெழுத்தஞ்செ னுவிற்கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப் பும்முனக் காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம் பலத்தரனே.''

—ச. அக—அ.

திருவைந் தெழுத்தினைக் கனவினும் கருது முண்மை வருமாறு :

"சாரணன் தந்தை எம்பிரா னெந்தை தம்பிரானென்பொன் [மாமணியென்று
பேரெணு யிரகோடி தேவர் பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன்பிர மன்றொழுங்கறை யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணுவுனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே."

—எ. சஅ—க.

சு—கஎ- வினைகெடக்...நிலையே.

(இ - ள்.) மும்மலங்களின் வலி கெடும்படி, இடையறாது கேட்டுக் கொண்டிருப்பது, தேவரீருடைய பொருள்சேர் பெரும்புகழ், செல்ல வொட்டாது மீட்பது, தேவரீர் அருளிச் செய்துள்ள தென்றமிழ்த் திருமாமறை திருமாமுறைகளிற் பெறப்படும் செந்நெறி ஒழுக்கம் அல்லாத முக்கூற்றுப் புறச்சமய நெறியாகிய புன்மையான ஒழுக்கத் தில் செல்லும் ஆய்வறி வில்லாத நெஞ்சத்தினை யாகும்; இறவாப் பெருஞ்செல்வமெனக் கொள்ளப்பட்டு வேட்கப்படுவது, திருநீறு சிவமணி முதலிய சிவன் திருவடையாளமாகும்; காலைப் பொழுதிலும் மாலைப் பொழுதிலும், அடியேனுடைய கால் புடைபெயர்ந்து செல்வது, தேவரீருடைய திருக்கோயிலை வலம் சூழ்ந்து வருவதற்கே யாம்; கைகளால், நிறை நெஞ்சுடன் புரியும் பணி தந்தையே நின் திருக்கோயிலிற் செய்யும் பல திருப்பணிகளேயாம், நின் திருவடிகளை ஓவாது கருதி, அதனையே உள்கி (தியானித்து) உள்ளம் உருகி அடி யேன் கண்களில் இன்ப அருவி யொழுகக் காட்சி பெறுவது, உலகங் கள் அனைத்திலும் காணப்படும் பொருள்கள் எல்லாம் நின் திருவருட் பெருவெளியாம் பெரு நிறைவேயாகி நீங்காது நிலைத்து நிற்கும் நின் நிலையேயாம்.

(வி - ம்.) வினை - இருவினை. கீர்த்தி - சீர்த்தி; மிகுபுகழ்; பொருள் சேர்புகழ் மதி - ஆய்வறிவு. நிதி - செல்வம். அருத்தி - வேட்கை. உருத்திரன் - சிவன். சாதனம் - அடையாளத் துணைப் பொருள். ஆலயம் - திருக்கோயில். சால்பு – நிறைவு. குயிற்றுதல்- செய்தல். குறித்தல் - நினைத்தல்.

இறைவன் பொருள்சேர் புகழே இடையறாது புகலவும் கேட்கவும் வேண்டு மென்னும் உண்மை வருமாறு :

"கூறுமினீசனைச் செய்ம்மின்குற் றேவல் குளிர்மின்கண்கள்
தேறுமின் சித்தந் தெளிமின் சிவனைச் செறுமின்செற்றம்
ஆறுமின் வேட்கை யறுமின் அவல மிவைநெறியா
ஏறுமின் வானத் திருமின் விருந்தா யிமையவர்க்கே."

—கக: சேரர் பொன்—எ௦.

திருவுறுப்புக்கள் சிவனார் திருப்பணிகளுக்கே என்னும் உண்மை வருமாறு :

"கால்க ளாற்பயனென்—கறைக்கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணம்சூழாக் கால்க ளாற்பயனென்."
—ச. க—க.

கஎ—உரு. நாயேன்...வருமோ

(இ - ள்.) நாயினை யொத்த அடியேன் தலையினால் வணங்குவது நின் திருவடிப் பெருநெறி யல்லாமல் அலையையுடைய கடல் மாறு படினும் பிறிதொரு தெய்வத்தை வணங்குதல் ஒருசிறிதும் பொருந்தா தாகும். அதனால், பொய்யாகிய தவ ஒழுக்கம் பூண்டோர் கையினிடத் தித் தக்க வகையாக அகப்படுத்திக் கொள்ளுதற்கு வஞ்சனை பொருந் திய நூல்களாகும் பெரிய வலையினை வீசிப் பல சமயங்களாகிய ஆழ மான படுகுழியினை அவ்விடத் துண்டாக்கி, அமைத்த அந்த இடத்து, மக்களாகிய விலங்குகளை, வலிமையுடன் நுழைவிக்கும், நீங்காத தீய நோன்புகளில் உட்படுத்தி அழுந்தச் செய்யும் கொடுமனம் அடியேனுக் கும் உண்டாகுமோ ? (உண்டாகா தென்க.)

(வி - ம்.) சரண் - திருவடி. பிறழினும்-மாறுபடினும். அடாது- பொருந்ாது.

பொய்த்தவ வேடங்கொடு வஞ்சனை புரிந்து திரியும் புறச்சமயத் தாருண்மை வருமாறு :

"நஞ்சமமு தாமெங்கள் நாதனடி யார்க்கென்று
வஞ்சமிகு நெஞ்சுடையார் வஞ்சனையாம் படியறிந்தே
செஞ்சடையார் சீர்விளக்கும் திறலுடையார் தீவிடத்தால்
வெஞ்சமணர் இடுவித்த பாலடிசில் மிசைந்திருந்தார்."
—கஉ. அப்பர்—க0ச.

'விரதங்கள்' தக்கன் வேள்வி போன்று முழு முதல்வன் உண்மை தேறாது சிறு தெய்வ வழிபாட்டுச் சிறப்பில் விரதங்களாம்: அவ் வுண்மை வருமாறு :

"விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்."
—அ. போற்—௫0-க.

"நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
குன்ற மேறி இருந்தவஞ் செய்யிலென்
சென்று நீரிற் குளித்துத் திரியிலென்
என்றும் ஈசனென் பார்க்கன்றி யில்லையே."
—ரு. கக—அ.

உரு—ந௬. உளர்தரும்...நாயகனே

(இ - ள்.) ஒலிக்கின்ற நுரையும், அலையும், தடையுண்டாகும் சுழற்சியும் அளவில்லாத துளியினையுடைய நீரும் ஒலிக்குங் கடலிடத் துப் பெரிதாகவும், சிறிதாகவும் விளங்குவன வாகி, மேலெழுந்து, அளவில்லாதனவாய்ப் பெரிய கடலிடை அடங்கிப் போகும் தன்மை

போல, இயங்குதிணைப் பொருள்களும் நிலைத்திணைப் பொருள்களும் ஆகிய அனைத்தும், தேவரீர் நிலைக்களத்திற் றேன்றி மீண்டும் அந்நிலைக் களத்தே ஒடுங்கும். நீயோ என்னில் ஒரு பொருளினும் தோற்ற மடையாய், ஒரு பொருளினும் ஒடுங்குதலும் செய்யாய். தேவர்களுக்கும் அறிதற் கரியவனே; நான்மறைகளுக்கும் அளத்தற் கரியவனே, பேரறிவாளர் தூய நெஞ்சிடத்துப் புகுந்து அதினும் நுண்ணிதாக விருந்து திருத்தில்லையாகிய பழம் பதியில் சிவந்த பொன் மயமாகிய திருச்சிற்றம்பலத்துப் பேரின்பப் பெருக் கூத்தியற்றியருளும் தேவர்க்குத் தலைவனே!

(வி - ம்.) உளர்தரல் - ஒலித்தல், நொப்பு - தடை. கொட்பு - சுழற்சி. நான்மறை - சிவசிவ என்னும் நாலெழுத்து நற்றமிழ் மந்திரம்.

எல்லாங் கடவுளிடத்தில் தோன்றும் என்பது. கடவுளின் திருவருள் நிறைவாம் பெரு நிலைக்களத்துத் தோன்றும் என்பதாம். கிழங்கிற்றேன்றுந் தாமரையை அக்கிழங்கிற்கு நிலைக்களமாயுள்ள சேற்றில் நின்றுந் தோன்றிய தென்பது போன்றாகும். அது தாமரையைப் பங்கசம் என்பதனுல் அறியலாம். இஃது இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏற்றிக் கூறுவதோர் வழக்கு. அது வருமாறு :

" பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்."

—திருக்குறள், ககஉ-க.

எல்லாம் இறைவன் நிலைக்களத்தில் தோன்றி யொடுங்கும் உண்மை வருமாறு :

" வித்துண்டா மூல முளைத்தவா தாரகமாம்
அதன்தாள் நிற்றல் அவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனும் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து."

—சிவஞானபோதம், க—உஉ.

சரம் - இயங்குதிணை. அசரம் - நிலைத்திணை.

ஒருபுடை யொப்பாக மண்ணினின்று மர முதலியன தோன்றக் காண்கிறேம். மண் எங்கிருந்து தோன்றிய தெனக் காண்பதற்கில்லை அதனையுங் கொள்ளலாம். அது நாற்றத் தன்மாத்திரையினின்று தோன்றிற் றென்னும் உண்மையுணர்வார்க்கு இவ்வையந் தோன்றுது. (உசு)

வெண்பா

நாயனைய என்னைப் பொருட்படுத்தி நன்களித்துத்
தாயனைய ஞயருளுந் தம்பிரான்—தூயவிரை
மேன்துழாய் மாலோ டயன்தேட வியன்தில்லை
மன்றுளே யாடும் மணி.

(இ - ள்.) நன்மை மணம் கமழுகின்ற மென்மை வாய்ந்த துளவ மாலை யணிந்துள்ள காத்தற்றொழிலினுக்குரிய திருமாலும், படைத்தற் றொழிலினுக்குரிய நான்முகனும் முறையே திருவடியினை யும், திருமுடியினையும் தேட முடியாதபடி பேரொளிப் பிழம்பாய் நின்ற பெருமானும், பெருமை மிக்க திருத்தில்லையின்கண்ணுள்ள திருவருள் அறிவுப் பெரு வெளியாகிய பொன் மன்றின்கண் திருவருட் கூத்தியற்றியருளும் செம்மணியை யொத்துள்ள பெருங் கூத்தப் பெருமானும் ஆகிய நீ நாயை யொத்த அடியேனை ஒரு பொரு ளாகத் திருவுள்ளங் கொண்டருளினை. அடியேனுக்கு வேண்டத் தக்கவற்றை நன்களித்தருளி, எளியேனை ஆண்டருளும் தாயனையாய், திருவருள் சுரந்தருளும் முதல்வனே!

(வி - ம்.) தூய - நன்மையான. வியன் - பெருமை. மன்று - பொன்னம்பலம். துளசி பலவகைப்படும். அவை வருமாறு: கல் துளசி, முட்டுளசி, செந்துளசி, கருந்துளசி, நாய்த்துளசி, நிலத்துளசி என்பன. துளசியின் நன்மை வருமாறு:

"ஐயம் வயிற்றுளைச்ச லத்திசுரந் தாகமும்போம்
பையசுர மாந்தம் பறக்குங்காண்—மெய்யாக
வாயின ரோசகம்போம் வன்காரஞ் சூடுள்ள
தூய துளசிதனைச் சொல்."

—பதார்த்தகுண. ௩0௩.

பொருளாக ஆண்டருளு முறை வருமாறு:

"ஆயநான் மறையவனு நீயே யாத
லறிந்தியா னியாவரினுங் கடைய னாய
நாயினே னதலையும் நோக்கிக்கண்டு
நாதனே நான்உனக்கோர் அன்பன் என்பேன்
ஆயினேன் ஆதலால்ஆண்டு கொண்டாய்
அடியார்தாம் இல்லையே அன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசு கேனே."

—அ. திருச்சதகம்—உ௩.

"செய்யமலர்..........................
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக என்னையாட் கொண்டாய் போற்றி."

—சு. இசு—க. (உ௫)

கட்டளைக் கலித்துறை

மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம் வேர்ப்பஅம் மன்றுக்கெல்லாம்
அணியாய் அருள்நடம் ஆடும் பிரானை அடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போநெஞ்ச மேஇனிப் பையப்பையப்
பிணியாய்க் கடைவழி சாதியெல் லோரும் பிணமென்னவே.

(இ - ள்.) மெய், வாய், கண், மூக்குச், செவியாகிய ஐம்பொறிகள் வழியாக எண்ணத்தைச் செலுத்தும். மனமே, மெல்ல மெல்ல நோய் பெருகி, வாழ்நாளின் இறுதிக் காலத்துச் சுற்றத்தாரும் ஏனையோரும் பிணம் என்று தீண்டாது அகலச் சாகிறாய்; அத்தகைய இறப்புத் துன்பம் வருவதற்குமுன் பவழமணி போலும் வாய் குவிந்து அவன்றன் பொருள் சேர் திருப்புகழைப் பாடாநிற்க, அழகிய முகமானது அவனை இடையறாது நினைந்திருத்தலால் வியர்வு தோன்ற ஏனைய மன்றங்கட் கெல்லாம் அழகு விளைவிப்பானாய்ப் பேரின்பப் பெருங் கூத்தினைச் செய்தருளுகின்ற முழு முதல்வனிடம் சென்று (காதலால் கசிந்து) உள்ளம் உருகி இனி ஒல்லும் வகை ஓவாது படர்ந்து பாடிப் பணிந்து தொழுவாயாக. சாதி - சாகிறாய்.

(வி - ம்.) மணி - பவழம். முகிழ்ப்ப-குவிய. மன்று-அம்பலம். புலன் - ஐம்பொறி. பையப் பைய - மெல்ல மெல்ல. உலகியல் முறையில் உயிர் நீங்கிய உடம்பினைப் பிணமெனப் பேசுவது பெரு வழக்கு. அது வருமாறு :

> " மணமென மகிழ்வர் முன்னே மக்கள்தாய் தந்தை சுற்றம்
> பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்
> பணையிடைச் சோலைதோறும் பைம்பொழில் விளாகத்தெங்கள்
> அணைவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சினேனே.
>
> —எ. அ—சு.

> " ஊரெலாங் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
> பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
> சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
> நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே."
>
> —கo. கஅக.

மன்றங்கள் ஐந்து. அவை முறையே மணி மன்று, பொன் மன்று, வெள்ளி மன்று, செப்பு மன்று, ஓவிய மன்று என்பன. இவற்றிற்குரிய திருவூர்கள் முறையே திருவாலங்காடு, திருத்தில்லை, திருக்கூடல், திருநல்வேலி, திருக்குற்றாலம் என்பன. (உசு)

ஆசிரிய விருத்தம்

[தலைவி கார்காலங் கண்டு தோழியிடம் வருந்திக் கூறியது.]

என்னும் இனிமட வரலாய் செய்துவ
தினமாய் வண்டுகள் மலர்கிண்டித்
தென்ன வெனமுரல் பொழில்சூழ் தில்லையுள்
அரனார் திருமுடி யணிதாமந்
தன்னால் அல்லது தீரா தென்னிடர்
தகையா துயிர்கரு முகிலேறி
மின்னா நின்றது துனிவா டையும்வர
வீசா நின்றது பேசாயே.

(இ - ள்.) மடப்பத்தினையுடைய தோழி! கருமை நிறங்கொண்ட மேகம், வான் முகட்டில் பரந்து மின்னுகின்றது. வாடைக் காற்றும் நீர்த்துளிகளைத் தூவும்படி வீசுகின்றது; கூட்டமாகிய ஆணும் பெண்ணுமான தேன் வண்டுகள் மலர்களை மூக்கால் கோதித் தேனையுண்டு, அழகுள்ள பொன்னம்பல வாணனே என, பாடுகின்ற சோலைகள் சூழ்ந்த திருத்தில்லையின்கண் எழுந்தருளி யிருக்கும் கூத்தப் பெருமானின் அழகிய திருமுடிக்கண் சூடப் பெற்றிருக்கும் திருக்கொன்றை மாலையினைத் தந்தருளினு லல்லாமல் அடியேனுடைய துன்பம் நீங்காது. உயிரும் உடம்பின்கண் தங்காது. இத்துன்பம் நீங்க நாம் இனிச் செய்யும் வழிவகை யாது? ஆராய்ந்து நீ கூறுவாயாக

(வி - ம்.) மடவரல் : மடப்பம் - இளமை; அடக்கம்; கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. இனம் - கூட்டம். கிண்டி - கோதி. தென்னு - தென்னவன்; கூத்தப் பெருமான். முரலுதல் - பாடுதல். மணமாலைச் சிறப்பு வருமாறு :

> "மங்கை காணக் கொடார்மண மாலையைக்
> கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை
> நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
> எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே."
>
> —ரு. கரு—சு. (உஎ)

இணைக்குற ளாசிரியப்பா

பேசு வாழி பேசு வாழி
ஆசையொடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி பேசு வாழி
கண்டன மறையும் உண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்
நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றேன் றேருவழி நில்லா அன்றியுஞ்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறன் மிகுந்தோர்
கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
எனையர்எங் குலத்தினர் இறந்தோர் அனையவர்
பேரு நின்றில போலுந் தேரின்
நீயும் அஃதறிதி யன்றே மாயப்

பேய்த்தேர் போன்று நீப்பரும் உறக்கத்துக்
கனவே போன்று நனவு பெயர்பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்
தன்மையர் இழிவு சார்ந்தனை நீயும்
நன்மையில் திரிந்த புன்மையை யாதலின்
அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி
வளைவாய்த் தூண்டிலின் உள்ளிரை விழுங்கும்
பன்மீன் போலவும்
மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்
ஆசையாம் பரிசத் தியானை போலவும்
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்
வீசிய மணத்தின் வண்டு போலவும்
உறுவ துணராச் செறுவுழிச் சேர்ந்தனை
நுண்ணூல் நூற்றுத் தன்கைப் படுக்கும்
அறிவில் கீடத்து நந்துழி போல
ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்
டிடர்கெழு மனத்தினோ டியற்றுவ தறியாது
குடர்கெழு சிறையறைக் குறங்குபு கிடத்தி
கறவை நினைந்த கன்றெனை இரங்கி
மறவா மனத்து மாசறும் அடியார்க்
கருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்று ளாடும்
இறையவன் என்கிலை என்னினைந் தனையே.

க—அ. **பேசுவாழி...நில்லா**

(இ - ள்.) பெரு வேட்கையால் மயக்க மடைந்து, குற்ற மடைந்த நெஞ்சமே, (உய்யும் வகையாம் உறுதி யொன்று உனக்குக் கூறுவன் கேட்பாயாக) கண்ணாற் காணப்பட்ட எல்லாப் பொருள் களும் நிலைபெறாது (காரணமாயையின்கண்) ஒடுங்கும்; நீ உட் கொண்ட இன்சுவைப் பொருள்கள் எல்லாம் மலமாகக் கழியும்; மண முள்ளவை யென்று பூசிக் கொள்ளப்பட்ட நறுமணமிக்க கலவைச் சாந்துகள் அனைத்தும் அழுக்காக மாறும்; உன் உடைமை யெனக் கொள்ளப்பட்ட உன்னைச் சேர்ந்த பொருள்கள் கால முறையில் உன்னை விட்டுக் கழியும்; நிறைவாயுள்ள பொருள்கள் குறைவை யடையும்; மிக வுயர்ந்துள்ள பொருள்களும் தாழ்தனவாகும்; தோன்றிச் சிலகாலம் நிற்கும் பொருள்கள் காரணத்தி லொடுங்குவ

தாகிய இறப்பினை எய்தும்; பருமையாக காணப்படும் பருப்பொருள்கள், நுண்பொருள்களாகும்; ஓரிடத்திற் காணப்படும் ஒரு பொருள் அந்த இடத்திலே நில்லாமல் கேடெய்தும்;

(வி - ம்.) காணப்படும் பொருள்கள் அனைத்தும், மாயாகாரியப் பொருள்களே. காரியப் பொருள்கள் அனைத்தும் காரணத்தில் போய் தத்தம் ஆற்றல் வடிவாய் ஒடுங்கும். அப் பொருள்களை நிலையாக நிற்கும் பொருள்கள் என்று மயங்கும் மயக்கம் நீங்குதல்வேண்டும். நீங்கின் நன்னெறிச் சென்று நலமெய்துதல் கூடும்.

அ—௯௫. அன்றியும்...அன்றே

(இ - ள்.) மேற்சொல்லப்பட்டன அல்லாமல், பெருஞ் செல்வப் பெருங்குடியிற் பிறந்தோரும், புகழொடு விளங்கினாரும், பற்பல கல்வியிற் சிறப்புற்றோரும், மேலான வலிமையில் மிக்காரும், வள்ளன்மையால் பெரியரும், வில்லும் வேலும் வாளும் முதலிய படைக்கலப் பயிற்சியிற் சிறந்தோரும், கல்வி யொழுக்கங்களையுடைய உயர்ந்த குலத்திற் றோன்றி உயர்வடைந்தோரும், நற்பண்புகளால் உயர்ந்த நல்லிணக்கத்தின் வந்தோரும், எம்மரிய மனித குலத்திற்றோன்றியவர் எத்துணையர்? அவர்கள் அனைவரும் இறந்துபோயினர். அத்தகையோர் பெயரும் நிலைநின்றில. ஆராயின், அதனை நீயும் அறிவாய் அல்லவா ?

(வி - ம்.) கடுந்திறல் - மிக்கவலிமை. கல்வி: இறையுண்மை தெளிந்து, இறைவழிபா டியற்றி, நிறைபெரும் பண்பினர் கூட்டம் பற்றி, நன்னெறிப் படர்ந்து ஒழுகுவதற்குத் துணை நிற்பதே கல்வியாம்.

நிலையாமையின் குறிப்பு வருமாறு:

"சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ்
நூற்றித ழலரி னிரைகண் டன்ன
வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை எண்ணுங் காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே."

—புறம், ௨௭.

"மீக்கூற் றுளர் யாவரு மின்மையின்
யாக்கை நில்லா தென்பதை யுணர்ந்தோய்
மல்லன்மா ஞாலத்து வாழ்வோர் மருங்கிற்
செல்வ நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமி ழிகழ்ந்த ஆரிய மன்னரிற்
கண்டனை யல்லையோ காவல் வேந்தே
இளமை நில்லா தென்பதை யெடுத்தீங்
குணர்வுடை மாக்க ளுரைக்கல் வேண்டா

திருஞெமி ரகலத் துச் செங்கோல் வேந்தே
நரைமுதிர் யாக்கை நீயுங் கண்டனை."

—சிலப்பதிகாரம், உஅ. நடுகல்.

"நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை."

—திருக்குறள், ருருக.

"நில்லாத உலகியல்பு கண்டுநிலை யாவாழ்க்கை
அல்லேனென் றறத்துறந்து சமயங்க ளானவற்றின்
நல்லாறு தெரிந்துணர நம்பர்அரு ளாமையினுல்
கொல்லாமை மறைந்துறைபும் அமண்சமயங் குறுகுவார்."

—கஉ. திருநாவுக்கரசர்—ருஎ.

கடு—உக. மாயப்...புன்மையை

(இ - ள்.) மாயமாகிய கானல் நீரினை யொத்தும், நீக்குதற்குக் கூடாத தூக்கத்தில் காணுங் கனவு நிலையினை யொத்தும், விழிப்பு என்னும் பெயரினையுடைய நனவாகிய நிலையில்லாத இவ்வாழ்க்கையை நிலையாக எண்ணி உடம்பைக் கல்லைக் காட்டினும் மிக்க வலியுள்ளதாக எண்ணிப் பொல்லாத தீயகுண முடையவரது இழிகுணங்களின் சார்புடையையாய், அறிவிலா நீயும், நற்குணங்களினின்றும் மாறுபட்ட இழிகுண முடையாய்!

(வி - ம்.) பேய்த்தேர் - கானல் நீர். நீப்பரு - நீக்கமுடியாத. மாய - நிலையில்லாத. காயம் - உடம்பு. புன்மை - தாழ்வு

உக—உக. ஆதலின்...சேர்ந்தனை

(இ - ள்.) ஆதலால் மலச்சார்பால் பிறவிக்கு வித்தாம் தீமை எனப்படும் அவா வழிகளில் செல்லும் பொறிகளின் வழியாக இழுக்குடைய இயல்புகளில் ஒழுகி, வளைந்திருக்கும் தூண்டில் முள்ளிடத்து வைக்கப்பட்ட சிறு இரையினை உண்ண ஆசைப்பட்டு அதனைப் பின்விளை வறியாது விழுங்கி யழியும் பல மீன்கள் போலவும், மின்னுகின்ற விளக்கினிடத்து விழுந்து கெடும் விட்டிற் பறவையை யொத்தும், வேட்கை பெருகும் ஊற்றுணர்வினுல் அழியும் ஆனையை யொத்தும், வல்லோசை கேட்டலால் மாண்டு மடியும் அசுணமாப் போலவும், நறுமணங்கமழ்கின்ற நாற்றத்தால் மாய்ந்து கெடும் வண்டுக் கூட்டங்கள் போலவும் உனக்கு மேல்வருங் கேட்டினை உணராமல், இருளுலகமாகிய நரகக் குழியில் அடைந்தனை.

(வி – ம்.) அழுக்கு - அவா; மாசு. புலன் - பொறி. இழுக்கம்-புன்மை. பரிசம் - ஊறு.

மெய் வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகள் ஐந்தும் முறையே ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் புலன்கள் ஐந்தனையும் பொருந்தி நுகரும். நுகருங்கால் பொறிகளைத் தான் என்றும், புலன்களைத் தன்னது என்றும் திரிய வுணர்ந்து செருக்குக் கொள்ளும். இதனுல் மீண்டும் மீண்டும் பிறப்பு நேரும். இதற்குக்

காரணம் மெய்யுணர் வின்மையே யாம். முதற்கண் காணப்படும் சிற்றின்பங் காரணமாக மயங்கி யழுந்தித் துன்புறுகின்றனர். அங்ஙனந் துன்புறுதற்கு எடுத்துக் காட்டுக்கள் வருமாறு :

"தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றும் கல்வி—நெடுங்காமம்
முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது."

—நீதிநெறி விளக்கம், ௩.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."

—திருக்குறள், ௩௪.

"அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாப் பிறப்பீனும் வித்து."

—திருக்குறள், ௩௬௧.

எடுத்துக் காட்டுக்கள் க. மீன் உ. விட்டில் ௩. யானை ௪. அசுணம் ௫. வண்டு என ஐவகையாம். மீன் இரை இன்ப விருப்பத்தால் நாப் பொறிக்கும் சுவை யின்பத்திற்கும் எடுத்துக் காட்டாகும்.

"வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று."

—திருக்குறள், கஉக.

விட்டில்—இதுபோல் கட்பொறிக்கும் உருவப் புலனுக்குமாம்.

யானை—மெய்ப் பொறிக்கும் ஊற்றுப் புலனுக்குமாம்.

அசுணம்—செவிப் பொறிக்கும் ஓசைப் புலனுக்குமாம்.

வண்டு—மூக்குப் பொறிக்கும் மணப் புலனுக்குமாம்.

பொறிவாயில் ஐந்தனையும் திருவருளால் சிவனுக்கு மீளா ஆளாய் அவன் நினைவுடன் உன்னடியேன் செய்பணிகள் உன் தொண்டே உன்னருளே, உன்னடிக்கே ஒப்புவித்தேன் ஓர்ந்து என்னும் உறுதிப் பாட்டுடன் ஒருவர் ஒழுகின் நல்வழிப்படுத்துதலாகிய அடக்குதல் கூடும். அங்ஙனம் ஒழுகுவார்க்கு வினை நீங்கும்; வினை நீங்கவே பிறப்பறும்; பிறப்பறவே திருவடிப்பே றெய்தும். இவ்வுண்மைகள் வருமாறு :

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து."

—திருக்குறள், கஉ௬.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்."

—திருக்குறள், கஉக.

"பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ் வார்." —திருக்குறள், ௬.

"செம்மை வெண்ணீற் ரொருமையினுர்
இரண்டு பிறப்பின் சிறப்பினுர்
மும்மைத் தழலோம் பியநெறியார்
நான்கு வேதம் முறைபயின்ருர்
தம்மை ஐந்து புலனும்பின்
செல்லுந் தகையார் அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்
போற்றும் மறையோர் விளங்குவது."

—கஉ. சண்டேசுரர், உ.

௩0—௩௧ **நுண்ணூல்...என்னினைந்தனையே**

(இ-ள்.) சிறு நூலினை வாயினல் நூற்றுத் தன்னிடம் வந்த பூச்சிகளை அகப்படுத்துக் கொல்லும் அறிவில்லாத சிலந்தியின் தள்ளும் சிறு தொளைபோல, அவாவாகிய சங்கிலியின் பற்ருகிய தொடர்பிலே அகப்பட்டுத் துன்பம் மிகுந்த மனத்துடன் செய்வதறியாது; குடல்கள் பொருந்திய சிறைக்கோட்டமாகிய உள்ளிடத்தினையுடைய பெண்களுக்கு உறங்கிக் கிடக்கின்ருய். கறக்கும் பசுவாகிய தாயினை எண்ணியோடும், ஆன் கன்று போன்று இரங்குதல் செய்து மறவாத மனத்தினையுடைய, ஆணவ முதலிய மாசுகள் நீங்கப்பெற்ற மெய்யடியார்களுக்குத் திருவருள் சுரந்து காத்தருள்கின்ற வியத்தகு திருக்கூத்து இயற்றியருளும் பெருமானை, மறைமுறை தவரு அந்தணர் போற்றிசைத்துப் பூத்தூவிப் பூசை செயும், தில்லைத் திருச்சிற்றம்பலத்துள் ஐந்தொழில் திருக்கூத் தியற்றியருளும் விழுமிய முழுமுதல்வ னென்று மொழிகின்றிலை, என் நினைந்து என் செய்யப் போகின்ருய்? ஆதலால் விரைந்து அவன் திருவடியினைத் தமிழ்த் திருமாமறையினை உள்ளக் கசிவுடன் ஓதி வழிபடுவாயாக. திருவருளால் நன்கு வாழ்வாயாக.

(வி-ம்.) கீடம் - சிலந்தி. ஆசை - அவா. பாசம் - பற்று. குடர் - குடல். இஃது ஈற்றுப் போலி. அறை - கோட்டம். உறங்குபு - உறங்கி. கிடத்தி - கிடக்கின்ருய். கறவை - பாற்பசு. இறையவன் - முதல்வன். ஜுந்துழி - தள்ளும் சிறுதொளை

ஒருவரை யொருவர் விரும்புவது உடம்பின் பொருட்டு அன்று; உடம்பகத்துக் காணப்படும் உயிரின் பொருட்டேயாம். சிறந்த பலாப் பழத்தினை விரும்புவது அதனகத்துள்ள சுவைமிக்க சுளையின் பொருட்டென்பது இதற்கொப்பாகும். உயிரின் பொருட் டென்பது உயிருக்குரிய அன்பறி வாற்றல்களின் துணையின் பொருட்டேயாம். அத்துணையும் சிறப்புஞ் செல்வமும் ஈனுதற்குரிய நன்னெறி யொழுகுதற்கு அடிப்படை உறுதியாய் அமைதல் வேண்டும். அதற்கேற்புடையதாக அமையாத எத்துணையும் யாண்டும் துணையாக மாட்டா. துணையுட் சிறந்தது வாழ்க்கைத் துணையேயாம். வாழ்க்கைத் துணையினர் காதலரிருவர்.

அவருள் எவர் மாறுபடினும் பிழையே யாம்; பெண்கள் மேல் வைத்துக் கூறப்படும் பிழைபாடு ஆண்களிடத்திற் காணப்படின் அவையும் அவர்கட்குப் பிழையெனலே பொருந்தும். அவ்வுண்மை வருமாறு:

"குடருங் கொழுவும் குருதியும் என்புந்
தொடரும் நரம்பொடு தோலும்—இடையிடையே
வைத்த தடியும் வழும்புமா மற்றிவற்றுள்
எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள்."

—நாலடியார், ௫. தூய்தன்மை—சு.

"கற்புறு மனைவி யாரும் கணவனார்க் கான வெல்லாம்
பொற்புற மெய்யு றுமல் பொருந்துவ போற்றிச் செய்ய
இற்புறம் பொழியா தங்கண் இருவரும் வேறு வைகி
அற்புறு புணர்ச்சி இன்மை அயலறி யாமை வாழ்ந்தார்."

—கஉ. திருநீலகண்டக்குயவனார், அ.

(அம்மையார் கணவனாரின் ஆவித்துணையாய்த் தாம் திருவருளால் புணர்த்தப்பட்டமையினை அவ்வருளாலே நன்குணர்ந்து உடலுறு இன்பத்தினை யொழித்து உயிருறும் இன்புக்கு உறுதுணையாய் நின்றமையினை ஓர்ந்துணர்க.)

"பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்."

—திருக்குறள், ௯௧௪.

"சிறையறை" பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை. கறவை - தொழிலாகு பெயர். (உஅ)

வெண்பா

நினையார் மெலியார் நிறையழியார் வாளாப்
புனைவார்க்குக் கோன்றை போதுவோ—அனைவீரும்
மேச்சியே காண வியன்தில்லை யானருளேன்
பிச்சியே நாளைப் பேறும்.

(இ - ள்.) (சிவபெருமான் திருவடியின்பப் பேறு பெற எண்ணுவோர் அவனருளால் அவன் திருவடியை எண்ணுவர். அல்லாதார்) அவனைத் தூய உள்ளத்தின்கண் நினைத்தல் செய்யார். அவனிடைப் பற்றுக் கொண்டு மிகுதியாக அவன் திருவடியினை இடையறாது எண்ணி எண்ணி உடல் மெலியப் பெறார்; மேலும் மனந்தளர்தலும் கொள்ளார். இவ்வகையான அகத்தும் புறத்தும் நெகிழ்ச்சிக்குரிய அடையாளங்கள் ஒரு சிறிதும் இன்றிச் செயல் செய்யாது, அப்பெருமான் சூடிக் கொண்டிருக்கும் கொன்றைமாலையினைச் சூடிக்கொள்ள எண்ணுபவராகிய கன்னியர்க்கு அக்கொன்றை மாலை பலர்க்கும் உரியையாகும் பொதுத் தன்மைத்தோ? (அன்றென்க.) அக்

கொன்றை மாலையின்கண் வேட்கையுற்றாரும் அல்லாதாரும் ஆகிய அனைவர்களும், என் பெண்ணின் இடையறு அன்பினைப் புகுந்து காணும்படி பெருமை விளங்கும் தில்லைச் திருச்சிற்றம்பலவன் திருவருள் சுரந்து அக்கொன்றை மாலையினை நாளைக்கு என் பேதைக்கு நல்கியருள்வன். உறுதியாக அவளே அதனைப் பெறுவாள்.

(வி - ம்.) நிறையழியார் - காதல் கைம்மிகுதலால் உள்ளந் தளரார். வாளா - உரிய செயல் செய்யாமல். புனைவார் - சூடிக் கொள்ள விரும்புவார். மெச்சி - புகழ்ந்து. வியன் - பெருமை.

அனைவீரும்—முற்றும்மை. புனைவர் என்பது புனைய விரும்புவார் என்னும் பொருட்டு. ஓகாரம், எதிர்மறை. கொன்றை, ஆகுபெயர். பிச்சி - பித்தி. தகரத்திற்குச் சகரம் போலியாயிற்று. நாளை என்பது வருங்காலம் உணர்த்திய குறிப்பு மொழி. பெறும் - செய்யுமென்னு முற்று. பெண்பாற்கண் வந்தது.

சிவன் திருக்கொன்றை மாலையினை அவன் திருவருளால் பெற விரும்புவார் முன்னரே நற்றவம் புரிந்திருந்தல் வேண்டும். பின்னரும் காதல் நிலை கைக்கொண்டொழுகுதல் வேண்டும். அனைவர்க்கும் கொன்றை மாலை பொதுவாகா தென்பதற் கொப்பு.

படித்துப் பட்டப் பேறும் சான்றிதழும், உழைத்துக் கைக் கொள்ளும் ஊதியமும் படித்தார்க்கும் உழைத்தார்க்குமே கிடைப்பன. படியாதார்க்கும் உழையாதார்க்குங் கிடைக்கப் பெறுதன. இவையே யாம். (உக)

கட்டளைக் கலித்துறை

பெறுகின்ற எண்ணிலி தாயரும் பேறும் யானும்என்னை
உறுகின்ற துன்பங்க ளாயிர கோடியும் ஓய்வோடுஞ்சென்
றிறுகின்ற நாள்களு மாகிக் கிடந்த இடுக்கணெல்லாம்
அறுகின் றனதில்லை ஆளுடை யான்செம்பொன் அம்பலத்தே.

(இ - ள்.) அருந்தவம் புரிந்து மக்கட்பெற்ற கணக்கில்லாத தாய்மார்களும், அப்பிறப்பினுல் வரும் இன்பத் துன்பங்களை அடையும் அடியேனும், இருவினைக் கீடாக அடியேனை வந்து பொருந்தும் துன்பங்கள் அளவில்லாதனவும், ஓய்வினுற் சென்று தம் வாணுளின் முடிவை யடைகின்ற வரையறுக்கப்பட்ட அகவைகளும், தடுப்பார் எவரும் இன்மையால் (ஆருயிர்களை) மூடி யிருந்த பல வகையான துன்பங்கள் அனைத்தும், தில்லைத் திருச்சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளியிருந்து அடியேனை அடிமையாகக் கொண்டருளும் கூத்தப் பெருமானின் செம்பொனம்பலம் அறுத்தருளுகின்றன.

(வி - ம்.) பெறுகின்ற - பெற்றெடுக்கின்ற. ஆயிரகோடி, அளவின்மைக்கோர் எடுத்துக் காட்டு. அகவை - ஆயுள்; வாழ்நாள்.

இருவினைக் கீடாக வரும் பிறப்புக்களின் இயல்புகள் வருமாறு :

"பேறிழ வின்ப மோடு பிணிமூப்புச் சாக்கா டென்னும்
ஆறமுன் கருவுட் பட்ட தவ்விதி யனுப வத்தால்
ஏறிடும் முன்பு செய்த கன்மமிங் கிவற்றிற் கேது
தேறநீ யினிச்செய் கன்மம் மேலுடற் சேரு மன்றே."
—சிவஞானசித்தியார், உ-உ—சு.

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்."
—திருக்குறள், நஎசு.

"சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத் தூற்றாகா ஆமிடத்தே ஆகும்
சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்
இறுகாலத் தென்னை பரிவு."
—நாலடியார், பழவினை—க0.

பகலவன் ஒளிமுன் இகலறும் இருள் இயல்பாக அடங்குவது போன்று, செம்பொனம்பலத்தின்முன் வினைகள் அஞ்சி யகன்றொடுங்கும். (ந0)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

[செவிலி தன் மகள் குறையைத் தலைவனிடம் உணர்த்துமாறு தோழிக்குக் கூறியது.]

அம்பலவர் அங்கணர் அடைந்தவர் தமக்கே
அன்புடையர் என்னுமிதென் ஆனையை உரித்துக்
கம்பலம் உவந்தருளு வீர்மதனன் வேவக்
கண்டருளு வீர்பெரிய காதலறி யாதே
வம்பலர் நிறைந்துவசை பேசவொரு மாடே
வாடையுயி ரீரமணி மாமையும் இழந்தேன்
கொம்பல மருந்தகைமை கண்டுதக வின்றிக்
கொன்றையரு ளீர்கொடியிர் என்றருளு வீரே.

(இ-ள்.) தில்லைத் திருச்சிற்றம்பலத்தினை உறைவிடமாகக் கொண்டெழுந் தருளியவர், அழகிய மூன்று திருக்கண்களை உடையவர், தன் திருவடியைப் புகலாகக்கொண்டு ஒழுகுபவர்தமக்கே தண்ணளி புரியும் தலைவரென உலகோர் கூறும் புகழுரை என்ன பயனுடைத்து? ஆணவக் குறிப்பாம் யானை உரித்துப் போர்வையாகப் போர்த்து உவந்தருளுவீர்; கடமை தவறி வந்த காமன் வெந்து பொடியாக நெற்றித் திருக்கண்ணினை விழித்தருளினீர்! தோழியரே! என் மகளின் பெரிய காதல் நிலையினை ஊரவர் உண்மையாக அறியாது கூடிக் கூடிக் கண்ணோட்ட மின்றிப் பழி கூறும் தூற்றுதல்

ஒரு பக்கமும், வாடைக் காற்று அவளுயிரை ஈர்வதாக மற்றொரு பக்கமும் தன்புறத்த மணி குயிற்றிய சிறந்த அணிகளும், அழகிய மாமை நிறமும் இழந்து கொம்பு போன்ற என்மகள் சுழன்று வருந்தும் காதற்றுன்பத்தைக் கண்டிருந்தும் தகுதிப்பாடில்லாமல் கொன்றை மாலையினை அருளிச் செய்கின்றிலீர். கொடியீரே! எந்நாளில் அருளுவீர்.

(வி - ம்.) கம்பலம் - போர்வை. மதனன் - காமன். வம்பலர் - பழிதூற்றுவோர்.

இறைவன் சார்ந்தவரையே காக்குந் தன்மையன் என்பது மலை மீதேற விழைவோர்க்கு அம்மலை ஏற இடங் கொடுத்துத் துணை நிற்பது காண்டும். ஆனல் அம்மலையினைச் சென்று சார்வோரே அப்பயனை எய்துவர். இதுபோல் கற்பிக்கும் ஆசானல் எய்தும் பயனைக் கற்கச் சாரும் மாணவரே எய்துவர்.

இவை போன்றதே சார்ந்தார்க்கே எய்தும் இறையருளிப் பாடும். அவ்வுண்மை வருமாறு :

"சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்[1]—சார்ந்தடியார்
தாந்தானச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையு மாங்கு."

—சிவஞானபோதம், ௧0—௨. ௨.

திருவருள் நினைவால் பால் வயத்தால் நேரும் காதற் களவு பழியிலா விழுமிய ஒழுக்கமேயாம். அவ்வொழுக்கம் கற்பு நெறியின் அடிப்படைப் பொற்பேயாம். அங்ஙன மிருப்பினும் ஊரவர் பழிதூற்றல் அவ்வொழுக்கத்தினை வலியுறுத்தும் வழியேயாம். ஆயினும் அது பழிபோல் தோன்றும் புகழேயாம். இவ்வுண்மைகள் வருமாறு :

"அம்பலும் அலரும் களவு."

—இறையனாரகப் பொருள், ௨௨.

"அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்
பலரறியார் பாக்கியத் தால்."

—திருக்குறள், ௧௧௪௧.

"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்
நீராக நீளுமிந் நோய்."

—திருக்குறள், ௧௧௪௭.

அடியார்க் கெளியராந் தன்மை வருமாறு :

"அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதிய கைச்சீட்டுப்—படியின்மிசைப்
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை."

1. 'சலமிலன்'. ௪. ௧௧—௬.

இச்சீட்டு அம்பலவாணரால் கொற்றவன்குடி உமாபதிசிவ நாயனாருக்குக் கொடுத்தருளப்பட்டது. இந்நாயனார் மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள் சிவப்பிரகாச முதலிய எண் பெரு நூல்களை இயற்றியருளியவர். பெத்தான் சாம்பான் ஒரு சீரிய மெய்த் தொண்டர். அவருக்குத் தீக்கை செய்து திருவடிப்பே றளிக்க விடப்பட்ட ஆணைச் சீட்டு. அவ்வாறே திருவடிப் பேறும் அளிக்கப்பட்டது.

''சென்றிறைஞ்சும் வானோர்தஞ் சிந்தைக்குச் சேயரா
என்றும் அடியார்க்கு முன்னிற்பர்—நன்று
கனியவாஞ் சோலைக் கயிலாய மேயார்
இனியவர் பத்தர்க் கிவர்.''

—கக. கயிலைபாதி—எக.

வடகாற்றை வாடை என்றது மரூஉ. கொம்பு - ஆகுபெயர். 'அருளீர்' இச்சொல் விதிவினைக்கும் மறைவினைக்கும் பொது. இதனை மறைவினையாகக் கொள்ளுமிடத்து எதிர்மறை யுணர்த்தும் ஆகார ஈறு புணர்ந்து கெட்டதாகக் கொள்க (நூக)

இணைக்குற ளாசிரியப்பா

அருளு வாழி அருளு வாழி
புரிசடைக் கடவுள் அருளு வாழி
தோன்றுழித் தோன்றி நிலைதவக் கறங்கும்
புற்புதச் செவ்வியின் மக்கள் யாக்கைக்கு
நினைப்பினுங் கடிதே இளமை நீக்கம்
அதனினுங் கடிதே மூப்பின் தொடர்ச்சி
வாணாள் பருகி யுடம்பை வறிதாக்கி
நாணாள் பயின்ற நல்காக் கூற்றம்
இனைய தன்மைய திதுவே இதனை
எனதெனக் கருதி இதற்கென்று தொடங்கிச்
செய்தன சிலவே செய்வன சிலவே
செய்யா நிற்பன சிலவே யவற்றிடை
நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே
ஒன்றினும் படாதன சிலவே என்றிவை
கணத்திடை நினைந்து களிப்பவுங் கலுழ்பவுங்
கணக்கில் கோடித் தொகுதி யவைதாம்
ஒன்றேன் றுணர்வுழி வருமோ அனைத்தும்
ஒன்று வுணர்வுழி வருமோஎன் றேன்று
தெளிவுழித் தேறல் செல்லேம் அளிய

மனத்தின் செய்கை மற்றிதுவே நீயே
அரியை சாலஎம் பெரும தேரிவுறில்
உண்டாய்த் தோன்றுவ யாவையும் நீயே
கண்டனை யவைநினைக் காணு அதுதான்
நின்வயின் மறைத்தோ யல்லை யுன்னை
மாயாய் மன்னினை நீயே வாழி
மன்னியுஞ் சிறுமையிற் கரந்தோ யல்லை
பெருமையிற் பெரியோய் பெயர்த்தும் நீயே
பெருகியுஞ் சேணிடை நின்றோ யல்லை
தேர்வோர்க்குத் தம்மினும் அணியை நீயே
நண்ணியும் இடையோன்றின் மறைந்தோ யல்லை
இடையிட்டு நின்னை மறைப்பது மில்லை
மறைப்பினும் அதுவும்
நீயே யாகி நின்றதோர் நிலையே, அஃதான்று
நினைப்பருங் காட்சி நின்நிலை யிதுவே
நினைப்புறுங் காட்சி என்நிலை யதுவே
இனிநனி யிரப்பதொன் றுடையன் மனம்மருண்டு
புன்மையில் நினைத்துப் புலன்வழி படரினும்
நின்வயின் நினைந்தே னாகுதல் நின்வயின்
நினைக்குமா நினைக்கப் பெறுதல் அனைத்தொன்று
நீயே யருளல் வேண்டும் வேய்முதிர்
கயிலை புல்லென எறிவிசும்பு வறிதாக
இம்பர் உய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர்
அருநடங் குயிற்றும் ஆதிவா னவனே.

௪௧—௪௫. வேய்முதர்...ஆதிவா னவனே.

(இ - ள்.) மூங்கில்கள் முதிர்ந்த திருக்கயிலையில் சிறிது பொலிவு நீங்கவும்; விளங்குகின்ற அறிவுவெளி சிறிது வறிதாகவும், இவ்வுலகத்தவர் பிழைத்துத் திருவடிப்பே றெய்தவும், தில்லைத் திருச்சிற்றம்பலம் மிக்க விளக்கத்தினைப் பெறவும்; சிவநுகர்வுச் செல்வம் நற்றவப் பேற்றால் ஓங்கித் திகழ்கின்ற திருத்தில்லையாகிய பழம்பதியின்கண், அன்பரல்லாதார் காண்டற்கும் கருதற்கும் அருமையாகிய திருவருட் பெருங் கூத்தினைச் செய்தருளுகின்ற விழுமிய முழுமுதற் கடவுளே!

(வி - ம்.) வேய் - மூங்கில். எறி - வீசுகின்ற. குயிற்றும் - செய்தருளும். திருவளர் தில்லை என்னும் உண்மை வருமாறு :

"பெருமதில் சிறந்த செம்பொன்மா ளிகைமின்
பிறங்குபேர் அம்பலம் மேரு
வருமுறை வலங்கொண் டிறைஞ்சிய பின்னர்
வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்
அருமறை முதலில் நடுவினில் கடையில்
அன்பர்தம் சிந்தையில் அலர்ந்த
திருவளர் ஒளிசூழ் திருச்சிற்றம் பலம்முன்
திருவணுக் கன்திரு வாயில்."

—கஉ. தடுத்தாட்—க0ச.

ஙு—க0. தோன்றுழித்...யிதுவே

(இ-ள்.) தோன்றுதற்குரிய இடத்தின்கண் பிறந்து நிலைகெடச் சுழற்சியடைகின்ற நீர்க்குமிழியை யொத்த தன்மையினையுடைய மானுட வுடம்பினுக்கு இளமைப் பருவம் நீங்குதல் நினைக்கும் நினைப்பினைக் காட்டினும் விரைவுடையது: மூப்புப் பருவம் வந்து தொடர்தல் அந்நினைப்பின் கடுமையினும் விரைவுடையதாகும்; திடும்மென உண்டாகும் இறப்பு அவ்விரண்டினும் விரைவுடையதாகும். பலநாள் அடியேனுடன் பழகியிருந்த உடம்பைப் பயனற்றதாக்கி எனதாயுளை உண்டு மீண்டு உதவாத நமனின் செய்கையும் இவ்வகை விரைவான செயலை யுடைத்தேயாகும்.

(வி - ம்.) தோன்றுழி: உழி - இடம். கறங்கு - சுழற்சி; காற்றாடி. புற்புதம் - நீர்க்குமிழி. செவ்வி - தன்மை. யாக்கை-கட்டப்பட்டது; உடம்பு. கதமென - திடும்மென. வறிது - பயனின்மை. நாணாள் : நாள் நாள் - பலநாள். நல்காத - உதவாத. கடிது-விரைவு. நிலையாமை உண்மை வருமாறு :

"நீரிற் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று."

—நீதிநெறி விளக்கம், க.

க0—உ0. இதனை...செல்லேம்

(வி - ம்.) மேற் கூறிப் போந்த நிலையாமைகளுக்கு இடனான உடலை, இஃது எனக்கே உரியது என்று எண்ணி, இவ்வுடலை யோம்புதற் பொருட்டு, முயன்று செய்த காரியங்கள் சிலவாம்; இனிச் செய்யுங் காரியங்கள் சிலவாம். செய்துகொண்டிருப்பன சிலவாம்; இவ்வகையாகச் செய்யும் முக்கால முயற்சிக்கண், நன்மை தருவன என்று சொல்லப்படுவன சிலவாம்; தீமை தருவன என்று சொல்லப்படுவன சிலவாம்; இத்தகைய நலம் பொலம் என்று சொல்லப்படும் இரண்டனுள் ஒரு குணத்தினும் சேராதன சில உளவாம்;

மேற் சொல்லப்பட்ட காரியங்கள் கண்ணிமைப் பொழுதில் எண்ணிக் களிப்பினைப் பெறுவனவும், வருத்தத்தினை அடைவனவும்

அளவிடுதற்கரிய பலகோடி யாகும்; முன் கூறிய களிப்பும் கலுழ்ச்சியு முதலிய ஒவ்வொன்ருகத்தான் நினைக்குமிடத்து வந்தியையுமோ அல்லாமல் அனைத்தும் ஒன்ருக நினைக்குமிடத்து வந்தியையுமோ, என்று நினைத்துச் சிறிது தெளிந்து நோக்குமிடத்துத் துணி வினைப் பெறேம்.

(வி - ம்.) கணம் - கண்ணிமைப் பொழுது. தேறல் - துணிதல்.

எனது: ஆருவதன் ஒற்றுமைப் பொருள்; உயிர் நீங்குந் துணை யும் ஒற்றுமையாய் நின்று இன்பத் துன்பங்களை நுகர்தலின் அங்ஙனம் கூறப்பட்டது.

ஒன்றினும் படாதன சில வருமாறு:

கைந்நொடித்தல், அழுக்குருட்டல், மூச்சுவிடல் முதலியன. உண்மையான் நோக்கின் இவையும் சோம்பல் முதலியவற்றைக் களைந்து சுறுசுறுப்பாக இருக்கப் பெரிதும் உதவலின் இவையும் நல்வினைப் பாலவேயாம்.

உ0—கூச. அளிய...நிலையே

(இ - ள்.) இஃது அளிய பேதைமைத்தாகிய மனத்தினது செய லாம்; நீயோ! எம்பெருமானே நினைத்தற்கு மிகுதியும் அருமை யானவன். தெரியுமிடத்து, உள்ளனவாகிக் காணப்பட்ட பொருள் கள் முழுவதும் நீயே படைத்தருளினை; ஆயினும் அப்பொருள்கள் உன்னைத் தோற்றுவியா. அத்தோற்றப் பொருள்களை நின்பால் மறைத்துக் கொண்டாயுமல்லை. உன்னை அழித்துக் கொண்டாயு மல்லை. என்றும் பொன்ருது நிலைபே றுடையாய்; நின் திருவடி எந்நாளும் வாழ்வதாக. அங்ஙனம் நிலைபெற்றும் மிக நுண்ணிய அணுப் பொருள்களினின்று ஒளிந்துகொண்டாயுமல்லை.

பருமையாகக் காணப்படும் தூலப் பொருள்களினும் பெரும் பொருளாவானும் நீயே! மீண்டும் நீ உயர்ந்தும் தொலைவில் நின்ருயு மல்லை; நினக்கே யுரிய எட்டு வான் திருக்குணத்தினை ஆராய்வார்க்கு ஆராயும் அவரைக்காட்டினும் அணிமைக்கண் உள்ளவனுய் இருப் பவனும் நீயே; அங்ஙனம் அணிமைக்கண் நின்றும் காணப்படாமை யால் நின்ற உனக்கும் ஆராய்வானுக்கும் இடையில் ஒரு பொருட் கண் மறைந்தாயும் ஆகாய்; தேவரீர்க்கும் அடியேனுக்கும் இடையாக உன்னை மறைக்கத்தக்க பொருளும் வேறென்றுமில்லை. அவ்வாறு மறைப்பினும், அங்ஙனம் மறைக்கும் பொருளும், நீதானே ஆகி நின்ற தோர் ஒப்பற்ற நிலை அதுவாகும்;

(வி - ம்.) கண்டனை - படைத்தருளினை. காணு - தோற் றுவியா.

கூச—சக. அஃதான்று...வேண்டும்

(இ - ள்.) அதுவல்லாமல் இப்பொழுது கூறிய இது, நினைத்தற் கருமையாகிய தோற்றமுற்ற நின் திருவருள் நிலைமையாம்; முன் மொழிந்த அது, நினைக்கத் தகுந்த தோற்றமுள்ள உன் திருவருள் நிலைமையாம் இது. கடந்ததுபோக இனி அடியேன் நின்திருவடிக்கண்

மிகவும் மன்றாடி விண்ணப்பித்துக் கொள்வதொன்றுண்டு. எளியேம் மனது மயக்கமுற்றுத் தீமையானவழிகளை ஆராயாது எண்ணி ஐம் புலன் வழிப்பட்டுச் சென்று இடர்ப்படினும் தேவரீரிடத்து நினை வினைப் பெற்றேம் ஆதலும், நின்திருவடிக்கண் உள்கும் முறைப்படி நினைக்கப் பெறுதலாகிய அவ்வளவினதாம் ஒன்றினையும் நீயருளுதல் வேண்டும்.

க—உ. அருளு வாழி.. அருளு வாழி

(இ - ள்.) பின்னற் புரியினை யொத்த திருச்சடைமுடி கொண் டருளிய கூத்தப்பெருமானே! திருவருள் புரிவாயாக, பல்லாண்டு நின்திருவடி வாழ்வதாக, வாழ்வதாக, வாழ்வதாக.

(வி - ம்.) முதல்வன் எல்லாவுயிர்களுடனும், எல்லா உடல் களுடனும், எல்லாப் பொருள்களுடனும், எல்லா உலகங்களுடனும் நீக்கமற நிறைந்து நிற்கும் ஒப்பில் ஒருவன். அங்ஙன மிருந்தும் எல்லாரானும் எளிமையாகவும் இனிமையாகவும் காணப்படும் தன்மை யனும் அல்லன். அங்ஙனங் காணப்படாமைபற்றி இல்லாத கற்பனைப் பொருளாவானும் அல்லன்.

செவ்வியுடையார் மட்டும் அவனருளால் அவனை உணர்வின் நேர் பெறக் காணும் ஒங்கிய தன்மைய ராவர். கதிரவன் எங்கணும் நீக்கமற நிறைந்து நிற்கின்றனன். எனினும் கட்புல னில்லாக் குருடர்க்குத் தோன்றுந் தன்மையன் அல்லன். கண்ணுள்ளார்க்குக் காணுந் தன்மையன். அவர்களும் அக்கதிரவன்றன் கதிர்த் துணையானே கதிரவனைக் காண்பர். கட்புலனினுள்ள குற்றம் நீங்கிச் செம்மை யுற்றவரும் பின் கதிரவனைக் காண்பர். இவ்வுண்மை வருமாறு :

"அருக்கன்நேர் நிற்பினும் அல்லிருளே காணார்க்
கிருட்கண்ணே பாசத்தார்க் கீசன்—அருட்கண்ணற்
பாசத்தை நீக்கும் பகலலர்த்தும் தாமரைபோல்
நேசத்திற் றன்னுணர்ந்தார் நேர்."

—சிவஞானபோதம், கக, உ—க.

"விள்ளத்தா னென்றுமாட்டேன் விருப்பெனும் வேட்கையாலே
வள்ளத்தேன் போலநுன்னை வாய்மடுத் துண்டிடாமே
உள்ளத்தே நிற்றியேனு முயிர்ப்புளே வருதியேனும்
கள்ளத்தே நிற்றியம்மா எங்ஙனங் காணுமாறே."

—ச, எசு—அ.

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க" என்பது போல் முதல்வனை வாழ்த்துவதும் வாழ்த்தும் மெய்யடியார்கள் தம் முன் னிட்ட வையம் வாழ்தற் பொருட்டேயாம். (௩உ)

வெண்பா

வானோர் பணிய மணியா சனத்திருக்கும்
ஆனந்த செல்வத் தரசன்றே—மானகம்

பந்திப்பார் நின்ருடும் பைம்பொன்னின் அம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு.

(இ - ள்.) பெரும் பாம்பாகிய ஆதிசேடனை அரைக்குக் கச்சாகக் கட்டியருளுகிற கூத்தப்பெருமான் அருட்கூத் தியற்றியருளும் செம்பொன் திகழ்கின்ற தில்லைத்திருச்சிற்றம்பலத்தை வணங்கித் தொழுவோர் ஒரு சிறிதும் விரும்பாத வாழ்க்கையாவது, தேவர் வணங்க மணிகளழுத்திய அரியணையின்மேல் வீற்றிருக்கும் குறைபாடில்லாத செல்வத்தினைத் தரும் வானுலக அரச இயல்பாம்.

(வி - ம்.) ஆருத - குறைபாடில்லாத. பந்திப்பார் - கட்டிக் கொள்வார். ஆதிசேடன் : தூமாயையின் குறிப்பாகும். (௩௩)

கட்டளைக் கலித்துறை

வாழ்வா கவுந்தங்கள் வைப்பா கவும்மறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை யம்பலத் தாயுன்னை யன்றியொன்றைத்
தாழ்வார் அறியாச் சடிலநஞ் சுண்டிலை யாகிலன்றே
மாள்வார் சிலரையன் றேதெய்வ மாக வணங்குவதே.

(இ - ள்.) பண்டை நான்மறை முதலிய திருமுறை வல்ல பழந்தமிழ் நல்லார் தங்கள் நிலைபெற்ற வாழ்வாகவும், பேரின்பப் பெருவைப்பாகவும் வணங்கும்படி ஆட்கொண்டருள்பவனே, தில்லைத் திருச்சிற்றம்பலத்தினைச் சிறந்த இடமாகக் கொண்டருள்பவனே, தேவரீரை யல்லாமல், முழுமுதற்றன்மை இல்லாத வேருெரு பொருளை, அறியாமையால் வணங்குவோர், வானவரும் தானவரும் கடல் கடைந்த அக்காலத்து, அக்கடலிற் பிறந்த கண்டாரைக் கொல்லும் நஞ்சினை (திருமாலுள்ளிட்ட வானவர் வந்து முறையிட அவர்களைக் காக்கும்பொருட்டு) தேவரீர் உண்டருளா திருந்திருந்தால், அந்நொடிப் பொழுதிற்றுனே உயிர் நீங்கி மாண்டொழிந்திருப்பர்; அத்தகைய சிறுதேவர் சிலரை, முழுமுதல் தெய்வத்தோடு ஒப்பாக வணங்குவதைத் தாங்கள் அறிந்திலர்.

(வி - ம்.) மறையோர்-தில்லைவாழந்தணர். தாழ்வார்-வணங்குவார். செம்பொனம்பலவன் மெய்யடியார்கட்கு எல்லாமாய் அமைந்து திகழ்கின்றமை வருமாறு :

"அப்ப னேயெனக் கமுத னேஆ
னந்த னேஅகம் நெகஅள் ளூறு தேன்
ஒப்ப னேஉனக் குரிய அன்பரில்
உரிய னாயுனைப் பருக நின்றதோர்
தப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாளரெய்ப்பினில்
வைப்ப னேஎனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே."

—அ. திருச்சதகம், ௬அ.

" வெற்புறுத்த திருவடியாற் கூற்றட் டானை
  விளக்கினொளி மின்னினொளி முத்தின் சோதி
ஒப்புறுத்த திருவுருவத் தொருவன் தன்னை
  ஓதாதே வேத முணர்ந்தான் தன்னை
அப்புறத்த கடல்நஞ்ச முண்டான் தன்னை
  அமுதுண்டார் உலந்தாலு முலவா தானை
அப்புறத்த நீரகத்தே யழலா னானை
  ஆரூரிற் கண்டடியேன் அயர்த்த வாறே."

—சு. உசு - உ

" துண்ணென் றுடியொடு துஞ்சூ ரெறிதரு
கண்ணி லெயின ரிடுகடன் உண்குவாய்
விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்."

—சிலப்பதிகாரம் – வேட்டுவவரி. (௩௪)

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

[தோழி தலைவியது வேறுபாடுகண்டு வெறியாடுதலைக்கொண்ட தாயர்க்கு அதனை விலக்கிக் கூறியது.]

வணங்குமிடை யீர்வறிது வல்லியிடை யாள்மேல்
  மாரசர மாரிபொழி யப்பெறு மனத்தோ
டுணங்கியிவள் தானுமெலி யப்பெறும் இடர்க்கே
  ஊதையெரி தூவியுல வப்பெறு மடுத்தே
பிணங்கியர வோடுசடை யாடநட மாடும்
  பித்தரென வும்இதயம் இத்தனையும் ஓரீர்
அணங்குவெறி யாடுமறி யாடுமது வீரு
  மையலையும் அல்லலையும் அல்லதறி யீரே.

(இ - ள்.) துவளுகின்ற நுண்ணிய இடையினை யுடையீர், பூங் கொடியினை யொத்த இடையினையுடைய நம் பெண்ணின்மேல் காமனின் அம்புமழை பொழியாநிற்கும்; அதனால் அந்நிலைமையை அடைந்த இவளும் புறப்பொறிகளான் மட்டுமன்றி அகக்கலன்களுள் முன்னிற்பதான மனத்தால் வருந்தித் துன்புறுகின்றாள். இவ்விரு வகை இடரினூடே வாடையும் தீயை யொத்த நிலவைகளைத் தூவித் தடுப்பாரெவரும் இன்மையின் தான் நினைத்தபடி உலாவாநிற்கும்; நெருங்கிப் பிணங்கிப் பாம்புடன் திருச்சடையும் ஆடாநிற்கத் திருக் கூத்தியற்றியருளும் பித்தர்செய் செய்கையென உம்முடைய மனத் தின் ஆராய்ந் தறிந்திலீர்; தெய்வத்தன்மை பொருந்திய வேலனது வெறியாடுகின்ற மயக்கத்தையும், ஆட்டு மறியினையும், அதனைக்

கொல்லுகின்ற தன்பத்தினையும் அல்லாமல், வேறொன்றையும் மருந்தாக அறியீர்கள்; நீங்கள் உண்மையறியாமற் செய்யும் இச் செயல்கள் முழுவதும் பயனற்றனவாம். (ஆதலால் இப்பொருந்தாச் செயலை விலக்கிப் பொருந்துஞ் செயலைத் திருந்தச் செய்க.)

(வி - ம்.) வணங்கும் - துவளும். வல்லி யிடையாள் என்பது வல்லிடையாள் என நின்றது. சரம் - அம்பு. உணங்கி - வருந்தி. ஊதை - வாடை. பிணங்கி - மாறுபட்டு.

தலைமகளது வேறுபாடு கண்டு வருந்திய செவிலித் தாய் வேலனை வினவி வெறியாட்டெடுப்பள். அத்தகைய வெறியாட்டுத் துறையினமைந்தது இச்செய்யுள்.

இவ்வுண்மை வருமாறுணர்க :

"கடவுட் கற்பனை ....
எ. நின்னணங் கன்மை யறிந்து மண்ணூந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே."

—நற்றிணை - கூச.

"முருகயர்ந்து வந்த முதுவாய் வேல
சினவ லோம்புமதி வினவுவ துடையேன்
பல்வே றுருவிற் சில்லவிழ் மடையொடு
சிறுமறி கொன்றிவ ணறுநுத னீவி
வணங்கினை கொடுத்தி யாயி னணங்கிய
விண்டோய் மாமலைச் சிலம்பன்
ஒண்டா ரகலமு முண்ணுமோ பலியே."

—குறுந்தொகை, கஙஉ.

"விதியுடை யாருண்க வேரி விலக்கலம் அம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினிற் பாய்புனல் யாமொழுகக்
கதியுடை யான்கதிர்த் தோணிற்க வேறு கருதுநின்னின்
மதியுடை யார்தெய்வ மேயில்லை கொல்லினி வையகத்தே."

—அ. திருச்சிற்றம்பலக் கோவையார், உகஉ. (கூ)

நேரிசை யாசிரியப்பா

ஈரவே ரித்தார் வழங்கு சடிலத்துக்
குதிகொள் கங்கை மதியின்மீ தசைய
வண்டியங்கு வரைப்பின் எண்தோள் சேல்வ
ஒருபால் தோடும் ஒருபால் குழையும்

இருபாற் பட்ட மேனி எந்தை
ஒல்லோலிப் பழனத் தில்லை மூதூர்
ஆடகப் போதுவில் நாடகம் நவிற்றும்
இமையா நாட்டத் தோருபெருங் கடவுள்
வானவர் வணங்குந் தாதை யானே
மதுமழை போழியும் புதுமங் தாரத்துத்
தேனியங் கோருசிறை கானகத் தியற்றிய
தெய்வ மண்டபத் தைவகை யமளிச்
சிங்கஞ் சுமப்ப வேறி மங்கையர்
இமையா நாட்டத் தமையா நோக்கத்
தம்மார்பு பருகச் சேம்மாந் திருக்கும்
ஆணச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக கதுமெனத்
தெறுசோ லாளர் உறுசினந் திருகி
எற்றியும் ஈர்த்துங் குற்றங் கோளீஇ
ஈர்ந்தும் போழ்ந்தும் எற்றுபு குடைந்தும்
வார்ந்துங் குறைத்தும் மதநாய்க் கீந்துஞ்
செக்குரற் பெய்துந் தீநீர் வாக்கியும்
புழுக்குடை யழுவத் தழுக்கியல் சேற்றுப்
பன்னெடுங் காலம் அழுத்தி யின்னு
வரையில் தண்டத்து மாறுக் கடுந்துயர்
நிரயஞ் சேரினுஞ் சேர்க வுரையிடை
ஏனோ ரென்னை யானுது விரும்பி
நல்லன் எனினும் என்க அவரே
அல்லன் எனினும் என்க நில்லாத்
திருவோடு திளைத்துப் பெருவளஞ் சிதையா
தின்பத் தழுந்தினும் அழுந்துக அல்லாத்
துன்பந் துதையினுந் துதைக முன்பில்
இளமையோடு பழகிக் கழிமூப்புக் குறுகா
தென்றும் இருக்கினும் இருக்க அன்றி
இன்றே இறக்கினும் இறக்க ஒன்றினும்
வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே
ஆண்டகைக் குரிசில்நின் அடியரோடுங் குழுமித்
தெய்வக் கூத்துநின் செய்ய பாதமும்

அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த லானே.

க—அ. ஈரவே...கடவுள்

(இ - ள்.) குளிர்ச்சி பொருந்திய மலர் மாலை, நறுமணத்தைக் கொடுத்துக்கொண் டிருக்கின்ற திருமுடியாகிய திருச்சடையின்கண், துள்ளி யுவக்கின்ற வான்புனலைப் பிறைத்திங்களை நோக்கி மேலாக முடித்தருளிய எண்பெருந் திருத்தோள்களை யுடையானே, ஒப்பில்லாத இடது பக்கத்தில் திருத்தோடும், வலது பக்கத்தில் அழகிய குழையும் இவ்வாறாக இரு பகுதிப்பட்ட திருமேனி கொண்டருளிய எளியேனின் திருத் தந்தையானவன் வண்டுகளின் மிக்கொலி ஒலிக்கின்ற எல்லையினையுடைய கழனிகள் சூழ்ந்த திருத் தில்லையாகிய பழைய திருப்பதியின்கண் பொன்னம்பலத்தின்பால் இன்பத் திருக்கூத்தியற்றி அருளும், இமையாத திருக்கண்களையுடைய ஒப்பற்ற பெரும் பெயர்க் கடவுளானவன்.

(வி - ம்.) வேரி - மணம். தார் - மாலை; மார்புமாலை; அடையாள மாலை. சடிலம்-சடைமுடி. வரைப்பு-எல்லை. ஆடகம் - பொன். பொது - அம்பலம்.

பெருங் கடவுள் என்பது பெரும் பெயர்க் கடவுள் என்பதாம். பெரும் பெயர்க் கடவுள் எனினும், திருவைந்தெழுத்தின் செம்பொருளெனினும் ஒன்றே. இவ்வுண்மை வருமாறு:

"கரும்பினு மினியான் றன்னைக் காய்கதிர்ச் சோதியானை
இருங்கட லமுதந்தன்னை யிறப்பொடு பிறப்பிலானைப்
பெரும்பொருட் கிளவியானைப் பெருந்தவ முனிவரேத்தும்
அரும்பொனை நினைந்த நெஞ்ச மழகிதா நினைந்தவாறே.
—ௗ. எச—ரு.

கூ—கஎ. வானவர்—எய்துக

(இ - ள்.) தாங்கள் விரும்பிய பொருள்களைப் பெறுதற்பொருட்டுத் தேவர்கள் வணக்கஞ் செய்கின்ற தந்தை யானவனே! புதிய மந்தார மரத்தின் நின்று சொரிகின்ற தேன்மாரியின் தேனானது பாய்கின்ற காட்டில் அங்கு ஒரு பகுதிக்கண் வனப்புறப் பண்ணப்பட்ட, தெய்வத் தன்மை பொருந்திய சிறந்த மண்டபத்தில், ஐவகைப் படுக்கையில், விலங்கரசன் என்று சொல்லப்படும் அரிமா இருக்கை தாங்க, அக்கிடக் கையிலேறி யிருந்து, வானகத்து அரம்பை மாதர்களுடைய இமையாத கண்களுக்கு நிரம்பாத அழகினையுடைய அழகிய கொங்கைகளின் நலத்தை உண்டு, பெருமிதங்கொண்டு, களித்திருக்கின்ற குறையாத செல்வத்தினைப் பெற்ற தேவர்களின் துறக்கவுலகத்து இன்பமே வந்து எய்தினும் எய்துக.

(வி - ம்.) கானகம் - காடு. அம் - அழகிய. மார்பு - கொங்கை. நோக்கம் - அழகு. செம்மாந்து - களித்து.

கஎ—உசு. கதுமென...சேர்க

(இ - ள்.) இது வல்லாமல் முன்னறியுங் குறிப்புச் சிறிது மின்றித் திடீரென வெறுக்கத்தக்க. அச்சம் செறிந்த கடுஞ் சொற்களையே கூறும் எமனுடைய ஏவலர்கள், மிக்க சினம் கொதித்து மேலெழ எறிந்து உதைத்தும், இழுத்துத் தள்ளியும் பலவகையான குற்றங்களைச் சுமத்தியும், அரிவாளா லரிந்தும், வாளாற் பிளந்தும், வீசி, உடலைத் தொளைத்தும், கருவிகளாற் கிறியும், உறுப்புக்களை யறுத்தும் வெறிகொண்ட நாய்களுக்கு, இரையாகத் தந்தும், செக்காகிய உரலிடம் இட்டு நசுக்கியும், கொதிக்கும் நீரை மேலே யூற்றி யழுத்தியும் புழுக்கள் குடைந்து செல்லும் நரகக் குழியில், பலவாகிய மலங்கள் தங்கிய, சேற்றையொத்த அள்ளலில், நீண்ட பல காலங்கள், அழுந்தச் செய்து, துன்பந்தரும், அளவு படாத தண்டனைகளையுடைய மாறுதலில்லாத, மிகுந்த துன்பம் நிறைந்த, நரகத்திடுக்கண் வந்து பொருந்தினும், பொருந்துக.

(வி – ம்.) கதுமென – விரைவாக; திடீரென. தெறுதல் – கடிதல். திருகி – மேலெழுந்து. நிரயம் – நரகம்.

நரகத் துன்பத்திலும் துறக்க இன்பத்திலும் நம்பிக்கை யில்லாதார், ஒன்று நாடுதல் வேண்டும்: முன்னைச் சான்றோர் இல்லது கூறி மக்களை வஞ்சித்துப் பெற்றுக்கொண்ட பெரும்பொருள் ஏதும் உண்டா என்பதே. அச்சுறுத்தி நல்லவழிப் படுத்துதற் பொருட்டு அங்ஙனம் இல்லது புனைந்து இயற்றினர் என எண்ணுவராயின் அந்நிலையில் நாமும் அதனை நம்பி மேற்கொண்டொழுகுதலே நல்லறமாகும். எவ்வகையான் நோக்கினும் நம்பிக்கை நற்பயன் தருமென்பது துணிபு.

இவ்வுண்மை வருமாறு :

"பேராது காமத்திற் சென்றுற்போ லன்றியே பிரியாதுள்கி
சீரார்ந்த அன்பராய்ச் சென்று முன்னடி வீழுந்திருவினுரை
ஓராது தருமனூர் தமர்செக்கி லிடும்போது தடுத்தாட் கொள்வான்
பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே."

—எ. கo—உ.

"சாற்றி னேன்சடை நீண்முடிச் சங்கரன்
சீற்றங் காமன்கண் வைத்தவன் சேவடி
ஆற்ற வுங்களிப்பட்ட மனத்தராய்ப்
போற்றி யென்றுரைப் பார்புடை போகலே."

—டு. கக—ச.

"அரசனுஞ் செய்வதீசன் அருள்வழி யரும்பா வங்கள்
தரையுளோர் செய்யில்தீய தண்டலின் வைத்துத் தண்டத்
துரைசெய்து தீர்ப்பன் பின்பு சொல்வழி நடப்பர் அயோர்
நிரயமுஞ் சேரார் அந்த நிரயமுன் நீர்மை யீதால்."

—சிவஞான சித்தியார், உ. உ—உக

"நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி."
—அ. போற்றி, உகரு—௪.

"உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு."
—திருக்குறள், உருரு.

உசு—௩௫. உரையிட...இறக்க

(இ-ள்.) என் சொற்களால் அயலவர், அடியேனைத் தீய னென்று வெறுத் தொதுக்காமல், எளியேனிடம் அன்புள்ளவராய் நல்லவ னென்று பாராட்டிக் கூறினும் கூறுக. அவ்வாறு நல்லவ னென்று கூறிய அவர்களே இவன் நல்லவன் அல்லன் என்று கூறி னும் கூறுக. அதனால் பெறப்படுவதென்? ஓரிடத்திலும் நிலைபெறாது சுற்றித் திரியும் செல்வத்துடன் இன்பந் துய்த்து, மிக்க வளப்பங்கள் கெடாமல் இம்மை இன்பங்களின் மூழ்கினும் மூழ்கக் கடவன்; இவை யொழிந்து துன்பத்தில் நுகரினும் நுகர்வேனாக: வலிமையான் இளமைப் பருவத்துடன் பயின்று, மிகுந்த கிழத்தன்மை நெருங்காமல் எக்காலத்தும் இருந்தாலும் இருப்பேனாக; அஃதன்றி இப்பொழுதே இறந்தாலும் இறப்பேனாக.

(வி-ம்.) திரு-செல்வம். அழுந்தல்-துய்த்தல், அனுபவித்தல்.

௩௫—௪௦. ஒன்றினும்...கிடைத்தலானே

(இ-ள்.) ஒரு பொருட்கண்ணும் விரும்புதல் கொண்டவனு மல்லன்; வெறுப்புடையவனுமல்லன். ஆண் தன்மையுட னியைந்த பெருமையிற் சிறந்தோனே தேவரீரது திருவடியார்களுடன் திரு வருளால் கூடித் தெய்வத்தன்மை பொருந்திய நின் திருக்கூத் தினையும், செந்தாமரை யிதழை யொத்த சிவந்த நின் திருவடி களையும் நின் திருவருளால் பெறவும், அதனாலுண்டாகிய பேரின்பத் தினை நுகரவும் அடியேன் எய்தியுள்ளேன்; மற்றையோர்க்குக் கிடைத் தற்கரிய பெருஞ் செல்வமாகிய பெரும் பேறு கிடைத்தலான்.

(வி-ம்.) திருவருளால் கிடைத்தற்கரிய திருவடிப்பேறு பெற்றுள்ள செம்பொருட்டுணிவினராகிய சித்தாந்தச் செல்வராம் நல்லார், திருவடிப்பற்று ஒன்றே கொண்டுள்ளா ராதலால் அவர் கட்கு உலகுடல்களால் நேரும் இன்பத் துன்பங்கள் சிறிதும் தோன்றா என்க. இவ்வுண்மை வருமாறு:

"கண்ட போதே விரைந்திழிந்து கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகனார் திருமுதுகில் புடைத்துக் கொடிதாம் மொழிகூறத்
தொண்டு புரியும் சிறியபெருந் தோன்ற லார்தம் பெருமான்மேல்
மண்டு காதல் அருச்சனையின் வைத்தார் மற்றொன் றறிந்திலரால்"
—கஉ. சண்டேசுரர், ௪௯. (௩௬)

வெண்பா

[தலைவி தலைவன்பாலுள்ள பொருள் ஒன்றனைக் கண்டு தனது விருப்பத்தைக் கூறியது.]

ஆனேறே போந்தால் அழிவுண்டே அன்புடைய
நானேதான் வாழ்ந்திடினும் நன்றன்றே—வானேங்கு
வாமாண் பொழிற்றில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை இத்தெருவே கொண்டு.

(இ - ள்.) விடைகளிற் சிறந்த ஆனேறே! வளர்ந்தோங்கி வானை அளாவி நிற்கின்ற சோலைகளாற் சூழப்பட்ட திருத் தில்லையின் கண் திகழ்கின்ற திருச்சிற்றம்பலத்தினை விளக்கம் பெறச் செய்தருளிய விழுமிய முழுமுதற் றலைவனாகிய திருக்கூத்தப் பெருமானை, உன்னுடைய திருமுதுகின்மேல் அமர்த்திக்கொண்டு அடியேனிருக்கும் இத்தெருவினூடே எழுந்தருளினால் உனக்குக் கெடுதல் ஏதேனும் நேருமோ? உன்னிடத்திலும், உன்பா லமர்ந்துள்ள திருக்கூத்தப் பெருமானிடத்திலும் மிக்க காதல் பூண்டொழுகும் அடியேன் திருவருளால் வாழ்ந்தாலும் நல்லது தானே?

(வி - ம்.) ஆன் - பசு. ஏறு - விடை. வாமம் - அழகு. மன்று - அம்பலம். கோமான் - தலைவன்.

காதல் கைம்மிக்க தலைவி தலைவனைக் காணவேண்டும் என்னும் பேரவாவால் அத்தலைவனைச் சுமந்துவரும் ஊர்தியினை வேண்டிக் கொள்ளும் துறைபோன்றதிது.

இவ்வுண்மை வருமாறு :

"துடியடித் தோற்செவித் தூங்குகைந் நால்வாய்
பிடியே யானின்னை யிரப்பல்—கடிகமழ்தார்ச்
சேலேக வண்ணனொடு சேரி புகுதலுமெஞ்
சாலேகஞ் சார நட."

—முத்தொள்ளாயிரம், ௯௦.

ஏறே என்னும் ஏகாரம் இரங்கற் பொருட்டு. நன்றன்றே என்னும் ஏகாரம் வினாப் பொருட்டு. நானேதான் தான்: கட்டுரைச் சுவைபட நின்ற உரையசை யிடைச்சொல். வாழ்ந்திடினும் உம்மை சிறப்பு. (௩எ)

கட்டளைக் கலித்துறை

கொண்டல்வண் ணத்தவன் நான்முகன் இந்திரன் கோமகுடத்
தண்டர்மிண் டித்தொழும் அம்பலக் கூத்தனுக் கன்புசெய்யா
மிண்டர்மிண் டித்திரி வாரெனக் கென்னினி நானவன்றன்
தொண்டர்தொண் டர்க்குத் தொழும்பாய்த் திரியத் தொடங்கினனே.

(இ - ள்.) மேக நிறத்தை யொத்த திருமாலும், நான்கு முகங்களையுடைய அயனும், வானவர் கோஞகிய இந்திரனும், ஏனைத் தேவர்களும் தங்கள் வாழ்வின் பொருட்டு ஒருவரோ டொருவர் நெருங்கி வந்து தொழும்படியான திருத்தில்லைச் சிற்றம்பலக் கூத்தப் பெருமாஞர்க்கு அன்பு செய்யாது, செருக்குற்றுத் திரியும் அரும் பாவத்தர் தொடர்பு ஒரு சிறிதும் இல்லாத எளியேனுக்கு அதனல் வரக்கடவது யாதாம்? அடியேன் அவனுடைய மெய்யடியார்களுடைய அடியவர்களுக்கு நீங்கா அடிமை செய்துகொண்டு வரும் இயல்புடையவஞயிருக்கத் தொடங்கினேன்.

(வி - ம்.) கொண்டல் - மேகம். இந்திரன் - மிகுந்த செல்வமுள்ளவன். அண்டர் - தேவர். மிண்டர் - செருக்குக் கொண்டவர்; மதமிக்கவர், தொழும்பு - அடிமைத் தொண்டு.

'தொழும்பாய்த் திரியத் தொடங்கினேன்' என்பதனல் அடியவர் தொண்டே வாழ்நாள் முற்றும் விடாது செய்து வரும் பெரு முயற்சியுடையஞயினன் என்பது பெறப்படும்.

அறிதற்கரிய பெரும் பொருள் சிவன். அடியவர்க் கெளிதாக வந்து ஆட்கொண்டருள்பவனும் அவனே. இவ்வுண்மை வருமாறு:

"வான நாடரு மறியொ ணுதநீ மறையி லீறுமுன் தொட ரொணுத நீ
ஏனை நாடரும் தெரியொ ணுதநீ யென்னை யின்னதா ஆண்டு [கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா உருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா நைய வையகத் துடைய விச்சையே."

—அ. திருச்சதகம், கூ.

ஊனை நாடாகம் உலகியல் வாழ்க்கை. இதனை விளக்குந் திருமறை சிவயநம. ஞான நாடகம் வீட்டியல் வாழ்க்கை. இதனை விளக்குந் திருமறை சிவயசிவ. (௩அ)

இரட்டைக்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தொடர நரைத்தங்க முன்புள வாயின
தொழில்கண் மறுத்தொன்று மொன்றி யிடாதொரு
சுளிவு தலைக்கொண்டு புன்புலை வாரிகள்
துளையொழு கக்கண்டு சிந்தனை யோய்வொடு
நடைகெட முற்கொண்ட பெண்டிர் பொறுவொரு
நடலை நமக்கென்று வந்தன பேசிட
நலியிரு மற்கஞ்சி யுண்டி வெறுவிழு
நரக வுடற்கன்பு கொண்டலை வேன்இனி
மிடலொடி யப்பண் டிலங்கையர் கோனெரு
விரலின் அமுக்குண்டு பண்பல பாடிய

விரகு சேவிக்கொண்டு முன்புள தாகிய
வெகுளி தவிர்த்தன்று பொன்றி யிடாவகை
திடமருள் வைக்குஞ் செழுஞ்சுடர் ஊறிய
தெளியமு தத்தின் கொழுஞ்சுவை நீடிய
திலைநக ரில்செம்பொன் அம்பலம் மேவிய
சிவனை நினைக்குந் தவஞ்சது ராவதே.

க—உ. தொடர......கொண்டலை வேன்இனி.

(இ - ள்.) வலிமையுள்ளவையான உடல் நரைகள் தோன்ற, பொறிகளுக்குரிய செயல்கள் செய்ய முடியாதபடி மறுக்கப்பட்டுச் சிறிதும் ஒற்றுமையில்லாமல், கடுமையாகிய ஒருசினம், தலைக்கேறி நிற்க, சிறுமையுடைத்தாகிய முடை நாற்றம் பொருந்திய ஊன் புனல்களும், குருதி முதலியனவும் உடம்பகத்துள்ள தொளை கள்தோறும் ஒழுகா நிற்க, அவற்றைப் பார்த்துச் சோர்ந்துபோயுள்ள மனத்துடன், இயல்பாக நடக்கும் நடையுந் தளர்ந்து, தலைமையாகவும் வாழ்க்கைத் துணையாகவும் வந்த மனைவி, தாங்க முடியாத ஒரு வஞ்சனையாகிய செயலை நம் பொருட்டாக வந்தனவாகக்கொண்டு பேசா நிற்க, வருத்துகின்ற இருமலுக்கு அஞ்சி, உணவை வெறுத்து நரகத்திற்கு இடமான அழிந்து போகின்ற உடம்பிற்கு விருப்பம் வைத்து அலைந்து திரிதல் இனிமேல் எதன்பொருட்டு? (வேண்டுவ தில்லை யென்பதாம்.)

ந—ச. மிடலொடி பண்டிலங்கையர்......சதுராவுதே

(இ - ள்.) முன்னொரு காலத்தில் இலங்கையர் வேந்தனாகிய இராவணனது வலிமை கெட ஒப்பில்லாத திருவடி விரலொன்றன் நுனியினால் ஊன்றுதலைப் பெற்றுப் பல இசைகளை யாழ்கொண்டு பாடிய களிப்பினைத் திருச்செவி யேற்று, அவன் காரணமாக முன்னே கொண்டுள்ள வெகுளி நீங்கி, அக்காலத்தில் அவன் உயிர் நீங்காதபடி உறுதியாகிய தண்ணளியினைப் புரிந்தருள்கின்ற, பெருவளஞ் செறிந்த சுடரை யொத்தவன், சுரப்பைக் கொண்ட தெளிந்த அமிழ்தத்தினை யுடைய வளப்பந்தங்கிய இனிமைத் திருவுருக் கொண்டவன் ஆகிய, நனிமிக வுயர்ந்த திருத்தில்லை நகரில், திருச்சிற்றம்பலத்தின்கண்ணே எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானை உள்ளத் துள்குதலாகிய தியானத்தைப் புரியும் நற்றவமானது திருவருளால் அடியேற்குக் கிடைத்துள்ள வியத்தகு திறலினால்.

(வி - ம்.) அங்கம் – உடம்பு. முன்பு - வலிமை. சுளிவு - சினம். வாரி - புனல்; நீர். நடலை - வஞ்சனை.

நரை திரை மூப்பு முதலியன ஏற்பட்டு உடல் மெலிந்து நலிவுற்று ஊனும் மறுத்து மனைவி முதலிய உற்றாரும் வெறுத்துப் பேச்சற்றுப் போயிற்று நம்பிறப்பென்று ஏங்கவரும் காலம் எவர்க்கும் உண்டாம். ஆனால் இறைவனை முறையுறத் தொழுவார்க்கு இவ்வின்னல்கள் நேரா? திருவடியின்பமே சேரும்.

இவ்வுண்மை வருமாறு :

"உரைத ளர்ந்துட லார்நடுங் காமுனம்
நரைவி டையுடை யானிடம் நல்லமே
பரவு மின்பணி மின்பணி வாரொடே
விரவு மின்விர வாரை விடுமினே."

—இ. சங—ரு

"மருவுக மாசற்ருர் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு."

—திருக்குறள், அ00.

மாசற்ருர்—கடவுளைத் தொழுங்காதல் நல்லார்.

"நரைப்பு மூப்பொடு பிணிவரும் இன்னே
நன்றியில்வினை யேதுணிந் தெய்த்தேன்
அரைத்த மஞ்சள தாவதை யறிந்தேன்
அஞ்சி னேன்நம ஞரவர் தம்மை
உரைப்பன் நானுன சேவடி சேர
உணரும் வாழ்க்கையை யொன்றறி யாத
இரைப்ப னேனுக்கோ ருய்வகை யருளா
யிடைம ருதுறை யெந்தை பிரானே."

—எ. சுO—உ. (நக)

நேரிசை யாசிரியப்பா

சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சியோடு பணிந்த இயக்கர் கோனுக்கு
மாநிதி இரண்டும் ஆனுப் பெருவளத்
தளகை யோன்றுந் தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி
தாள்நிழல் அடைந்த மாணிக் காக
நாள்முறை பிறழாது கோள்முறை வலித்துப்
பதைத்துவருங் கூற்றைப் படிமிசைத் தெறிக்க
உதைத்துயிர் அளித்த உதவி போற்றி
குலைகுலை குலைந்த நிலையாத் தேவர்
படுபேர் அவலம் இடையின்றி விலக்கிக்
கடல்விடம் அருந்தின கருணை போற்றி
தவிராச் சீற்றத் தவுணர் மூவெயில்
ஒல்லனல் கொளுவி ஒருநொடி பொடிபட

வில்லொன்று வளைத்த வீரம் போற்றி
பூமென் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி
தெய்வ யாளி கைமுயன்று கிழித்தெனக்
கரியோன் றுரித்த பெருவிறல் போற்றி
பண்டு பெரும்போர்ப் பார்த்தனுக் காகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி
விரற்பதம் ஒன்றில் வெள்ளிமலை யெடுத்த
அரக்கனை நெரித்த ஆண்மை போற்றி
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்
சலந்தரற் றடிந்த தண்டம் போற்றி
தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகற் றடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி
வெண்ணெ யுண்ண எண்ணுபு வந்து
நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த
தாவுபுல் எலிக்கு மூவுல காள
நொய்தினில் அளித்த கைவளம் போற்றி
பொங்குளை யழல்வாய்ப் புகைவிழி யொருதனிச்
சிங்கங் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற்று எறுழ்வலி மணியுகு பகுவாய்
உரகம் பூண்ட வொப்பனை போற்றி
கங்கையுங் கடுக்கையுங் கலந்துழி ஒருபால்
திங்கள் சூடிய செஞ்சடை போற்றி
கடவுள் இருவர் அடியும் முடியும்
காண்டல் வேண்டக் கனற்பிழம் பாகி
நீண்டு நின்ற நீளம் போற்றி
ஆலம் பில்குநின் சூலம் போற்றி
கூறுதற் கரியநின் னேறு போற்றி
ஏக வெற்பன் மகிழ மகட்கிடப்
பாகங் கொடுத்த பண்பு போற்றி
தில்லை மாநகர் போற்றி தில்லையுள்
செம்பொன் அம்பலம் போற்றி அம்பலத்

௫௦ தாடு நாடகம் போற்றி யென்றுங்
கேன்றும் போற்றினும் என்றனக் கிறைவ
ஆற்றல் இல்லை யாயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ அடிக்கே.

க—௧௦, சதுர்முகன்...உதவி போற்றி

(இ - ள்) நான்கு முகங்களையுடைய படைப்போனாகிய அயனைக் கொப்பூழினின்றும் பெற்றெடுத்த தந்தையாகிய திருமாலுக்கு ஒளி திகழ்கின்ற தெய்வத்தன்மை பொருந்திய சக்கரப் படையினை அவன் செய்த தவத்தினுக் கிரங்கிக் கொடுத்தருளிய பெரிய கருணையுருவான வனே உன் திருவடிக்குப் **போற்றி**: பத்தித் தாளாண்மையுடன் வழி பட்டு வந்த இயக்கர் தலைவனாகிய குபேரனுக்குச் சங்கநிதி பதுமநிதி யென்று சொல்லப்படும் பெருஞ் செல்வம் இரண்டையும், குறையாத மிக்க வளத்தினையுடைய அளகாபுரி யென்னும் பெருநக ரொன்றை யும், குறைவில்லாமல் நிலைபெற்ற செல்வத்தினையும் அருள்செய்த செல் லாத செல்வமாகியவனே **போற்றி;** நின்திருவடி நிழலை யடைந்த மாணிக்காக வாழ்நாளின் முறை தவறாமல் கொள்ளும் முறையினை எண்ணி உறுதி செய்து, பதை பதைத்து உயிர் கொள்ளவரும் நமனை, நிலத்தின்மேல், துள்ளி விழும்படி காலா லுதைத்தருளி, அவனுக்கு உயிர் கொடுத்தருளிய உதவிப் பெருமானே **போற்றி.**

(வி - ம்.) சதுர் - நான்கு. தாதை - தந்தை. கதிர் - ஒளி. ஆழி - சக்கரப்படை. முயற்சி - தாளாண்மை. மாநிதி - பெருஞ் செல்வம். இது சங்கு போலவும், தாமரை போலவும் வடிவமையச் செய்து வைக்கப்படும் செல்வ அடையாளம். சங்கம் என்பதும், தாமரை என்பதும் கோடி என்னும் பேரெண்ணினையுடைய செல்வம் போன்று அளவிடப்படாத பேரெண்ணினையுடைய செல்வங்களாகும். இவற்றின் அடையாளமாகக் கொள்வதே சங்குந் தாமரையும்.

இவ்வுண்மை வருமாறு :

"செந்நெ லார்வயல் கட்டசெந் தாமரை
முன்னர் நந்துமிழ் முத்தம் சொரிந்திடத்
துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்
மன்னு பங்கய மாநிதி[1] போன்றுளார்.'

—கஉ. அரிவாட்டாயர், உ.

திருமாலின் வழிபாட்டிற் கிரங்கிச் சிவபெருமான் ஆழிப்படை யீந்தருளிய உண்மை வருமாறு :

"நீற்றினை நிறையப்பூசி நித்தலா யிரம்பூக்கொண்டு
ஏற்றுழி யொருநாளொன்று குறையக்கண் ணிறையவிட்ட

---

1. 'சங்கநிதி.' ௬. ௧௫—௧௦.
,, 'அன்பனே.' கஉ—இளையான்குடி—உ௬.

ஆற்றலுக் காழிநல்கி யவன்கொணர்ந் திழிச்சுங் கோயில்
வீற்றிருந் தளிப்பர்வீழி மிழலையுள் விகிர்தனாரே."

—ச. சுஈ—அ.

கூற்றுத் துன்பம் நீற்றினை நிறையப்பூசி நித்தலும் பூவும் நீருங் கொண்டு "போற்றி போற்றி" எனச் செந்தமிழ்த் திருமா முறையின் வழிபாட்டுத் திருமந்திரம் ஓதிச் சிவபெருமான் திருவடியினைத் தொழுவார்க்கு யாண்டும் நேர்வதில்லை. இது போன்று ஊழ்வினைத் துன்பமும் அன்னவரை யணுகாது.

இவ்வுண்மைகள் வருமாறு :

"செறுவிப் பார்சிலை யால்மதில் தீர்த்தங்கள்
உறுவிப் பார்பல பத்தர்கள் ஊழ்வினை
அறுவிப் பாரது அன்றியும் நல்வினை
பெறுவிப் பாரவர் பேரெயி லாளரே."

—ரு. கசு—ச

"நீற்றினை நிறையப்பூசி நித்தலு நியமஞ் செய்து
ஆற்றுநீர் பூரித்தாட்டும் அந்தண னாரைக் கொல்வான்
சாற்றுநா ளற்றதென்று தருமரா சற்காய்வந்த
கூற்றினைக் குமைப்பர் போலும் குறுக்கைவீ ரட்டனாரே."

—ச. சகூ—உ.

"வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர அஞ்சுவரே."

— உ. சஅ—ரு.

கக—உஉ. குலைகுலை...கோலம் போற்றி

(இ - ள்.) மிக்க நடுக்கத்தினை அடைந்த நிலைபே றில்லாத தேவர்களுடைய மிகப்பெரிய துன்பத்தினை இடையீ டில்லாமல் தடுத்துத் திருப்பாற் கடலில் தேவர்தம் செருக்கால் தோன்றிய கண்டாரைக் கொல்லும் கடுநஞ்சினை அவர் வேண்டுகோளுக் கிரங்கி அமுது செய்தருளிய அறவாழி அந்தணனே **போற்றி;**

நீங்காத சினத்தினையுடைய தானவர்களுடைய திரியும் முப்புரத்தை விரைவாகக் கொளுத்தி ஒரு நொடியில் நீறுபட்டழிய, ஒப்பற்ற வில்லினை வளையும்படி திருநோக்கம் செய்தருளிய ஆண்மை மறவனே **போற்றி;**

மலரம்புகளுடன் கூடிய மென்மையான கரும்பு வில்லொடு நிலத்தின்மேல் சாம்பலாக அழிந்து விடும்படி காமனை விழித்து எரித்த நெற்றிக் கண்ணினையுடையானே **போற்றி;**

தெய்வத்தன்மையினையுடைய யானையை ஒரு புடை யொத்துக் காணப்படும் யாளியானது மிக்கமுயற்சி செய்து யானையைக் கிழித்தது

போன்று, யானைமுக அசுரன் என்னும் ஒரு யானையின் தோலினை உரித்த மிக்க வலியுடைய விறலோனே **போற்றி;**

முன்னொரு காலத்தில் அருச்சுனனுக்காகப் பெரும் போரைத் தொடக்காகக் கொண்டு வேடர்தந் திருக்கோலங்கொண் டெழுந் தருளிய பேரழகுடையவனே **போற்றி;**

உ௩—௩௪. விரற்பத...கைவளம் போற்றி

(இ - ள்.) திருவெள்ளி மலையினைத் தன் தோள்வலியால் தூக்க முயன்ற இலங்கையர் வேந்தனாகிய இராவணனைத் திருவடி விரலொன் றின் நுனியினால் நையச் செய்தருளிய வல்லாண்மையுடையவனே **போற்றி;**

பெரியமலை யொன்று பிளந்து விழுந்தாற்போன்று தோன்ற முன்னாளில் சலந்தரனைக் கொன்றருளிய தண்டச் செயலுடைய தன்மையனே **போற்றி;**

தந்தையின் தாளை அறவீசி யெறிந்த திருமறையோர் சிறுவனாகிய சண்டேசுரர்க்குப் பரிகலம் அருளிச் செய்த திருவுளப்பாங்குள்ள செம்மலே **போற்றி;**

விழுமிய முழுமுதலாகிய நின் திருவடியினைப் படர்ந்து பாடிப் பரவித் தொழும் பொருட்டுத் தவமிருந்து பெற்றெடுத்த தம் அருமை மகனாகிய சீராள தேவனைத் திருவருளால் கொன்று கறியமுதாக்கிய சிறுத்தொண்டர் மனையின்கண் விருந்தின் திருக்கோலங் கொண் டருளியவனே **போற்றி;**

திருவிளக்கின்கண் ணுள்ள நெய்யினை யுண்ணும்பொருட்டு எண்ணி வந்து விளக்கினை நெருங்கிக் கெடாத விளக்கினைத் தூண்டி எரி செய்த தாவிச் செல்லுந் தன்மைவாய்ந்த சிறிய எலிக்கு ஆண்ட ரசுபுரியும்படி மூன்றுலகங்களையும் விரைவாக அருளிச் செய்த வளம் பொருந்திய திருக்கையினையுடையவனே **போற்றி;**

(வி – ம்.) சிறுத்தொண்ட நாயனார் "ஒருவனாகி ஒரு குடிக்கு வருமச் சிறுவனும்" சீராள தேவனைக் கறியமுதாக்கிய அருஞ்செயல் திருவருளால் வல்லவாறு நிகழ்ந்த இறைபணியாம். அவ்வுண்மை வருமாறு:

"வரங்கள் தரும் செய்ய வயிரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்றுகறி யாக்க—இரங்காதே
கொல்வினையே செய்யுங் கொடுவினையே யானதனை
வல்வினையே யென்றதுநான் மற்று."

—திருக்களிற்றுப்படியார், ௧௮.

தொன்று தொட்டு நாட்டின் நலங்கருதி மிக்க உவப்புடன் தம் உயிரை நல்கலும், தம் அருமை மக்களுயிரை நல்கும் அவர்க்குத் துணை நின்று ஊக்கி உள்ளங்களித்தலும் இருவகை வழக்கினும் இன்று காறும் திரிபின்றி நின்று நிலவும் நிகழ்வுகளாகும்.

"மறமானம் மாண்ட வழிச் செலவு தேற்றம், என நான்கும் ஏமமாகக்" கொண்டு ஒழுகும் நன்மை நீங்காப் படைமறவர், படைத்தலைவர்வழிநின்று ஒழுகுவர்; படைத்தலைவர் உலகுடை வேந்தன் ஆணைவழிநின்று ஒழுகுவர். நடைமுறை தவிரா வேந்தன் விழுமிய முழு முதல்வனும் இறைவன்வழி நின்று ஒழுகுவன். இம்முறையின் நோக்குங்கால் திருவருளாம் சிவன் வேந்தனை யொப்பன், "அஞ்செழுத்தும், திருநீறும், கண்டிகையும்" பொருளாகக் கொண்டு சிவக்கோலத்துடன் திகழும் சிவனடியார்கள் படைத்தலைவரோடொப்பர். அவர்க்குத் தொண்டுபூண்டொழுகும் மெய்யடியார்கள் படைகளை யொப்பர். இம்முறையின் ஆராயின் சிறுத்தொண்ட நாயனார் செய்தருளிய அருஞ்செயல் சீரிய சிறப்புடைய இறைபணியே யாகும். இவ்வுண்மை வருமாறு :

"கெடுக சிந்தை கடிதிவள் துணிவே
மூதின் மகளி ராதல் தகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே
நெருந லுற்ற செருவிற்கிவள் கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுப்பட் டனனே
இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி யெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோள்
செருமுக நோக்கிச் செல்கென விடுமே."

—புறநானூறு, உஎக.

(புறம். உஎஅ. நரம் பெழுந்துலறிய என்பதும், உஎஎ. மீனுண் கொக்கின் என்பதும் ஈண்டு நினைவுகூரத் தக்கன.)

செங்கோன்முறையின் பொருட்டு ஒருமகன் உயிர்கொண்ட திருவரலாறு வருமாறு :

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதும்உணரான்
தருமம்தன் வழிச்செல்கை கடனென்று[1] தன்மைந்தன்
மருமம்தன் தேராழி உறஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்."

—கஉ. திருநகரச் சிறப்பு—சச.

நடு—சச. பொங்குளை...நீளம் போற்றி

(இ - ள்.) பிடரிமயிரினையுடைய கொதிக்கும் நெருப்பினை யொத்த வாயினையும், புகையும் கண்களையு முடைய ஒப்பற்ற ஆளரி (நரசிங்கமூர்த்தி) உருக்கொண்ட திருமாலைக் கொன்று திருத்தி நன்றாக்கிய சேவகம் போற்றி;

1. 'பின்னங்குப்'. கஉ. கோட்புலியார்—க0.

வரிகள் தங்கிய கண்டத்தை யுடையதும், மிக்க வலியுடையதும், மணிகள் சிந்துகின்றதும், பிளந்த வாயினை யுடையதும் ஆகிய பாம்புகளை அணிகலன்களாகப் பூண்டருளிய திருவழகுள்ளவனே **போற்றி;**

வான் யாறாகிய கங்கையும், கொன்றை மாலையும் கலந்துள்ள இடமாகிய திருச்சடையின்கண் ஒரு பக்கத்தில் ஆருயிரின் அடையாளமாகிய பிறை மதியினை யணிந்துள்ள சிவந்த திருச்சடை முடியுடையவனே **போற்றி;**

படைப்போனும் காப்போனுமாகிய திருவாணைச் செயல் புரியும் தேவர்களாம் அயனும் அரியும் முறையே நின் திருமுடியினையும் திருவடியினையும் செருக்கினால் தேடலுற்றனர். அவர்கள் காணவொண்ணாதவாறு பேரொளிப் பிழம்பாய் ஓங்கி நின்றருளிய நெடியோனே **போற்றி;**

திருச்சடையின்கண் விளங்கும் திருவடையாளங்களின் குறிப்பு வருமாறு :

"பாம்பும் மதியும் புனலும் தம்மிற்
பகைதீர்த் துடன் வைத்த பண்பா போற்றி."

—சு. சாம்ப. ௫—௪.

"தேனுங் குழலும் பிழைத்ததிரு மொழியாள் புலவி தீர்க்கமதி
தானும் பணியும் பகைதீர்க்கும் சடையார் தூது தருந்திருநாள்
கூனுங் குருடும் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பாவித் தீர்க்கின்றேன் எழு பிறப்பின் முடங்குகூன்."

—கஉ. கூற்றுவர், நம்பிவாழ்த்து.

௪௪—௫௩. ஆலம் .. பொலம்பூ வடிக்கே

(இ - ள்.) நஞ்சைக் காலுகின்ற நின்சூலம் **போற்றி;** புகழ்ந்து கூறுதற்கரிய நின்னுடைய உணர்வென்னும் ஊர்தியாகிய ஆனேறு **போற்றி;** ஒன்றாகிய மலையரையன் மகிழ்ந்தளித்த மகளாகிய பார்வதிப் பெருமாட்டியார்க்கு இடது பாகத்தை அருள்செய்த பேரருட்குணம் படைத்தவனே **போற்றி;** திருத்தில்லையாகிய பெரிய நகரம் **போற்றி;** அத்திருத் தில்லையின்கண் உள்ள அழகிய பொன்னாலாகிய திருச்சிற்றம்பலம் **போற்றி,** அப்பொன்னம்பலத்தின்கண் இயற்றியருளும் திருக்கூத்துப் **போற்றி;** என்று ஓதி, அவ்விடத்தில் எந்நாளும் போற்றிசைத்துப் புகழினும், விழுமிய முழு முதல்வனே அடியேனுக்கு ஆற்றலில்லை யாயினும் தேவரீருடைய அழகிய பொன்போலும் பூவார் திருவடிக்குப் **போற்றி, போற்றி.**

(வி - ம்.) ஏறு - ஆனேறு. வெற்பு - மலை. ஆற்றல் - வலிமை. "**போற்றி**" என்பது இகர ஈற்றுத் தொழிற் பெயர். அது வணக்கம் எனப்பொருள் தரும். போற்றிய என்னும் வியங்கோள் ஈறுகெட்டுப் போற்றியென நின்றது, இகரம் செயப்படு பொருளுணர்த்தும், எனவே பாதுகாக்கப்படுக என்பது பொருளென்றலும் ஒன்று.

பூசை செய்தற்கு உறுப்பாக எரியோம்புதலும் உள்குதலாகிய தியானம் புரிதலும் கொள்ளப்படும். செந்தமிழ்ப் போற்றி மறை ஓதிப் பூத்தூவி வழிபடுதல் அருச்சனை எனப்படும் பூசையாகும். இஃதுறுப்பி. சிவபெருமான் "போற்றி என்பார்க் கல்லதருளான்" என்னும் திருமா முறைப்படி போற்றி மந்திரமே எல்லாம் நிறைந்த பூசைக்குரிய பொருவிலாத் திருவுடை முழுமந்திரம். இதன்கண் போற்றி மந்திரம் இருபத்தைந்து காணப்படுகின்றன. இவற்றை நான்கு முறையோதிப்பூத்தூவி வழிபட நூறு அருச்சனையாதும். இவ்வாறு செய்து வருதல் நம் தலைக்கடனாகும்.

இந்நூல் கடை முதலாகிய அந்தாதித் தொடையாக வெண்பா முதலாக ஆசிரியப்பா ஈறாக முடியப் பெற்றது. (சு0)

உ. திருக்கழுமல மும்மணிக்கோவை*

இணைக்குறளாசிரியப்பா

திருச்சிற்றம்பலம்

திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல வொருகூறு
இமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப் பரிதி ஆயிரந் தொகுத்த
வரன்முறை திரியாது மலர்மிசை யிருந்தெனக்
கதிர்விடு நின்முகங் காண்டொறுங் காண்டொறும்
முதிரா இளமுலை முற்றாக் கொழுந்தின்
திருமுகத் தாமரை செவ்வியின் மலரநின்
தையல் வாணுதல் தெய்வச் சிறுபிறை
இளநிலாக் காண்டொறும் ஒளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க் குமுதஞ் செவ்வி செய்யநின்
செங்கைக் கமல மங்கை வனமுலை
அமிர்த கலசம் அமைவின் ஏந்த
மலைமகள் தனது நயனக் குவளைநின்
பொலிவி னொடு மலர மறையோர்
கழுமல நெறி நின்று பொலிய
நாகர் நாடு மீமிசை மிதந்து

* மும்மணிக்கோவை; ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகியவை முறையே விரவிவரும் செய்யுட் கோவை.

மீமிசை யுலகங் கீழ்முதல் தாழ்ந்திங்
கோன்று வந்த குன்று வெள்ளத்து
உலகமுன் றுக்குங் களைக ணாகி
முதலில் காலம் இனிதுவீற் றிருந்துழித்
தாதையோடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்ன யோவேன் றழைப்பமுன் நின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனுத் திரளை யவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரேன
அவனைக் காட்டுவன் அப்ப வானூர்
தோஒ டுடைய சேவியன் என்றும்
பீஇ டுடைய பேம்மான் என்றுங்
கையில் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே.

திருக்கழுமல மும்மணிக்கோவை என்னுந்தொடர் ஐந்து சொல் நான்கு சந்தியாய் அமைந்தது. முன்னது திருவினையுடைய என இரண்டாவதன் உருபும் பொருளும் உடன் தொக்க தொகையாய்க் கழுமலம் என்னும் சொல்லுடனும், கழுமலம் என்பது மூன்று என்னும் வரையறைப் பண்புப் பெயருடன் நான்காவதன் தொகை யாகவும், மற்றதாகிய மூன்று என்னும் சொல்லின் முதனிலை மணி யுடன் பண்புத் தொகையாய்ப் புணர்ந்தும், அம்மணி யென்பது கோவையுடன் மூன்றுவதன் தொகையாய்ப் புணர்ந்து திருவினை யுடைய கழுமலத்திற்குக் கூறிய மூன்றாகிய மணிகளானுகிய கோவை என ஒரு சொல்லின் தன்மைத்தாய் நூலை உணர்த்தி நின்றது.

கழுமலம் என்பது சீகாழிக்குரிய பன்னிரு திருப்பெயர்களுள் ஒன்று, அவை வருமாறு :

"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவம் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்."

—கஉ. சம்பந்தர், கச.

கழுமல மென்னும் திருப்பெயர்க் காரணம் வருமாறு :

"முழுதுடலில் எழுமயிர்கள் தழுவுமுனி" எனப்படும் உரோமச முனிவர் இத்திருவூரின்கண் திருவருளால் எழுந்தருளியபோது பண்டை நற்றவப் பேற்றால் திருவடியுணர்வு கைவரப்பெற்று அவர்தம் மும்மலமும் கழுவப் பெற்றமையால் கழுமலம் என்னும் பெயர்த்தாயிற்று என்ப.

க—எ. திருவளர்...நின்முகம்

(இ - ள்.) அழகு வளர்கின்ற பவளமாகிய பெரிய மலையைப் பொருந்திய பச்சைக் கொடிபோல் ஒரு பக்கத்தில், மலையரையன் பொற்பாவை நீங்காமல் திகழத் தள்ளுகின்ற அலைகளையுடைய பெரிய கடலினிடத்து அரும்பிய கூட்டமான அலைக்கும் கதிர்களை யுடைய பலகோடி ஆயிரம் பகலவர், வரலாற்று முறைமையினின்றும் மாறுபடாமல் தாமரை மலர்மேல் இருந்தாற்போல ஒளி செய்கின்ற அடிகளீர் திருமுகத்தை.

(வி - ம்.) 'திருவளர்'-அழகு வளர்கின்ற என்பது எழில் சேர்கின்ற என்பதாம். இவ்வுண்மை வருமாறு :

"திருவளர் தாமரை" எனத் தொடங்கும் திருச்சிற்றம்பலக் கோவையாரின் திருப்பாட்டுக்கு நல்லுரை கண்ட பேராசிரியர் "திரு என்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம் என்றது அழகு. இஃதென் சொல்லியவாறோ வெனின், யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானே அக்கண்டவற்கு அப்பொருள்மேற் சென்ற விருப்பத்தோடே கூடியஅழகு. அதன்மேல் அவற்கு விருப்பஞ் சேறல் அதனிற் சிறந்த உருவும் நலனும் ஒளியும் எவ்வகையானும் பிறிதென்றிற் கில்லாமையால். திரு வென்பது அழகுக்கே பெயராயிற்று."

எ—கசு. காண்டொறு...மலர

(இ - ள்.) பலகால் நோக்குந் தோறும் நோக்குந் தோறும் முதிர்ச்சி எய்தாத இளமுலைகளையுடைய, முதிராத கொழுந்தினையொத்த பெருமாட்டியின் அழகிய முகமாகிய தாமரை அழகுடன் விரிய நின்னுடைய துணைவியாரது ஒளிபெற்ற நெற்றியாகிய தெய்வத் தன்மை பொருந்திய இளந்திங்களினது சிறு நிலவினை நோக்குந் தோறும் விளக்கத்துடனியைந்த தேவரீருடைய சிவந்த வாயாகிய குமுதம் எனப்படும் செவ்வாம்பல் அழகு செய்யாநிற்க.

தேவரீருடைய சிவந்த கையாகிய தாமரைகள் பெருமாட்டியின் அழகிய முலையாகிய அமிழ்த கலயத்தைப் பொருந்தும்படி ஏந்தாநிற்க மலைமகளினுடைய திருக்கண்களாகிய குவளைகள் நின்னுடைய திருவழகுடன் விளங்கா நிற்க.

(வி – ம்.) சிவபெருமானின் திருமுக ஞாயிற்றால் உலகீன்ற அன்னையாரின் திருமுகத் தாமரை மலர்கின்றது. அன்னையாரின் நெற்றிப் பிறை நிலவினால் சிவபெருமானின் குமுதச் செவ்வாய் மலர்கின்றது. அன்னையார் இறைவனை நோக்கி யருளுதலின் அவன்றன் திருவுருவப் பொலிவாம் திருத்தொழில் ஐந்தும் அவள் வாயிலாக நிகழ்கின்றன. அவள் சிவை யெனவும், திருவாணை யெனவும், ஆற்றலெனவும், தாதான்மிய சத்தி யெனவும் வழங்கப்படுவள். இவ்வுண்மைகள் வருமாறு :

"அவையே தானே யாயிரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்க மின்றி நிற்கும் அன்றே."

—சிவஞானபோதம் நூற்பா உ.

"சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே
நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்
பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்வெற்பில்
கற்பா வியவரை வாய்க்கடி தோட்ட களவகத்தே."

—அ. திருச்சிற்றம்பலக் கோவையார், அ.

தாதான்மியம் என்பது ஒரு பொருளே இருதன்மைப்பட்டு நீங்காது பொதுமையின் நிற்றல். தாதான்மியம் என்னும் சொற்பொருள் அது தானுதல் என்பதாம். ஒரு புடை யொப்பாகப் பொதுமையினிற்கும் கை அகங்கை புறங்கை என நிலைவேறு பாட்டால் சிறப்பு வகையான் இரு திறப்படுவதைக் கூறலாம். இது போல் ஆன்றவறி வாற்றல் அகம்புறமாய் ஐந்தொழிலுஞ், சான்றிறையால் செய்யும் அருள் சாற்று.

கக—நந. மறையோர்...அருளினை யாங்கே

(இ-ள்.) செந்தமிழ்த் திருமா மறையாம் சிவயநம என்னும் திருவைந்தெழுத்தினை ஒல்லும் வகை ஓவாது உள்கியும், ஓதியும் உணர்த்தியும் வரும் தென்றமிழர் தெய்வமறை நாவர் ஆகிய மறையோர் வாழும் சீர்காழியானது நன்னெறி நான்மை யொழுக்கத்தின்கண் நின்று திகழவும், கீழ் உலகம் என்னப்படும் பாதாள உலகம் மேலே மிதந்து மேலுலகம் எனப்படும் தேவர் உலகம் கீழுலகம் அளவும் தாழ்ந்து, ஒருசேர வந்த குறையாத வெள்ளத்தினிடத்து மூவுலகங் கட்கும் நீங்காப்பற்றுக் கோடாகித் தொன்மைக் காலத்தில் ஏமமாக எழுந்தருளி யிருக்கும் அத்திருவூரில்,

தந்தையாருடன் வந்த செந்தமிழ்ப் பண்டைய நான்மறைச் சிறுவன் தளர்ந்த நடை நடக்கும் மூவாட்டைப் பருவத்து ஓங்கும் பசியானது வருத்த அம்மையே அப்பா ஓ என்று அழைத்தருள எதிரிலே காட்சிகொடுத்தருளிநின்று மூதறி வெனப்படும் ஞான மாகிய உணவின்கண் தம் தண்ணளி யாற்றலைப் பொருத்திச் சேர்த்த கெடாத அமிழ்தத்திரளையை அப்பிள்ளைக்குக் கொடுத்தருளச் சிவ பாத இருதயர் என்னும் திருமறையவர் கடுஞ்சினங் காட்டி இப்பாலுணவை உனக்குக் கொடுத்தவர் யாவர்? என்று வினவ, அப்பனே! பாலுணவு தந்தருளியவனைக் கண்கூடாகக் காட்டுவேன் என்று வான வீதியிற் றங்கிய தோடுடைய குண்டலங்களை யணிந்த திருச்செவிகளை யுடையா னென்றும், பெருமையுடைய பெருமா னென்றும் திருக் கையின் ஆள்காட்டி விரலினைக் கொண்டு சுட்டிக்காட்ட ஐயனே! அவ்விடத்தில் நீ வெளிப்பட்டருளித் தலையளிசெய்தருளினை.

(வி-ம்.) திருத்தோணிபுரம் வெள்ளத்தின் மிதந்த வுண்மை வருமாறு:

"பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை."

—க. திருவெழுகூற்றிருக்கை, வரி உஅ-உக.

பிள்ளையார் பாலமுதுண்ட வுண்மை வருமாறு:

"எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி
உண்ணடிசில் என ஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற் கிண்ணமளித்
தண்ணலைஅங் கழுகைதீர்த் தங்கணனூர் அருள்புரிந்தார்."

—கஉ. சம்பந்தர், கூஅ.

தந்தையாராகிய சிவபாத விருதயர் சினந்து கொண்டமைக்குக் காரணம். பிள்ளையார் அதுகாறும் தாய்ப்பால் சுவைத்துண்டமை யன்றி ஆன்பால் பருகி யறியார். பொன் வள்ளத்தில் பால் கைக் கொண்டருளிப் பருகினமை பொல்லாங்கு விளைக்க நேருமே யென் றஞ்சியதேயாம் என்ப.

ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய செந்தமிழ்த் திருமா மறையே சிவபெருமானின் தெய்வத் திருமறை யாகும். அப்பெரு மான் உண்ணின் றெழுப்பி யருளியதை பிள்ளையார் வழி மொழிந்து திரு எட்டினுந் தீட்டியருளினர். அவ்வுண்மை வருமாறு :

"ஒழுகலரி தழிகலியி லுழியுலகு பழிபெருகு வழியை நினையா
முழுதுடலி லெழுமயிர்கள் தழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழி
[தகையவே.'

—ந. சுஎ—கஉ.

"தெய்வச் சுருதி தமிழ்க்கன்றித் தீட்டா நிலைமைத் தெனவுலகில்
தெரிக்குங் காழித் திருஞானச் செம்மற் குழவிக் கருண்ஞானம்
பெய்து குழைக்க வோமுலையாம் பெரியமலைவாய் உறுத்துமென்றே
பெம்மான் தனையுங் குழைத்த வலிப்பெற்றி யறிந்து தடுத்தோபூங்
கையிலிலகு நகக்குறிபற் கதுவ நோமென் றேதீம்பால்
கறந்து கொடுத்தாய் எனச்சகிமார் கனிந்துபாட நகைமுகிழ்க்கும்
வைவைத் தமைத்த மதர்வேற்கண் வாழ்வே வருக வருகவே
வளங்கூர் குளந்தைப் பதியமுத வல்லி வருக வருகவே."

—சிவஞானமுனிவர், அமுதாம்பிகை:பிள்ளைத்தமிழ், கூ0

இவ்வுண்மை தெளிந்து செந்தமிழ்த் திருமாமறை திருமா முறை களே வேறெம் மறைகளுக்கு மேலான தெய்வமறை யென்றும், அதன் வழி யொழுகுவதே நம் தலையாய கடமை யென்றுங் காதலுளத் தொடும் ஓதி வழிபட்டு வருநாள் எந்நாளோ? அந்நாளே நன்னெறி நாற்படி நலம்பூக்கும் பொன்னுளாகும்.

முதற்றிருமுறை முதற்றிருப்பாட்டு வருமாறு :

"தோடுடைய செவியன் விடையேறி யோர்தூ வெண்மதி சூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானி வனன்றே.'

—க. க—க.

இத்திருப்பாட்டின்கண் பேரறிவுப் பெருவடிவாம் சிவபெருமான் தன்னின் வேறல்லாத அறிவாற்றலின் வாயிலாகத் திருத்தொழில் ஐந்தும் இடையறாது புரிந்தருளுகின்றனன்.

அறிவாற்றல் - சிற்சத்தி. அக்குறிப்பு வருமாறு :

விடையினால் படைப்பும், மதியினால் காப்பும், சுடலையால் துடைப்பும், உள்ளங்கவர்தலால் மறைப்பும், பணிந்தேத்த அருள் செய்தலால் அருளலும் பெறப்படும்.

ஓங்காரம் செவியோசைக்கு அடிப்படையானது. திருச்சிற்றம்பலம் ஓசை ஒலியெலாம் தோன்றத் துணை செய்யும் திருவருள் பர வெளியாம் நிலைக்களமாகும்.

வடமொழி மறையினை ஓம் எனத் தொடங்கி ஓதுவர். அவ்வுண்மை வருமாறு :

" தாமென்று மனந்தளராத் தகுதியரா யுலகத்துக்
காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்கும் கருணையினான்
ஓமென்று மறைபயில்வார் பிரமபுரத் துறைகின்ற
காமன்ற னுடலெரியக் கனல்சேர்ந்த கண்ணானே.''

—உ. சo—உ.

ஓங்காரம் அ-உ-ம்.—விந்து - நாதம் என்னும் ஐந்துறுப்புக்களைக் கொண்டது. இவற்றைத் தூண்டித் தொழிற்படுத்தும் தெய்வங்கள் முறையே. அயன், அரி, அரன், ஈசன், சதாசிவன் என்ப.

இவ்வோங்காரம் பயிருக்கு வேலி போன்று தமிழ் மறைக்குப் புறக்காவலாக நிற்கும். ஆனால் தமிழ்த்திருமா மறைகள் ஓதுங்கால் ஓமென்று மொழிந்து தொடங்குவதில்லை. ஆனால் திருச்சிற்றம்பலம் என்று ஓதித் தொடங்குவதும் முடிவிலும் திருச்சிற்றம்பலம் ஓதி முடிப்பதும் மரபாகக் கொண்டொழுகுவது அன்று தொட்டு இன்று காறும் நிகழ்ந்து வரும் நிகழ்சசியான் உணர்க. இது திருவாசகத் திருவெம்பாவைத் திருப்பதிகத்தின்கண் "காதார் குழையாட'' எனத் றொடங்குந் திருப்பாட்டில் திருச்சிற்றம்பலம்பாடித் தொடங்கவேண்டு மென்பது உடம்பொடு புணர்த்தலென்னு முத்தியால்பெற வைத்தமை காண்க. இதனாலும் வடமொழி மறையும் வேறு, தென்றமிழ் மறையும் வேறு என்பது தெளிவு. திருச்சிற்றம்பலம் என்னும் மறை ஒற்று நீக்கி எண்ண ஆறெழுத்தாகும். அஃதிருமறை ஓதும் மரபினால் பன்னிரண்டெழுத்தாகும். இதனால் செந்தமிழ்த் திருமாமறைகள் பன்னிரண்டென்பது துணியப்படும்.

புறக்காவலாகிய ஓங்காரமும் தமிழமறையோ டிணைந்து திருவாசியாக நிற்கும் உண்மைக்குறிப் புணர்த்தத் தோடு என்று தொடங்கும் மொழியில் மெய் யெழுத்தாகிய தகரம் தமிழின் முதலெழுத்தாகும். இந்த ஓ என்னும் உயிரெழுத்து பன்னிரண்டாந் திருமுறையின் முடிவில் உலகெலாம் என்னும் மறைமொழியின் முடிவில் மகரம் நின்று ஓம் என நிறைகின்றது.

சிவபெருமான் சிவை எனப்படும் திருவருளாற்றலால் செய் தருளும் சிறப்புத் தோன்றத் தோடுடைய செவியன் என அம்மையின் திருப்பாகம் எடுத்தோதப்பட் டருளினமை காண்க. (க)

வெண்பா

அருளின் கடல்அடியேன் அன்பென்னு மாறு
பொருளின் திரள்புகலி நாதன்—இருள்புகுதும்
கண்டத்தான் என்பாரைக் காதலித்துக் கைதொழுவார்க்
கண்டத்தார் தாமார் அதற்கு.

(இ - ள்.) சீகாழிக்கண் திருக்கோயில் கொண்டெழுந் தருளி யிருக்கும் எம் தலைவனுகிய சிவபெருமான் மிகப்பெருந் தண்ணளி யாகிய கருணைப் பெருங்கடல் போன்றவனுவன்; அவன் திருவடிக் கண் மீளா ஆளாய் அடிமை பூண்டொழுகும் அடியேனுடைய இறவா இன்ப அன்பை மிகுவிக்கும் முறையில் ஆறு போன்றவனுகின்ருன்; நீங்காக் கலப்பினுல் எல்லாப் பொருள்களின் கூட்டத்தை யொத்தவன்; கருமை வந்து புகுந்துள்ள திருமிடற்றினை யுடையவன்; என்று படர்ந்து பாடிப் பணிவாராகிய மெய்யடியார்களைப் பேரன்பு பூண்டு கைகுவித்துத் தொழும் திருத்தொண்டினை மேற்கொண்டொழுகும் சிவனடியார்க்கு இந்நிலவுலகத்து எவர் ஒப்பாவர்? அவ்வடிமைத் தொழிற்கும் ஒப்பாவார் எவர்? இனித் தேவர்களுள்ளும் ஒப்பாவார் எவர் என்றலும் ஒன்று (ஒருவரும் இலர் என்பதாம்.)

(வி - ம்.) சிவபெருமானின் அறிவாற்ற லெனப்படும் திரு வருளே ஆருயிர்கட்கு அவன் திருவடிக்கண் அன்புண்டாகும்படி செய்தருளுதல் வேண்டும். அம்முறையில் அத்திருவருளை ஆறுபோல் உருவகம் செய்தனர். அண்டம் - உலகம். அண்டம் - தேவவுலகம். அண்டத்தார் - தேவர். தாம் - அசை.

சிவனடியார் பெருமையினை வருமாறுணர்க :

"கலைதலை சூலங் கடுங்கனல் கண்டை கட்டங்கங் கொடி
சிலையிவை ஏந்திய எண்டோட் சிவற்கு மனஞ்சொற் செய்கை
நிலைபிழை யாதுற் றேவல்செய் தார்நின்ற மேருவென்னு
மலைபிழை யாரென்ப ராலறிந் தோர்களிம் மாநிலத்தே."

—கக. சேரமான், பொன்—அஅ. (உ)

கட்டளைக் கலித்துறை

ஆரண நான்கிற்கும் அப்பா லவன்அறி யத்துணிந்த
நாரணன் நான்முக னுக்கரி யான்நடு வாய்நிறைந்த
பூரணன் எந்தை புகலிப் பிரான்பொழில் அத்தனைக்கும்
காரணன் அந்தக் கரணங் கடந்த கருப்பொருளே.

(இ- ள்.) நான்மறைக்கும், அப்பாற் பட்டவன்; செருக்குற்றுத் தம்முட் கலாய்த்து நின்ற நான்முகனுக்கும், மாலுக்கும் அறிய வொண்ணாதபடி அனற்பிழம்பாய் அண்டமுற நின்றவன். எல்லா வுயிர்கட்கும் பொருள்கட்கும் உண்ணின்றியக்கும் நடுவமர் வடுவில் பெரும்பொருள்; எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கும் நிலைப்பொருள்; சீகாழிப் பெரும்பதியின்கண் எழுந்தருளி யிருக்கும் முதல்வன்; எல்லா வுலகங்களுக்கும் வினைமுதற் காரணனா யுள்ளவன்; அகக் கலன்கள் எனப்படும் அந்தக்கரணங்கட்கும் எட்டாதவன். யாவற் றிற்கும் மூலமுதல்வனா யுள்ளவன்.

(வி - ம்.) ஆரணம்- மறை; வேதம். நான்கு - அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருள் நான்கும் தனித்தனி யுணர்த் தும் உலகியல் நூல். எழுத்தும் சொல்லும் தூமாயையின்கட்டோன் றும் நாதவிந்துக்களால் நண்ணுவன. இவ்வுண்மை வருமாறு :

"விந்துவின் மாயை யாகி மாயையின் அவ்வி யத்தம்
வந்திடும் விந்துத் தன்பால் வைகரி யாதி மாயை
முந்திடும் அராக மாதி முக்குண மாதி மூலம்
தந்திடுஞ் சிவன வன்றன் சந்நிதி தன்னின் நின்றே."

—சிவஞானசித்தியார் க. ச—கக

சந்நிதி—சிவசத்தி சங்கற்பரூப சந்நிதி.

சிவபெருமானின் கடந்துள்ள நீங்கா உண்மை நிலைவருமாறு :

"மறையினன் அயனன் மாலான் மனத்தினன் வாக்கான் மற்றுங்
குறைவிலா அளவி னாலுங் கூறொணா தாகி நின்ற
இறைவனார் கமல பாதம் இன்றியான் இயம்பும் ஆசை
நிறையினார் குணத்தோர்க் கெல்லாம் நகையினை நிறுத்து
[மன்றே"

—சிவஞானசித்தியார், அவையடக்கம்.

இத்திருப்பாட்டின்கண் முதல்வன் ஆருயிர்களின் பொருட்டு அவ் வப்போது கொண்டருளும் நீங்கு நிலையாகிய தடத்தத் தன்மையும், நீங்காநிலை யெனப்படும் உண்மைத் தன்மையும் கூறப்பட்டுள்ளன. உண் மைத் தன்மையினைச் சொரூப இலக்கண மெனவுங் கூறுப. இவற்றை முறையே சகள நிட்கள மெனவுங் கூறுப. இறைவன்றன் திருவருட் பண்புகளைப் பலபடப் பாராட்டுவதால் பலபடப்புனைவணி யென்ப.

(ரு)

இணைக்குற ளாசிரியப்பா

கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறல்

மையிருள் நிறத்து மதனுடை யடுசினத்
தைவகைக் கடாவும் யாப்பவிழ்த் தகற்றி
அன்புகொடு மெழுகி யருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புற
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்
பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவி
செந்தைநீ யிருக்க இட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதிவெள் ளத்து
நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித் தியங்கும் மாருதங் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்
மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்
கெழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே.

௨௬. எம்பெருமானே - எளியோனுக்குரிய முழு முதல்வனே.

௧—௬. கருமுதல்... தகற்றி

(இ - ள்.) கருவுற்ற நாள் முதலாக நிலத்தே பிறந்து வாழ்ந்து இறந்து வினைக்கீடாக மீண்டும் பிறந்து பிறந்து வருகின்ற அளவில்லாத காலமெல்லாம், புலன்வயப்பட்டுப் பேரவாக்கொண்டு அது காரணமாக அதற்கிடையூறு நேரின் அங்கெல்லாம் மிக்க சினங் கொண்டு, மேலும் அளவில்லாத பொய் வஞ்சனை முதலிய தீமையுட் புகுந்து துப்புரவுக்கு மாறான அழுக்குக்கள் நிறைந்த குப்பைகள் அளவின்றிக் கிடந்தன. அவற்றையெல்லாம் நின் திருவருட்டுணையால் அருவருத்துப் பெருமுயற்சிகொண்டு நீக்கி, போர் புரியும் வன்மை மிக்க ;கருமை வாய்ந்த செருக்கு மிக்க ஐம்பொறிகள் எனப்படுங் காளைகளைக் கட்டவிழ்த்து ஓட்டி,

(வி - ம்.) காமம் ஏதுவாகவே எல்லாத் தீங்கும் வரும் என்னும் உண்மை வருமாறு :

“ காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்.”

—திருக்குறள், ௩௬0.

காலே போன்று ஐம்பொறியும் கட்டுக் கடங்காது துன்புறுத்துந் தன்மை வருமாறு :

“ அஞ்சினல் இயற்றப்பட்ட ஆக்கைப்பெற் றதனுள்வாழும்
அஞ்சினல் அடர்க்கப்பட்டிங் குழிதரும் ஆதனேனை
அஞ்சின லுய்க்கும்வண்ணம் காட்டினுய்க் கச்சந்தீர்ந்தேன்
அஞ்சினல் பொலிந்தசென்னி அதிகைவீ ரட்டனீரே.”

—சு. உகு—கு.

“ ஒருமுழமுள்ள குட்டம் ஒன்பது துளையுடைத்தாய்
அரைமுழம் அதனகலம் அதனில்வாழ் முதலைஐந்து
பெருமுழை வாய்தல்பற்றிக் கிடந்துநான் பிதற்றுகின்றேன்
கருமுகில் தவழுமாடக் கச்சிஏ கம்பனீரே.”

—சு. சச—உ.

ஏ—கங. **அன்புகொடு...இட்டனன்**

(இ - ள்.) பேரன்பிஞல் சீர்பெற மெழுகித் திருமெழுக்கிட்டுத் திருவருளாகிய திருவிளக்கினைத் திருவடியுணர்வாம் பேரொளி பெருகத் திருவருளால் ஏற்றிப், பிறவிப்பெருந் துன்பமாம் அக விருளைத் தலைகாட்டாவண்ணம் ஓட்டி, முன்னிடத்தில் பொருந்தும் படி, வாய்மை என்கிற மேற்கட்டியினை விளங்கக்கட்டி, சிறுதன்மை யாகிய தாழ்வான குணங்களில், தொடக்குற்றுத் திருவருள் கைவரப் பட்ட நற்றவ நல்லாரால் இகழும்படியாகக் கிடந்த, என்னுடைய எண்ணமெனப்படும் சிந்தையாகிய பாழாகிய உள்ளிடத்தை அடி களாகிய தேவரீருக்குத் திருப்பள்ளியறையாக அமைத்துச் சித்தமாகிய வளமுள்ள தாமரை மலரின் அழகிய இருக்கையை, அடியேனின் திருத்தந்தையே தேவரீர் எழுந்தருளி யிருக்க அன்புடன் இட்டனன்.

(வி - ம்.) மெழுகுதல் - தூய ஆன்சாணத்தால் மெழுகுதல். துரந்து - ஓட்டி. விதானம் - மேற்கட்டி. நொய்ய - சிறிய; சிறுமை யான. கீழ்மை - கீழான பண்புகள்.

கீழ்மைக் குணங்கள் ஆணவச் சார்பால் எட்டும், மாயைச் சார்பால் எழும், கன்மச்சார் பால் ஆறும் ஆகிய இருபத்தொன்றென்ப.

அவை வருமாறு :

“ கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோதம் மோகம் கொலையஞர் மதநகை
விராயெண் குண னு மாணவமென விளம்பினை
கு அஞ்ஞா னம்பொய் அயர்வே மோகம்
பைசால சூனியம் மாச்சரி யம்பய

மாவேழ் குணனும் மாயைக் கருளினை
இருத்தலுங் கிடத்தலும் இருவினை இயற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
அறுவகைக் குணனும் கருமத் தருளினை...

—இருபா விருபது, ௪.

திருமெழுக்கு அமைக்குந் தன்மை வருமாறு :

"புலர்வதன்முன் திருவலகு பணிமாறிப் புனிறகன்ற
நலமலி ஆன் சாணத்தால் நன்குதிரு மெழுக்கிட்டு
மலர்கொய்து கொடுவந்து மாலைகளும் தொடுத்தமைத்துப்
பலர்புகழும் பண்பினுல் திருப்பணிகள் பலசெய்தார்."

—௧௨. திருநாவுக்கரசர், ௪௪.

திருவிளக்கிடுதல் வருமாறு :

"எல்லையில்பல் கோடிதனத் திறைவராய் இப்படித்தாம்
செல்வநெறிப் பயனறிந்து திருவொற்றி யூரமர்ந்த
கொல்லைமழ விடையார்தம் கோயிலின் உள்ளும்புறம்பும்
அல்லுநெடும் பகலுமிடும் திருவிளக்கின் அணிவிளைத்தார்."

—௧௨. கலிய நாயனுர், ௭.

இவற்றின் பயன் கூறும் திருப்பாட்டு வருமாறு :

"விளக்கினுர் பெற்றவின்ப மெழுக்கினுற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர்தொடுத்தாற் றூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்ஞெறி ஞானமாகும்
அளப்பிலகீதஞ் சொன்னுர்க் கடிகடா மருளுமாறே."

—௪. ௭௭ - ௩.

௧௩—௧௯. இந்த...நின்றுழி

(இ - ள்.) இந்த நெடிய இடமாகிய நிலமும், வெம்மைதரும் கதிர்களையுடைய கதிரவன் காணப்படும் வானமும் முழுவதும் பரவிய முதன்மையாகிய ஊழி வெள்ளத்தில் ஞாயிறு திங்கள் ஆகிய இரண்டு சுடர்களும், நுரையென்று சொல்லும்படி சிதறுண்டு மிதக்கப் பெரு மலைகளை அடியோடு களைந்து உலாவுகின்ற ஊழிக்காற்று வேகத்துடன் வீசக் காப்போனும் படைப்போனுமாகிய அரியும் அயனும் ஏனைத் தேவர்களும் இவ்வெள்ளங் கொண்டது ஊழிக்காலம் என எண்ணிச் செய்வது இதுவென்று தோன்றுமல் மனக்கலக்கங் கொண்டிருக்கையில்,

௨௦—௨௬. மற்றவர்...எம்பெருமானே

(இ - ள்.) அவ் வெள்ளத்தில் வருந்தும் மாலே பிரமனே மற்றொழிந்த தேவரே முதலியோர், உயிர்கொண்டு பிழைத்தற் பொருட்டு ஆதரவாகக் கொண்ட, தெப்பமாக, மிகுதியாக மிதந்த சீகாழியாகிய

திருக்கழுமலவள நகரைக் கோயிலாகக் கொண்டருளியவனே! திருவருளே மிகுந்த சுரப்பாகக் கொண்ட வெள்ளப் பிழம்பே, பேரழகுள்ளவனே, தேவரீருடைய செல்வ மனைத்திற்கும் வினைமுதற் காரணமாயுள்ள திருச்சிலம்பு, இனிய சிற்றோசையாக ஒலியா நிற்கக் காணுந்தோறும் பின்னும் காணவேண்டு மென்னும் வேணவா நிரம்பாத தோற்றத்தினையுடைய மலைமகளாரையும் நின்னுடன் கொண்டருளி, இங்கு அன்புகொண்ட அடியேனிடத்து எழுந்தருளுதல் வேண்டும்.

(வி - ம்.) புணை - தெப்பம். பிரளயம் - வெள்ளம். ஊழி—கற்ப முடிவு. விடங்கம் - பேரழகு. சிலம்பு - காலணி; ஓசை. மிழற்ற - ஒலிக்க. அமையா - நிரம்பாத.

சீகாழித்திருவூர் திருவருளால் ஊழி வெள்ளத்தில் மிதந்த வுண்மை வருமாறு :

"ஒருரு வாயினை..................
உஅ. பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை........."

—க. கஉஅ.

திருச்சிலம்புண்மை வருமாறு :

"திருச்சிலம் போசை யொலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட வங்கேநின் றுந்தீபற."

—திருவுந்தியார், கஎ.

"ஆடற் சிலம்பின் ஒலிகேளா உடைவா ளகற்றி அங்கைமலர்
கூடத் தலைமேற் குவித்தருளிக் கொண்டு விழுந்து தொழுதெழுந்து
நீடப் பரவி மொழிகின்றார் நெடுமால் பிரமன் அருமறைமுன்
தேடற் கரியாய் திருவருள்முன் செய்யா தொழிந்த தென்என்றார்."

—கஉ. கழறிற்றறிவார், சரு. (ச)

வெண்பா

மானும் மழுவுந் திருமிடற்றில் வாழும்இருள்
தானும் பிறையுந் தரித்திருக்கும்—வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தேன்
உள்ளத்தே நின்ற ஒளி.

(இ - ள்.) (எங்களுக்குக் களைகணுவார் யாவர் என மனிமிகத் துன்புறும்) திருமாலுள்ளிட்ட தேவர்க்கு, ஊழிவெள்ளத்தே, காட்சி கொடுத்தருளித் திருக்கழுமலமாகிய சீகாழியில், எழுந்தருளியிருந்து, அடியேனுடைய அளவிறந்த காதலுள்ளத்தே நிலைபெற்றிருந்த முடியா மூதறிவே திருவுருவான பேரொளியானது இடது திருக்கையில் மான்

கன்றும், வலது திருக்கையில் மழுப்படையும், திருமிடற்றில் நஞ்ச டக்கிய நீலவண்ணமும், திருமுடியின்கண் ஆருயிரின் அடையாளமாகிய இளம்பிறையும் தாங்கி நின்றருளும்.

(வி - ம்.) சிவபெருமான் திருவருளின்கண் கொள்ளும் திருக் கோலங்களும், திருவடையாளங்களும், தேவர்கள் உள்ளிட்ட ஆருயிர் களின் உய்வின்பொருட்டேயாம். அவ்வுண்மை தோன்றத் 'தாங்கி நிற்கும்' என்னும் சொல் அமைந்துள்ளமை காண்க. இதுபோன்றே திருவாசகத்தின்கண் "சுமந்த" என்னும் சொல் அமைந்துள்ளமை நோக்குக. தாங்குஞ் சுமைதாங்கிபோற் கோலம் தாங்குமால், நீங்க லிலாச் செம்பொருளும் சேர்ந்து என நினைக்க. இவ்வுண்மை வரு மாறு:

"பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்"

—அ. திருவம்மானை, அ. (௫)

கட்டளைக் கலித்துறை

ஒளிவந்த வாபோய் மனத்திருள் நீங்களென் னுள்ளவெள்ளந்
தெளிவந்த வாவந்து தித்தித்த வாசிந்தி யாததொரு
களிவந்த வாஅன்பு கைவந்த வாகடை சாரமையத்
தெளிவந்த வாநங் கழுமல வாணர்தம் இன்னருளே.

(இ - ள்.) திருக்கழுமலத்தில் எழுந்தருளியுள்ள நம் முழுமுதல் வனது, இனிய திருவருள் நிலையில்லாத அடியேனுடைய மனத்தின்க ணுள்ள. அகவிருளாகிய ஆணவ வல்லிருள் நீங்க, மூதறிவுப் பெரு ஞாயிறாக எழுந்தருளிய வகையும், அடியேனுடைய அளவில்லாத வீண் எண்ணங்கள் வெள்ளம்போன்று நிறைந்துள்ள உள்ளத்தில் தெளிவாக நின்றருளிய வகையும், அங்ஙனந் தெளிந்த பொருளாய் நின்றருளி, அவ்வுள்ளத்தினிடத்தே எங்குமில்லாத அளவில்லாத பேரின்பமாய் இனித்தவாறும், மனத்தால் இத்தன்மைத்தென நினைக்க ஒண்ணாததுமாகிய ஒப்பில்லாத பேரின்பப் பெருக்காக நின்றருளிய வகையும், இறவாத இன்ப அன்பாகவே அமைந்த வகையும், ஆணவம் இறுதியினையடையும் வீடு பேற்றுக்காலத்து, அடியேனுக்கு எளிவந்து திருவருள் செய்யும் பான்மையும் சொல்லொணா வியப்பினையுடையது.

(வி - ம்.) ஒளி-மூதறிவு; திருவடியுணர்வு. மனத்திருள் - அகவிரு ளாகிய ஆணவ வல்லிருள். கடை-இறுதி.

'எளிவந்த' என இறந்த காலத்தாற் கூறியது தெளிவுபற்றியென்க. இது கால வழு வமைதி. அகவிருளாகிய ஆணவ வல்லிருள் உண்மை வருமாறு:

"இங்கிதன் நாமம் கூறின் இவ்வுலகத்து முன்னாள்
தங்கிருள் இரண்டில் மாக்கள் சிந்தையுட் சார்ந்து நின்ற
பொங்கிய இருளை ஏனைப் புறவிருள் போக்கு கின்ற
செங்கதி ரவன்போல் நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்"
—கஉ. பாயிரம், க0. (சு)

இணைக்குற ளாசிரியப்பா

அருள்பழுத் தளிந்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க் கமிர்த வாரி நெடுநிலை
மாடக் கோபுரத் தாடகக் குடுமி
மழைவயிறு கிழிக்குங் கழுமல வாணநின்
வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவை யுடன்இருந்த பரம யோகி
யானொன் றுணர்த்துவன் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமுந் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்
தியாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியுந் தந்தைய ராகியும்
வந்தி லாதவர்இல்லை யான்அவர்
தந்தைய ராகியுந் தாய ராகியும்
வந்தி ராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லை, யான்அவை
தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை, அனைத்தே
காலமுஞ் சென்றது யான்இதன் மேலினி
இளைக்குமா றிலனே நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலுந்
தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே யாயினும்
இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திர மாக என்னையும்

இடர்ப்பிறப் பிறப்பெனும் இரண்டின்
கடற் படாவகை காத்தல்நின் கடனே.

௧—௯. அருள்பழுத்...வாண

(இ - ள்.) முற்றுத் திருவருள் பெருகி முதிர்ந்து, கனிந்த தண்ணளியாகிய சிறந்த கனியானவன், பொறிகளால் ஏனைப் புலன்களைப் போல் உண்ணமுடியாத பேரின்பப் பெருக்கினை யளிக்கும். நீங்குதலில்லாத பெரும்பித்தெனப்படும் பெருங்காதலானவன், தன்மாட்டு ஓங்குங் காதல் நீங்குதலில்லாத மெய்யடியார்கட்கு, உண்ணக் குறையாப் பேரமிழ்தப் பெருங்கடலின் நீடிய வைப்பாக உள்ளவன், மேன்மாடங்கள் நிறைந்துள்ள கோபுரங்களில் பொன்னினுன் ஆகிய உச்சிகள் மேகங்களின் நடுவிடத்தினைப் பிளக்கின்ற திருக்கழுமலத் திருவூரினைத் திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளி இருப்பவனே!

(வி - ம்.) அளிந்த-கனிந்த. கருணை-தண்ணளி. காதல்-பெரும் பித்து. வாரி-கடல். வாணன்-வாழ்கின்றவன்.

௯—௧0. நின்...தொடங்கி

(இ - ள்.) தேவரீருடைய திருக்குறிப்பினின்று ஒரு சிறிதும் தவறுதலில்லாத உலகமெலாம் பெறுது பெற்றெடுத்தும், மூப்பினைப் பெறுத இளமுலைகளையுடைய உமைப்பெருமாட்டியாருடன் எழுந்தருளியிருந்த சிறந்த அகத்தவமாகிய யோக வடிவினனே, எளியேனுக்குத் தந்தையானவனே, அடியேன் மனத்துத் தோன்றிய ஓரெண்ணத்தினை நின்திருவடிக்கண் விண்ணப்பித்துக்கொள்வேன். முன்னளில், எல்லா உலகங்களையும், அளவில்லாத உயிரினங்களையும், ஒழிந்த அனைத்தையும் முறையே காரியமாக உண்டாகும்படியும், சார்பாகத் திகழும்படியும் தேவரீர் அறிவின்கண் நினைத்தருளிய காலந் தொடங்கி,

(வி - ம்.) வழுவா-தவறுதலில்லாத. காட்சி - திருக்குறிப்பு. மேனள்-முன்னள். யோனி-பிறப்பு; உயிர். நிகிலம்-ஒழிந்தவைகள். நினைந்தநாள் - திருவுள்ளங்கொண்டருளியநாள். திருவுள்ளம் திருவருட்டிருக்குறிப் பென்றும் வழங்கப்பெறும். ஈண்டுத் திருவுள்ளம் நம்மனோர்க்குரிய மனம் போன்றதன்று. சிவபெருமானின் அறிவாற்றலின்கண் என்று கொள்க. சிவபெருமான் தன்னியல்பில் நிற்குங்கால் அறிவன் எனப்படுவன். ஆருயிர்கட்குத் திருவருள்புரிய உன்முகங் கொள்ளுங்கால் ஆற்றலோன் எனவுங் கொள்ளப்படுவன். ஆற்றலோன் எனினும் அருளோன் எனினும் ஒன்றே. உன்முகம்-உன்னித்தமுகம். உன்னுதல்-நினைத்தல். முகம்-வெளிப்பாடு.

இறைவன் கொண்டருளும் திருவருட்டிருவுருவில் உறுப்புக்களனைத்தும் வெளிப்பட்டுத் தோன்றும் முறைபற்றி முகமனுக மொழியப்படும். அவ்வுண்மை வருமாறு:

"உருவருள் குணங்க ளோடும் உணர்வருள் உருவில் தோன்றும்
கருமமும அருள்அ ரன்றன் கரசர ணுதி சாங்கம்

தருமருள் உபாங்க மெல்லாந் தானருள் தனக்கொன் றின்றி
அருளுரு உயிருக் கென்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே."
—சிவஞான சித்தியார், க. உ —கஅ.

கக—உ0. எனைப்பல ..இல்லை

(இ - ள்.) பல்வேறு வகையான பிறப்பினுக்கு இடமான நிலையியற்பொருளும் இயங்கியற் பொருளுமெனப்படும் தாவர சங்கமங்களும், நினைத்தற் கருமையான பாகுபாட்டினையுடைய உயர்திணையாகிய மக்கட்டொகுதியைச் சார்ந்த யாவரும், அவ்வாறே அஃறிணைப் பகுதிக்கண்பட்ட எல்லாமும் அடியேனுக்கு ஒவ்வொருவராகத் தாய்மாராகியும் தந்தையராகியும் வந்து பொருந்தாதவர்கள் இல்லையாகும். அடியேன் அம்முறையில் வெவ்வேறு பிறவிகளில் அத்தந்தை தாய் ஆயினார்க்குத் தந்தை தாயராகியும், வாராததும் இல்லையாகும்; யான் முன்னெடுத்த பிறவிகளில், பிறந்து கழியாத நிலனும் இல்லை; பிறந்த அவ்விடத்து இறந்தொழியாத நிலனும் இல்லை. வேறாக எளியேனை உணவாகக் கொள்ளாத உயிர்களும் இல்லை; இதுபோல் அடியேன் அவ்வுயிர்களை உட்கொள்ளாது நீங்கியதும் இல்லை.

(வி - ம்.) யோனி-பிறப்பு; பிறப்புக்கு நிலைக்களமானகுறி. பேதம்-வேறுபாடு. உற்றுநோக்குமிடத்தில் ஆருயிர்கள் மாறிமாறிப் பிறந்து வருகின்ற முறையில் ஒவ்வொன்றும் தந்தை தாயராகியும், மக்களாகியும் வாராதிருக்கும் வாய்ப்பு ஏற்படாமற்போவதற்கில்லை. இவ்வுண்மையினை உற்றுநோக்கின், ஆருயிர்களிடத்து ஆண் பெண் என்னும் உருவ வேற்றுமை ஒரு சிறிதும் இல்லையென்பது தெற்றெனப் புலனாகும். மேலும் சைவ உணவாகிய தூய காய் கறியுணவினை உட்கொள்வதே பொருத்தம் என்னும் நல்லுணர்வு திருவருளால் ஆறறிவு வாய்ந்த மக்கட்கே உண்டாகும் மாண்பினதாகும். அதனை வலியுறுத்தி உள்ளத்துரங்கொள்ளும்பொருட்டு ஐயறிவு வாய்ந்த ஆனினமும் எருமையினமும், யாட்டினமும், யானையினமும், குரங்கினமும், குதிரையினமும், அணிலினமும், கிளியினமும் முதலாகிய சில தாழ்ந்த இனங்கள் சைவவுணவே உட்கொண்டு வலுவுடன் வாழும்படி எல்லாம்வல்ல முழுமுதல்வன் அமைத்துள்ளனன்.

அந்நிலை வாய்க்கப்பெறாத உயிரினங்கள் உயிர்நின்ற உடலையே உணவாகக் கொள்ளக் காண்கின்றனம். அம்முறைபற்றி ஊனை உணவாகக் கொள்ளலும், அதுபோல் தன்னூன் பிறவற்றால் உணவாகக் கொள்ளப்படுதலும் ஈண்டுக் குறிக்கப்பட்டன.

உ0—உக. அனைத்தே...கடனே

(இ - ள்.) அவ்வளவினதாக வாழ்நாள் எனப்படும் அகவையும் கழிந்தது. இவ்வகையாகிய அடியேன், இத்தகைய மாறுதலில் பின்னும் உள்ளம் நைந்து தளர்ந்து சோர்வுறுமாறு இல்லாதவனாகின்றேன். அடியேன் திருவருட் பெருவெளிக்கண் காணப்படும் இயற்கைப் பேரொளியே! தேவரீரது திருவுள்ளத்தாம் திருக்கோலத் திருவுருவத்தைத் தெரிவிக்கும் செந்தமிழ்த் திருமா மறையாம் திருவைந் தெழுத்தின் தனிச்சிறப்பினை எடுத்தோதும் இறைவன் நூலெனப்படும்தனித்தமிழ்த் திருமாமறை திருமாமுறைகளை முறைப்படி பலகாற் கற்றுப் பழகியதும்

இல்லை; தேவரீருடைய அப்பால் நிற்கும் நிலையினை ஓராற்றல் புலப் படுத்தும் அருவுருவத் திருமேனிகளையும், அடியேன் தன்மையினையும், மும்மல இயல்பினையும் முற்ற விளக்கும் அந்நூற்களைத் திருவருளால் கற்றுணர்ந்த நல்லாசான் தன்னை யடுத்து ஓதி யுணர்ந்தவருடன் பழகி யதும் இல்லேன். இவ்விருவகைப் பயிற்சியும் இல்லேன் ஆயினும் எளியேனுக் கியைந்த ஒரு பொழுதில் அடியேன் அருச்சித்தது பச்சிலை யாயினும், நன்மண நறுமலராயினும், உன்னைப் புகழ்ந்து பாடிய சொற்கள், நின்காட்சியினைப் பெறுதற்குரிய மந்திரமாகக் கொண்டு, நாயினுங் கடைப்பட்ட அடியேனையும், துன்பமே விளைக்கும் பிறப்பு இறப்பு என்கின்ற இருவகைக் கடலினிடத்துச் சிக்காத வண்ணம், காத்தருளுதல் நின்கடனாகும்.

(வி - ம்.) இறைவனை முறையுறத் தொழத் திருவருள் நூலின் துணை வேண்டும். அங்ஙனந் தொழுதல் ஞானத்துடன் தொழும் பூசையாகும். கண்ணப்ப நாயனார் காதல் மிக்குற்றுக் கண்டுங் கேட்டுங் கொண்ட வுணர்வுடன் தொழுதல் கண்டு தொழுதலாகும். இவ்வுண்மை வருமாறு :

"ஞானத் தால்தொழு வார்சில ஞானிகள்
ஞானத் தால்தொழு வேனுனை நானலேன்
ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானுந் தொழுவனே."

—ரு கூக—௩.

"வன்திறல் உந்தையோடு மாவேட்டை ஆடிப்பண்டிக்
குன்றிடை வந்தோமாகக் குளிர்ந்தநீர் இவரை ஆட்டி
ஒன்றிய இலைப்பூச்சூட்டி ஊட்டிமுன் பறைந்தோர் பார்ப்பான்
அன்றிது செய்தான் இன்றும் அவன்செய்த தாகும்என்றான்."

—கஉ. கண்ணப்பர், கஉக.

செய்வோர்க் குரியது பணிசெய்தல். செய்விப் போர்க்குரியது பணநல்கல். இவ்விரண்டும் நீங்காக் கடமை எனப்படும். "அம் முறையில் காத்தல்நின் கடனே" என்றனர்.

இவ்வுண்மை வருமாறு :

"நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்."
என்க டன்பணி செய்துகி டப்பதே.

—ரு. கக—க. (எ)

வெண்பா

கடலான காமத்தே கால்தாழ்வர் துன்பம்
அடலாம் உபாயம் அறியார்—உடலாம்

முழுமலத்தை ஓர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார்.

(இ - ள்.) மூன்று திருக்கண்களையுடைய (சிவபெருமானின் திருவடியினை தொழுவதோ டொப்ப தெனப்படும் அவன் வீற்றிருந் தருளும் திருவூரைத் தொழுவதும்) சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கழுமலத்தைக் கைகூப்பித் தொழாதவர் மெய்யுணர்வுடையவரா கார். அவர் கடல் போன்ற பேராக்காமத்தே அழுந்தி மீளார். அதனால் பிறவித் துன்பம் நீங்காது வந்து வருத்தும். அதனை நீக்கிக் கொள்ளும் வழி வகைகளும் அறியார். பிறவிக்கு வித்தான ஆணவ மலத்தைப் போக்கிக் கொள்ளவும் மாட்டார்.

(வி - ம்.) கால் ஆழ்வர் - வீழ்ந்து அழுந்துவர். உபாயம்-வழி வகைகள். ஊரைத் தொழுவதும் உடையானைத் தொழுவதோ டொக்கும் என்னும் உண்மை வருமாறு :

"நின்று மலர்தூவி - இன்று முதுகுன்றை
நன்றும் எத்துவீர்க் - கென்றும் இன்பமே."

—க. கஙு—க.

இரு நால்வர் வழி நிற்கும் நன்னெறிச் செல்வர்களாகிய பெரு மக்கள் அன்னவரருளிய திருமாமறை திருமாமுறைகளின் வழிப் பூசித்து வருதல் வேண்டும். அதுவே அவர்தம் திருவாணையும் திருக் குறிப்புமாகும். இரு நால்வராவார், நால்வரொடு நம்மூலர் சேரர் அம்மை சேக்கிழார், சாலருளாளரடி சாற்று என்பதிற் கண்ட எண்ம ராவர். அம்மை - காரைக்காலம்மையார் பிறவித் துன்பந் துடைக் கும் வாயில் திருமுறை வழிச்செய்யும் வழிபாடேயாம்.

அவ்வுண்மை வருமாறு :

"நல்ல புனற்புகலித் தமிழ்ஞான சம்பந்தன்நல்ல
அல்லி மலர்க்கழனி ஆரூரமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினால் வழிபாடிவை [1]பத்தும்வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பந் துடைப்பாரே."

—க. கOஇ—கக. (அ)

கட்டளைக் கலித்துறை

[தோழி அறத்தொடு நிற்றல்]

தொழுவாள் இவள்வளை தோற்பாள் இவளிடர்க் கேயலர்கொண்
டெழுவாள் எழுகின்ற தென்செய வோஎன் மனத்திருந்தும்
கழுவா மணியைக் கழுமல வாணனைக் கையிற்கொண்ட
மழுவா ளனைக்கண்டு வந்ததென் றுலோர் வசையில்லையே.

1. 'அந்தண் சோற்றுத்'.—க. உஅ-கக

(இ - ள்.) முதல்வனைக் காணாது கேள்வி மாத்திரையின் வருந்துமிவள், அவன்றன் அரும்பெரும் சீர்கேட்டுத் தொழுவாள்; இவள் தன் முன் கையில் அணிந்துள்ள வளைகள் கழன்று விழுமாறு மெலிவாள்; இங்ஙனம் வருந்துதற்கு ஆற்றாதவளாய் உண்மையறியாது பிறர் கூறும் பழி மொழிக்கும் அஞ்சி இடருறுவாள் தன் நிலையினின்றும் நீங்குவாள். இங்ஙனம் உள்ள வேறுபாடு கொண்டு இவள் எழுகின்றது யாது செய்யவோ? அறிகின்றிலம். எளியேன் மனத்தில் நீங்காதிருந்தும், இயல்பாகவே ஒளியுந் தூய்மையும், மிக்குடைய செம்மணியாகிய மாணிக்கத்தைத், திருக்கழு மலத்தைத் திருக்கோவிலாகக் கொண்டருளிய சிவபெருமானை, வலத்திருக்கையிற் கொண்டருளிய மழுவாளனை, கண்டுவந்து வந்த களிப்பினால் நேர்ந்தது இந்நிலை யென்றால் ஒரு பழியும் நேராது.

(வி - ம்.) வளை - வளைவாகிய அணிகலன்களைக் குறிப்பதால் ஆகுபெயர். அலர் - பழிமொழி. கழுவாமணி - இயல்பாகவே ஒளியுந் தூய்மையும் வாய்ந்தமணி. மணி கழுவுதல்: நிலத்திடைக் கிடந்தெடுக்கும் ஏனை மணிகளைக் குற்றந்திரக் கழுவுதல் வேண்டும். ஒளி மிகப் பட்டம் தீட்டுதல் வேண்டும். சிவபெருமான் இயற்கைச் செம்மணியை ஒப்பவன் ஆதலின் கழுவா மணியை என்றனள். (௬)

நேரிசை யாசிரியப்பா

வசையில் காட்சி இசைநனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீ ருகத்து
வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற
மையறு சிறப்பில் தெய்வத் தன்மைப்
புகலி நாயக இகல்விடைப் பாக
அமைநாண் மென்தோள் உமையாள் கொழுந
குன்று குனிவித்து வன்தோள் அவுணர்
மூவெயில் எரித்த சேவகத் தேவ
இளநிலா முகிழ்க்கும் வளர்சடைக் கடவுள்நின்
நெற்றியிற் சிறந்த வொற்றை நாட்டத்துக்
காமனை விழித்த மாமுது தலைவ
வானவர் அறியா ஆதி யானே
கல்லா உளத்திற் புல்லறிவு தோடர
மறந்து நோக்கும் வெறுந்தண் நாட்டத்துக்
காண்டோறுங் காண்டோறும் எல்லா மியாண்டை
யாயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவன பலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வது மாகித்

தேண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனப்பல வாகி
இல்லன வுளவா யுள்ளன காணுப்
பன்ஞள் இருள்வயிற் பட்டேன் அன்னதும்
அன்ன தாதலின் அடுக்கும தேன்னேனிற்
கட்புலன் தேரியாது கோட்புறும் ஒருவற்குக்
குழிவழி யாகி வழிகுழி யாகி
ஒழிவின் ரேன்றின் ஒன்று தடுமாற
வந்தாற் போல வந்த தேந்தைநின்
திருவருள் நாட்டங் கருணையிற் பேறலும்
யாவையும் எனக்குப் போய்யேனத் தோன்றி
மேவரும் நீயே மெய்யேனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பேற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுந் துணிவுபோன் றனவே.

க—கூ. வசையில்...கடவுள்

(இ - ள்.) குற்றமற்ற தோற்றத்தினையுடைய பொருள் சேர் புகழ் மிகுதியும் விளங்க, முன்ஞளில் உண்டாகிய பன்னிரண்டு ஊழிகளில் வெவ்வேறு திருப்பெயர்களால், எவ்வகை அழிவு மின்றித் திகழ்ந்த குற்றமற்ற பெருமையினையுடைய, தெய்வத்தன்மை பொருந்திய, (ஆருயிர்கள் அனைத்திற்கும் நீங்காப் புகலிடமாகிய) திருப்புகலி யென்னும் திருவூரின் முழு முதல்வனே! அறத்திற்குப் பகையாம் தீயோரை வருத்தும் அறத்தின் வடிவாம் ஆனேற்றினை யூர்ந்தருள் பவனே, மூங்கிலும் நாணும்படியான மென்மையும், பணைப்பும், பொலிவும் பொருந்திய திருத்தோளினையுடைய உமையம்மையாருக்குத் தலைவனே, பொன்மலையினைக் கண்ணுதலாற் பொற்புறு வில்லாக வளைவித்து வலிய தோளினையுடைய தானவர் இருக்கையாகிய திரியும் மதில் மூன்றினையும் நகைத்து எரித்தருளிய ஏறு சேவகனுகிய மெய்த் தேவனே, இளம்பிறை வளமுற அரும்புகின்ற விரிசடைக் கடவுளே!

(வி - ம்.) வசை - குற்றம். காட்சி - தோற்றம். நனி - மிகுதி. முன்ஞள் - பண்டு; தொன்மை. உகம் – ஊழி. விடை - ஆனேறு. இகல் – பகை. அமை - மூங்கில். கொழுநன் - தலைவன்; நாயகன். குன்று – மலை. குனிவித்து - வளைவித்து. முகிழ்த்தல் - அரும்புதல்.

பன்னிரண்டு ஊழிகளால் ஏற்பட்ட திருப்பெயர்கள் பன்னிரண்டும் வருமாறு: க. பிரமபுரம், உ. வேணுபுரம், ௩. புகலி, ௪. வெங்குரு, ௫ தோணிபுரம், ௬. பூந்தராய், எ. சிரபுரம், அ. புறவம், கூ. சண்பை, க0. காழி, கக. கொச்சை வயம், கஉ.

கழுமலம் என்பன. இதன் விளக்கங்களைக் கழகவெளியீடு அகத்தியர் தேவாரத்திரட்டுரையில் விரியக் காண்க.

கூ—உo. நின்...பலவாகி

(இ-ள்.) தேவரீருடைய அழகிய திருநெற்றியின்கண் மிகச் சிறந்த ஒப்பில்லாத ஒற்றைத் திருக்கண்ணால், முறையின்றி அறந் திறம்பி முன்வந்த மன்மதனை விழித்து எரித்தருளிய, பெரிய முதன்மை பெற்ற மூதறிவான முழு முதல்வனே! தேவரறியாத மாறிலா முதற் பொருளே, உண்மை நூல்களைக் கற்றுணர்ந்தொழுகும் அறிவில்லாத வுள்ளத்தில் புன்மைத் தன்மை நீங்காத சிற்றறிவு தொடரப்பட்டு, மறப்படைந்தறியும் பயனில்லாத குளிர்ந்த நோக்கத் தால், பலகால் காணுந்தோறும், உலகியற் பொருள்கள் முழுவதும் எவ்விடத்திலுள்ளனவாயினும், அவையும், மற்றுமுள்ளனவும், அடி யேனுக்குரியதும், பிறருக்குரியதும் ஆகிய பலவும் பல ஒடுங்குவனவு மாகி இறப்பனவும், பிறப்பனவும், நிகழ்ந்து கொண்டிருப்பனவும் ஆகித் தெளிந்த கடலாற் சூழப்பட்ட நிலவுலகத்தில் தொகுதியாகக் காணப்படும், மணலினைக் காட்டினும், அளவில்லாத பற்பல வகையாகி,

(வி-ம்.) நாட்டம்-கண். காமன்-மன்மதன்: கருவேள். ஆதி-முதற்பொருள். தண்-குளிர்ச்சி. அழிவன-ஒடுங்குவன. நெற்றி ஒற்றை நாட்டத்தன்மை வருமாறு:

"நுதல்விழி நாட்டத் திறையோன் முதலாப்"

—மணிமேகலை, க. விழா, வரி-கூச

உக—நச. இல்லன...போன்றனவே

(இ-ள்.) ஒடுங்குந் தன்மையவாகிய பொருள்கள் ஒடுங்கிய நிலைக் களத்தினின்றும் தோன்றுவனவாகியும், காணப்பட்டுள்ள பொருள் கள் ஒடுங்குவனவாகியும் இம்முறையாகப் பலகாலம், அறியாமையாகிய பேரிருளில் சிக்குண்டு மயங்கினேன்; மேற்கூறிய பொருட்களினிலக் கணம், அழிதன் மாலையதே. ஆதலினால் அவைகட்கு அவ்வகையாதல் பொருத்தமுடைத்தேயாம். அஃதெக்காரணத்தாற் கூறுகின்றா யெனின், கண்ணறிவினால் விளக்கமுற நோக்காது, மனக்கலக்கம் எய்தும் ஒருவனுக்குக் குழியே வழியாகவும், வழியே குழியாகவும், நீங்காமல் ஒன்றுக்கொன்று, மயங்கி வந்ததையொப்ப நேர்ந்தது; எந்தையானவனே! தேவரீருடைய திருவருள் நோக்கத்தினைத் திரு வருளால் அடியேன் அடைதலும், இயங்குதிணை நிலைத்திணையாகிய உலக முழுவதும்; நின்திருவருள் நாட்டம் எய்திய அடியேற்கு நிலை யாமையுடையதாகக் காணப்பட்டும், பொருந்துதல் அருமையான ஒப்பில் ஒருவனாகிய நீயே என்றும் மாறா உண்மைப் பொருளாகக் காணப்பட்டருளினை; சிற்ப நூல்வல்லவனாகிய ஒருவன் கைபுனைந் தியற்றிய சிற்ப ஓவிய வேறுபாடுகள் முழுவதும் சிறிதும் விடாமல் கையால்தடவிய குருடருக்கு அவை சுவராகவே தோன்றும், தணிவை யொத்தன.

(வி-ம்.) இருள்-ஆணவ வல்லிருள். கொட்புறுதல்-மனக்கலக் கம் எய்துதல். பொய்-நிலையாதது. மெய்-நிலைப்பாயுள்ளது. (சo)

வெண்பா

எனவே யெழுந்திருந்தாள் என்செய்வா ளின்னம்
சினவேறு காட்டுதிரே யென்னும்—இனவேகப்
பாம்புகலி யாநிமிரும் பன்னுச் சடைமுடிநம்
பூம்புகலி யானிதழிப் போது.

(இ - ள்.) கூட்டமாகிய வேகத்தினையும், பலவாகிய நாவினையுமுடைய பாம்புகள் ஒலித்து எழுகின்ற திருச்சடை முடியினைத் தாங்கிய நம் பூம்புகலியில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுடைய கொன்றை மலர் மாலையென்று கூறுதலும் உயிர்த்தெழுந்தாள். கொன்றை மலர்மாலையைக் காணுமையால் என் செய்ய வல்லாள், இவ்வகைத் துன்பம் எய்திய உய்தி இல்லாத என்னுடைய நிலைகண்டும் தீமையின்கண் கடுஞ்சினங் காட்டும் அப்பெருமானின் விடைக்காட்சியினைக் காட்டுகின்றீர்கள் என்று வருந்திக் கூறுவாள்.

(வி - ம்.) பாம்பு கலி-பாம்பு ஒலிக்க. பூம்புகலி-புகலித்திருவூர்.

நஞ்சு பாயும் வேகம் மூவகை. அவை வருமாறு:

க. காற்று வேகம் உ. மழை வேகம் ந. தீ வேகம் என்பன. பாம்பின்பல் க. காளி உ. காளாத்திரி ந. எமன் ச. எமதூதன் என்பன. இந்நச்சுப் பற்களால் பாம்பு பசி, அச்சம். நோவு, சினம், நஞ்சுமிகுதல், மிதிக்கப்படுதல், தேவர் முனிவர் காலன் முதலியவர்களின் ஏவல் ஆகியவை நேர்ந்த காலத்துப் பிறவுயிர்களைக் கடிக்கும்.

காற்று வேகம் எட்டு, மழை வேகம் பத்து' தீவேகம் பத்து வகைகளாகும். இவ்வேகங்கட்கு முறையே மாத்திரை ஐம்பது, பதினெட்டு, தொண்ணூற்றெட்டு என்ப.

காற்று வேகத்தின் குறிகள் வருமாறு:

க. (முதல் வேகம்) மூர்ச்சித்து வேர்க்கும் உ. வெதுப்புண்டாகும் ந. கண் செருகும் ச. வாந்தியுண்டாகும் ரு. கோழை வடியும் சு. அறிவழியும் எ. விறைத்திடும் அ உயிர்போகும்.

மழை வேகத்தின் நிலை-க. மயிர்ச்செறியும் உ. வாயுலரும் ந. மதிமயங்கும் ச. கோழைமிகும் ரு. தலைநடுங்கியறிவழியும் சு. கண்விழித்து முகடு பார்க்கும் எ. உடல் விறைக்கும் அ. அடங்கும் கூ. வெண்ணீர் வெளியாம் கO. உயிர் நீங்கும்.

தீ வேகத்தின் நிலை க. கண்சிவந்து முகங்கருகும் உ நீர்தடித்துக் கடுத்திறங்கி முகம் வெளுத்து உடல்முழுதும் மயிர்க்கூர்ச்செறியும் ந. வாய் குழறிச் சிந்தை கலங்கிஉடல்நொந்து விழும். ச. குடலினைந்து மூக்கினீர் வடிந்து பொலிவழியும் ரு. விழியும் உடலும் வெடுவெடென நடுங்கிடும் சு. பற்கடித்து உடல் விறைக்கும் எ. சொற்கெடும் அ. மூச்செழுந்து கண்கள் மேனோக்கும் கூ. உயிர் ஒடுங்கும் கO. உயிர் இறக்கும்.

இதழி: கொன்றை. இதழ்+இ—இதழி. இ. படர்க்கையீறு.

கட்டளைக் கலித்துறை

போதும் பெறுவிடில் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறுவிடில் நெஞ்சுண்டின் றேயிணை யாகச்சேப்பும்
சூதும் பெறுமுலைப் பங்கர்தேன் தோணிபு ரேசர்வண்டின்
தாதும் பெறுத அடித்தா மரைசேன்று சார்வதற்கே.

(இ – ள்.) வள்ளமெனப்படும் கிண்ணத்தையும், சொக்கட்டான் காயையும் ஒப்பாக அமையப்பெறுத முலைகளையுடைய பெருமாட்டியை உலகுய்தற்பொருட்டு இடப்பாக ஓர் உடம்பின்கண்ணே கொண்டருளியவர், மாதவஞ் செய்தென் திசைக்கணுள்ள திருத்தோணி புரமென்கிற சீகாழித் திருப்பதியினைச் சிறந்த இடமாகக் கொண்டு வீற்றிருந்தருள்பவரினுடைய, வண்டுகள் மொய்க்கின்ற இனிய பூந்தாள்களையும் பெற்றிராத திருவடித் தாமரைகளைத் திருவருளால் போய் அணைவதற்கு நல்ல நறுமணமிக்க மலர்கள் பெறுவிடில் பசுமையும் மணமும் நிறைந்த பச்சிலைகள் உண்டு, அப்பச்சிலையும் கிடையாவிடில் எல்லா விடங்களிலும் தூய்மையும் நறுமணமும் வாய்ந்த புனலுண்டு, அதுவும் எய்தற்கரிய தாயின் தற்கிழமைப் பொருளாகிய நெஞ்சமுண்டல்லவா? (அதனைக் கொண்டு வழிபடுக என்பது குறிப்பெச்சம்.)

(வி – ம்.) பூக்கள் கோட்டுப்பூ, கொடிப்பூ, செடிப்பூ, நீர்ப்பூ என நால்வகைப்படும். பூக்களுக்கு என விதிக்கப்பட்ட நான்முறையன்றியும் எல்லாப் பூக்களும் இறைவனுக்குவப்பாம் என்னும் உண்மை வருமாறு:

"கூறும் பூவிங் கிதுவென்று குறிப்பாருளரோ குவலயத்தில்
நாறும் பூவுந் தேவருக்காம் நாறாப்பூவுந் தேவருக்காந்
தேறும் பூவை யாகமத்திற் கரைகண் டவரார் சிவன்முடிமேல்
ஏறுக பூவாய் வனத்திலுள்ள வெல்லாப் பூவும் பயன்படுமால்.

—புட்பவிதி, ருச.

இவ்வுண்மை பண்டைச் செந்தமிழ் நூலிலும் காணலாம். அது வருமாறு:

"நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
ரு. கடவன் பாரி கைவண் மையே"—புறம், கoசு.

பச்சிலைச் சிறப்பு வருமாறு:

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே." —கo. கoக

பச்சிலை யொன்றே வேதிப்பெனச் சொல்லப்படும் இரும்பைப் பொன்னாக்கும் இரச வாதத் தொழிற்கு எற்புடையதாகும்.

எதுங்கிடையாவிட்டால் நெஞ்சுண்டென்பது அஞ்செழுத்தும் திருவருளால் நெஞ்சழுத்தி நீங்கா நினைவினுடன் நிலைபெற்றுத் திகழும் மெய்யடியார்கள் நெஞ்சமென்பதாம். அவர்தம் உள்ளத்தே "கொல்லாமை ஐந்தடக்கல் கொள்பொறுமை யோடிரக்கம், நல்லறிவு மெய் தவம் அன்பெட்டு." என்னும் பூமலி நற்பண்பெட்டும் நீங்காத உள்ளத்துடன் "சிவசிவ" என நினைந்துகொண்டு வழிபடுக.

வழிபாட்டில் ஐம்பூத நினைவுக்குறியாக ஐந்து கருவிகள் கையாளப் படுகின்றன, க. மணி. இஃது இன்னோசை தரும் இயல்பிற்று. எல்லாருள்ளத்தையும் வழிபாட்டிற் கொள்ளச்செய்யவல்லது. இது வானின் குறிப்பாகும். உ. நறும்புகை: இது காற்றின் குறிப்பாகும். வழிபாட்டுக்குரிய இடமனைத்திலும் நறுமணம் கமழச்செய்வது. ௩. சுடரொளி: நெய்விளக்கு ஒளியும் வெப்பமும் நறுமணமும் தந்து வழிபாட்டில் தெய்வ வடிவினை நினைவூட்டுவது. தீயின் குறிப்பாகும். "விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்னும் திருமாமறையினை ஈண்டுன்னுக. ௪. புனல்: நீரின் குறிப்பாகும். திருவருட்டன்மையுடையது: ரு. நறுமலர்: நிலத்தின் குறிப்பாகும். வழிபடுவார்தம் உள்ளமென்மையை விளக்குவதாம்.

"போற்றி போற்றி" என்னும் செந்தமிழ்த் திருமந்திரம் ஓதிப் பூத்தூவிப் பூசை செய்வார்க்குத் திருவடிப் பேற்றினை நல்கவல்ல திருமந்திரம் அப்போற்றி மறையேயாம். (௧௨)

இணைக்குறள் ஆசிரியப்பா

சார்ந்தவர்ப் புரக்கு மீர்ஞ்சடைப் பெரும
கருணை முதுவெள்ளம் பெருகு திருநயன
கைவல நெல்லியங் கனியது போலச்
சைவசித் தாந்தத் தெய்வவா கமத்தை
வரன்முறை பகர்ந்த திருமலர் வாய
பவளவரை மீதில் தவளமின் னேன்னச்
செப்பரு மார்பணி முப்புரி நூல
பேரிக லாணவக் காரிரு ளினுக்கும்
பின்றொடர் வல்வினை வன்றொட ரினுக்கும்
மாயைமா மாயேய மாயபே யினுக்கும்
அஞ்சலேன் றமைத்த கஞ்சமேன் கரதல
அருமறைச் சிரத்தும் பெருமைமேய் யன்பர்
துங்கஇத யத்துந் தங்குபோற் பாத
துன்னிய பயோதர மின்னின மிடைதலின்
அளப்பரும் பெருமை வளத்தினை விளைத்தலின்

சந்திர திலகஞ் சிந்துர மருவலின்
உறுகண் தீரவந் துறுமுழை யுறுதலின்
சாதமுறை சுழீஇச் சோதிமீ தமர்தலின்
பணையெழு மரவம் பிணையோடு மேவலின்
காமரஞ் சேவ்வழி காமரி னெய்தலின்
அளகை யெதிரேன்னு மாசையுற் றுறைதலின்
ஆடக மருவி நீடறை பேறுதலின்
நாட்டியத் தோகை யீட்டமங் கணைதலின்
அகத்தியன் மன்னும் மகத்துவஞ் சிவணலின்
மலையா சலமேன நிலைசேர் மாடம்
மாளிகை சூழ்ந்த சூளிகைப் புரிசை
நேமிமால் வரையேனப் பூமிமீ திலங்கும்
காழிமா நகரத் தூழிதோ றமர்ந்த
அமையா வன்பி னுமையாள் கோழுந
தேரியநான் முகன்பணி பேரியநா யகநின்
போன்மலர்ப் பாதஞ் சேன்னிவைத் திறைஞ்சுதும்
மேற்படு மிதயப் பாற்கடல் நடுவுள்
பரம்பரை தவறு வரம்பேறு குரவன்
மருளற இரங்கி யருளிய குறியேனும்
நிந்தையில் கனக மந்தரம் நிறுவி
மாணறி வேன்னுந் தூணிடைப் பிணித்த
நேச மேன்னும் வாசுகி கோளுவி
மதித்த லேன்னு மதித்தலை யுஞற்றிய
பேரா இன்பச் சீரா னந்தப்
பேறலறு மமுதந் திறனோடும் பேற்று
ஞானவாய் கோண்டு மோனமா யுண்டு
பிறப்பிறப் பேன்னு மறப்பேரும் பயத்தால்
பன்னாள் பட்ட வின்னாங் ககற்றி
என்னையுந் தன்னையு மறந்திட்டு
இன்ப மேலீ டேய்துதற் போருட்டே.

௧—௧௧. சார்ந்தவர்ப்...கரதல

(இ - ள்.) பேரன்பால் வந்து அணைந்தவர்களைக் காத்தருள்கின்ற, குளிர்ந்த சடையினையுடைய பெருமானே! திருவருட்பெருவெள்ளம் சுரக்கின்ற திருக்கண்களை யுடையவனே! கையின்கண்

உள்ள அகம்புறம் ஒத்துவிளங்கும் அழகிய நெல்லிக் கனியின் நீடிய தன்மை போலச் செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவத்தை விளக்கும், தெய்வத் தன்மை வாய்ந்த திருமாமுறைகள் எனப்படும் செந்தமிழ்ச் சிவாமகங்களை வழிவழி யெனப்படும் மரபு நெறியில் வரலாற்று முறைப்படி திருவாய் மலர்ந்தருளிய அழகிய தாமரை போலும் திருவாயை யுடையானே, செம்மை மிகுந்த பவழ மலையின் மீது, தூய்ய வெண்மையாகிய மின்னல் தங்கிய தென்னும்படி, சொல்லுதற் கருமையாகிய திருமார்பில், அணியப் பெற்றுள்ள மூன்று புரிகொண்ட கற்பிப்பார்க்கு அடையாளமாகிய பூணுநூல் அணிந்துளானே, பெரிதாகிய பகை கொண்ட ஆணவ மாகிய கரிய வல்லிருட்கும் அதனைப் பின் தொடர்ந்து விடாது பற்று கின்ற அறம்பாவம் என்னும் அருங்கயிறும் வலிய கட்டினுக்கும், மாயை மாயேயம் ஆகிய மயக்கி ஆட்டும் பேயினுக்கும் சிறிதும் அஞ் சற்க என்று திருவாய் மலர்ந்தருளிப் புகல்தர அமைத்த மென்மை யாகிய தாமரை மலர் போலும் திருக்கையினை யுடையானே!

(வி - ம்.) ஈர்ஞ்சடை - குளிர்ந்த சடை. நயனம் - கண். கை வலம் – கையிடத்து. வலம், ஏழனுருபு. கஞ்சம் – தாமரை. கர தலம் - கை.

இறைவன் சார்ந்தாரைக் காக்கும் தலைமையன் என்பது சிறப்புக் காவலன் என்பதாம், அவன் பொதுக் காவலாக எல்லாவற்றையும் எல்லா வுயிர்களையும் யாண்டும் எக்காலத்தும் காத்தருள்கின்றமை உலகுணர் உண்மையாகும்.

பெற்றோர்கள் தம்மருமை மக்கட்கு உண்டியும் உடையும், பிறவும் உவந்து நல்கி மனையகத்து அறநெறி காட்டி வளர்த்துக் காப்பது பொதுக்காவலாகும். அவர்களே அம்மக்களை உணர்வின் பொருட்டும் உழைப்பின் பொருட்டும், முறையே கல்லூரிக்கும், தொழிலகத்துக்கும் போமாறு செய்வித்து வேண்டுவன உதவிக் காப்பது ஒரு புடைச் சிறப்புக் காவலாகும்.

ஆசான் மாணவரைக் காப்பதும் உழைப்பீவோர் உழைப்பாளி களைக் காப்பதும் முற்றுமாம் சிறப்புக் காவல். இவை இடையூறின்றி நடைபெறுவதற்கு முறையே மாணவர்தம் பெரு வேட்கையும் அவர் விழைந்து ஆசானைச் சார்தலும், அதுபோல் உழைப்பாளரின் உள்ளன்பும், அவர் செய்யும் உழைப்பின் திறமும், உழைப்பீவாருடன் கொள்ளும் இணக்கமும் வாய்ந்து அவரைச் சார்தலும் இன்றியமை யாது வேண்டப்படுவன. இவை அவரவர் தமக்குத் தாமே ஆக்கிக் கொள்ளத் தக்கன. பிறர் ஆக்குவிக்கும் இயல்பின அல்ல. இது போன்று கடவுளைச் சார்தல் வேண்டும் என்னும் தனி எண்ணம் தாமாக உண்டாக்கிக் கொள்ளத் தக்கது. அதுவே இறைவனைச் சார்தல். அம்முறையில் சார்ந்தாரைக் காத்தல் முதல்வன் கடனுதல் பெறப்படும். இவ்வுண்மை வருமாறு :

"சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கல்லால்
நலமிலன் நாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே."

—ச. கக—சு.

"சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்
சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்—சார்ந்தடியார்
தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்
ஆய்ந்தார்முன் செய்வினையும் ஆங்கு."

—சிவஞானபோதம், ௧௦, ௨—௨.

உடல் நோயுற்றார் வருந்தி மருத்துவனை வலிய வந்தடைவது போன்று, உயிர்நோயாகிய ஆணவப் பிணிப்பின் உண்மை உணர்ந்தார் அது நீக்கும் வன்மை மிக்க மருத்துவனும் முதல்வனைத் திருவருளால் வலிய வந்தடைவர். இதுவே சாரும் நிலையாம்.

இவ்வுண்மை வருமாறு :

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்."

—திருக்குறள், ௩௫௯

௧௨—௨௫. அருமறை...மாடம்

(இ - ள்.) ஆண்டான் திருவருள் தூண்ட மெய்யடியார்கள் வாயிலாக வெளிப்போந்த அரிய தமிழ் வேதங்களின் முடியினும், நின் திருவடி நினைவே யன்றிப் பிறிது எந்நினைவும் எய்தாத பெருமைமிக்க உண்மை நாயன்மார்தம் தூய உள்ளத்தின்கண்ணும், நிலை பெற்றிருக்கும், அழகிய பொன் போலும் திருவடியை உடையவனே, ஈர்க்கிடை போகா இளமுலைகளுமுடைய, மின்போலும் ஒளிவிடுகின்ற இடைகளையு முடைய பெண்கள் கூட்டம் (மாடம்) நெருங்குதலாலும் நெருங்கிய மேகங்களும், மின்னின் கூட்டங்களும் நெருங்குதலாலும், (பொதியை மலையை யொத்த மாடம்) மேலும், அளவிட்டுக் கூறல் ஆகாத பெருமை வாய்ந்த செல்வ வளத்தினைத் தருதலாலும் (பொதியைமலை). உயரம் இவ்வள வினதென்று அளத்தற்கரிய பெருமையினையும் பல வளப்பங்களாகிய மணி முதலியவைகளையும், தினைப்பயிர்களையும் விளையப் பெற்றிருத்தலானும் (மாடம்) சந்தனத் தாலாகிய பொட்டினையும் செஞ்சாந்தினையும் பெற்றெடுத்தலானும் (பொதியைமலை) செழுகம் புல்லினையும், திலகமென்னும் மரத்தினையும் புளிய மரத்தினையும் பெற்றிருத்தலானும் (மாடம்) துன்பம் நீக்கும்படி காற்று வந்து புகுகின்ற இடங்களாகிய சாளரங்களைப் பெற்றிருத்தலானும் (மலை) பெரிய சிங்கங்கள் நெருங்கிய குகைகளை பெற்றிருத்தலானும், (மாடம்) மேன் மாடங்கள் முறையாகச் சூழப் பட்டு ஒளிமிக்க போர்வைகளைப் பெற்றிருத்தலானும் (பொதியை மலை) இளம்புரிகளால் முறையாகச் சூழப்பெற்று, ஒளிமரங்கள் தங்குதலாலும், (மாடம்) பெண்கள் கூட்டத்தாலுண்டாம் ஓசையை இரட்டையாகிய காதலர்களைப் பெற்றிருத்தலானும் (மலையம்-பொதியைமலை) மூங்கில்களுடன், உண்டாகின்ற குங்கும மரங்கள் ஒன்றோடொன்று பிணைபட்டிருத்தலானும் (மாடம்) இசையுடன் கூடிய செவ்வழி யென்னும் பண் அழகாகப் பொருந்தி யிருத்தலானும் (மலையம்) செந்நிறத் தேய்வைகளையும் ஆலமரங்களையும் புளி நரளைகளுடன் பெற்றிருத்தலாலும் (மாடம்) பலவேறு வகையான நாடகங்களைப் பெற்று நீண்ட உள்ளிடங்களைப் பெற்றிருத்தலானும் (மலையம்) ஆராயத்தக்க

பரந்த இடங்களைப் பெற்று நீண்டு குகைகளைப் பெற்றிருத்தலானும் (அல்லாமலும் "ஆடு அகம் மருவி நீடு அறை பெறுதலின் எனப் பிரித்து நடனஞ் செய்யும் இடங்களைப் பெற்று இருத்தலானும் எனவும், பொருள் கொள்க.) (மாடம்) நடனஞ் செய்தலால் உண்டாம் களிப்பின் மிகுதி அவ்விடத்துப் பொருந்துதலாலும் (மலையம்) நடனஞ் செய்கின்ற மயிற் கூட்டங்கள் அவ்விடத்துப் பொருந்துதலாலும் (மாடம்) இல்லற இணக்கம் நிலைபெற்ற மக்களைப் பெறும் வகை பொருந்துதலாலும் (மலையம்) அகத்திய முனிவன் பொருந்தியிருக்கும் மேன்மையினைப் பொருந்துதலாலும் பொதிகை மலை என்று சொல்லும்படியான மேனிலைக ளமர்ந்த மாடங்களையுடைய,

உசு—ருக. மாளிகை...இறைஞ்சுதும்

(இ - ள்) மாளிகைகள் நெருங்கிய, உச்சிகளைக்கொண்ட மதில்கள் புறப்புற மலை யெனப்படும் சக்கரவாள்வரை யென்று சொல்லும்படி நிலவுலகின்மீது நிலவி விளங்கும் சீகாழிப் பதியின்கண், பல்லூழி காலம் விழைந்து குழைந்து வீற்றிருந்தருளும், இத்துணைத் தெனக் கூறலாகாத பேரன்பினையுடைய மலைமகளெனப்படும் வனப்பாற்றலுக்குத் தலைவனே! நின்னையே விழுமிய முழுமுதல்வனென் றுணர நான்முகன் வணங்கும், பெரிய நாயக னென்னும் திருப்பெயருடையவனே, பொன்போலும் நின் திருவடியிணையினை முடிமேல் வைத்து வணங்குவதும்.

ருஉ—சடு. மேற்படு...பொருட்டே

(இ - ள்.) ஈனிமிக உயர்ந்த நெஞ்சமாகிய பாற்கடலின் நடுவில் வழிவழிக் குருமரபி னின்று மாறுதலில்லாத, மிக மேலான மெய்யுணர்வுக் குரவன். அடியேனுடைய இருளொளிர இருண்ட ஆணவ மயக்கம் அறவே ஒழியும்படி, எளியேன்பால் இரக்கமுற்றுச் செவியறிவு உறுத்தியருளிய, உண்மை புணர்தற்கு நிலைத்த குறி என்கிற வசை நீங்கிய பொன்னாகிய மந்தர மலையினை நாட்டி மாட்சிமை கொண்ட அறிவு என்கிற தூணில் கட்டிய அன்பாகிய வாசுகி யென்னும் பாம்பினைத் தொடுத்து, ஆராய்தல் என்கிற கடைதற்றொழிலைச் செய்த, நீங்காத பேரின்ப மென்கின்ற சிறப்புற்ற சீரின்பமாகும். பெறுதற்கருமையாகும் அமிழ்தத்தினை வகையுடன் அடைந்து மூதறிவெனப் படும் சிவஞான வாயால் பேசா நிலைமையினை உட்கொண்டு தோற்றக் கேடுக ளென்கின்ற கொடிய பெரும் பேரச்சத்தால் பலகாலம் அழுந்தியறிதல் எனப்படும் அனுபவம் எய்திய துன்பங்களை நீக்கியருளி, எளியேனையும் தன்னையும் மறந்து, பேரின்பமாகிய மேலிடத்தை அணையும் வகை, நின்னுடைய அழகிய மலர்போலும் திருவடிகளை முடியின்மீது வைத்துக்கொண்டு (வணங்குவோம்) தொழுவோம்.

(வி - ம்.) புரக்கும் - காக்கும். ஈர்ஞ்சடை - குளிர்ந்தசடை. மாயேயம் - மாயையாக்கம். கஞ்சம் - தாமரை. துங்கம் - உயர்வு.

சிவபெருமான் மெய்யன்பர்கட்கு அவரினும் மேலான நிறையன்புடையனாகத் திகழ்வன். அவ்வுண்மை வருமாறு :

"தீர்ந்தஅன் பாய அன்பர்க் கவரினும் அன்ப போற்றி [ற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண் டருளிடும் பெருமை போ

வார்ந்தநஞ் சயின்று வானோர்க் கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்தநின் பாத நாயேற் கருளிட வேண்டும் போற்றி"

—அ. திருச்சதகம், ௬௬.

கைவலம் : வலம் ஏழனுருபு.

ஆவிப்பக்கச் சதாசிவர் எனப்படும், அணுசதா சிவர்க்கும், கேடிலி தேவ நாயனர் எனப்படும் அநந்த தேவ நாயனர் முதலியோர்க்கும் சிவபெருமான் சிவகுருவாய் நின்று வழிவழி மரபு சிறக்கச் செந்தமிழ் மறை முறைகள் அருளிச்செய்த உண்மை வருமாறு :

"ஆரணம் ஆகமங்கள் அருளினுல் உருவு கொண்டு
காரணன் அருளா னுகில் கதிப்பவர் இல்லை யாரும்
நாரணன் முதலா யுள்ள சுரர்நரர் நாகர்க் கெல்லாஞ்
சீரணி குருசந் தானச் செய்தியும் சென்றி டாவே."

—சிவஞானசித்தியார், க. உ—கஅ. (க௩)

வெண்பா

பொருளாசை பெண்ணசை பூவாசை யென்னும்
மருளாசை யாமாசை மாற்றித்—தெருள்ஞான
வேந்தராய் வாழலா மெய்யன்பால் நன்னெஞ்சே
பூந்தராய் நாதரைநீ போற்று.

(இ - ள்.) பொருளின் மீதும், பெண்ணின் மீதும், மண்ணின் மீதும் (உண்மையுணராது கடும்பற்றுக் கொள்வது ஆணவத் தடிப்பாம்) மருளினுல் கொள்ளும் ஆசை மாசெனப்படும். அம்மாசினைத் திருவருளால் மாற்றித் தெளிந்த மெய்யுணர்வெனப்படும் சிவஞான வேந்தராய் வாழ்தல் கைகூடும், எனக்குரிய நன்னெஞ்சே திருவடி நினைவு ஒன்றே கொண்டு, மாரு மெய்யன்பினுல் பூந்தராய் முழு முதல்வராகிய சிவபெருமானைப் போற்றி மந்திரம் புகன்று பூத்தூவிப் பொழுதொரு நான்கினும் தொழுதுநீ போற்றுவாயாக.

(வி - ம்.) பூ - மண். மருள் - மயக்கம். மாசு - அழுக்கு; மலம். தெருள் - தெளிவு.

பூந்தராய் என்பது சீகாழிக்குரிய பன்னிரு திருப்பெயர்களுள் ஒன்று. அவை வருமாறு :

"பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பெருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவம் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்."

—கஉ. சம்பந்தர்—க௪.

பூந்தரா யென்னும் திருப்பெயரின் காரணம் வருமாறு :

"இரணியாக்கனைச் சுவேதவராக உருக்கொடு கொன்று பூமியைக் கொம்பிலேற்று வருத்திய பழிபோகத் திருமால் பூசித்த காரணத்தால் சூந்தராய் எனப்பட்டது."

சங்கநிதி பதுமநிதி என்று சொல்லப்படும் இருநிதியும் பூவுந்தாரு மாய்ப் பூசித்து அழியா வரம் பெற்றமையால் ஆயதெனலும் ஒன்று. (௧௪)

[தலைவனைப் பிரிந்த தலைவி கார்காலம் முதலியன கண்டு வருந்திக் கூறியது.]

போற்றும் பழமறை வாசிப் புனிதர் புகலிவெற்பன்
ஆற்றுந் தவத்தினைக் கண்டே நகைத்த தணிகோள்முல்லை
தூற்றும் புயல்வட காற்றே வடிக்கத் தோடங்குமதிக்
கீற்றிங் கெனது மனங்குழம் பாகக் கிடைத்ததின்றே.

(இ - ள்.) பழமறையென்று பகரப்படும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் கிளந்தெடுத்து நவிலும் நற்றமிழ் நான் மறைகளும் உற்றபரிகளாகக் கொண்டருளிய தூயோர் வீற்றிருந் தருளும் திருப்புகலி யென்னும் திருவூரின்கண் மலைகிழவோன் புரிந் தருளும் அருந்தவத்தினைக் கண்டு, அழகியமுல்லைக் கொடியானது சிரித்தது. மேகம் நீர்த்துளிகளைப் பொழியும் வாடைக்காற்று வந்து வீசத்தொடங்குகின்றது. பிறைக்கீற்று எளியேன் உள்ளம் குழம்பாக உருகும்படி இவ்விடத்தில் தோன்றியது.

(வி - ம்.) "ஆற்றுந் தவத்தினைக் கண்டே நகைத்தது அணி முல்லை" என்பது வரும் தொல்காப்பிய நூற்பாவான் உணரலாம்.

"நோயு மின்பமு மிருவகை நிலையிற்
காமங் கண்ணிய மரபிடை தெரிய
வெட்டன் பகுதியும் விளங்க வொட்டிய
வுறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன்
மறுத்துரைப் பதுபோ னெஞ்சொடு புணர்த்துஞ்
சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்
செய்யா மரபிற் றொழிபடுத் தடக்கியும்
அவரவ ருறுபிணி தமபோற் சேர்த்தியும்
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்று முரிய வாக
உவம வாயிற் படுத்தலு முவமமோ
டொன்றிடத் திருவர்க்கு முரியபாற் கிளவி."

—தொல். பொருள்—௧௯௬.

புகலி என்பது தேவர்கள் சூரபதுமனால் எற்பட்ட துன்பம் நீக்கிக் காத்தருள வேண்டுமென்று முறையிட்டுப் புகலடைந்து உய்ந்தமை யான் எற்பட்ட திருப்பெயர். (௧௫)

இணைக்குறளாசிரியப்பா

இன்றென உளதென அன்றென ஆமென
உரைதரு நூலையும் பொருளையுந் தனித்தனி
பல்வித மாகச் சொல்வகைச் சமய
ஆகிய பயம்பிற் போகுதல் குறித்த
நிலையில் துறைபல நிலையுள துறைசில
பொருந்திடு முலகப் பெருங்கட லிடத்தின்
மயிர்நூல் கிடத்திப் பயில்வுறு தோலெனும்
வன்புறு பலகையி னன்பெனு மாணியில்
நரம்பெனப் பெரிய உரம்பெறு கயிற்றின்
வெரிநுறு மென்பெனும் பரிய கூம்பில்
ஐம்பொறி யாகிய மொய்ம்புறு வாய்தலில்
காயமென வமைத்த மாயநா வாயில்
இருவினை யென்ன வருசரக் கேற்றிக்
காமமு லோப மேமமா மோகம்
இதமுறு குரோத மதமாற் சரியமென்று
உரைபெறு பவனர் நிறையுற இருத்தி
நெடுநீ ரென்னப் படுநெடு நாணில்
தங்கிய மடியெனு நங்குரஞ் சேர்த்தி
யற்றமில் மனமெனப் பெற்றபாய் விரித்துத்
தடைபடா வாசைக் கடுவளி துரப்பத்
தான மாதி யானதீ வுகளில்
செல்வுழிச் சென்று புல்வுழிப் புல்லி
இவ்வா றியங்கு மவ்வா றதனுள்
முன்பார் கால வன்பார் தாக்கத்
தொக்குறு மரக்கலம் பக்குவிட் டம்ம
அக்கடல் நீருட் புக்கறி வழியுழி
மறலி யென்னுஞ் சுறவுபிடித் தீர்ப்பக்
கடுநர கென்னும் படுகுழி யழுந்தி
உளதுய ரினுக்கோ ரளவிலை யதனால்
இம்முறை யியங்குதல் செம்மையன் றென்று
முற்றுணர் பெரியோ யற்றமில் வலியோய்
ஓதா துணர்ந்த நாதா தீத

அருவுரு வேன்னும் பொருண்முழு துடையோய்
யாவரும் நின்வய மேவரப் புரிவோய்
கரையுறு மின்பப் புரைதவிர் நிமல
சாந்தணி வனமுலை யேந்திழை பாக
ஞானமா மணநிறை மோனமா மலரே
வித்தகம் பழுத்த முத்திவான் கனியே
பரைமுத லைம்பணை நிறைபெறக் கிளைத்த
திருத்தகு நீழ லருட்பெருந் தருவே
பத்திகோள் நித்தில மோத்துற நிரைத்த
பசும்போனில் செய்த தசும்புபல தோக்க
தோற்றம் போல வீற்றுவீற் றமைந்த
தீங்கனி பணைதோறுந் தாங்குமா தளையும்
வித்துரு மத்தினை யோத்தசேந் தளிரும்
ஒளிவயி டூரியக் குளிர்மது மலரும்
மேலிடு வண்டேனு நீலமா மணியும்
மரகத மேன்ன விரவுகாய்த் திரளும்
மறுவின்மா மணியேனும் நறியசேங் கனியும்
கிடைத்தசீர் வணிகரிற் படைத்தமாந் தருவும்
எண்டிசை சூழ்ந்து விண்டோடும் புகலி
மேவிய பேரும ஆவிநா யகனே
கணபணக் கச்சைப் பணவர வசைத்த
மட்டலர் புழுகணி சட்டை நாயகன்
என்னுமீ காமன் மன்னினன் புரப்பநீ
வீற்றினி திருக்க வேற்றமேய்ப் பிரணவத்
தோணியே பற்றேனத் துணிந்து
காணுறு மறிவோடு கண்டுகோண் டேனே.

௧—௧௨. இன்றென...மாயநா வாயில்

(இ - ள்.) இறை யுயிர் சிறை (பதி பசு பாசம்) எனத் திருவருள் கைவந்த ஆன்றோரால் கூறப்படும் முப்பொருளும் இல்லை யெனவும், அவை உண்டெனவும், அவை அளவைகளாற் றுணிந்த பொருள்கள் அன்று எனவும், தணி பொருளெனவும் சொல்லுகின்ற நூல்களையும், பொருள்களையும் வேறு வேறாகக் கூறுகின்ற வேறு முடிபுகளைக் கொண்ட சமயங்களாகிய படுகுழியில், செல்லுதலைக் குறித்த நிலை யில்லாத துறைகள் பல, நிலையுள்ளனவாகிய துறைகள் சிலவாகப் பொருந்தியுள்ள உலகமாகிய பெருங் கடலினுள், மயிராகிய நூலினை அளவாகச் சேர்த்து, நெருக்கமுள்ள தோல் என்கிற வலிமையுள்ள

பலகைகளாலும், எலும்பு என்கிற ஆணிகளாலும், நரம்பென்று சொல்லப்படும் வலிமை கொண்ட கயிறுகளாலும், முதுகில் தங்கிய நடு எலும்பு என்னும் பெரிய பாய் மரத்தாலும், அறிதற்கருவி எனப் படும் ஐம்பொறிகளாகிய வலிமை கொண்ட வாயில்களாலும், உடம்பு என்று படைப்போனுல் அமைக்கப்பட்ட மாயா காரியமாகிய பெரிய கப்பலில்.

கரு—உரு. இருவினை... அவ்வா றதனுள்

(இ - ள்.) நல்வினை தீவினை என்று சொல்லப்படுகின்ற அனுதியாய் வருகின்ற சரக்குக்களை ஏற்றிக்கொண்டு, பெண்ணுசை, ஈயாமை, களிப்பினைத் தந்து மயக்க முறுத்தும் பெருவேட்கை, அளவில்லாத சினம், மதம், பொறாமை என்று சொல்லப்பட்ட நாவாயினைச் செலுத்தும் கம்மகாரராகிய சோனகர்களை முறையுற அச் சரக்குக்களுடன் இருக்கச் செய்து பெரிய நீர்மை யெனப்படுகின்ற பெரியகயிற்றில் நீங்காது உறைந்துள்ள மடி யென்னும் சோம்பலாகிய நங்கூரத்தைக் கட்டி, அறுதலில்லாத மனம் என்னும் பாயினை வேண்டளவு விரித்துத் தடைப்படுதலிலாத அவாவாகிய கடியகாற்றுச் செலுத்த (இன்பநுகர் உலகெனப்படும்) துறக்க முதலிய தீவுகளில் போகத்தக்க கலங்கரை விளக்கம் அமைந்த துறைகளில் சென்று ஆங்குள்ள நுகர் பொருள்களை நுகர்வுழி நுகர்ந் (அநுபவித்து)து, இவ்வகையாகப் புடை பெயர்ச்சி (இயக்கம்) செய்கின்ற அத் தகுதியின் கண் வன்பாராகிய.

உச—சO. முன்பார்... தருவே

(இ - ள்.) வலிமை தங்கிய காலன் என்று சொல்லப்படும் வலிய பாராகிய திடர்மோத ஒன்ருேடொன்று இணைந்துள்ள கப்பல் உடைந்து அக்கடல் நீருள் அழுந்துதல் செய்து அறிவழிந்து அலமருங் காலத்து, நமன் என்று சொல்லப்படும் சுருமீன் பிடித்திழுக்கக் கொடிய கடிய நரக மென்று கூறப்படும் ஆழமாகிய குழியில் மூழ்கி, ஆங்குண்டாகும் துன்பங்களுக்கு ஓர் எல்லை இல்லை; ஆதலால், இவ்வகையாக உலகவொழுக்க மேற்கொண்டு நடத்தல் சீர்மையன்று; ஆய்ந்து உலகின்கண்ணுள்ள எல்லாக் கல்விகளையும் உணர்ந்த உயர்ந்தோனே, அறுதலில்லாத முழுவலி யுடையோனே, கலைகளனைத்தையும் ஓதா துணர்ந்த மூதறிவாள, ஓசை முடிவாம் நாததத்துவத்துக்கு அப்பாற் பட்டவனே, அருவம் உருவம் எனப்படும் எல்லாப் பொருள்களையும் முற்றுரிமை உடைமையாகக் கொண்டுள்ள முதல்வனே, அறிவினங்களாகிய ஆருயிர்கள் அனைத்தும் தேவரீரது வயத்தில் பொருந்தும்படி செய்தருள்பவனே, எல்லையில்லாத பேரின்பத்தில், குற்றம் நீங்கிய அழுக்ககன்ற தூயோனே, கலவை முதலிய சந்தனங்களை யணிந்த அழகிய முலைகளையும் உயர்ந்த அணிகலங்களையும் அணிந்துள்ள உமையம்மையாரை, இடப்பாகத்துக் கொண்டுள்ள மாதிருக்கும் பாதியனே! மூதறிவெனப்படும் சிவஞானப் பெருமணம் நிறைந்த மௌன மென்னும் மாண்பு மிகு மலரே, மெய்யுணர்வு நனிமிக முதிர்ந்த திருவடிப்பேறென்னும் சிறந்த கனியே, வனப்பாற்றலாகிய பரை முதலிய ஆற்றல்களை ஐம்பெருங்கிளைகளாக, முறையாகப்பெற, கிளைக்கப்பெற்ற கண்டாரால் விரும்பத்தகும் சிவப்பேரின்ப நீழலைப்

பெற்ற ண்ணளியே திருவுருவாகக் கொண்டருளிய பெருமை சேர் பெருமானே.

சுக—௩0. பத்திகொள்...தருவும்

(இ - ள்.) நிரல்பட அமைக்கும் வரிசையைக் கொண்ட பெரிய முத்துக்களைப் பொருந்தும்படி அடுக்கிய பசும் பொன்னுகிய கிளிச் சிறையினுல் செய்விக்கப்பெற்ற குடங்கள் பல கூடி விளக்கும், அழகிய காட்சி போல வெவ்வேளுகப் பொருந்தியிருக்கிற தேனினுமிக்க இனிமைவாய்ந்த பெருங்கனிகளைக் கிளைகள்தோறும் தாங்கப் பெற்ற மாதுளை மரமும், பவழத்தை ஒத்து விளங்குகின்ற சிவந்த தளிரும், விளக்கமிக்க வயிடூரியத்தை யொத்த குளிர்ச்சி கொண்ட பூந்துளாகிய மகரந்தத்தினைப் பெற்ற நறுமண மிக்க பூவும், மேலாகப் பரந்து செல்கின்ற நீல வண்டு என்று சொல்லும்படியான நீல மணியும், மாணிக்கப் பச்சை என்று சொல்லும்படி ஒன்ருேடொன்று விரவிக் காய்த்திருக்கும் காய்த்திரளும் குற்றமில்லாத உயர்ந்த மாணிக்க மெனப் படும் நல்ல மணமுள்ள சிவந்த கனியும், எல்லா வளங்களையும் பெற்ற சிறந்த ஒழுக்கங் கொண்ட வணிகரைப் போலப் பெற்றிருக்கிற மாமரமும்.

௩க—௩அ. எண்டிசை...கண்டுகொண் டேனே

(இ - ள்.) எட்டுத் திசைகளிலும், சுற்றிலும் நெருங்கி, வானதனை அளாவுகின்ற திருப்புகலியாகிய சீகாழியின் கண் எழுந்தருளி யிருக்கின்ற பெருமானே, எளியேன் ஆருயிர்க்குத் தலைவனே, கூட்டமாகிய பல படங்களையுடைய பாம்புகளை அரைக்கச்சையாகக் கட்டி யருளிய, தேன் நிறைந்த மலர்களையும், நறுமணம் கமழ்கின்ற புனுகினையும் முறையே செந்தமிழ்ப் போற்றி மந்திரம் ஓதிப் பூத்தூவிப் பூசை செய்வதாகிய அருச்சனைக்கும் திருமேனி எங்கணும் பூசப் பெறும் மணப் பூச்சினுக்கும் ஆகக்கொண்டு சட்டை நாயக னென்னும் திருப்பெயர் பூண்டு வீற்றிருந்தருளும் தோணி யியக்குவோன் நிலை பெற்றுக் காக்க, நீ பெருமையுடன் வீற்றிருந்தருள்க; உண்மை யாகிய ஓங்கார மென்னும் மரக்கலமே, நீங்கா நிலைக்களமாகத் துணிவு கொண்டு காணத்தகுந்த பேர் அறிவுடன் கண்டுகொண்டேன்.

(வி - ம்.) பயம்பு - படுகுழி. பயில்வு - நெருக்கம். கூம்பு - பாய் மரம். நாவாய் - கப்பல். யவனர் - சோனகர். வளி - காற்று. முன்பு - வலிமை. காலன் - நமன். பக்குவிட்டு - உடைந்து. கரை - எல்லை. வித்தகம் - மெய்யுணர்வு. தரு - மரம். பத்தி — வரிசை; வித்துருமம் — பவழம். கணம் - கூட்டம். பணம் - பாம்புப்படம். அசைத்த - கட்டிய. புழுகு - புனுகு. அணி - அணியப்பட்ட; சாத்தப்பட்ட. மீகாமன் - கப்பலோட்டி. புரத்தல் - காத்தல். பிரணவம் - ஓங்காரம். நங்கூரம் - தோணி, கப்பல் முதலியவற்றை நிறுத்துமிடத்துக் கடல் நீரினுள் போடப்படும் பளுவான இரும்புக் கருவி. வெரிந் - முதுகு.

நாவாய் (தோணி) முதலிய ஒப்பு வருமாறு :

"மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும்போது

மதனெனும் பாறைதாக்கி மறியும்போ தறியவொண்ணு
துனையுநு முணர்வைநல்கா யொற்றியூ ருடைய கோவே."

—ச. சசு—௨.

"தனியனேன் பெருப்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றென் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே."

—அ. திருச்சதகம், ௨எ.

பள்ளி வகுப்புப்போல் சமயங்கள் அவரவர் தகுதிக்கேற்பப் பல வாம். பல வாயினும் கடவுள் நம்பிக்கையினும், வழிபாட்டினும் பத்தி செய்முறையினும், அடியார் வரலாற்றினும், ஆசான் திறத்திலும் பிறப்பு இறப்புத் தன்மையிலும், வீடு பேற்றுத் தன்மையிலும், பெரும்பாலும் அனைத்தும் ஒத்து நிற்கின்றன. எனினும் மேனெறியை ஆராயாது அவரவர் நெறியினின் றொழுகுவது எவர்க்குந் தவறாகாது. ஆனல் பிற சமயங்களையும் அவர்தம் கொள்கைகளையும் குறை கூறுவது தவறு பெரிதுடையதாகும்.

சமயங்களை நம் முன்னோர் இருபத்து நான்கென விரித்துரைத் தனர். இவை தொகையான் அகச்சமயம் புறச்சமயம் என இரண் டாம். புறப்புறச் சமயம், புறச்சமயம், அகப்புறச் சமயம், அகச்சமயம் என வகையான் நான்காகும். இவற்றைச் சுருங்கச் சொல்லின் இறை யுண்மை யில்லார் இறையுயிரே என்பார், இறைகோலம் பேற்றியைபில் லார். எனக் கூறலாம்.

தாயுமான அடிகள் ஓதும் வருஞ் செய்யுளும் இதனை விளக்கும்!

அன்னே யனேயெனுஞ் சிலசமய நின்னையே
ஐயாவையா வென்னவே
யலறிடுஞ் சிலசமய மல்லாது பேய்போல
அலறியே யொன்று மிலவாய்ப்
பின்னேது மறியாமல் ஒன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சிலசமயமேற்
பேசரிய வொளியென்றும் வெளியென்றும் நாதாதி
பிறவுமே நிலயமென்றும்
தன்னே ரிலாததோ ரணுவென்று மூவிதத்
தன்மையாங் கால[1]மென்றும்
சாற்றிடுஞ் சிலசமய மிவையாகி வேறதாய்ச்
சதாஞான ஆனந்தமாய்

1. 'காலமே', சிவஞானசித்தியார், க. க—கூ.

என்னே யெனேகருணை விளையாட் டிருந்தவா
றெம்மனோர் புகலவெளிதோ
இகபர மிரண்டினினு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே.''
—தாயுமானவர், எங்கு—உ.

"அறவகைச் சமயத் தோர்க்கும் அவ்வவர் பொருளாய் வேறுங்
குறிய துடைத்தாய் வேதா கமங்களின் குறியிறந் தங்கு
அறிவினி லருளால் மன்னி அம்மையோ டப்ப னாகிச்
செறிவொழி யாது நின்ற சிவனடி சென்னி வைப்பாம்.''
—சிவஞானசித்தியார், மங்கல வாழ்த்து. (௧௬)

வெண்பா

[தோழி வெறி விலக்கிக் கூறியது.]

கண்டேன் புகலிக் கருத்தனைத்தன் மெய்ஞ்ஞான
வண்டேனுண் டேமகிழும் வண்டானேன்—பண்டே
யளியனுமா னேன்மனமெய் யார்பதம்வே றின்றிக்
குளிர்சிவா னந்தமிலங் கும்.

(இ - ள்.) திருப்புகலியின்கண் மிக்கோங்கி வீற்றிருந்தருளும் அனைத்துலக முதல்வனாகிய சிவபெருமானை அவன்றன் திருவருளால் கண்ணாரக்கண்டு பேரின்பம் எய்தினேன். மேலும் அவனது உண்மைத் திருவடி யுணர்வைத் தந்தருளும் வளம் மிகுந்த பேரின்பப் பெருந்தேனை மிக்குப்பருகி அதனால் களிப்படைந்து மகிழ்வு மேம்பட்டுப் புறஞ்செல்லாத வண்டினை யொத்துள்ளேன். முற்காலத்தே அப்பெரு மானிடத்தே பேரன்புப் பெருக்காம் பெருங்காதலுடைய வனாயினேன். உள்ளம், உரை, உடல் மூன்றும் அப்பெருமான் திருவடிக்கண்ணன்றி வேறெங்குஞ் செல்வன அல்ல. அதனால் அப்பெருமான்றன் தண்ணளியாகிய சிவப்பேரின்பப் பெருங்குளிர்ச்சி விளங்கா நிற்கும்.

(வி - ம்.) புகலி - சீகாழிக்குரிய பன்னிரு திருப்பெயர்களுள் ஒன்று. வண்டேன் - வளப்பமுள்ள தேன் அளியன் - அன்புடையவன். மனம் - உள்ளம். மெய் - உடல் பதம் - சொல்.

திருவருள் வீழ்ச்சி யெனப்படும் சத்திநிபாதம் எய்தியதும் சிவனார் திருவடி யுணர்வு தோன்றும். இஃது அருந்தவ மிருந்து பெற்ற மக்களைப் பெற்றோர் பள்ளியிற் சேர்ப்பர். சேர்த்ததும் அம்மக்கட்கு மாணவர் என்னும் சிறப்புப் பெயரும் ஆசான் திருக்காட்சியும் அமைவதோ டொக்கும்.

'மெய்யார் பதம்' என்பதனையே "பொய்யாத வாய்மை" என நம்பியாரூரரும் அருளிச் செய்தனர். (௧௭)

கட்டளைக் கலித்துறை

கும்பிட்ட பத்தர்க் கழியாத இன்பங் கொடுக்குமுத்தர்
வம்பிட்ட கொங்கை யுமைபாகர் சண்பையர் வந்திலரேல்
கொம்பிட்ட கோழிக் கொடிவேந்தன் கொச்சையைக் கொல்வதனுல்
அம்பிட்ட கட்சிற் றிடைச்சிக்கென் னேபய ஞகுவதே.

(இ - ள்.) தந்திருவடியினைப் படர்ந்து பாடிப் பரவி வழிபடும் மெய்யன்பர்களாகிய பத்தகர்ட்கு, என்றும் பொன்றுத் திருவடி யின்பங் கொடுத்தருளும் வீடு பேற்றிற்குரிய விழுமிய முழுமுதல்வர், கச்சணிந்த மார்பினையுடைய உமையம்மையாரை தம்மொரு பாக மாகிய இடப்பக்கத்தே வைத்தருளியவர், திருச் சண்பைத் திருநகரின் கண் வீற்றிருந்தருள்பவர் ஆகிய சிவபெருமான், அடியேனுடைய காதலைத் தணிக்க வாராவிடின், கொம்பிற் கட்டிய கோழிக்கொடி யினையுடைய முருகக் கடவுளுக்குரிய ஊர்தியாகிய ஆட்டுக்கடா வினைக் கொன்று பலியிடுவதனுல், அம்பு போன்ற கண்களையும், சிறிய இடையினையும் உடைய காதல் கொண்ட இப்பெண்ணுக்கு உண் டாகும் பயன் யாது? (ஒன்றுமில்லை யென்றபடி.)

(வி - ம்.) கும்பிடுதல் - வழிபடுதல். முத்தர் - வீடு பேறருளும் மெய்யர்; முத்தி கொடுத்தருள்பவர். வம்பு - கச்சை. கொச்சை - ஆட்டின் பொது. கொம்பு - கம்பம். வேந்தன் — முருகன். அம்பிட்ட: இட்ட - உவமஉருபு.

வம்பு - மணம். மணப்பூச் சணியப்பெற்ற மார் பென்றலும் ஒன்று. காதற்றுறையில் வேலன் வெறியாட்டு எடுத்தலுமொன்று. இந்நிகழ்வு வருமாறு:

"மறைந்தவர் காண்டல்" எனத் தொடங்கும் (தொல். பொருள், ககக.) சூத்திரத்தின்கண்; "வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்" என வருவதனுலும், அதற்கு எடுத்துக் காட்டாக அமைந்துள்ள "பனிவரை நிவந்த" (அகம்—கஅ.) எனத் தொடங்கும் செய்யுளின் கண்ணுங் காணலாம். மேலும்,

"விதியுடை யாருண்க வேரி விலக்கல மம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினிற் பாய்புனல் யாமொழுகக்
கதியுடை யான்கதிர்த் தோணிற்க வேறு கருதுநின்னின்
மதியுடை யார்தெய்வ மேயில்லை கொல்லினி வையகத்தே."

—அ. திருக்கோவையார், உகஉ.

என்னும் திருப்பாட்டானு முணர்க. (கஅ)

இணைக்குற ளாசிரியப்பா

ஆகுவா கநனைத் தோகைவா கநனை
யுற்றசீர் மகாரேனப் பெற்றசுந் தரனே
ஞானவா ரிதியி லானவா ரமுதே

கற்றவர் கருது நற்றவக் கரும்பே
யிருட்குறும் பெறிந்த வருட்கலா மதியே
கதிர்த்தொகை குன்று துதித்தசெங் கதிரே
நிறைந்தஅன் பலரி னுறைந்தசெந் தேனே
துன்பமொன் றறியா வின்பவா ரிதியே
மறைமுடி விளக்குஞ் சுடர்விடு மணியே
விறலரி பிரமன் பெறலரும் பொருளே
சிற்பநூல் முழுதும் அற்பமின் றுணர்ந்த
ஓவிய ரற்புத மேவுகைத் தொழிலர்
சுத்தவெண் படிகப் பித்திகைத் தலத்தின்
நவமணி தெளித்துக் குவவின கூர்நுதித்
தூரியங் கொண்டு சீரிதிற் குயிற்றும்
இமைப்பிலா நாட்டத் தமைப்பருங் கலாப
நீலமே காரமுங் கோலமார் குயிலும்
துப்பமர் வளைவா யொப்பறு பச்சைத்
தகைசிறைக் கிளியும் புகைநிறப் புறவும்
மேல்நிமிர் தூவிப் பால்நில வனமும்
நன்மது நிகர்த்த இன்மொழிப் பூவையும்
இனமெனக் கருதி மனமுவந் தணைத்த
உயிர்நிலை பெற்ற மயில்முதற் பறவையும்
கூறுபட நோக்கினர் வேறுபா டறியா
வளனொடு செறிந்த அளவிலா மாடத்து
உறைதரு கறபு நிறைகுல மடவார்
அளிமுரல் குழலு மொளிகிளர் முகமும்
குலாவிய புருவமு நிலாவிரி குழையும்
நறியமென் சொல்லுஞ் சிறியநுண் ணிடையும்
தத்துநீ ருவரி முத்தமா லிகையும்
பிரளய வெள்ளத் திரளினு மழியாத்
திருநக ரிதுவெனக் கருதிவான் முகிலும்
சந்திர விம்பமும் இந்திர தனுவும்
இலங்குசெங் கதிருந் துலங்குவா னமுதும்
வாரா மின்னுந் தாரா கணமும்
ஒருங்குவந் திருந்த பெருந்திற னேய்ப்பக்
காட்சியிற் பொலிந்த மாட்சிமை சிறந்த

காழிநா யகனே வாழிபூ ரணனே
ஏர்தரும் பொற்கிரி சேர்கருங் கொடியும்
பொன்னிற மாமெனச் சொன்னதோன் மொழியும்
ஏதமில் நிறைமதிச் சீதள நிலவால்
ஆருமெய் யுருப்பந் தீரு மென்பது
மொழிதரு மிரத குளிகைதற் சேர்ந்த
காளிமச் சீருண நீளியற் கனகம்
ஆமெனக் கூறுந் தோமறு மொழியும்
கருட தியான மருள்தப வந்தோர்
நோக்கினில் தவிருந் தீக்கடு வென்றலும்
ஆயிரங் கிரணத் தலர்கதிர் முன்னம்
பாயிருள் கெடுமெனப் பகர்பழ மொழியும்
அங்கண்மா ஞாலத் தெங்கணு மொப்ப
இயலும் பட்டாங் கயலல வென்னல்
சரத மெய்ஞ்ஞான வரதநிற் சேர்ந்த
பேதையேன் பாசத் தீவினை யகற்றித்
திருவருட் செல்வம் பெருகுமா றுதவி
யளித்தருள் பேரின் பாகும்
களித்திடு முத்திக் காழிவான் கனியே.

௧—௧0. "ஆகுவா...பொருளே"

(இ - ள்.) பெருச்சாளியை ஊர்தியாகக் கொண்டருளிய மூத்த பிள்ளையாரையும், மயிலினை ஊர்தியாகக் கொண்டருளிய முருக வேளையும், பொருந்திய சிறந்த பிள்ளைகளெனப் பெறுது பெற்ற பேரழகனே! சிவமெய்யுணர்வாகிய கடலின்கண் ணெழுந்த நிறைந்த பேரின்பப் பெருக்கே, செந்தமிழ்த் திருமாமறை முறைகளாகிய இறைவன் நூல்களைத் திருவருள் உணர்வால் ஓதிப்பொருளுணர் வார், உள்குதலாகிய தியானத்தைச் செய்து பயில்கின்ற நற்றவத்தின் பெறு பேறாகிய தீங்கரும்பே, இருளாகிய குறும்பாட்சியாளர்களை அறவீசிய அந்தண்மை பொருந்திய கலைகளையுடைய ஒப்பிலாப் பெரு மதியே, கதிர்த்தொகுதிகள் சிறிதுங் குன்றாத காலை முளைத்த பகலோன் எனப்படும் செங்கதிரே, நிறைந்த காதலன்பாகிய மலரின் கண், செறிந்து கட்டியாகியுள்ள சிவந்த தேன் போன்றவனே, துன்பம் ஒரு சிறிதும் உணராத பேரின்பப் பெருங்கடலே, மறைமுடி வினை விளக்கியருளிய பேரொளி நிறைந்த செம்மணி யொப்பான வனே, வெற்றிப்பா டெய்திய அரியும் நான்முகனும் அடைதற்கு அருமையான பேரருட்சுடர்ப் பெரும்பொருளே!

௧௧—௨0. "சிற்பநூன்...பானிலவனமும்"

(இ - ள்.) நுண்டொழில் எனப்படும் சிற்பநூல் முழுவதும் குறைவின்றிப் பயின்று அறிந்துள்ள சிற்பநூல் வல்லார் அழகு பொருந்திய கைத்தொழில் வல்லோர் குற்றமற்ற வெண்மையாகிய பளிங்குக் கற்களானமைந்த சுவரின்கண் ஒன்பான் ஒளிக்கற்களை குயிற்றிக் கூடியுள்ள மிகுந்த கூர்மையாகிய எழுதுகோலினைக் கொண்டு சிறந்த தன்மையுடன் புனையப்பெற்ற ஒரு சிறிதும் இமைக்காத கண்களையுடைய செய்தற் கருமையாகிய தோகையினைப்பெற்ற நீல நிறம் பொருந்திய மேகாரம் எனப்படும் மயிலும், அழகு பொருந்திய குயிலும், பவழத்தினை யொத்த வளைந்த வாயினையுடைய, ஒப்பில்லாத அழகினையுடைய பச்சை நிறம் பொருந்திய இறகுகளையுடைய கிளிப்பிள்ளையும், புகையின் நிறங்கொண்ட புறவும், மேலே உயர்ந்த சிறகுகளையுடைய வெண்மைநிறம் பொருந்திய அன்னப்பறவையும்,

உக—௩௬. "நன்மது...ஏய்ப்பக்"

(இ - ள்.) நல்ல தேனினை ஒப்பான உறுதி பயக்கும் இனிய மொழிகளைப் பயின்ற நாகணவாய்ப் புள்ளும் ஆகிய ஒவ்வொன்றும் தந்தம் இனமெனக் கருதி உள்ளக் களிப்புடன் அணைத்துக் கொண்டன; உயிரோடு கூடிய மயில் முதலிய கூட்டமான பறவைகளும், வகைப்படக் காட்சி கண்டு களிப்போராகிய பார்வையாளர் உயிரிலாப் பறவைகளுக்கும் உயிருடைய பறவைகளுக்கும் உள்ள வேறுபாட்டினை அறிய முடியாதபடி மிக்க வளப்பத்துடன் நெருங்கியுள்ள அளத்தற் கருமையாகிய பல அடுக்குகளையுடைய வளமனையாகிய மாடத்தின்கண், வாழ்கின்ற உயிரினுஞ் சிறந்ததாகிய கற்பு நிறைந்த குலமாதர்களுடைய வண்டுகள் ஒலிக்கின்ற கூந்தல்களும் ஒளி தருகின்ற முகங்களும், வளைந்த புருவங்களும், ஒளிக்கதிர் விரிந்த காதணிகளும், நன்மை பயக்கும் மென்மையான சொற்களும், சிறிதாகிய நுண்ணிய இடைகளும், துள்ளுகின்ற புனலினைக் கொண்ட கடலின்கண் தோன்றிய முத்து மாலைகளும், ஊழி முடிவாகிய வெள்ள மிகுதிகொண்டு வரினும் ஒடுங்குவதாகிய அழிவினைப் பெறாத தெய்வ அழகு கொண்ட திருநகரம் இஃது என்று எண்ணி, விசும்பின்கண் உலாவும் மழைக் கூட்டமும், நிலவின் உருவமும், வான வில்லும், விளங்குகின்ற வானத் தமிழ்தமும், நீண்ட மின்னலும், விண் மீனின் கூட்டமும் எல்லாம் திரண்டு ஒன்றுகூடி வந்திருந்த பெருமையுள்ள திறத்தினை யொப்ப,

௩எ—சஎ. "காட்சியில்...வென்றலும்"

(இ - ள்.) தோற்றத்தால் விளங்கிய, மாண்பினுற் சிறப்புற்ற திருக்கழுமல மெனப்படும் சீகாழித் திருப்பதிக்கு முதல்வனே, நீ பல்லாண்டு பல்லாண்டாக வாழ்வாயாக. அழகு தங்கிய பொன்மலையாகிய மேருவினைச் சார்ந்த கருமையாகிய காக்கையும் அழகிய பொன்னிறத்தைப் பெறும் என்று கூறிய முதியோர் அமிழ்த வுரையாகிய முதுமொழியும், குற்றமற்ற முழு நிலாமதியின் குளிர்ச்சி பொருந்திய ஒளிக்கதிரால் நிறைந்த உடம்பின் வெம்மை நீங்கும் என்று கூறுதலும், புகழத்தகுந்த இரத குளிகை தன்னை யடைந்த செம்பின் களிம்பைக் கெடுக்க, அஃது உயர்வு பெற்ற பொன்னுகும் என்று கூறும் குற்றமற்ற சொல்லும், கருட மந்திரம் உள்குதலால் மறதியாகிய மயக்கமறக் கைவரப் பெற்றோருடைய (தன்னை மந்திரக்

கருடனாய் நினைந்துள்ளோர்) ஊன்றிய பார்வையினால், கொல்லுந் தன்மை வாய்ந்த பாம்பின் நஞ்சு நீங்கு மெனக் கூறுதலும்,

சஅ—௫சு. "ஆயிரங்...கனியே"

(இ - ள்.) ஆயிரங் கதிர்களையுடைய எங்குஞ் செறிந்து பரந்த ஞாயிற்றின்முன், பரவிய இருள், அடங்கி ஒடுங்கி விடுவதாகிய கேட்டினை எய்தும் என்று சொல்லுகின்ற பழம் சொல்லும் அழகிய இடம் அகன்ற பெரிய நிலவுலகின்கண் எவ்விடத்தும் சமமாக நடக்கின்ற உண்மை மொழியே யன்றி வேறல்ல எனக் கூறுதல் வாய்மையாகும்; உண்மையுணர்வாகிய சிவனுணர்வினை தந்தருள்பவனே, தேவரீரை அடைந்த அறிவில்லாத எளியேனுடைய பாசங்களாகிய தீவினைகளைத் திருவருட் பார்வையால் நீக்கித் திருவருளாகிய பெருஞ் செல்வம் பெருகும் வழியினை அருளித் திருவடிப் பெருவாழ்வினைத் தந்தருள்வாயாக. பெரும் பேரின்பம் பெருகும்; உள்ளக் களிப்பினை ஓவாது தரும் வீடு பேற்றினைத் தந்தருளும் சீகாழித் திருப்பதியின்கண் எழுந்தருளி யிருக்கும் கற்பகக் கனியாக வுள்ளவனே.

(வி - ம்.) வாகனம் - ஊர்தி. அலர் - விரிந்த: பித்திகை - சுவர். தூரியம்-எழுதுகோல். நாட்டம்-கண். மேகாரம்—மேகத்தை விரும்பும் மயில். கோலம் - அழகு. துப்பமர் - பவழம் போன்ற. அமர் - உருமஉருபு. நிமிர்தல் - உயர்தல். அளி - வண்டு. குலவுதல் - வளைதல். பிம்பம் - உரு; வடிவம். வார் - நீண்ட. பொலிந்த - விளங்கிய. கொடி - காக்கை.

ஆசிரியர் சிவ குருவாய் எழுந்தருளி வந்த நல்லாசான் தம்மையாட்கொண்டு தன் வண்ணமாக்கிய தன்மையும், தான் பயின்றுள்ள உள்கலாகிய தியானமும் ஓதுகின்றனர். அவை வருமாறு:

"கண்டஇவை யல்லேன்நான் என்றகன்று காணக்
கழிபரமும் நானல்லேன் எனக்கருதிக் கசிந்த
தொண்டினொடும் உளத்தவன்தான் நின்றகலப் பாலே
சோகமெனப் பாவிக்கத் தோன்றுவன்வே றின்றி
விண்டகலும் மலங்களெல்லாம் கருடதியா னத்தால்
விடமொழியும் அதுபோல விமலதையும் அடையும்
பண்டைமறை களும்அதுநான் ஆனேன் என்று
பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைக் காணே."

—சிவஞானசித்தியார், க. ௩—௧.

"பரப்பிரமம் இவன்என்றும் பரசிவன்தான் என்றும்
பரஞானம் இவன்என்றும் பராபரன்தான் என்றும்
அரன்றருஞ்சீர் நிலையெல்லாம் இவனே யென்றும்
அருட்குருவை வழிபடவே அவன்இவன்தான் ஆயே
இரங்கியவா ரணம்யாமை மீன்அண்டஞ் சினையை
இயல்பினொடும் பரிசித்தும் நினைந்தும் பார்த்தும்

பரிந்திவைதாம் ஆக்குமா போற்சிவமே யாக்கும்
பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்துந் தானே.''
—சிவஞானசித்தியார், கஉ. ௩—ዊ.

" இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்தங் குயிரை
எரியிரும்பைச் செய்வதுபோல் இவனைத்தா னாக்கி
அரும்பித்திந் தனத்தையனல் அழிப்பதுபோன் மலத்தை
அறுத்தமலன் அப்பணைந்த உப்பேபோல் அணைந்து
விரும்பிப்பொன் னினைக்குளிகை யொளிப்பதுபோ லடக்கி
மேளித்துத் தான்எல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பன்அந்த முத்தியினிற் கலந்தே.''
—சிவஞானசித்தியார், கக. உ—ዊ.

'' முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.''
—அ. அச்சோபதிகம், க. (கசு)

வெண்பா

[தலைவியின் ஆற்றாமை கண்டதோழி அன்னத்தைத் தூது விடுத்துக் கூறியது]

காழிக்கு வேந்தர் கருணை லயர்முனநீ
காழிக் குமாரன் கவிகையினை—யாழிக்கண்
கண்டமட்டிற் சூடகமுங் கார்விழியிற் கங்கணமும்
கோண்டனளேன் றன்னமே கூறு.

(இ - ள்.) அன்னப் பறவையே! நீ சீகாழித் திருநகருக்குரிய முதல்வரும், பெருந் தண்ணளி என்று சொல்லப்படும் கருணைக்கு உறைவிட மானவருமான விழுமிய முழுமுதல்வன் சிவபெருமான், திருமுன் சென்று வயிரங்கொண்ட கரும்பு வில்லைக் கைக்கொள் மன்மதனுக்குரிய குடையாகிய திங்களைக் கடலினிடக் கண்டதுணை யானே மனவெம்மையும், கருமையாகிய கண்களில் நீர்ப்பெருக்கும் தலைவி அடைந்தாள் என்று தலைவனிடத்துக் கூறுவாயாக.

(வி - ம்.) காழிக்குமாரன்: காழ்+இக்கு+மாரன். காழ் - வயிரம். இக்கு - கரும்பு. மாரன் - மன்மதன்; கவிகை - குடை. ஆழிக்கண் - கடலினிடத்து. ஆழி - கடல். கண்டமட்டில் - பார்த்த அளவில். சூடகம்: சூடு+அகம்—மனவெப்பம். கம்-மேகம்.

தலைவனைப் பிரிந்த தலைவிக்கு முழுத்திங்களைக் கண்டதும் பிரிவாற்றாமை மிகும். அப்பொழுது தூதுவிட எண்ணம் தோன்றும். அம்முறையில் இஃது அன்னத்தைத் தூது விடுவதாக வமைந்துள்ளது.

தூதுவிடற் கமைந்தவை வருமாறு :

"இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்தகுயில்
பேதைநெஞ்சந் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை."

—இரத்தினச் சுருக்கம், எ.

எகினம் - அன்னம். பூவை - நாகணவாய்ப்புள். பாங்கி - தோழி. பிரமரம் - வண்டு.

மன்மதன் மேற்கொள்ளும் கருவிகள் :

"ஆலைக் கரும்புசிலை ஐங்கணைபூ நாண்சுரும்பு
மாலைக் கிளிபுரவி மாருதந்தேர்—வேலை
கடிமுரசங் கங்குல் களிறுகுயில் காளம்
கொடிமகரந் திங்கள் குடை."

—இரத்தினச் சுருக்கம், கூ.

சிலை - வில். சுரும்பு - வண்டு. மாருதம் - தென்றற்காற்று. வேலை - கடல். காளம் - ஊதுகொம்பு. மகரம் - சுறாமீன்.

பிரிவாற்றாமையால் எற்படுந் துன்பத்தினை மிகுவிப்பன வருமாறு :

"தென்றற்கும் வீணைக்கும் சேமணிக்குங் கோகிலத்துக்
கன்றிற் கமைக்காழிக் கம்புலிக்கு—நின்றாற்று
மன்னைக்கு மாரற் கயர்ந்தாளென் றன்னமே
என்னைக்கு மாரற் கியம்பு."

—இரத்தினச் சுருக்கம், சு.

சே - எருது. கோகிலம் - குயில். அன்றில்—அன்றிற் பறவை. அமை - மூங்கில்; புல்லாங்குழல். இஃதாகு பெயர். (உ0)

கட்டளைக் கலித்துறை

கூறுஞ் சனனக் குடில்நெடு நாணுழை கூன்முழுதும்
ஆடும் படிக்கு மருந்துளதோ சண்பை வாணர்கொண்ட
நீறுந் திருவெழுத் தோரைந்துங் கண்டியு நித்தநித்தம்
தேறும் பொருளென் றுணராத மாயச் செருக்கினர்க்கே.

(இ - ள்.) சண்பை என்று சொல்லப்படும் சீகாழித்திருப்பதிக்கு வேந்தராய் அதனை இருப்பிடமாகக் கொண்டருளிய சிவபெருமான் அணிந்துள்ள திருவெண்ணீறும், செந்தமிழ்த் திருவைந் தெழுத்தும்,

சிவமணி மாலையும் நாடொறும் நாம் உறுதிப்பே றெய்துதற்கு முதற் காரணப் பொருளென்று திருவருளால் உணர்ந்து அணியப்பெருத, மாயையால் செருக்கடைந்திருக்கும் மானிடர்க்குத் திருமாமறை, திருமாமுறைகளான் உணர்த்தப்படும் பிறப்பென்னுங் குடிசையில், பல பிறப்புக்களில் நுழைந்து வரும் கூனல்நோய் முழுதும் ஒழியும் படி மருந்து உளதாகுமோ? (ஆகாது.)

(வி - ம்.) செனனம் - பிறப்பு.

பிறப்பறுக்கும் மந்திரம் தனித்தமிழ்த் திருவைந் தெழுத்தே. அதன் துணையாகப் புறத்துக் காணப்படும் திருவடையாளம் திருவெண்ணீறும், சிவமணியுமாம். திருவெண்ணீறு மந்திரமும் மருந்துமாய் நின்று திருவருளால் உடற்பிணியினையும், உயிரைப் பண்டே புல்லிய மலப்பிணியையும் ஒருங்கே போக்கும் ஒப்பில் ஒருபெரு மருந்தாகும். அவ்வுண்மை வருமாறு :

“ திருமுகம் கருணை காட்டத் திருக்கையால் நீறு காட்டிப்
பெருமறை துதிக்கு மாற்றால் பிள்ளையார் போற்றிப் பின்னும்
ஒருமுறை தடவ அங்கண் ஒழிந்துவெப் பகன்று பாகம்
மருவுதீப் பிணியும் நீங்கி வழுதியும் முழுதும் உய்ந்தான்.”

—கஉ. சம்பந்தர். சுஎ0.

ஆணவ ஆற்றலை நீறுபடச் செய்வதால் நீறென்பதுமாம்.
ஆணவச் சார்பாம் அறியாமை நீறுபடக்
காணலால் நீறென்பர் காண். (உக)

நேரிசையாசிரியப்பா

செருக்குட னிகலித் தருக்கமே தேற்றி
யெம்ம னோரின் இறந்துபிறந் துழலும்
மம்மரிற் பெரிய வானவர் குழுவை
மெய்ப்பொரு ளென்று கைப்பொரு ளுதவியும்
வழுத்தியு நெஞ்சத் தழுத்தியும் வறிதே
புறவார் பசும்புற் கறவாக் கற்பசு
வாயிடைச் செருகித் தூயநீ ருதவி
அருஞ்சுவைப் பால்கொளப் பெருஞ்சுரை வருடும்
பேதையர் போலவும் ஓதுநஞ் சமரும்
எட்டியை விரும்பு மட்டுநீர்த் தேக்கி
ஈநுழை கல்லா மேல்நிமிர் வேலி
யுறும்படி யமைத்து நறுங்கனி கொள்ளக்
கருதி முயலுந் திருவிலி போலவும்
இலகுவா லரிசி யுலைபெய எண்ணி

வெற்றுமி குற்றும் பற்றிலர் போலவும்
அருநிலம் உழுததி னெருமிகப் பெய்து
வித்திட் டாங்கே விளைபயன் கோள்ளச்
சித்தத் துன்னும் மத்தர் போலவும்
வாழ்நா ளனைத்தும் வீழ்நா ளாக்கி
இம்மையு மறுமையுஞ் செம்மையிற் பொருந்தாது
இடருறு மாந்தர் புடவியிற் பலரால்
அன்னவா றெளியனு முன்னி மதிமயங்கா
தெய்ப்பினி லுதவு மெய்ப்பொரு ளாகி
என்றுமோ ரியல்பொடு நின்றகா ரணநின்
சேவடித் தாமரைப் பூவினைப் புனைந்து
நாத்தழும் பேற வேத்தியுள் ளுருகிப்
பெருகிய வன்பென வருநீர் நிறைந்த
இதய வாவிப் பதுமமா மலரின்
குணனெனப் பொருந்து மணமா நின்னைக்
கண்டிறு மாந்து பண்டைவா தனைதீர்ந்து
அறைகட லழுந்து நிறைகுட மதுபோன்று
அசைவற் றிருக்க விசையத் தருதி
நிலைமிகப் பொருந்திப் பலமுறை சாரலால்
உந்திய வன்ன வுருமரு வுதலான்
மந்திரத் துறுசுடர் மகத்துயர் தலினுல்
இதம்பயி லிசைகோள் பதங்கலந் துறுதலால்
வேதமே யொப்பென வோதுகோ புரமும்
ஒழுக்குநெறி சிறிதும் வழுக்கில வதனுல்
நாற்பதப் பிரிவின் மேற்பத மதனுல்
பலகலை யொளிர்மதி நிலவிய வதனுல்
முத்தரை வியக்கும் பத்திமை யதனுல்
சிவாகம மெனவொளிர் தவாமணி மேடையும்
வெள்ளைவா ரணமேற் கொள்ளுமாங் கதனுல்
கட்டா மரைபல மட்டார் தலினுல்
அஞ்சுமந் தாரம் விஞ்சியோங் குதலால்
இந்திர னெனப்பொலி மந்திர வாவியும்
எங்கணு நிறைந்த வெங்குரு நாதா
கருவலி தொலைக்கும் பெருமலை மருந்தே

கருணைசூற் கொண்ட பெரியவான் முகிலே
சிற்றிடைக் கருங்கண் பொற்றொடிக் கரத்தால்
ஆகமார் வனமுலை யணையும்
போகமா ரிதழிப் பூங்கண் ணியனே.

க—கூ. செருக்குட...பேதையர் போலவு

(இ - ள்.) (தம்மை யொத்தார் எவருமிலர் எனத் தம்மைத் தாமே மதித்துப் பொருந்தாக் களிப்புற்றுச்) செருக்குடன் திரியும் நம்மவரிற் சிலர் ஒருவரோ டொருவர் மாறுகொண்டு வாய் வழக்கிட்டுச் சழக்குரைத்துத் திரியும் தன்மையினையே தம்முட்டெளிந்து உழலும் பேதை மக்களைப் போன்று, இறந்தும் பிறந்தும் உழலும் தொழி லுடையராய் மயக்க மேலிட்ட பெருங் கூட்டமாகிய தேவர் குழுவை, உண்மையாகிய அழியாத மேலான பொருளைத் தருவார் இவரென மதித்து, வருந்தித் தாம் தேடியுள்ள கைப்பொருள்களை அத்தேவர் கட்கு உரிமையாக ஒப்புவித்தும், அவர்களைப் புகழ்ந்து போற்றியும், மனத்தின்கண் அவர்களை அழுந்தப் பதித்தும் பயனிலாது முல்லை நிலத்துத் தங்கிய, பசும்புல்லைப் பாலைக் கறவாத கல்லாலாகிய பசு வின் வாயில் நுழைத்து, மாசிலாத் தண்ணீரைப் பருகச் செய்து பெறுதற் கருமையான சுவையினையுடைய, பாலினைக் கறந்து கொள் ளும்படி அப்பசுவின் பருத்த மடியினை விடாது தடவுகின்ற அறிவிலி களைப்போல,

கூ—உக. ஓதுநஞ்சமரும்...பலரால்

(இ - ள்.) மருத்துவ நூலார் ஓதும் நஞ்சு பொருந்திய எட்டி மரத்தை விரும்பி, அளவாக நீர் பாய்ச்சி, ஈயும் நுழைதற்காகாத மேலே வளர்ந்த வேலியினை ஒன்றோ டொன்று நெருக்கும் வகையாக அமைத்து அதனுடைய நல்ல பழத்தினை அடையும்படி எண்ணி முயன்று செல்லும் அறிவென்னும் செல்வம் இல்லாதவனைப் போலவும், விளங்குகின்ற வெண்மையான சம்பா அரிசியை உலையிலிட நினைத்து அரிசியாகிய பயனில்லாத உமியை கை வருந்தக் குற்றுகின்ற பசை யில்லாதார் போலவும், ஒரு பயனும் தருதற்கில்லாத அருநிலம் எனப் படும் பாலை நிலத்தில் விளைவிக்கலா மென்னும் எண்ணத்துடன், உழுது எருக்களையிட்டு, விதை விதைத்து, அவ்விடத்து உண்டாகும் பேற்றினை, அடைதற்கு மனத்தின்கண் நினைக்கின்ற பித்தரைப் போலவும், வாழ்நாள் முழுவதும் பயன்தராது. கழிந்த நாளாக்கி இப்பிறப்பி லுண்டாம் பயனையும், மறுபிறப்பி லெய்தும் பயனையும் அடையும் சீர்மைப்படி அடையாமல் துன்பம் அடைகின்ற மானுடர் பூமியின்கண் பலருளர்;

உஉ—கூஉ. அன்னவா ..தருதி

(இ - ள்.) அம்முறையாக ஏழைமையுடைய அடியேனும் பல எண்ணங்களை நினைத்து மனந்தடுமாறுமல், இளைத்த காலத்தில் உதவிப் பயன் தருகின்ற உண்மைப் பொருளாகி எக்காலத்தும் ஒரு தன்மைப்பட்டு. அழியாது நிலைத்து நின்ற உலகிற்கு வினைமுதற் காரணமானவனே, தேவரீருடைய செம்மையான திருவடியாகிய

தாமரை மலரினை முடிக்கும் பேரணியாகக்கொண்டு எளியேனுடைய நாவானது தழும்பேறும் படியாக வாழ்த்தி மனம் உருகிப் பொங்கி அன்பு என வருகின்ற சிறந்த நீரானது நீங்காது நிறைந்துள்ள நெஞ்சமென்னும் தடாகத்தின்கண் தாமரை மலரின் குணமென்று நிலைத்துள்ள மணமாகிய நின்னைக் கண்டு கும்பிட்டுக் கழிபெரு மகிழ்வாகிய இறுமாப்பு எய்தி, முற்பிறப்புக்களில் அடியேன் பெற்றுள்ள மும்மலப் பசையாகிய வாதனைகள் நீங்கி ஒலிக்கின்ற கடலில் அழுந்தித் தன்னை மறைத்துக் கொள்கின்ற நீர் நிறைந்த குடம் போன்று கரணங்கள் செயலற உன் திருவடியினை உள்குவதாகிய தியானத்தில் சிறிதும் அசைவில்லாமல், அவ்வுள்குதலிலேயே அடியேன் முழுகியிருக்க அடியேன் மனம் மிகவும் பொருந்தும் வகை திருவருள் செய்தருள்வாயாக;

௩௩—௪௨. நிலைமிகப்...பத்திமையதனால்

(இ - ள்.) கோபுரம், பல நிலைகளை யடைந்து, பற்பல முறைமைப்பாடுகளை அடைதலினால் முன்னெழுந்துள்ள பலவகைப்பட்ட சிற்பங்களைச் சேர்தலினால் மந்திர மென்று சொல்லப்படும் கோபுரத்து மிக்க ஒளி பொருந்திய குடங்கள் எனப்படும் கலசங்கள், விண்மீன் இருபத்தேழனுள் ஒன்றாகிய மகத்தைத் தொடும்படி உயர்ந்திருத்தலால், நன்மை பெருகிய, புகழ்கொண்ட தேவருலகத்தைக் கலந்திருத்தலால் மறையே ஒப்பாகுமென்ற சொல்லப்படுகின்ற கோபுரவாயிலும் (மறை) முறை விளக்க வழக்க முதலிய பல நிலைகளைப் பொருந்தப் பல்வேறு உறுப்புக்களைப் பொருந்துதலாலும், உயர்ந்த அன்னவடிவினை, அடைதலினாலும், மந்திரத்தினால் உண்டாகும் எரி பெருக்குவதன் காரியமாக வேள்விகளை கூறுதலால், உயர் வடைந்திருத்தலால் மங்கலம் மிகுந்த எடுத்தல் படுத்தல் முதலிய இசை வகைகளைக் கொண்ட சொன்னிலை விரவப் பெற்றிருத்தலால் மறையே ஒப்பெனும்படி சொல்லுகின்ற கோபுர வாயில்களும், மேடை: சிற்ப அமைப்பொழுக்க முறைமைகளுக்கு ஒரு சிறிதும் குற்றமின்றி அமைந்திருத்தலாலும் சொற் சிறப்பிற் கூறிய நான்காம் நிலையாகிய பெரிய மேடையிலும், உயர்ந்த நிலையினை அடைதலினாலும்,

௪0—௫௨. பலகலை...பூங்கண்ணியனே

(இ - ள்.) பல கதிர்களுடன் விளங்குகின்ற திங்கள் பொருந்தியிருத்தலாலும், மூன்று உலகங்களும் கொண்டாடுகின்ற வரிசைகளினாலும், சிவாகமம் என்று சொல்லும்படி விளங்கும் தவறுதலிலாத அழகிய மேடையும், ஆகமம்—அறையும் ஒழுக்க நெறி பத்தி நெறி சிறிதும் தவறுதலிலாது பெற்று இருத்தலாலும், சீலம், நோன்பு, செறிவு, அறிவு நான்குபடி முறைப் பாகுபாட்டினும், மேலாகிய நிலையினைப் பெற்றிருத்தலாலும், பல மெய்ப்பொருள் நூல்களிலும் விளங்குகின்ற அறிவெனும் பொருள் இவ்வொன்றினில் நிலைத்திருத்தலால் திருவடிப் பேற்றின்கண் பெருங் காதலுடைய, வீடு பேற்றினை இம்மையே எய்திய சிறப்பினத்தாரை வியந்து பேசுகின்ற நூல் வரிசைகளைப் பெற்றிருத்தலால் இறைவனது திருமுகத்துத் தோன்றிய இருபத்தெட்டுச் சிவாகமங்கள் என்று கூறப்படும் தவறுதலில்லாத மணி மேடையினையும், தடாகம்: வெண்மையாகிய அன்னப்பறவைகளை நீரின்மேற் கொண்டிருத்தலாலும், கண்ணை யொத்த தாமரை

மலர்கள் பலவற்றிலும், தேன்தங்கி யிருத்தலாலும் அழகைப் பெற்றுச் சந்தன மரங்கள் வளருதலாலும் தேவர்கோன் என்று எண்ணும்படி விளங்குகின்ற பொறியமை வாவியாகிய தடாகமும், வானவர்கோன்: வெண்மையாகிய ஐராவதம் மேற்கொண்டிருத்தலால் கண்ணுகிய தாமரைகள் பல அளவாகப் பொருந்தி யிருத்தலால் மந்தாரம் முதலிய ஐந்து தருக்கள், மிக்கு வளர்தலினுல் வானவர்கோன் என்று சொல்லப் படும் பொறியமை வாவியும், பார்க்குமிடம் எங்கணும், நீங்காது நிறைந்திருக்கிற சீகாழி எனப்படும் திருக்கழுமலத்திற்குத் தலைவனே, பிறப்பின் வலிமையை போக்கும் வன்மை வாய்ந்த பெரிய மலையி லுள்ள பெறற்கரு மருந்தே, திருவருளையே கருப்பமாகக் கொண் டருளிய, பரந்த விசும்பின்கண் உலாவும் அருள்முகிலே, சிறிய இடையினையும், மையுண்ட திருக்கண்களையும் பொன்னுலாகிய வளையலை யணிந்துள்ள திருக்கைகளையும் உடைய உமையம்மை யாருடைய மார்பிடத் தெழுந்த அழகிய திருமுலைகளைப் பொருந்தி யிருக்கும், பெரும் போகம் அமைந்த கொன்றை மாலையினை அணிந் துள்ள சிவபெருமானே.

(வி - ம்.) அற்பித்தல் - உரிமையாக ஒப்புவித்தல். புறவு-முல்லை. சுரை - மடி; ஆவின் முலைக்காம்பு. அருகிலம் - பாலை. மத்தர் - பித்தர். புடவி - பூமி. இறுமாப்பு - செருக்கு. மூத்தரை - மூன்று உலகங்கள். முத்தரை - சீவன் முத்தரை; வீட்டுயிரை. இப்பாட் டின் கோபுரம் வேதத்துக் கொப்பெனவும் மேடை சிவாகமத்துக்கு ஒப்பெனவும், வாவி வானவர் கோனுக்கு ஒப்பு எனவும் இருபொருள் பயக்கும் சிலேடை யமைந்துள்ளமை நோக்கி யின்புறத்தக்கது.

வானவர் குழு என்பது "நால்வே றியற்கைப் பதினொரு மூவர்"; இவ்வகை க. ஆதித்தர், உ. உருத்திரர், ௩. வசுக்கள், ச. மருத்துவர் எனப்படுவன. பதினொரு மூவர் என்பது தொகையான் முப்பத்து மூவர். அது வருமாறு: ஆதித்தர் பன்னிருவர், உருத்திரர் பதி னொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர் எனக் கூறப்படும்.

தேவர்கட்கும் எல்லா அல்லல்களும் உண்டு என்னும் உண்மை வருமாறு :

"தீய அசுரர் பகையுண்டு செற்றம் ஆர்வம் மிகவுண்டு
நோயுண் டனங்க னுருண்டு நோய்கட் கெல்லாம் தாயான
காயமுண்டு கைதொழ வேண்டு நருமுண்டு கற்பகத்தே
மாயுந்தன்மை யுண்டானல் வானோர்க் கென்ன வளனுண்டே."
—பெருந்திரட்டு.

எட்டிநஞ்சொக்கு மென்னு முண்மை வருமாறு :

"ஆலவிட மொக்கும் அருந்தக் கடிதிரும்
ஞாலமதிற் பித்தகுண நாசமாம்—மாலைக்கோ
லட்டியபா காமொழியே யானவிட முட்டியெனும்
எட்டி மரவே ரிது."
—பதார்த்தகுண சிந்தாமணி-சஎ0.

நெற்குற்றி யுண்ணாது உமிக்குற்றிக் கைவருந்துந் தன்மை வருமாறு :

“ கலகமிடும் அமண்முருட்டுக் கையர் பொய்யே
கட்டிநடத் தியசிந்தா மணியை மெய்யென்று
உலகிலுளோர் சிலர்கற்று நெற்குத் தண்ணா
துமிக்குத்திக் கைவருந்திக் கறவை நிற்க
மலடுகறந் துளந்தளர்ந்து குளிர்பூஞ் சோலை
வழியிருக்கக் குழியில்விழுந் தளறு பாய்ந்து
விலைதருமென் கரும்பிருக்க இரும்பை மென்று
விளக்கிருக்க மின்மினித்தீக் காய்ந்து நொந்தார்.”

—சேக்கிழார் புராணம், உ0.

எட்டி, கற்பசு, வெற்றமி, அருநில முதலியன பயன்தருமாயின் மன்னு சிவனொழிந்த மற்றுள்ள தெய்வங்கள், நின்று பயன் நல்கும் நினைந்துகொள். எனவே அச்சிறு தெய்வங்களை வீடுபேறு கருதி வழிபடுதல் அறிவுடைமையாகாது. அங்ஙனம் வழிபடுவோர் மெய் புணர்ந்தார்களால் பேதையர், திருவிலிகள், பற்றிலர், மத்தர் முதலி யோரை ஒப்பரெனக் கொள்ளப்படுவர்.

மலரினை விட்டு நீங்காத மணம் போன்று ஆருயிர் நெஞ்சத் தினை விட்டு நீங்காதான் இறைவன் என்பார்.

“ இதயவாவிப் பதுமமா மலரின், குணனெனப்
பொருந்து மணமா னின்னை.”

என்றனர். இவ்வுண்மை வருமாறு :

“ உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள் அப்பொருள் பாராதே
பெற்றவா பெற்ற பயனது நுகர்ந்திடும் பித்தர்சொல் தெளியாமே
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.”

—அ. அதிசயப்பத்து, கூ.

ஆங்கு - அசை. இதழி - இகரம் வினைமுதற் பொருளது. கண் ணியனே தருதியென முடித்துக் கொள்க. (உஉ)

வெண்பா

[அந்தி கண்டு ஆற்றாத தலைவியது நிலைமை நோக்கித்
தோழி கூறியது.]

கண்ணின் றுளிருங் கருமணியி னுள்ளொளிபோல்
உண்ணின் றுளிரு மொளிவிளக்கேன்—றெண்ணிப்
புகலிப் பெருமானைப் புண்ணியனைப் போற்றின்
அகலுமே பாசவிரு ளன்று.

(இ-ள்.) திருப்புகலித் திருவூரின்கண் வீற்றிருந்தருளும் சிவபெருமானை, புண்ணிய வடிவனைக் கண்ணின்கண் நின்று ஒளிரும் கருமணியின்கண் ஒளிரும் ஒளிபோல அடியேனிடத்து உள் நின்று திகழும் விளக்கமிக்க ஒளி விளக்கென்று உள் கசிந்து எண்ணிப் போற்றிசைத்துப் பூத்தூவி வழிபடின் அப்பொழுதே பாசமாகிய இருள் நீங்கும்.

(வி-ம்.) கண்ணிற் கருமணி பிரிக்க வொண்ணாது ஒற்றித்து ஒளியாய் உண்ணின்று உதவும் தன்மை போன்று இறைவனும் பிரிக்க வொண்ணாது உயிர்க்குயிராய் அறிவொளியாய் உண்ணின்றுஉதவுவன். கருமணியின் மெய்ம்மை வருமாறு:

"கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை யிடம்."

—திருக்குறள், ௧௧௨௩.

கருமணி - சிறந்தமணி எனலுமாம். பாசம் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றழுக்கு. அழுக்கு எனினும் மாசு எனினும் ஒன்றே. "அகலுமே பாசவிருளன்று." என்பதனுள் அகலுமே. என்பதிலுள்ள ஏகாரத்தை அன்று என்பதனுடன் கூட்டி அன்றே என முடிக்க. அன்றே என்பது அப்பொழுதே எனப்பொருள் தரும். கதிரவன் முன்னிலையில் கண்ணைத் திறந்ததும் இருள் காணாது புறப்பொருள் காண்பது போல் அருள் தோன்றியதும் அகவிருளாம் பாசமகன்று உயிர்க்குயிராம் மெய்ப்பொருள் விளங்கும்.

ஆருயிர்கட்குப் பண்டே புல்லிய மலநோய் நீங்குதற் பொருட்டு விழுமிய முழுமுதல்வன் தொன்மையிலேயுள்ள மாயையினின்றும் உடல், உறுப்பு, உலகம் உண்பொருள்களைப் பெருந் தண்ணளியால் படைத் தளித்தனன். அதனால் அவ்வுயிர்கள் துன்பம் நீக்கம் சிறிதும், சிறிது அறிவு விளக்கமும், இன்பமும் எய்தின. இவற்றின் பொருட்டு அவ்வுயிர்கள் எய்திய மாயா காரியப் பொருள்கள் இறை[1] (அற்பம்) எனப்படும். அவ்வுயிர்கட்குப் பேரறிவும், பேரின்பமும் துன்ப முற்றும் அகலுதலும் முழு முதல்வன் சிவபெருமான் திருவடியினை எய்திய காலத்தில் உண்டாம். எனவே ஆருயிர்கள் எஞ் ஞான்றும் துணையினைச் சார்ந்தே துன்பம் நீங்கி இன்பம் எய்தும்.

அத, துன்பகல இன்பமுறத் தோயுமுயிர் தொல்துணைகள். இன்பச்சிவன் தோயான் இறை என்பதனால் விளங்கும். (௨௩)

கட்டளைக் கலித்துறை

இருளங் தகன்வரி னீரேயி றேபிறை யேய்ந்தசேவ்வான்
சுருள்குஞ்சி பாச மேனவங் திவந்தது தோகைசோற்றேன்
பருகும் புகலிப் பிரானேனும் பானுப் பலகிரணம்
பேருகும் படிவங் துதித்தால்மின் ஞவி பேறுகுவளே.

1. 'இறைகளோ', எ, அ—க.

(இ - ள்.) அந்திக் காலமாகிய மாலைப் பொழுது வந்தது, இனிமேல் அக்காலத்துத் தோன்றும் பிறைத் திங்கள் கொல்லுந் தன்மை வாய்ந்த வளைவாகிய கொடும் பற்களைப் போன்றது. சிவந்த வானம் சுருண்ட செந்நிறம் பொருந்திய தலைமயிராகவும், அடர்ந்த இருள் தொடரும் பாசக் கயிறாகவும் கொண்டு எமன் நம் தலைமகள் ஆருயிரைக் கொல்வான் வேண்டி வந்தால், அவள் ஆவி பெறாள். அவ்வகையாக உயிர் நீங்குமுன், தோகைமயிலின் இயல்பு அமைந்த மலைமகளின் மொழியாகிய தேனினை உண்டு மகிழும் திருப்புகலியின்கண் வீற்றிருந்தருளும் பெரும் பொருளாகிய மெய்யுணர்வுப் பகலோன் பலகதிர்களும் தோன்றும்படி வந்து வெளிப்பட்டருள்வனாகில் மின் போலும் இடையினையுடைய நம் அருமைத் தலைவி உயிர்பெற்று வாழ்வள்.

(வி – ம்.) பிறை : பிறத்தல் என்னும் தொழிலடியாகப் பிறந்த பெயர், ஈர் - ஈருதல்; கொல்லும். எமனின் வளைவான பற்கள் அவன்றன் கொடிய நினைவையும், கொடிய சொல்லையும், கொடிய செயலையும் குறிக்கும் குறிப்பாகும். கொல்லுந் தன்மை வாய்ந்த கொடு விலங்குகளின் நகமும் பல்லும் அக்கொடுமை காட்டும் குறிப்பாகக் கூர்மையும் வளைவும் பொருந்தினவாக அமைந்துள்ளன.

பாசக் கயிறனது வீசினவரின் நீங்கி அகப்படுத்த பொருளை அவற்றின் வலியடக்கித் தன்னகப்படுத்தல்போல் இருளும் தலைவியின் செயல் கெடுத்து நாயகனிடம் கொண்ட உள்ளத்தைக் கலங்காமல் நிலைபெறுத்தலின் கயிறாக உருவகிக்கப்பட்டது. இங்ஙனம் தோழியர் கூட்டத்துள் கழி விரக்கங்கொண்டு பேசப்பட்ட முறையாகும். மாலைக்காலம் தனித்துயர் எய்தும் தலைவியர்க்குத் துன்பம் மிகுவிக்கும் வாயில் என்பது வருமாறு

"காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்."

—திருக்குறள், கஉஉஎ. (உச)

இணைக்குற ளாசிரியப்பா

பெறுவது பெற்ற உறுதியுத் தமர்கட்கு
ஆயினுஞ் சிறந்த நேயநெஞ் சினனே
யாகக் கழனியின் யோகத் தபோதனர்
ஆன பேருழவர் மானமோ டாக்கிய
முயலக னென்னு மியல்பெருங் கரும்பை
உதிர மென்னு முதிர்சா றேழுக
நகையெனு முத்தந் தோகையுறத் தோன்றச்
சுந்தரப் பதமெனு மெந்திர ஆலையிட்டு
அரைத்தக வயிரங் கரைத்தவித் தகனே
குங்குமக் கோங்கை அங்கயற் செங்கண்

பெண்ணரசி பிரியா வண்ணமெய்ப் பாக
பாடலம் புன்னை யேடவிழ் இலஞ்சி
வெளியகற் பூரங் களிகொள் கத்தூரி
நறுமண மேவையும் உறுமுறை பொருந்தி
உண்ணீர் பெற்ற தண்ணீர்ப் பந்தரும்
நெய்கமழ் கருனையுங் குய்கமழ் கறியும்
மதிதரு நிலவெனப் புதியவெண் தயிரும்
வருக்கையின் கனியுஞ் சருக்கரைக் கட்டியும்
முதலுப கரணம் பதனுறு மீரித்
தளவுஅரும் பென்ன வளமலி போனகம்
மாதவ ரெவர்க்கும் ஆதுல ரெவர்க்கும்
நன்னயத் துடனரு ளன்னசத் திரமும்
பாடகச் சீரடிப் பால்மொழி மடவார்
நாடகத் தொழில்பயில் நீடரங் கேவையும்
கலைபயில் கழகமும் பலர்பயில் மன்றமும்
உள்ளன கரவா துவந்தெதிர்ந் தளிக்கும்
வள்ளியோர் வாழும் மணிநெடு வீதியும்
பூமக ளுறையு ளாமென விளங்கும்
பெரும்புகழ்க் காழி விரும்புசங் கரனே
ஏங்தெழிற் புவன வேந்தநீ யாதலின்
வளமலி நான்முகக் களமருன் ஏவலின்
உரம்பெறு குலவரைக் குறும்பகப் பட்ட
மண்டல மென்னுங் கண்டநீள் வயலுள்
சராசரத் தொகுதி விராயவித் திட்டுப்
பாதவ மிருகம் பறவை மானிடர்
ஆதிப் பைங்கூ ழமைத்தனர் நிற்ப
மாவுறை மருமக் காவ லாளர்
வளமையி னோம்ப விளைவுமுற் றியபின்
புரிபயன் பெறுவான் அரிதர வியற்றி
மெய்வலிக் கூற்றுவக் கைவினை மாக்களில்
புலாலுடை யாக்கைப் பலாலம தகற்றி
அற்றமி லுயிரெனப் பெற்றநெல் திரளைப்
பூதசா ரத்தநுப் பூத மகாதநு
பூதபரி ணமம் புகலுறு யாக்கை

மூவகைப் பண்டியின் மேவர வேற்றிப்
பொன்னிலம் நிரயம் இந்நில மென்னும்
இடந்தோறு மாங்கவை அடங்கவைத் தவற்றுள்
ஒருசில வற்றைநின் திருவடி வீட்டில்
சேர்த்தனை யன்னது கூர்த்து நோக்கில்
அரசுகோள் கடமை யாறிலோன் றென்னும்
புரைதீர் முறைமை புதுக்கினை போலும்
அதனால்
மாசுக நீயுறும் வண்மை
பேசுக கருணைப் பெரியநா யகனே.

க—கூ. பெறுவது...வித்தகனே

(இ - ள்.) ஆருயிர் திருவருளால் அடைய வேண்டிய வீடென்னும் திருவடிப் பேற்றினை எய்தும். எய்திய அவ்வுயிர் உறுதிப் பொருளைக் கைக்கொண்டொழுகும் பண்டை நற்றவத்தர் (சாமுசித்தர்) என்றழைக்கப்படுவர்; அத்தவத்தோர்க்குப் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிவாகிய அன்புடன் விளங்கும் திருவுள்ளம் உடையவனே! அகத்தவத்தராகிய யோகிகள், பெரிய உழுதலைச் செய்யும் வேளாண்மாந்தர் வேள்விக் குண்ட மென்னும் வயலில், தன்மானத்துடன் வளர்த்த, முயலகன் என்கிற கொடுஞ்செயலையுடைய பெரிய கரும்பினை உதிரம் என்கிற முதிர்ந்துள்ள சாறு ஒழுகா நிற்க, திருநகை என்கிற முத்துக்கள் தொகை தொகையாக உண்டாக, அழகாகிய திருவடி என்கிற பொறி என்னும் சாணையிலிட்டு நசுக்கி அவன் மனத்திருந்த நெடுநாட் பகையினைத் தேயும்படி செய்தருளிய மூதறிவுப் பிழம்பே!

கo—உஉ. குங்கும...சத்திரமும்

(இ - ள்.) மணங்கமழ் குங்குமக் குழம்பினை அணிந்த மார்பினையும், அழகிய கயல்மீன் போன்ற சிவந்த கண்களையும் உடைய பெண்கள் முதல்வியாகிய உமையம்மையார் விட்டு நீங்காது ஒட்டியுறையும் வனப்பு மிகுந்த திருமேனியின் இடப்பாகத்தை யுடையவனே. பாதிரிப்பூவும், புன்னை மலரும், இதழ் விரிந்த தாமரை மலரும் வெண்ணிறம் பொருந்திய பச்சைக் கற்பூரமும். குழம்பாகிய கத்தூரி முதலிய நறுமணப் பொருள்கள் அனைத்தையும் முறையாகப் பெய்யப் பெற்று உண்ணும் நீரை அடைந்த குளிர்ந்த நீரை யிளைப்படைந்த மாந்தர்க்கு வார்க்கும் வளம் நிறைந்த பந்தலிடப்பட்ட தண்ணிய இடங்களும், நெய்யின் மணம் கமழ்கின்ற பொரிக்கறியும், தாளித நறுமணங் கமழ்கின்ற கறிவகைகளும், திங்களினால் காலப்பட்ட நிலவு போன்று அன்று அமைத்த வெண்மையாகிய தயிரும், பலாப்பழமும், கற்கண்டும், வேறுள்ள துணைப் பொருள்களும் செம்மைச் செவ்வி (பதம்) வாய்ந்ததாய், முல்லையரும்பென்று சொல்லும்படி வளப்பமிகுந்த சோற்றினை, மிக்க தவத்தினை யுடைய எத்திற நன்னெறிச் செல்வர்

களுக்கும், எத்திற வறியவர்களுக்கும், நன்முகம் காட்டி இன்சொற் கூறி அகங்கனிந்து அளித்தருளும் உண்டி வழங்கும் ஊட்டுப் புரைகளும்,

உரு—உ௬. பாடகச்...சங்கரனே

(இ - ள்.) பாடகம் என்னும் காலணி யணிந்துள்ள சிறந்த கால்களையும், பால் போலும் இனிய மொழிகளையு முடைய இளமங்கையர் நாடகத் தொழிலினைச் செய்து பழகி வருகின்ற பெரிய நாடக மன்றங்கள் அனைத்தும், மறைமுறைகளை விடாது பயின்றுவருகின்ற கழகமும், பல்வேறு இனத்தவரும் ஒற்றுமையாகக் கல்வி கற்கும் கல்வி நிலையங்களும், தம்பால் சிவனளித்துத் தம் காவலிலுள்ள உடைமைகளை ஒளிக்காமல் களிப்புற்று நல்வரவேற்று வழங்குகின்ற கொடையாளர் உறைகின்ற அழகிய பெரிய தெருக்களும், திருமகளுக்கு வாழும் இடமென்று காணப்படும், மிக்க சீர்த்தி நிறைந்த சீகாழியை விழைந்து எழுந்தருளியிருக்கும் ஆருயிர்கட்குப் பேரின்பத்தினைச் செய்தருளும் சிவபெருமானே!

௩௦—௪டு. ஏந்தெழிற்...ஏற்றிப

(இ - ள்.) மிக்க அழகினையுடைய உலகங்களனைத்துக்கும் ஒப்பில்லா முதல்வனும் வேந்தன் தேவரீர் ஆகையால், வளப்பமிகுந்த நான்கு முகங்களையுடைய படைப்போர்களாகிய உழவர்கள், தேவரீரின் திருவாணையால் வலிமை கொண்ட செய்கரைகளுக்கு உட்பட்ட நிலவுலகங்களென்று சொல்லப்படும் பகுதியாகிய நீண்ட வயல்களில் இயங்குதிணை நிலைத்திணைகளாகிய கூட்டங்கள் பின்னிக் கலந்துள்ள விதைகளை விதைத்து மரங்கள், பறவைகள், மானிடர் முதலாகிய பயிர் வகைகளை அமைத்து நிற்கத் திருமகள் உறைகின்ற மார்பினையுடைய காவற்காரர்களாகிய திருமால்கள், வளப்பமாகக் காவல் செய்ய, விளைவு முதிர்ந்த பிறகு செய்தொழிலுக்கு ஏற்ற பயனை அடையும் வகை அறுவடைகளைச் செய்வித்து உடல் வலிமை கொண்ட காலர்களாகிய வன்கைத் தொழிலாளர்களால் இறைச்சியையுடைய உடம்பாகிய தழைகளையும் வைக்கோல்களையும் போக்கி, நீங்குதலில்லாத உயிர் என்று கூறும் நெற்பொலிகளைப் பூதசாரவுடம்பு, மாபூதவுடம்பு, பூதத்திரிபுடம்பு என்று கூறப்படும் மூவகையான வண்டிகளில் பொருந்தும் வகையாக ஏற்றி,

௪௬—டு௪. பொன்னிலம்...பெரிய நாயகனே

(இ - ள்.) துறக்க உலகம், இருளுலகம், நடுவுலகமெனப்படும் இந்நிலவுலகம் ஆகிய இடங்கள் தோறும் அவ்வினைப் பயன்களாகிய நெல் முதலிய கூலங் (தானியம்) களை நிரம்பவைத்து அக்கூல வகைகளில், ஒரு சிலவற்றைத் தேவரீருடைய திருவடியாகிய துறக்க வீட்டில் வைப்பித்தருளினை; அச்செயலை உற்று நோக்கின், ஆள்வோரால் கொள்ளப்படும் அரசிறையாகிய கடமை ஆறில் ஒன்று என்னும் குற்றம் நீங்கிய முறைமையினைப் புதிதாக வேறு செய்தனை போலும்; ஆகையால் பெரிய தண்ணளியுடைய முதல்வனே, தேவரீர் மிகுந்த பேரின்பத்தினைத் திருவருளால் பொருந்தி நுகரும் வளப்பத்தினைத் திருவாய் மலர்ந்தருள் வாயாக.

(வி - ம்.) உத்தமர்-பண்டை நற்றவத்தர்; சாமுசித்தர். பாடலம்-பாதிரி. இலஞ்சி: இயல்பான நீர்நிலை; இங்குத் தாமரை. (ஆகுபெயர்) கருணை - பொரிக்கறி. வருக்கை - பலா. தளவு - முல்லை: ஆதுலர் - வறியவர். அன்னசத்திரம் – அறச்சோற்று விடுதி; ஊட்டுப்புரை. களமர் – உழவர். குறும்பு - செய்கரை. பாதவம் - மரம். பைங்கூழ் - பயிர். மா - திருமகள். பலாலம் – தழை; வைக்கோல். பொன்னிலம் – துறக்கம்.

உத்தமராகிய சாமுசித்தர் உண்மை வருமாறு :

"பண்டைநற் றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணும்
தொண்டரைத் தானே தூய கதியினில் தொகுப்பன் மார்க்கர்
கண்டநூல் ஓதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றும்."

—சிவஞானசித்தியார், பாயிரம்–ந.

"முயலகனைப் பாதுகாத்தல் என்பது" ஆணவத்தை ஒடுக்குதலென்பதாம். அவ்வுண்மை வருமாறு :

"பாதத்தால் முயலகனைப் பாது காத்துப்
பாரகத்தே பரஞ்சுடராய் நின்ற நாளோ
கீதத்தை மிகப்பாடும் அடியார்க் கென்றும்
கேடிலா வானுலகம் கொடுத்த நாளோ
பூதத்தான் பொருநீலி புனிதன் மேவிப்
பொய்யுரையா மறைநால்வர் விண்ணோர்க் கென்றும்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ
விழவாரூர் கோயிலாக் கொண்ட நாளோ"

—சு. நஉ—அ.

தண்ணீர்ப் பந்தரின் தனிச் சிறப்புப் பெரிய புராணத்துள் "ஒரு நம்பி அப்பூதி யடிகளார்"தம் திருவரலாற்றின்கண் விளங்கக் காணலாம். அவற்றுள் ஒரு திருப்பாட்டு வருமாறு :

"அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறவேனில் பரிவகற்றிக்
குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்."

—கஉ. அப்பூதியடிகள், கூ.

செந்நெறிச் செல்வர்கள் பெருஞ் சோற்றுப் பிறங்கல் ஈயும் முறையில் பசித்தணைவார் அனைவர்கட்கும் எவ்வகை வேறுபாடு ஒரு சிறிதுங் கருதாது வழங்குவர்.[1]

அவ்வுண்மை வருமாறு :

---

1. 'விண் பொய்த்தனல்'. ந. எடு–எ. 'இரவார்.' திருக்குறள் கO௩கூ.

"எண்ணிறந்த பரிசனங்கள் எல்லாரும் இனிதருந்தப்
பண்ணியபின் அம்மருங்கு பசித்தணைந்தார் களும்அருந்த
உண்ணிறைந்த ஆரமுதாய் ஒருகாலும் உலவாதே
புண்ணியனார் தாமளித்த பொதிசோறு பொலிந்ததால்."
—கஉ. ஏயர்கோன், கசுக.

மேலும் தமிழக மரபும் முறைமையும் இதுவே என்னும் உண்மை வரும் செந்தமிழ்ப் பொதுமறையான் உணரலாம்.

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது."
—திருக்குறள், உஉஎ.

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை." — ,, ௩உஉ.

இவ்வுலகத்து வாழுமாந்தர் ஐம்பூத கூட்டாய் அமைந்த பருவுடம் போடு கூடி நனவின்கண் வினையீட்டலும், வினைப்பயன் துய்த்தலும் புரிவர். கனவின்கண் நுண்ணுடம்போடு வினை ஈட்டலும், அதன் பயன் துய்த்தலும் புரிவர். இப்பருவுடல் நீங்கிய காலத்தும் நுண் ணுடல் நீங்கா திருக்கும். நுண்ணுடல் என்பது தன் மாத்திரை ஐந்து, மனம், அகங்காரம், புத்தி மூன்று ஆக எட்டு மெய்களும் கூடிய தாகும். பருவுடம்பு நீங்கியும் நுண்ணுடம்பு நீங்கா திருப்பதற்கு ஒப்பு மரம் நீங்கியும் வேர் நீங்காமையாகும்.

பின் துறக்கவுலகஞ் சென்று துய்ப்பதற்கு அந்நுண் உடம்பி னின்றே தோன்று முடம்பு பூதசாரவுடம்பு. இதுபோல் இருளுலக மாகிய நரகத்தில் சென்றழுந்தும் உடல் யாதனா உடல். இவ்வுண்மை வருமாறு:

"பூதனா சரீரம் போனால் புரியட்ட ரூபந் தானே
யாதனா சரீர மாகி இன்பத்துன் பங்க ளெல்லாம்
நாதனார் ஆணை யுய்க்க நரகொடு சுவர்க்கந் துய்த்துத்
தீதிலா அணுவாய் யோனி சேர்ந்திடும் சீவன் எல்லாம்."
—சிவஞானசித்தியார், உ. உ—௩௩.

யோனி - கருப்பை; பிறப்பு.

பின் எஞ்சிய வினைக்கீடாக அவ்வுயிர்கள் இந்நிலவுலகத்து வந்து தோன்றும். தோன்றியவற்றுள்ளும் சிலவேதான் திருவடிப் பேற்றி னுக்குத் தகுதியான செம்மையைப் பெறுகின்றன. அவற்றை நின் திருவருள் நின் திருவடிக்கு ஆளாக்கி வைத்தருள்கின்றது. இதன் மெய்ம்மையை நோக்குவோமாயின் ஓர் உண்மை புலப்படும்.

வேளாண் பெருமக்கள் சிவபெருமானும் வேந்தனை வாழ்த்தி நன்னாட்கொண்டு ஏருழுது, நிலத்தினைப் பண்படுத்தி, எருப்பெய்து, நாற்று நட்டு, களை கட்டு, நீர்ப்பாய்ச்சிப் பயிர் வளர்த்து, காவல் பூண்டு விளைவித்த நெல்லின் ஆறின் ஒரு கூறே அரசுகொள் கடன்மை யாகின்றது. அம்முறைமை போன்று நானில நலம்பொருந்திய மேனிலமாகிய இத்தமிழகத்துத் தோன்றிய மாந்தருள் நன்னெறி

நாற்படி நலமாம் நற்றவங் கடைப்பிடித்து ஒழுகி நின்திருவடிப் பேற்றினுக்கு உரியராய்த் திகழ்வார் ஒரு சிலரேயாவர். அதனால் அச்சிலரையே நின்திருவருள் நின் திருவடிக்கு ஆளாக்கியருளுகின்றது.

இவ்வுண்மைகள் வருமாறு :

"நரர்பயில் தேயந் தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியத்தா லாகும்
தரையினில் கீழை விட்டுத் தவஞ்செய்சா தியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே."

"வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித்
தாழ்வெனுந் தன்மை யோடுஞ் சைவமாஞ் சமயஞ் சாரும்
ஊழ்பெறல் அரிது சால உயர்சிவ ஞானத் தாலே
போழிள மதியி னானைப் போற்றுவார் அருள்பெற் றாரே."

—சிவஞானசித்தியார், உ. சூ. கஅ—கக.

"சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
செனனம்ஒன்றி லேசிவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
மொழிந்திடவும் உலகர்எல்லாம் மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுவென்ன பிராந்தி."

—சிவஞானசித்தியார், அ. உ—சு. (உரு)

வெண்பா

[தோழி தலைவனிடம் பிரியா வரம் வேண்டல்]

பெருமானே கூடிப் பிரிந்தாலும் மங்கைக்
கோருவா தருள்வர மோன்றுண்டே—திருமால்
விடையாய் புகலி விமலா மவுன
விடையாய் பிரியா விடை.

(இ - ள்.) (தேவர்க்கும் மூவர்க்கும் மற்று யாவர்க்கும் விழுமிய முழு முதலாய் முன்னிற்கும் முன்னோனாகிய) பெருமகனே! (நின் திருவாணையினால் காக்குந் தொழிலுக்கு உரிமை பெற்றுப் பணியாற்றுகின்ற) திருமாலை ஊர்தியாகக் கொண்டருள்பவனே, திருப்புகலித் திருவூரின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் இயற்கைத் தூயோனே, (கல்லால மரத்தின் நீழலில் முன்னாள் நன்னெறிச் செல்வர் நால்வர்க்கும் மன்னிய முப்பொருள் உண்மையினைக் குறியாமற் குறித்தல், சொல்லாமற் சொல்லுதல் எனப்படும்

வாய் பேசா மோன நிலையிலிருந்து) அறிவடையாளத் திருக்கையால் உண்மை உணர்த்தியருளிய தென்முகத் தெய்வமே, எம் தலைவியுடன் கூடியருளிப் பிரியாதிருக்கும் பெற்றி பேணும் பெருமையுடையாய் எனினும் "அங்கப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால் எங்கள் பெருமான் உனக் கொன்றுரைப் போங்கேள்" என்னும் தனித்தமிழ் மறையின்படி கூறுவேன்) ஒரோவழிப் பிரிய நேரிடினும் மங்கைப் பருவத்தினையுடையாட்கு; எக்காலத்தும் நீங்காமலிருந் தருளும்படியான பெருவரம் ஒன்றுண்டு. அவ்வரம் நீங்காதிருத்தலேயாம். (அதனை யருள்வாயாக.)

(வி - ம்.) மங்கை - பன்னிரண்டு முதல் பதின்மூன்றுவரையுள்ள அகவை வாய்ந்த பெண். ஒருவாது-நீங்காது. விடை-ஆனேறு: திருமால். மவுனவிடையாய் – குறிப்பால் விடையருளியவனே. பிரியா விடை - பிரியாதிருத்தல். பெருமானே: ஏ இரக்கக் குறிப்பு.

ஆலவாய் அவிர்சடைக் கடவுள் திரியும் முப்புரத்தை எரியுண்ணச் செய்தருளிய காலத்துப் புகலிடம் பெறும் பொருட்டுத் திருமால் சிவனுக்குரிய மால்விடை யுருக்கொண்டு சென்று தாங்கினன். அதுவே 'திருமால் விடையாய்' என்னுங் குறிப்பு. அவ்வுண்மை வருமாறு:

"கடகரியும் பரிமாவும் தேருமுகந் தேறாதே
இடபமுகந் தேறியவா றெனக்கரிய வியம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ."

—அ. திருச்சாழல். கடு.

கரி - யானை; கடைக்குணம். பரி - குதிரை; இடைக்குணம். இடபம் - ஆனேறு; தலைக்குணம். (இம்மூன்றும் முறையே தாமத இராசத, சாத்துவிகம்.) மேலும் குமரகுருபர அடிகள் கூறியருள்வது வருமாறு:

"நல்லார் தொழுங்கமலை நாதனே நாதனெனக்
கல்லாதார் சொல்லுங் கடாவிற்கு—வெல்லும்
விடையே விடையாக மெய்யுணரா ரையுற்
றிடையே மயங்குமிது வென்."

—கு. திருவாரூர் நான்மணி, உஉ.

"வரையே றவிட்டமுது சேர்ந்தனிட வருந்தினைவல் வினமென் றூலும்
உரையே றவிட்டமுத லாகுமோ எனைசித்தென் றுரைக்கின் என்னும்
நரையே றவிட்டமுதல் நாளவனுக் கொண்டுநறும் புலிசை மேவும்
கரையே றவிட்டமுதல் வாவுனை யன்றியுமோர் கதி யுண்டாமோ."

—சிவஞான முனிவரனர்-தனிப்பாட்டு. (உசு)

கட்டளைக் கலித்துறை

விடையம் பொருளேன் றுணராத மார்க்கம் விரும்புமழுப்
படையம் புயக்கரத் தெந்தாதை ஞான பரமவென்றெண்
சடையம் புனலணி வேணு புரேசனந் தாண்மலர்தூ
விடையம் பொருளென் றிருநீயென் றுண்மை விளம்பினனே.

(இ - ள்.) (எனக்கு உறுதுணையாய் இருக்கும்படி இறைவனால் அளித்தருளப்பட்ட) நெஞ்சமே! நீ (சுவை, யொளி, ஊறு, ஓசை நாற்றம் எனப்படும்.) புலன்களை உறுதிப் பொருளென்று, எக்காலத்தும் எவராலும் உணரப்படாத நெறி செம்பொருட்டுணிவாம் செந்தமிழ் நன்னெறி; (அந்நன்னெறிக்குரிய தனித்தமிழ்த் திருமாமறை திருமா முறை யருளியபடி) அந்நெறிக்கண் நின்று கடைப்பிடித்தொழுக விரும்புவாயாக; மழுவாட்படையினைத் தன் அழகிய தாமரை போலும் திருக்கையின்கண் ஏந்தி யருளிய எம் ஆருயிர்த்தந்தையாகிய சிவபெருமானையே, மெய்யுணர்வாகிய மூதறிவோன் எனவும் யாவர்க்கும் மேலான முழு முதல்வனெனவும் இடையறாது எண்ணுவாயாக. திருச்சடையின்கண் நடப்பாற்றல் எனப்படும் அழகிய வான்புனலைத் தங்கவைத்தருளிய வேணுபுரம் எனப்படும் சீகாழித் திருவூரின்கண் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானின் திருவடிக்கண் "பொய்யாத வாய்மையாற் பொடி பூசிப் போற்றிசைத்துப்" பூத்தூவிப் பூசை செய்யும் நற்றவமே உண்மையான உறுதிப் பொருள் என்று இடையறாது எண்ணி இன்புற்றிருப்பாயாக; இதுவே திருநெறி சேர்ந்துய்தற்கு உண்மை வழியென்று திருவருளால் உறுதிபெற உரைத்தனன்.

(வி - ம்.) விடயம் - புலன்; நுகர்பொருள். பொருள் - உறுதிப் பொருள். மார்க்கம் - நெறி. அம்புயம் – தாமரை.

உலகமும், உலகத்திற் காணப்படும் பொருள்களும் காரியப் பொருள்களாகும். காரியப் பொருள்கள் அனைத்தும் தோன்றி நின்று சிலகாலம் கழிந்து ஒடுங்குந் தன்மைய. இத்தன்மையை நிலையாமை என்னும் ஒரு சொல்லாற் சொல்வர். இந்நிலையாமையை உள்ளவாறு எடுத்தியம்புவது சித்தாந்த சைவச் செந்நெறி. அந்நெறி இதனை நூல் வாயிலாக உணர்த்துவது மட்டுமன்றி நோன்மை ஒழுக்க வாயிலாகவும் உணர்த்தி வருகின்றது. அதுவே திருவெண்ணீறணிந்து திகழ்வதாகிய திரு. வெண்ணீறென்றே நிலையாமையினை வெளிப்பட எடுத்து விளம்புவது. பருப்பொருள்கள் தீயின் சார்பால் நுண்பொருள்களாகித் தம்முடைய இயற்கை உண்மை நிலையினை உணர்த்துகின்றன. அஃதாவது எல்லாப் பொருள்களும் இயற்கையாகிய காரண நிலையில் ஆற்றலுருவாய் நுண்மையாக இருக்கும். பொருள்கள் பயன்பட வேண்டுமானால் அவை காரியப்பட்டு வடிவு பெறுதல் வேண்டும்.

அக்காரியப் பொருள்கள் பயனளித்த பின் மீட்டும் தம் பண்டைய நிலையை அடையும். இதுவே ஒடுக்கம். சிறப்பின் பொருட்டுப் போடப்படும் பந்தல் காரியப்பொருளாகும். அச்சிறப்பு முற்றியதும், அப்பந்தல் பிரிக்கப்பட்டுக் கம்புங், கழியும், கீத்துங், கயிறுமாக இயற்கையாகிய பழைய நிலையினை எய்தி யிருக்கும். இதுவே ஒடுக்கம். பந்தல்

போடுவதும், பயனளிப்பதும், பிரிப்பதும், தொகுத்து வைப்பதும் ஆகிய செயல்களனைத்தும் வெளிச்சத்தின் துணையாலே நிகழ்வன. வெளிச்சம் தீயினால் வெளிப்படுவது. எனவே தோற்ற நிலை இறுதி என்னும் முத்தொழிற்கும் வினைமுதற் காரணனுக்கு வியன் துணையாக நிற்பது தீ யென்பது பெறப்படும். அதனால் அத்தீயின் சார்பாக விளைந்த வெண்ணீறே உண்மை யுணர்த்தும் வண்மை அடையாளம் என்பது தானே புலனும். அதனைத் தன் அடையாளமாகக் கொண்டு திகழும் நெறியே திருநெறி என்பது தெளிவு.

தீயின் வண்ணமாகிய செம்மேனி எம்மான் சிவபெருமான் ஆதலின் அவனே விழுமிய முழு முதல்வன். அவனைச் சாரு நெறியே விழுமிய முழுநெறி. அதற்கடையாளமாகிய திருவெண்ணீறே முழுமையடையாளம். இவ்வுண்மைகள் வருமாறு :

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு."

—திருக்குறள், ௩௫௮.

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு."

— ,, ௩௫௧.

"நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை."

— ,, ௩௩௧.

"வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலம் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே."

—௪. ௧௧—௫.

விரதி - விரதமேற் கொண்டவர். விரதம் - நெறி. ஈண்டுச் சித்தாந்த சைவச் செந்நெறி.

வெண்ணீற் றடையாள மேயுணர்த்தும் மெய்யுணர்வை
உண்மைநெறிக் குற்றவுரு வோர்.

புலன்கட்கும் பூதங்கட்கும் முதலாயுள்ளது தன்மாத்திரை யெனப்படும். அவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்துமாகும். இவ்வைந்து பூதமும் எழுச்சி எனப்படும் பூதாதி அகங்காரத்தினின்றும் தோன்றின. எனவே அவையும் காரியப் பொருள்களே. காரியப் பொருள்களெல்லாம் தோன்றி நின்று ஒடுங்கும். இவ்வுண்மை திருவருளால் ஒருவர் உணரப்பெறின் அவர்க்கு உலகத்தின்கண் எற்படும் மயக்கம் உண்டாக மாட்டாது. இவ்வுண்மை வருமாறு :

"சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு."

—திருக்குறள், ௨௭. (௨௭)

இணைக்குறள் ஆசிரியப்பா

விளம்புவன் யானென் றுளம்புகும் நெறியால்
எழுத்தி னுறழாது வழுத்துபொரு ளின்றிக்
குறிப்பொடு படாது வெறித்தபுன் சொல்லே
ஆயினும் பயந்ததஞ் சேயவர் சொலும்மொழி
குழலினு மியாழினும் அழகிதா மதுபோல்
நற்று யாகியெற் பெற்று யென்சொல்
திருச்செவிக் கேறும் பொருத்தமுண் டதனால்
கேட்டி கேட்டி வாட்டமில் பெரியோய்
மதுமழை பிலிற்றிப் புதுமணம் விரித்துப்
பற்பல உதவுங் கற்பகத் தருவும்
நந்தா வளனருட் சிந்தா மணியும்
வாமமா மேனிய காம தேனுவும்
அருளிய ஏவல் வரன்முறை கேட்பக்
கடவுள ரணிமணித் தடமகு டங்கள்
கால்துணை வருடப் போற்றின ரிறைஞ்சி
முனிவ ராசி நனிபல மொழியக்
கரம்பயில் கவரி யரம்பைய ரிரட்டக்
கின்னரர் விபஞ்சி நன்னரம் புளரா
இசையமு திருஞ்செவி மிசையெடுத் தூற்ற
முடங்குளைச் செங்கண் மடங்கலணை நாப்பண்
அமுதகு மென்சொல் குமுதமென் செவ்வாய்
இந்தி ராணி வந்தரு கிருப்பக்
கருமுகி லாயிரந் திருமலர் பூத்துச்
செங்கதிர்ச் சேகரந் தங்கவீற் றிருந்த
பெருந்திறல் கடுப்ப இருந்துவிண் புரக்கும்
அண்ணல் புரந்தரப் பண்ணவ னரசும்
பழமறை கனிந்து மழவுபெற் றிருந்த
செந்நாத் தவிசின் முன்னாள் தங்கிப்
பனுவ லாட்டி இனிதுவந் திருப்ப
வண்டுபாண் முரன்று கிண்டுபு உதைந்து
பொற்று துண்ணு முற்று வின்பப்
பிரசமுற் றிருந்த வரசரோ ருகத்தன்
நெருக்கிய புவனப் பெருக்கினைத் தனது

திண்ணிய மனத்திடை யெண்ணியாங் கியற்றி
எம்மா லேவையு மியன்றன வென்னச்
செம்மாந் திருக்குஞ் சிறிய வாழ்க்கையும்
திதலைபூத் தலர்ந்து மதகளி றிகலி
வருமுலை சுமந்த திருமகள் பச்சைப்
பசுந்துழா யலங்க லசும்புதேன் துளித்துக்
கடிகமழ் மார்பில் குடிபுகுந் திருப்பத்
தண்ணில வெனவிரி வெண்ணிறப் பாற்கடல்
ஒல்லொழித் தரங்க மெல்லடி வருடக்
காமர்தேன் காலெனுஞ் சாமரை யசையத்
துத்திநெய் பரந்து பைத்தபை யகலில்
அணிகிளர் பலகதிர் மணிவிளக் கொளிரச்
சுடிகைவா ளரவ நெடியபூ வணைமேல்
மறுவிலா நீல வரைகிடந் தென்ன
அறிதுயி லமர்ந்த அச்சுதன் வாழ்க்கையும்
அழியா வின்பமென் றெழியா துரைப்பினும்
கற்றவர் கருத்தி னுற்று நோக்குழி
இந்திர சால முந்துநீள் கனவு
வெண்டேர் போல உண்டெனத் தோன்றி
இலவா மாதலின் நலமல வாங்கவை
நிலைபே றுடையது நின்னருட் செல்வம்
அன்னதே பெறுதற்கு உன்னினன் றமியேன்
அதனால்
எளிதினின் இரங்கி யளிசுரந் தருளுதி
மரகதத் திடையிடை தரளமிட் டிழைத்த
அரமிய மதனை விரிகுழை போதுளி
அரும்பிய புன்னைப் பெரும்பொழி லெனவும்
ஆடக அலங்க லணியணி நிறைத்த
சேடுயர் நீனிறச் செய்குன் றதனைத்
துணர்த்தபூங் கொன்றை மணத்தகா வெனவும்
மொய்க்கும்வண் சிறையளி மைக்கரு நிறங்கள்
பளிங்கரிந் தியற்றிய துளங்கொளி மாடப்
பித்திகைத் தலத்திசைப் பத்திபாய் தலினுல்
வந்ததிங் கிரவெனச் சந்தத மடவார்

வார்முலை யாடவர் மார்பிடைக் குளிப்பப்
புல்லிய கலவிப் புதியதேன் நுகரும்
மல்லலங் காழி வளநகர் வாண
குறிகுணங் கடந்த மறுவில்மா மணியே
உறைபொரு ளெங்கணும் நிறைபரி பூரணம்
அந்த மாதி முந்தையே தவிர்த்த
அனாதி முத்த வெனாதி நித்த
அருவுரு வில்லா ஒருபெரும் பொருளே
அளவையி னடங்கா தோளிர்சுக நேய
உருகுமெய் யன்பர் பருகுமா ரமுதே
நலங்கனி பெரிய நாயகி
கலந்தபே ரின்பில் களித்தபண் ணவனே.

க—அ. விளம்புவன்...பெரியோய்

(இ - ள்.) அடியேன் உள்ளத்தில் மேலோங்கி நிற்கும் முறையால் ஒரு செய்தியைக் கூறுவேன்; (அஃதென்ன எனின்) அருந்தவம் புரிந்து பெற்ற தம் மக்கள் பேசுங் குதலை மொழிகள் எழுத்துக்களைச் சிறிதும் ஒவ்வாது, கொண்டாடிப் பாராட்டத்தக்க பொருள் சிறிதும் இல்லாமல், இன்ன குறிப்புடையன என்று அறியப்படாமல் பயனில்லாத சிறிதாகிய சொற்களேயாயினும் குழலிசையினும், யாழிசையைக் காட்டினும் அழகினை யுடையதாம்; அத்தன்மை போன்று நல்ல தாயே ஆகி எளியேனைப் பெற்றளித்தனை; அடியேனுடைய சிறிய சொற்களும், தேவரீரின் திருச்செவிக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க பொருத்தம் உள்ளது; ஆகையினால், எக்காலத்தும் வாடுதல் இல்லாமல் ஒன்று போல் விளங்கும் பெரியோனே! அடியேன் கூறும் சொற்களைக் கேட்டருள்வாயாக; கேட்டருள் வாயாக.

(வி - ம்.) விளம்புதல் - விளக்கிக் கூறல்; பலரறிய மொழிதல். உறழாது - ஒத்திராது. வழுத்துதல் - பாராட்டுதல். வெறித்த - பயனற்ற. சேயவர் - மக்கள். ஏறும் - பொருந்தும்.

பிள்ளைமொழி பெற்றோர்க்கு உள்ளத் துவகை யூட்டும் இன்ப மொழியாம் உண்மை வருமாறு :

"குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்."

—திருக்குறள், சுசு.

கூ—உசு. மதுமழை...அரசும்

(இ - ள்.) தேன் மாரியினைத் துளித்துப் புதிய மணத்தினைப் பரப்பிப் பலவாகிய பொருள்களை வேண்டியவாறு உதவுகின்ற கற்பக மரமும், குறைவில்லாத வளமுள்ள பொருள்களை விரும்பினார்க்கு நல்கும் சிந்தாமணியும், வனப்பெனப்படும் அழகு வளர்கின்ற மேனி

யினையுடைய காமதேனு வெனும் பசுவும், கட்டளையிட்ட ஏவற்றொழில்களை வரலாற்று முறைப்படி கேட்டு நிற்கத் தேவர்கள் போற்றி யெனப் புகன்று வணக்கஞ் செய்து அணிந்துள்ள, பெரிய மணி முடிகள், இரண்டு திருவடிகளைத் தடவவும், முனிவர்கள் வாழ்த்து மொழிகள் பலவற்றை மிகுதியாகக் கூற, வானுலகத்துப் பெண்கள் கையில் பழகிய சாமரைகளை இரட்டவும், வானுலகத்து இசை வல்லார், விபஞ்சி யென்னும் வீணையினது அழகிய நரம்புகளைத் தடவி மீட்டி இசையாகிய அமிழ்தத்தினைப் பெரிய செவியில் எடுத்துப் பொழியவும், வளைந்த பிடரி மயிரினையும் சிவந்த கண்களையுமுடைய அரியணை நடுவில் அமிழ்தினை யொத்துச் சிந்துகின்ற மென்மையாகிய இனிய சொற்களையும், குமுதம் எனப்படும் சிவந்த வாயினையும் உடைய இந்திராணி, சிறப்பொடும் வந்து பக்கத்தில் இருப்பக் கருமையாகிய மேகம் ஆயிரம் அழகிய தாமரை மலர்களைப் பூத்துச் சிவந்த கதிர்களையுடைய மணிமுடி தலையிற்கொண்டு பெருமையுடனிருந்த மிக்க வன்மையை யொப்ப, வீற்றிருந்து, துறக்க மெனப்படும் வானுலகத்தைக் காக்கின்ற பெருமை தங்கிய வானவர் கோனது ஆட்சியும்;

(வி - ம்.) உறழ்தல்-ஒத்தல். வெறித்த - பயனில்லாத. பயந்த-பெற்ற. முடங்கு - வளைவு. மடங்கல் - அரிமா; சிங்கம். புரக்கும் - காக்கும். பண்ணவன் - தேவன்; தேவ இந்திரன்.

உஎ—ருகூ. பழமறை...வாழ்க்கையும்

(இ - ள்.) பழமையாகிய வேதங்கள் முதிர்ந்து மென்மை பெற்றிருந்த சிவந்த நாவாகிய இருக்கையில் முன்னாள் வீற்றிருந்து நாமகள் களித்து மகிழ்வுடனிருக்க வண்டுகள் இசையினைப் பாடி, அழகிய பூந்தாள்களை நெருங்கிக் கிண்டித் தேனினை உண்டு முடிவு பெறாத இன்ப நலத்தினை அடைந்திருந்த மேன்மை தங்கிய தாமரையில் எழுந்தருளி யிருக்கும் நான்முகன், பலவாக நெருங்கியுள்ள அண்டத்தின் மிகுதிகளைத் தன்னுடைய உறுதியாகிய மனத்தில் நினைத்தது போலப் படைத்து, என்னால் எல்லா உலகங்களும் படைக்கப்பட்டன என்று எண்ணிப் பெருமிதம் அடைந்திருக்கும் சிறிய வாழ்க்கையும்,

(வி - ம்.) பழமறை - பண்டை நற்றமிழ் நான்மறை. பனுவலாட்டி - நாமகள். கிண்டுபு - கிண்டி. பிரசம் - தேன். வரம் - மேன்மை. சரோருகம் - தாமரை. செம்மாப்பு - இறுமாப்பு; பெருமிதம்.

படைப்பு முறை கண்ணுதலெனப்படும் திருக்குறிப்பாகிய சங்கற்பத்தால் சிவபெருமான் படைத்தருள்வன். பொன்னுடைய ஒருவன் பணி செய்ய விரும்பின், முதற்கண் தன் எண்ணத்தில் இன்னவாறு அமையவேண்டுமென எண்ணுவன். பின்பு பொற்கொல்லன்பால் எண்ணியவாறே இயம்புவன். இவ்விரு செயற்கும் அவனுடைய தற்கிழமைக் கருவியாகிய உள்ளமும், நாவுமே செயற்படுவன. இவற்றால் அவன் மிக்க இளைப்பு எய்துவானல்லன். இந்நிலையே சிவபெருமானின் கண்ணு நிலைக்குப் பொருந்திய ஒப்பாகும்.

பின்பு பொற்கொல்லன் அப்பொன்னினைப் பெற்றுச் சென்று உடலாலும், உறுகருவிகளாலும் உரைத்தவாறு இளைப்புறப் பணி

யாக்குவன். பணி - நகை; அணி. இதுபோல் ஆருயிரினமாகிய நான்முகன் மாயாகாரிய உடம்பொடு பொருந்திச் சிவபெருமான் உள்ளும்புறம்புமாய் நின்றுணர்த்தும் வடிவினை உள்குதல் எனப்படும் தியானம் பண்ணிப் படைப்புத் தொழிலை மேற்கொள்வன். அதனால் அவனுக்கு இளைப்பெனப்படும் திரிபு எய்தும், திரிபு - விகாரம். அருவமாம் ஒலிக்கு எல்லாராலும், எக்காலத்தும் எவ்விடத்தும் இனிமைப் பயன் எளிதாக எய்தும் பொருட்டு உருவமாம் வரிவடிவினை திருவருள் கைவந்துள்ள ஆன்றோர் அமைத்தனர். அதுபோல் சிவபெருமான் திருவருளால் திருவுருக் கொண்டருள்வன். அவ்வுருப் போன்ற மாயாகாரிய வுருவமே நான்முகற்கும் அமையும். இருவேறுருவும் வெவ்வேறு வகைய என்னும் உண்மையினை மறவாது மயங்காது கொள்க.

இவ்வுண்மைகள் வருமாறு :

"புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுணம் அமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர் செழுநில னினினிலை பெறுவரே."

—க. உக—க.

௩எ—சஅ. திதலைபூத்...வாழ்க்கையும்

(இ - ள்.) தேமல் பரந்து விரிந்து மதங்கொண்ட யானையுடன், மாறுபட்டு வளரும் முலைகளைச் சுமந்த திருமகள், பசுமையாகிய வாடாததளவாகிய மாலையில் சுரக்கின்ற தேன்சிதறி மணங்கமழ்கின்ற நெஞ்சத்திடத்து நீங்காது தங்கியிருக்கக் குளிர்ந்த நிலவு என்று கூறும்படியான வெண்மை நிறம் விரிந்த திருப்பாற்கடலின் மிக்க ஒலியுடைய அலைகள் மென்மையாகிய பாதத்தைத் தடவவும் அழகிய தென்றற்காற்று சாமரை போன்று அசையவும் படப்பொறியாகிய நெய்யானது பரவிப் பசுமையாகிய படமென்கிற அகலில் விளங்குகின்ற பல கதிர்களையுடைய பாம்பு மணியாகிய விளக்கானது, ஒளி விடுகின்ற அரவம் ஆகிய ஆதிசேடன் என்னும். நீண்ட மலர்ப் படுக்கை மீது குற்றமற்ற நீல மலையானது இருந்ததை யொப்ப விழி துறங்குதலென்னும் அறிதுயில் கொண்ட திருமாலின் வாழ்க்கையும்,

(வி - ம்.) திதலை - தேமல். இகலி - மாறுபட்டு வருதல் - வளர்தல். தரங்கம் - அலை. அகல் - விளக்குத்தகளி. அறிதுயில் - யோகநித்திரை.

சக—ருஎ. அழியா...அருளுதி

(இ - ள்.) கெடாத இன்பமுடைய நிலையம் என்று இடையறாது கூறிக்கொண்டுவரினும் அறிவுடையோர் தமது மனத்தில் ஊன்றி ஆயுமிடத்துக் கண்கட்டு வித்தையினையும் முதன்மையாக நீண்ட கனவினையும், பேய்த்தேரினையும் போன்று உள்ளனவாகக் காணப்பட்டு இல்லாதனவாக மறையும்; ஆதலால் சொல்லப்பட்ட அவை நன்மை தருவன அல்லவாம். உன் திருவருளாகிய செல்வம் ஒன்றே அழியாப் பேறு உடையதாகும். தக்க சார்பில்லா எளியேன், அத்திருவருட்

செல்வத்தினையே அடைதற்குத் திருவருளால் நினைந்துள்ளேன்; அதனால் எளிதாக இரங்கியருளித் தண்ணளி சுரந்து அருள்செய் வாயாக.

(வி - ம்.) வெண்டேர் - பேய்த்தேர்; கானல்நீர்.

இவ்வுண்மை வருமாறு :

‘ மண்தனில் வாழ்வும் வானத் தரசயன் மாலார் வாழ்வும்
எண்தரு பூத பேத யோனிகள் யாவும் எல்லாம்
கண்டஇந் திரமா சாலங் கனக்கமு திரதங் காட்டி
உண்டுபோ வின்றும் பண்பில் உலகினை அசத்தும் என்பர்.”

—சிவஞானசித்தியார். சு. க—உ.

ருஅ—எ௦. மரகதத்...வாண

(இ - ள்.) பச்சைமணி எனப்படும் மரகதத்தின் இடை யிடையே வெள்ளிய முத்துக்களைப் பதித்துக் குயிற்றியுள்ள நிலா முற்றத்தினை விரிந்த தளிர்கள் நிறைந்து மலர்ந்துள்ள புன்னை மரங்கள் நிறைந் துள்ள நிழல் மிகுந்த பெரிய சோலை எனவும், பொன்னரி மாலைகள், வரிசை வரிசையாக நிறைத்துள்ள மிக உயர்ந்த நீலநிறம் பொருந்திய செய்யப்பட்ட சிறு குன்றத்தினை கொத்துக்களோடு கூடிய பூக்களை யுடைய கொன்றைகளின் நறுமணத்தைப் பெற்ற சோலை எனவும், நெருங்கியுள்ள வளப்பம் தங்கிய இறகுகளையுடைய வண்டுகளின் மிகுந்த கருமையான நிறங்கள் பளிங்குக் கற்களைச் செம்மையுற அரிந்து செய்வித்த விளக்கம் பொருந்திய பல அடுக்குகளைக்கொண்ட பெரிய மாளிகைகளின் சுவர்களில் வரிசையாகப் படுதலினாலே, ஈண்டு இரவு வந்து விட்டதென்று, இடை விடாது, அந்நாட்டிலுள்ள அழகிய மாதர்கள் கச்சணிந்த மார்புகள் தத்தம் காதலர்களின் மார்பு களில் மூழ்கும்படி அணைத்த கலவியாகிய புதிய தேனைப் பருகிக் களிக்கும் வளப்பம் செறிந்த அழகிய செழிப்பு மிக்க சீகாழித் திருப் பதியின்கண் எழுந்தருளியவனே !

(வி - ம்.) அரமியம் - நிலாமுற்றம். ஆடகம் - பொன். செய் குன்று - கட்டுமலை. அளி - வண்டு. பித்திகை - சுவர். பத்தி - வரிசை.

எக—எகூ. குறிகுணங்...களித்த பண்ணவனே

(இ- ள்.) குறிக்கத்தக்க குணங்களுக்கு அப்பாற்பட்ட, குற்ற மில்லாத பெரிய மூதறிவுப் பெருமணியே, நிலவுலகத்தில் வாழ்கின்ற இயங்குதிணைப் பொருள்களும் நிலைத்திணைப் பொருள்களும் ஆகிய எல்லாவற்றிலும் நிறைந்து நின்றருளும் முழுநிறைவே, முடிவும் முதலும் தொன்மையிலேயே நீங்கிய பழமைப் பேரறிவே, அடியேனுக் குரிய ஆதியாகிய அழிவில் பெருமானே, அருவமும் உருவமும் இல்லாத ஒப்பற்ற பெரிய மெய்ப்பொரு ளானவனே! அளவைநூல் களுக்கு அடங்காமல் விளங்குகின்ற பேரின்பத்தான் அடையப் பெற்றவனே! திருவருளால் மனம் காதலாகிக் கசிந்துருகி நிற்கும் உண்மை யடியவர்கள் உண்டு களிக்கும் நிரம்பிய அமிழ்தத் தினை யொப்

பானவனே, எல்லா நலங்களும் முதிர்ந்த பெரிய பெருமாட்டியாகிய உமையம்மையார் கூடியுள்ள பேரின்பப் பெருவாழ்வில் களித்தருளும் தேவ தேவனுகிய சிவபெருமானே !

(வி - ம்.) உறை - வாழ்தல், முந்தை – தொன்மை, நித்த – அழிவில்லாத. சுகம் - பேரின்பம். இயங்குதிணை - சரம். நிலைத்திணை - அசரம். உருவம் - கட்புலனும் வடிவம். அருவம் - கட்புலனுகா வடிவம்.

அடியேன் நின் திருவருளால் புரந்தரன், மால் அயன், முதலியோர் வாழ்வினை ஒரு பொருளாகக் கொள்ளேன். நின் திருவடிப் பெருவாழ்வினையே பெரிதும் வேண்டுகின்றேன். அதனை எளியேற்கு அளித்தருள்வாயாக. மூவர் வாழ்வும் வேண்டார் மெய்யடியார் என்னும் உண்மை வருமாறு :

“கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவருளாலே இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல் லாதெங்க ளுத்தமனே.”

—அ. திருச்சதகம், ௨. (உஅ)

வெண்பா

[தலைவனும் தலைவியும் உரையாடியதைச் சிறைப்புறமாக இருந்த தோழி கேட்டு, அதனைத் தலைவியிடங் கூறி நகையாடியது.]

பணமஞ் சரையிருக்கப் பாவையரைச் சும்மா
புணர்கின்றீ ரேன்று புகலப்—புணர்வார்க்
கரைக்காசு தந்தனமேன் றூர்புகலி யார்மா
அரைக்காசேன் றுளதற்கு மான்.

(இ - ள்.) (சிலேடையணி திகழப்பாடுவதன் நயம் சிறந்து நிற்பதுபற்றி உலகியல்போன்று வீட்டியலினும் ஒரோவழி ஓதுதலும் உண்டு. அம்முறையினமைந்த திது.)

ஐந்து பணங்கள் அரையிற் செருகி வைத்துக் கொண்டு பாவை போன்ற அழகிய மடவாரைக் காசு கொடுக்காமல் சேர்ந்து இன்புறுகின்றீர், என்று யான் எடுத்து மொழியத் திருப்புகலித் திருவூரின் கண் எழுந்தருளிய சிவபெருமானுர், தன்னைச் சேரும் காதன்மை கைம்மிக்க பெண்களுக்கு அரைக்காசு நல்கியே நாம் கூடினம் என்று குறுஞ்சிரிப்புடன் மொழிந்தனர். அங்ஙனம் மொழிந்த அம்மொழிக்கு மான் போன்ற எம் தலைவி. (குறிப்பு மொழியாக)மா அரைக்காசு கொடுத்தீரென்று வாயல் முறுவல் வாய்ப்புறச் செய்தனள்.

(வி – ம்.) இறைவன் : பணம் அஞ்சரை என்றது. ஐந்து படங்களையுடைய ஆதியரவினைக் கச்சாக அரையிற் கட்டுதல். சும்மா புணர்தல் – வலிய வந்து புணர்தல். இக்குறிப்புச் செவ்வி வாய்ந்த

ஆருயிர்கட்குத் திருவருள் வீழ்ச்சி யுண்டாகும். அந்நிலையில் சிவபெருமான் வலிய வந்து வேண்டு மின்பங் கொடுத்தருள்வன். இதனையே வலிய வந்து புணர்கின்றீர் என்றனள். சும்மா - வலிய; காசு கொடாமல்; வாளா.

இறைவன் அரைக் காசு தந்தனம் என்றதன் குறிப்பு: அரைக்கு - மாதர்களுடைய இடைக்கு; ஆசு - உண்டு என உணர்த்தும் கட்டளையாக, தந்தனம் - தனந்தந்தனம். தனம் - முலை, பணம். ஆசு - குற்றம் என்றலு மொன்று. மாவரைக்காசு: மாவரை பெரிய பொன் மலை. ஆசு - குற்றம். மாவரைக்கு ஆசு என்க. பணம் அஞ்சரை - அஞ்சரைப் பணம். அரைக்குக் காசு என்பதற்கு அரையில் அணியும் மணி வடம் எனினும் ஆம். (உக)

கட்டளைக் கலித்துறை

மானைக் கலந்த மணவாளன் காழி வரதன்செங்க
ணானைப் புரந்தவன் பத்தர்க்கு முத்தி யளித்தருளும்
ஏனைப் பெரும்பொருள் கல்விமெய்ச் செல்வ மிருந்தளிப்பார்
தேனைத் தருஞ்செழுந் தாமரை நாமகள் செந்திருவே.

(இ - ள்.) பேரின்பமாகிய வீடுபேற்றினை வழங்கியருள் செய்கின்ற மான் போலும் திருநோக்கத்தினையுடைய உமையம்மையாரை இடப்பாகத்தே ஓர் உடம்பின்கண்ணே கொண்டருளிய மணக்கோலத்தினையுடைய அழகன், சீகாழித் திருநகரின்கண் எழுந்தருளி வேண்டும் வரங்களை வேண்டியபடி தந்தருள்வோன், சிவந்த தாமரை போலும் கண்களையுடைய திருமாலையும் காத்தருள்பவன்; தன் திருவடிக்கண் பேரன்பு பூண்டொழுகும் மெய்ப் பத்தர்கட்கு திருவடிப் பேற்றினை வழங்கியருள்பவன்; தேனைப் பொழியும் செழுமை வாய்ந்த வெண்டாமரை மலரிலிருக்கும் நாமகளைக்கொண்டு கல்வியினையும், இது போல் செந்தாமரை மலரிலிருக்கும் திருமகளைக் கொண்டு செல்வத்தினையும் கொடுப்பித்தருள்பவன், (ஆகிய சிவபெருமான் நம்மைக் காத்தருள்வானாக.)

(வி - ம்.) மான் : மான்போலுந் திரு நோக்கத்தினையுடைய உமையம்மையார். புரந்தவன் - காத்தருள்பவன்.

செங்கணன் என்னும் பெயர் திருமாலுக்குக் காரணப் பெயராகும். அஃதாவது அவன் சலந்தரன் உடல் துணித்த சக்கரப் படையினை வேண்டத் தவம் புரிந்தனன். தவம் சிவபூசை. நாடொறும் ஆயிரம் தாமரை மலர் கொண்டு போற்றியெனும் தனித்தமிழ் மந்திரம் புகன்று பூத்தூவி வழிபட்டு வந்தனன். ஒருநாள் ஒரு பூக் குறைந்து விட்டது. அதன் பொருட்டு அம்பால் தன் கண்ணையிடந்து வைத்து வழிபாட்டை நிறைவு செய்தனன். சக்கரப்படையையும் பெற்றனன்.

இவ்வுண்மை வருமாறு :

" நீற்றினை நிறையப்பூசி நித்தல்ஆ யிரம்பூக் கொண்டு
ஏற்றழி யொருநா ளொன்று குறையக்கண் நிறையவிட்ட

ஆற்றலுக் காழி[1] நல்கி யவன்கொணர்ந் திழிச்சுங்கோயில்
வீற்றிருந் தளிப்பர்வீழிமிழலையுள் விகிர்தனாரே.''

—ச. சுச—அ.

கட்புலனாகா இடையுண்டென்னும் உண்மை காட்டத் திகழ்வன மேற்றோன்றும் கொங்கைகளே.

அவ்வுண்மை வருமாறு :

" அகல்கின்ற அல்குற் றடமது கொங்கை யவையவநீ
புகல்கின்ற தென்னைநெஞ் சுண்டே யிடையடை யார்புரங்க
ளிகல்குன்ற வில்லிற்செற் றோன்றில்லை யீசனெம் மானெதிர்ந்த
பகல்குன்றப் பல்லுகுத் தோன்பழ னம்மன்ன பல்வளைக்கே.''

—அ. திருச்சிற்றம்பலக் கோவையார், ச.

சிவபெருமான் திருவருளுணர்வில் கொள்ளும் கண்ணுதலே அவன்றன் அறிவாற்றலால் செறியும்திருவும் செய்கையுமே ஆருயிர்களை அவ்வந் நிலையின்கண் நிகழ்விப்பனவாம். கணணுதல்-கருதுதல்.

அவ்வுண்மை வருமாறு :

" கண்ணுதல் யோகி ருப்பக் காமன் நின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை யோரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்ப மளித்ததோரார்.''

—சிவஞானசித்தியார், க. உ - உ௫

சிவனடியார்களுக்குக் கல்வியும் செல்வமும் அச்சிவபெருமான் திருவருளால் அவர் தம் திருவாணை பெற்றுள்ள நாமகளும் திருமகளும் வலிய முன்வந்து நல்குவர் என்னும் மெய்ம்மை "மொழிவழி ஏவல் கேட்பச்'' செய்தருளினன் எனவரும் உண்மையால் தெளியலாம் :

" அன்பனே அன்பர் பூசை அளித்தநீ அணங்கி னோடும்
என்பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழிவழி ஏவல் கேட்ப [கான்.''
இன்பமார்ந் திருக்க என்றே யருள்செய்தான் எவர்க்கு மிக்

—கஉ. இளையான் குடிமாறர், உசு.

" நறைமலி தருமள றொடுமுகை நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு நியதமும் வழிபடு மடியவர்
குறைவில பதமணை தரவருள் குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது நினைபவர் செயமகள் தலைவரே.''

—க. உக—ச. (௩௦)

திருச்சிற்றம்பலம்.

---

1. 'கருப்பமிகு'. க. கநஉ—அ.

௩. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை

இணைக்குறளாசிரியப்பா

திருச்சிற்றம்பலம்.

தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்புங் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற்றுது
வலம்புரி நெடுமால் ஏனமாகி நிலம்புக்
காற்றலின் அகழத் தோற்றுது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின் றருளித்
திகழ்ந்துள தொருபால் திருவடி யகஞ்சேந்து
மறுவில் கற்பகத்து உறுதளிர் வாங்கி
நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி
நூபுரங் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து
பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்
திருவோடும் பொலியும் ஒருபால் திருவடி
நீலப் புள்ளி வாள்உகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித் தசைத்து
நச்செயிற் றரவக் கச்சையாப் புறுத்துப்
பொலிந்துள தொருபால் திருவிடை இலங்கொளி
அரத்த ஆடை விரித்துமீ துறீஇ
இரங்குமணி மேகலை ஒருங்குடன் சாத்திய
மருங்கிற் றுதும் ஒருபால் திருஇடை
செங்கண் அரவும் பைங்கண் ஆமையுங்
கேழற் கோடும் வீழ்திரள் அக்கும்
நடங்கு நூலும் இடங்கொண்டு புனைந்து
தவளநீ றணிந்ததோர் பவளவெற் பென்ன
ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்
வாரும் வடமும் ஏர்பெறப் புனைந்து
செஞ்சாந் தணிந்து குங்குமம் எழுதிப்

பொற்றா மரையின் முற்றா முகிழென
உலகே ழீன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்
அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து
மூவிலை வேலும் பூவாய் மழுவும்
தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துள தொருபால் திருக்கரஞ் செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்
ஒம்மென் பந்தும் அம்மென் கிள்ளையும்
தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்
இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்குந் திருநெடு நாட்டம்
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று
குண்டுநீர்க் குவளையிற் குளிர்ந்து நிறம்பயின்று
எம்மனோர்க் கடுத்த வெம்மைநோய்க் கிரங்கி
உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்
நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போதும் மென்துணர்த் தும்பையும்
கங்கை யாறும் பைங்கண் தலையும்
அரவும் மதியமும் விரவித் தொடுத்த
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்தனைய உருக்கிளர் சடிலமொடு
நான்முகங் கரந்த பால்நிற அன்னம்
காணா வண்ணங் கருத்தையுங் கடந்து
சேணிகந் துளதே ஒருபால் திருமுடி பேணிய
கடவுள் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வ மாலை
நீலக் குழல்மிசை வளைஇமேல் நிவந்து
வண்டுந் தேனுங் கிண்டுபு திளைப்பத்
திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி
இனைய வண்ணத் தினைவருங் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற் றாகி

வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க
வாள்நுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்
குலகம் ஏழும் பன்முறை யீன்று
மருதிடங் கொண்ட ஒருதனிக் கடவுள்நின்
திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே.

க—கூ. தெய்வத்...திருவடி

(இ - ள்.) *தெய்வத்தன்மை பொருந்திய தாமரை மலரின் அழகு போன்று விரிந்து எக்காலத்தும் வாடுதலில்லாத அன்றலர்ந்த நாண் மலரின் இதழென செம்மை நிறம் வாய்ந்து திருச்சிலம்பினையும் ஆண் மைக் கழலினையும் (ஒன்றுடன் ஒன்று மோதுதலால்) ஓசை யுண்டாகும்படி அழகு அணிந்து, நமனுடைய ஆருயிர்களின் உயிர் களைக் கவர்ந்துண்ணும் வன்மையினை ஒழித்து; வணங்கித் தொழாது, சக்கரத்தினைத் தாங்கிய திருமால் பன்றி யுருக்கொண்டு, நிலத்துக்குள் புகுந்து, தனது முழு வன்மையால் நிலத்தைக் கொம்பினைக்கொண்டு குத்தித் தோண்டக் காட்சி கொடுத்தருளாமல் ஓங்கிப் பேரன்பாகிய நாதன்மிக்க மெய்யடியவர்கள் பச்சிலையிட்டுப் போற்றி மந்திரம் புகன்று அருச்சிக்கினும் திருவடிப் பேற்றினை அளித்தருளி அவர்கட்கு நேரே காட்சி தந்தருளி வேண்டுவ வேண்டியாங் களித்தருளி விளக்க முற்றுத் திகழ்வது ஒருபாற் றிருவடி.*

(வி - ம்.) *தோடு - இதழ். அகழ்தல் - தோண்டுதல். முத்தி - திருவடிப்பேறு. பச்சிலையிட்டு வழிபடுதலும், அவ்வழிபாடு மிகச் சிறந்தது என்னும் உண்மை வருமாறு :*

" யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண் ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே." —க0. க0கூ.

கூ—கசு. அகஞ்சேந்து...திருவடி

(இ - ள்.) *உள்ளகஞ் சிவந்து குற்றமில்லாத கற்பக மரத்திற் பொருந்திய தளிர்களைக்கொண்டு நெய்யின்கண் தோய்த்த அழகை யுடையதாகி திருச்சிலம்பு தங்கி யிருப்பினும், வருந்தி, தேவர்களுடைய மடப்பம் பொருந்திய தெய்வமாதர்கள் திருவடியை வணங்குங் காலத்து, விழும்படி செய்த சின்னப்பூ என்னும் ஒருவகைத் தலையணி படுதலினல் செந்நிற மடைந்து நிறத்தால் உயர்ந்த செம்பஞ்சும், மிகவும் மென்மை பொருந்திய அனிச்ச மலரும் தன் குணத்திற்*

பின்னிடக் குறையாத செல்வத்துடனும், விளக்கமுற்றுத் திகழும் ஒரு புறத்துத் திருவடி.

(வி - ம்.) அகம் - உள்ளகம்; உட்புறம். சேந்து - சிவந்து. மறுவில் - குற்றமில்லாத. செவ்வித்து - அழகுடையதாகி. நூபுரம் - சிலம்பு. மடவரல் - பெண்கள். வணங்குபு - வணங்கி. சின்னப்பன் மலர் - சின்னப்பூ என்னும் ஒருவகைத் தலையணி. பஞ்சி - பஞ்சு.

கஎ—உக. நீலப்...திருஇடை

(இ - ள்.) நீல நிறப் புள்ளிகளையும், கூர்மையான நகங்களையு முடைய புலித்தோலினையே ஆடையாகக்கொண்டு திருமேனியின்கண் விரித்துக்கட்டி, நச்சுப்பற்களையுடைய பாம்பினை அதன்மேல் அரைக் கச்சையாக நன்றாகக்கட்டி விளங்கியுள்ளது ஒரு புறத்துள்ள திரு இடை. திகழும் ஒளியினையுடைய செம்பட்டாடையினை விரித்து மேலே உடுத்து, ஒலிக்கின்ற மணிகள் அழுத்திய மேகலை யென்னும் அணியினை முழுவதும் அணிந்துள்ள பக்கத்தை யுடையதாகும் ஒரு பக்கத்துத் திருஇடை.

(வி - ம்.) வாள் - கூர்மை. வேங்கை - புலி. கலிங்கம் - உயர்ந்த ஆடை. அசைத்து - கட்டி. அரத்தம் - சிவப்பு. மருங்கு - பக்கம்.

உச—சo. செங்கண்...திருக்கரம்

(இ - ள்.) சிவந்த கண்களையுடைய பாம்பும், பசிய கண்களை யுடைய ஆமையும், பன்றியின் கொம்பும், தொங்குகின்ற, திரண்ட எலும்பு மாலையும், அசைகின்ற பூணு நூலும் இடப்பாகமாகக் கொண் டணிந்து, வெண்மையாகிய திருநீறு அணிநததாகிய ஒரு பவளமலை யைப் போன்று, விளக்கத்துடன் திகழ்ந்து நிற்கும் ஒரு புறத்துத் திருமேனி; கச்சினையும், மணி மாலையினையும் அழகு பெறப் புனைந்து, செம்மையாகக் குழைத்த திருவெண்ணீறாகிய சாந்தினை அணியப் பெற்று அழகிய தாமரையின் முதிராத அரும்பைப் போன்று எழுலகங் களையும் பெறுது பெற்று நிற்றலிற் றளர்ச்சியடையாத முலையுடன் விளங்காநிற்கும் ஒரு புறத்துத் திருமேனி, கூர்மையான பற்கள் வாய்ந்த வாயினையுடைய பாம்பினை இடங்கள் தோறும் அணிந்து, மூன்று கவர் வாய்ந்த இலைபோலும், முத்தலை வேலும், கூர்மை வாய்ந்த மழுப்படையும், துடியென்னும் பறையும், அழகுறப் பொருந்தும்படி தாங்கிக்கொண்டு சிறப்பு வாய்ந்துளது ஒரு பக்கத் துத் திருக்கை, நெருங்கிய கடகம் அணிந்து விளங்கப்பெற்ற பொன்னு லாகிய அம்மனையுடன் (கழங்கு) ஓம் என்னும் ஓசையுடன் கூடிய பந்தும், அழகிய மென்மையையுடைய கிளிப்பிள்ளையும் அணியப் பெற்று விளங்காநிற்கும் ஒரு பக்கத்துத் திருக்கை.

(வி - ம்.) கேழல் - பன்றி. அக்கு - எலும்பு. தவளம் - வெண்மை. ஆகம் - உடம்பு. ஏர் - அழகு. முகிழ் - அரும்பு. வயின் வயின் - இடந்தொறும். வயின் - இடம். பூ - கூர்மை. தமருகம் - துடி; உடுக்கு. கழங்கு - கழச்சிக்காய். அம்மனையும் கழங்கும் வெவ் வேறு விளையாட்டுக் கருவிகள். கிள்ளை - கிளி. கரம் - கை.

விழுமிய முழுமுதல்வனும் சிவபெருமான் உலகியல் நிகழ்தற் பொருட்டுத் தன் அறிவாற்றலின் வாயிலாக உணர்வின்கண் ஆருயிர்கள் ஆண் பெண் உடம்புடன் இயைந்து வாழக் கொண்டருளும் திருக் குறிப்பே அவன்றன் பொது வியல்பிற் கூறப்படும் அவனுக்குரியதா மென்னும் ஆண் பெண் வடிவம். ஒருடம்பில் இருவடிவம் இயைந்து திகழும் உண்மை சிவபெருமான் ஒருவனுக்கே உரியதாகும். அதுவே மாதிருக்கும் பாதியன். அதுவே தொன்மைத் திருக்கோலம். இவ் வுண்மை வருமாறு :

"தோலும் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ."

—அ. திருக்கோத்தும்பி, கஅ.

பசுஞ்சாந்து - திருவருளாகிய நீரால் குழைக்கப்பட்டுள்ள திரு வெண்ணீறு. பேரொடுக்கத்துத் திருவருளம்மையும் சிவன்பால் ஒடுங்கிவிடும். அதனால் அக்காலத்துத் தழல்வண்ணனன சிவபெரு மான் குழைக்கப்பெறாத சாம்பரையே அகலத் தணிந்து கொள்வன். ஆண்டவன் அருளால் மீண்டும் உலகம் திருவருள் வாயிலாகத் தோற்ற முறுங்கால் அம்மையின் திருமேனிக்கண் அணியப்படுவது "நீரால் நீறு சாந்த[1] மெனப்படும்" குழைத்த திருவெண்ணீறேயாம். அதுவே ஈண்டுப் 'பசுஞ்சாந்' தென்று ஓதப்பட்டுள்ளது. இதனை வருமாறு நினைவுகூர்க.

நீரணையா வெண்ணீறு நேர்விக்கும் பேரொடுச்சம்
நீரணைந்தாம் தோற்ற நினைப்பு.

"தளராமுலை"[2] என்பது அனைத்துலகங்களையும் சிவன் என்னும் பேரறிவுப் பெரும்பொருள் உண்ணின்று ஊக்க அதனை விட்டு நீங்கா ஆற்றல் உலகினைக் காரண மாயையினின்றும் காரியப்பொரு ளாகப் படைத்துள்ளது. அறிவை ஆண்பாலாகவும் ஆற்றலைப் பெண் பாலாகவும் உருவகப்படுத்தி விளக்குவது எளிது. அம்முறையில் சிவனும் சிவையும் என விளக்கப்படுகின்றது மெய்ந்நூல்களுள். மரஞ்செடி கொடிகளின் வளர்ச்சிக்கு வித்தினும் மிகுதியாக விளை நிலம் காணப்படுவது போல ஆண்டான் அறிவாற்றல் அனைத்துலகினும் மிக்கோங்கி இயைந்து இயக்கும். "ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே" என (நகஉ) புறநானூற்றுக்கண் ஒரு பெறலருந்தாய் பேசுவதா னறியலாம். அதுபோல் சிவையும் உலகங்களை யெல்லாம் திருக்குறிப்பால் ஈன்றளித்தமை புலப்பட விளக்கிய விளக்கமாகும். இவ்வுண்மை வருமாறு :

"சிவஞ்சத்தி தன்னை ஈன்றுஞ் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயிர் எல்லாம் ஈன்றும்

1. 'தாரார் கொன்றை'. க. சுடு—ஏ.
2. 'விளவார்'கனி; க. கО—கூ

பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியும் அன்றே.''
—சிவஞானசித்தியார், உ ச—கு.

பிரமசாரி - மணம் முடியாதவன். கன்னி - மண முடியாதவள். இதனால் மேலது நன்கு விளங்கும்.

சக—கூசு. இரவியும்...திருமுடி

(இ - ள்.) ஞாயிறுந் தீயும் கலந்துள்ள வெப்பத்தினொடு ஒரு புறத்துத் திகழ்கின்ற அழகிய நெடிய திருக்கண்கள் இளமானினுடைய அழகமைந்த செவ்வியை உடையதாகிப் பாலிலே தங்கிய நீலமணியினை யொத்து, ஆழமாகிய நீரிலுள்ள நெய்தல் மலர்போன்று குளிர்ச்சியை உடையதாகி நல்ல நிறத்தினைப் பெற்று எளியேமை ஒத்தவர்களுக்கு உண்டாகிய மும்மல மயக்கத்திற்கு இரக்கமுற்று ஏழுலகங்களையும் காத்தருளும் ஒரு புறத்துத் திருக்கண். நொச்சி மலரும் பசுமையாகிய ஊமத்த மலரும், கொன்றை மலரும், மென்மையாகிய கொத்துக்களையுடைய தும்பை மலரும், பசியகண்களையுடைய தலைமாலையும், பாம்பணியும், பிறை மதியும், வான்புனலும் கலப்புறக் கோத்து எவரும் அணியப் பெறாத மாலையினை வனப்புற அணிந்து பெருமை பொருந்திய செந்தீயினைப் பின்னியதை யொத்து வடிவுடன் விளங்கிய திருச்சடை முடியினுடன், நான்கு முகங்களை மறைத்துள்ள பால்போலும் வெண்மையாகிய நிறங்கொண்ட அன்னப்பறவையின் வடிவங்கொண்ட நான்முகனும் தேடிக்காண முடியாதபடி உள்ளத்தையும் கடந்து, வானத்தையும் தாண்டி உள்ளதாக வுள்ளது ஒரு புறத்துத் திருமுடி,

(வி - ம்.) இரவி - ஞாயிறு. நாட்டம் - கண். குண்டு - ஆழம். குவளை - நெய்தல். வெம்மை - கொடுமை.

கூசு—எo. பேணிய...கடவுள்

(இ - ள்.) விரும்பிப் பெற்ற தெய்வத் தன்மை வாய்ந்த மடப்பம் பொருந்திய பெண்கள், கற்பகச்சோலையிலுள்ள அழகிய பூக்களைக் கொண்டு முறைமையாகப் பொருத்தி அணிபெறச் செய்த தெய்வத் தன்மை பொருந்திய மலர் மாலையினை நீலநிறம் பொருந்திய கூந்தலின் கண் முடித்து மேல் ஓங்கி, வண்டுகளுந் தேன் வண்டுகளும் கிண்டி நுகர அழகுடன் திகழா நிற்கும் ஒரு புறத்துத் திருமுடி, இத்தகைய அழகினையுடைய, கினைத்தற்கு அருமையாகிய திருத்தோற்றத்தினையுடைய, இருபுறத்துத் திருவுருவங்களும், ஓரிடமாகப் பெற்று வலப் பக்கத்துத் திருநோக்கம், இடப்பக்கத்தே பார்த்தலினால் ஒளி பொருந்திய நெற்றியையுடைய இறைவியின் பாகமானது நாணுதல் கொள்ள, வலது பக்கத்துத் திருக்கை இடது பக்கத்திலுள்ள அழகிய முலைகளைத் தடவி வருடுதலால் உடம்பின்கண் மயிர்க்கூர்ச் செறிந்தது போல், ஏழுலகங்களையும் பலமுறை பெற்றுத் திருவிடைமருதைத் திருப்பதியாகக் கொண்டருளிய ஒப்பற்ற தனிப்பெரு முதல்வனே!

(வி - ம்.) தைவந்து - தடவி. மெய்மயிர் - உடலிலுள்ள மயிர்

எ0—எச. நின்...பொருட்டே

(இ - ள்.) அடியேங்கள் பற்பல பிறப்புக்களில் இறந்தும் பிறந்தும் இளைத்தொழிந்தோம்; இனி மறந்தாயினும் காவற் கிடங்காகிய கருக்குழியில் சேர்ந்து, மீண்டும் நிலவுலகத்தில் பிறவாத பெருவாழ்வினை யடையும்பொருட்டாகத் தேவரீருடைய திருவடிகளைப் படர்ந்து பாடிப் பணிந்து வணங்குகின்றோம்.

(வி - ம்.) சேரா – சேர்ந்து. (செய்யா வென்னும் வாய்பாட்டு வினை யெச்சம்) புகா - புகாமல்.

பிறந்தவுயிர் பெரிதும் வேண்டத்தக்கது பிறவாமை யொன்றே யாம். சிறைக்கோட்டம் புகுந்தாரும், மருத்தில்லம் புகுந்தாரும் மீட்டும் அத்தகைய துன்ப இடம் புகாமையே வேண்டிக்கொள்வர். இதுபோல் பிறந்தவுயிர்களும் பிறவாமையை வேண்டிக்கொள்வதே சால்புடைத்து. அவ்வுண்மை வருமாறு:

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை [1] மற்றது
வேண்டாமை வேண்ட வரும்."

—திருக்குறள். ந௬ந. (க)

நேரிசை வெண்பா

பொருளுங் குலனும் புகழுந் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும்—ஒருவர்
கருதா என்பார்க்குங் கறைமிடற்றுய் தோல்லை
மருதாஎன் பார்க்கு வரும்.

(இ - ள்.) எத்தகைய ஒருவரும் அணிந்துகொள்ள ஒரு சிறிதும் எண்ணாத எலும்பினை விரும்பி அணியும் நச்சுக்கறை பொருந்திய திருநீல கண்டத்தை யுடையவனே என்று (காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் தனித்தமிழ்த் திருமாமறை யோதி வழிபட்டு) தொழுது, பழமையாகிய திருவிடை மருதூர் என்னும் திருவூரில் வீற்றிருந்தருளும் மருதப்பரே என்றும் வழுத்துவார்க்கு உலகத்திற் சிறந்த பொருளும், நற்குலமும், கீர்த்தி எனப்படும் பெரும் புகழும், உள்ளத் துரனும், உடல் வலிமையும், அன்பின் முதிர்ச்சியாம் அருளும், முப்பொருள் உண்மை செப்பமுறத் தெளியும் அறிவும் ஆகிய அனைத்தும் திருவருளால் வலிய வந்து பொருந்தும்.

(வி - ம்.) பொருள் - செல்வம். குலம் - நற்சார்பு.

"முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னுன் முடியும்" என்பது யாவரும் கண்ட உண்மை. அதனாலும் "ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள். ஏனை இரண்டும் ஒருங்கு" (திருக்

1. 'இறவாத இன்ப'. கஉ. காரைக்காலம்மையார், ௬0.

குறள், எசு0.) என்பதனுலும் முதற்கண் செல்வப் பொருள் வைக்கப்பட்டது. அவ்வுண்மை வருமாறு :

"முனிவரு மன்னரு முன்னுவ பொன்னுன் முடியுமெனப்
பனிவருங் கண்பர மன்திருச் சிற்றம் பலமனையாய்
தனிவரு நீர்மையி தென்னென்று தூநீர் தெளித்தளிப்ப
நனிவரு நாளிது வோவென்று வந்திக்கு நன்னுதலே."

—அ. திருக்கோவையார், நுஙஉ.

முனிவருக்குப் பொருள், மெய்ப்பொருளாகிய சிறப்பு. மன்னருக்குப் பொருள், பொய்ப்பொருளாகிய செல்வம். மெய்—நிலையாகவுள்ளது; தோற்றக்கேடு இல்லாதது. பொய்—நிலையில்லாதது; தோற்றக் கேடுள்ளது.

பொருள் நல்வழிப்படுவது நற்சார்பினுலே யாம், அச்சார்பினுல் சேர்ந்த நற்செயலால் புகழுண்டாகும். அப்பெரும் புகழால் உள்ளமும் உடலும் உரமும் வலிமையும் பெற்றுத் திகழும் இவ்வனைத்தும் திருவருள் நாட்டத்தால் நிகழ்வதாகலின் அருட்டுணையும் மிக்கோங்கும். அருள்நலம் பெருகவே மெய்யுணர்வும் கைவரும். இவ்வறுவகைப் பொருளும் பெறுவகையே பிறப்பின் பெறுபேரும். (உ)

கட்டளைக் கலித்துறை

வருந்தேன் இறந்தும் பிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி லேன்புகழ் மாமருதில்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென் றிரவேன் ஒருவரை யாதொன்றுமே.

(இ - ள்.) இறந்தும் பிறந்தும் வருந்தும் வருத்தம் இனிமேல் எய்துதல் செய்யேன். உள்ளத்தைக் கள்ளவழி யீர்த்து மயக்குவதைச் செய்யும் ஐம்பொறிகளின் வழியே சென்று ஐம்புலன்களிலும் அழுந்துதல்செய்யேன்; (பொறிவழிச் சென்ற பொல்லாங்கினுல் தீமை விளைந்து அதன் பயன் துய்த்தற் பொருட்டு) நரகத்திற் போய்ப் பொருந்தேன்; பலராலும் புகழப்பட்ட திருவிடை மருதூர் என்னும் பெரிய திருவூரின்கண் வீற்றிருந்தருளும், (மலநோயகற்றித் திருவடி நலனுய பேரின்ப மென்னும்) அளவிடற்கரிய பெருந்தேனினை உணர்வுக் கண்களால் முகந்துகொண்டு ஐம்புலன்களும் நிறைய வாரியுண்டு (உலகத்துப் பொருள்கள் பலவற்றுள்ளும்) யாதொன்றிலும் சிறிதும் அவா வில்லாமல் வாளா இருந்தேனுகிய நான் இனிமேல் உலகத்துள்ளார் எவரையும், எளியேனுடைய வேட்கைப் பெருக்கத்தால் யாதொரு பொருளையும் இரந்து வேண்டேன்.

(வி – ம்.) புலன் - பொறிகள். அவை ஐந்து, மெய், வாய், கண், மூக்குச் செவி என்பன.

கற்புறு மனைவியரும் கடப்பாட்டுணர்வுடைய அடிமையரும் முறையே தத்தம் கணவன்மாரையும், ஆள்வோரையும் புகலிடமாகக்

கொண்டு ஒழுகும் தன்மையர். அவர்கள் தத்தம் முதல்வர்கள் கொடுப்பதைப் பெறுவதே அடுப்ப தென்னும் அறிவினர். அதனால் தம் முதல்வர்வழி நிற்பதன்றி அவர்பாலுங்கூட ஏதும் வேண்டார். அங்ஙனமிருப்பப் பிறர்பால் ஒன்றை வேண்டுவது எங்ஙனம்?

இவ்வுண்மை வருமாறு :

"வேண்டேன்புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் [விண்ணும்
வேண்டேன் பிறப்பிறப் புச்சிவம் வேண்டார் தமை நாளுந்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் திருப்பெ ருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம்போ கேன் இனிப் புறம் போக லொட்டேனே."

—அ. உயிருண்ணிப்பத்து, எ. (௬)

நேரிசை ஆசிரியப்பா

ஒன்றினோ டொன்று சென்றுமுகில் தடவி
ஆடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம்முயன்று வகுத்த
ஓவநூல் செம்மைப் பூவியல் வீதி
குயிலென மொழியும் மயிலியல் சாயல்
மான்மற விழிக்கும் மானுர் செல்வத்
திடைமரு திடங்கொண் டிருந்த எந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்றல்
ஆரணந் தொடராப் பூரண புராண
நாரணன் அறியாக் காரணக் கடவுள்
சோதிச் சுடரொளி ஆதித் தனிப்பொருள்
ஏக நாயக யோக நாயக
யானென் றுணர்த்துவ துளதே யான்முன்
னனந்தலை யுலகத் தனந்த யோனியில்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழிஇத்
தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்
தாயுறு துயரமும் யானுறு துயரமும்
இறக்கும் பொழுதின் அறப்பெருந் துன்பமும்
நீயல தறிகுநர் யாரே அதனால்
யான்இனிப் பிறத்தல் ஆற்றேன் அஃதான்
றுற்பவம் துடைத்தல் நிற்பிடித் தல்லது
பிறிதொரு நெறியின் இல்லைஅந் நெறிக்கு

வேண்டலும் வெறுத்தலும் ஆண்டோன்றிற் படரா
உள்ளமொன் றுடைமை வேண்டும் அஃதன்றி
ஐம்புலன் ஏவல் ஆணைவழி நின்று
தானல தொன்றைத் தானென நினையும்
இதுவென துள்ளம் ஆதலின் இதுகொடு
நின்னை நினைப்ப தெங்ஙனம் முன்னம்
கற்புணை யாகக் கடல்நீர் நீந்தினர்
எற்பிற ருளரோ இறைவ கற்பம்
கடத்தல்யான் பெறவும் வேண்டுங் கடத்தற்கு
நினைத்தல்யான் பெறவும் வேண்டும் நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டும் நஞ்சுபொதி
உறையெயிற் றுரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே.

க—கO. ஒன்றிஞெ...கடவுள்

(இ - ள்.) ஆடுகின்ற கொடிகள் ஒன்றோடு ஒன்று மாறுகொண்டு சென்று வான வீதியிற்போய், மேகங்களுடன் உராய்ந்து அசைகின்ற பெருமை பொருந்திய மாடமாளிகைகளும், தெய்வத்தன்மை பொருந்திய சிற்பிகள் கைவல்ல முயற்சி செய்து ஆக்கிய சிற்பநூற்படி அமைந்த சீர்ப்பாட்டினையுடைய, அழகு பொருந்திய, தெருக்களையும் குயில் போன்று இனிமையுறப் பேசுகின்ற, மயில் போலும் இயலும் சாயலும் வாய்ந்த மானுனது மாறுகொள்ள நோக்குகின்ற பெண்கள் நெருங்கிய செல்வத்தினையுமுடைய திருவிடை மருதூர் என்னுந் திருவூரைத் திருப்பதியாகக்கொண்டு எழுந்தருளியிருக்கும் எளியேங்களின் தந்தையானவனே! ஒளி பொருந்திய மழுப்படையினை வலப்பாகம் பெற்றிருக்கும் பெருமையிற் சிறந்தோனே, வேதங்களால் தொடரவொண்ணுத எங்கும் நீக்கமற நிறைந்து நிற்கின்ற முழுநிறைவே, நனி மிகப் பழைமையானவனே, திருமாலாலும் அறியப்படாத விழுமிய முழுமுதற் காரணமான கடவுளே.

கக—உச. சோதிட...வேண்டும்.

(இ - ள்.) மிக்க ஒளி பொருந்திய சுடரொளி போன்றவனே, முதன்மையாகிய ஒப்பற்ற பெரும்பொருளே, தானே அனைத்திற்கும் காரணமாய் முழுமுதலாய்த் தனக்கு மேலொரு முதலிலதாய் உள்ள முதல்வனே, அகத்தவமாகிய யோகம் புரிவோர்க்கு (உண்ணின்று உணர்த்துவது போன்று) புறத்தும் யோகவடிவுடன் காட்சியளிக்கும் முதல்வனே, அடியேன் தேவரீர் திருமுன் முறையிட்டு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுவது ஒன்றுளது, அடியேன் முன்பு பரந்த இடத்தையுடைய இவ்வுலகத்தின்கண் அளவிறந்த பிறப்புக்களில் பிறந்த காலத்தும், பிறவாமல், காற்றுடியைப்போல் சுழன்று கொண்டு அலைந்த காலத்தும், பிறவி யெடுத்த போதும் பிறக்குங்கால் எற்படும் துன்பத்தைத் தாயும் நானும் படும்நிலையும் கருப்பையுளிருந்து

அடியேன் படுந்துன்பமும், இறக்குங் காலத்து அடியேன்படும் அளவில்லாத துன்பமும், தேவரீரை அல்லாமல் அறியவல்லவர் யாவருளர்? அதனால் அடியேன் இனிப் பிறக்கும் துன்ப நிலையினைப் பொறுக்கும் வன்மையில்லாதவனாகின்றேன். அஃதல்லாமலும், பிறப்பினைப் போக்கிக் கொள்ளுதல், தேவரீரை உறுதியாகப் பற்றிக்கொள்வதால் அல்லாமல், வேறொரு வழியாகப் போக்கிக் கொள்ளுதல் முடியாதாம், நின்திருவடியைச் சேரும் அவ்வகை நன்னெறிக்கு எவ்வகைப் பொருளிடத்தும் விருப்புறுதலும், வெறுப்புறுதலும் கொள்ளாது, அவ்விடங்களில் காணும் ஒரு பொருட்கண் செல்லாத பற்றற்ற ஓர் உள்ளத்தினை அடியேன் பெறுதல் வேண்டும்.

(வி - ம்.) ஆதி - காரணம். நனந்தலை — அகன்ற இடம்; பரந்த இடம். அனந்தம் - அளவில்லாத. யோனி - பிறப்பு. கறங்கு - காற்றாடி. சுழன்று - சுற்றித்திரிதல். உற்பவம் - பிறப்பு.

இறந்தவுயிர் மீட்டும் பிறக்கும் முறைமை வருமாறு:

"உடல்விடா யோனி பற்றி உதிப்பினும் உதிக்கும் ஒன்றிற்
படர்வுறு துறும்பா வத்தாற் பாடா ணம்போற் கிடந்து
கடனதாம் காலஞ் சென்றுற் கடுநர கதனில் வீழ்ந்தங்
கிடருறும் உருவங் கன்மத் தளவினில் எடுக்கு மன்றே."

—சிவஞானசித்தியார், உ. உ — ௩௬.

பிறக்குங்கால் எற்படும் துன்பம் "தக்க தசமதி தாயொடு தான் படும், துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்." (அ. போற்றித் திருவகவல் வரி உச—உ௫.) என்னும் தனித்தமிழ்த் திருமாமறையானுணரலாம்.

உச—௩௫. அஃதன்றி...கண்ணுதலோயே.

(இ - ள்.) அஃதல்லாமல் அறிதற் கருவி ஐந்தும் ஏவுதலால் ஏற்படும் கட்டளைவழி நின்று தன்னின் வேறாய தொன்றைத் தான் என்று நினைக்கின்ற இத்தன்மை எளியேனுக்கு உரிய உள்ளச் செயலாகும். ஆதலால் இத்தகைய புல்லிய மனத்தைக்கொண்டு தேவரீரை நினைப்பது எவ்வகையாற் கைகூடும்? முற்காலத்துக் கல்லைத் தெப்பமாகக்கொண்டு கடல் நீரை நீந்திச் சென்றோர் என்னைப் போலும் பிறரொருவர் உளராவரோ? முதல்வனே! பல ஊழிகளாகப் பிறந்தலை யான் கடத்தல் பெறுதல் வேண்டும்; அங்ஙனம் பிறவிப் பெருங் கடல் கடத்தற்குத் தேவரீரை உள்குதலாகிய தியானம் புரிவதல்லது வேறு செயலின்மையால் அதனை அடியேன் பெறவும் வேண்டும். அவ்வகையாக அடியேன் தேவரீரை உள்குதற்கு அடியேன் மனம் நன்னெறிக்கண் நிற்கவும் வேண்டும். நஞ்சு நிறைந்த பையோடு கூடிய நீண்ட பற்களையுடைய பாம்பினை அணியாகக் கொண்டருளிய, நச்சுக் கறை பொருந்திய கண்டத்தினையுடைய எளியேங்கட்குரிய நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானே!

(வி - ம்.) ஆணை - கட்டளை. புணை - தெப்பம். கற்பம் - ஊழி. உறை - பை.

ஐம்பொறிகளையும் தன் வயப்படுத்துந் தன்மை ஒருவற்கு ஏற்படுதல் வேண்டும். அங்ஙனம் ஏற்படுவது அப்பொறிகட்கு உரிய முதல்வனால் ஏற்படுதல் வேண்டும். ஒருவர்க்கு உரிய வேலையாள் நமக்குத் துணையாக வருவது: அவ்வேலையாளுக்குரிய முதல்வர்தம் ஆணை வழியே யாம். இதுவே இதற்கொப்பாகும். ஆகவே ஐம்பொறிகளும், அந்தக்கரணங்களும் நம் வழிப்படுவதற்கு நாம் சிவபெருமானைத் தொழுது வேண்டிக்கொள்ளுதல் வேண்டும். இவ்வுண்மை வருமாறு:

"நாமல்ல இந்திரியம் நம்வழியின் அல்லவழி
நாமல்ல நாமும் அரனுடைமை—ஆமென்னில்
எத்தனுவில் நின்றும் இறைபணியார்க் கில்லைவினை
முற்செய்வினை யுந்தருவான் முன்."

—சிவஞானபோதம், க0. உ—ங.

சிவபெருமான் திருவருளால் திருநாவுக்கரசு நாயனார் கல்லைமிதப்பாகக் கொண்டு கரையேறிய உண்மை உலகறி உண்மையே யாம். அது வருமாறு:

"கல்லினோ டெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேனன்றே."

—ஷ. எஉ-எ. (ஐ)

நேரிசை வெண்பா

கண்ணென்றும் நந்தமக்கோர் காப்பென்றுங் கற்றிருக்கும்
எண்ணென்றும் மூல எழுத்தென்றும்—ஒண்ணை
மருதஅப்பா என்றும்உனை வாழ்த்தாரேல் மற்றும்
கருதஅப்பால் உண்டோ கதி.

(இ-ள்.) (உய்யும்படி பிறப்பிக்கப் பட்டோம் என்னும் உண்மை உணர்வுடையார்) தமக்குக் கண்போல்வான் என்றும் ஒப்பற்ற உயிர்க்குயிராகிய நீங்காக் காவலன் ஆவான் என்றும், நூல்களால் கற்று நிறைந்திருக்கும் அளவை முறை என்றும், எழுத்துக்களின் முதன்மையானவனென்றும், திருவிடைமருதூர் என்னும் திருவூரின்கண் வீற்றிருந்தருளும் அப்பனே என்றும், தேவரீரை வாழ்த்திப் பயனடையாராயின், இவ்வியல்பினை விட்டு வேறொரு பொருளை மெய்யான நிலைப்பொருளெனக் கொண்டு மயங்கிக் கருதுவாராயின் அப்பால் நற்கதி யுளதாகுமோ? (ஆகாது.)

(வி - ம்.) எண் - அளவை. மூலஎழுத்து - எழுத்துக்களுக்கு முதன்மையானவனைக் குறிப்பதாகும். ஒண்ணை: ஒன்று என்னும் சொல் ஒண்ணை என எதுகை நோக்கித் திரிந்தது.

அளவையை எண்ணென வழங்கும் உண்மை வருமாறு:

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு."

—திருக்குறள், ருகஉ.

"ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே."

—திருக்கோவையார் நூற்சிறப்பு. (ரு)

கட்டளைக் கலித்துறை

சதியா வதுபிறி தியாதொன்றும் இல்லை களேபரத்தின்
போதியா வதுசுமந் தால்விழப் போம்இது போனபின்னர்
விதியா மெனச்சிலர் நோவதல் லால்இதை வேண்டுநர்யார்
மதியா வதுமரு தன்கழ லேசென்று வாழ்த்துவதே.

(இ - ள்.) அடையத் தகுந்த பொருளாவது (அனைத்துலகிற்கும் விழுமிய முழுமுதல்வனாகிய தேவரீரை யல்லாமல்) வேறு ஒன்றும் இல்லை; உடலின் சுமையாவது குறித்த வாழ்வுவரை சுமந்திருக்கப் பெறின் வீழ்ந்தழியும்; இவ்வுடல் நீங்கியபின், ஊழ்வினை வயத்தால் இவ்வுடல் நீங்கியதென்று உலகத்தவரிற் சிலர் வருந்துவதல்லாமல், இவ்வுடலை விரும்புவோர் யாவர்? ஆதலால், நல்லறிவாவது இவ்வுடல் நீங்குமுன் திருமருதவாணனது திருவடியை அணைந்து மனமார நினைந்து, வாயார வாழ்த்தித் தலையார வணங்கித் தொழுவதேயாம்.

(வி – ம்.) சதி - மாறாப் புகலிடம். களேபரம் - உடல்; எலும்பு; பிணம். பொதி - சுமை; (எலும்பு, தசை, தோல், நரம்பு முதலிய வற்றால் பொதியப்பட்டுள்ள உடம்பு.)

உயிர் நீங்குமுன் னிருந்த பெருமை உயிர் நீங்கியபின் அவ்வுடலுக்கு யாருங் கொடுப்பதில்லை. அம்மட்டோ வருந்தி அருவருப்புக் கொள்கின்றனர். அவ்வுண்மை வருமாறு:

"மணமென மகிழ்வர் முன்னே மக்கள்தாய் தந்தை சுற்றம்
பிணமெனச் சுடுவர் பேர்த்தே பிறவியை வேண்டேன் நாயேன்
பணையிடைச் சோலை தோறும் பைம்பொழில் விளாகத் தெங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர் அப்பனே அஞ்சி னேனே."

—எ. அ—சு.

(விளாகம் - சூழ்ந்த இடம்.)

இவ்வாசிரியரும் "எரிமுதலாகச் சொல்லப்படும் ஆறு பொருள்கள்" இவ்வுடலைத் தத்தமக்குரிய எனச்சாற்றுவர். (சு)

இணைக்குற ளாசிரியப்பா

வாழ்ந்தனம் என்று தாழ்ந்தவர்க் குதவாது
தன்னுயிர்க் கிரங்கி மன்னுயிர்க் கிரங்காது
உண்டிப் பொருட்டாற் கண்டன வெஃகி
அவியடு நர்க்குச் சுவைபல பகர்ந்தே
ஆரா உண்டி அயின்றன ராகித்
தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமுங் குலனும் ஒழுக்கமுங் கல்வியும்
தன்னிற் சிறந்த நன்மு தாளரைக்
கூஉய்முன் நின்றுதன் ஏவல் கேட்கும்
சிறுஅர்த் தொகுதியின் உறுஅப் பேசியும்
பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்றும்
மெய்யும் மானமும் மேன்மையும் ஒரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
நன்மனைக் கிழத்தி யாகிய அந்நிலைச்
சாவுழிச் சாஅந் தகைமையள் ஆயினும்
மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோள் ஒருத்தி யுண்டிவேட் டிருப்ப
எள்ளுக் கெண்ணெய் போலத் தள்ளாது
பொருளின் அளவைக்குப் போகம்விற் றுண்ணும்
அருளில் மடந்தையர் ஆகம் தோய்ந்தும்
ஆற்றல் செல்லாது வேறோர் மனைவயின்
கற்புடை மடந்தையர் பொற்புநனி கேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியும்
நச்சி வந்த நல்கூர் மாந்தர்தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியின்
அகமலர்ந் தீவார் போல முகமலர்ந்
தினிது மொழிந்தாங்கு உதவுதல் இன்றி
நாளும் நாளும் நாள்பல குறித்தவர்
தாளின் ஆற்றலுந் தவிர்த்துக் கேளிகழ்ந்
திகமும் பரமும் இல்லை என்று
பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னின் அனையதன் செல்வத்தை விரும்பித்

தன்னையும் ஒருவ ராக உன்னும்
ஏனையோர் வாழும் வாழ்க்கையும் நனைமலர்ந்
தியோசனை கமழும் உற்பல வாவியில்
பாசடைப் பரப்பிற் பால்நிற அன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியும்
மருதமுஞ் சூழ்ந்த மருத வாண
சுருதியுந் தொடராச் சுருதி நாயக
பத்தருக் கெய்ப்பினில் வைப்பென உதவும்
முத்தித் தாள மூவா முதல்வநின்
திருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களும் மனைவியும் ஒக்கலுந் திருவும்
பொருளென நினையாதுன் அருளினை நினைந்
திந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுங்கிச்
சின்னச் சீரை துன்னற் கோவணம்
அறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவலோ டோன் றுதவுழி எடுத்தாங்
கிடுவோர் உளரெனில் நிலையில்நின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி
யோவாத் தகவெனும் அரிவையைத் தழீஇ
மகவெனப் பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப்
பார்க்கும்நின்
செல்வக் கடவுள் தொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்கின் உற்றநா யேற்குக்
குளப்படி நீரும் அளப்பருந் தன்மைப்
பிரளயச் சலதியும் இருவகைப் பொருளும்
ஒப்பினும் ஒவ்வாத் துப்பிற் றுதலின்
நின்சீ ரடியார் தஞ்சீ ரடியார்க்கு
அடிமை பூண்டு நெடுநாள் பழகி
முடலை யாக்கையொடு புடைபட் டொழுகியவர்
கால்தலை ஏவல்என் நாய்த்தலை ஏற்றுக்
கண்டது காணின் அல்லதொன்
றுண்டோ மற்றெனக் குள்ளது பிறிதே.

க—கO. வாழ்ந்தனம்...பேசியும்

(இ - ள்.) நாம் பிறர்க்கில்லாப் பெருஞ் செல்வக் களிப்புடன்
வாழ்கின்றோ மென்று தம்மிற்றாமே எண்ணி இறுமாந்து, தம்மை
வணங்கிக் குறைகூறி யிரந்தோர்க்கு, இம்மியும்உதவாது தன்னுயிரைப்
பாதுகாத்தற் பொருட்டு, சோறும், நீரும். பிறவும் மிக்க இரக்கத்
திடன் காலந்தவறாது உதவி புரிந்தும், தன்னைப்போன்று நிலை
பேறுடைய கடவுளின் அடிமையாகிய எவ்வுயிரிடத்தும் இயல்பாகக்
கொள்ளவேண்டிய இரக்கம் சிறிதுங் கொள்ளாது அவை பசித்திருக்
கப் பார்த்தும், உணவு முதலியவைகளைத் தேடித்தொகுத்தற் பொருட்
டுத் தன் கண்ணுற் காணப்படும் பிறர் பொருள்களையும் பிறவுயிர்களை
யும் முறையே பறித்துக் கொள்ளவும், கொன்றுண்ணவும் விரும்பிச்.
சமையல் செய்யும் ஏவலாளர்க்குப் பலவகையாகிய சுவைகளைத் தரத்
தக்க வெவ்வேறு உணவுகளைச் சுவை படச் சமைக்குமாறு கட்டளை
யிட்டுத் தெவிட்டாத உணவுகளை வேண்டியவாறு உண்டு, எதை
யுண்டாலும் ஒரு காலத்தும் நிரம்புதல் செய்யாத பாழ்வயிற்றுக்
குழியை நிரம்ப உண்டோம் எனப் பார்த்துச் சிறப்பும், உயர்ந்த இனம்
எனப்படும் குலமும், அக்குடிமைக்கு ஏற்ற ஒழுக்கமும், கல்வியும்.
தன்னைக் காட்டிலும் சிறந்துள்ள நல்லறிவாளரைப் பெருமிதத்
துடன் கூப்பிட்டுத் தன் எதிரிலிருந்து, தான் கட்டளையிட்டு ஏவும்
செயல்களைக் கேட்டு விடாது செய்யும் சிறுவர் கூட்டம் போலக்
காத்திருக்கச் செய்து, அவரொடு பேசியும்

(வி - ம்.) தாழ்ந்தவர் - வணங்குவோர். அவி - சமையல்.
கண்டன — காணப்படும் பொருள்கள். சுவை ஆறுவகை. அவை:
இனிப்பு, கைப்பு, புளிப்பு, உறைப்பு, துவர்ப்பு. உப்பு என்பன. பகர்
தல் - சொல்லுதல். ஆரா - தெவிட்டாத. அயிலுதல் - உண்டல்.
தூரா — தூர்க்க முடியாத. பாரா - பாராமல். மூதாளர் - பெரியவர்.
கூஉய் - கூப்பிட்டு. சிறாஅர் - சிறுவர்; ஏவலாளர். உறாஅ - காத்
திருக்கும்படி.

கக—உ0. பொய்யொடு...தோய்ந்தும்

(இ - ள்.) பொய்ம்மொழிகளையும், சிறு சொல்லாகிய கடு
மொழிகளையும் தன்னுடனிருக்கும் தன்னொத்த தகுதியினர்க்குக்
கூறியும், வாய்மையையும், மானத்தினையும், சிறப்பினையும் அறவே
விட்டு நீங்கி, தான் இல்லற வாழ்வினை நல்லறமாக நடத்துவான் என
நம்பித் தெளிந்து, மூத்தோர் மணஞ் செய்வித்துக் கொடுத்த மனைக்
குரியளாகிய நல்ல மனைவி காதற் கணவனுக்கு ஏதேனும் துன்பம்
நேர்ந்த காலத்து உண்டாகிய இறப்பில், தானும் உடன் உயிர் விடும்
தன்மை வாய்ந்த கற்பினுக் கணிகலமாகிய மனைவியளாயினும், அவள்
பால் நன்மகப் பேற்றின் பொருட்டுக் கூடத்தக்க நல்ல காலத்துப்
பொருந்தி வாழாது, கற்பாகிய காவலுடன் கொண்டவளாகிய மனைவி
யொருத்தி உணவை விரும்பி வருத்தமுற்றிருக்க, எள்ளாட்டுவோர்
பெற்ற எள்ளின் அளவுக்கு ஏற்ப அவ்வெள்ளினையாட்டி எண்ணெய்
அளந்து கொடுக்குந் தன்மை போன்று ("இழிபவர், உயர்ந்தோர்,
மூத்தோர், இளையவர், கழியா நோயாற் கழிபவர்" யாவராயினும்,
கைப்பொருள் நல்கிக் கூட வருவராயின்,) வேற்றுமை நோக்கி
நீங்காது, அவர் கொடுக்கும் பொருள் அளவுக்குத் தக்கவாறு உட

னுறையும் இன்பத்தினை விலையாகக் கொடுத்து, அதனால் வரும் பொருளைக் கொண்டு வாழும் இரக்கம் சிறிதும் இல்லாத விலை மகளிரது மாசுடம்பினைத் தழுவிக் கூடியும்.

(வி - ம்.) புல்லர் - சிற்றினத்தார். (நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லையென்போர் புல்லர்.) ஒரீஇ - நீங்கி. ஆகம் - உடம்பு.

விலை மகளிர் ''அருளில் மடந்தையர்'' எனப்படுகின்றனர். அஃதாவது, திருவருளைத் தெளிந்து தொழாதார், அதன் நாட்டமிலாதார், அதனைச் சேரவேண்டுமென்னும் பற்றில்லாதார். இவர்களைக் கூடுவதும் அருளிலார் செய்யும் மருட்செயலென்னும் உண்மை வருமாறு :

''பொருட் பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்
ஆயும் அறிவி னவர்.''

—திருக்குறள், கக௪.

உக—௩௪. ஆற்றல்...வாழ்க்கையும்

(இ - ள்.) காமம் பொறுக்கல் ஆற்றாது, அயலவர்க்குரிய வீட்டின் கண்ணுள்ள, கற்பிற் சிறந்த கவினுர் மடந்தையர்தம் அழகைப் பிறர் வாயிலாகக் கேட்டு, அப்பெண்ணை விரும்பிச் சென்றால் (காணிற் குடிப்பழியாம் கையுறிற் கால் குறையும், பாவமும் பழியும் பகையும் அச்சமும் நீங்காது பெருகும். இத்தகைய துன்பங்கள் பல வரும்என்று எண்ணாது) பற்பல துன்பமும் பிழையும் வருமென்று சிறிதும் எண்ணாது, தன்னுடைய பொருந்தாக் களவொழுக்கத்தைப் பிறர் அறியா வண்ணம் மறைந்து நுழைந்து போம், கள்ளவழியை ஆராய்ந்து பார்த்தும், தன்னை விரும்பிப் பொருள்பெறும் பொருட்டுக் கால் கடுக்க நடந்து வந்த வறியவர்கள், தங்களுடைய கல்வியறிவினால், அடைந்த பலவகைப்பட்ட சிறந்த அறிவினுக்கு மனங்களித்து வரையாது வழங்கும் வள்ளல் போன்று நடித்து முகமலர்ச்சி காட்டிக் களிப்புடன் இன்சொற்கூறி, அவ்விடத்து அப்புலவர்க்கு ஒன்றும் உதவுதல் இல்லாமல், ஒவ்வொரு நாளும் நாட்களை வீணாகக் கழித்தும், அவர்களுடைய காலின் வலிமையையும் கெடுத்து, சுற்றத்தவர் முதலியோரை இகழ்ந்து, இம்மையின் பயனும், மறுமையின் பயனும், இல்லை யென்று துணிந்து, அச்சமில்லாமல் ஒழுகிப் பொய் பேசப் பழகி, மின்னலை ஒத்துள்ள தன் நிலையிலாப் பொருளை விழைந்து, தன்னையும் கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த மாந்தருள் ஒருவராகத் தம்மைத்தாமே மதித்து எண்ணுகின்ற ஏனையோர் வாழ்கின்ற வாழ்க்கையும்.

(வி - ம்.) பொற்பு - அழகு. நனி - மிகுதி. நச்சி - விரும்பி. நல்கூர்தல் - வறுமைப் படுதல் விச்சை — வித்தை; கல்வி. காட்சி - அறிவு. தாள் - கால். இகம் — இம்மை. பரம் - மறுமை. கேள் - உறவு. பயம் - அச்சம். பட்டிமை - பொய்.

பிறர்மனை விழையும் பெருங்குற்றத்தினைத் திருக்குறளில் விரிவாகக் காணலாம். குமரகுருபரர் மொழியும் திருமொழியும் காண்க:

"பிறன்வரை நின்றாள் கடைத்தலைச் சேறல்
அறனன்றே யாயினும் ஆக—சிறுவரையும்
நன்னலத்த தாயினும் கொள்க நலமன்றே
மெய்ந்நடுங்க உள்நடுங்கு நோய்."

—நீதிநெறி விளக்கம், எஎ.

ருச—சஉ. நனைமலர்ந்து...முதல்வ

(இ - ள்.) அரும்பு போதாகி முறுக்கவிழ்ந்து, யோசனை எனப்படும் இரண்டு நாழிகை வழி தொலைவு மணங்கமழும், நீலோற்பலங்கள் நிறைந்த தடாகங்களில். பசிய இலைகள் நிறைந்த விரிந்த இடத்தில், பால்போலும் வெண்ணிறத்தினையுடைய அன்னப் பறவைகள், குஞ்சுகளுடன், அச்சம் அடைய, பிளந்த வாயினையுடைய, வாளை மீன்கள் சண்டை செய்கின்ற கரை மோதுகின்ற அலைகளையுடைய காவிரியாறும், மருத நிலமும் சூழப்பெற்ற திருவிடைமருதூர்த் திருவூரின்கண் எழுந்தருளி யிருக்கின்ற மருதவாணனே. வேதங்களும், தொடர்ந்து அறியாத மறை முதல்வனே, மெய்யடியார்கட்கு இளைத்த காலத்து உதவத் தொகுத்து வைக்கப்பட்டுள்ள வைப்புப் போன்று உற்றுழி உதவும் ஒருவனே, திருவடிப் பேறாகிய வீடு பேற்றினை நல்கும் திருவடியை உடையவனே, என்றும் பொன்றாது ஒருபடித்தாக இருக்கும் விழுமிய முழுமுதல்வனே!

(வி - ம்.) நனை - அரும்பு. யோசனை - இரண்டு நாழிகை வழித் தொலைவு; கூப்பிடு தூரம். உற்பலம் - நீலோற்பலம். வாவி - தடாகம். பாசடை - பச்சையிலை. பார்ப்பு - பறவைக்குஞ்சு. வெருவல் - அஞ்சுதல். பகுவாய் - பிளந்தவாய். சுருதி - வேதம்.

சஉ—ருரு. நின்...வாழ்வும்

(இ - ள்.) தேவரீருடைய திருவடிகளைச் சிக்கெனப் பிடித்து, பிறப்பச்சத்தினைப் போக்கி, மக்களையும், மனைவியையும், சுற்றத்தாரையும், செல்வத்தினையும் நிலையான ஒரு பொருளாக எண்ணாமல் தேவரீர் திருவருளையே எண்ணி, வானவர்கோன் நிலையினை யடையும் வாழ்வும், எண்பெரும் சித்திகளும் வலிய வந்து நேர்ந்த காலத்துந் தடுத்து நீங்கி, சிறிய ஆடையும், தைத்த கோவணமும், அறுதலோடு கூடியவேனும், பெறக் கூடியதைக் கட்டி, ஓட்டையாகிய ஓடு ஒன்று அகப்பட்ட இடத்து, அதனைப் பலிக்கலமாகக்கொண்டு, பசி வந்துற்றபோது பிச்சையிடுவோர் இருப்பாராயின், நிலையில் நின்று கொண்டே பித்தர்போல உண்டு, பள்ளமாகிய தரையினையே படுக்கையாகக் கொண்டு படுத்து, நன்னெறி நல்லொழுக்க மென்று சிறப்பித்துச் சொல்லப்படும் வாழ்க்கைத் துணையைக் கூடி, நன்மகப்பேறெண, உலகத்திலுள்ள இயங்கு திணைப் பொருள், நிலைத்திணைப் பொருள் ஆகிய அனைத்துயிர்களையும் பொது நோக்காக நோக்கும் தேவரீரது அருட்செல்வ மிகுந்த, தெய்வத்தன்மை தங்கிய, மெய்யடியார்களது வாழ்க்கையும்.

(வி - ம்.) வெருவரல் - அச்சம். துன்னல் - தைத்தல். சிதவல் - ஓட்டை. அயின்று - உண்டு. தகவு - நல்லொழுக்கம் அரிவை -

பெண். செல்வக் கடவுள் சிவபெருமான் ஒருவனே என்பது வருமாறுணர்க :

"செல்வ நெடுமாடஞ் சென்றுசேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே."

—க. அ0—கு.

கூ—சுகு. பற்றிப்...பிரிதே

(இ - ள்.) இவ்விருவகை வாழ்க்கையினையும் ஆராய்ந்து நோக்குங்கால், எல்லாக் குறைகளும் பொருந்திய நாயினுங் கடைப்பட்ட அடியேற்கு, மாட்டுக் குளம்பின் அடிக்கணுள்ள நீரும், இவ்வளவினதென்று அளத்தற்கரிய இயல்பினையுடைய, பெரு வெள்ளங் கொண்ட பெருங்கடலும் ஆகிய இவ்விருவகைப் பொருள்களும், நீரால் ஒருபுடை யொத்திருப்பினும் அளவால் ஒவ்வாத வலியுடையன, ஆதலால், தேவரீருக்குரிய சிறப்புற்ற அடியவர்களுக்கு, அடிமைப் பணி புரிந்து ஆட்பட்டுப் பலகாலம் அவர் பண்புடன் பழகிப் புலால் நாற்றம் நாறுகின்ற இவ்வுடம்பில் இடைபட்டு ஒழுகி அதன் வழி நடந்து, அத்தொண்டர் பெருமக்கள் காலாலிட்ட ஏவலினை, நாயை யொத்த எளியேன் தலைமேலேற்று, அதனாலுண்டான தொன்றைப் பெரும்பயனாகக் காண்பதன்றி, வேறு ஒன்று, உளதாக எண்ணப்படுவது எளியேனுக்கு உளதாகுமோ? (உளதாகாது என்க.)

(வி - ம்.) குளப்படி - குளம்பு படியும் இடம். பிரளயம்-பெருவெள்ளம். சலதி - கடல். துப்பிற்று - வலியுடைத்து. முடலை - நாற்றம். ஆக்கை - உடம்பு. (எ)

நேரிசை வெண்பா

பிறிந்தேன் நரகம் பிறவாத வண்ணம்
அறிந்தேன் அநங்கவேள் அம்பில்—செறிந்த
பொருதவட்ட வில்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருதவட்டந் தன்னுளே வந்து.

(இ - ள்.) (பழைமை எனப்படும் புராணங்களாலும் கூறி அளவுபடாத) பழையோனது திருவிடைமருதூர் என்னும் திருவூரில் அடியேன் முற்பிறவிகளிற் செய்துகொண்டுள்ள நற்றவமாம் சிவபுண்ணியப் பேற்றால், நரகம் அடைவதினின்றும் நீங்கினேன். இனிப் பிறவாப் பேறெய்தும் வழி வகைகளையும் திருவருளால் அறிந்தேன்; உருவிலாளாகிய மன்மதனால் விடப்படும் அம்புடன் பொருந்திய பொருதற்குரிய, கட்டுக்கள் நெருங்கிய, வளைவாகிய வில்லினுக்குத் தப்பி இவ்விடம் வந்துற்றேன்.

(வி - ம்.) நரகம்-இம்மைச்செய்த தீவினையின் பயனாகத்துன்பம் எய்தற்குரிய கீழிடம். அனங்கன் - உருவில்லாதவன்; அங்கம் - உரு.

வேள்: காதலர் இருவர்க்கும் விருப்பத்தை யுண்டாக்குவோன். மன்மதன் கருவேள் எனப்படுவன். முருகப் பெருமான் செவ்வேள் எனப்படுவன். புராணன் - பழையோன். பிறிந்தேன் - பிரிந்தேன். (அ)

கட்டளைக் கலித்துறை

வந்திக்கண் டாய்அடி யாரைக்கண் டால்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாய்அரன் செம்போற் கழல்திரு மாமருதைச்
சந்திக்கண் டாய்இல்லை யாயின் நமன்தமர் தாங்கொடுபோய்
உந்திக்கண் டாய்நிர யத்துன்னை வீழ்த்தி உழக்குவரே.

(இ - ள்.) நெஞ்சமே! முன் செய்த புண்ணியப் பேற்றால் சிவனடியாரைக் காண நேர்ந்தால், அவர் தம்மைச் சிவனெனவே தேறி மறவாது வழிபடுவாயாக; (ஆருயிர்களின் மும்மலப் பிணிப்பினைத் தேய்த்து ஒடுக்கும்) சிவபெருமானின் சிவந்த பொன்போலும் ஆண்மைக்கழலணிந்துள்ள திருவடியினை இடையறாது எண்ணுதலாகிய உள்குதலைச் செய்வாயாக. திருவிடைமருதூர் என்னும் திருப்பதியினைச் சேர்ந்து கண்டு வணங்குவாயாக. இவ்வகைய முத்திறத்திருத்தொண்டுகளைப் புரியாது ஒழிந்தால், நமனுடைய ஏவலாளர்கள் உன்னைத் தள்ளிக்கொண்டு தம்முடைய துன்ப வுலகத்திற் புகுத்தி நரகத்தின்கண் வீழ்த்தித் துன்பப்படுத்துவர்.

(வி - ம்.) வந்தித்தல் - வணங்கல். சிந்தித்தல் - உள்குதல்; தியானஞ் செய்தல். கழல் — வீரக்கழல். சந்தித்தல் - சேர்தல். உந்துதல் - தள்ளுதல். உழக்குதல் - துன்பப்படுத்துதல்.

தீவினைப் பயனாத் துன்பத்தினை இருளுலகினில் துய்க்குந் தன்மை வேறு வேறு வகைத்து. அவை வருமாறு :

—தான்மாள
வெற்றிக் கடுந்தூதர் வேகத் துடன்வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட—இற்றைக்கும்
இல்லையோ பாவி பிறவாமை என்றெடுத்து
நல்லதோர் இன்சொல் நடுவாகச்—சொல்லிஇவர்
செய்திக்குத் தக்க செயலுறுத்து வீரென்று
வெய்துற் றுரைக்க விடைகொண்டு—மையல்தருஞ்
௭௫ செக்கி னிடைத்திரித்தும் தீவாயி லிட்டெரித்துந்
தக்கநெருப் புத்தூண் தழுவுவித்தும்—மிக்கோங்கு
நாராசங் காய்ச்சிச் செவிமடுத்தும் நாஅரிந்தும்
ஈராஉன் ஊனைத்தின் என்றடித்தும்—போமல்
அங்காழ் நரகத்[1] தழுத்து வித்தும் பின்னுந்தம்
வெங்கோபம் மாறாத வேட்கையராய்—இங்கொருநாள்

1. 'அரசனூர்,' சிவஞானசித்தியார், உ, உ—௩௦.

எண்ணிமுதற் காணாத இன்னற் கடுநரகம்
பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு
—போற்றிப்பஃறொடை—(க)

இணைக்குற ளாசிரியப்பா

உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையற வுளவோ
அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற அகழ்ந்து போக்கித் தூர்வைசெய்
தன்பென் பாத்தி கோலி முன்புற
மெய்யெனும் எருவை விரித்தாங் கையமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சிநேர் நின்று
தடுக்குநர்க் கடங்கா திடுக்கண் செய்யும்
பட்டி அஞ்சினுக் கஞ்சியுட் சென்று
சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட அருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி
மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட் டம்மெனக்
கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து, புண்ணிய
அஞ்செழுத் தருங்காய் தோன்றி நஞ்சுபோதி
காள கண்டமுங் கண்ணொரு மூன்றும்
தோளொரு நான்குஞ் சுடர்முகம் ஐந்தும்
பவள நிறம்பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை அதனினும் உறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதரும்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதினி தருந்திச்
செம்மாந் திருப்பச் சிலர்இதின் வாராது
மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்

காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத் தோழுக
இன்பப் பேய்த்தேர் எட்டா தோடக்
கல்லா வுணர்வெனும் புல்வாய் அலமர
விச்சைவித் துதிர்த்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப் பல்தழை பரப்பிப் பூவெனக்
கொடுமை யரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவா
திமைப்பிற் கழியும் இயற்கையோர் உடைத்தே.

க—கஉ. உழப்பின்...முளைத்து

(இ - ள்.) (நினைப்பு, சொல், செயல் ஆகிய) மூவகை முயற்சியானும், அடையப் பெறாத, அடையப்படும் பேறுகள் ஏதேனும் உண்டோ? (ஏதும் இல்லை; எல்லாம் அடையப்பெறும்.) அத்தகைய பெரு முயற்சியின்றிக் காலத்தைப் போக்கி வேலை செய்யாமல் சோம்பலாய்த் திரியும் தீமையினால் நேரிடும் துன்பம். (வேறெவற்றானும் நேரிடக் கூடுமோ?) ஆகையால் மனமாகிய பெருங் காட்டில் முளைத்துள்ள வஞ்சக மென்னும் பெரிய நச்சு மரத்தை வேராகிய அடியற்றுப்போம்படி தோண்டி, அப்புறப்படுத்தி, நல்லமரம் முளைத்தற்குரியதாகப் பண்படுத்தி, அன்பு என்கிற பாத்தியை நலமுற அமைத்து, முதலில், உண்மை எனப்படும் எருவை நன்றாகப் பரப்பி யிட்டு, எருப்பெய்த அந்நிலத்தில், பழுது முதலியவற்றால் இவ்விதை முளைக்குமோ? முளைக்காதோ? எனத் தோன்றும் ஐயம் ஒரு சிறிது மின்றிப் போன பின் முதிர்ச்சியாகிய காதல் எனப்படும் பத்தியாகிய சிறந்த ஒப்பற்ற விதையினை விதைத்து, நாள்தோறும் காலந்தவறாது, ஆர்வம் என்று சொல்லப்படும் தெளிந்த தூய நீரினைப் பாய்ச்சி, எதிராக நின்று உள்ளே புகமுடியாதபடி கடுமையாகத் தடை செய்வோர்க்குச் சிறிதும் அடங்குதல் செய்யாது, நீக்க முடியாத பெருந் துன்பஞ் செய்கின்ற ஐந்து பட்டிமாடுகளுக்கு, அவற்றைத் தடுக்க முடியாதபடி மிகவும் அஞ்சி அந்நிலத்தினுட் சென்று அமைதி யெனப்படும் பொறுமையாகிய வாழ்வேலியினை அமைத்து, இவை யனைத்தும் செம்மையாக நிறைவு எய்தியபின், திருவடியுணர்வு என்று சொல்லப்படும் சிவ ஞானம் என்னும் பெருமுளை பழுதின்றி முளைத்து,

(வி - ம்.) உழப்பு - ஊக்கம்; முயற்சி. உறுதி - அடையத்தக்க நற்பேறுகள். கழப்பு-சோம்பல்; மடி. கையறவு-துன்பம். அகழ்ந்து-தோண்டி. தூர்வை செய்தல் — செம்மைப் படுத்தல். நித்தலும் - நாடொறும். இடுக்கண் - துன்பம். பட்டி - காவலில்லாத மாடு. அஞ்சு - பொறிகள் ஐந்து. நந்தாது - கெடாது.

முயற்சியின் பெருமை வருமாறு :

" முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

—திருக்குறள், சுகசு.

மடியின் சிறுமை வருமாறு :

" குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும்."

—திருக்குறள், சு0க.

கக—உஎ. கருணை...செம்மாந்திருப்பர்

(இ - ள்) அருளென்று சொல்லப்படுகின்ற பசுந்தளிர்களைத் தளிர்த்துக் காட்ட, எடுக்குந்தோறும் கெடாத காமம் வெகுளி (மயக்கம்) என்னும் களைப்பூண்டுகளை, வேர் அற்று ஒழியும்படி கட்டு (பிடுங்கி)ப் போக்கி அவ்வயலினைச் செம்மைப் படுத்துகையில், நன்மை மிகுந்த செம்மையுடன் வளர்ந்து, உடம்பின்கண் ணுள்ள மயிர்க்கால் களாகிய புளகமெனப்படும் முகிழ்விட்டு அம்மெனும் இன்ப ஓசை யுடன் கண்ணீராகிய அரும்பை விட்டு, நறுமணமுள்ள பூக்கள் மலர்ந்து சிவபுண்ணியத் திருவுருக்கொண்ட திரு எழுத்து ஐந்தெனப்படும் கிடைத்தற்கு அரிதாகிய காய் உண்டாகி நஞ்சு தங்கிய திருநீல கண்டமும், ஒப்பற்ற மூன்று திருக்கண்களும், எட்டுத் திருத்தோள் களும், திருவருட் பேரொளி சுடர்விட்டு ஒளிர்கின்ற ஐந்து திருமுகங் களும், பவழம் போலுந் திருநிறத்தினையுடையதாய் பால் போலும் வெண்மை நிறம் பொருந்திய திருவெண்ணீற்றினை நிறையப்பூசி, ஆறு சுவையினும் மிக்கஇனிமையினையுடையதாகிச் சிவபுண்ணியப் பேற்றால் காணப் பெறினும், அதன் பொருள்சேர் புகழைக் காதினாற் கேட்கப் பெறினும், உருகும் நிலைசேர் உள்ளத்தால் நினைக்கப் பெறினும், பேரின்பப் பெருங் களிப்பினைத் தரும் நனிமிக வுயர்ந்த மருத மாணிக்கம் என்னும் இனிய கனி, மெல்ல மெல்ல முதிர்ந்து கையின் கண் எளிதாகவர, மெய்யடியார்களாகிய எம்மனோர்கள். இன்புற உண்டு கிடைத்தற்கரிய களிப்பும் பெருமிதமும் தாமே வந்தெய்தி இறுமாந்திருக்க,

(வி - ம்.) அருகா - கெடாத; குறையாத. குரோதம் - வெகுளி; சினம். சேமம் - செம்மை. புளகம் - மயிர் சிலிர்த்தல். காளம் - கறுப்பு. தவளம் - வெண்மை. சேண் - மிகுதி.

திருவுடைத் திருவடிச் சார்புடைய மெய்யடியார்கள் அனைவர் களும் இறுமாந்திருப்பர்.

இவ்வுண்மை வருமாறு :

" இறுமாந் திருப்பன் கொலோ—ஈசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென் றங்
கிறுமாந் திருப்பன் கொலோ."

—அ, க—கக.

உ௭—௭௧. சிலரிதின்...உடைத்தே

(இ - ள்.) தீவினையாளர் சிலர் மேலோதியவற்றுள் விருப்பங் கொள்ளாது வெறுப்புற்று மனம் என்று சொல்லப்படும் தூய நன்னிலத்தைப் பயனற்ற பாழ்நில மாக்கிப் பொருந்தா வேட்கைக் காமமென்னும் காராரும் ஆணவக்காடு மூடியதால், தீயவற்றைச் செய்கின்ற அறிதற் கருவியாகிய ஐம்பொறி வேடர்கள் [1]வழிபறித் திழுக்கச் சிற்றின்பமாகிய பேய்த்தேர் (கானல் நீர்) கைக்கு எட்டாது மேலும் மேலும் ஓடக், கற்றுத் திருந்தாத உணர்வென்னும் மான் திரியும்படி, ஆசை என்கிற வித்தினை விதைத்த காலத்து, நான் என்று பெயர் கூறப்பட்ட செருக்காகிய நஞ்சையுடைய மாமரமானது, மிகுதியாக முளைத்துப் பொய் என்று சொல்லப்படும் பெருங்கிளைகளை விட்டுச் செய்யப்பட்டு வருகின்ற பாவ மென்கிற பல தழைகளை, விரித்துப் பூஎன்று கூறுகின்ற கொடுமை என்கிற அரும்புகளை விட்டுத் தீமையே பெருகிப் பூத்துத் துன்பம் என்கிற பல காய்களை ஏந்திக்கொண்டு, அதன் பின்பு இறந்து போதலாகிய கனி பழுத்து, நீங்கா இருளுலகம் என்னும் நரகில் விழுந்து, தமக்கும், மற்றையோர்க்கும் ஒரு சிறிதும் பயன்படாது கண்ணிமைப் பொழுதினுள் அழிந்துகெடும் நீங்காக் குணமுடையாரை இவ்வுலகம் பெற்றிருக்கிறது.

(வி - ம்.) ஆறு - வழி. உதிர்த்தல் - விதைத்தல்.

வாராச் சிலரின் வன்மைக் கிரங்கல் வருமாறு:

"சித்தாந்தத் தேசிவன்தன் திருக்கடைக்கண் சேர்த்திச்
  செனனம் ஒன்றி லேசிவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
  மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்பன் என்று
  மொழிந்திடவும் உலகரெல்லாம் மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
  பெருங்குழியில் வீழ்ந்திடுவர் இதுஎன்ன பிராந்தி."

—சிவஞானசித்தியார், அ. உ—௬. (௧0)

நேரிசை வெண்பா

உடைமணியின் ஓசைக் கோதுங்கி அரவம்
படம்ஒடுங்கப் பையவே சென்றங்—கிடைமருதர்
ஐயம் புகுவ தணியிழையார் மேலனங்கன்
கையம் புகவேண்டிக் காண்.

(இ - ள்.) (இறைவன் முறை நிறுத்துவான் வேண்டிக் கோவணத்தோடமைந்த அழகிய பலிக்கோலம் பூண்டு) திருவிடை மருதூரில்

1. 'ஐம்புல வேடரின்'—சிவஞானபோதம், சூற்பா—அ.

எழுந்தருளி யிருக்கும் முதல்வன் தம்முடைய அரையிலணிந்திருக்கும் சதங்கையின் ஓசை கேட்டு அதன் வயப்பட்டு ஒதுங்கிப் பாம்பு தனது படத்தினை [1] இறுமாப்புக்கொண்டு மேலெழாது ஒடுங்கும்படி யமைத்து, மெல்லெனப் பலர் வீடுகளிற் சென்று பிச்சைத் திருக் கோலத்துடன் பிச்சை கொள்வது, உருவிலியாகிய மன்மதன், அழகிய அணிகலன் அணிந்துள்ள பெண்களின்மீது, தன் கையி னிடங் கொண்டுள்ள (வேட்கையினை மிக்கெழுப்பும்) ஐவகை அம்பு களை எய்ய வேண்டியே யாம். இதனை ஆராய்ந்து பார்.

(வி - ம்.) மணி - சதங்கை. அரவம் - பாம்பு.

தெய்வ நாட்டமில்லார் திண்மை யனைத்தும் தீயினைக் கண்ட வெண்ணெய்க் குன்றென மாய்வது திண்ணம். அந்நாட்ட முடையார் உள்ளத்துரன் மலையென நிலைத்து ஓங்கி நிற்கும். இவ்வுண்மை வருமாறு :

"சிறை காக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."

—திருக்குறள், ருஎ.

நிறை - கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் நீங்காதார் உள்ளம் கடவு ளருளால் கற்பென்னும் திண்மை பெற்றுக் கலங்காது நிற்கும் நிலை. (கக)

உருவிலான் கணை ஐந்து வருமாறு :

க. முல்லை, உ. அசோகு, ங. தாமரை, ச. மா, ரு. நீலம் என்பன.

கட்டளைக் கலித்துறை

காணீர் கதியொன்றுங் கல்லீர் எழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர் அவன்புகழ் ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திர சாதனம் நீறெங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப் பிரான்கழல் மேவுதற்கே.

(இ - ள்.) வீணுக வாணுள் போக்கும் பயனற்றவர்களே! தனித் தமிழ் மந்திரமாம் திருவைந்தெழுத்தினையும் திருவருள் நாட்டத் துடன் கணித்தல் செய்கின்றிலீர். வலிமைக்குத் தக்கவாறு இயன்ற அளவு அவன்றன் திருப்பணிகளைச்செய்ய விரும்புகின்றிலீர், அவனது பொருள்சேர் புகழ்களை எடுத்து ஓதும் திருமாமறை திருமாமுறை களை உள்ளன்புடன் எடுத்து உரைக்கின்றிலீர், காதலாகிச் சிவன் திரு வடையாளமாகிய சிவமணியினை அணிந்து அன்பு கொள்கின்றிலீர், திருவெண்ணீற்றினைச் "சிவயநம" என ஓதிப் பொழுது நான்கினும் போற்றி மந்திரம் புகன்று நிறையப் பூசுகின்றிலீர், இவ்வகையாகிய செய்யத் தகுந்தவைகளுள் ஏதும் செய்யாது திருவிடை மருதூரில்

1. 'செந்தமிழ்த்'. எ. நகூ—ச.

எழுந்தருளி யிருக்கும் மருதவாணனது திருவடியினை அடைதற்கு எளிதோ? (ஆகாது) எத்தகைய நிலையினையுங் கண்டடையீர்.

(வி - ம்.) கதி - நிலை. உருத்திரசாதனம் - சிவமணி: உருத்திராக்கம். திருத்தொண்டு செய்யும் முறைமைகள் வருமாறு :

"சிந்தனை செய்ய மனமமைத் தேன்செப்ப நாவமைத்தேன்
வந்தனை செய்யத் தலையமைத் தேன்கை தொழவமைத்தேன்
பந்தனை செய்வதற் கன்பமைத் தேன்மெய் யரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற் கிவையான் விதித்தனவே."

—கக. பொன்வண்ணத்தந்தாதி, கஉ.

"கூறுமின் ஈசனைச் செய்ம்மின்குற் றேவல் குளிர்மின்கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின் சிவனைச் செறுமின்செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின் அவலம் இவைநெறியா
ஏறுமின் வானத் திருமின் விருந்தாய் இமையவர்க்கே."

—கக. ,, எ0.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சம்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே."

—ரு. கூ0—எ. (கஉ)

இணைக்குற ளாசிரியப்பா

மேவிய புன்மயிர்த் தோகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் போதிந்த புண்ணோ புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்து
உள்ளிடை ஒழுகும் வழும்போ மேள்ளநின்
றூரும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ உடம்பிற்குள்
பிரியா தோறுக்கும் பிணியோ தெரியா
தின்ன தியானென் றறியேன் என்னை
எதினுந் தேடினன் யாதினுங் காணேன்
முன்னம்

வரைத்தனி வில்லாற் புரத்தை அழல்ஊட்டிக்
கண்படை யாகக் காமனை யொருநாள்
நுண்பொடி யாக நோக்கியண் டத்து
வீயா அமரர் வீயவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத் திருஅமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயில் எறிப்ப
எண்ணருங் கோடி இருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கைநா யகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலங் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்
நின்பெருந் தன்மையுங் கண்டேன் காண்டலும்
என்னையுங் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை யனைத்தையும் கண்டேன் என்னை
நின்னைக் காணு மாந்தர்
தன்னையுங் காணுத் தன்மை யோரே.

௧—௧௨. மேவிய...அறியேன்

(இ - ள்.) *அடியேன் உடம்பின்கண் காணப்படும் மிகவும் புன்மை வாய்ந்துள்ள இழிவான மயிர்க்கூட்டமோ? வம்மயிர் பரந்து நிறைந்துள்ள தோலினுடைய பரப்புத்தானோ? அத்தோலின் இடையே நுழைய விட்டு மூடிய புண்ணெனப்படும் இறைச்சியோ? அவ்விறைச்சிக்கு நடுவில் சுரக்கின்ற குருதி நீரோ? பற்பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு, இடையிடையே நிற்கும் எலும்புகள்தாமோ அவ்வெலும்புகளின் இடையில், மூடைநாற்றம் பொருந்திய மூளையின் தொகுதியோ, வழுவழுப்புக்கொண்டு உட்புறத்தில் ஒழுகுகின்ற கிணமோ, மெதுவாக நிலைபெற்று நகர்ந்து செல்லும் புழுக்களின் வரிசையோ, நீரினிடையாக வைத்த, மலத்தின் குப்பையோ, இறைச்சி எலும்பு முதலியவற்றை வைத்துக் கட்டியுள்ள, நரம்பினது கயிறோ, உடம்பினுள், நீங்காமல் வருத்துகின்ற நோய்களோ? இஃது இன்ன வகையென்று உணர்கிலேன்.*

(வி - ம்.) புன்மை-தாழ்வு; நுண்மை. பரவிய - பரந்த; நிறைந்த. பரப்பு - நிறைவு; வியாபகம். முடை - தீ நாற்றம். விழுது - நிணம்; திரட்சி. வழும்பு - ஒழுங்கு வரிசை. பிணி - நோய்.

வீட்டினுள் வாழும் ஒருவர் போன்று உடம்பினுள் வாழும் ஆருயிரும் வேறேயாம். மயிர்த்தொளைகள் மூன்றரைக் கோடி என்ப.

க௨—௨அ. என்னை...கங்கை நாயக

(இ - ள்.) எளியேனை அறிந்துகொள்ளாமல் எதிலும் தேடிப் பார்த்தேன்; எதனிடத்துங் கண்டுதேர்ந்திலேன் முன்னோர் ஊழியில் ஒப்பற்ற மேரு மலையினைத் தனிப்பெரும் வில்லாகக்கொண்டு திரியும் முப்புரத்தை அழலுக்கு உண்பித்து, மற்றோர் ஊழியில், நெற்றிக் கண்ணே நேரும் படையாக, மன்மதனை நீறாகும்படி திருவிழியால் நோக்கியருளி, பெரிய அண்டத்தில், இறவா நிலைபெற்ற தேவர்கள் இறந்துபடும்படி தோன்றிய தீயினுங்கொடிய கண்டாரைக் கொல்லும் பெருநஞ்சினைத் திருவமுதாக உண்டு, திருவாணை பெற்றுப் படைத்தலும் காத்தலும் ஆகிய தொழில்களைப் புரியும் அயனும் அரியுமாகிய இருபெருந் தேவர்களும் முறையே முடியினையும் அடியினையுந் தேடிக் காணாமல் அவர்கள் உடல் நடுங்கும்படி அவ்விருவர்களுக்கும் இடையில் அருவுருவ அனற்பிழம்பாம் பொற்றூணாய் ஓங்கி யுயர்ந்து, முனிவர் மார்க்கண்டர் பொருட்டுக் கூற்றுவனைத் திருவடியால் சினந்துதைத்துச் சந்தன மரங்களும், மகிழ மரங்களும் சூழ்ந்துள்ள பூங்காவில் கதிரவன் ஒளி செல்லாது ஒன்பது மணிகள் அரும்பிய புதிதாகிய வெயில், வீச, அளவிடற் கரிய, முனிவர் கூட்டங்களுக்குச் சிவ புண்ணியத்தை அருள் புரிந்து காக்கும் புண்ணியக் காவிரியாற் சூழப்படும் திருவிடைமருதூரைத் திருப்பதியாகக் கொண்டருள்பவனே! முதல்வியாகிய உமையம்மையாரை இடது பாகத்துப் பெற்றுத் திகழும் முதல்வனே, சலமகளாம் கங்கைக்குத் தலைவனே!

(வி - ம்.) வரை - மலை. நுண்பொடி - சாம்பல்; நீறு: வீயா - அழியாத; இறவாத. நிமிர்தல் - மேலோங்குதல். பாலன் - மார்க்கண்டேயன். காலன் - எமன். சந்தனம் - குழைத்த திருநீறு.

உடம்பினுள் காணப்படும் உறுப்புக்களுக்கும் உயிர் வேறாகவுள்ளது; ஆயினும் அவற்றுடன் பின்னிக் கிடக்கும் உயிர் அவற்றிடை நின்று தன்னைக் காண்பது முடியாத தொன்றாகும். நின்றுகொண்டிருக்கும் ஒருவன் தன் அடியின் கீழுள்ள நிலத்தைக் கண்ணாற் காண முடியாமை இதற்கொப்பாகும். ஆயினும், அவன் அந்த இடத்தை நீங்கிநின்று தான் முன்நின்ற இடத்தை நோக்கிக் காண்டலும் கூடும். அதுபோல் ஆருயிர்கள் ஆசான் திருவடியினைச் சார்ந்து அவனருளால் அவனுடன் கூடித் தன்னைக் காண்டலும் கூடும். இவ்வுண்மை வருமாறு :

“நாடியோ என்போ நரம்புசீக் கோழையோ
தேடி எனையறியேன் தேர்ந்தவகை—நாடியரன்
தன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணார்
என்னா மென அறிவார் இன்று.”

—சிவஞானபோதம், க. க—க.

உஅ—ருசு. நின்...தன்மையோரே

(இ - ள்.) தேவரீரது தெய்வத் தன்மை பொருந்திய தண்ணளி அடியேனுக்கு எளிதாகக் கைகூடுதலின் மாயையின் செறிந்த கூட்டத்தை அறிவினால் நீங்கித் திருவடி யுணர்வினை நின் திருவருளால் அடியேன் அடைந்தேன். அதனை அடைந்தபின், தேவரீருடைய பெருமையாகிய எண் குணங்களின் சிறப்பினையும் கண்டுணர்ந்தேன்; அங்ஙனங் கண்டஅளவானே, யான் எது என உணராது தேடிய என்னையும் கண்டேன்; எளியேனை ஒழிந்துள்ள பிறரையுங் கண்டேன். தேவரீர் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பதாகிய நும்பெரும் பரப்பினையுங் கண்டுள்ளேன்; அஃதாவது இறைவனே இயங்கு திணைப் பொருள், நிலைத்திணைப்பொருள் யாவற்றினும் நின் திருவருளாற்றல் நிறைந்து நின்றியக்கும் நீர்மையினையும் கண்டேன்; விளக்க விளங்கும் அறிவுக் குறைபாடாம் சிற்றறிவுடைய ஆருயிர்களையும், அக்குறைபாடில்லாது எல்லாவற்றையும் ஒருங்கேயுணர்வதாகிய பேரறிவு வாய்ந்த பேருயிராம் இறைவனையும் திருவருளால் முயன்று காணுதல் பெறாத மாந்தர், தன்னியல்பினையும் கண்டு கொள்ளும் தகுதியில்லாதவராவர்.

(வி - ம்.) மாயைப்படலம் - மாயைத்தொகுதி; மாயை மறைப்பு,

ஆணவமல வாற்றல் தன் தனிநிலையில் ஆருயிர்களின் அன்பறிவு ஆள்வினைகளைச் சிறிதும் விளங்கவொட்டாது முற்றுகமறைப்பது;உயிர் உடலுடன் கூடாத நிலையில் உண்டாந்தன்மை இதுவாகும். உயிர் உடலுடன் பொருந்திய பின் ஆணவமல ஆற்றல் அம்மாயையினைக் கொண்டு மாறுபாட் டறிவினைச் செய்யும். விளையாட்டு விருப்புள்ளான் ஒருவன் தன்னொத்த நண்பனை வீட்டிலும் வெளியிலும் விளையாட்டில் புகுத்துக் கல்வியில் நாட்டங்கொள்ள வொட்டாது நீக்குவன். பள்ளிக்கூடஞ் சென்ற பின்னும் அவனுடனிருந்து அவனை விளையாட்டிலேயே புகுத்திப் படிப்பை நன்கு கற்க வொட்டாது திரியச் செய்யும். இதுவே மேலதனுக் கொப்பு. இவ்வுண்மை வருமாறு :

"சித்தமாம் அவ்வி யத்தஞ் சிந்தனை யதுவுஞ் செய்யும்
புத்தியவ் வியத்தில் தோன்றிப் புண்ணிய பாவஞ் சார்ந்து
வத்துநிச் சயமும் பண்ணி வருஞ்சுக துக்க மோகப்
பித்தினின் மயங்கி ஞானக் கிரியையும் பேணி நிற்கும்."

—சிவஞானசித்தியார், உ. ரு—அ.

முதல்வன் திருவருளால் அவனைக் காண்டல் என்பது. அவன்றன் பெரு நிறைவினைக் காண்பதேயாம். அது வருமாறு :

"வளர்மதிக் கண்ணியி னானை வார்குழலா ளொடும் பாடிக்
களவு படாததொர் காலம் காண்பான் கடைக்கணிக் கின்றேன்
அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது
இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்."

—ச. ரு—கக. (கரு)

நேரிசை வெண்பா

ஓராதே அஞ்செழுத்தும் உன்னுதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே—யாராயோ
எண்ணுவார் உள்ளத் திடைமருதர் போற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம்.

(இ - ள்.) நெஞ்சமே, விழுமிய முழுமுதல்வனும் சிவபெருமானை ஓவாது உள்குதல் செய்யாமலும், தனித்தமிழ் மந்திரமாம் திருவைந்தெழுத்தினை (ஓதுமுறை நிற்குமுறை உணர்ந்து) கணிக்காமலும், நறுமணம் மிக்க பச்சிலைகளைக் கொண்டுவந்து போற்றிமந்திரம் புகன்று திருவடியிலிட்டுப் பூசைசெய்யாமலும் தூய நல்ல குளிர் நீரினைக் கொண்டுவந்து திருமுழுக்குச் செய்விக்காமலும், இடைவிடாது காதன் மிகுந்து உள்குவார்தம் தூய வுள்ளத்தின்கண் திருக்கோயில் கொண்டருளும் திருவிடைமருதூர்ச் செல்வனின் பொன் போலுந் திருவடியினை அடைவோம் என்று எண்ணும் அவ்வெண்ணம் தம்மை எந்நிலையினராக வைத்தெண்ணியோ ?

(வி - ம்.) ஓராது - உள்காது; தியானியாது. உன்னுதல் - நினைத்தல். கண்ணுதல் - உருப்போடுதல்.

பச்சிலை வழிபாடு எண்மையும் பயன்மிக வுண்மையும் உடையது. அவ்வுண்மை வருமாறு :

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே:"

—க0. க0௬. (கச)

கட்டளைக் கலித்துறை

[தலைவன் தலைவியது நலத்தைப் பாராட்டிக் கூறியது.]

நாமே இடையுள்ள வாறறி வாம்இனி நாங்கள்சொல்லல்
ஆமே மருதன் மருத வனத்தன்ன மன்னவரைப்
பூமேல் அணிந்து பிழைக்கச்செய் தார்ஒரு பொட்டும்இட்டார்
தாமே தளர்பவ ரைப்பாரம் ஏற்றுதல் தக்கதன்றே.

(இ - ள்.) இனிமேல் நாமாகவே இடை (இடுப்பு) யிருக்கும் வகையினை அறிவோம்; பிறர் உண்டெனவ அறியும்படி நம்மால் கூறவும் படலாம்; மருதவாணனது திருவிடை மருதூர் என்னும் திருப்பதியில் அன்னம் போன்ற நடை யமைந்த மாதரை, நறுமண மலர்களைத் தலைக்கணிந்து, அவரைப் பிழைக்கச்செய்தனர்; அழகிய ஒரு பொட்டினையும் நெற்றியின்கண் அணிந்தனர்; இயல்பாகப் பாரம் தாங்

காமல் தளர்ந்து வருந்தும் ஒருவரை மேலும் புதிய சுமையேற்றித் தளரச்செய்வது தகுதியும் அறமுறையும் ஆகாது.

(வி - ம்.) மேல் - மேலிடமாகிய தலை. பிழைக்கச்செய்தல்: ஈண்டுக் குறிப்பு மொழியாக மறைப்பொருள் தந்து நின்றது. அஃதாவது, இறத்தல். இஃது நலம் பாராட்டுதல் என்னும் துறை. இடை ஒடியுமாறு செய்யார் என்னும் உண்மை வருமாறு :

“ அகல்கின்ற அல்குற் றடமது கொங்கை யவையவநீ
புகல்கின்ற தென்னை நெஞ் சுண்டே யிடையடை யார்புரங்கள்
இகல்குன்ற வில்லிற்செற் றோன்றில்லை ஈசனெம் மானெதிர்ந்த
பகல்குன்றப் பல்லுகுத் தோன்பழ னம்மன்ன பல்வளைக்கே.”

—அ. திருக்கோவையார், ௪.

“ பொட்டணி யானுதல் போயிறும் பொய்போ லிடையெனப்பூ
ணிட்டணி யான்றவி சின்மல ரன்றி மிதிப்பக்கொடான்
மட்டணி வார்குழல் வையான் மலர்வண் டுறுதலஞ்சிக்
கட்டணி வார்சடை யோன்றில்லை போலிதன் காதலனே.”

—அ. திருக்கோவையார். ௩0௩.

“ அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசப்பிற்கு
நல்ல படாஅ பறை.”

—திருக்குறள், ௧௧௧௫. (௧௫)

நேரிசை ஆசிரியப்பா

அன்றினர் புரங்கள் அழலிடை அவியக்
குன்று வளைத்தெய்த குன்றாக் கொற்றவ
நுண்பொடி அணிந்த எண்தோள் செல்வ
கயிலை நடந்தனைய உயர்நிலை நோன்றாள்
பிறைசெறிந் தன்ன இருகோட் டொருதியில்
பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட் டிமையச் செல்வன்
மணியெனப் பெற்ற அணியியல் அன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசும் மயிலிளம் பேடை
கதிரொளி நீலங் கமலத்து மலர்ந்தன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்குந் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற

ஐய திருவயிற் றம்மைப் பிராட்டி
மறப்பருஞ் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையாள் உடைய உமையாள் நங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரைப் பனைக்கைபோந் தனைய
தழைசெவி எண்தோள் தலைவன் தந்தை
பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்த கோலகெழு கூர்வேல்
அமரர்த் தாங்குங் குமரன் தாதை
பொருதிடம் பொன்னி புண்ணியம் புரக்கும்
மருதிடங் கொண்ட மருத வாண
நின்னது குற்றம் உளதோ நின்னினைந்து
எண்ணருங் கோடி இடர்ப்பகை களைந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவ ராவின் கன்றெனத் திரியாப்
பாவிகள் தமதே பாவம் யாதெனில்
முறியாப் புழுக்கல் முப்பழங் கலந்த
அறுசுவை யடிசில் அட்டினி திருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று வெயிலின்வைத்து
ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ வொருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்றுகண் ணகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப
வெள்ளிடை வெயிலில் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த் திடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங் கன்றே.

௧—௧௮. அன்றினர்...கொழுந

(இ - ள்.) மாறுபட்ட முப்புரத்தாருடைய திரியும் கோட்டைகள் மூன்றும், தீயிடை வெந்து நீறாக, மேருமலையை வில்லாக வளைத்து எவிய பெருமையிற் குறையாத வெற்றிமிகு தலைவனே, திருவெண்ணீற்றினைத் திருமேனியிற் பூசியருளிய, எட்டுத் திருத்தோள்களுடைய

அளப்பரும் வளப்பஞ்சார் பெருஞ் செல்வனே; திருவெள்ளி மலை யானது நடந்தது என்று சொல்லும்படி உயர்வாய நிலையினையும் வலி யுடைய கால்களையும், பிறையினைச் செருகினது போன்ற இரண்டு கொம்புகளையும், ஒரு திமிலையும், பால் போன்ற வெண்மை நிறத் தினையும் சிவந்த கண்களையுமுடைய, பெருமையுள்ள விடையினை யூர்ந்து செல்லும் விழுப்பொருளே, பனிமலை யுச்சியின் செவ்விய கோடுகளையுடைய நீண்ட மரங்கள் நெருங்கிய மலைவேந்தன், மணி யென்று அருமையாகப்பெற்ற அழகுள்ள அன்னப் பறவையை ஒத்த நடையமைந்தவளும் கிளிப்பிள்ளையை யொத்த மொழி வாய்ந்தவளும், வெண்மையாகிய சிறிய முல்லையரும்பை யொத்த பல்வரிசைகளை யுடையவளும் குயில் போன்று இனிதாகப் பேசுகின்றவளும், மயில் போன்ற சாயலையுடையவளும், மிக்க ஒளியுடைய நீலமணி போன்ற நிறமுடையவளும், தாமரையினிடத்து மலர்ந்தது போன்ற, களித்த செவ்வரி பரந்த மானின்கண்கள் போன்ற கண்களையுடைய வளும் அமிழ்தம் சுரக்கின்ற கொங்கைகளை யுடையவளும் அக்கொங் களைத் தாங்கும் திருமார்பினையும், பூங்கொடியை ஒத்த இடையினையும் உடையவளும், எழுலகங்களையும் பலமுறை பெற்றருளிய அழகிய திருவயிற்றினை யுடையவளும் ஆகிய உலக அன்னையாகிய பிராட்டி யாரும் மறத்தற்கரிய சீர்த்திகளைச் செய்யும், எண்ணான் கறத்தினையும் வளர்த்தருளிய பெருஞ்செல்வத்தினை யுடைய பேராட்சியளும், எளி யேங்களை அடிமையாகக்கொண்டருளும் உமைப்பெருமாட்டியாகிய நங்கை, தெய்வத்தன்மை பொருந்திய கற்பினை வாய்ந்தவள் ஆகிய இளமை நீங்கா அன்னையாருக்குக் கணவனே!

(வி - ம்.) அன்றினர் - மாறுபட்டவர்; பகைவர். அழல் - தீ. குன்று - மலை; மேருமலை. கொற்றம் - வெற்றி. நுண்பொடி - திரு நீறு. நகை - பல். மதர் - களிப்பு. சிமயம் - உச்சி. வையம் - உலகம். ஐய - அழகிய. மடம் - இளமை,

அம்மை திருவருளால் முப்பத்திரண்டறம் வளர்த்த உண்மை வருமாறு:

"எண்ண ரும்பெரு வரங்கள்முன் பெற்றங்
கெம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி
மனைய றம்பெருக் குங்கரு ணையினால்
நண் ணும் மன் னுயிர் யாவையும் பல்க
நாடு காதலின் நீடிய வாழ்க்கைப்
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப்
பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்."

—கஉ. திருக்குறிப்புத்தொண்டர், எக.

கக—நக. பவள...பாவம்

(இ - ள்.) பனையினைப் போலும் கையினைக் கொண்ட பெருமை பொருந்திய பவளமலையானது வந்தது போலும் பரந்த திருச்செவி களையும், எட்டுத்திருத் தோள்களையுமுடைய தலைவனாகிய மூத்த பிள்ளை

யாருக்குரிய திருத்தந்தையானவன், செந்நிற மலர் போலும் கொண்டையினையுடைய, அழகிய சேவற் கொடியினையும் குருகு பெயர்க் குன்றம் என்னும் (கிரவுஞ்சமலை மாயைமலை) மலையினைத் தொளைத்த, கொலை தங்கிய கூர்மையாகிய வேலைத் தாங்கிய தேவர்களைக் காக்கும் குமாரக் கடவுளுக்குத் தந்தையானவன், கரைமோதுகின்ற வலிமை பொருந்திய காவிரியாற்றினால் காக்கப்படும் திருவிடைமருதூரை இடமாகக் கொண்டருளிய மருதவாணனே! நின் திருவருளின் குற்றம் சிறிதும் உளதோ. தேவரீரை நினைந்து நினைத்தற்கும் முடியாத பலகோடி இடரைத் தருகின்ற பகைகளை நீக்கிக் குறிக்கத்தக்க சினத்தினையுடைய நமனை, நம்மீது வர வொட்டாமல் வதைத்து, இறத்தலையும் பிறத்தலையும் புறக்கணித்துச் சிறப்புடன், காமதேனுவின் கன்றைப் போன்று மகிழ்வுடன் உலாவி வருதல் செய்யாத கொடிய. பாவிகளுடையதே பாவமாகும்.

(வி - ம்.) பனைக்கை - பனை போன்ற கை. பதாகை - பெருங்கொடி. வதையா - வதைத்து.

அறிவின் திருக்குறிப்பாக மூத்த நாயனாரும், ஆற்றலின் திருக்குறிப்பாக இளைய நாயனாரும் குறிக்கப் படுவர். இவ்வனைத்தும் இறைவன் திருவருளாற்றலான் நிகழ்வன.

நக—சந. யாதெனில்...நிழல்தீங் கன்றே

(இ - ள்.) அவ்வகையாகக் கூறியது என்னெனின்? பிளவு படாத சோற்றுடன் வாழை, மா, பலா என்கின்ற மூவகைப் பழங்கள் கலந்த, அறுவகைச் சுவையோடு கூடிய உணவு செம்மையாகச் சமைத்திருக்க, அதனை உண்ணவேண்டிய ஒருவன், அவ்வடிசிலையுண்டு பசி போக்காது, பசியுடன் வருந்தியிருத்தல் அவ்வுணவின் குற்றமன்றாகும். வெயிலிடை வைத்துக் குளிரும்படி செய்த தெளிந்த நீர், நறுமணப் பொருள்களையிட்டு வைத்திருக்க, உண்ணாத ஒருவன் நீங்காத நீர் வேட்கையுடன் விடாய்கொண்டிருப்பது, அத் தெள்ளிய நறுமலர்சேர்ந்த குடிநீரின் குற்றமன்றாகும். இடம் விரிந்து, தேனின் துளிகள் சிந்திப் பூக்கொத்துக்கள் நிறைந்த நந்தவன மிருப்ப பரந்த வெளியில், வெயிலின்கண், புள்ளிகளாக வெயர் வரும்ப, நடந்து செல்வானாகிய ஒருவன், மிக வருந்துதல் நிழலின் தீமையன்றாகும்.

(வி - ம்.) முறியா - பிளவு படாத; உடையாத; நுறுங்காத. புழுக்கல் - சோறு; திருவமுது. அட்டு - சமைத்து. மடுத்தல்—பருகுதல். மடா - பருகாமல். துறுமி - சேர்த்து. வெள்ளிடை-வெட்டவெளி.

உண்டியின் வகையும் சுவையின் பிரிவும் வருமாறு:

"கொண்டு வந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டு நாலு விதத்திலாறு சுவைத்திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டர் இச்சையில் அமுதுசெய்ய அளித்,
[துள்ளார்."

—கஉ. இளையான்குடிமாறர், ச.

தண்ணீர் பருகற்காஞ் செய்முறை வருமாறு :

"ஞாயிற்றின் ஒளி இயற்கைப் பொருளாகலானும் அவ்வொளியில் எழுவகை நிறங்களும் அடங்கி யிருத்தலானும் அந்நுண்ணிய நிறங்களை உடம்பின் உட்கருவிகளுக்கு ஏற்றுவதுதான் முறைமையா மென்றுணர்க. நல்லது, அதனை ஏற்றும்வகைதான் யாதோ எனின், பல நிறமுள்ள கண்ணாடிக் குப்பிகளில் தெளிவான நல்ல நீரை நிரப்பி வெயில் ஒளியில் வைத்து எடுத்து, அந்நீரைப் பருகிவந்தால் உடம்பின் உட்கருவிகளில் எந்த உறுப்பில் எந்த நிறம் குறைகின்றதோ அதில் அஃது ஏறி அதனைச் செம்மைப்படுத்தி உடம்பையும் வலிவு பெறச் செய்யும்.' (மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை (முதற் பகுதி) பக்கம் ௬௩—௬௪.)

இத்துணையும் இஞ்ஞான்றுள்ள அறிவியல் நூலார் கண்டுள்ள பேருண்மைகள், நம்முன்னோரால் பன்னூறாண்டுகளின் முன்னமே கையாளப்பட்டு வந்தன என்பது "வெயிலின் வைத்து ஆற்றிய தெண்ணீர்" என இதன்கண் வரும் (௩௫) தொடரான் உணரலாம்.

தண்ணீர்க் கொடையின் தனிச்சிறப்பு வருமாறு :

"அளவில்சனம் செலவொழியா வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய் உறுவேனிற் பரிவகற்றி
குளநிறைந்த நீர்த்தடம்போல் குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளமருவும் நிழல்தருதண் ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்."

—கஉ. அப்பூதி அடிகள், ௯.

ஒருவர் பள்ளிக்குச் சென்று படித்து அறியாமையைப் போக்கிக் கொள்ளாவிடின், அஃது அவர் குற்றமேயன்றி பள்ளியின் குற்றமன்று. அதுபோல் ஒல்லும் வகை முயன்று ஓவா உழைப்பு உழைத்து ஊதியம் பெறுவதற்குரிய களங்களில் சென்று நன்குழைத்து வயிறாவுண்டு பசியினைப் போக்கிக் கொள்ளாமல், வறுமையில் உழன்று அல்லலுற்று அலைவது அவர்தம் குற்றமேயன்றிக் களங்களின் குற்றமாகாது. இவைகளும் கடவுளை யறியாது கயவராய்த் திரிந்து பிறப்பு இறப்புகட்கு உட்பட்டுழலும் பேதைகட்கு ஒப்பாகும். வாழ்ந என்பது வாண எனமருவி நின்றது. (க௬)

நேரிசை வெண்பா

அன்றேென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றேன்றே டோவ்வா துரைத்தாலும்—என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத் திருக்கும்
மருதனையே நோக்கி வரும்.

(இ - ள்.) பகுத்துக் கையாளப்பட்டு வருகின்ற சமயங்கள் ஆறும் அன்று என்றும், இதுவே பொருள் என்றும், ஒன்றுடன் ஒன்று பொருந்தாமல் பொருளுண்மையின் உறுதிப்பாடு கூறினும், எக்காலத்தும், ஒப்பிலா ஒரு முதலாம் தனிப்பெரும்பொருள் தன்னையே

திருவருளால் உள்ளக்கண்கொண்டு நோக்கி உள்குவார்தம் மாசிலா மனக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் மருதவாணப் பெருமானையே நோக்கி முற்றும்.

(வி - ம்.) சமயங்கள் அகம் புறம் என இரண்டாகப் பகுக்கப் படும். அவை ஒவ்வொன்றும் அவ்வாறாகும். மேலும் அகச்சமயமும், அகச்சமயம் அகப்புறச்சமயம் என இருவகைப்படும். அதுபோல் புறச்சமயமும், புறச்சமயம் புறப்புறச்சமயம் என இருவகைப்படும். இவற்றின் விரிவெல்லாம சிவஞானசித்தியாரின் பரபக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகிய நூல்களிலும், சிவஞானபோதப் பேருரையின் கண் மாதவச் சிவஞான முனிவர் விளக்கியருளும், விளக்கங்களிலும் நன்கு காணலாம்,

பொதுவாக நால்வகைப் பிரிவின் தன்மைகள் வருமாறு :

இறையுண்மை யில்லார் இறையுயிரே என்பார்
இறைகோலம் போற்றியையில் லார். (கஎ)

கட்டளைக் கலித்துறை

நோக்கிற்றுக் காமன் உடல்பொடி யாக நுதிவிரலால்
தாக்கிற் றரக்கன் தலைகீழ்ப் படத்தன் சுடர்வடிவாள்
ஒக்கிற்றுத் தக்கன் தலையுருண் டோடச் சலந்தரனைப்
போக்கிற் றுயிர்பொன்னி சூழ்மரு தாளுடைப் புண்ணியமே.

(இ - ள்.) தூய காவிரியாற்றாற் சூழப்பட்ட திருவிடைமருதூரில் எளியேனை அடிமையாகக் கொண்டருளிய, புண்ணியவடிவினனாகிய சிவபெருமான், மன்மதன் உடலைச் சாம்பராகும்படி நெற்றிக் கண்ணால் நோக்கியருளியவரும், இலங்கை வேந்தனாகிய இராவணன் திருவெள்ளிமலையினை அசைத்தபோது அவனுடைய தலைகள் பத்தும், நிலத்தே படும்படி, தனது கூர்மை பொருந்திய திருவடிவிரல் நுனியால் சிறிது அழுத்தியருளினவரும் தக்கனுடைய சிவனை மறந்து செய்த வேள்வியினில் அத்தக்கன் தலை உருண்டோடும்படி வீரபத்திரரால் செய்தருளியவரும், கூர்மையான ஆழிப்படையினை வரைந்து காட்டி அடர்த்தருளியவரும் ஆகிய அருட்செயல்கள், அவரவர்க்கு நன்மை பயக்கத் தகுந்த நன்மை.

(வி - ம்.) தக்கன் வேள்வி தகர்த்த வுண்மை வருமாறு :

"தக்கனு ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியின் றுந்தீபற."

—அ. திருவுந்தியார், கூக. (கஅ)

நேரிசை யாசிரியப்பா

புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணி வேய்ந்த கைலை நாயக

காள கண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந
பூத நாத பெருவிடைப் பாக
வேத கீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தி யாகிப் பணைத்தமெய் யன்போடும்
நொச்சி யாயினுங் கரந்தை யாயினும்
பச்சிலை யிட்டுப் பரவுந் தொண்டர்
கருவிடைப் புகாமற் காத்தருள் புரியும்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை யுலகத்துப் பலபல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஒரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவரும்
காடும் மலையும் புக்குக் கோடையில்
கைம்மேல் நிமிர்த்துக் காலொன்று முடக்கி
ஐவகை நெருப்பின் அழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்
சடையைப் புனைந்துந் தலையைப் பறித்தும்
உடையைத் துறந்தும் உண்ணாது உழன்றும்
காயுங் கிழங்குங் காற்றுதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருந்தியும்
களரிலும் கல்லிலுங் கண்படை கொண்டும்
தளர்வுறும் யாக்கையைத் தளர்வித் தாங்கவர்
அம்மை முத்தி அடைவதற் காகத்
தம்மைத் தாமே சாலவும் ஒறுப்பர்
ஈங்கிவை செய்யாது யாங்கள் எல்லாம்
பழுதின்று உயர்ந்த எழுநிலை மாடத்தும்
செழுந்தாது உதிர்ந்த நந்தன வனத்தும்
தென்றல் இயங்கும் முன்றில் அகத்தும்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாவிக் கரையிலும்
மயிற்பெடை ஆலக் குயிற்றிய குன்றிலும்
வேண்டுழி வேண்டுழி ஆண்டாண் டிட்ட

மருப்பின் இயன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை அமளி அணைமேற் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்
பட்டினுள் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை யருகாக் கோட்டைகள் பரப்பிப்
பாயல் மீமிசைப் பரிபுரம் மிழற்றச்
சாயல் அன்னத்தின் தளர்நடை பயிற்றிப்
பொற்றோ ரணத்தைச் சுற்றிய துகிலென
அம்மென் குறங்கின் ஒம்மென் கலிங்கம்
கண்ணும் மனமுங் கவற்றிப் பண்வர
இரங்குமணி மேகலை மருங்கிற் கிடப்ப
ஆடர வல்குல் அரும்பெறல் நுசுப்பு
வாட வீங்கிய வனமுலை கதிப்ப
அணியியல் கமுகை அலங்கரித் ததுபோல்
மணியிய லாரங் கதிர்விரித் தொளிர்தர
மணிவளை தாங்கும் அணிகெழு மென்தோள்
வரித்த சாந்தின் மிசைவிரித் திட்ட
உத்த ரியப்பட் டொருபால் ஒளிர்தர
வள்ளை வாட்டிய ஒள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தரளம் நிரைத்தாங்
கொழுகி நீண்ட குமிழொன்று பதித்துக்
காலன் வேலுங் காம பாணமும்
ஆல காலமும் அனைத்துமிட் டமைத்த
இரண்டு நாட்டமும புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை யலங்கல் குழல்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்ந்தும்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தும்
அறுசுவை யடிசில் வறிதினி தருந்தா
தாடினர்க் கென்றும் பாடினர்க் கென்றும்
வாடினர்க் கென்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசின் நல்லென தொடையிற் சேர்த்தியும்

ஐந்து புலன்களும் ஆர ஆர்ந்து
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந் தோங்கி
இவ்வகை இருந்தோ மாயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த
முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை யன்றே என்னெனில்
வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லேபோல்
நலத்தின் வாழார்நின் நாமம்நவின் றோரே.

க—கஉ. புண்ணிய...திரிபுராந்தக

(இ - ள்.) புண்ணிய வடிவினனாகிய கடவுளே! முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப்பழம் பொருளாகிய முன்னோனே, அன்றலர்ந்த கொன்றை மலர்களாலாகிய மாலையினைச் சூடியருளிய, திருக் கயிலைக்குத் தலைவனே, பெருநஞ்சடக்கிய திருக்கண்டத்தை உடையவனே, திருமுருகப் பெருமானைப் பெற்ற ஒளி பொருந்திய செவ்வரி படர்ந்த நீண்ட திருக்கண்களையுடைய, மலைமகளுக்குக் கொழுநனே, அனைத்துயிர்கட்குந் தலைவனே, தீமையொடு போர் புரியும் தன்மை வாய்ந்த விடையினை ஊர்ந்தருள்பவனே, மறையின் இனிய பண்மயமாய் விளங்குபவனே, தேவர்களுக்குத் தலைவனே, வீடுபேற்றிற்கு முதல்வனே, என்றும் பொன்றா முதற்பொருளே, பத்தியுடன், கிளைத்த உண்மையாகிய அன்பினுடன் நொச்சியிலையாயினும் கரந்தை இலையாயினும் பச்சிலையாகப் போற்றி போற்றி என்னும் தமிழ்மந்திரம் புகன்று அருச்சித்து வணங்கித் தொழும் அன்பர்கள்—அடியார்கள் கருவில் நுழையாதவாறு காத்தருள்செய்கின்ற திருவிடை மருதூரைத் திருப்பதியாகக் கொண்டருளியவனே, முப்புரத்தை எரிசெய்தவனே!

கந—உஅ. மலர்தலை...ஒறுப்பர்

(இ -ள்.) பரந்த இடத்தையுடைய நிலவுலகத்தே பலவகைப்பட்ட மாந்தர், அருந்தவ மிருந்து ஆண்டவன் திருவருளால் பெற்றெடுத்த மக்களையும், அதேபோல் ஆண்டவன் திருவருளால் வழிக்குத் துணையாய் வாய்ந்த வாழ்க்கைத் துணையாம் மனையாளையும், சூழ இருந்து காத்துத் துணை புரியும் சுற்றத்தாரையும் நீங்கி அன்பியல் அருளியல் ஆகிய இரண்டற்கும் நிலைக்களமாகிய மனையையும் துணைப் பொருளாகிய உடைமையையும் விட்டு நீங்கி நினைத்தற்கும் அருமையாகிய முல்லைத் திணைக்காடுகளிலும் குறிஞ்சித் திணைக்குன்று முதலிய மலைகளிலும் சென்று, கடுமையான கோடை காலத்துக் கைகள் இரண்டினையும் மேலே உயர்த்திக்கொண்டு, ஒரு காலினை முடக்கிக்கொண்டு

ஐந்து வகையாகச் சொல்லப்படும் தீயின் நடுவில் நிலையாக நின்று தவஞ் செய்து மழைக் காலத்தும் பொறுக்கலாற்றாத பனிக்காலத்தும் குளிர்ந்த நீரில் மூழ்கி நெடுநேரம் இருந்தும், சடையை முடித்தும், தலையிலுள்ள மயிர்களைப் பறித்தும், உடுக்கும் உடையினை நீக்கியும், வயிறுகாய் பசியினுக்கு உணவு முதலியவைகளை உண்ணாது கிடந்து வாடியும், நாடோடியாக எங்கணும் திரிந்தும், பழுக்காத காய்களையும், கிழங்குகளையும் காற்றால் உதிர்க்கப்பட்ட சருகுகளையும், காற்றினையும், தண்ணீரினையும், வாய்க்கு எளிதாகக் கிட்டுவனவும் ஆகியவற்றை உண்டும், உவர்விளையும் களர் நிலத்திலும், பாறை நிலத்திலும், கிடந்து உறங்கியும், தளரும் இயல்பு வாய்ந்த உடம்பினை, வலிந்து தளர்வுறச் செய்து, அந்நல்லோர், வீடுபேற்றினை அடைவதற்காகத் தம்மைத்தாமே அக்காலங்களில் கண்டார் வருந்தும் படி கொடுமையாக மிகவும் வருத்திக்கொள்வர்.

(வி - ம்.) ஒரீஇ - நீங்கி. அழுவம் – நடு. கண்படை - கண் படுத்தல்; தூங்குதல். அம்மை - வீடுபேறு. சாலவும் - மிகுதியும். ஒறுப்பர் – தண்டிப்பர்.

ஐவகை நெருப்பு: க. காட்டுத்தீ, உ. நாட்டுத்தீ, ௩. வீட்டுத்தீ, ச. மோட்டுத்தீ, ரு. ஆட்டுத்தீ என்பனவாம். இவற்றை முறையே ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணாக்கினி, பகலோன், ஆவி எனவுங் கூறுப. இவ் ஐவகைத் தீயின் குறிப்புணர்த்தும் திருமாமறைத் திருத்தாண்டகத்தாம் போற்றித் தனித்தமிழ் மந்திரம் முறையே வருமாறு :

"கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

"ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி"

"ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி"

"காலை முளைத்த கதிரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

"கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

உக—சந. ஈங்கிவை...பாயல்மீமிசை

(இ - ள்.) தேவரீன் அடியோங்களாகிய யாங்களெல்லாம், இவ்வுலகத்து இவ்வகைப் பொருந்தாச் செயல்களைச் செய்ய விரும்பாமல், சிற்பநூற்குற்றம் சிறிதும் இல்லாமல் உயர்ந்துள்ள ஏழு அடுக்குகள் அமைந்த மாடம் பொருந்திய வளமனைக்கண், அழகிய பூந்தாள்கள் உதிர்ந்துள்ள நந்தன வனமாகிய பூங்காவிலும், இனிய தமிழ்மணங் கமழும் தென்றற்காற்று உலாவுகின்ற நிலாமுற்றத்திலும் கெடாத ஓவிய மண்டபங்களிலும், தாமரை மலர்கள் மலர்ந்த அலைகளையுடைய தடாகத்தின் கரையிலும், பெண்மயில்கள், களிப்புடன் அகவ, செய்

வித்த செய்குன்றிலும் விரும்பியவாறெலாம் அவ்வவ் விடங்களில் வைத்துள்ள யானைக் கொம்புகளால் ஆக்கப்பட்ட ஒளியுள்ள அரிமாக்களால் சுமக்கப்பெற்ற கட்டிலின்மீது விரித்து வைக்கப்பட்டுள்ள ஐவகைப் படுக்கையாலாகிய அணைகள், மேலெழுந்து விளங்க, குளிர்ந்த மலர்கள் மணங்கமழும், வெள்ளையாகிய மெல்லிய ஆடையினை விரித்து, பட்டின் உறையுள்ளிட்ட ஆய்ந்தெடுத்த நுட்பமாகிய பஞ்சின் நீண்ட அணைக்கு அருகில், தலையணைகளைப் பரப்பி, படுக்கையின் மீது,

(வி - ம்.) பழுது – குற்றம். தண்டா - குறையாத. தரங்கம் - அலை. வாவி - தடாகம். மடி - ஆடை. பதம் - ஆய்ந்தெடுத்த. கொட்டைகள் - தலையணைகள்.

ஐவகை அமளி வருமாறு :

"சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம்
உறுதூவி சேக்கையோ ரைந்து."

"மயிர்ச்சேணம் பஞ்சுமெத்தை வண்படாந் தூவி
பயிற்றுந்தண் வீப்பாய் பஞ்சசயனம்."

—பிங்கலம், கஅங.

சரு—கச. பரிபுரம்மிழற்ற...ஆகந்தோய்ந்தும்

(இ - ள்.) அடியிற் பூணும் அழகிய சிலம்பு ஒலிசெய்ய, அசைந்த நடையினைப் பழக்கிப் பொன்னின் இயன்ற தோரணத்தினைச் சுற்றியுள்ள துகில் என்று சொல்லும்படி, அழகிய மெல்லிய தொடைகளில், ஓம்மென்னும் ஓசை தரும் பட்டாடை கண்ணினையும் மனத்தினையும் தன்வயப்படுத்தி அழகு செய்ய, ஒலிக்கின்ற மணிகளாலாகிய மேகலையணியும் முழுவதும் தங்கிய, ஆடுகின்ற அரவினை யொத்த பிட்டிப் பக்கமும், பெறுதற்கு அருமையாகிய இடுப்பையும், வாட்டும்படி பருத்த அழகிய முலைகள், பெருக்க, அழகு பொருந்திய பாக்கு மரத்தினை, அழகுபெற ஒப்பனை செய்தது போன்று மணிகள் பதித்த வடங்கள் ஒளிக்கதிர்களை விரித்து விளக்கஞ் செய்ய, அழகிய சங்கினை யொத்த கழுத்தினைத் தாங்குகின்ற அழகுள்ள மெல்லிய தோளில், அரைத்த சந்தனக் குழம்பின் மேல் பரவ அழகுபடுத்திய, மேலாடையாகிய புடைவை ஒரு புறத்து விளங்க, வள்ளைத்தண்டை வாடச் செய்த ஒள்ளிய இரண்டு காதுகளுடன், பவழத் துண்டின் அருகாக முத்துக்களை முறையாக வைத்த அவ்விடத்து மேலேறி நீண்டிருக்கின்ற குமிழம்பூ ஒன்றினைப் பதிய வைத்து எமனது வேற்படையும், மன்மதனுடைய அம்பும், ஆலகாலம் எனப்படும் கண்டாரைக் கொல்லும் பெருநஞ்சும், வேறுள்ள நஞ்சுகளையும் ஒருங்கு கூட்டி அமைத்து வைத்துள்ள இரண்டு கண்களும், பிறழ்ந்து கடையில் ஒளிசெய்ய, நிறை மதியாம் திங்களைப்போன்று குற்றமற்ற முகம் விளங்கவும் புதிய நறுமணந்தங்கிய மலர்மாலை கூந்தலில் விளங்கவும் காணப்படும் வனப்பு அமைந்த இனிய சொற்களையுமுடைய பெண்களின், இனிய உடம்பினைக் காதலால் தழுவிக் கூடியும்,

(வி – ம்.) பரிபுரம் - சிலம்பு. குறங்கு - தொடை. கலிங்கம் - பட்டாடை. நுசுப்பு - இடை; இடுப்பு. கதிப்ப - பெருக்க. கமுகு—

பாக்கு மரம். பண்-இனிமை. வளை-சங்கு. உத்தரியம் - மேலாடை. ஆகம் - உடம்பு. பூங்குமிழ் ஒப்பு மூக்குக்குக் கூறும் உண்மை வருமாறு :

"திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லைக் [தெய்வ
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண் டோங்கு
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந் [தே.'
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்ற

—அ. திருக்கோவையார், க.

கூடு—அக. சின்னம்...நாமம் நவின்றோரே

(இ - ள்.) சிறிய தட்டுமுட்டுக்கள் பரப்பியுள்ள பொன்னு லாகிய எனத்து, ஆறு சுவையோடு கூடிய திரு அமிழ்தை வாளா விருந்து உண்டு பசி போக்காது கூத்துக் கலையை வளர்த்துக் குளிர் தமிழ் வளர்க்கும் கூத்தாடுகின்றவர்க்கும், பண்ணொடு பாடி இசைக் கலை வளர்க்கும் பாணர்க்கும், எவ்வகையானும் வாட்டமுற்று வருந்தும் வறியர்க்கும் வேறுபாடு காட்டுதலாகிய வரைதல் எனப்படும் விலக்குதல் செய்யாது கைம்மாறு கருதாது வழங்கியும், சந்தனம் முதலிய நறுமணப் பொருள்களை நலமுறப் பூசியும், அணியத்தக்க அணிகளை அணிந்தும், ஆடைகளில் உயர்ந்தவற்றை வகைபெற உடுத்தும், ஐம்பொறிகளும் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் புலன்களை நன்கு நுகர்ந்தும், அருந்தவப் பேற்றால் ஆண்டவனால் அளித்தருளப்பட்ட மக்களும், பற்றற்ற கண்ணும் பழைமை பாராட்டும் சுற்றத்தாரும் மனங்களித்து வளர்ந்து இத்தகைய பெருங்களிப்புடன் இனிமையாக வாழ்ந்திருந்தோமாயினும், அக்களிப்புடன் தேவரீர் அருளும் சிறப்பும் வனப்பும், யாப்புட்பட்டுழலும் நடுவாம் ஆருயிர் நிலையும், அவற்றை நடத்தும் நடப்பும், மறைப்பும் மறைப்பின் ஒழிப்பும் ஆகிய எல்லாமாம் பெரும் பொருட் கிளவியாம் செந்தமிழ்த் திருவைந் தெழுத்தாம் திருமாமறையினை, வாயினாற் சிவஞ் செய்தலை மறவாமல், உள்ளத்தினை தேவரீரிடத்து ஓவாது செலுத்தலின், விழுமிய முழு முதல்வனும் இறைவனே! திருவடிப் பேறும் அம்மை யென்னும் பேரின்பப் பெருவாழ்வினையும் இழந்திலோம் என்க. அத்தகைய இறவாத வீடுபேறென்னும் சிறப்பினை எய்தும் அத்திறம், தேவரீ ருடைய திருவருட் சிறப்பன்றோ! அஃது எங்ஙன மென்னின், வலிமை யமைந்த ஒருவன் மிகுந்த முயற்சியுடன் வானத்தின்கண் கல்லை விட்டெறியினும் வலிமையில்லாத மற்றொருவன் வலிகொண் டெறியாமல் கல்லை எளிதாக எறியினும் நிலத்தின்கண் வீழ்தலி னின்றும் தவறாத கல்லினைப்போல், நின் சிறப்புத் திருப்பெயராம் "சிவயநம" என்னும் தனித் தமிழ்த் திருமந்திரம் ஓதி வழிபட்டோர், அம்மையாகிய திருவடிப் பேறென்னும் நன்னலத்தின் நின்றும் நீங்கார். (சிவஞ் செய்தல் - செபஞ் செய்தல்.)

(வி - ம்.) மக்கட்பேறு பெருந்தவப் பேறு என்னும் உண்மை வருமாறு :

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

—திருக்குறள், சுக.

" மனையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்
அனையதிலை தலைநின்றே ஆடியசே வடிக்கலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார்."
—கஉ. சம்பந்தர், கக.

"நலத்தின் வாழார்நின் நாமம் நவின் றோரே." என்பதன் உண்மை வருமாறு :

" இன்னங் கேண்மின் இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துடன் எத்துவார்
மன்னும் அஞ்செழுத் தாகிய மந்திரம்
தன்னி லொன் றுவல் லாரையும் சாரலே."
—ஞ. கஉ—க.

" உள்ளம் உள்கி உகந்து சிவனென்று
மெள்ள வுள்க வினைகெடும் மெய்ம்மையே
புள்ளி ளுர்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே."
—ஞ. எக—அ.

" அஞ்செழுத்தாகிய மந்திரம் தன்னிலொன்று" என்பது 'சிவ' என்பதாம். சிவ என்பது இரண்டெழுத்தாகக் காணப்படினும் முறையே உயிரும் உடலும் போல் பிரிக்கப்படாத ஒன்றாகவே கருது தல் வேண்டும். வ என்பது சிவனுக்குத் திருமேனியாம் திருவருளைக் குறிப்பதாகும்.

சி என்னும் எழுத்தில் சகர மெய்யும், அகர இகர உயிர்களும் கலந்துள்ளன. சகர மெய் திருவடியைக் குறிப்பதாகும். அஃதாவது சரண் என்னும் தமிழ்ச் சொல்லின் முதலெழுத்து சகரம். இச்சரண் என்பது அரண் என்னும் சொல்லடியாகத் தோன்றியது. இதில் கலந்துள்ள அகரம் அவன் என்னும் சொல்லின் முதலெழுத்து. அவன் என்னும் சேய்மைச் சுட்டுச் சிவன் என்பதைக் குறிக்கும். அது போல் இகரம் இவன் என்னும் சொல்லின் முதலெழுத்து. இவனென்பது ஆருயிர்களைக் குறிக்கும் குறிப்பாகும்.

இவ் வுண்மை வருமாறு :

" அவனிவ னான தவனருளாலல்ல
திவனவ னாகானென் றுந்தீபற
என்றும் இவனே[1] யென் றுந்தீபற."
—திருவுந்தியார், ௩க.

சாருந் திருவடியே தக்க சரணமெய்
நேரும் சகரமெய்மேல் நீடகரம்—ஓரின்

---

1. 'ஒன்றலா'. சிவஞானபோதம், க. ௩—க.
,, 'அஞ்செழுத்தால்.' ,, கூ, ௩—க.

அகரம் சிவபெருமான் ஆங்கார் இகரம்
பகருமுயிர் முப்புணர்ப்பாம் பண்பு.

அன்பதனுல் ஒன்ரும் அறிவின்பத் தால்வேரும்
முன்பதனுல் துய்ப்புடனும் முன்.

முப்புணர்ப்பு: ஒன்ருய் வேருய் உடனுய்ப் புணரும் மெய்ப் புணர்ப்பு. இதுவே அத்துவித மென்னும் சொல்லுக்கு உண்மைப் பொருளாகும்.

அன்பின் குறிப்புச் சகரம். அறிவின் குறிப்பு அகரம். ஆள்வினையின் குறிப்பு இகரம். முன்பு - ஆற்றல்; தொழில். (கக)

நேரிசை வெண்பா

நாமம்நவிற் ருய்மனனே நாரியர்கள் தோள்தோய்ந்து
காமம் நவிற்றிக் கழிந்தொழியல்—ஆமோ
பொருதவனத்து ஆனையுரி போர்த்தருளும் எங்கள்
மருதவனத் தானை வளைந்து.

(இ - ள்.) நெஞ்சமே! போர் செய்யும் வேட்கையினை மிகுதியாக்கொண்ட, ஆனைமுக அசுரனைக் கொன்று அவ்வானையின் தோலினை உரித்துப் போர்த்துத் தேவர்களுக்கு அருள் புரியும், எங்களால் தொழப்படும் திருவிடைமருதூரின்கண் எழுந்திருளியிருக்கும் சிவபெருமானைப் பணிந்து அவன் திருப்பெயராம் திருவைந்தெழுத்தில் ஒன்றை கூறித் தொழுகின்றிலை; பெண்களுடைய தோளில் அழுந்தி காமம் பெருகுவதற்கு வேண்டிய மதம் பிறக்கும் சொற்களைப் பேசி வாழ்நாளை வீணுளாகப் போக்கி மாண்டொழிதல் நற்செயலாகுமோ? (ஆகாதென்றபடி)

(வி - ம்.) நாமம் - பெயர். நாரியர் - பெண்கள். தோய்தல் - அழுந்தல். பொரு - போர். தவனம் - வேட்கை; ஆசை; அவா. உரி - தோல்; உரிக்கப்பட்டது. வளைந்து - பணிந்து.

சிவபெருமான் திருத்தொண்டினுக்கே தம்மை ஒப்புவிக்கும் செம்மை வருமாறு:

"ஓதவன் நாமம் உரையவன் பல்குணம் உன்னைவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன் வாழ்க்கை திருந்தச்சென்று
மாதவ மாகிடு மாதவ மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்னுன் அதுகொண் டொழிஇனி ஆரணங்கே."
—கக. சேரர், பொன்னவண்ணத்—இசு.

"கூறுமின் ஈசனைச் செய்ம்மின்குற் றேவல் குளிர்மின்கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின் சிவனைச் செறுமின்செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின் அவலம் இவைநெறியா
ஏறுமின் வானத் திருமின் விருந்தாய் இமையவர்க்கே."
— ,, எக. (உ0)

கட்டளைக் கலித்துறை

வளையார் பசியின் வருந்தார் பிணியின் மதனன்அம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில் லார்இப் பிறப்பினில்வந்
தளையார் நரகினுக் கேன்கட வார்போன் னலர்ந்தகோன்றைத்
தளையான் இடைமரு தன்னடி யாரடி சார்ந்தவரே.

(இ - ள்.) பொன்போல் விரிந்த கொன்றைமாலை அணிந்தவனும் திருவிடைமருதூரென்னும் திருப்பதியினை திரு இடமாகக் கொண்டருளியவனும் ஆகிய சிவபெருமானின் திருவடிக்கண் மிக்க காதல் பூண்டு ஒழுகும் மெய்யடியார்களின், திருவடி சேர்ந்தவர் வயிற்றுப்பசி தீர்தற்பொருட்டுப் பிறர்பாற் சென்று இரந்து வேண்டி வணங்குதல் செய்யார். எவ்வகை நோயினாலும் நொந்து வருந்துதல் கொள்ளார். மன்மதனுடைய ஐவகைப் பாணங்களிற் பட்டு ஒருகாலும் வருந்தார்; பிறர் பொருள்களைக் கண்டு தமக்கு அவ்வகைச் செல்வங்கள் அமைய வில்லையே என்று எண்ணி உள்ளம் இளைத்து உடல் மெலிந்து போகார். பிறப்பினில் வந்த அத்தொண்டர் இவ்வகையான வருந்துதல் ஏதுங் கொள்ளாமையால் ஏனையோர் தீவினைப் பயன் துய்த்து வருந்தும் நரகத்துக்கு இயைபின்மையின், அதற்கு எவ்வகைக் கடமைப்பட்டுள்ளார்?

(வி - ம்.) வளைதல் - வணங்குதல். பிணி - நோய். அளைதல் - சேர்தல்.

சிவபெருமான் திருவடியைப் பேணாதவர் உலகியலில் எத்துணைப் பெரியராயினும் அடியாரால் மதிக்கப்பெறார் என்னும் உண்மை வருமாறு:

"பிறப்புடையர் கற்றோர் பெருஞ்செல்வர் மற்றும்
சிறப்புடையர் ஆனாலும் சீசீ—இறப்பில்
கடியார் நறுஞ்சோலைக் காளத்தி ஆள்வார்
அடியாரைப் பேணா தவர்."

—கக. நக்கீரர்—கயிலை—க0.

மெய்யடியார் இறப்பதனுக்கு ஒருபோதும் வருந்தார். சுமை எடுத்து வருவார் சுமையை உடையவர்பால் ஒப்புவிக்க ஒரு காலமும் துன்புறார்; சினமுங் கொள்ளார்.

பிறப்புச் சிவபெருமான் திருத்தொண்டுக்குத் திருவருளால் அமையுமாயின் மெய்யடியார்கள் "எடுத்த பொற் பாதமுங் காணப் பெற்றால், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்னும் மெய்ம்மையால் பிறப்பினுக்கு அஞ்சார்; இது நன்கு கற்குங் கருத்துடையோர் பள்ளியிற் சேர்வதற்கு அஞ்சாது மகிழ்வதோடொக்கும். இதுபோல் நன்கு கற்ற மாணவர் பள்ளியினின்றும் நீங்கிப் பொதுநலத் தொண்டின் பொருட்டு வெளியேறுங்காலும் மகிழ்வே அடைவர். அதுபோல் மெய்யடியார்களும் "ஆவியும், உடலும், உடைமையும்" ஆண்டவன்பால் ஒப்புவித்து அடிமையாக அகமிக மகிழ்வர்.

இவ்வுண்மை வருமாறு:

“யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனேஎம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே.”

—அ திருச்சதகம். ௧௨. (௨௧)

நேரிசை யாசிரியப்பா

அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம்
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வம்
மூலமும் நடுவும் முடிவும் இகந்து
காலம் மூன்றையுங் கடந்த கடவுள்
உளக்கணுக் கல்லா தூன்கணுக் கொளித்துத்
துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறும்புத் துளையின் இருசெவிக் கெட்டா
துறுப்பில்நின் றெழுதரும் உள்ளத் தோசை
வைத்த நாவின் வழிமறுத் தகத்தே
தித்தித் தூறுந் தெய்வத் தேறல்
துண்டத் துளையிற் பண்டை வழியன்றி
அறிவில் நாறும் நறிய நாற்றம்
ஏனைய தன்மையும் எய்தா தேவற்றையும்
தானே யாகி நின்ற தற்பரன்
தோற்றுவ தெல்லாந் தன்னிடைத் தோற்றித்
தோற்றம் பிறிதில் தோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினும்
இருள்விரி கண்டத் தேக நாயக
சுருதியும் இருவருந் தொடர்ந்துநின் றலமர
மருதிடங் கொண்ட மருத மாணிக்க
உமையாள் கொழுந ஒருமூன் றாகிய
இமையா நாட்டத் தென்தனி நாயக
அடியேன் உறுதுறை முனியாது கேண்மதி
நின்னடி பணியாக் கன்மனக் கயவரொடு
நெடுநாள் பழகிய கொடுவினை ஈர்ப்பக்
கருப்பா சயமெனும் இருட்சிறை யறையில்
குடரேன் சங்கிலி பூண்டு தொடர்ப்பட்டுக்

கூட்டுச் சிறைப்புழுவின் ஈட்டுமலத் தழுந்தி
உடனே வருந்தி நெடுநாள் கிடந்து
பல்பிணிப் பெயர்பெற் றல்லல் படுத்தும்
தண்ட ளுளர் மிண்டிவந் தலைப்ப
உதர நெருப்பிற் பதைபதை பதைத்தும்
வாதமத் திகையின் மோதமோத் துண்டும்
கிடத்தல் நிற்றல் நடத்தல் செல்லா
திடங்குறை வாயிலின் முடங்கி இருந்துழிப்
பாவப் பகுதியில் இட்டுக் காவல்
கொடியோர் ஐவரை ஏவி நெடிய
ஆசைத் தளையில் என்னையும் உடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக் குழன்றும்
பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வெளவியும்
பரியா தொழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியும்
ஐவருங் கடுப்ப அவாவது கூட்டி
ஈண்டின கொண்டு மீண்டு வந்துழி
இட்டுழி யிடாது பட்டுழிப் படாஅது
இந்நாள் இடுக்கண் எய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடுநெறி காணேன்
நின்னை யடைந்த அடியார் அடியார்க்
கென்னையும் அடிமை யாகக் கொண்டே
இட்ட பச்சிலைகொண் டோட்டி நன்கறிவித்
திச்சிறை பிழைப்பித் தினிச்சிறை புகாமல்
காத்தருள் செய்ய வேண்டும்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே.

க—சச. அடிசார்ந்...தற்பரன்

(இ-ள்.) தேவரீருடைய திருவடியினைக் காதலாற் கைகூப்பித் தொழுது அடைந்தவர்க்கு, என்றும் பொன்றாப் பேரின்பத்தினை முற்றாகக் கொடுத்த இடத்தும், குறைவுபடாத பேரின்பப் பெருஞ் செல்வமுடையவனே, முதலும், நடுவும், கடையும் இல்லாத, இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலங்களையும் கடந்த தனிப் பெருங் கடவுளே, அறிவானறியும் நோக்கமாகிய மெய்யுணர்வு நோக்கிற்

கன்றி, நிலையிலா உலகப் பொருள்களைக் காண்டற் கமைந்த நிலையிலா உடம்பின்கண்ணுள்ள கண்களுக்குத் தோன்றாமல் அப்பாற் பட்டு, அசைவின்றி, ஓங்கியுள்ள, விளக்கமிக்க சுடர் நிறைந்த பேரொளியானவன், எறும்பினது தொளையைப் போலும் இரண்டு செவிகளுக்கும் எட்டாது, உறுப்பின்பால் படாமல், மனத்தின்கண் உண்டாம் ஓசை ஒலியாய வடிவினன்; பொருள்களில் சுவையினை அறியும்படி படைக்கப்பட்ட நாவினது வழியை அதன் உரிமை தோன்றச் சுவைக்காது நீக்கி மனத்தின்கண் இனித்துச் சுரக்கின்ற தெய்வத் தன்மையுள்ள தேன், மூக்கினது தொளையிடத்துள்ள பழையவழி யொழிந்து, உணர்வின்கண் மணந்துகொண்டிருக்கும் நன்மை தங்கிய நல்ல மணப்பொருள், மற்றமூலப் பகுதியின்கண்ணுள்ள முக்குணங்களும் தம்மை யடையாமல், இயங்குதிணை, நிலைத்திணை என்னும் உலகப் பொருள்கள் அனைத்தினையும், தானே படைத்தருளி, அப்படைப்பினால் இளைப்புறாது நிலைபெற்ற தானே விழுமிய முழு முதலாகிய மேலோனே!

(வி - ம்.) எறுப்புத் தொளை - எறும்புத்தொளை. எறும்பு, எறுப்பெனத் திரிந்தது. துண்டம் - மூக்கு.

கரு—உந. தோற்றுவ...கேண்மதி

(இ - ள்.) படைக்கப்படவேண்டிய எல்லாவற்றையும், தன் திருவருட்பெருவெளியாகிய நிலைக்களத்தினின்றும் உண்டாகும்வகை செய்தருளி மற்றப் பொருள்களினிடத்துத் தன்னைக் காட்டுதல் செய்யாத கடவுள்; (நிலத்தினை நிலைக்களமாகக் கொண்டு) பயிர் முளைத்துத் தோன்றுகின்றது. ஆயினும் அம்முளையின்கண் நிலத்தின் இயல்பு தோன்றுவதில்லை; அதுபோல் படைக்கப்பட்ட பல பொருள்களிடத்தும் இறைவன் வெளிப்படத் தோன்றுவானல்லன். விரிந்த திருச்சடையின்கண், வெண்மையாகிய பிறைத்திங்கள் தங்கியிருப்பினும், இருள்பரந்த திருக்கண்டத்தினைக் கொண்டிருக்கின்ற ஒப்பில்லாத ஒரு தனிப்பெரு முதல்வனே! வேதங்களும், அயன்மால் ஆகிய இருவர்களும் முறையே முடியையும் அடியையும் தேடிக் காணத் தொடர்ந்து காண முடியாது வலியற்று நின்று மனந்தடுமாறத் திருவிடைமருதுரென்னும் திருப்பதியினை உறைவிடமாகக்கொண்டு எழுந்தருளி யிருக்கும் மருதவாணனே, மாணிக்கமாகிய செம்மணியின் ஒளி போன்றவனே, பெரிய நாயகியாகிய உமையம்மையாருக்குத் தலைவனே, ஒப்பற்ற மூன்றாகிய இமைத்தல் இல்லாத திருக்கண்களையுடைய, அடியேனுக்குரிய ஒப்பற்ற முழுமுதல்வனே, அடியேன் அடைந்துள்ள மனக்குறைகளைச் சினங்கொள்ளாமல், திருச்செவி சாற்றியருளுதல் வேண்டும்.

(வி - ம்.) ஏகம் - ஒன்று. கொழுநன் - தலைவன்; கணவன். கேண்மதி - கேட்பாயாக. மதி - முன்னிலையசை.

உச—௩க. நின்னடி...விட்டபின்

(இ - ள்.) தேவரீருடைய திருவடி யொன்றே பிறவிப் பெரும் பிணிக்கு நல்ல சிறந்த மருந்தென்று எண்ணி அத்திருவடிகளை வணக்கஞ்செய்யாத கல்லை யொத்த ஈவு இரக்கமற்ற வன்மைமிக்க மனமுடைய முழு மூடராகிய கீழோருடன், பல பிறவிகளில் பழகியதால்

சேர்ந்த தீவினை உன் திருவடியின்கண் எளியேன் மனதைப் புகவிடாமல் தன்வசம் இழுத்தலால், கருப்பை என்கின்ற இருள் செறிந்த பெருஞ் சிறையாகிய சிறிய உள்ளிடத்தில் குடல் என்கிற தளையினை, பூணப்பெற்றுத் தொடரின்கண் சிக்குண்டு, கூட்டினிடத்துச் சிறையாகவுள்ள புழுப்போன்று அடியேனால் ஈட்டப்பட்ட மும்மலத்தின் கண்ணும் மூழ்கி அம்மலந் தொடர்ந்த போதே மிக்க வருத்தத்தினை அடைந்து, அம்மலம் எளியேனை விட்டு நீங்காமையால், நெடுநாள் அதனிடைக் கிடந்து பலவாகிய பிணிகளின் பெயர்களை யடைந்து, துன்பத்தைச் செய்கின்ற தண்டிப்போராகிய நமன் வேலையாட்கள் நெருங்கிவந்து வருத்த, வயிற்றின்கண் காணப்படும் அகட்டுத் தீயால் நடு நடுங்கியும் பொறுக்க முடியாத துன்பத்தினை யடைந்தும், பத்து வகையான காற்றுக்களும் குதிரைச் சம்மட்டி போன்று மோதுதலால் அடிபட்டும், படுத்தலும் நிற்றலும், நடத்தலும் முடியாது, போதுமான இடமில்லாத மிகச்சிறிய இடத்தின்கண், முடக்கிக்கொண்டிருந்த காலத்துப் பாவமான பகுதியிலிருத்தி, விட்டுநீங்காத காவலைக் கொண்ட கொடியவர்களாகிய ஐம்பொறிகள் எனப்படும் ஐவரையும் எளியேன்மேல் ஏவுதலைச் செய்து, மிக்க பேராசை என்னும் பெருந்தளையில், ஆருயிராகிய அடியேனையும் எனது உடலையும், கயிறு கொண்டு கட்டினாற்போல பந்தமாகிய பாசத்தினுக்கு உள்ளாக்கி, மெல்லெனை விட்டதன்பின்,

(வி - ம்.) கயவர் - கீழோர். ஈர்த்தல்-இழுத்தல். கருப்பாசயம் - கருப்பப்பை. தண்டனாளர் - தண்டஞ் செய்யும் ஏவலாளர். மிண்டி - நெருங்கி. உதரம் - வயிறு. வாதம் - காற்று. தளை - கட்டு; சங்கிலி. பாசம் - கயிறு.

௬0—௬௬. யானும் செஞ்சடையோனே

(இ - ள்.) அடியேனும் நிலத்தின்கண் வந்து, பல தீமைகளின் பொருட்டு, அலைந்து திரிந்தும், பெரியவர்களைப் பேணாது புறக்கணித்தும், அயலவர்களுக்குரிய பொருள்களைப் பற்றுக்கொண்டு பறித்தும், பிறர் செய்யும் பெருந்தீமைகளைக் கண்டு கழிவிரக்கங் கொள்ளா திருந்தும், பல சிற்றுயிர்களை ஈவிரக்கங் கொள்ளாது பாவத்துக்கு அஞ்சாது கொன்று உண்டும், தமக்குரியாரல்லாத அயலவர்தம் மனைவிமாரின் அழகு முதலிய காட்சிகளைத் தீய நோக்கத்துடன் தன்னை யொத்தாருடன் புகழ்ந்து பேசியும், பல பொய்ம்மொழிகளைப் பேசியும், தாழ்வாகிய தீயோர் கூட்டத்தினைக் கூடியும், ஐம்பொறிகள் வழியாக உண்டாகும் நீங்கா ஆசை ஐந்தும், விரைந்து தம் தொழிலால் என்னை ஏவி ஆசையினை மிக வளரச் செய்து, யான் பிறந்த நாட்டின் அல்லாமல் அயல் நாட்டினுஞ் சென்று ஈட்டிய பொருள்களைக் கொண்டு, மீண்டு எனக்குரிய நாட்டிற்கு வந்த பொழுது தம்மை வந்திரப்பார்க்குக் கொடுக்க வேண்டிய காலத்துக் கொடாமல், நன்மை அடைய வேண்டிய காலத்து அதனைப் பெறுமல், இத்துன்பம் நேரும் நாள்வரையிலும், துன்பம் அடைந்து, பலநாள் வாடிக்கிடப்பேன், வீட்டினை அடையும் நன்னெறியினைக் காணேன்; தேவரீரை அடைந்த தொண்டர்க்குத் தொண்டராயினார்க்கு, அடியேனையும் அடித்தொழில் செய்வோனாக ஏற்றுக்கொண்டு, அடியேன் தனித்தமிழ்ப் போற்றி மந்திரம் ஓதி அருச்சித்த பச்சிலையைத் திரு

வுள்ளங் கொண்டேற்று, எளியேனை விட்டுவிலகாது. முத்திறப் புணர்ப்பாய்ப் புணர்ந்து ஒட்டி நின்றுணர்த்தி, மீண்டும் பிறப்பாகிய சிறையினுட் புகாவகை செய்து காப்பாற்றித் திருவருள் புரிதல் வேண்டும்; நெருப்புத் திரண்டதை யொத்த செந்நிறத்தோடு பொருந்திய திருச்சடைமுடியினை உடைய சிவபெருமானே!

(வி - ம்.) வெளவியும் - பறித்தும். பரியாது - இரங்காது. செகுத்தும் - கொன்றும். தோற்றம் - அழகு. கடுப்ப - விரைய.

பச்சிலையிட்டு வழிபடும் பான்மை சிறந்ததாகும்.

அவ்வுண்மை வருமாறு:

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண் ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே".

—௧0. ௧0௧. (உஉ)

நேரிசை வெண்பா

[தலைவன் பிரிந்தமையால் வளை முதலியன இழந்து வருந்தினாட்குத் தோழி தலைவனது இயல்பு கூறியது.]

சடைமேல் ஒருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமேல் ஒருத்தி பொலிய—இடையேபோய்ச்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்ப
தெங்கே யிருக்க இவள்.

(இ - ள்.) (மாலையில் தாங்குருவே போன்று செந்நிறத்துடன் காணப்படும்) திருச்சடைமுடியின்கண் (காணப்படும்) சலமகளாம் ஒரு நங்கை அமைந்துள்ளனள். திருமேனியின் இடப்பாகத்தில் மலைமகளென்னும் உலகீன்ற அம்மையார் ஒரு பாதியாகவிருந்து மாதிருக்கும் பாதியன் என்னும் திருப்பெயரினையே சூட்டியுள்ளனள். சூட்டித் திகழ்கின்றனள். இவ்விருவருக்கும் இடையே சென்று, சங்காலாகிய வளையல்களும் உயர்ந்த பட்டாலாகிய ஆடைகளும், திருவிடைமருதூரின்கண் வீற்றிருந்தருளும் மருதவாணரை மருவ எண்ணி அவள் கொடுப்பனவாம். திருமேனியிற் பாதியும். சடைமுடியிற் பாதியும் காதல் கொண்ட மங்கைமார் இருவர் முறையே கைக்கொண்டிருக்க, இம்மங்கை எங்கே இருக்க விழைகின்றனள்.

(வி - ம்.) புடை - பக்கம். பொலிய - திகழ்ந்துகொண்டிருக்க; விளங்க. இடை - ஊடு; இடை. சங்கு - சங்காலாகிய வளையல்; ஆகுபெயர். கலை - ஆடை.

இருவர்க்கிடையே மங்கையின் காதல் எங்ஙனம் நிறைவுறும் என்னும் வினு; திருமாமறையின் கண்ணும் எழுந்துள்ளது. அது வருமாறு.

"மங்கை காணக் கொடார்மண மாலையைக்
கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை
நங்கை மீரிடை மருதரிந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே."

—ரு. கரு—சு.

(மங்கையும் கங்கையுமாகிய இருவரும் உலகோர் எண்ணும்படியான பெண்பாலரல்லர். திருவருளாற்றலின் இரு நிலையும் இவ்வாறு பெண்பாலராக உருவகிக்கப்பட்டது. அதனால் அவர் செவ்வி வாய்ந்து ஆளாம் ஆருயிர்கட்கு இடமோ இதழியோ பெறுதற்குத் துணை நிற்பவரே யன்றி மாறுபடுபவரல்லர்.) (உந)

கட்டளைக் கலித்துறை

இருக்கும் மருதினுக் குள்ளிமை யோர்களும் நான்மறையும்
நெருக்கும் நெருக்கத்தும் நீளகத் துச்சென்று மீளவோட்டாத்
திருக்கும் அறுத்தைவர் தீமையுந் தீர்த்துச்சேவ் வேமனத்தை
ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளே முளைக்கின்ற ஒண்சுடரே.

(இ - ள்.) மேனிலை எய்தாத தேவர்களும், நான்கு வேதங்களும் (இறைவனைக் காண வேண்டி) நெருக்குகின்ற நெருங்கிய இடத்தும், பரந்த உலக ஆசையின்கண், மனத்தைச் செல்லவிட்டு, அதனினின்றும் மீண்டு இறைவன் திருவடிக்கண் கொண்டு கூட்டாத மாறுபாட்டினையும் போக்கி, அறிதற் கருவியாகிய ஐம்பொறி வேடர்களின் தீமையையும் போக்கி (காற்றால் இடையூறு நேராத திருவிளக்குப் போல் முதல்வன் திருவடிக்கண் தூயமனத்தினை) செம்மையாக ஒடுங்கச் செய்கின்ற ஒடுக்கத்தின் ஒடுக்கத்தில் முளைத்து எழுகின்ற, ஒள்ளிய திருவருட்சுடர் திருவிடைமருதூர் என்னும் திருவூரினுள், அடியோமாகிய நாம் எளிதின் வணங்கித் தொழுது மலம் மாயை கன்மங்களாகிய பாச நீக்கம் அடைய எழுந்தருளியிருக்கும்.

(வி - ம்.) நெருக்கம்-ஒருவரோடொருவர் நெருங்கி மோதுதல். திருக்கு - கோணல்; மாறுபாடு. ஐவர் - ஐம்பொறிகள். ஒருக்கம் - ஒடுக்கம். ஒண்சுடர் - மங்காப் பேரொளிப் பெருஞ்சுடர். (உச)

நேரிசை ஆசிரியப்பா

சுடர்விடு சூல மேந்தினை என்றும்
விடையுகந் தேறிய விமல என்றும்
உண்ணு நஞ்சம் உண்டனை என்றும்
கண்ணுற் காமனைக் காய்ந்தனை என்றும்
திரிபுரம் எரித்த சேவக என்றும்
கரியுரி போர்த்த கடவுள் என்றும்
உரகம் பூண்ட உரவோய் என்றும்

சிரகஞ் சேந்தழல் ஏந்தினை என்றும்
வலந்தரு காலனை வதைத்தனை என்றும்
சலந்தரன் உடலந் தடிந்தனை என்றும்
அயன்சிரம் ஒருநாள் அரிந்தனை என்றும்
வியந்தவாள் அரக்கனை மிதித்தனை என்றும்
தக்கன் வேள்வி தகர்த்தனை என்றும்
உக்கிரப் புலியுரி உடுத்தனை என்றும்
ஏனமும் அன்னமும் எட்டா தலமர
வானங் கீழ்ப்பட வளர்ந்தனை என்றும்
சேழுநீர் ஞாலஞ் சேகுத்துயிர் உண்ணும்
அழல்விழிக் குறளினை அமுக்கினை என்றும்
இனையன இனையன எண்ணிலி கோடி
நினைவருங் கீர்த்தி நின்வயிற் புகழ்தல்
துளக்குறு சிந்தையேன் சோல்லள வாதலின்
அளப்பரும் பெருமைநின் அளவல தாயினும்
என்றன் வாயிற் புன்மோழி கோண்டு
நின்னை நோக்குவன் ஆதலின் என்னை
இடுக்கண் களையா அல்லற் படுத்தா
தேழுநிலை மாடத்துச் சேழுமுகில் உறங்க
அடித்துத் தட்டி எழுப்புவ போல
நுண்துகிற் பதாகை கோண்டுகோண் டுகைப்பத்
துயிலின் நீங்கிப் பயிலும் வீதித்
திருமரு தமர்ந்த தெய்வச் சேழுஞ்சுடர்
அருள்சுரந் தளிக்கும் அற்புதக் கூத்த
கல்லால் எறிந்த போல்லாப் புத்தன்
நின்நினைந்து எறிந்த அதனுல்
அன்னவன் தனக்கும் அருள்பிழைத் தின்றே.

க—க0. சுடர்விடு...தடிந்தனை என்றும்

(இ - ள்.) மிக்க திருவருட் பேரொளி திகழ்கின்ற முத்தலையே லெனப்படும் சூலப்படையினை யுடையவனே என்று ஓதியும், ஆனே றாகிய அறவடிவாம் விடையினை விரும்பி ஊர்ந்தருளும் அழுக்குப் பண்டே நீங்கியவனே என்றும், தேவர் மூவர் யாவராலும் உண்ணப் படாத கண்டாரைக் கொல்லும் பெருநஞ்சினை உண்டருளிய பெரு மானே என்றும், முறைதவறி முயன்று நின்பால் வந்த மன்மதனை அறி வின் குறிப்பாகச் செறிந்துள்ள நெற்றித் தனிக் கண்ணினுல் உரு

விலாகைச் செய்து காய்ந்தருளினை என்றும், அறத்தொடு மாறுபட்டு அழிவினைச் செய்த பல்லுயிர்க்கும் அல்லலுறுத்தி வந்த திரியும் மூன்று கோட்டைகளையுடைய அந்தகரினைச் சிரித்து எரித்தருளிய சேவகனே என்றும், தீமையின் வாயிலாகத் தோன்றிய யானையினைத் திருக்கையின் திருநகத்தால் ஈர்ந்து ஈரம்புலராத பசுந்தோலினைப் போர்த்தருளின கண்ணுதற் கடவுளே என்றும், அரவினை அணிகலமாகப் பூண்டருளிய பகை தீர்த்தருளி யாளும் பண்புடைப் பெரியோய் என்றும், நான்முகன் மண்டையோடாகிய கபாலக் கலனையும் செந்நிறத் தழலினையும் ஏந்தியருளினை எனவும், வெற்றியுடைய கூற்றுவனை உதைத்து வதைசெய்தனை எனவும், சலந்தரனுடைய தலை தருப்பைப் புல்லின் வளைவாகிய உருளையால் அறும்படி செய்தருளினை எனவும்,

(வி - ம்.) சூலம் - முத்தலைவேல். சேவகம் - வீரத்தொழில். ஆண்மைத் தொழில்; மறத்தொழில். கடவுள் - கடந்த உள் பொருள்; கடவுதலைச் செய்யும் பொருள். உரகம் - பாம்பு. சிரகம் - உண்கலம்; மண்டையோடு. வதைத்தல் - கொல்லல். தடிதல் - கொல்லல்.

முத்தலை வேலாகிய சூலம் மும்மல அழுக்கினை அகற்றுங் குறிப்பாகும். அவ்வுண்மை வருமாறு :

“ அருள்பொழியும் திருமுகத்தில் அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள்பொழியும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப
பொருள்பொழியும் பெருகன்பு தழைத்தோங்கிப் புவிஎத்தத் [ர்.”
தெருள்பொழிவண் தமிழ்நாட்டுச் செங்காட்டங் குடிச்சேர்ந்தா
—கஉ. சிறுத்தொண்டர். ௫௫.

கக—உச. அயன்சிரம்...ஆதலின்

(இ - ள்.) (படைப்பேனாகிய நான்முகனின் ஐந்தலைகளுள் ஒன்று அல்லாத சொல்லுரைத்தது; அதனால் அத்தலை வைரவக் கடவுளால் கிள்ளப்பட்டது.) ஒருழியின்கண் படைப்போனின் ஐந்தலையுள் ஒன்றனைக் கிள்ளினாய் எனவும், அனைவர்களாலும் புகழப்பட்ட வாளைத் தாங்கியுள்ள இலங்கை வேந்தனை திருவடியால் மிதித்தருளினை எனவும், தக்கனுடைய தகாத வேள்வியினை (வீரபத்திரரைக் கொண்டு) அழித்தனை எனவும், மிக்க சினமுள்ள புலியின் தோலை உடுத்தியருளினை எனவும், பன்றி யுருக்கொண்ட மாலும், அன்னவுருக்கொண்ட நான்முகனும் முறையே அடிமுடிகளைக் காணமல், மனந்தடுமாற விண்ணும் கீழ்ப்பட்டுப் போம்படி ஓங்கி வளர்ந்தனை எனவும், வளம் நிறைந்த நீரால் சூழப்பட்ட நிலவுலகத்தின் உள்ளாரைக் கொன்று உயிரினையுண்ட நெருப்பினை யொத்த கண்களையுடைய முயலகனைத் திருவடியின்கீழ் மேலெழ வொட்டாது அழுத்தி அமுக்கியருளினை என்றும், இவ்வகைப்பட்ட தொழில்களைச் செய்தருளியது பலகோடியாகும். எண்ண முடியாத பொருள்சேர் புகழ்களைத் தேவரீரிடமாகப் புகழ்ந்தெடுத்து மொழிதல், ஓரிடத்தும் நிலைபேறின்றி உலாவிவரும் மனமுடைய அடியேனது சொல்லின் அளவாக மட்டும் இருக்கும்; ஆதலால் இவ்வளவினதென்று அளத்தற்கருமையான சீர்த்தி தேவரீரின் புகழ்ச்சி அளவேயாம்; அவ்வகையிருப்பினும், ஒன்றினும் பொருந்தாத அடியேனுடைய வாயினின்றும்

பிறந்த புல்லிய மொழிகளைக்கொண்டு, தேவரீரது திருவருளை எண்ணியிருக்கின்றேன். ஆகையால்,

(வி - ம்.) அயன் - நான்முகன்; படைப்போன். ஒருநாள் - ஒருழி. வியந்த - சிறந்த. உக்கிரம் - சினம். ஏனம் - பன்றி. அலமர - தடுமாற. செகுத்து - கொன்று. சீர்த்தி - கீர்த்தி; மிகுபுகழ். நோக்குதல் - எண்ணுதல்.

உச—ருச. என்னை...அருள் பிழைத்தின்றே

(இ - ள்.) அடியேனது பிறவித் துன்பங்களை, நீக்கித் துன்பத்தினைச் செய்யாமல், ஏழு நிலைகளைக்கொண்ட உப்பரிகையின் மீது நீர்வளமுள்ள மேகம் உறங்கியிருக்க அதனை அடித்துத் தட்டி எழுப்புவனபோல் நுண்ணிய சீலையைக்கொண்டு கட்டிய பெருங் கொடிச் சீலைகள் பலமுறை அடித்துக்கொண்டு செலுத்த, அம்மாடத்துத் தங்குவோர் நித்திரை விட்டெழுந்து, உலாவுகின்ற பெருந் தெருக்களைக் கொண்ட திருவிடை மருதூரின்கண் வீற்றிருந்தருளிய தெய்வமாகிய சுடரொளி யானவனே! திருவருள் சுரந்து கொடுத்தருள்கின்ற வியக்கத்தக்க திருக்கூத்து வல்லானே, (தன்னுணர் வின்றிச் சிவவுணர்வாய் நின்று திருவருளின் தூண்டுதலால்) கல்லினால் வீசியெறிந்த பொல்லாத புத்தராகிய சாக்கிய நாயனார், தேவரீரை மனத்திடங்கொண்டு எறிந்த எதவினால் அங்ஙனம் கல்லை விட்டெறிந்த அச்சாக்கிய நாயனார்க்கும் தேவரீரது திருவருள் தவறினது இல்லை. (அதனால் அடியேன் பொருட்டுந் திருவருள் புரிவாயாக.)

(வி - ம்.) இடுக்கண் - துன்பம். களையா - களைந்து; நீக்கி. மாடம் - உப்பரிகை. பதாகை - பெருங் கொடி.

சாக்கிய நாயனாரால் கல் எறியப்பட்ட செய்தி வருமாறு :

"அன்றுபோய்ப் பிற்றைநாள் அந்நியதிக் கணையுங்கால்
கொன்றைமுடி யார்மேல்தாம் கல்லெறிந்த குறிப்பதனை
நின்றுணர்வார் எனக்கப்போ திதுநிகழ்ந்த தவரருளே
என்றதுவே தொண்டாக என்றுமது செயநினைந்தார்."

—கஉ. சாக்கியநாயனார், கக. (உ௫)

நேரிசை வெண்பா

இன்றிருந்து நாளை இறக்குந் தொழிலுடைய
புன்தலைய மாக்கள் புகழ்வாரோ—வென்றிமழு
வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை
ஆளுடையான் செம்பொன் அடி.

(இ-ள்.) மாறுவென்றி தரத்தக்க மழுவாலாகிய வாளையுடையான், தெய்வத்தன்மை பொருந்திய திருவிடை மருதூரைத் திருக்கோயிலாகக் கொண்டருளியவன், நாயினுங் கடைப்படி அடியேனை, மீளா அடிமையாகக் கொண்டருளியவன், செந்நிறம் பொருந்திய பசும்

பொன் போலும் திருவடிகளை இற்றைக்கிருந்து நாளை இறந்து கெடும் சிற்றறிவினையுடைய மனிதர்கள் புகழ்வாரோ? (புகழார்.)

(வி – ம்.) மாக்கள் - மக்கட் பிறப்பெய்தியும் ஐயுணர்வுடன் அலையும் நிலையினர். மேலும் பிறப்பற முயலாப் பெற்றியர். அவ்வுண்மை வருமாறு :

" மாவு மாக்களும் ஐயறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே."
—தொல், பொருள், ௫௮௭.

" வென்றிலேன் புலன்களைந்தும் வென்றவர் வளாகந்தன்னுள்
சென்றிலேன் ஆதலாலே செந்நெறி அதற்குஞ் சேயேன்
நின்றுளே துளும்புகின்றேன் நீசனேன் ஈசனேயோ
இன்றுளேன் நாளையில்லேன் என்செய்வான் தோன்றினேனே."
—சு. எஅ—க. (௬௨)

கட்டளைக் கலித்துறை

அடிஆ யிரந்தொழில் ஆயின ஆயிரம் ஆயிரம்பேர்
முடிஆ யிரங்கண்கள் மூவா யிரம்முற்றும் நீறணிந்த
தொடிஆ யிரங்கொண்ட தோளிரண் டாயிரம் என்றுநெஞ்சே
படியாய் இராப்பகல் தென்மரு தாளியைப் பற்றிக்கொண்டே.

(இ–ள்.) நெஞ்சமே, திருவடிகள் ஆயிரம் (அளவில்லன) ஆகும்; (ஆருயிர்களின் பொருட்டுத் திருவருட்டொழில் ஐந்தாதலின்) அவன்றன் திருவருட் டொழில்கள் பல்லாயிரமாகும்; அவன்றன் திருப்பெயரும் பல ஆயிரமாகும்; அவன்றன் திருமுடிகளும் பல ஆயிரமாகும்; திருக்கண்களும் மூவாயிரமாகும்; முழுவதும் திருவெண்ணீறணிந்துள்ள, ஆயிரங் கடகங்களைப் பூண்டுள்ள தோள்கள் இரண்டாயிரமாகும், என்று அவன்றன் பொருள்சேர்புகழ்களை எடுத்துக்கூறி தென்றமிழ் நாட்டகத்துக் காணப்படும் திருவிடை மருதூரென்னும் திருவூரின்கண் வீற்றிருந்தருளும் மருதவனத்து மணியினை உறுதியாக உள்ளத்திடைப் பதித்து இரவும் பகலும் அவன் திருப்புகழை ஓதுவாய்.

(வி - ம்.) தொடி - கடகம்; கையணி. படியாய் - ஓதுவாயாக. ஆயிரம் என்னுஞ்சொல் அவ்வெண்ணைக் குறியாது அளவில்லன என்னும் தன்மையினைக் குறிப்பதாகும். சிவபெருமான் அனைத்துயிர்களுடனும், அனைத்தண்டங்களுடனும் நீக்கமற எஞ்ஞான்றும் நிறைந்து நிற்கு நீர்மையன். அவ்வுண்மை தோன்ற அளவில்லாத முடி முதலிய உறுப்புக்களை உருவகமாக உரைக்கும் நூல்கள்.

அவை வருமாறு :

"ஆயிரங் கமலம் ஞாயிறு யிரம்முக் கண்முக கரசர ணத்தோள்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த படர்சடை மின்னுபொன்
[முடியோன்

வேயிருந்தோளிஉமை மணவாளன் விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள் போற்றுவார் புரந்தரா
[திகளே."

—கூ. சேந்தனார், திருவீழி—அ.

"எண்ணில் பல்கோடி சேவடி முடிகள் எண்ணில்பல் கோடி திண்
[தோள்கள்
எண்ணில் பல்கோடி திருவுருநாமம் ஏர்கொள் முக்கண்முக மியல்பும்
எண்ணில் பல்கோடி யெல்லைக்கப் பாலாய் நின்றைஞ்ஞூற் றந்தண
[ரேத்தும்
எண்ணில் பல்கோடி குணத்தர்ஏர் வீழிஇவர் நம்மை ஆளுடை
[யாரே."

—கூ. ,, கூ. (உஎ)

இணைக்குற ளாசிரியப்பா

கொண்டலின் இருண்ட கண்டத் தெண்தோள்
செவ்வான் உருவிற் பையரவு ஆர்த்துச்
சிறுபிறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத
மாசறு சிறப்பின் வானவ ராடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி
அயிரா வணத்துறை ஆடும் அப்ப
கைலாய வாண கௌரி நாயக
* நின்னை வணங்கிப் பொன்னடி புகழ்ந்து
பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையும்
மழைக்கண் கடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்கும் குமர வேளும்
சுரிசங் கேந்திய திருநெடு மாலும்
வரன்முறை படைத்த நான்முகத் தொருவனும்
தாருகற் செற்ற வீரக் கன்னியும்
நாவின் கிழத்தியும் பூவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி உருத்திரரும்
ஆனைப் பெருந்திறல் வானோர் தலைவனும்

(பாடம்.) * நின்னருள் சுரந்து பொன்னடி பணிந்து

சேயிர்தீர் நாற்கோட் டயிரா வதமும்
வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனுஞ் சேந்தீக் கடவுளும்
நிருதியு மியமனுஞ் சுருதிகள் நான்கும்
வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்
எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனுங் கபிலனும் அகத்தியன் தானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்
வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத் தவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் பல்நரி ஊளைகேட் டரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்
வழிபடும் ஒருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவன்இப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்இத் தலையும்
கிடத்தல் வேண்டுமென் றடுத்தடுத் திரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்டம் எடுத்தும்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த

பெரிய அன்பின் வரகுண தேவரும்
இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையவர் நிற்க யானும் ஒருவன்
பத்தி என்பதோர் பாடும் இன்றிச்
சுத்த னாயினுந் தோன்றாக் கடையேன்
நின்னை
இறைஞ்சில னாயினும் ஏத்தில னாயினும்
வருந்தில ஆயினும் வாழ்த்தில ஆயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுல கனைத்தும் நன்மை தீமை
யானவை நின்செய லாதலின்
நானே யமையும் நலமில் வழிக்கே.

க—கூ, கொண்டலின்...கௌரிநாயக

(இ - ள்.) மேகத்தை யொத்த நீலநிறங் கொண்ட திருமிடற்றினை யுடைய, திருத்தோள்கள் எட்டினையும் உடைய, சிவந்த வானத்தைப் போலுந் திருவுருவில், படத்தினைக் கொண்ட பாம்பினை, இறுகக் கட்டிச் சிறு பிறை தங்கிய சுருள் கொண்ட பொன் போல் மிளிர்கின்ற பொன்சடை யணிந்த அழியாத முழுமுதற் பொருளானவனே! (அன்பு அறிவு ஆற்றல் எனப்படும்) மூன்று திருக்கண்களைக் கொண்ட திருவருட் பெருஞ் செல்வப் பெரும் பொருளே, தேவர்களாயுள்ளார் அனைவர்கட்கும் வாழ்வளித்தருளும் தேவாதி தேவனாகிய மாதேவனே, திருவிடை மருதூர் என்னும் திருவூரை வீற்றிருந்தருளும் உறையுளாகக் கொண்டருளியவனே, குற்றமற்ற சிறப்பினையுடைய தேவர்கள் முழுகும், திருப்பூசத் திருத்த நீராகிய தீர்த்தத்தினையும், தண்டமிழ்க் காவிரி என்னும் பொய்யாப் பொன்னியாற் காக்கப்படும் ஐராவணத் துறையினையும், திரு மஞ்சனத் தீர்த்தமாகக் கொண்டும், ஆருயிர்கள் அனைத்திற்குந் தன்னொப்பில்லாத் தந்தையாயினவனே, திருக்கயிலை என்னும் திரு வெள்ளிமலையினை உறைவிடமாகக் கொண்டருளியவனே, கௌரி யென்னும் உமையம்மை யார்க்குத் தலைவனே!

(வி - ம்.) கொண்டல் - மேகம். பை - படம். அரவு - பாம்பு நெறி - சுருள். புரக்கும் - காக்கும். பொன்னி - காவிரியாறு. புன்சடை - பொன்சடை. கௌரி - பொன்னிறமுள்ளவள்: பார்வதி.

பூசநீராடும் சிவபுண்ணியம் வருமாறு :

“பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தும்புன லாடவே.”

—ு. கச—க.

அயிராவணம்-இரண்டாயிரங் கொம்புகளை யுடையது. சிவபெருமானுக்கு உரியது. இவ்வுண்மை வருமாறு :

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியின் உரு வெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி
அயிரா வணமேறா தானே றேறி
அமரர்நா டாளாதே ஆரூ ராண்ட
அயிரா வணமேயென் னம்மா னேநின்
அருட்கண்ணால் நோக்காதார் அல்லா தாரே."

—சு. உடு—க.

கo—உசு. நின்னை...அட்டவசுக்களும்

(இ - ள்.) திருவருளால் தேவரீரை வணங்கி, உம்முடைய திருவடிப் பெருமைகளைப் புகழ்ந்து பெரிய நல்ல நிலையினின்றும் வழுவாத பல்வேறு வரங்களைப் பெற்றவர் யாவர் எனின்? இமைத்தல் இல்லாத பெரிய கண்களைக் கொண்ட உமையம்மையாரும், சிறிய கண்களையும் தொளையுள்ள நீண்ட தும்புக்கையையும் உடைய, மழை போலும் மதத்தினைக் கொண்ட மூத்த பிள்ளையாரும், தேவர்களுக்குத் துன்பம் வாராமல் தடுத்துக் காக்கும் இளைய பிள்ளையாரும், வலம்புரி வடிவாகச் சுரிந்துள்ள சங்கினை ஏந்திய திருக்கையினை உடைய திருமாலும், வானம் முதலாகிய பூதங்களையும் மற்றவைகளையும் திருவாணை பெற்று படைத்தற் றொழிலைச் செய்யும், நான்கு முகங்களைக் கொண்ட படைப்போனும், தாருகன் என்னும் அசுரனை வென்ற வீர மிக்க காளியம்மையும், நாவின் கிழத்தி எனப்படும் கலைமகளும், செந்தாமரை மலரினை இடமாகக் கொண்ட திருமகளும், பெருமையிற் சிறந்த மாண்பமை தோற்றத்துக் கோடி உருத்திரரும், கெடாத மிக்க வலிமை கொண்ட தேவர்களுக்குத் தலைவனாகிய இந்திரனும், குற்றம் நீங்கிய நான்கு கொம்புகளைக் கொண்ட ஐராவத மென்னும் வெள்ளை யானையும், தாவிச் செல்லுந் தன்மை வாய்ந்த குதிரைகள் ஏழு பூண்ட பன்னிரு பகலோனும், ஒருவனாகிய நிலவோனும், தென்கீழ்த்திசைக் காவலனாகிய செந்நிறத்தையுடைய தீக்கடவுளும், தென்மேற்றிசைக் காவலனாகிய நிருதியும், தென்றிசைக் காவலனாகிய மழைக்கடவுளும் வடமேற்றிசைக் காவலனாகிய காற்றுக் கடவுளும், வடதிசைக் காவலனாகிய இருநிதிக் கிழவனும், எட்டு நாகங்களும், எட்டு வசுக்களும்,

(வி - ம்.) இளைய பிள்ளையார் - குமரவேள். அமரர் — தேவர். ஆனா - குறையாத; கெடாத. செயிர் - குற்றம். வாவும் — தாவும். அருக்கர் - சூரியர்; பகலோர். இருநிதி - சங்கநிதி, பதுமநிதி என்னும் இருபெருஞ் செல்வங்கள். இவை சங்கு போன்றும் தாமரை போன்றும் காணப்படும் செல்வங்களெனவும், சங்கம், பதுமம் என்னும் பேரெண்களையுடைய பெருஞ் செல்வம் எனவுங் கூறுப.

சிவபெருமான் ஒருவனே பிறவா இறவாப் பெருங் கடவுள், ஒப்பில்லா விழுமிய முழுமுதல்வன். அவன்றன் ஆற்றல்களாகிய திரு

வருட் சத்திகளும், அவ்வாற்றல்களின் விரிவாகிய பிள்ளையார், முருகக் கடவுள் முதலியோரும், சிற்றுயிரினங்களாகிய மூத்தேவர் முதலாகிய தேவரினங்களும் பிறரும் எல்லாம் அவனையே தொழுது அவன் திருவாணை வழி ஒழுகி உய்யும் தன்மையன. இவ்வுண்மைகள் வருமாறு:

"நார ணன்னொடு நான்முகன் இந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே."

—ரு. கரு—க0.

அம்மை, வாரணன், குமரன் முதலிய திருவருட் டோற்றத் திருக்கோலங்களை வழிபடுவோருக்கு அவ்வத் திருத்தோற்ற ஆற்றல்கள் சிவகுருவாய் நின்று சிவபெருமான் திருவடிக்கண் அவரவர்கள் சேர்ந்து மீளா ஆளாய்ப் பேரின்ப நுகரப் பெருந்துணை புரியும். அம்மைமுதற் கோலம் அருளும் சிவகுருவாய்ச் செம்மைச் சிவன்றாட் செறிவு எனும் மெய்ம்மையால் திருமுருகப் பெருமானுக்குச் சிவகுரு என்னும் திருப்பெயர் நிலவுகின்றது. இதுவும் அவ்வுண்மையினை வலியுறுத்துவதாகும்.

"ஞாயிறாய் நமனுமாகி வருணனாய்ச் சோமனாகித்
தீயறா நிருதிவாயுத் திப்பிய சாந்தனாகிப்
பேயறாக் காட்டிலாடும் பிஞ்ஞகன் எந்தை பெம்மான்
தீயறாக் கையர் போலும் திருப்பயற் றூரனாரே."

—ச. நஉ—சு.

சோமன் - வெண்கதிரோன்: திங்கள். ஞாயிறு, நமன், வருணன் சோமன், தீ, நிருதி, வாயு, சாந்தன் இவ்வெண்மரும் எண்புலக் காவலர். சாந்தன் குபேரனையும் குறிக்கும்; இந்திரனையும் குறிக்கும். ஈண்டு ஆகி என்பது அவரவர்களை அத்தொழிலின்கண் ஆக்கி என்பதாகும்.

உஎ—நந. மூன்றுகோடி சிவவாக்கியதேவரும்

(இ - ள்.) கல்வி கேள்விகளால் நிறைந்த மூன்று கோடி முனிவர்களும், வசிட்டரும், கபிலனும், அகத்திய முனிவனும், தும்புருவும், நாரதரும், திருவருளால் வியத்தகு தனித்தமிழ்ப் பாடல்களைப் பாடியருளிய ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசர், ஆளுடைய நம்பி (சம்பந்தர், அப்பர், சுந்தரர்) ஆகிய மூவர் முதலிகளும், காதல் மிகுதியாம் பேரன்பினையுடைய பெருந்துறைப் பிள்ளை யெனப்படும் மாணிக்க வாசக அடிகளும், நிலையில் செல்வத்தைப் பொருட்படுத்தாத இறைவன் திருவடிக்கண் நீங்கா எண்ணம் வைத்துள்ள சிவவாக்கிய தேவரும்.

(வி - ம்.) வித்தகம் – வியப்பு, பெறலருந்திறம். அவமதிப்பு – பொருட்படுத்தாமை.

௧௪—௫௫. வெள்ளை...வரகுண தேவரும்

(இ - ள்.) வெண்மையான திருநீற்றைப்பூசிய மேனியோடு கூடிய ஒருவனைக் கண்டு அக்கள்வன் கையில் கட்டப்பட்டிருந்த கட்டாகிய தளையினை அவிழ்ப்பித்தும், ஓடுகின்ற பல நரிகளின் ஊளையிடும் ஒலியினைக் கேட்டு (அவை) முழுமுதல்வனும் சிவபெருமானைப் பாடின என்று அவைகட்கு அழகிய வேலைப்பாடமைந்த பல போர்வைகளைக் கொடுத்தும், குவளைகள் மலர்ந்துள்ள பெரிய தடாகங்களில் தவளைகள் ஒலிக்கச் சிவபெருமானை அவைகள் போற்றிப் புகழ்ந்தன என்று மணிகளையும், பொற் காசுகளையும் விரவி அகற்றிற்குத் தூவியும், வழிபாடு செய்யும் ஒருவன் திருமஞ்சனத்தின் பொருட்டுப் பதனிட்டுக் காய வைத்துள்ள செழித்த விதையாகிய எள்ளினை, எடுத்துத் தின்று கொண்டிருப்பதைக் கண்டு, அவனைப் பிடித்தலும், அக்கள்வன் இனிவரும் பிறவிகளிலும் சிவபெருமானுக்கு அடிமை செய்யும் பிறவி வேண்டுமென இவ்வாறு செய்தேன் என்று கூற, அவனுக்குத் தானும் அவ்வாறு பிறத்தலை விரும்புகின்றேன் என்று உறுதி கூறி, அவனுடைய எச்சிலை வாங்கி உண்டும், திருவிடை மருதூர் என்னும் திருவூரில், தனித்துக் கிடந்த ஒரு தலைமண்டை ஓட்டினைக் கண்டு நீர் திருவிடை மருதூரின் நிலத்தின்கண் கிடப்பது போன்று, தம்முடைய தலையும் கிடத்தல் வேண்டுமென அத்தலையினை நிலமுறப் பலமுறை பணிந்து வணங்கி உவந்து நாயின் மலம், திருக்கோயிலின் திருமுற்ற வாயிலின் மேல் இருக்க, இரந்தும் இவ்வரிய திருப்பணி யொன்று கிடைத்ததென்று, அம்மலத்தினைத் தாம் எடுத்தும், காம்பு நீங்கிக் கீழ் உதிர்ந்த கனியின் உருவினைக் கண்டு வேப்ப மரங்களுக்கெல்லாம், மேற் கட்டிகளை அமைக்கும்படி கட்டளையிட்டும் தாம் விரும்பிய எப்பொருளையும் மேலாம் சிவபெருமானுக்குக் கொடுத்தல் நலமென்று, சுருண்ட கூந்தலையுடைய தேவியைத் தனிப்பெரும் விருப்பத்துடன் அப்பெருமானூர்க்கு உவந்து ஒப்புவித்த ஒப்பிலாக் காதலெனப்படும் பேரன்பினைக் கொண்ட வரகுண தேவர் எனப்படும் மெய்யடியாரும்,

(வி - ம்.) படாம்-போர்வை. மஞ்சனம் - திருமுழுக்கு. பெருந்துறைப் பிள்ளை - மாணிக்கவாசகர்: இப்பிறப்புக்கு - இப்பிறப்பு ஈடேறுதற்கு. நாய்க்கட்டம் – நாய்மலம். விதானம் - மேற்கட்டி. புரி - சுருள். குழல் - கூந்தல். தேவி - பட்டத்து மனைவி.

அறிவு முதிர்ந்து நன்னெறிப்படர்ந்து அன்பு கனிந்து காதலாகிக் கற்புடன் நிற்பார் பேரன்பினராய் அடிமை நிலையில் நின்று திருவருள் உந்துதலால் அருள் வயப்பட்டுச் செய்யுஞ் செயலனைத்தும் உலகியலறிவுடன் ஒத்து நோக்குதல் பெரும்பாலும் பொருந்துவதன்றும். அவற்றை அன்பின் திறத்தால் திருவருளின் சிறந்த துணைகொண்டு நோக்குவதே செயற்பாலதாம்.

கண்ணப்பர் மூர்த்தியார் முதலிய மெய்யடியார்கள் வாயிலாக நிகழ்ந்த திருவருட் செயல் போன்று, பெரிய அன்பின்பின் வரகுண தேவர்பால் நிகழ்ந்தமையும் காண்க. இவ்வுண்மை வருமாறு :

மூதறிவால் தோன்றுமன்பு மூவாப்பே ரின்பஅன்பாம்
ஈதென்னக் காட்டல் இயலாதாம்—ஆதல்முற்றும்
ஆண்டான் அருளால் அடிமைச் செயல்காண்க
பூண்டார் வரகுணரப் பொற்பு.

உலகியல் முறையிலும் அன்பின் முதிர்வாகிய பேரிரக்கம் வாய்ந்த பெருநாகரிகத்தர் ஆற்றிய உலகுடன் ஒவ்வாச் செயல்களும் பலவுள. அவற்றுட் சில ஈண்டுக் காண்க.

"பனிவரை ... ...
இவரே, பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்."...

—புறநானூறு, உ00.

"பாணன் ... ...
... ... என்றும்
உடாஅ போரா வாகுத லறிந்தும்
படாஅ மஞ்ஞைக் கீத்த வெங்கோ
கடாஅ யானைக் கலிமான் பேகன்."...

— ,, கசுக.

"மடத்தகை மாமயில் பனிக்குமென் றருளிப்
படாஅ மீத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக."...

— ,, கசுரு.

இம்முறை போன்று அருளியலாம் வீட்டியலிலும் நிகழ்வனபல. அவற்றிற்குக் காரணம் வருமாறு :

நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய—வல்லதனுல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு அரன்."

—திருக்களிற்றுப்படியார், கரு.

ருசு—சுசு. இனைய...வழிக்கே

(இ - ள்.) இவ்வகைத் தன்மையுடையார் அளவில்லாதாராவர். அவர்கள் அனைவர்களும் இருக்க, ஒன்றுக்கும் பற்றாத ஒருவனாகிய அடியேனும் உம்முடைய திருவடிக்கண் பத்தி யென்கிற பெருமை ஒன்றும் இல்லாமல் தீமைசிறிதுமில்லாமல் தூயோனாகவேனும் காணப்படாத கடையேனாகிய யான், தேவரீரை வணங்குதல் செய்யேனாயினும், பொருள்சேர் புகழ்களை யெடுத்துப் போற்றிப் புகழ்தல் செய்யேனாயினும், வருந்தி வாழத்தித் தொழேனாயினும், பெருமானே! தேவரீரை எக்காலத்தும் எளியேன் மனத்திடை எண்ணி யிருப்பேன்; அதனை நீயே அறிந்தருள்வாய்; உலகனைத்தும் நின் உரிமை, நின் உடைமை. அவ்வுலகத்து ஆருயிர்கள் செய்யு நலமும் தீங்குமாய்க் காணப்படும் செயல்களனைத்தும், தேவரீர்தம் செயல்களேயாகும். ஆகையால், நலம் பொருந்துத லில்லாத தீய வழிக்கு அடியேன் ஒருவனே காட்டாகக் கூறல் அமையும்; ஆயினும் எளியேனைக் காத்தருள்வாயாக.

(வி - ம்.) இத்திருவூரின்கண் விளங்கும் தீர்த்தங்களின் சிறப்பு வருமாறு :

"காவிரிக்குத் தென்கரையில் நந்திதேவரால் காக்கப்பட்டுவரும் தீர்த்தம் ஒன்றுளது. அதன் பெயர் கலியாண தீர்த்தம் எனப்படும். அது மிகவும் சிறந்த தீர்த்தம். அதன்கண் "சிவயநம" என்னுந் தனித்தமிழ் மந்திரம் ஓதி அத்தீர்த்தத்தினை "எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடு" (அ. திருவெம்பாவை கங.) எனப் போற்றித் தொழுது மூழ்கி எழுவார் சிவபுண்ணியப் பேற்றினராவர். எல்லா நலங்களும் பெற்று இனிது வாழ்வர். பேய் முதலிய தீமைகள் வந்தணுகா தீவினைகள் "வெற்பில் தோன்றிய வெங்கதிர் கண்டவப் புற்பனிக் கெடுமாறு போற்" கெட்டொழியும்.

முழுகப் போகும் போது தொடக்கத்தில் ஓதிக்கொள்ள வேண்டிய திருமாமறைகள் வருமாறு :

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே."

—உ. சஅ—உ.

"எற்றி னார் அருள் தலைமிசைக் கொண்டெழுந் திறைஞ்சி
வேற்று மாகிவிண் ணாகிநின் றார்மொழி விரும்பி
ஆற்றல் பெற்றஅவ் வண்ணலார் அஞ்செழுத் தோதிப்
பாற்ற டம்புனற் பொய்கையில் மூழ்கினார் பணியால்."

—கஉ. திருநாவுக்கரசர், கஎ0.

இத்தீர்த்தத்தில் நாடோறும் மூழ்குதல் நனிமிகச் சிறந்ததேயாம். மேலும் ஞாயிற்றுக்கிழமை, அசுவனிநாள், அமாவாசை, ஞாயிறு திங்கள்களின் மறைவு நாளாகிய கிரகணகாலம், தைப்பூசம் ஆகிய இந்நாட்களில் மூழ்குதல் மிகவும் சிறப்புடையதாகும். இந்நாட்கள் ஒன்றைவிட ஒன்று சிறந்ததாய்த் திகழ்ந்து பெரும்புண்ணியப் பேறளிக்கும் பெற்றியன.

பின்னும் இத்தீர்த்தம் தைப்பூசச் சிறப்புடையதாகலின் பூசத் துறை என்னும் சிறப்புப்பெயரானும் வழங்கப் பெறும். வீடுபேற்றினை யளிக்கும் விழுப்பத்தால் கலியாண தீர்த்தம் எனவும் வழங்கப் பெறும். இதன்கண் கார்க்கோடன் மூழ்கிப் பரிச்சித்தைக் கடித்த பாவத்தி னின்றும் வீடுபெற்றான். நளன் மூழ்கிக் கொடிய கலியினின்றும் விடுபட்டான். பலபத்திரன் மூழ்கிச் சூதபுராணிகரைக் கலப்பையா லெறிந்து கொன்ற பாவத்தின்நின்று விடுபட்டான். இவர்கள் போன்று விடுபட்டவர்களும் பலராவர்.

காவிரியாற்றின்கண்ணுள்ள கந்த தீர்த்தத்தின் தென் திசையில் பிள்ளையார் தீர்த்தம் ஒன்றுள்ளது. இதனை ஐராவத தீர்த்தம் எனவும் கூறுப. இதன்கண் மூழ்கி வானவர் கோனாகிய இந்திரனும், அவனது

ஊர்தியாகிய வெள்ளை யானை எனப்படும் ஐராவதமும் துருவாச முனிவரால் பெற்ற சாபத்தினின்றும் விடுபட்டனர்.

"வித்தகப்பாடல்" என்னும் மெய்ம்மை வருமாறு :

"அருமறையைச் சிச்சிலிபண் டருந்தத் தேடும்
அதுபோலன் றிதுஎன்றும் உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப்
பலரில்லை என்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதாற் றெதிரே யோடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடகஞ் சாற்றும்
கரியைவளை விக்குங்கல் மிதக்கப் பண்ணும்
கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே."

—திருமுறைகண்ட புராணம், சள.

"வரகுணதேவர்" வரலாற்றுச் சுருக்கம் வருமாறு : இவர் முடி கெழு வேந்தர் மூவருள் ஒருவராவர். இவர் தென்பாண்டி நாட்டுச் சீர்சால் வேந்தர். இவர்தம் அருமைத் தந்தையார் திருப்பெயர் "சுந்தரேசபாதசேகர" பாண்டியர். இவ்வரகுணதேவர் ஒருநாள் வேட்டையாடி மாலைப்பொழுதில் திரும்பினர். வரும் வழியில் ஆல மர நீழலில் அயர்ந்து தூங்கிய வேதியன் ஒருவன் தாம் செலுத்திய குதிரையால் இடறப்பட்டு மாண்டனன். அதனை உணர்ந்து வருந் தினர். வேதியனைச் சார்ந்தார்க்கு வேண்டும் பொன் கொடுத்து ஈமக்கடன்களை நிறைவேற்றுவித்தனர்.

வரகுண மன்னனைக் கொலைப்பழி பற்றிக்கொண்டது. மன்னன் அது நீங்கும் வகையாக வேள்வி முதலாகிய பல கழுவாய் எனப்படும் பிராயச்சித்தங்களைச் செய்தனன். அவற்றாலும் அது நீங்கவில்லை. ஆலவாய் அவிர்சடைக் கடவுளை அடிபணிந்து வேண்டிக்கொண் டனன். கடவுளும் மன்னனே! உன்மாட்டு விக்கிரம சோழன் படையடுத்து வருவான்; அவனை வென்று நீ பின் தொடர்கையில் திருவிடை மருதூரினை யடைவாய். அத்திருவூரின்கண் ஆருயிர் கட்கு வழிகாட்டும் பொருட்டு நம்மை நாமே வழிப்பட்டுள்ளோம். அங்குள்ள பூசத்துறைத் தீர்த்தத்தில் நீராடி நம்மைக் கண்டு வழிபடு வாய். அப்பொழுது இப்பழி நீங்குமென்று வானிழல் மொழியாய் அருளினன்.

அவ்வாறே மன்னனும் போர்வென்று திருவிடைமருதூரில் தீர்த்த மாடி வழிபாடு செய்து பழிநீங்கப்பெற்று நலமடைந்தனன். அப்பழி மன்னனைத் தொடர அஞ்சிக் கீழக்கோபுர வாயிலில் நின்றுவிட்ட தென்ப. இறைவன் திருவாணையின்படி மேலக்கோபுர வாயிலின் வழியாகக் கூடலம்பதிக்கு வரகுணதேவர் வர மனமில்லாமல் மிகவும் வருந்தினர். அங்கேயே வீற்றிருந்தனர். தன் பெயரால் மேல்பால் ஒரு திருக்கோபுரம் எடுப்பித்தனர். காலங்கள் தோறும் காதலுடன் சென்று வழிபட்டு வந்தனர்.

கள்வன் ஒருவன் அரண்மனையில் களவுசெய்தனன். காவலர் அவனைப் பிடித்து அரசன் முன் கொண்டு நிறுத்தினர். அக்கள்வன்

மேல் திருவெண்ணீறு இருக்கக் கண்டு இவர் ஒரு சிவனடியார். சிவத் தொண்டின் பொருட்டே களவெடுத்திருப்பர் என உட்கொண்டு அவரை விடுவிக்கப் பணித்தனர்.

மற்றொரு நாள் மன்னன் அரண்மனையில் துயில் கொண்டிருக்கும் போது நள்ளிரவில் நரிகள் ஊளை யிட்டன. சிவன் நினைவுடன் வேறெவ் வெண்ணமும் இன்றி மன்னன் இருந்தமையால் அவ்வொலி அவர் காதில் ''அரஅர'' என்னும் சிவஒலிபோல் இருந்தன. அதனைக் கேட்ட மன்னன் அமைச்சரை உசாவினன். அவைகள் நரியின் ஊளை யென்று அமைச்சர்கள் அறைந்தனர். மன்னன் அவைகளுக்குப் போர்வை யளிக்கப் பணித்தனன். அங்ஙனமே கொடுக்கப்பட்டது.

பின்னொரு நாள் மழையின் மிகுதியால் தவளைகள் அரற்றின. அவை அரசனுக்குச் சிவனடியார் ஒலிபோல் கேட்கப்பட்டன. அமைச்சர்கள் அவை தவளைகளின் ஒலி யென்றனர். மன்னன் அவை கள் இரை பெருது இறைவனை வேண்டுகின்றன என்றெண்ணி, தின்னும் பொருளும் காசும் சேரக்கொடுக்கப் பணித்தனர். அவ்வாறே அவை கொடுக்கப்பட்டன.

சிவனடியார் ஒருவர் சிவபெருமான் திருமஞ்சனத்திற் கென்று கழுவிக் காயப்போட்டிருந்த எள்ளினை வழிப்போக்கன் ஒருவன் அவ்வெள்ளில் ஒரு பிடி எடுத்து வாயில் இட்டனன். சிவனடியார் அவ்வெள்ளினை விழுங்கி விடாதபடி பிடித்துக்கொண்டு வரகுண தேவர்முன் விட்டனர். அரசன் அவனை வினவ அவன் அடியேன் இனி வரும் பிறப்பில் அதனை ஆட்டும் எருதாகப் பிறந்து அவ்வெள் ளினையாட்டும் சிவபுண்ணியம் பெறும் பொருட்டு இவ்வாறு செய்தனன் என்றான்.

உடனே மன்னன் அரியணையினின்றும் திடும் எனக் குதித்து, அவன் வாயின் எள்ளில் பாதியைத் தன் வாயிற் கொண்டனன். கொண்டு செக்கிழுக்க இரண்டு எருதுகள் வேண்டுமன்றோ? அடி யேன் ஓர் எருதாகப் பிறக்கக் கருதி இவ்வாறு செய்தனன் என்றனர். பின் அவனை விடுவிக்கப் பணித்தனர். அவனும் விடுவிக்கப்பட்டனன்.

மன்னர் ஒரு நாள் திருவுலாப் போந்தனர். ஒரு வெள்ளிய தலைமண்டையோடு அத்தெருவின்கண் கிடக்கக் கண்டனர். அதனை வணங்கி அடியேன் தலைமண்டையோடும் இவ்வாறு மருத வட்டத்துக் கிடக்கும் பேறு பெறுதல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டனர்.

மற்றொரு நாள் வரகுணதேவர் மருதவாணரைக் கண்டு கும்பிட்டு வணங்குதற் பொருட்டு வந்தனர். திருக்கோவில் திருமுற்றத்தின் கண் நாய்க்கட்டம் கிடந்தது. முதன் முறை வலம் வரும்போது இதனை எவரேனும் எடுத்துவிடின் அவர் எண்காட்டின் காற்கூறு பெறுவர் என்று நினைத்துக்கொண்டு வலம் வந்தனர். இரண்டா முறை வலம் வரும்போது அங்ஙனமே அரைக் கூறு என நினைத்துக் கொண்டு வலம் வந்தனர். அப்பொழுதும் அஃது எடுக்கப்படவில்லை. மூன்றும் முறை வலம் வரும்போது முக்காற்கூறு என நினைந்து கொண்டு வந்தனர். அப்போதும் அஃது எடுக்கப்படவில்லை. உடனே மனமிக மகிழ்ந்து முழுக் கூறும் என்னதே என்று நினைந்து தாமே எடுத்து அப்புறப்படுத்தித் தூய்மை செய்து அச்சிவப்புண்ணியப்

பேறும் பெற்றனர். இதனால் அறியக் கிடப்பது நாய்க்கட்டம் கோயின் முற்றத் தகற்ற லாலரிய, தூய்மைச் செயல் வாய்க்குந் தொண்டர்க்கு என்பதாம்.

பிறிதொருநாள் பொன்போற் காணப்படும் வேப்பம் பழங்கள் உதிர்ந்து கிடப்பக் கண்டனர். அவை வடிவ ஒற்றுமையால் சிவலிங்கம் போற் காணப்பட்டன. அவைகள் மண்ணில் விழாவண்ணம் வேப்ப மரங்கட்கெல்லாம் மேற்கட்டி யெனப்படும் விதானம் கட்டும்படி பணித்தனர்.

முன் இவ்வரகுண தேவர்க்குத் தோற்றோடிப் போன விக்கிரம சோழன் தன் அருந்தவ மகளை மணம் முடிப்பித்துக் கொடுத்து நட்புச் செய்து கொள்ளக் கருதினன். கருதி அவ்வாறே மிக்க சிறப்பாகத் திருமணம் புரிவித்துக் கொடுத்தனன். வரகுண தேவரும் கைப்பிடித்து ஏற்றுக்கொண்டனர்.

இரவு பள்ளியறை அடைந்ததும், உலகத்துச் சிறந்த பொருள் சிவபெருமானுக்கு எனப்படுவதால் அடியேன் இவளைச் சிவபெருமான் திருவடிக்கு ஒப்புவிப்பேன் எனக்கொண்டு, நள்ளிரவில் திருக்கோவிலுக்கு அந்நங்கையினையும் அழைத்துக்கொண்டு சென்றனர். திருக்கோவில் திருக்கதவினை மருதவாண! என்றழைத்துத் தட்டினர். இறைவனும் வரகுண என்றழைத்துத் திருக்கதவுத் திருக்காப்பு நீக்கியருளினன். ஆண்டவனை வேண்டி அந்நங்கையினை ஏற்றருள விண்ணப்பித்தனர். ஆண்டவனும் அவ்வாறே ஏற்றருளினன். கதவுந் திருக்காப்பிடப்பட்டது. மன்னன் அரண்மனை வந்து சேர்ந்து சிவன் நினைவுடன் பள்ளிகொண்டனன்.

திருப்பள்ளி யெழுச்சியின் பொருட்டுத் திருக்காப்பு நீக்கப் பட்டது. சிவக்குறியின் முடிமீது வளையலணிந்துள்ள ஒரு திருக்கை தோன்றிக் கொண்டிருப்பக் கண்டு அனைவரும் வியந்தனர். அரசனுக்கு அறிவித்தனர். அரசனுணர்ந்து ஓடோடியும் வந்து அழுது புரண்டு அடியேன் தொட்ட கை என்று ஏற்றுக்கொள்ளாது விட்டனையோ என்று விண்ணப்பித்தனர்.

சிவபெருமானும் ஊராரறிய அதனையும் விழுங்கியருளினன். இதனை ஊரறிய ஒட்டிய கை ஊரறிய ஒட்டவுன்னிச், சீர்சிவனும் விட்டிருந்தேற்றான் என்பதனால் அறியலாம். (உஅ)

நேரிசை வெண்பா

வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்கள் எல்லாம்—பொழில்சூழ்
மருதிடத்தான் என்றொருகால் வாயாரச் சொல்லிக்
கருதிடத்தான் நில்லா கரந்து.

(இ - ள்.) நிலவுலகத்து வாழும் நாம் அனைவரும் இறைவன் நூல் எனப்படும் திருமாமறை திருமா முறைகளாகிய வேதாகமங்களின் வழி யொழுகாது அந்நெறிக்கு மாறாகப் பிழைத்து மனங்கொண்ட வகையெல்லாம் இயற்றிப் பிழையாகச் செய்துள்ள பழி

பாவங்களும் அதனல் ஏற்படுந் துன்பங்களும் ஆகிய அனைத்தும், ஒரு முறை சோலைகளால் சூழப்பட்ட திருமருதூரினைத் திருவிடமாகக் கொண்டருளிய மருதவாணனே என்று வாய் குவித்து அவன் திருப் பெயரை மொழிவது கூடச் செய்தல் வேண்டா; அப்பழி பாவங்கள், வாயினல் ஓதாது காதல் நிறை தூய உள்ளத்தினல் எண்ணிய துணை யானே, ஒடுங்கி நிலை நில்லாது நீங்கும்.

(வி - ம்.) வழி - நடக்க வேண்டிய நெறி முறைகள். வாய் கூப்ப - வாய் குவிய. மறைவழி யொழுகல் வேண்டும் என்னும் வாய்மை வருமாறு :

"மறைகள் ஈசன்சொல் அச்சொல்வழி வாரா உயிரை வைக்கும்
சிறைகள் மாநிரயம் இட்டபணி செய்வோர் செல்வத் தோடும்
உறையுமா பதிகள் உம்பர் உலகங்கள் யோனிக் கெல்லாம்
இறைவன் ஆணையினல் இன்பத் துன்பங்கள் இயைவ தாகும்."[1]

—சிவஞானசித்தியார், உ. உ—உஎ. (உ௧)

கட்டளைக் கலித்துறை

கரத்தினில் மாலவன் கண்கோண்டு நின்கழல் போற்றநல்ல
வரத்தினை ஈயும் மருதஅப் பாமதி யோன்றுமில்லேன்
சிரத்தினு மாய்என்றன் சிந்தையு ளாகிவெண் காடன்என்னும்
தரத்தினு மாயது நின்னடி யாந்தெய்வத் தாமரையே.

(இ - ள்.) திருமால் தன்கையால் தன் கண்ணைப் பேர்த்து உன் திருவடியினைப் "போற்றி போற்றி" என ஓதப் பெறும் தனித்தமிழ்த் திருமாமறை ஓதிப் பூத்தூவிப் பூசை செய்தலாகிய அருச்சனை புரிந்து வணங்க; அவன் விரும்பிய நல்ல வரத்தினைக் கொடுத்தருளும் திரு விடை மருதூரில் வீற்றிருந்தருளும் மருதப்பனே! உன் திருவடி யாகிய தெய்வத்தன்மையுள்ள தாமரைகள் அறிவு ஒருசிறிதும் இல்லாத எளியேனுடைய முடியிடத்தும் போற்றத் தக்கதாகி, என் உள்ளத் துள்ளும் உள்ளதாகித் திருவெண்காடன் என்னுந் தன்மையினும் திருவருள் புரிந்தருளியது.

(வி - ம்.) கரம் - கை. மாலவன் - திருமால். மதி - அறிவு. சிரம் - முடி. தரம் - தன்மை.

"தேவிற் சிறந்தது திருமால்" என்ப. ஆயினும் அத்திருமால் ஆருயிர் இனமே ஆவன். முதல்வனின் திருவாணை பெற்றுக் காத்தற் றொழில் புரியுங் கடப்பாட்டினன். காத்தற்றொழிற்குக் கைப்படை யாழி வைப்பெனவேண்டும். அவ்வாழிப்படையினைப் பெறும் பொருட்டு அம்மால் அரிய சிவபூசையினை இயற்றினன். சிவபூசை யொன்றே எய்தற்கரிய பெரும்பே றளிக்கும் செய்தற்கரிய நற்றவம். சிவபெருமானின் முதன்மையும், திருமாலின் இழிபும் தோன்ற "நல்ல வரத்தினை ஈயும்" என ஈதற் சொல்லால் இயம்பப்பட்டது. (௩0)

திருச்சிற்றம்பலம்

---

1. 'காண்பவன்.' சிவஞானசித்தியார், உ. உ—உ௪.

கட்டளைக் கலித்துறை

திருச்சிற்றம்பலம்

மெய்த்தொண்டர் செல்லும் நெறியறி யேன்மிக நற்பணிசெய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றேண்டு வந்திலன் உண்பதற்கே
பொய்த்தொண்டு பேசிப் புறம்புற மேயுன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கோள்ளுதி யோகச்சி ஏகம்பனே.

(இ - ள்.) (நிலைபேறான திருவடியினைப் பெறுவிக்கும் சிவத் தொண்டு மெய்த்தொண்டு எனப்படும்; அதனைச் செய்வோரே) மெய்த் தொண்டர்கள் எனப்படுவர். அத்தொண்டர் அன்பால் அகம்புறம் ஒத்துச் செய்யும் நன்னெறி நாற்படித்திருத் தொண்டின் சிறப்பினை எளியேன் சிறிதும் உணர்ந்திலேன். கைத்தொண்டு செய்யும் காதலடி யார்தம் அடிமையாய் அவர்பின் சென்று அவர் திரு அடித்துணை பெற்றுத் தொண்டு செய்திலேன். இத்தொண்டுகளைக் கண்டுங் கேட்டும் உளமார உவப்புக் கொண்டிலேன். என்னுடைய வயிற்றை வளர்க்கும் பொருட்டுத் தொண்டன் போலக் கோலமும் பூண்டு நடித்து வருகின்றேன். இத்தன்மை வாய்ந்த எளியேன் திருத்தொண்டு களை ஏற்றருள்வாயோ? திரு ஏகம்பத் திருப்பதியின்கண் வீற்றிருந் தருள்பவனே!

(வி - ம்.) மெய்-நிலையானது. கைத்தொண்டு உழவாரப் படை ஏந்திப் புரியும் திருத்தொண்டு. அத்தொண்டின் சிறப்பு வருமாறு:

"ஈசர் மிழலை இறையவர்பால் இமையப் பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம் திருமா மகனார் ஆதலினால்
காசுவாசி யுடன்பெற்றார் கைத்தொண் டாகும் படிமையினால்
வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்."

—கஉ, அப்பர், உ௬0. (௧)

ஏகம்ப னேஎன்னை ஆள்பவ னேஇமை யோர்க்கிரங்கிப்
போகம்பன் னளுங் கோடுக்கின்ற நாயக போங்கும்ஐவாய்
நாகம்போன் ஆரம் எனப்போலி வுற்றுநல் நீறணியும்
ஆகம்போன் மாமலை ஒப்பவ னேஎன்பன் ஆதரித்தே.

(இ - ள்.) உன்னுடைய திருவருள் அழகு நிறைந்த திருப்பெயர் களை வாயார வழுத்திக் கூற நினைந்து திரு ஏகம்பத்தின்கண் திருக் கோவில் கொண்டருள்பவனே! அடியேனை மீளா ஆளாம் அடிமை யாக ஏற்றுக்கொண்டருள்பவனே, விண்ணோர் பொருட்டுக் கழிவிரக் கங்கொண்டு, அவர்கள் விரும்பும் நுகர்பொருள்களைப் பல நாட் களிலும் தந்தருளும் முதல்வனே, சினங்கொண்டு பொங்கும் ஐந்து தலைகளையுடைய நச்சுப்பாம்பினைச் செம்பொன் அணி என அழகுறப் பூண்டுகொண்டருள்பவனே, நல்ல திருவெண்ணீற்றினை அணியப்

பெற்ற திருமேனியானது பொன்மலைபோன்று விளங்கும்படி திகழ்ப வனே, என்று திருவருட் டுணையால் ஓதுவேன். (உ)

தரித்தேன் மனத்துன் திகழ்தரு நாமந் தடம்பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப னேஎன்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர் ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யாரடி பூணத் தெளிந்தனனே.

(இ - ள்.) மிக விரிந்த இடத்தையுடைய அழகிய சோலையின் கண், கீற்றுக்களையுடைய வண்டுகள் இனிமையாக ஒலிக்கின்ற திருக் கச்சித் திருப்பதிக்கண் வீற்றிருந்தருளும் திரு ஏகம்பனே, அடியேன் மனத்தின்கண், உன்னுடைய திருநாமத்தினைத் தாங்கப் பெற்றேன்; எளியேனுடைய கடிய வினைகள் எல்லாம் நீங்கி யொழிந்தன. தேவரீ ரைப் பணியாத முழுமூடரது அறியாமையினை நோக்கி மிகவும் சிரித் தேன்; உன் திருவடிக்கண் அடிமை கொண்டவரின் திருவடியினை அடியேன் முடியினுக்கு அணியாகப் புனையத் தெளிந்துகொண்டேன். (ங)

தெளிதரு கின்றது சென்றென் மனம்நின் திருவடிவம்
அளிதரு நின்னருட் கையம் இனியில்லை அந்திச்செக்கர்
ஒளிதரு மேனிஎம் ஏகம்ப னேஎன் றுகந்தவர்தாள்
தளிதரு தூளிஎன் றன்தலை மேல்வைத்த தன்மைபெற்றே.

(இ - ள்.) அந்திக் காலத்துண்டாம் செவ்வானத்தைப்போல் ஒளி தருகின்ற திருமேனியினைப் பெற்ற திரு ஏகம்பத் திருவூரின்கண் வீற்றிருந்தருளும் எம் முதல்வனே! என்று தேவரீருடைய திருப் பெயரினை ஓதிப் பேரின்பம் அடைந்த பேரடியார்தங்கள் திருவடியில் தங்கியிருக்கும் புழுதியினை அடியேன் தலைமேல் வைத்த தன்மையினை யடைந்து எளியேனின் உள்ளம் தேவரீர் திருவடிவத்திற் சென்று தெளிவினை அடைகின்றது; அதனால் இனிமேல் அந்தண்மை செய் கின்ற தேவரீர் திருவருள் உண்டாவதற்கு ஐயம் ஒரு சிறிதும் இல்லை.

(வி - ம்.) அளி - அந்தண்மை; தலையளி; கருணை. தளி - இடம்; கோயில். (ச)

பெற்றுகந் தேனென்றும் அர்ச்சனை செய்யப் பெருகுநின்சீர்
கற்றுகந் தேன்என் கருத்தினி தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந் தேறும் உகந்தவ னேபட நாகக்கச்சின்
சுற்றுகந் தேர்விடை மேல்வரு வாய்நின் துணையடியே.

(இ - ள்.) திருக்கச்சி ஏகம்பத்தின்கண் எழுந்தருளி யிருக்கும் விருப்பத்தினை யடைந்து ஆனேற்றினை ஊர்தியாகக் கொண்டருளிய வனே படங்களையுடைய கச்சாகிய ஆதிசேடனின் சுற்றாகிய அணையை விரும்பிய திருமாலாகிய அழகிய விடைமீது எழுந்தருளி ஊர்ந்தருள் பவனே, தேவரீரது திருவடியே எக்காலத்தும் மிகவும் அருச்சனை செய்தற்பொருட்டுத் திருவருள் துணையால் இடம் பெற்று வந்தேன்.

எளியேனுடைய எண்ணம் கைகூடி நலம் பெற்று இனிமை யுண்டாக உன்னுடைய சீர்த்தி யெனப்படும் மிக்க புகழை அடியேன் ஓதி யுள்ள முவந்து பேறுற்றேன்.

(வி - ம்.) திருமால் விடையாக வந்தடைந்து சிவபெருமானைச் சுமந்து உய்ந்தமை வருமாறு :

"கடகரியும் பரிமாவும் தேருமுகந் தேருதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ."

—அ. திருச்சாழல், கஙு. (ரு)

அடிநின்ற சூழல் அகோசரம் மாலுக் கயற்கலரின்
முடிநின்ற சூழ்முடி காண்பரி தாயிற்றுக் கார்முகிலின்
இடிநின்ற சூழ்குரல் ஏறுடை ஏகம்ப யாமெங்ஙனே
வடிநின்ற சூலப் படையுடை யாயை வணங்குவதே.

(இ - ள்.) திருமாலுக்குச் சிவபெருமானின் திருவடி காண்பதற்கு ஒண்ணாததாய் வளர்ந்து நின்றது. அதுபோல் அயனாகிய நான்முகற்குக் கொன்றைமாலை அணிந்துள்ள திருமுடியுங் காண்பதற்கு எட்டாததாக இருந்தது. கார் காலத்து மேகத்தின் இடியை யொத்த ஓசை மிக்க ஒலியினைக்கொண்ட ஆனேற்றினை ஊர்ந்தருளும் ஏகம்பவாணனே, கூர்மை தங்கிய சூலப்படையினை ஏந்தியருளிய தேவரீரை அடியேங்கள் தொழுவது எவ்வாறு?

(வி – ம்.) கோசரம் - எட்டுவது; அறியத்தக்கது.

மாலும் அயனும் முனைப்புக் கொண்டு தேடினர். அதனால் அவர்கள் அறிய முடியாதபடி அனலுருவாய் நின்றனன் சிவன். முனைப்பற்று அடிமையாய் நின்று காதலிப்பார்க்குக் கடவுட் காட்சி அகத்தும் புறத்தும் திருவருளால் எளிதாகக் காணப்படும். (சு)

வணக்கந் தலைநின் திருவடிக் கேசெய்யும் மையல்கொண்டோர்
இணக்கன்றி மற்றோர் இணக்கறி வோம்அல்லம் வல்லரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி ஏகம்பம் பாடின்அல்லால்
கணக்கன்று மற்றொரு தேவரைப் பாடுங் கவிநலமே.

(இ - ள்.) தேவரீரது திருவடிகளுக்கே மேலாம் தலைவணக்கம் செய்கின்ற பேரன்பு பூண்ட மெய்யடியார்களின் நல்லிணக்கம் அல்லாமல், வேறோர் இணக்கத்தை ஒரு சிறிதும் அறிய மாட்டோம்; வில்லுக்குரிய நாணெனப்படும் குணமாகப் பாம்பினையும், வில்லாக உயர்ந்த பொன்மலை யெனப்படும் மேருவினையும் கொண்டருளிய சிவபெருமானுடைய குளிர்ச்சி மிக்க திரு ஏகம்பத்தினைச் சீரிய செந்தமிழ்ப் பாக்களால் பாடுவதல்லாமல், (வேறொரு தேவர்களைப் பாடுதல் செய்யேம்.) வேறு தேவர்களைப் பாடுங் கவிநலம் ஒரு கணக்கிலுட் சேர்தற்குரிய தன்று.

(வி - ம்.) குணம் - வில்லின் நாண். மையல் - பேரன்பு.

வழிபாட்டில் தலைவணக்கம் முதற்கண்ணதும் சிறந்ததுமாம் உண்மை வருமாறு :

"தலையே நீ வணங்காய்—தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்." —ச. ௬௧—௧.

"கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை."—திருக்குறள்,—௯ (எ)

நலந்தர நானொன்று சோல்லுவன் கேண்மின்நல் லீர்கள்அன்பு
கலந்தர ஞர்கச்சி ஏகம்பங் கண்டு கனல்திகிரி
சலந்தரன் ஆகம் ஒழிக்கவைத் தாய்தக்கன் வேள்வியெல்லாம்
நிரந்தர மாகச்செய் தாயென்று பூசித்து நின்மின்களே.

(இ - ள்.) செம்பொருட்டுணிவாம் சித்தாந்த சைவச் செந்நெறி யொழுகும் நல்லார்களே! நன்மைச் சிறப்புண்டாக அடியேன் ஒன்று சொல்வேன் கேண்மின்கள். நீங்கா அன்புகொண்டு சிவபெருமானின் திருக்கச்சி ஏகம்பத்தினைக்கண்டு கும்பிட்டுத் தீப்பிழம்பு போலும் ஆழிப்படையினால் சலந்தரன் உடம்பினை யொழித்தருளச் செய்தனை, தக்கனது பெரு வேள்வியினை இடமிலாது கெடும்படி செய்தனை, என்று எடுத்தோதித் திருமுறை கொண்டு பூசை செய்து நில்லுங்கள்.

(வி - ம்.) நல்லார்-சித்தாந்த சைவச் செல்வர். ஆகம் - உடம்பு. நிரந்தரம் - இல்லாமல்.

செம்பொருட்டுணிவினரை நல்லாரென நவிலும் உண்மை வருமாறு :

"கல்லால் நிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே."

—சிவஞானபோதம், மங்கல வாழ்த்து.

திருமுறையின் வாயிலாக வழிபடு முண்மை வருமாறு :

"நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே."

முறை—திருமுறை —௧. ௬௧—௧.

"நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமும்" எனவிவ்வா சிரியர் ஓதுவதுங் காண்க. (அ)

[தலைவனது உருவெளிகண்டு வருந்துந் தலைவிக்குத் தோழி கூறியது.]

மின்களேன் றூர்சடை கொண்டலென் றூர்கண்ட மேனிவண்ணம்
பொன்களேன் றூர்வெளிப் பாடுதம் பொன்னடி பூண்டுகொண்ட
வென்களேன் றுலும் பிரிந்தறி யார்கச்சி ஏகம்பத்தான்
றன்களேன் றுருல கெல்லாம் நிலைபெற்ற தன்மைகளே.

(இ - ள்.) தம்முடைய அழகிய திருவடியினை முடியினுக் கணியாகக்கொண்டு மனத்திடை நீங்காதமைத்துத் திருக்கச்சியினையும், ஏகம்பத்தினையும் வீற்றிருந்தருளும் திரு இடமாகக் கொண்டருளிய சிவபெருமானின் எல்லா வுலகமும் நீக்கமற நிறைந்திருக்குந் தாங்கும் நிறைவாகிய பெருவியாபகத் தன்மைகள் வஞ்சகம் என்றனர்; அங்ஙனம் கூறினூர்க்கு யான் அவனை நீலகண்டமும், செஞ்சடையும் பொன் மேனியுமாக யாண்டுங் கண்டு கும்பிட்டு வழிப்பட்டிருப்ப, நீவிர் அவ்வாறு கூறுதல் அடாதென்று மொழிய, அவர்கள் அப்பெருமான் அங்ஙனம் வெளிப்பட்டுக் காட்சி தந்தருளுதலும் இவ்வாருகும். அவனது திருச்சடைகள் மின்னற் கொடிகள் என்றூர்கள். திருக்கண்டத்தினை மேகம் எனக் கூறுவர்; திருமேனியின் வண்ணம் பொன் வண்ணம் என்றூர்கள்.

(வி - ம்.) கொண்டல் - மேகம். இதன்கண் சிவபெருமானின் திருவுருவ வெளிப்பாட்டின் ஒப்புமையால் அவன்றன் திருவருள் வெள்ளப் பெருக்கால் வையகம் வாழ்கின்றதென்னும் வாய்மை புலனுகும். இறைவன் திருக்கண்டம் மேகம், திருச்சடை மின்னற் கொடி; மேனி மேகம் பொழிந்த பொன்மழை.

இறைவன் "கருணைமுகில்" என்னும் உண்மை வருமாறு:

"கண்டா ருளத்தினிற் காலூன்றிப் பெய்யுங் கருணைமுகில்
அண்டார் புரத்துக்கும் அன்பர் வினைக்கும் அசனிதன்னைக்
கொண்டாடி ஞர்முனம் கூத்தாடும் மத்தன்றன் கோலமெல்லாம்
விண்டாலம் மாவொன்றுங் காணுது வெட்ட வெறுவெளியே."

—தாயுமான வடிகள், உஎ. பாயப்புலி, ௫. (கூ)

[தலைவன், வேறுபாடுகண்டு வினவிய பாங்கற்கு ஏதுக் கூறியது]

தன்மையிற் குன்றுத் தவத்தோர் இமையவர் தாம்வணங்கும்
வன்மையிற் குன்று மதிற்கச்சி ஏகம்பர் வண்கயிலைப்
பொன்மயிற் சாயலுஞ் சேயரிக் கண்ணும் புரிகுழலும்
மென்மயிற் சாயும் மருங்குலுங் காதல் விளைத்தனவே.

(இ - ள்.) நன்மைக் குணத்தினின்றுங் குறையாத நல்ல தவத்தினரும் தேவர்களும் பணிகின்ற உறுதிப்பாட்டினுல், குறைவுபடாத மதில்களைக் கொண்ட திருக்கச்சி ஏகம்பரது வளப்பமிக்க கயிலை

வரைப்பின்கண் நின்ற, பொன் போலும் மயிலின் தன்மை வாய்ந்த வளின், சாயலும், செவ்வரி பரந்த கண்களும், வகிராகிய கூந்தலும், நுண்ணிய இடையும், என்மாட்டு நீங்கா வேட்கையினை விளைத்தன.

(வி - ம்.) இத்திருப் பாட்டுத் தலைவன் வேறுபாடு கண்டு வினவிய பாங்கற்கு எதுக் கூறியது. பாட்டுடைத் தலைவனைத் திருக் கச்சி ஏகம்பவாணரைக் கொண்டு அகப்பொருட்டுறைக் குறிப்பு அமையும்படி பாடப்பட்டதாகும் இது. இது போல் வரும் பாட்டுக் களையும் அமைத்துக் கொள்க. (௯௦)

[தோழி, யானை வினவிவந்தார் ஒருவரெனக் கூறித் தலைவியது குறிப்பு உணர்ந்தது]

தனமிட் டுமைதழு வத்தழும் புற்றவர் தம்அடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி ஏகம்பர் வான்கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு வினவியோர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம் பொழுதிலும் பூங்கொடியே.

(இ - ள்.) உமையம்மையார் தழுவிய காரணத்தால் அகம்புறமாக முலைத் தழும்பும் வளைச்சுவடும் பெற்ற அருளாளர் தம்முடைய அடிய வர்களின் தூய மனக்கோயிலை விட்டு நீங்காத, மதில்சூழ்ந்த திருக் கச்சித் திருவூரின்கண் வீற்றிருந்தருளும் திரு ஏகம்பரது, உயர்ந்த கயிலாய வரைச்சாரலில், முருகவேளை ஒத்த ஒருவர், சினம் நீங்காத யானை எய்திற்றோ என வினவிப் பகற்காலத்தும், நம்முடைய புனத்தை விட்டு நீங்கார்; பூங்கொடியை யொத்தவளே, இவர் யாரோ அறியேன்.

(வி - ம்.) தனம் - முலை. களிறு - ஆண்யானை. சேய் - முருக வேள்.

இது, தலைமகன் தழைகொண்டு நின்று கரந்தமொழியாற் றன் கருத்தறிவிக்க, மேனி ஒளியிலனாய் இப்புனத்தினின்றும் போகாது யானையோடு ஏனம் வினவி இவ்வாறு பொய்கூறுகின்ற இவன் யாவனோ எனத் தோழி அவனை ஐயுற்றுக் கூறுகிற்றல். "இது, மதி யுடம்படுத்தல்;: அஃதாமாறு இரண்டனுள் ஒன்றுற் சென்றெய்திய பின்னர்த் தெருண்டு வரைதல் ஒருதலை; தெருளானாயின் அவள் கண்ணுற் காட்டப்பட்ட காதற்றோழியை வழிபட்டுச் சென்றெய்தல் முறைமை யென்ப.

வழிபடுமாறு தெற்றெனக் குறைகூறாது இரந்து வைத்துக் கரந்தமொழியாற் றன் கருத்தறிவித்து அவளை ஐய உணர்வினளாக்கி அது வழியாக நின்று தன்குறை கூறுதல். வேழம் வினாதல் என்பது. குறை கூறத் துணியாநின்றவன் என் குறை இன்னதென்று இவளுக்கு வெளிப்படக் கூறுவேனாயின் இவள் மறுக்கவுங் கூடுமென உட் கொண்டு என்குறை இன்னதென்று இவள்தானே உணருமளவும் கரந்தமொழியாற் சில சொல்லிக் குறையுறுவதே காரியமென, வேட்டை கருதிச் சென்றானாக அவ்விருவருழைச் சென்று நின்று தன் காதல் தோன்ற இவ்விடத்து ஒரு மதயானை வரக்கண்டீரோ என வேழம் வினவா நிற்றல்."

வேழம் வினதற்குச் செய்யுள் வருமாறு :

"இருங்களி யாயின் றியானிறு மாப்பவின் பம்பணிவோர்
மருங்களி யாவன லாடவல் லோன்றில்லை யான்மலையீங்
கொருங்களி யார்ப்ப வுமிழ்மும் மதத்திரு கோட்டொருநீள்
கருங்களி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே."

—அ. திருக்கோவையார், ௫௨.

சிவபெருமான் வளைத்தழும்பும் முலைச்சுவடும் அணிந்த மெய்ம்மை வருமாறு :

"பூதி யாகிய புனிதநீ றாடிப்
பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து
காதில் வெண்குழை கண்டிகை தாழக்
கலந்த யோகத்தின் மருவிய கருத்தால்
ஆதிதேவனு ராயுமா தவஞ்செய்
அவ்வ ரகமொலோ அகிலமீன் றளித்த
மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு
வளைத்த ழும்புடன் முலைச்சுவ டணிந்தார்."[1]

—௧௨. திருக்குறிப்புத் தொண்டர், ௬௬. (௧௧)

[தோழி தலைமகளது மேனி வேறுபாட்டால் அணங்கெனக் கூறியது]

பூங்கோத் திருந்தழை யார்பொழிற் கச்சிஏ கம்பர்பொற்பார்
கோங்கத் திருந்த குடுமிக் கயிலையெம் பொன்னெருத்தி
பாங்கோத் திருந்தனை ஆரணங் கேபடர் கல்அருவி
ஆங்கத் திருந்திழை யாடிவந் தாற்கண் டடிவருத்தே.

(இ - ள்.) அழகு நிறைந்த திருமகளை யொத்துத் திகழ்பவளே! பூங்கொத்துக்களும், பெருமை பெற்ற பச்சிலைகளும் நிரம்பிய சோலை சூழ்ந்த திருக்கச்சி ஏகம்பரது, அழகு நிறைந்த கோங்கு மலர்களிருந்த சிகரங்களையுடைய திருக்கயிலைப் புனத்து எம் பொன்னை யொத் தாளது பண்புகளை யொத்து இருந்தாய், அத்திருந்திய அணிபூண்டாள் படர்ந்த ஒலிக்கின்ற ஊற்றுநீரில் உனைப்பிரிந்து அவள் நீராடி வருவளேல், வந்த அப்போது அவளைக்கண்டு குறைகூறுது, நீ அவளுடன் கூடி அடி வருந்தப் பதிக்கு வருவாய்.

(வி - ம்.) இருந்தழை - பெருமையுற்ற தழை. இரும் - பெரிய. குடுமி — உச்சி. பாங்கு - பண்பு; குணம். ஆரணங்கு - திருமகள். கல் - ஒலி. (௧௨)

1. 'துடிமகாள'. அ. அருட்பத்து, ௫.

[மான் வினவி வந்தாற்குத் தினைப்புனம் காக்குந்தொழில்
எமக்கு என்று தோழி கூறியது]

வருத்தந் தரும்மெய்யுங் கையில் தழையும்வன் மாவினவும்
கருத்தந் தரிக்கும் நடக்கஇன் றைய கழல்நினையத்
திருத்தந் தருளுந் திகழ்கச்சி ஏகம்பர் சீர்க்கயிலைத்
துருத்தந் திருப்பதன் று இப் புனங் காக்குந் தொழில்எமக்கே.

(இ - ள்.) வாடி வருந்திய உடம்பும், கையில் ஏந்தியுள்ள திருத்தஞ் செறிந்த வாடாத்தழையும், வலிமை மிகுந்த விலங்காகிய யானையைப்பற்றி வெளிப்பட வினவும் வினவின் உள்ளெண்ணமும், (உய்த்துணரின்) இப்பொழுது வேறுபாடுடையனவாகும். ஐயனே! உம்முடைய எண்ணப்படி நடக்கக்கடவீர். திருவடியினைக் காதலாற் கைகூப்பி இடையறாது நினைவார்க்கு வேண்டும் செல்வத்தினை வேண்டியாங்கு ஈந்தருளும், விளங்குகின்ற திருக்கச்சி ஏகம்பரின் சிறந்த கயிலாயச்சாரலிலுள்ள இப்புனத்தைக் காக்குந் தொழிலினை உடையோமாகிய எங்கட்கு உம்முடைய வரவுபோக்குக்களை ஆராய்ந்து கொண்டிருப்பது தொழிலன்றாகும்.

(வி - ம்.) 'கருத்தந் தரிக்கும்' கருத்து - எண்ணம் அந் தரிக்கும் - மாறுபாடாகும்; வேறுபாடுடையதாகும். தலைவனுடைய உள்ளக் கருத்தோர்ந்து தோழி எதிர்மொழி கொடுத்தல் என்னுந் துறை. துரு - ஆராய்வு. (கக)

[மான் வினவி வந்தாற்கு ஆயத்தார் கூறியது]

எம்மையும் எம்மைப் பணிகொள்ளுங் கம்பர் எழிற்கயிலை
உம்மையும் மானிடம் இப்புனத் தேவிட்டு வந்தமைந்தர்
தம்மையும் மானையுஞ் சிந்தையும் நோக்கங் கவர்வஎன்றே
அம்மையும் அம்மலர்க் கண்ணும் பெரியீர் அருளுமினே.

(இ - ள்) எப்பிறவியிலும் எம்மைத் தந்திருத் தொண்டினை இடையறாது புரியும்படி அடிமையாகக் கொண்டருளும், திரு ஏகம்பரது அழகிய கயிலையை அடைந்த புனத்தின்கண் மானினைத் தப்ப விட்டு, வலிமை மிக்கார் மான்வினவி அது காரணமாகப் பின் வந்தது, தம்முடைய மனத்தையும் மானை யொத்த எம் தலைவியையும் அவள் தீட்டிய கண்ணின் மையையும் கவர்ந்து கொள்ளுதற் பொருட்டு அல்லவா? இத்தகைய வஞ்சகமுடைய சொற்களைக் கூறிக்கொண்டிருக்கின்றீர் பெரியீர். கவர்ந்த அந்த மையினையும், அப்பரந்த கண்களையும் அளித்துத் தண்ணருள் புரியுங்கள்.

(வி - ம்.) எம்மையும் - எப்பிறவியையும். கம்பர் - திரு ஏகம்பத்து இறைவர். மை - கண்ணிற்கிடும் மை. மான் - மான் போன் பெண். மை - மைதீட்டிய கண்ணையுடைய பெண். இவை ஆகுபெயர்கள். மலர்க்கண் - மலர்போலும் விரிந்து பரந்த கண். கலைமான் வினுதல். (கச)

[பாங்கி இறைவனை நகுதல்.]

அருளைத் தருகம் பரம்பொற் கயிலையுள் எம்ஐயர்அம்
பிருளைக் கரிமறிக் கும்இவர் ஐயர் உறுத்திளய்ய
வெருள்அக் கலைகணை தன்னேடும் போயின வில்லிமைக்கும்
மருளைத் தருசொல்லி எங்கோ விலையுண்டிவ் வையகத்தே.

(இ - ள்.) உன்னுடைய மொழியைக் கேட்டார் அனைவர்களும் மருளும்படியான சொற்களையுடையாளே! வேண்டின மெய்யன்பர்களுக்கு வேண்டியவாறே தண்ணளிபுரியும் திரு ஏகம்பர்க்குரிய அழகிய பொன்னின் சிகரங்கள் வாய்ந்த திருக்கைலையினுள் எழுந்தருளி யிருக்கும் எம் தலைவர் இருட்டினை, யானைகள், இவ்விருள் எம்மோ டொத்த யானைகள் என்றெண்ணிப் போருக்குத் தடுக்கும் இந்த மலை நாட்டவர், அம்பினை வலிகொண்டு எய்ததனுல் அஞ்சிய அக்கலைமான், பட்ட கணையுடன் போயிற்று. இந்நிலவுலகத்து அவர் தம் வில்லின் வன்மைக்கு யாண்டு விலையுள்ளது!

(வி - ம்.) கம்பர் - ஏகம்பர். உறுத்தி – வலிகொண்டு. வெருள – அஞ்ச. கலை - கலைமான். கணை - அம்பு. வில்லிமை - வில்லின் வன்மை. மருள் – மயக்கம்.

தலைவன்றன் அம்பின் திறத்தைத் தலைவிக்குப் புகழ்ந்து கூறுதல். (கரு)

[தோழி இவர்கூறிய வேட்டை பொய்யென்று உண்மையை உணர்தல்]

வையார் மழுப்படை ஏகம்பர் ஈங்கோய் மலைப்புனத்துள்
ஐயார் வருகலை ஏனங் கரிதொடர் வேட்டையெல்லாம்
பொய்யான ஐயர் மனத்தவேம் பூங்கொடி கொங்கைபொறுப்
பையார் அரவிடை ஆயிற்று வந்து பரிணமித்தே.

(இ - ள்.) கூர்மை பொருந்திய மழுப்படையினை ஏந்தியருளிய திரு ஏகம்பரது, திரு ஈங்கோய் மலைப்புனத்துள். அழகு நிறைந்து திரிகின்ற மானையும், பன்றியினையும், யானையினையும் தொடர்ந்து செய்த எல்லா வகையான வேட்டைகளும் வந்து இப்போது வேறுபட்டுப் பொய்யாயினவாய், எம் தலைவர் தம் மனத்தினை விட்டு நீங்காதிருக்கின்றன எவை யெனின்? அவை எம்பூங்கொடி போல் வாளது கொங்கையினைப் பொறுக்க மாட்டாதுவையும் படம் தங்கிய பாம்பினை யொத்த இடைக்கே வந்து முடிந்தது.

(வி - ம்). வை - கூர்மை. ஆர் - பொருந்திய. ஐ - அழகு. ஏனம் – பன்றி. கரி – யானை. ஐயர் - தலைவர். கொங்கை - முலை. பை - படம். அரவு – பாம்பு. இடை – இடுப்பு.

இஃது அறிவு நாடல் என்னும் துறை. (கசு)

[தோழி நெறியருமை கூறி இரவுக்குறி மறுத்தது]

பருமுத் துதிர்த்திடுஞ் சீர்மத்த யானை நுதல்பகுந்திட்
டுருமொத்த திண்குரற் சீயத் திரிநெறி ஓங்கு வைவாய்ப்
பொருமுத் தலைவேற் படைக்கம்பர் பூங்கயி லைப்புனத்துள்
தருமுத் தனநகைத் தன்நசை யால்வெற்ப சார்வரிதே.

(இ - ள்) குறிஞ்சி நிலத்துத் தலைவனே! இடியினை யொத்த கடுமையான குரலினையுடைய அரிமா (சிங்கம்) இலக்கணம் எல்லாம் பொருந்திய, மதங்கொண்ட யானையின் மத்தகத்தைப் பிளந்து பருத்த கொம்பின்கண் உள்ள முத்துக்களை உதிரச் செய்யும் மாறுபாடு கொண்டுள்ள சுரத்தின் வழியாக, உயர்ந்த கூர்மையுள்ள வாயினையுடைய போர் செய்கின்ற முத்தலை வேற்படை யெனப்படும் சூலத்தினை ஏந்திய திரு ஏகம்பரது, அழகிய திருக்கயிலாயப் புனத்தகத்து ஒளியைத் தருகின்ற முத்தினை யொத்த பற்களையுடைய தலைவியின் விருப்பத்தினால் நீ வருதல் பொருந்தாது.

(வி - ம்.) பருமுத்து - பெரியமுத்து. சீர் - இலக்கணம். மத்தம் - மதம். சீயம் – அரிமா; சிங்கம். நுதல் - மத்தகம். பகுத்தல் - பிளத்தல். உருமு - இடி, திரிநெறி - மாறுபாடான வழி. சுரம் - பாலை. நகை - பல். நசை – விருப்பம். வெற்ப - குறிஞ்சி நிலத்தலைவனே. சார்தல் – வருதல். சார்வு - சார்தல். அரிது - பொருந்ாது. யானையின் மத்தகத்திலும் முத்து உண்டென்ப.

இது, நெறியருமை கூறி இரவுவரல் விலக்கல். (௬௭)

[தோழி அலர் அஞ்சி இரவுக்குறி மறுத்தது]

அரிதன் றிருக்கண் ணிடநிரம் பாயிரம் போதணிய
அரிதன் திருவடிக் கர்ச்சித்த கண்ணுக் கருளுகம்பர்
அரிதன் திருக்கங் குலியால் அழிந்த கயிலையல்லிங்
கரிதன் றிருப்பதெம் பால்வெற்ப எம்மையர்க் கஞ்சுதுமே.

(இ - ள்.) அக்காலத்து, வேதங்கள் கண்டு நெருங்க அரிதானவன்; திருமால் தன் திருவடிக்கண், இதழ் நிரம்பிய நறுமணமிக்க ஆயிரம் தாமரை மலர்களைப் போற்றி மறை ஓதி அழகுற அருச்சிக்க (அம்மால் வேண்டிய ஆழிப்படையினை அருளாமல்) நல்காமல் அவன் அருச்சித்த கண்ணின் பொருட்டுத் தண்ணளி புரிந்து ஆழிப்படையினை நல்கியருளிய திரு ஏகம்பர், குற்றம் பொருந்திய இராவணனுடைய மாறுபாட்டினால் தன் திருவடிப் பெருவிரல் நகநுதியைக் கொண்டு சிறிது ஊன்றியதும் அவன் ஆற்றல் அடங்கிற்று. திருக்கயிலை வழிக்குறிஞ்சித் தலைவனே! இங்கு எம்மிடத்தில் இரவு தங்கியிருப்பது முடியாத தொன்றாகும், அஃது என்னெனின் எங்கள் தந்தையார்க்கு நாங்கள் அஞ்சுவோம்.

(வி - ம்) அரிதன் றிருக்கண்ணிட - அன்று இருக்கு அண்ணிட அரிதானவன். போது - பூ. அரி - திருமால். கண்ணுக்கு – திருமாலின் கண்ணுக்கு. அரிதன் திருக்கங்குலிய: அரி - குற்றம். அரி

தன் - குற்றமுடையவன். திருக்கு - மாறுபாடு. அங்குலி - விரல். அல்லிங்கரிதன் றிருப்பது: அல் - இரவு. ஐயர் - தந்தையர்.

திருமால் சிவபெருமான்பால் சலந்தரனைக் கொல்லுவதற்குத் துணையாக விருந்த ஆழிப்படையினை வேண்டி வழிபாடியற்றினன். நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர்களைக் கொண்டு அருச்சனை செய்துவந்தனன். பூசையின் சிறப்பையும், திருமாலின் உறுதிப் பாட்டையும் வெளிப்படுத்த ஒருநாள் ஒரு பூக்குறைய நேர்ந்தது. அதனைக்கண்டு வருந்திய திருமால் குறைந்த பூவுக்கு ஈடாகத் தன் கண்ணையே இடந்து சார்த்தினன். சிவபெருமான் ஆழிப்படையை நல்கியருளினன்.

எத்தகைய வழிப்பாட்டிலும் அமைக்கப்படும் பொருள்களுக்கு ஒரு வகையான ஏற்றமுண்டு. அஃதாவது அவ்வழிபாட்டின் பயனாகிய நற்பேறு அப்பொருள்களுக்கே யாம். அப்பொருள்களைச் சுமந்து கொண்டு வந்து இறைவன் திருவடிக்கு முறையுற ஆக்கினவர்க்கு அதனைச் சுமந்து கொண்டு வந்த கூலியே கிட்டுவதாம். அதுவே முறைமையும் உரிமையுமாகும். இதனை வருமாறு நினைவு கூர்க: எம்மான் வழிபாட்டால் எய்தும் பேறப்பொருட்கே, நம்மாட் டுறுங் கூலி நாடு. இம்முறையான் அரி தன் கண்ணை யிடந்து அருச்சித்த போது ஆழிப்படை பெறும்பேறு உண்டாயிற்று. கண்ணிடந் தருச் சிப்பதினும் மேலானது ஒருவர் தன் கருத்தினைச சிவபெருமான் திரு வடிக்கண் முழுவதும் பதிப்பதாகிய அருத்தியினைச் செய்வது.

(௧அ)

இஃது இரவுக்குறி மறுத்தலாகும்.

[முரசு முழங்கக்கண்டு ஆயத்தார்தம்முள் வருந்திக் கூறியது]

அஞ்சரத் தான்பொடி யாய்விழத் தீவிழித் தன்புசெய்வோர்
நெஞ்சரத் தாழ்வுகந் தோர்கச்சி ஏகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரத் தாழ்வரை வீழநுங் கோம்புய்யக் கும்பம்முழ்கும்
வெஞ்சரத் தாரன வோஅல்ல வோஇவ் வியன்முரசே.

(இ - ள்.) அழகிய ஐந்து மலரம்புகளையுடைய மன்மதன் பொடி யாக விழும்படி, நெற்றியின்கண்ணுள்ள அறிவின் அடையாளமாகிய தீ விழியினைத் திறந்து விழித்துப் பேரன்பு பூண்டு இடையறாது நினைப்பதாகிய உள்குதலைப் புரிவோருடைய தூய நெஞ்சத்தினைக் கோயிலாகக் கொண்டருளியவர் சிவபெருமானவர். அம்மெய்யடி யார்கள் செய்யும் தவறுகளைக் களிப்பாகக் கொண்டருள்வர். திருக் கச்சி நன்னகர்க்கண் எழுந்தருளிய திரு ஏகம்பரது நீண்ட கயிலைப் புனத்துப் பூங்கொம்பை யொத்த நும்தலைவி பிழைக்கும் பொருட்டு மலையை யொத்த யானை வீழ்ந்துபோம்படி மத்தகத்தில் அழுந்தும் வகை செய்த வெவ்விய அம்பின் மாலையை உடையானுக்குரியதோ? அஃதன்றி வேற்றோக்குரியதோ? இப்பெரிய முரசொலி கூறு வாயாக.

(வி - ம்.) அம் - அழகு. சரம் - அம்பு. தீவிழி - நெற்றிக் கண். தாழ்வு - மெய்யடியார்கள் செய்யுங் குற்றங் குறைகள். உகப்

பர் - உயர்வாகவே கொள்வர். குஞ்சரம் - யானை. கும்பம் - மத்தகம். வெம்சரம் - கடிய அம்பு. வியன் - பெரிய. முரசு - மணமுரசு.

மெய்யடியார்கள் செய்யும் தவறுகளைச்சிவபெருமானுர் பொறுத்து உயர்வர் என்பது பெரியோர் தன்மையே யாம். உசப்பு - உயர்வு. இவ்வுண்மை, 'பொறுப்பரன்றே பெரியோர் சிறு நாய்கள்தம் பொய் யினையே' (அ, நீத்—கூ.) என்னும் தனித்தமிழ் மறையான் உணர லாம்.

திருவடிப்பிழை யென்பது சிவனை மறந்து தனக்கு முதன்மை ஏறட்டுக்கொண்டு செய்தல். "திருவடிப் பிழைத்தல் செய்யாதாரே மெய்யடியார் ஆவர். அவர் செய்யும் தீங்குகள் என்பது பிறர்க்குத் துன்பம் உண்டாகும்படி செய்யும் தீமைகள் அன்று. எனவே, செய்ய வேண்டிய நன்மைகளை மறந்து பின் நினைந்து செய்தலாம். காலங் கடந்து செய்தலுமாம். இவ்வுண்மை ஆளுடைய நம்பிகள் "பிழைப்ப னுகிலும் திருவடிப் பிழையேன்' (எ. டுச க) என ஓதுதலால் உணர லாம். "சூளுறவு பிழைத்தமையால்" சங்கிலியார் சிறிதும் வருந் தாமை "பாவியேன் இது கண்டேன் நம்பிரான் பணியால் என ஆவி சோர்ந்தாள்." (கஉ. ஏயர்கோன்-உகூக.) என வருதலான் உணரலாம். மேலும் பெற்ருேர்கள் தம் மக்கள் பிள்ளைமைப் பருவத்துத் தம் மாட்டுச் செய்யும சிறு சொல்லும், சிறு துன்பும் பொறுப்பர்; ஆயினும் அப்பிள்ளைகள் அவற்றைப் பிறர் மாட்டுச் செய்ய இடங் கொடார். ஓரோவழி நிகழ்ந்துவிட்டதாயின் கடுமையாகக் கண்டிக் கவுஞ் செய்வர். இதுவும் மேலதனை நன்குணர்த்தும்.

இதனை வருமாறு நினைவுகூர்க :

பிள்ளைபிழை தாம்பொறுக்கும் பெற்றோர் பிறர்க்காயின்
பிள்ளையினைத் தாமொறுப்பர் பேணியுய்ய—உள்ளுங்கால்
மெய்யடியார் செய்பிழைகள் மேவாத்தீச் செய்கைப்பால்
உய்வனபிற் செய்வதாம் ஊறு.

மணமுரசு கேட்டுத் தலைமகள் கலங்குதல். (கக)

[தோழி தாய்துயில் அறியாது நிற்றல்]

சேய்தந்த கைலை உமைகண வன்திரு ஏகம்பத்தான்
தாய்தந்தை யாய்உயிர் காப்போன் கயிலைத் தயங்கிருள்வாய்
வேய்தந்த தோளிநம் ஊசலோ டும்விரை வேங்கைதன்னைப்
பாய்தந்து பூசலுண் டாங்கொண்ட தோசைப் பகடுவந்தே.

(இ - ம்.) உமைப்பெரு மாட்டியாரின் தலைவன், திருஏகம் பத்தில் எழுந்தருளி யிருப்போன், தாய் தந்தையர்களைப் போல் ஆருயிர்களை அகத்தும் புறத்தும் நீங்காது நின்று காத்தருள்வோன், அவனுக்குரிய மிகவுயர்ந்த கயிலைமலைச் சாரலின், மயங்கும் இருளின் கண் மூங்கிலை யொத்த தோள்களையுடையாய் தும்புக்கையினையுடைய வலிய யானை யொன்று வந்து நாம் விளையாடும் நம்முடைய ஊசலுடன் மணங் கமழ்கின்ற வேங்கை மரத்தினையும், பாய்ந்து போர் செய்யத்

தொடங்கியது. இதனால் உண்டாகிய ஓசை என் காதில் படுகின்றது. இஃது யாதோ அறியேன்.

(வி - ம்.) சேய் - உயர்வு. தயங்கினள் - மயங்கினள். கை - தும்புக்கை. பூசல் - போர். பகடு - யானை.

தாய் துயிலறிதல். (உ0)

[தலைவி ஆயத்தை நோக்கிக் கூறியது]

வந்தும் மணம்பெறிற் பொன்அனை யீர்மன்னும் ஏகம்பர்தம்
முந்தும் அருவிக் கயிலை மலையுயர் தேன்இழிச்சித்
தந்தும் மலர்கொய்துந் தண்தினை மேயுங் கிளிகடிந்தும்
சிந்தும் புகர்மலைக் கச்சும்இச் சாரல் திரிகுவனே.

(இ - ம்.) திருமகளைப் போன்றவர்களே! என்னால் காதலிக்கப் பட்டான் வந்து என்னை மணந்துகொள்வானேல், நிலைபெற்ற ஏகம்பநாதரின் அருவி ஆறுகள் முந்திச் செல்லும், கயிலை மலைக் கணுள்ள, உயர்ந்த தேனை இழிச்சிக் கொடுத்தும், பூக்கொய்து தந்தும், சிந்திய குளிர்ந்த தினைகளை மேய்கின்ற கிளிகளை விரட்டியும், யானைகளுக்கு நடுக்குகின்ற இம்மலைச் சாரலில், நம்முடைய அச்சத் தைப் போக்கியும்; திரிந்து நமக்குக் களிப்பினை மிகுவிப்பன்:

(வி - ம்.) பொன் - திருமகள். இழிச்சி - இறக்கி; எடுத்து. தண் - குளிர்ச்சி. புகர் - புள்ளி. மலை - யானை; உவமை யாகுபெயர். கடிதல் - விரட்டுதல். (உக)

[தலைவியது வேறுபாடறிந்து ஆயத்தார் வினவியது]

திரியப் புரமெய்த ஏகம்ப னார்திக ழுங்கயிலைக்
கிரியக் குறவர் பருவத் திடுதர ளம்வினையோம்
விரியச் சுருள்முத லானும் அடைந்தோம் விரைவிரைந்து
பிரியக் கதிர்முத்தின் நீர்பெற்ற தேன்அங்குப் பேசுமினே.

(இ - ள்.) தொழில் முயற்சியினையுடைய நாங்கள், தீயினால் வேறுபடத் திரிபுரங்களை எய்த திருஏகம்பநாது விளங்குகின்ற கயிலாய வரைக்கணுள்ள, குறவர்கள் காலமறிந்து கொடுக்கின்ற முத்துக்களைப் பரந்த சுருளுடனே பெற்றோம்; மிகுந்த விரைவுடன் நீவீர் சென்று விரும்பத் தகுந்த கதிர்களையுடைய அம்முத்தின்கண், அந்தக் குறச் சேரிக்கண், சென்று அடைந்தது என்ன? கூறுங்கள்.

(வி - ம்.) திரிய - தீயினால் வேறுபட. புரம் - திரிபுரம். கிரி - மலை; வரை. தரளம் - முத்து. பிரிய - விரும்பத்தக்க. (உஉ)

[தலைவி வேட்கையை வெறுத்துக் கூறியது]

பேசுகை யாவ ருமைக்கணி யாரேன்று பித்தர்எங்கும்
பூசுகை யார்திரு நீற்றெழில் ஏகம்பர் பொற்கயிலைத்

தேசுகை யார்சிலை வெற்பன் பிரியும் பரிசிலர்அக்
கூசுகை யாதுமில் லாக்குலை வேங்கைப் பெயர்நம்மையே.

(இ - ள்.) மெய்யடியாரிடத்து வேட்கை கொண்டவர், உடன் முழுவதும் பூசுதலமைந்த திருநீற்றின் அழகுள்ள திருஏகம்பரது அழகிய கயிலைப் புரத்தினின்றும் கையிலேந்திய ஒளிபொருந்திய வில்லையுடைய தலைமகன் நீ நீத்ததை நோக்கிப் பிரிவான்; அவனிடத்துப் பெறலரும் நலம் பெற்ற பரிசிலாளரும் குலைகளையுடைய வேங்கையென்னும் பெயரையுடைய அந்த உங்களையே, சிறிதும் வாய் கூசுதலும் இல்லாமல் கணியார் என்னும் பெயர் கொண்டு கூறித்திரிவர்.

(வி - ம்) பேசுகை - ஐசாரியை. பித்து - வேட்கை. இல்லா - இல்லாமல். எச்சவிகுதி தொக்கது. இல்லா என்பது பேசுகையென்னும் தொழிற்பெயர் கொண்டது. வேங்கையொடு வெறுத்துக் கூறுதல். (உ௩)

[தலைவி, கிளி, புனமிவற்றிற்கு நாங்கள் சென்றமையைத் தலைவனிடம் கூறுங்கள் என்றது]

பெயரா நலத்தெழில் ஏகம்ப ஞர்பிறை தோய்கயிலைப்
பெயரா திருக்கப் பெறுகிளி காள்புன மேபிரிவின்
துயரால் வருந்தி மனமும்இங் கோடித் தொழுதுசென்ற
தயரா துறையும்வெற் பற்கடி யேற்கும் விடைதம்மினே.

(இ - ள்.) நீங்காத நன்மையினையுடைய வளரும் அழகு வாய்ந்த திருஏகம்பரின் திங்கள் தவழ்கின்ற திருக்கயிலைப் புனத்தை நீங்கா திருக்கும்படியான நற்றவத்தினைப் பெற்றுள்ள கிளிகளே! தினைப் புனமே, எம் தலைவனை விட்டுப் பிரிந்து துன்பம்உறும் தன்மையால் எளியேன் மனமும் வருத்தத்தை யடைந்து, இங்கு நின்று தலைவனிடம் ஓடி, அவரைக் காணப் பெருமையால் வணங்கிச் சென்றது. மறந்து போகாமல் எம் குறிஞ்சித் தலைவர் ஈண்டு எம்பொருட்டு நாடிவரின் கூறுங்கள். அவருக்கு அடிமைப்பட்ட எமக்கும் எம் நகருக்கு யாங்கள் செல்ல விடை தருவீர்களாக.

(வி - ம்.) பெயராது - நீங்காது. எழில் - வளரும் அழகு. அயராது - மறவாது. உரையும் - சொல்லும். வெற்பு - மலை. வெற்பற்கு - குறிஞ்சிநிலத்தலைவனுக்கு. தம்மினே - தாருங்கள்.

பிரிவின் அருமைகூறி வரைவு கடாதல். (உ௪)

[தலைவன் வறும்புனங்கண்டு வருந்தியது]

தம்மைப் பிறவிக் கடல்கடப் பிப்பவர் தாம்வணங்கும்
மும்மைத் திருக்கண் முகத்தெழில் ஏகம்பர் மொய்கயிலை
அம்மைக் கருங்கண்ணி தன்னொடின் பந்தருந் தண்புனமே
எம்மைக் கவலைசெ யச்சொல்லி யோவல்லி எய்தியதே.

(இ - ள்.) அடியோமைப் பிறவியாகிய கடலினின்றும் கரையேறும்படி செய்தருள்பவர் நம்மால் தொழப்படுகின்ற, மூன்று திருக்கண்களையுடைய, அழகிய திருமுகத்தினையுடைய திருவேகம்பரது நெருங்கிய கயிலைக்கண் அழகிய மையுண்ட கருமையாகிய கண்களையுடையாளுடன், இன்பத்தைத் தருகின்ற குளிர்ச்சி மிகுந்த புனமே, எம்போல்வாரையும் எளியேனையும் துன்பஞ் செயச் சொல்லியோ, தலைவி இப்புனத்தை விட்டு நீங்கினது.

(வி - ம்) கடப்பித்தல் - கரையேற்றுதல் மும்மை - மூன்று. மொய் - நெருக்கம். அ - அழகு. வள்ளி - தலைவி; வள்ளிக்கொடி போன்று துவளும் இடையினையுடையவள்.

தலைவன் வறும்புனங் கண்டு வருந்தல். (உ௫)

[தலைவன் பொழில் முதலியன நோக்கித் தலைவி சென்ற இடத்தைக் கூறுக என்றது]

இயங்குந் திரிபுரம் எய்தஏ கம்பர் எழிற்கயிலைத்
தயங்கும் மலர்ப்பொழில் காள்தையல் ஆடரு வித்தடங்காள்
முயங்கு மணியறை காள்மொழி யீர்ஒழி யாதுநெஞ்சம்
மயங்கும் பரிசுபோன் ஞர்சென்ற சூழல் வகுத்தெமக்கே.

(இ - ள்.) பறந்து செல்கின்ற முப்புரங்களைத் தீக்கு இரையாக எய்த திருவேகம்பரது அழகிய கயிலைச் சாரலில், விளங்குகின்ற மலர் நிறைந்த அழகிய பூஞ்சோலைகளே, அழகுள்ள தலைவி நீர்விளையாடும் அருவித் தடங்களே, நெருங்கிய மாணிக்க முழைஞ்சுகளே, ஒழியாமல் மனம் மயங்கும் வகை திருமகளை யொத்த தலைமகள் சென்ற இடத்தினை, வகைப்பட எமக்குக் கூறுமின்.

(வி - ம்.) இயங்கும் - திரியும்; பறந்து செல்லும். திரிபுரம் - மூன்று கோட்டை; திரியும் கோட்டை. தயங்கும் - விளங்கும். தடம் - நீர்நிலை. முயங்குதல் - நெருங்குதல்.

இதுவும் முன்னதன் துறையே. (உசு)

[வேங்கை மலரக்கண்ட தோழி உவந்து தன்னெஞ்சொடு கூறியது]

வகுப்பார் இவர்போல் மணத்துக்கு நாள்மணந் தன்னுெடின்பம்
மிகுப்பார்க ளாருயிர் ஒன்றும் இருவரை விள்ளக்கள்வாய்
நெகுப்பால் மலர்கொண்டு நின்ருர் கிடக்க நிலாவுகம்பர்
தொகுப்பால் மணிசிந் தருவிக் கயிலைஇச் சூழ்புனத்தே.

(இ - ள்.) தொகுதியாக மாணிக்கங்களைச் சிந்துகின்ற, அருவி பொழியும் திருவேகம்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலையின் இந்தச் சூழ்புனத்தில், மணத்துடன் இன்பத்தின் நீடிப்பார்களாய் அரிய உயிர்கள் பொருட்டன்மையால் இருவேறு வகைப்பட்டு, மனத்தான் ஒருவகைப்பட்டு நிற்கும் இருவரை நீக்கும்படி, தேன் தங்கிய வாயை நெகிழ்த்தலால், விரிந்த மலரை ஏந்தி, நின்ற வேங்கையார் மலர்ந்து

நிற்பதால் இவளை மணஞ் செய்விப்பதற்கு நாள், இவளது தந்தையார் இனி வகுத்துக்கூறுவர் போலும்.

(வி - ம்.) வகுப்பார் - வகுத்துக் கூறுவார். விள்ள - நீங்க. கள் - தேன். நெகுத்தல் - சொரிதல்.

தலைவி உவந்து கூறிய கூற்று. (உஎ)

[வறும்புனங் கண்டு நின்ற தலைவன் துயர் மிகுதி கூறியது]

புனங்குழை யாதென்று மென்தினை கொய்ததும் போகலுற்ற
கனங்குழை யாள்தற் பிரிய நமக்குறுங் கையறவால்
மனங்குழை யாவருங் கண்கனி பண்பல பாடுந்தொண்டர்
இனங்குழையாத் தொழும் ஏகம்பர் இக்கயி லாயத்துள்ளே.

(இ - ள்) கண் கனியும்படி பல பண்களைப் பாடுகின்ற அடியவர்தம் கூட்டம், மனங் கசிந்து தொழுகின்ற ஏகம்பரது, இந்தக் கயிலாயச் சாரலின்கண் தினைப்புனம் நெருங்கிக் கெடாதென்று மெல்லிய தினைப்பயிர்களைக் கொய்து சேர்த்தவுடன், தம்மூர் நோக்கிச் செல்லத் தொடங்கிய, கனத்த காதணியை உடைய தலைவி தன்னை நீங்காநிற்க நமக்கு நேர்ந்த துன்பத்தால், மனம் குழைந்து வருந்துகின்றது.

(வி – ம்.) புனங்குழையாதென்று: குழையாதென்று - நெருங்கிக் கெடாதென்று. கனங்குழை - கனத்த காதணி. கையறவு - வருத்தம்; துன்பம்.

தலைவன் தன் குறை கூறுதல். (உஅ)

உள்ளம் பெரியரல் லாச்சிறு மானுடர் உற்றசெல்வம்
கள்ளம் பெரிய சிறுமனத் தார்க்கன்றிக் கங்கைஎன்னும்
வெள்ளம் பெரிய சடைத்திரு ஏகம்பர் விண்அரணம்
தள்ளம் பெரிகொண் டமைத்தார் அடியவர் சார்வதன்றே.

(இ - ள்.) (சிவன் திருவடியினையே இடையறாது நினைப்பதாகிய) மனத்தால் பெருந்தன்மை வாய்க்கப் பெறாத சிறுமை வாய்ந்த செல்வ வாழ்க்கையினையுடைய அறிவிலார் அடைந்த செல்வத்தாலுறும் வாழ்க்கை, வஞ்சனையினால் மேலோங்கிய சிறுகுணமும் சிறு தொழிலும் உள்ள மனத்தவர்க்கல்லாமல் வான் யாறு எனப்படும் மிகுந்த வெள்ளத்தைத் திருச்சடையின்கண் வைத்தருளிய திரு ஏகம்பவாணர் உயர்ந்த கோட்டைகளையுடைய முப்புரங்களைக் கெடுக்கும்வகை அம்பினை நெருப்பால் வைத்தருளியவர் தம் அடியவராயினார் அடைவதன்றாகும்.

(வி - ம்.) உள்ளம் - மனம். கள்ளம் - வஞ்சனை. கங்கை - வான்யாறு. விண் - உயர்வு. அரணம் - கோட்டை. தள்ள - கெடுக்க. எரிகொண்டு - எரியால்; கொண்டு மூன்றுவதன் சொல்லுருபு. (உக)

அன்றும் பகைஅடர்க் கும்பரி மாவும் மதஅருவிக்
குன்றும் பதாதியுந் தேருங் குலவிக் குடைநிழற்கீழ்
நின்றும் பொலியினுங் கம்பர்நன் னீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும் பொலியா இருநிலத்தே.

(இ - ள்.) பகைக்கின்ற பகைவர்களைப் போரில் வருத்தும் குதிரைப் படையும், அருவிபோல் மதம் பொழிகின்ற மலையை யொத்த யானைப்படையும், காலாட்படையும், தேர்ப்படையும் கூடி, வெண் கொற்றக் குடைக்கீழ்த்தங்கி விளங்கி நிற்கினும், திருஏகம்பரது நல்ல திருநீற்றினை நெற்றியில் அவன் திருப்பெயராகிய "சிவயநம" என்னுந் தனித்தமிழ்த் திருமந்திரம் ஓதி அணியாராகில் பெரிய பூமி யின்கண் எப்பிறவியினும் அரசராக விருக்கும் பெருவாழ்க்கையும், வெற்றி முரசும் பொலிந்து நில்லா.

(வி - ம்.) அன்றும் - பகைக்கும். அடர்க்கும் - வருத்தும். பதாதி - காலாட்படை. பொலிந்து - விளங்கி. (௯0)

நிலத்திமை யோரில் தலையாய்ப் பிறந்து மறையோடங்கம்
வலத்திமைப் போதும் பிரியார் எரிவளர்த் தாலும்வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியுள் ஏகம்பங் கூடித்தொழும்
நலத்தமை யாதவர் வேட்டுவர் தம்மின் நடுப்படையே.

(இ - ள்.) நிலவுலகத்தில் தேவர்களினும் உயர்ந்தவராகிய பிறப் பினை யடைந்து, நான் மறைகளுடன் ஆறு உறுப்புக்களையும் விடாது ஓதி, இமையளவும் நீங்காதவராகி முத்தீயினை வளர்த்தாலும் மலை யரையன் குலத்துத் திருத்தோற்றமுற்றருளிய உமையம்மையாரை ஒரு பாகத்திற் கொண்டருளிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கச்சியினுள் திருஏகம்பத்தினைக்கூடி வணங்கும் புண்ணியப் பேறு எய்தாதவர், காட்டில் நன்று தீதறியாது கொன்றுண்ணும் கொடிய வேடர்களின் நடுப்படையினோடு ஒப்பர்.

(வி - ம்.) இமையோர் - தேவர். மறை - வேதம். அங்கம் - உறுப்பு. வெற்பு - மலை. (௯க)

படையால் உயிர்கொன்று தின்று பசுக்களைப் போலச்செல்லும்
நடையால் அறிவின்றி நாண்சிறி தின்றி நகுங்குலத்தில்
கடையாய்ப் பிறக்கினுங் கச்சியுள் ஏகம்பத் தெங்களைஆள்
உடையான் கழற்கன்ப ரேல்அவர் யாவர்க்கும் உத்தமரே.

(இ - ள்.) கூரிய படையினால், ஆருயிர்களை ஈவிரக்கமின்றிக் கொன்று தின்று விலங்குகளைபோல, நடக்கும் ஒழுக்கத்தால் அறிவு சிறிதும் இல்லாமலும் நாணம் சிறிதும் இல்லாமலும், பிறரால் இகழத் தக்க தாழ்ந்த குலத்தில் கடைப்பட்டவர்களாகப் பிறந்தாலும், திருக் கச்சி நன்னகர்க்கண்ணுள்ள திரு ஏகம்பத்து, அடியேங்களை அடிமை கொண்டருளிய இறைவனது திருவடிகளுக்கு அன்பராயின், அத்தகை யோர் அனைவர்க்கும் சிறந்தோராவர்.

(வி - ம்.) பசு - விலங்கு. உத்தமர் - சிறந்தவர். (௬உ)

உத்துங்க யானை உரியார் விரலார் அரக்கன்சென்னி
பத்துங்கை யான இருபதுஞ் சோர்தர வைத்திலயம்
ஒத்துங்கை யால்அவன் பாடக் கயிலையின் ஊடுகைவாள்
எத்துங்கை யானென் றுகந்தளித் தார்கச்சி ஏகம்பரே.

(இ - ள்.) பெரிதாகிய யானையின் தோலை உரித்து உடுத்தியருளியவர், திருவடித் திருவிரல் நகநுதியைச் சிறிது ஊன்றுதலால் இராவணன் முடிகள் பத்தும், இருபது கைகளும், சோர்ந்தழியும் படியாக வைத்துத்தாளம் பொருந்தும்படி கைகளை வீணையாக அமைத்துப் பாடத் திருக்கச்சி ஏகம்பராகிய கைலையுள்ளார், தொழுது போற்றுங் கையுடையான் என்று, நல்ல கையினையும் ஓர் வாளினையும், விரும்பி அளித்தருளினர்.

(வி - ம்.) உத்துங்கம் - பெரிது. இலயம் - தாளம். எத்துங் கையான் என்பது ஏத்தங்கையான் என்பதன் குறுக்கம்.

இராவணன் குறிப்பு வருமாறு :

"அருந்தவத்தின் பெருவலியா லறிவ தின்றி
அடலரக்கன் தடவரையை எடுத்தான் திண்டோள்
முரிந்துநெரிந் தழிந்துபா தாள முற்று
முன்கைநரம் பினையெடுத்துக் கீதம்பாட
இருந்தவனை யேழுலகு மாக்கி னானை
யெம்மானைக் கைம்மாவி னுரிவை போர்த்த
திருந்தெறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே.
—சு. ௯௯—௧௦. (௬௩)

அம்பரங் கால்அனல் நீர்நிலந் திங்கள் அருக்கனணு
வம்பரங் கோள்வதோர் வேழத் துரியவன் தன்னுருவாம்
எம்பரன் கச்சியுள் ஏகம்பத் தான்இடை யாதடைவான்
நம்பரன் தன்னடி யார்அறி வார்க்கு நறுந்துணையே.

(இ - ள்.) வானம், காற்று, நெருப்பு, நீர், நிலம், திங்கள், ஞாயிறு, ஆவி ஆகிய எட்டு வகையினையும் தனக்கு வடிவமாகக் கொண்டு அவற்றை இயக்கியருளியும், ஆடையாக யானைத் தோலை உரித்துப் போர்த்தருளியும் விளங்குகின்ற எம்முதல்வன் திருக்கச்சியுள் திருஏகம்பத்தை இடமாகக் கொண்டருளியவன், எப்பொருட்கண்ணும் நீக்கமற நிறைந்துள்ளவன், நம் தலைவன் தன்னை அறிவாராகிய அடியவர்களுக்கு நல்ல துணையாவன்.

(வி - ம்.) அம்பரம் - வானம். கால் - காற்று. அருக்கன் - ஞாயிறு அணு - ஆவி; ஆன்மா. அம்பரம் - ஆடை. நறுந்துணை - நல்லதுணை.

சிவபெருமான் எண் பேருருவில் நிற்கும் உண்மை வருமாறு :

"அவனே யிருசுடர்தீ யாகாச மாவான்
அவனே புவிபுனல்காற் றுவான்—அவனே
இயமான னுயட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனுகி நின்றுனும் வந்து."

—கக. காரைக்காலம்மை அற்புத—உக. (ருச)

துணைத்தா மரைஅடி யும்பவ ளத்திரள் நன்குறங்கும்
பணைத்தோள் அகலமுங் கண்டத்து நீலமும் அண்டத்துமின்
பிணைத்தா லனசடை யுந்திரு முக்கணும் பெண்ணெர்பக்கத்
தணைத்தார் எழிற்கம்பர் எங்கள் பிரானுர்க் கழகியவே.

(இ - ள்.) உமையம்மையாரைத் தம்முடம்பில் இடது பக்கத்து ஒரு பாகமாக அணைத்தருளியவராகிய, அழகிய திருஏகம்பர் என்னும் எங்கள் தலைவர்க்கு, இரண்டாகிய தாமரை போலும் திருவடிகளும், பவழம் போலும் திரண்ட அழகிய நல்ல திருத் தொடைகளும், பெருத்த திருத்தோள்களும் திருமார்பும், திருநீல கண்டமும், வானத்தில் விளங்கும் மின்னலை கிளைத்ததை ஒத்த திருச்சடையும், அழகிய மூன்று திருக்கண்களும் அழகுடையன.

(வி - ம்.) துணை - இரண்டு. குறங்கு - தொடை. பணை - பெருத்த. அகலம் - மார்பு.

சிவபெருமானுக்கு அழகுதரத்தக்கவை இவை தகாதவை இவை என எடுத்துரைப்பார் யாவர்? ஒருவராலும் இயலாதென்க. இது வருமாறு :

"ஏதொக்கும் ஏதொவ்வா தேதாகு மேதாகா
தேதொக்கு மென்பதனை யாரறிவார்—பூதப்பால்
வில்வேட னுகி விசையனோ டேற்றநாள்
வல்வேட னை வடிவு."

—கக. அம்மை, சுஉ. (ருரு)

அழகறி விற்பெரி தாகிய ஏகம்பர் அத்தர்கோற்றம்
பழகறி விற்பெரி யோர்தமைப் பற்றலர் பற்றும்அன்பின்
குழகறி வேற்பினுள் ஒன்றறி யார்அறி யாமைதெய்வம்
கிழகெறி யப்பட் டுலந்தார் உலகிற் கிடந்தனரே.

(இ - ள்.)) அழிவில்லாத மிகுந்த அழகில் மிகவுயர்ந்த திருஏகம்பரும், தலைவரும், வெற்றியில் பழகிய அறிவால் உயர்ந்தோராகிய சிவபெருமானைப் பொருந்தத்தக்க அன்பினுல் மனத்திடைக் கொள்ளாதவராய், இளமையாகிய அறிவால் ஏற்றுக் கொள்ளத்தக்க பொருள்களுள் தெய்வமாகிய சிவபெருமான் ஒருவனே யென்று அறியாதவர் அறியாதிருத்தல் கிழத்தன்மையால் தள்ளப்பட்டுப் பூமியில் தங்கி அழிந்தவரே யாவர்.

(வி - ம்.) அத்தர் - தலைவர். கொற்றம் - வெற்றி. குழகு - இளமை. கிழகு - கிழத்தன்மை. உலந்தார் - அழிந்தார். (கசு)

கிடக்கும் ஒருபால் இரைக்கின்ற பாம்பொரு பால்மதியம்
தொடக்குண் டிலங்கும் அலங்குந்திரைக்கங்கை சூடுங்கொன்றை
வடக்குண்டு கட்டத் தலைமாலை வாளால் மலைந்தவெம்போர்
கடக்கும் விடைத்திரு ஏகம்பர் கற்றைச் சடைமுடியே.

(இ - ள்.) வாளினால் போரிட்டு அந்த இறைவனது திருப்பெயர் கூறுதாரிடத்து வெவ்விய போரினை வெல்லுகின்ற ஆனேறெனப் படும் விடையினையுடைய திரு ஏகம்பரது கற்றையாகிய சடைமுடிக் கண் ஒரு புறத்தில் ஓசை யிடுகின்ற பாம்பு தங்கி யிருக்கும்; ஒரு புறத் தில் ஆருயிரின் அடையாளமாகிய திங்கள் பிணிப்புண்டு விளங்கா நிற்கும்; ஒரு புறத்தில் அலைகளையுடைய வான்புனல் அசையா நிற்கும்; ஒரு புறத்தில் கொன்றைமாலை சூடப்பெற்றிருக்கும்; ஒரு புறத்தில் குழிந்த கண்ணையுடைய தலைமாலையானது தங்கி யிருக்கும்.

(வி - ம்.) இரைக்கின்ற - ஓசையிடுகின்ற. தொடக்கு-பிணிப்பு அலங்கும் - அசையும். வடம் - மாலை. கற்றை - நெருக்கம். (கஎ)

கற்றைப் பவளச் சடைவலம் பூக்கமழ் கோன்றையந்தார்
முற்றற் றிலாமதி யின்கொழுந் தேகம்பர் மோய்குழலாம்
மற்றைத் திசையின் மணிப்பொற் கொழுந்தத் தரங்கழுநீர்
தெற்றிப் பொலிகின்ற சூட்டழ காகித் திகழ்தருமே.

(இ - ள்.) திரு ஏகம்பரது வலப்பக்கத்தில், நெருக்கமாகிய பவழம் போலும் திருச்சடையும் மணம் கமழ்கின்ற அழகிய கொன்றை மலர் மாலையும், முதிர்ச்சி அடையாத இளம் பிறையும், நெருங்கிய கூந்தலையுடைய உமை அம்மையார் எழுந்தருளி யிருக்கும் மற்றைய இடது பக்கத்தில் பச்சை மணி போலும் அழகிய மருக்கொழுந்தும், அந்த உயர்ந்த செங்கழுநீர் மலரும், பின்னப் பட்டுத் திகழ்கின்ற உச்சி யானது அழகுடைத்தாய் விளங்கா நிற்கும்.

(வி - ம்.) கற்றை - நெருக்கம்; கூட்டம். திகழ்தரும் – விளங்கும். (கஅ)

தருமருட் டன்மை வலப்பாற் கமலக்கண் நெற்றியின்மேல்
திருமலர்க் கண்பிள வின்திக ழுந்தழல் செல்வக்கம்பர்
கருமலர்க் கண்ணிடப் பாலது நீலங் கனிமதத்து
வருநதற் பொட்டணங் குக்குயர்ந் தோங்கு மலர்க்குழலே.

(இ - ள்.) பூவை முடித்த கூந்தலையுடையாய்! சென்றடையாத திருவுடையவராகிய திருஏகம்பரது வலப்பக்கத்திலுள்ள, தாமரை போலுங் கண்ணனது, அரிய தண்ணளி பொழியாநிற்கும். திரு நெற்றியின் மீதிருக்கும் அழகிய மலர்போலுங் கண்ணின் ஒருபாதியில்

தீ விளங்காநிற்கும்; நெற்றியின்கண் காணப்படும் பொட்டினையுடைய இறைவிக்கு இடது பக்கத்திலுள்ள கரியமலர்போலுங் கண் கருநெய்தலை யொத்து முதிர்ந்து களித்துவரும்.

(வி - ம்.) அம்மையப்பராகத் திகழும் தொன்மைக் கோலத்து, திருநெற்றி யொருகண் பிளவுபடுதலின் அரைக்கண்ணுடையார் அப்பரென்பது நன்கு விளங்கும். அவர்தம் வலப்பாகத்துக் குரிய ஒரு கண்ணுடன் நெற்றி அரைக் கண்ணும் சேர்ந்து ஒன்றரைக் கண்ணும் என்பது வருமாறு:

"இன்றரைக் கண்ணுடை யாரெங்கு மில்லை இமயமென்னும்
குன்றரைக் கண்ணன் குலமகட் பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமை யாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன்கண் டீரொற்றி யூருறை யுத்தமனே."

—ச. அகூ—எ.

மேலும் கண்ணப்ப நாயனர் கண்ணிடந் தப்பிய வலப்பாற்கண் கண்ணப்பரது என்று கொண்டு பார்ப்போமானால் "ஒன்றரைக் கண்ணன்" என்பது பொருந்தும் அரைக்கண்ணன் என்று பொருள் பட்டு, அரைக்கண்ணுடையார் எனக் கூறவும் இடமுண்டாம். (கூகூ)

மலர்ந்த படத்துச்சி ஐந்தினுஞ் செஞ்சுடர் மாமணிவிட்
டலர்ந்த மணிக்குண் டலம்வலக் காதினில் ஆடிவரும்
நலந்திரு நீள்வயி ரம்வெயிற் பாய நகுமணிகள்
கலந்தசெம் பொன்மக ரக்குழை ஏகம்பர் காதிடமே.

(இ - ள்.) திரு ஏகம்பரது வலக்காதினில் விரிந்த படத்தினது முடி ஐந்தினும் பெரிய மணிகள், செவ்விய ஒளிவீசி, விரிந்த செம்மணிக் குண்டலங்கள் அசைந்து வரும்; இடக்காதினில் நல்விலக் கணம் தங்கிய, நீண்ட வயிரங்களுடன் மிக்கு விளங்குகின்ற நவமணி களும் விரவிய செந்நிறத்த பொன்னினு லாகிய மகர குண்டலம் சுடர் விட்டு விளங்கும்.

(வி - ம்.) சுடர் - ஒளி. வெயில் - சுடர். நவமணி - ஒன்பான் ஒளிக்கற்கள். இறைவனுடைய வலக்காதினில் பாம்புக் குண்டலம். இடக்காதில் மகரகுண்டலம். (சo)

காதலைக் கும்வலத் தோள்பவ ளக்குன்றம் அங்குயர்ந்து
போதலைக் கும்பனிப் பொன்மலை நீற்றின் பொலியகலம்
தாதலைக் குங்குழல் சேர்பணைத் தோள்நறுஞ் சாந்தணிந்து
சூதலைக் கும்முலை மார்பிடம் ஏகம்பர் சுந்தரமே.

(இ - ள்.) திரு ஏகம்பரது காதுகளால் அலைக்கப்படுகின்ற வலப்பக்கத்திலுள்ள திருத்தோள் பவழமலையினை யொக்கும்; திரு வெண்ணீற்றினுல் விளங்குகின்ற திருமார்பு ஆங்கு உயர்வை அடைந்து மலர்மாலைகளால் அலைக்கப்படும். குளிர்ந்த மேரு மலையாம் இடது

பாகம் பூந்தாள்களால் அலைக்கப்படுகின்ற கூந்தல் தங்கிய மூங்கிலை யொத்த நல்ல கலவைச் சேற்றினை அணியப் பெற்றுச் சொக்கட்டான் காயினை வருத்திப் பின்னிடச் செய்கின்ற முலைகள் தங்கிய மார்பிடமும் அழகைத் தருவனவாம்

(வி - ம்.) பனி - குளிர்ச்சி. பொன்மலை - மேருமலை. தாது - பூந்தாள்; மகரந்தம். சூது - சொக்கட்டான் காய். (சக)

தரம்பொற் பழியும் உலகட்டி எய்த்துத் தரந்தளரா
உரம்பொற் புடைய திருவயி றும்வலம் உம்பர்மும்மைப்
புரம்பொற் பழித்தகம் பர்க்குத் தரத்திடு பூண்முலையும்
நிரம்பப் பொறுது தளரிள வஞ்சியும் நேர்வுடைத்தே.

(இ-ள்.) மேலோங்கியுற்ற மூன்றாகிய கோட்டைகளின் அழகினை அழியும்வகை செய்த திருஏகம்பவாணர்க்கு வலது பக்கத்துக் கூட்டமாகிய உலகங்களைப் படைத்து அவ்வுலகத்தின் மிகுதி அழிகின்ற காலத்து அதனைத் தம்மிடம் ஒடுக்கியும், தளர்ச்சி யடையாத, மிக்க வலிமை தங்கிய திருவயிறு உளது. அவ்வலப்பாலிற் கலப்பாகிய இடது பாகம் அணியப்படும் அணிகளையும் முலையினையும் தாங்கப் பெறாது தளர்ச்சியடைகின்ற வஞ்சியை யொத்த இடை உடைத்தே.

(வி - ம்.) தரம்-கூட்டம். பொற்பு-அழகு. அட்டி-படைத்து. எய்த்து - ஒடுக்கி. உரம் - வலிமை. புரம் - கோட்டை. நேர் - ஒத்து. உதரம் - வயிறு இடு - அணியப்படும். (சஉ)

உடைப்புலி யாடையின் மேல்உர கக்கச்சு வீக்கிமுஞ்சி
வடத்தொரு கோவணந் தோன்றும் அரைவலம் மற்றைஅல்குல்
தொடக்குறு காஞ்சித் தொடுத்த அரசிலை தூநுண்துகில்
அடல்பொலி ஏறுடை ஏகம்பம் மேய அடிகளுக்கே

(இ - ள்.) தீமையை வெல்லும் வலிமை மிகுந்த ஆனேற்றினை யுடைய, திருஏகம்பத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குப் புலித்தோலாகிய ஆடையின்மேல் பாம்பின் கச்சினைக் கட்டியருளித் தருப்பையாகிய திருவடத்தில் ஒரு கோவணத்துடன் கூடிய திருவரை வலது பக்கத்தில் தோன்றும். மற்றொரு பாதியாகிய இடது பக்கத்தில், அல்குலுடன் தொடர்ச்சியுள்ள எண்கோவை மணியுடன் கோக்கப்பட்ட அரசிலை போன்று அமைக்கப்படும் அரை மூடியென்னும் அணியும் தூய்மையாகிய நுண்ணிய ஆடையும் உண்டு.

(வி - ம்.) உரகம் - பாம்பு. வீக்கி - கட்டி. முஞ்சி - தருப்பை; குசை. அல்குல் - பிட்டி. காஞ்சி - எட்டு வடமாகிய மணிக்கோவை; அரைவடம். "காஞ்சி மேகலை கலாபம் பருமம், விரிசிகை மாதரிடையணி." (சங)

அடிவலப் பாலது சேந்தா மரையோத் ததிர்கழல்சூழ்ந்
திடிகுரற் கூற்றின் எருத்திற வைத்த திளந்தளிரின்

அடியிடப் பாலது பஞ்சுற அஞ்சுஞ் சிலம்பணிந்த
வடிவுடைத் தார்கச்சி ஏகம்ப மேய வரதருக்கே.

(இ - ள்.) திருக்கச்சி ஏகம்பத்தினை இடமாகக் கொண்டு எழுந்தருளியுள்ள, அழகினையுடைய மாலையை அணிந்த, வேண்டும் வரத்தைக் கொடுத்தருளுகின்ற சிவபெருமானுக்குச் சிவந்த தாமரையை யொத்ததும், ஒலிக்கின்ற வீரகண்டாமணி சூழப்பெற்ற இடி போலுங் குரலையுடைய எமனது பிடரி முரியும்படி வைத்ததும், வலது பக்கத்திலுள்ள திருவடியாம். பஞ்சினைப் பொருந்த அஞ்சுகின்ற சிலம்பினையணிந்த இளமையாகிய தளிரை யொத்த திருவடியானது இடது பாகத்ததாம்.

(வி - ம்.) எருத்து - பிடரி. சிலம்பு - மகளிர் காலணி. (சச)

தருக்கவற் றுன்மிக்க முப்புரம் எய்தயன் றன்தலையை
நெருக்கவற் றேட மழுவாள் விசைத்தது நெற்கள்என்றும்
பருக்கவற் றுங்கச்சி ஏகம்பர் அத்தர்தம் பாம்புகளின்
திருக்கவற் றுலிட் டருளுங் கடகத் திருக்கரமே.

(இ - ள்.) நெற்பயிர்கள் எக்காலத்தும் வளர்ச்சியாக வல்லதாம் திருக்கச்சி ஏகம்பத்தில் அமர்ந்தவரும், தந்தையானவரும் ஆகிய சிவபெருமானுடைய பாம்புகளின் கயிற்றால் பூணப்பட்ட கடகத்தினை அணிந்த அழகிய திருக்கையானது செருக்கால் மிகுந்த முப்புரத்தார்களை எய்தழித்து நான்முகனது தலையை வருத்திப் பேர்ந்து விழ மழுப்படையினை விசையுடன் எறிந்தது அது மேம்பாடு கூறவல்லதாகும்.

(வி - ம்.) தருக்கு - செருக்கு. கடகம் – கையணி. (சரு)

கரத்தத் தமருகத் தோசை கடுத்தண்ட மீபிளப்ப
அரத்தத்த பாதம் நெரித்திட் டவனி தலம்நெரியத்
தரத்தத் திசைகளுக் கப்புறம் போர்ப்பச் சடைவிரித்து
வரத்தைத் தருகம்பர் ஆடுவர் எல்லியும் மாநடமே.

(இ - ள்.) மெய்யடியார்களுக்கு வரத்தைத் தருகின்ற திருஏகம்பரது திருக்கையின்கண்ணுள்ள அந்த உடுக்கையினின்றும் எழும் ஓசை விசைத்து, மேலுள்ள அண்டச்சுவர்களைப் பிளக்கவும், செம்பரத்தம் பூவை யொத்த திருவடியினை வளைத்து நிலவுலக முழுவதும் அழுந்தவும் சடைக்கற்றை உயர்ந்த அத்திசைகளுக்குப் புறம்பே கவியும்படி விரியும்படி செய்தும் பேரொடுக்கக் காலத்துப் பெரிய இரவில் மாக்கூத்தினைச் செய்தருளுபவர்.

(வி – ம்.) கரம் - கை. தமருகம் - உடுக்கை. அரத்தம் - செம்மை; செம்பரத்தம். சிவபெருமான் மாக்கூத்தாடுங்கால் எல்லாம் நிலை கலங்கி நிற்கும் உண்மை வருமாறு :

"கலங்கின மால்கடல் வீழ்ந்தன கார்வரை யாழ்ந்தது மண்
மலங்கின நாக மருண்டன பல்கணம் வானங்கைபோய்

இலங்கின மின்னொடு நீண்ட சடையிமை யோர்வியந்தார்
அலங்கனன் மாநட மார்க்கினி யாடுவ தெம்மிறையே."

—கக. சேரமான், பொன்வண்ணம், அசு (சக)

நடனம் பிரான்உகந் துய்யக்கொண் டான்என் றும்நன் மறையோர்
உடன்வந்து மூவா யிரவர் இறைஞ்சி நிறைந்தஅன்பின்
கடனன்றி மற்றறி யாத்தில்லை அம்பலங் காளத்தியாம்
இடம்எம் பிரான்கச்சி ஏகம்ப மேயாற் கினியனவே.

(இ - ள்.) எம்பெருமானாகிய திருக்கச்சியின்கண் திருஏகம்பத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குத், திரு நடனத்தைத் தலைவணங்கிய இறைவன் விரும்பி ஆருயிர்கள் பிழைக்கும்படி செய்தருளினானென்று மேலாகிய நல்ல மறையவருடன் தில்லைவாழந்தணர்களாகிய மூவாயிரவரும் வந்து பணிந்த, நிறைந்த அன்பினையுடைய கடமையல்லாமல் வேறொன்றினையும் அறியாத திருத்தில்லை அம்பலமும், திருக்காளத்தியுமாகிய இடங்கள் இனிமையைத் தருவனவாகும்.

(வி - ம்.) சிவாகம விதிப்படி கூத்தப் பெருமானை வழிபடும் தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவர். இவ்வுண்மை வருமாறு:

"செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வவே தியர்களானார்
மும்மையா யிரவர் தாங்கள் போற்றிட முதல்வனாரை
இம்மையே பெற்று வாழ்வார் இனிப்பெறும் பேறொன்றில்லார்
தம்மையே தமக்கொப் பான நிலைமையால் தலைமை சார்ந்தார்."

—கஉ. தில்லைவாழந்தணர், அ. (சஎ)

இனியவர் இன்னார் அவரையொப் பார்பிறர் என்னவொண்ணாத்
தனியவர் தையல் உடனாம் உருவர் அறம்பணித்த
முனியவர் என்றும் உகந்தமுக் கண்ணவர் சண்டியன்புக்
கினியவர் காய்மழு வாட்படை யார்கச்சி ஏகம்பரே.

(இ - ள்.) தன்னை வணங்கும் மெய்யடியார்கட்கு இனியவர்; தன்னை வணங்குதல் செய்யாதவர்க்கு இனிமையல்லாதவர்; அவரையொத்தவர் வேறு பிறர் உளர் என்று கூறுதலாகாத ஒப்பற்றவர்; உமையம்மையாரை ஒரு பாகமாகக் கொண்டருளிய திருவுருவத்தினையுடையார், அறமுறைகளைக் கூறிய முனிவர், எக்காலத்தும் அடியவர்களால் விரும்பப்பட்ட மூன்று திருக்கண்களை யுடையவர், சண்டேசுர நாயனார் அன்பினுக்கு இனிமையானவர். பழுக்கக் காய்ச்சிய கூர்மையாகிய மழுப்படையினையுடையவர். திருக்கச்சிக்கண் எழுந்தருளியிருக்கும் திருஏகம்பர்.

(வி - ம்.) இன்னார் - இனிமையரல்லாதவர். முனியவர் - காமம் வெகுளி மயக்கங்களை முனிந்தவர்; திருநெறி யொழுக்கத்தால் முன்னிற்பவர்.

(சஅ)

[தலைவனைக் கண்டு மையல் கொண்டாள் கூறியது]

பரவித் தனைநினை யக்கச்சி யேகம்பர் பண்ணும்மையல்
வரவித் தனையுள்ள தேங்கறிந் தேன்முன் அவர்மகனார்
புரவித் தனையடிக் கக்கோடி தாய்விடி யாஇரவில்
அரவித் தனையுங்கோண் டார்மட வார்முன் றில் ஆட்டிடவே.

(இ - ள்.) வணங்கித் தன்னை மனத்தகத்துக் கொள்ளத் திருக்கச்சி ஏகம்பர், செய்தருளுகின்ற மையலின் வருகை இவ்வளவு இருக்கின்றது என்பதனை முன்னே எவ்வகையாக அறிந்தேன். திருஏகம்பரின் குமாரராகிய முருகப்பெருமானின் குதிரையாகிய மயில் அதனை அடித்தலால் கொடியதாகிப் புலராத இரவில் பெண்களின் முற்றத்தில் ஆட்டும்படி இவ்வளவு பாம்புகளையும் கொண்டனர்.

(வி - ம்.) பரவி - தொழுது. புரவி - குதிரை. அரவித்தனை: அரவு + இத்தனை, அரவு - பாம்பு. (௫௯)

இடவம் சுறுக்கெனப் பாயும்அஞ் சென்னி நகுதலைக்கண்
டிடஅஞ் சுவர்மட வார்இரி கின்றனர் ஏகம்பத்தீர்
படம்அஞ்சு வாயது நாகம் இரைக்கும் அதனுக்குமுற்
படஅஞ் சுவர்எங்ங னேபலி வந்திடும் பாங்குகளே.

(இ - ள்.) ஏகம்பத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவரே, நீர் ஏறிச் செல்லும் விடையோ, மிகுந்த விரைவோடு பாயாநிற்கும். தேவரீரைக் காண விரும்பிய பெண்கள், உம்முடைய அழகிய தலையின் மீது காணப்படும் விடாப் பெருநகையுடன் தோன்றும் வெண்டலை மாலையினைக் கண்டஞ்சுவர்; அஞ்சியோடுகின்றனர்: படத்தோடு கூடிய ஐந்து தலைகளையுடைய பாம்பு இரைந்து ஓசையிடும்; அப்பாம்பினுக்கு முன்னே நிற்க அஞ்சுவர்: இங்ஙனம் இருப்பதால் பிச்சையினைக் கொண்டு வந்து அருகணைந்து இடுகின்ற தன்மை எங்ஙனம்?

(வி - ம்.) இட - பிச்சையிட: இடவம் - விடை; ஆனேறு. இரைக்கும் - ஓசையிடும். பாங்கு - தன்மை.

பாம்பினைக் கண்டு பலியிடுவார் அஞ்சும்பான்மை வருமாறு:

"செந்தமிழ்த்திறம் வல்லி ரோசெங்கண்
அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்குமி தென்கொ லோபலி
மாற்ற மாட்டோ மிடகிலோம்
பைந்தண் மாமலர் உந்து சோலைகள்
கந்த நாறுபைஞ் ஞீலியீர்
அந்தி வானமும் மேனி யோசொலும்
ஆரணீய விடங்கரே."

—எ. நகூ—இ. (௬௦)

[தலைவனைக் கண்டு மையல்கொண்டு வருந்தினாள் கூறியது]

பாங்குடைக் கோள்புலி யின்அதள் கோண்டீர்நும் பாரிடங்கள்
தாங்குடை கோள்ளப் பலிகோள்ள வந்தீர் தடங்கமலம்
பூங்குடை கோள்ளப் புனற்கச்சி ஏகம்பங் கோயில்கோண்டீர்
ஈங்கிடை கோள்ளக் கலைகோள்ள வந்தீர் இடைக்குமின்றே.

(இ - ள்.) விரிந்த தடாகத்திலுள்ள தாமரைகள் பூக்களைக் குடையாகக் கொள்ளுகின்ற அந்நீர் சூழ்ந்த திருக்கச்சி ஏகம்பத்தின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கின்றவரே! இன்றைக்கு இடைக்கும் அழகுடைய, வலியுள்ள புலியின் தோலைக் கொண்டீர் உமக்குரிய பூதப்படைகள் குடை பிடியா நிற்கப் பிச்சை கொள்ள எழுந்தருளினீர்; இடையிலே கொண்ட அந்த ஆடையைக் கொள்ளும் படி இவ்விடம் எழுந்தருளினீர் போலும்.

(வி - ம்.) தாம் - அசை. பாங்கு - அழகு. கோள் - வலிமை அதள் - தோல். பாரிடம் - பூதம். பலி - பிச்சை. தடம் - குளம். கலை - ஆடை. (ருக)

[இறைவன் உலாவருதலைக் கண்ட தோழியருள் ஒருத்தி மற்றொருத்திக்குக் கூறியது]

இடைக்குமின் தோற்கும் இணைமுலை யாய்முதி யார்கள்தஞ்சோல்
கடைக்கண்ணநன் றுங்கச்சி ஏகம்பர் ஐயங் கோளக்கடவும்
விடைக்குமுன் தோற்றநில் லேநின் றினிஇந்த மோய்குழலார்
கிடைக்குமுன் தோற்றநஞ் சங்கிது ஓதங் கிறித்துவமே.

(இ - ள்.) இடைக்கு மின்னல் தோற்றுப் பின்னடையும்; ஈர்க்கிடை போகா இரண்டாகிய இளமுலையாய் பெரியோர் கூறும் சொல்லிலும், அவர்களது அருள் நோக்கமாகிய தண்ணளி நலம் தருவதாகும். ஆதலால், அழகிய திருக்கச்சிக்கண் எழுந்தருளி யிருக்கும் திருஏகம்பர் பிச்சை ஏற்கும்படி செலுத்தி வருகின்ற விடை யெனப்படும் ஆனேற்றுக்கு முன், காணப்படும்படி அவர் எதிரில் நிற்பாயாக; அவ்விடத்தில் நின்று இந்த நெருங்கிய கூந்தலையுடைய பெண்களின் கூட்டத்தின் முன்னர்க் காணப்பட்டுப் பிச்சை ஏற்க வருதல் உண்மையாகவுள்ளதன்று; பொய்த்தன்மை யாகும்; இனி நஞ்சை யொத்துச் சொல்லவுங் கூடும் என்று இச்செய்தியைக் கூறுவாயாக.

(வி - ம்.) இடை - இடுப்பு. இணை - இரண்டு. கிறித்துவம் - பொய்த்தன்மை. (ருஉ)

[இறைவன் உலாவைக் கண்டாளது நிலைமை கூறியது]

கிறிபல பேசிச் சதிரால் நடந்து விடங்குபடக்
குறிபல பாடிக் குளிர்கச்சி ஏகம்பர் ஐயங்கோள்ள

நெறிபல வார்குழ லார்மெலி வுற்ற நெடுந்தெருவில்
செறிபல வெள்வளை போயின தாயர்கள் தேடுவரே.

(இ - ள்.) குளிர்ச்சியுள்ள நீர்வளம் பொருந்திய திருக்கச்சிக் கண் எழுந்தருளிய திருவேகம்பர், பல பொய்ம்மொழிகளைக் கூறிக் கொண்டு மிக்க திறமையுடன் நடந்து, அழகுண்டாகக் குறிக்கத்தக்க பல செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டு பிச்சை கொள்ளும்படி ஐம்பால் முதலிய பகுப்புக்களைக் கொண்ட கூந்தலையுடைய பெண்கள் காமத்தால் வருந்துகின்ற, நீண்ட தெருவினிடை, நெருங்கி வந்த தால், பலவாகிய வெள்ளிய வளைகளைப் பூண்ட பெண்கள், அவை கை விட்டு நழுவிக் கீழே விழும்படி தோற்றனர். தாய்மார்கள் தேடு வார்கள்.

(வி - ம்.) கிறி - பொய். விடங்கு - அழகு. செறி: செறிதல் என்னுந் தொழிற் பெயரின் முதனிலை.

ஐம்பாலாவன: க. முடி உ. கொண்டை ௩. சுருள் ௪. குழல் ௫. பனிச்சை. இவற்றுள் மயிரை உச்சியின் முடித்தல் முடி, பக்கத்து முடித்தல் கொண்டை, பின்னே செருகல் சுருள்; சுருட்டி முடித்தல் குழல், பின்னி விடுதல் பனிச்சை. (௫௩)

[தோழி, தலைவியது இளமை கூறி மறுத்தல்]

தேடுற் றிலகள்ளம் நோக்கந் தெரிந்தில சொற்கள்முடி
கூடுற் றிலகுழல் கொங்கை பொடித்தில கூறுமிவள்
மாடுற் றிலமணி யின்மட அல்குலும் மற்றிவள்பால்
நாடுற் றிலஎழில் ஏகம்ப னுர்க்குள்ளம் நல்கிடத்தே.

(இ - ள்.) கரவு நோக்கம் பொருந்திய கண்கள் தலைவனைத் தேடத் தொடங்க வில்லை. இவள் கூறும் சொற்கள் தெளிவாய்ப் புலப்படவில்லை. கூந்தலும் முடிக்கும்படி கூடவில்லை. கொங்கை கள் செவ்வையாகத் தோன்றவில்லை, புகழத்தக்க இவளிடத்து, அழகு கொண்ட இளமையாகிய அல்குலும், செவ்வி எய்த வில்லை. இவ ளிடத்து அழகு நிறைந்த ஏகம்பனுர்க்குக் கருணை செய்தற்கு மனம் நாடவில்லை.

(வி - ம்.) கள்ளம் - கரவு இஃது இளமை கூறி மறுத்தல்.

இப்பாட்டுக்கு அடிப்படையாகக் காணப்படும் திருப்பாட்டு வருமாறு:

"உருகு தலைச்சென்ற வுள்ளத்து மம்பலத் தும்மொளியே
பெருகு தலைச்சென்று நின்றேன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை முடியா முலைபொடியா
வொருகு தலைச்சின் மழலைக்கென் னேவைய வோதுவதே."

—திருச்சிற்றம்பலக் கோவையார், ௧0௪. (௫௪)

நல்கும் புகழ்க்கட வூர்நன் மறையவன் உய்யநண்ணிக்
கோல்கின்ற கூற்றைக் குமைத்தவெங் கூற்றம் குளிர்திரைகள்
மல்குந் திருமறைக் காட்டமிர் தேன்றும் மலைமகள்தான்
புல்கும் பொழிற்கச்சி ஏகம்பம் மேவிய பொன்மலையே.

(இ - ள்.) எக்காலத்தும் மலைமகளாகிய உமையம்மையார் தழுவுகின்ற சோலை சூழ்ந்த திருக்கச்சி ஏகம்பத்தினைப் பொருந்தி எழுந்தருளி யிருக்கும், பொன்மலையை ஒத்த சிவபெருமான் புகழைத் தருகின்ற திருக்கடவூரின்கண் திருத்தோற்றமுற்ற நான் மறைவல்ல மார்க்கண்டேய முனிவர் பிழைக்கும் வகை, ஆருயிர்களை அடைந்து கொல்லுகின்ற நமனைக்காலாலுதைத்த கொடிய நமனானவன் ஆவன். குளிர்ந்த அலைகள் நிறைந்த திருமறைக் காட்டில் எழுந்தருளிய அமிழ்த மானவன்.

(வி - ம்) உய்ய - பிழைக்க. கூற்று - நமன். குமைத்தல் - அழித்தல். புல்குதல் - தழுவுதல். (௫௫)

மலையத் தகத்தியன் அர்ச்சிக்க மன்னி வடகயிலை
நிலையத் தமரர் தொழஇருந் தான்நெடு மேருஎன்னும்
சிலைஅத்தன் பைம்பொன் மதில்திரு ஏகம்பத் தான்திகழ்நீர்
அலையத் தடம்பொன்னி சூழ்திரு வையாற்று அருமணியே.

(இ – ள்.) பசுமையாகிய பொன்னாலமைந்த மதில் சூழ்ந்த திருஏகம்பத்தின்கண் எழுந்தருளியவன், பொதிகை மலைக்கு வந்த அகத்திய முனிவர், தனித்தமிழ்ப் போற்றி மறை இனித்தமுற ஓதிப் பூத்தூவி வழிபாடு புரிய, பொருந்தி வடகயிலையாகிய இடத்துத் தேவர்கள் வணங்க, எழுந்தருளியவன்; நெடிய மேருமலை யென்கிற வில்லைக் கையிலேந்தியவன், விளங்குகின்ற நீரானது அசைகின்ற அந்த விரிவாகிய காவிரிப்பேராறு சூழ்ந்த திருவையாற்றின்கண் எழுந்தருளி யிருக்கும். அருமையாகிய மாணிக்கமே யாவன்.

(வி – ம்) மலையம் - பொதிகை. அமரர் - தேவர்கள். சிலை - வில். தடம் - விரிவு. பொன்னி - காவிரியாறு. (௫௬)

மணியார் அருவித் தடவி மயங்குடக் கோல்லிகல்லின்
திணியார் அருவியின் ஆர்த்த சிராமலை ஐவனங்கள்
அணியார் அருவி கவர்கிளி ஓப்பும்இன் சாரல்விந்தம்
பணிவார் அருவினை தீர்க்கும் ஏகம்பர் பருப்பதமே.

(இ - ள்.) மணிகள் நிறைந்த நீரருவித் தடங்களையுடைய வடபெருங் கல் எனப்படும் பனிமலையும். மேற்குத் திசைக்கணுள்ள கொல்லிமலையும், மூன்றாகிய மலையின்கணுள்ள, ஆத்தி மரத்தின்கண், அழகிய புட்கள் தங்கியுள்ள திரிகூட மலையும், மலைநெற்களையும், அழகு நிறைந்த தினைக்கதிர்களையும், கவர்ந்து செல்லும் கிளிப்பிள்ளை

யும் காப்போர் வெருட்டுகின்ற இனிய மலைப் பக்கத்துடன் கூடிய, விந்தமலையும், காதலால் கைகூப்பி வணங்குவாருடைய, தீவினைகளைத் தீர்த்தருளுகின்ற திருவேகம்பரின் மலைகளாகும்.

(வி - ம்.) தினியாரருவி : திரிணி என்னும் வடமொழி திணி எனக் குறைந்து நின்றது. திரிணி - மூன்று. ஆர் - ஆத்தி. அருவி - தினைக்கதிர் ஒப்புதல். (௬எ)

பருப்பதங் கார்தவழ் மந்தரம் இந்திர நீலம்வெள்ளை
மருப்பதங் கார்கருங் குன்றியங் கும்பரங் குன்றம்வில்லார்
நெருப்பதங் காகுதி நாறும்ம கேந்திரம் என்றிவற்றில்
இருப்பதங் காவுகந் தான்கச்சி ஏகம்பத் தெம்இறையே.

(இ - ள்.) திருக்கச்சி ஏகம்பத்தில் எழுந்தருளி யிருக்கும் எம் விழுமிய முழுமுதல்வன் அழகிய சோலை சூழ்ந்த திருமலையும் மேகங்கள் தவழ்கின்ற மந்தர மலையும், இந்திர நீலமலையும் வெண்மையாகிய கொம்புகள் பொருந்திய கருமையாகிய யானைகள் அவ்விடத்தில் உலாவும், திருப்பரங் குன்றும், வில்லையுடைய வேடர் மூட்டும் நெருப்பானது அவ்விடத்து வேள்வித் தீயைப் போல் மணங்கமழ்கின்ற மகேந்திரமலை என்று சொல்லப்படுகின்ற இத்திருப்பதிகளில் இருத்தலாக உகந்தான்.

(வி - ம்.) பருப்பதம் - மலை; திருமலை; சீசைலம். நாறும் - மணங்கமழும். உகந்தான் - விரும்பினன். சீசைலம் - திருப்பருப்பதம். இதனை மல்லிகார்ச்சுன பர்வத மெனவுங் கூறுப. இது நந்தியம் பெருமானால் பூசிக்கப்பட்ட திருவூர். இறைவன் திருப்பெயர் பருவதநாதர். இறைவி திருப்பெயர் பருவதநாயகி.

மந்தரம் உலகத்தின் மத்தியிலிருப்பது. இது தேவர்கள் பூசிக்குமிடம். இந்திர நீலம் வடநாட்டு நன்னகர். இந்திரன் வழிபட்டு வேண்டுவ பெற்ற திருவூர். அருச்சுனன் வழிபட்டுப் பாசுபதம் பெற்ற திருவூர். இறைவன் திருப்பெயர் நீலாசலநாதர். இறைவி திருப்பெயர் நீலாம்பிகை. தீர்த்தம் இந்திர தீர்த்தம். திருப்பரங்குன்று-இது பாண்டி நாட்டு நன்னகர். சிபியின் பொருட்டுச் சிவபெருமான் அந்தணனாய்ச் சென்று தானமேற்ற திருவூர். அரிச்சந்திரன் வாய்மை திறம்பா திருக்க வழிபட்ட திருவூர். தெய்வயானை அம்மையாருக்குத் திருமணம் நிகழ்ந்த திருஇடம். முருகா என்னும் திருநாமம் ஒழித்துத் தன் பெயர் கூறக்கேட்டு மறுத்த மனைவியின் கையைத் துணித்தனன் அவள் கணவன். முருகன் திருவருளால் அக்கணவன் அஞ்சுமாறு அக் கை வளர்ந்துள்ளதும் இத்திருவூரின் கண்ணேயாம்.

மகேந்திரம் உத்கல நாட்டிலுள்ள மலை. பரசுராமர் பூசித்த திருவூர். அனுமன் இலங்கைக்குத் தாவியதும் இம்மலையினின்றென்பர். (௬அ)

இறைத்தார் புரமெய்த வில்லிமை நல்லிம வான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம்|வெண்குன்றஞ் செங்குன்றம்மன்னற்குன்றம்

நிறைத்தார் நெடுங்குன்றம் நீள்கழுக் குன்றம்என் தீவினைகள்
குறைத்தார் முதுகுன்றம் ஏகம்பர் குன்றென்று கூறுமினே.

(இ - ள்.) முதன்மை கொண்ட கொடிப்படையினையுடைய முப்புரத்தார்களின் மூன்று கோட்டைகளையும் தீக்கு இரையாக்கிய வில்லினை யொத்தநல்ல புருவங்களையுடைய மலைமகட்குமறைவிடங்களை முறையாகக் கொண்ட கருங்குன்றமும், வெண்ணெய் மலையும், திருச் செங்குன்றும், நிலைபெற்ற நீலமலையும் நிறைந்த மலர்களையுடைய கொடு முடியும், நீண்ட கழுகுமலையும், எளியேனின் தீய வினைகளை நீக்கி யருளிய சிவபெருமானுக்குரிய பழமலையும் திருஏகம்பவாணர் வீற்றிருந் தருளும் குன்றுகளா மென்று கூறுமின்கள்.

(வி - ம்.) இறை - முதன்மை. தார் - கொடி.

மறைத்தார் கருங்குன்றம் என்றது மறைவிடங்களாகிய அறைகளை முறையாகக் கொண்ட திரு அறையணி நல்லூர். இது நடு நாட்டி லுள்ள திருமலைகளில் ஒன்றும். இது நடு நாட்டில் பெண்ணை நதி தீரத்தில் பிரசண்டமுனிவரால் பூசிக்கப்பட்ட திருவூர்.

வெண்குன்றம் கொங்கு நாட்டிலுள்ள வெண்ணெய் மலையாம் போலும். செங்குன்றம் இதுவும் கொங்கு நாட்டிலுள்ளது. இதுவே திருச்செங்குன்றூர். இத்திரு வூரின்கண் இறைவிவழிபட்டு இறைவன் திருமேனியின்கண் ஒருபாகங் கொண்டருளியது. நெடுங்குன்றம் இதுவும் கொங்கு நாட்டிலுள்ளது; இதனைத் திருப்பாண்டிக் கொடு முடி என்ப. திருக்கழுக் குன்றம், இது தொண்டை நாட்டிலுள்ளது. வசுக்கள் எண்மரும், திருநந்திதேவர் இந்திரன், திருமால் முதலி யோரும் மூன்று ஊழிகளிலும் முனிவர்களும் கழுகுருக்கொண்டு வழி பட்ட திருவூர். நான் மறைகளும் மலையுருக்கொண்டு இறைவனைத் தாங்குந் திருவூர். இக்கலியூழியில் பூடா, விருத்தா என்னும் இரண்டு முனிவர்களால் பூசிக்கப்பெற்ற தலம். முதுகுன்றம் பழமலை இது நடு நாட்டிலுள்ளது. மாலயன், வசுக்கள் எண்மர் வழிபட்ட திருவூர். நம்பியாரூரர் பொன்பெற்று மணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூர்க் குளத்தில் எடுக்கப்பட்ட சிறப்பினது.

இறைவன் உறையும் திருமலைகளிற் சில வருமாறு :

"கந்தமா தனங்கைலை மலைகே தாரங்
 காளத்தி கழுக்குன்றங் கண்ணா ரண்ணா
மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப்பதம்
 மகேந்திர மாமலைநீல மேமகூடம்
விந்தமா மலைவேதஞ் சையம் மிக்க
 வியன்பொதியின் மலைமேரு உதயம் அத்தம்
இந்துசே கரனுறையும் மலைகள் மற்றும்
 எத்துவோம் இடர்கெடநின் றேத்து வோமே."

— சு. எக — கூ. (௯க)

கூறுமின் தொண்டர்குற் றாலம்நெய்த் தானந் துருத்திஅம்பேர்
தேறுமின் வேள்விக் குடிதிருத் தோணி புரம்பழனம்

ஆறுமின் போல்சடை வைத்தவன் ஆரூர் இடைமருதேன்
றேறுமின் நீரேம் பிரான்கச்சி ஏகம்பம் முன்னினைந்தே.

(இ - ள்.) திருத்தொண்டர்காள், திருக்குற்றால மெனவும், திருநெய்த்தான மெனவும், திருத்துருத்தி எனவும், அழகிய திருப்பெயர்களைக் கூறுங்கள். திருவேள்விக் குடி யெனவும், திருத்தோணிபுரம், எனவும் திருப்பழனம் எனவும் மனத்திடைத் திடம்பெறக் கொள்ளுங்கள்; வான்யாற்றை மின்னலை யொத்த திருச்சடையினிடத்து வைத்தருளியவனாகிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திருவாரூர். திருவிடை மருதூர், என்று முன்னே நினைந்து எம் தலைவனது திருக்கச்சி ஏகம்பத்தினை நீங்கள் ஓதுங்கள.

(வி - ம்.) தேறுமின் - திடம்பெறக் கொள்ளுங்கள். ஏறுமின் - ஓதுங்கள். திருக்குற்றாலம் பாண்டி நாட்டிலுள்ளது. இறைவன் பெயர் திருக்குற்றாலநாதர். இறைவி பெயர் குழல்வாய் மொழியம்மை. வாசுகி. கவுற்சனர் முதலியோர் பூசித்த இடம். வியத்திரி, கண்டகசேதனன், புட்பநந்தன் என்போர் வீடு பேறெய்திய திரு இடம். தக்கன் வேள்வியில் சிவனுக்கு மாறுபட்ட தேவர்க்குண்டாகிய பெரும் பாவம் நீங்கப் பூசித்த இடம். இது முன்னாளில் திருமால் திருப்பதி எனவும் இவ்வழி யடைந்த சிவக்கோலத்து அகத்தியரை, திருமாலடியவர் அணுக வொட்டாது அகற்றினர்; அஃதறிந்த அகத்திய முனிவர் திருமாலடியராக் கோலங்கொண்டு கோயிலினுட் புகுந்து நெடியோனுருவைக் குறுகச் செய்து சிவக்குறி வடிவாக்கினர் எனவும் புராணம் கூறும்.

திருநெய்த்தானம் சோணாட்டில் காவிரிக்கு வடபாலுள்ள திருவூர். கலைமகள் வழிபட்ட இடம். இறைவன் பெயர் நெய்யாடியப்பர், இறைவி வாலாம்பிகை அம்மை. திருத்துருத்தி காவிரியின் தென்கரைக்கணுள்ளது. இறைவன் வேதேச்சுரர் இறைவி அமுதமுகியம்மை நம்பியாரூரர் சங்கிலி நாய்ச்சியார் பொருட்டுக் கூறிய சூளுறவை மீறியதால் ஏற்பட்ட உடற்பிணியைப் போக்கிய திருவூர். திருவேள்விக்குடி காவிரியின் வடகரையிலுள்ளது. இறைவன் கலியாண சுந்தரர். இறைவி பரிமள சுகந்தநாயகி ஒரு வேந்தன் மகன் பொருட்டு இறைவனே தீ வேட்பவராய் அவனுக்கு மணம் முடிப்பித்தருளிய திருவூர். திருத்தோணிபுரம் இதுவே சீகாழி, திருஞான சம்பந்தப் பெருமானின் திருத்தோற்றந் திகழ்ந்த திருவூர்.

திருப்பழனம் காவிரியின் வடகரையிலுள்ளது. இறைவன் ஆபத்சகாயர். இறைவி பெரியநாயகி; எண்புலக்காவலர் வழிபட்ட திருவூர். திருவாரூர் முசுகுந்த வேந்தன் ஆண்ட திருவூர்: திருமாலின் நெஞ்சகத்தில் எழுந்தருளியிருந் தளி செய்த பெருமானை முசுகுந்த வேந்தன் இந்திரனுக்குச் செய்த உதவிக் கீடாக (அப்பெருமான் விடங்கர் என அழைக்கப்படுவர்:) அப்பெருமானைக் கொண்டு வந்து திருவாரூரின் கண் நிலை நாட்டினன். இது விடங்கத்திருவூர் ஏழனுள் ஒன்று: இறைவன் பெயர் வீதிவிடங்கர். இறைவி பெயர் கமலவதியம்மை. திருவிடைமருதூர் இதனை மத்தியார்ச்சுனம் எனவும் வழங்குப. இது தேவர் பலர் பூசித்து வரம் பெற்ற திருவூர், இறைவன் உருத்திரரைக் கொண்டு உலகினைப் படைப்பித்த திருவூர், வரகுண தேவர்க்கு

அவர் பூசத்துறையில் தீர்த்த மாடியதும் அறியாது புரிந்த கொலைப் பழி நீங்கிற்று. *(௬0)*

நினைவார்க் கருளும் பிரான்திருச் சோற்றுத் துறைநியமம்
புனைவார் சடையோன் புகலூர் புரம்பியம் பூவணம்நீர்
பனைவார் பொழில்திரு வெண்காடு பாச்சில் அதிகைஎன்று
நினைவார் தருநெஞ்சி னீர்கச்சி ஏகம்பம் நண்ணுமினே.

(இ - ள்.) *ஒல்லும் வகை ஓவாது உள்குவார்க்குத் தண்ணளி புரியும் முழு முதல்வன் வீற்றிருந்தருளும் திருச்சோற்றுத்துறையும், திருநியமமும், ஒப்பனை செய்யப்பட்ட நீண்ட திருச்சடையினை யுடையோனது திருப்புகலூரும், திருப்புறம்பியமும், திருப்பூவணமும், பனைமரத்தின்கண் நீர் ஒழுகுகின்ற திருவெண்காடும் திருப்பாச்சிலாச்சிராமமும், திரு அதிகையும் என்று நினைவில் பொருந்தும், தூயமனமுடையவர்களே, திருக்கச்சி ஏகம்பத்தினை அன்புடன் அடையுங்கள்.*

(வி - ம்.) *நினைதல் - உள்குதல்; தியானித்தல்.*

திருச்சோற்றுத்துறை காவிரியின் தென்கரையில் உள்ளது. சிவனடிக்காதல் சேர் அருளாளர் என்னும் மறையவருக்கு உலவாத் திருவமுதளித்த திருவூர். இறைவர் பெயர் தொலையாச் செல்வர். இறைவி ஒப்பிலம்மையார். நியமம் இது சோணாட்டிலுள்ள திருப்பருத்தி நியமம்; சூரியன் வழிபட்ட திருவூர். இறைவன் பருதியப்பர். திருப்புகலூர் சோணாட்டில்காவிரிக்குத்தென்கரையிலுள்ளது. தீக்கடவுளால் வழிபடப்பட்ட திருவூர். திருநாவுக்கரசு நாயனார் திருவடிப்பேறு பெற்ற திருவூர்.

திருப்புறம்பியம் காவிரியின் வடகரைக் கண்ணுள்ளது. சுந்தோபசுந்தர் வழிபட்ட திருவூர். இறைவன் பெயர் சாட்சிநாதேச்சுரர் இறைவி கரும்பன்னசொல்வி. திருப்பூவணம் பாண்டி நாட்டிலுள்ள திருவூர். பப்புருமுனிவர் வழிபட்ட திருவூர். பொன்னனையாள் பொருட்டு இறைவன் இரசவாதம் செய்தருளிய திருவூர். இறைவன் பெயர் பூவணநாதர். இறைவி பெயர் மின்னும்பிகை, திருவெண்காடு சோணாட்டிலுள்ளது. தாருகாசுரனுடன் பொருது கொம்புகளிழந்த வெள்ளையானை வழிபட்ட திருவூர். தம்முடனிருந்த பிள்ளையை அறியாது திருக்கோயிலில் விட்டு விட்டுத் திருக்காப்பிட்டு வந்தவர் மீண்டு போய்த் திருக்காப்பு நீக்கக் கொன்றை மரமாகக் கண்ட திருவூர். இறைவன் பெயர் வெண்காட்டீசர். இறைவி பெயர் பிரம்மவித்தியா நாயகி. திருப்பாச்சிலாச்சிராமம் சோணாட்டில் காவிரிக்கு வடகரையிலுள்ள திருவூர். இறைவன் பெயர் நீலகண்டர்; இறைவி பெயர் விசாலாட்சியம்மை. கொல்லிமழவன் மகளுக்கு ஏற்பட்டிருந்த வலிநோயைத் திருஞானசம்பந்தப் பெருமானார் தீர்த்தருளினார். இவ்வலி குமரகண்டவலி என்ப. திருவதிகை நடு நாட்டுத் திருவூர்களில் ஒன்று. இறைவன் பெயர் வீரட்டானேச்சுரர். இறைவி பெயர் திரிபுர சுந்தரியம்மை. திரிபுரம் எரித்ததிருவூர். திருநாவுக்கரசு நாயனார் உழவாரத் திருப்பணியை மேற்கொண்ட திருவூர். எட்டு வீரட்டங்களுள் ஒன்று. *(௬௧)*

நண்ணிப் பரவுந் திருவா வடுதுறை நல்லம்நல்லூர்
மண்ணிற் பொலிகடம பூர்கடம் பந்துறை மன்னுபுன்கூர்
எண்ணற் கரிய பராய்த்துறை ஏர்கோள் எதிர்கோள்பாடி
கண்ணிப் பிறைச்சடை யோன்கச்சி ஏகம்பங் காண்மின்சென்றே.

(இ - ள்.) மெய்யடியார்கள் அன்பொடும் நினைந்து வணங்குகின்ற திருவாவடு துறையும், திருநல்லமும், திருநல்லூரும், நிலவுலகில் விளங்குகின்ற திருக்கடம்பூரும், திருக்கடம்பந் துறையும், நிலைபெற்ற திருப்புன்கூரும் நினைத்தற்கு அருமையாகிய திருப்பராய்த் துறையும் அழகு மிகுந்த திரு எதிர்கொள்பாடியும், திங்களைக் கண்ணியாகக் கொண்டருளிய திருச்சடையினையுடைய சிவபெருமான் வீற்றிருந்தருளும் திருக்கச்சி ஏகம்பத்தினையும் நடந்து சென்று கண்டு கும்பிட்டுக் காட்சி எய்துங்கள்.

(வி - ம்.) நண்ணி - உள்கி; பரவுதல் வழிபடுதல்; வணங்குதல், திருவாவடுதுறை சோணாட்டிலுள்ளது, திருமூல நாயனார் எழுந்தருளியிருந்து திருமந்திர மாமாலையினை அருளிச்செய்த திருவூர்; தேவேந்திரனும், பல முனிவர்களும் வழிபட்டது. நல்லூர் சோணாட்டுத் தென்கரையிலுள்ள திருவூர். பாண்டவர், கிருட்டினன், வாசுதேவன் முதலியோர் வழிபட்டது. கடம்பூர் - திருக்கடம்பூர்; சோணாட்டில் காவிரியின் வடகரையிலுள்ளது. தேவேந்திரன் அமுத முண்டாகும்படி வழிபட்ட திருவூர். திருக்கடம்பந்துறை சோணாட்டுத் திருவூர். சிவபெருமான் கண்ணுவ முனிவர்க்குக் கடம்ப மரத்தடியில் காட்சி கொடுத்தருளினன், திருப்புன்கூர் திருநாளைப் போவார், ஏயர்கோன் கலிக்காம நாயனார் முதலியோர் தொழுதுயர்ந்த திருவூர், சோணாட்டிலுள்ளது. திருப்பராய்த்துறை கோயின் மரமாகப் பராய்மரம் இருக்கிறது. இந்திரனும், முனிவர்கள் எழுவரும் பூசித்த திருவூர். திரு எதிர்கொள்பாடி சோணாட்டிலுள்ளது. ஓர் அரசகுமரன் திருமணம் செய்துகொண்டு மீளுகையில் சிவபெருமான் மாமனாக எதிர்கொண்ட திருவூர். (௬௨)

சென்றேறி விண்ணுறும் அண்ணா மலைதிகழ் வல்லம்மென்பூ
இன்தேறல் பாய்திரு மாற்பேறு பாசூர் எழில்அழுந்தூர்
வன்தேர வன்திரு விற்பெரும் பேறு மதில்ஒற்றியூர்
நின்றோர் தருகச்சி ஏகம்பம் மேயார் நிலாவியவே.

(இ - ள்.) மேல் ஏறிச்சென்று வானத்தை யடையும், திருஅண்ணாமலையும், விளங்குகின்ற திருவல்லமும், மெல்லிய பூவின் தேன் பாய்கின்ற திருமாற் பேறும், திருப்பாசூரும், அழகுமிகுந்த திருவழுந்தூரும், வலிய தேரையுடைய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திருவினையுடைய பெரும்பேறும், மதில்சூழ்ந்த திருவொற்றியூரும், நிலை பெற்ற அழகு தருகின்ற திருக்கச்சி ஏகம்பத்தினைப் பொருந்தியவர் எழுந்தருளி யிருக்கும் திருவூர்களாகும்.

(வி - ம்.) திருவண்ணாமலை நடுநாட்டிலுள்ளது. இறைவி திருக்கண் புதைத்த தீமை நீங்கியுய்யத் தவஞ்செய்து பாகமடைந்தது.

அயனும் மாலும் தேடிக்காணாத நீண்ட திருவூர். வல்லம் தொண்டை நாட்டிலுள்ளது. கோள்கள் ஒன்பதும், வல்லாள மன்னனும் பூசித்த திருவூர். திருமாற்பேறு தொண்டை நாட்டிலுள்ளது. ததீசி முனிவரிடம் பொருது சக்கரம் இழந்த திருமால் சக்கரம் பெறும் பொருட்டுப் பூசித்துப் பேறுபெற்ற திருவூர். திருப்பாசூர் தொண்டை நாட்டிலுள்ளது. மூங்கிலடியில் முளைத்த சிவபெருமானைக் கண்டு கும்பிட்ட சோழன் பொருட்டுப் பாம்பாட்டிச் சித்தராய்ச் சோழன் முன் எழுந்தருளி அருள் புரிந்த திருவூர். திருவழுந்தூர் சோழநாட்டிலுள்ளது. வேதங்கள், எண்புலக் காவலர், விண்ணவர்கள் பூசித்துப் பேறு பெற்ற திருவூர். பெரும்பேறு தொண்டை நாட்டிலுள்ளது. இது தேவாரம் பெற்ற திருவூருக்கு அண்மையிலுள்ளது. இங்கு எழுந்தருளியிருப்பவர் அகத்தீசுரர். திருவொற்றியூர் தொண்டை நாட்டிலுள்ளது. ஆதிசேடன் வழிபட்ட திருவூர்; பட்டினத்தடிகள் வீடுபேறு பெற்ற நன்னகர். (௬௩)

நிலாவு புகழ்த்திரு வோத்தூர் திருஆமாத் தூர்நிறைநீர்
சுலாவு சடையோன் புலிவலம் வில்வலம் கோச்சைதொண்டர்
குலாவுந் திருப்பனங் காடுநன் மாகறல் கூற்றம்வந்தால்
அலாயென் றடியார்க் கருள்புரி ஏகம்பர் ஆலயமே.

(இ - ள்.) புகழ்தங்கிய திருவோத்தூரும், திரு ஆமாத்தூரும், நிறைந்த நீரானது சூழ்ந்த சடையையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்புலிவலமும், வில்வலமும், சீகாழியும், சிவனடியார்கள் கொண்டாடுகின்ற திருப்பனங்காடும் நல்ல திருமாகறலும், நமன் எதிர்ப்படின் அடா என்று அவனை உரப்பி அடியடைந்த தொண்டர்க்குத் தண்ணளி செய்தருளுகின்ற திரு ஏகம்பரது திருக்கோவில்களாகும்.

(வி - ம்.) திருவோத்தூர் தொண்டை நாட்டிலுள்ளது. இது வேதத்தின் பொருளறியாது மயங்கிய முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் இறைவன் பொருள் விரித்தருளிய திருவூர். ஆண்பனை பெண்பனை யாகிய திருவூர். திரு ஆமாத்தூர் நடு நாட்டிலுள்ளது. காமதேனுவால் பூசிக்கப்பெற்ற திருவூர். கொச்சை; இது கொச்சை முனிவர் பூசித்த திருவூர். இது சீகாழி எனப்படும்; திருப்பனங்காடு தொண்டை நாட்டிலுள்ளது: கண்ணுவ முனிவர் பூசித்த திருவூர், இறைவனுக்குப் படையல்செய்ய வேறொன்றுங் கிட்டாமையால் கையில் கிடைத்த பனம்பழத்தைப் படைத்தனர். திருமாகறல் தொண்டை நாட்டிலுள்ளது. கடகன் என்னும் அசுரனது போருக்கு ஆற்றாத இந்திரன் பூசிப்ப இறைவன் உடும்புவடிவாகி அருள்புரிந்த திருவூர். (௬௪)

ஆலயங் கார்கரு காவைகச் சூர்திருக் காரிகரை
வேலயங் கேற திருவான்மி யூர்திரு ஊறல்மிக்க
சோலையங் கார்திருப் போங்தைமுக் கோணங் தோடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு ஆலங்கா டேகம்பம் வாழ்த்துமினே.

(இ - ள்.) தொண்டர்காள்! கரும்பாலைகள் மிகப்பொருந்திய திருக்கருகாவூரும், திருக்கச்சியூரும், திருக்காரிகரையும், கடலலைகள் கரைக்கண் மோதும் திருவான்மியூரும், திருவூறலும், மிகுந்த சோலைகள் பொருந்திய திருப்பனையூரும் திருப்பள்ளியின் முக்கூடலும் நெருங்கிய கொன்றை மாலையினை யணிந்தருளிய சிவபெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருஆலங்காடும், திருவகம்பமும் வாழ்த்துங்கள்.

(வி - ம்.) போந்தை - பனை.

கருகாவை என்பது சோழநாட்டிலுள்ளது கருகாவூர் என வழங்கும்; திங்களும் மற்றைய கோள்களும் வழிபட்ட திருவூர். திருக்கச்சூர் தொண்டைநாட்டின்கண் உள்ளது. இது வித்தியாதரர் முதலியோர் பூசித்த திருவூர்: சனகர் முதலிய நால்வருக்குத் தெளிவருளிய திருவூர். நம்பியாரூரர் பொருட்டுச் சிவபெருமான் கிழ அந்தணராய் ஊருள் சென்று ஐயமேற்றுக் கொண்டு வந்து அவர்க்குக் கொடுத்தனன். திருவான்மியூர் தொண்டை நாட்டுத் திருவூர். ஆன்-பசு. வழிபட்ட திருவூர், வான்மீகரும் வழிபட்டுத் திருக்கூத்துக் காட்சி கண்டு களித்தனர். திருவூறல் தொண்டை நாட்டிலுள்ளது. உமையம்மையார் வழிபட்ட திருவூர். நந்திவாயினின்றும் இடையறாது நீர் ஊற்றிக் கொண்டிருத்தலால் ஊறல் என்னும் பெயர் அமைந்தது. திருப்போந்தை - திருப்பனையூர். சோழநாட்டிலுள்ளது. தியாகராசர் திருவூர். முசுகுந்தவேந்தனும், திருமகளும் வழிபட்ட திருவூர். முக்கூடல் என்பது சோழநாட்டிலுள்ளது. திருப்பற்றின் முக்கூடல் என்ப. இறைவர் முக்கோணேச்சுவரர். மூர்க்க முனிவர் வழிபட்ட திருவூர். திருவாலங்காடு; இது தொண்டை நாட்டிலுள்ளது. தேவேந்திரன், ஆதிசேடன், அனந்த முனிவர் முதலியோர் வழிபட்ட திருவூர்; காளியுடன் சிவபெருமான் மேல் நோக்கிய திருக்கூத்தியற்றியருளிய திருவூர். காரைக்காலம்மையார் திருக்கூத்துக் கண்டு என்றும் இன்புற்றிருக்கும் திருவூர். செட்டிக்குக் கொடுத்த சொல்லுறுதியாகிய வாய்மையைக் காத்தற் பொருட்டு விழுமிய வேளாண்மாந்தர் எழுபதின்மரும் தீக்குளித்து இறைபடியினை எய்திய திருவூர்.

இவ்வுண்மைகள் வருமாறு:

"மடுத்தபுனல் வேணியினார் அம்மைஎன மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக் குலவியதாண் டவத்திலவர்
எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றுமிருக் கின்றாரை
அடுத்தபெருஞ் சீர்பரவல் ஆரளவா யினதம்மா."

—கஉ. காரைக்காலம்மையார், சுகு.

"நற்றி றம்புரி பழைய னூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்ற போததம் உயிரையும் வணிகனுக் கொருகால்
சொற்ற மெய்ம்மையும் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை நாடு."

—கஉ. திருக்குறிப்புத் தொண்டர், ௩. (சுகு)

[செவிலி உடன்போன தலைவியது மென்மை நினைந்து வருந்தியது.]

வாழப் பெரிதேமக் கின்னருள் செய்யும் மலர்க்கழலோர்
தாழச் சடைத்திரு ஏகம்பர் தம்மைத் தொழாதவர்போய்
வாழப் பரற்சுரம் ஆற்ரு தளிரடி பூங்குழல்எம்
ஏழைக் கிடையிறுக் குங்குய பாரம் இயக்குறினே.

(இ - ள்.) அடியேம் பிறவி வலையினின்றும் பிழைத்து வாழ அடியேமுக்கு மிகுதியும் இனிய திருவருளைச் செய்கின்ற தாமரையை ஒத்த திருவடியை உடையவர், தொங்குகின்ற அழகிய திருச்சடை முடியினைக் கொண்டருளிய திரு ஏகம்பரைத் தொழாத செருக்குக் கொண்ட மூடர் சென்று வாழ்கின்ற அந்தப்பரல் நிறைந்த சுரத்தில் பூவை முடித்த குழலையுடைய எம்பாவை செல்லுதற்குத் தளிரை யொத்த கால்கள் பொறுக்க மாட்டாவாம். ஒருகால் செல்வளேல் எம்பெண்ணுக்கு முலையினது பாரத்தால் இடை முரியும்.

(வி - ம்.) பரல் - கூரிய முனையுள்ள சிறுசிறு கற்கள்; சுரம்.

தலைவனுடன் உடன்போக்கிற் சென்ற தலைவியின் தளிரடி நினைந்து செவிலி இரங்கிக் கூறியது. (சுசு)

[நெறியருமை கூறியாற்குத் தலைவியது அன்புகூறி உடன்
கொண்டு செல்க என்று தோழி கூறியது.]

உறுகின்ற வெவ்வழல் அக்கடம் இக்கொடிக் குன்பின்வரப்
பெறுகின்ற வண்மையி ளுலைய பேரருள் ஏகம்பனர்
துறுகின்ற மேன்மலர்த் தண்பொழிற் கச்சியைச் சூழ்ந்திலையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந் தண்பணை என்றுகொளே.

(இ - ள்.) தலைவனே! வெவ்விய தீவினை பெற்றிருக்கின்ற அக் காடு உன்னைப் பின்பற்றி வரும்படி யடைந்த வளப்பத்திஞல் கொடியை யொத்த இவளுக்கு மிக்கதண்ணளி வாய்ந்த திரு ஏகம்பரது மெல்லிய மலர்கள் நெருங்குகின்ற குளிர்ச்சி மிக்க சோலைகள் சூழ்ந்த திருக்கச்சியை நெருங்கி இளம் பிள்ளைகள் கொய்கின்ற அழகிய குவளை மலர்கள் செறிந்த சிறிய குளிர்ந்த வயலாயின தென்று ஆராய்ந்து கொள்.

(வி - ம்.) கடம் - காடு. தலைவன்பின் செல்லும் தலைவிக்குக் கொடியகாடும் வயல் சூழ்ந்த நிலம் போலாயிற் றென்பதாம். ஒருவர் அகத்தே அளவிறந்த களிப்பு ஏற்படுமாயின் புறச்சூழல்களிலுள்ள துன்பங்கள் அவரைத் துன்புறுத்த மாட்டா. அவர் தமக்குள்ள அகக் களிப்பே அவர்க்குப் புறத்தும் உண்டாகும். குறுதல் - கொய்தல்.

இவ்வுண்மை வருமாறு:

"பிணையுங் கலையும்வன் பேய்த்தே ரினைப்பெரு நீர்நசையா
லணையு முரம்பு நிரம்பிய வத்தமு மையமெய்யே

இணையு மளவுமில் லாவிறை யோனுறை தில்லைத்தண்பூம்
பணையுந் தடமுமன் றேனின்றென் றேடேகினெம் பைந்தொடிக்கே."
—அ. திருச்சிற்றம்பலக் கோவையார், உ0உ (சுஎ)

[நற்றாய் வருந்திக் கூறியது.]

கோள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளி தீச்சில வேயுலர்ந்து
விள்ளும் வெடிபடும் பாலைஎன் பாவை விடலைபின்னே
தேள்ளும் புனற்கச்சி யுள்திரு ஏகம்பர் சேவடியை
உள்ளும் அதுமறந் தாரேனப் போவ துரைப்பரிதே.

(இ - ள்.) பாவையை யொத்த என்மகள், கள்ளிச் செடிகள் கடுமையான கதிரவனைப்போல நெருப்பை யடையவும், சில மூங்கில்கள் நீர் வற்றிப் போய்ப் பிளக்கவும் வெடிக்கவுநின்ற பாலை நிலத்து, தெளிந்த நீர் சூழ்ந்த திருக்கச்சியுள் திரு ஏகம்பரது சிவந்த திருவடிகளை நினைத்தலை மறந்த தீயவரைப் போல் காளைக்குப் பின்னர் போதலைக் கூறுதல் அரிதாகும்.

(வி - ம்.) வேய் - மூங்கில். (சுஅ)

[தலைமகன் தனது வலிமையைக் கூறி அஞ்சேல் என்றது.]

பரிப்பருந் திண்மைப் படையது கான ரேனிற்சிறகு
விரிப்பருந் துக்கிரை யாக்கும்வெய் யேன்அஞ்சல் செஞ்சடைமேல்
தரிப்பருந் திண்கங்கை யார்திரு ஏகம்பம் அன்னபோன்னே
வரிப்பருந் திண்சிலை யேயும ராயின் மறைகுவனே.

(இ - ள்.) செந்நிறங் கொண்ட திருச்சடையில் தாங்குதற்கு அருமையாகிய வலிய கங்கையினைத் தாங்கியருளிய சிவபெருமான் எழுந்தருளி யிருக்கும் திரு ஏகம்பத்தினை யொத்த திருமகளை யொத்தவளே, கையிற்றாங்கிய அது, பிறரால் தாங்குதற்கரிய வலிமை கொண்ட படையாகும்; நமக்கு எதிரில் காணப்படுவோர் வேடராயின்; இறக்கைகள் விரிந்த பருந்துகளுக்கு அவர்களை இரையாகச் செய்யும், கடுமை உடையேன் ஆதலினால் அவர் நம்மை ஏதம் செய்வரோ என்னும் அச்சம் ஒழிவாயாக. கோடுகள் தங்கிய மிக்க வலிமை கொண்ட வில்லைப் பொருந்திய உம் சுற்றத்தாராயின் அவர் என்னைக் காணா வகை மறைந்து விடுவேன்.

(வி — ம்.) பரிப்பு – தாங்குதல். வெய்யேன் – கடுமையுடையேன். இஃது அடலெடுத்துரைத்த லென்னுந் துறை.

இவ்வுண்மை வருமாறு :

"கொடித்தேர் மறவர் குழாம்வெங் கரிநிரை கூடினென்கை
வடித்தே ரிலங்கெஃகின் வாய்க்குத வாமன்னு மம்பலத்தோ

ணடித்தே ரலரென்ன வஞ்சுவ னின்னைய ரென்னின்மன்னும்
கடித்தேர் குழன்மங்கை கண்டிடிவ் விண்டோய் கனவரையே.''

அ. திருச்சிற்றம்பலக் கோவையார், உ௧௬. (௬௯)

[நற்ருய் பிரிவாற்ருமையால் தன் நெஞ்சொடு கூறியது.]

வனவரித் திண்புலி யின்அதள் ஏகம்ப மன்னருளே
எனவரு பொன்னணங் கென்னணங் கிற்கேன் எழிற்கழங்கும்
தனவரிப் பந்துங் கொடுத்தேனைப் புல்லியும் இற்பிரிந்தே
இனவரிக் கல்லதர் செல்வதெங் கேஒல்கும் ஏழைநெஞ்சே.

(இ – ள்.) தளர்கின்ற அறியாமை கொண்ட மனமே, காட்டில் வாழும் கோடுகளையுடைய வலிமை கொண்ட புலியின் தோலினையுடைய திரு ஏகம்பரது திருவருளே என்று கூறும்படி வந்த என் திருமகளை யொத்தாள் நான் துன்புறுதல் வேண்டி அழகிய அம்மனைக் காய்களையும், அவளுடைய கொங்கைகளை யொத்த வரிந்து செய்யப் பட்ட பந்தினையும் என்கைக் கொடுத்து என்னை நன்ருகத் தழுவியும் தானிருந்த இல்லினைப் பிரிந்து கூட்டமாகிய பருக்கைக் கற்களையுடைய மலைகள் செறிந்த வழியில் என்னை விட்டுச்செல்வது எவ்விடத்ததாகும்?

(வி - ம்.) வரி - கோடு. அதள் - தோல். இது குறிப்புரைத் தல். (௭0)

[செவிலி சுவடுகண்டு வருந்திக் கூறியது.]

நெஞ்சார் தரஇன்பஞ் செய்கழல் ஏகம்பர் கச்சியன்னாள்
பஞ்சார் அடிவைத்த பாங்கிவை யாங்கவள் பெற்றெடுத்த
வெஞ்சார் வொழியத்தன் பின்செல முன்செல் வெடுவெடென்ற
அஞ்சா அடுதிறற் காளைதன் போக்கிவை அந்தத்திலே.

(இ - ள்.) உள்ளம் திருவடி யின்பத்தினை நிறையத்துய்க்கப் புறத்தும் அகத்தும் அவ்வின்பத்தினை நிறைய விளைவிக்கும் திருவடிகளையுடைய திரு ஏகம்பர் எழுந்தருளி யிருக்கும் திருக்காஞ்சியினை யொத்த தலைவியானவள் செம்பஞ்சு ஊட்டிய பாதங்களை அழுத்திய நலம் இவைகளாம் அவற்றின் முடிவில் அவளைப் பெற்றுக் களிப்புடன் ஏந்தி வளர்த்த விழைதகுபற்று நீங்கத் தனக்குப் பின்னே அவள் வர அங்கு முன்னே செல்கின்ற தன்னைக் கண்டார் வெடுவெடு என அஞ்சும்படியான செய்திக்கும் அஞ்சுதல் செய்யாத பகைவரை வெல்லும் வலிமை கொண்ட காளைப் பருவம் வாய்ந்தானின் போக்காகிய சுவடுகள் இவைகளாம்.

(வி – ம்.) பஞ்சு - செம்பஞ்சுக் குழம்பு தோய்ந்த பஞ்சு. வெடுவெடு – கேட்டார் அஞ்சும்படியான கடுஞ்சொல். இது சுவடுகண்டறிதல். (௭௧)

[செவிலி கதிரவனை வேண்டல்.]

இலவவெங் கானுனை அல்லால் தொழுஞ்சரண் ஏகம்பனார்
நிலவுஞ் சுடரோளி வெய்யவ னேதண் மலர்மிதித்துச்
சேலவும் பருக்கை குளிரத் தளிரடி செல்சுரத்துன்
உலவுங் கதிர்தணி வித்தருள் செய்யுன் உறதுணைக்கே.

(இ - ள்.) திரு ஏகம்பரின் இலவமரங்கள் நிறைந்த வெவ்விய கானகத்தில் கதிரொளிகளையுடைய திங்களும் இராக் காலத்தில் உனது வெம்மையை அஞ்சித் திருவடியை வணங்குகின்ற கதிரவனே, என் பேதை என்னைப் புலம்பவிட்டுச் செல்கின்ற சுரத்தில் உனக்கு மிக்க துணையாயினருக்கு உன்னுடைய உலாவுகின்ற கதிர்கள் அவளது தளிரை யொத்த கால்கள், குளிர்ந்த மலர்களை மிதித்துச் செல்லும் படியாகவும், பருக்கைக் கற்கள் குளிர்ச்சியுடனிருக்கவும் தணியும்படி செய்தருள்வாயாக.

(வி - ம்.) இலவு - இலவம்பஞ்சு. அல் - இரவு. வெய்யவன் - கதிரவன். சுடரோடிரத்தல். (எ௨)

[செவிலி புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினுதல்.]

துணையொத்த கோவையும் போலெழிற் பேதையுந்தோன்றலும்முன்
இணையொத்த கொங்கையோ டேயொத்த காதலோ டேகினரே
அணையத்தர் ஏறேத்த காளையைக் கண்டனம் மற்றவரேல் [னே
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள் தன்னோடும் பேசுமி

(இ - ள்.) இரண்டாகிய மணிவடத்தை யொத்த உம்மைப்போல் அழகினையுடைய என் மகளும் ஒரு தலைவனும், நினைக்கத் தகுந்த இரண்டாக ஒத்திருக்கிற கொங்கைக்கு ஒத்ததாகிய விழைவுடன் கூடிச் சென்றனரேல் வருந்தும் எனக்குக் கூறுங்கள்: அக்கண்டோர் உமையம்மையாரைத் தழுவுகின்ற சிவபெருமானின் ஆனேற்றினை யொத்த காளைப்பருவமுற்ற, மான்பிணையினை யொத்த கண்களை யுடைய பெண்ணாகிய இவளுடன் நேற்று இவ்வழிக் கண்டோம்.

(வி - ம்.) துணை - நீங்கா இரண்டு. தோன்றல் - தலைவன். இணை - இரண்டு. கொங்கை - முலை. அத்தர் - சிவபெருமான்.

இது, புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினுதல். (எ௩)

[தோழி தலைமகளது வரவு கூறிச் செவிலியது போக்கை மறுத்துக் கூறியது.]

மின்னலிக் கும்வணக் கத்திடை யாளையும் மீளியையும்
நென்னலிப் பாக்கைவந் தெய்தின ரேல்எம் மனையிற்கண்டீர்
பின்னரிப் போக்கரும் குன்று கடந்தவர் இன்றுகம்பர்
மன்அரி தேர்ந்து தொழுங்கச்சி நாட்டிடை வைகுவரே.

(இ - ள்.) மின்னற் கொடியை வருந்தச் செய்யும் துவளுதலை யுடைய உன் பேதையினையும், தலைவனையும், சேற்று இச்சிற்றூரின் கண் வந்து சேர்ந்திருப்பீராயின், எம் வீட்டகத்துக் கண்டே யிருப்பீர்; பின்பு அவ்விருவரும் இன்றைக்கு, போவதற்கரிய இவ்வகைப்பட்ட மலையினைக் கடந்து நிலைபெற்ற திருமால் மறைப் பொருளென வுணர்ந்து வணங்குகின்ற ஏகம்பர் வீற்றிருந் தருளுகின்ற திருக்கச்சித் திருநகரின்கண் தங்குவர்.

(வி - ம்.) மின்-மின்னற்கொடி. நலிக்கும் - வருத்தஞ் செய்யும். மீளி – வன்மைமிக்க ஆடவன்; காளை. பாக்கை - சிற்றூர். சென்னல்- சேற்று. (எ௪)

[மீண்டு வரும் தலைமகன் தலைவிக்கு நகரணிமை கூறியது.]

உவரச்சோல் வேடுடைக் காடுகந் தாடிய ஏகம்பனூர்
அவரக்கன் போன விமானத்தை ஆயிரம் உண்மைசுற்றும்
துவரச் சிகரச் சிவாலயஞ் சூலந் துலங்குவிண்மேல்
கவரக் கோடிதிளைக் குங்கச்சி காணினுங் கார்மயிலே.

(இ – ள்.) இனிய நீலநிறம் பொருந்திய மயில் போல்வாளே! அச்சம் பொருந்திய வேடர்கள் வாழும் காட்டினை விரும்பித் திருக் கூத்துப் புரிந்தருளிய திரு ஏகம்பராகிய அவர் எழுந்தருளி யிருக்கும் கோபுரங்களையுடைய சிவபெருமான் திருக்கோவில்களைச் சூழ்ந்த ஆயிரம் உண்மையாகிய மதில்களிலும் செருங்கியுள்ள முத்தலை வேலாகிய சூலம் விளங்குகின்ற செந்நிறத்த அந்தக் கொடிகள், அந்த இராவணன் வான் வழியாகச் சென்ற புட்பகவிமானத்தைச் செல்லாது நிறுத்திய திருக்கச்சித் திரு நகரினை நோக்குவாயாக.

(வி – ம்.) உவர் - அவர். வேடு - வேடர். உகந்து - விரும்பி. சுற்று - மதில். கவர் - நிறுத்திய. திருக்கோயில்கள் அனைத்தும் திருக்கயிலை என்னும் எண்ணம் யாவர்க்கும் உண்டாக வேண்டும் என்னும் கருத்தால் இராவணன் கதை யீண்டுக் குறிக்கப்பட்டது. அது வருமாறு :

"பொருதலங்கல் நீண்முடியான் போர ரக்கன்
புட்பகந்தான் பொருப்பின்மீ தோடா தாக
இருநிலங்கள் நடுக்கெய்த எடுத்தி டுதலும்
ஏந்திழையாள் தான்வெருவ இறைவன் நோக்கிக்
கரதலங்கள் கதிர்முடியா றஞ்சி னொடு
கால்விரலா லூன்று கழிப்பா லையார்
வருதலங்க மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே."

—சு. கஉ—௧0.

இது நகர் காட்டல். (எ௫)

[செவிலி கதிரவனை வேண்டல்.]

இலவவேங் கானுனை அல்லால் தொழுஞ்சரண் ஏகம்பனார்
நிலவுஞ் சுடரோளி வெய்யவ னேதண் மலர்மிதித்துச்
சேலவும் பருக்கை குளிரத் தளிரடி செல்சுரத்துன்
உலவுங் கதிர்தணி வித்தருள் செய்யுன் உறுதுணைக்கே.

(இ - ள்.) திரு ஏகம்பரின் இலவமரங்கள் நிறைந்த வெவ்விய கானகத்தில் கதிரொளிகளையுடைய திங்களும் இராக் காலத்தில் உனது வெம்மையை அஞ்சித் திருவடியை வணங்குகின்ற கதிரவனே, என் பேதை என்னைப் புலம்பவிட்டுச் செல்கின்ற சுரத்தில் உனக்கு மிக்க துணையாயினருக்கு உன்னுடைய உலாவுகின்ற கதிர்கள் அவளது தளிரை யொத்த கால்கள், குளிர்ந்த மலர்களை மிதித்துச் செல்லும் படியாகவும், பருக்கைக் கற்கள் குளிர்ச்சியுடனிருக்கவும் தணியும்படி செய்தருள்வாயாக.

(வி - ம்.) இலவு - இலவம்பஞ்சு. அல் - இரவு. வெய்யவன் - கதிரவன். சுடரோடிரத்தல். (எஉ)

[செவிலி புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினுதல்.]

துணையொத்த கோவையும் போலெழிற் பேதையுந்தோன்றலும்முன்
இணையொத்த கொங்கையோ டேயொத்த காதலோ டேகினரே
அணையத்தர் ஏறுேத்த காளையைக் கண்டனம் மற்றவரேல் [னே
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள் தன்னுேடும் பேசுமி

(இ – ள்.) இரண்டாகிய மணிவடத்தை யொத்த உம்மைப்போல் அழகினையுடைய என் மகளும் ஒரு தலைவனும், நினைக்கத் தகுந்த இரண்டாக ஒத்திருக்கிற கொங்கைக்கு ஒத்ததாகிய விழைவுடன் கூடிச் சென்றனரேல் வருந்தும் எனக்குக் கூறுங்கள்: அக்கண்டோர் உமையம்மையாரைத் தழுவுகின்ற சிவபெருமானின் ஆனேற்றினை யொத்த காளைப்பருவமுற்ற, மான்பிணையினை யொத்த கண்களையுடைய பெண்ணுகிய இவளுடன் நேற்று இவ்வழிக் கண்டோம்.

(வி – ம்.) துணை - நீங்கா இரண்டு. தோன்றல் - தலைவன். இணை - இரண்டு. கொங்கை - முலை. அத்தர் - சிவபெருமான்.

இது, புணர்ந்துடன் வருவோரைப் பொருந்தி வினுதல். (எங)

[தோழி தலைமகளது வரவு கூறிச் செவிலியது போக்கை மறுத்துக் கூறியது.]

மின்நலிக் கும்வணக் கத்திடை யாளையும் மீளியையும்
நென்னலிப் பாக்கைவந் தெய்தின ரேல்எம் மனையிற்கண்டீர்
பின்னரிப் போக்கரும் குன்று கடந்தவர் இன்றுகம்பர்
மன்அரி தேர்ந்து தொழுங்கச்சி நாட்டிடை வைகுவரே.

(இ - ள்.) மின்னற் கொடியை வருந்தச் செய்யும் துவளுதலை யுடைய உன் பேதையினையும், தலைவனையும், நேற்று இச்சிற்றூரின் கண் வந்து சேர்ந்திருப்பீராயின், எம் வீட்டகத்துக் கண்டே யிருப்பீர்; பின்பு அவ்விருவரும் இன்றைக்கு, போவதற்கரிய இவ்வகைப்பட்ட மலையினைக் கடந்து நிலைபெற்ற திருமால் மறைப் பொருளென வுணர்ந்து வணங்குகின்ற ஏகம்பர் வீற்றிருந் தருளுகின்ற திருக்கச்சித் திருநகரின் கண் தங்குவர்.

(வி - ம்.) மின்-மின்னற்கொடி. நலிக்கும் - வருத்தஞ் செய்யும். மீளி – வன்மைமிக்க ஆடவன்; காளை. பாக்கை - சிற்றூர். நென்னல்- நேற்று. (எசு)

[மீண்டு வரும் தலைமகன் தலைவிக்கு நகரணிமை கூறியது.]

உவரச்சொல் வேடுடைக் காடுகந் தாடிய ஏகம்பனூர்
அவரக்கன் போன விமானத்தை ஆயிரம் உண்மைசுற்றும்
துவரச் சிகரச் சிவாலயஞ் சூலந் துலங்குவிண்மேல்
கவரக் கொடிதிளைக் குங்கச்சி காணினுங் கார்மயிலே.

(இ – ள்.) இனிய நீலநிறம் பொருந்திய மயில் போல்வாளே! அச்சம் பொருந்திய வேடர்கள் வாழும் காட்டினை விரும்பித் திருக் கூத்துப் புரிந்தருளிய திரு ஏகம்பராகிய அவர் எழுந்தருளி யிருக்கும் கோபுரங்களையுடைய சிவபெருமான் திருக்கோவில்களைச் சூழ்ந்த ஆயிரம் உண்மையாகிய மதில்களிலும் நெருங்கியுள்ள முத்தலை வேலாகிய சூலம் விளங்குகின்ற செந்நிறத்த அந்தக் கொடிகள், அந்த இராவணன் வான் வழியாகச் சென்ற புட்பகவிமானத்தைச் செல்லாது நிறுத்திய திருக்கச்சித் திரு நகரினை நோக்குவாயாக.

(வி – ம்.) உவர் - அவர். வேடு - வேடர். உகந்து - விரும்பி. சுற்று - மதில். கவர் - நிறுத்திய. திருக்கோயில்கள் அனைத்தும் திருக்கயிலை என்னும் எண்ணம் யாவர்க்கும் உண்டாக வேண்டும் என்னும் கருத்தால் இராவணன் கதை மீண்டுக் குறிக்கப்பட்டது. அது வருமாறு :

"பொருதலங்கல் நீண்முடியான் போர ரக்கன்
புட்பகந்தான் பொருப்பின்மீ தோடா தாக
இருநிலங்கள் நடுக்கெய்த எடுத்தி டுதலும்
ஏந்திழையாள் தான்வெருவ இறைவன் நோக்கிக்
கரதலங்கள் கதிர்முடியா றஞ்சி னோடு
கால்விரலா லூன்று கழிப்பா லையார்
வருதலங்க மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே."

—சு. கஉ—கO

இது நகர் காட்டல். (எரு)

[தலைவன் நகர்வளங்கூறி அணிமை கூறியது.]

கார்மிக்க கண்டத் தெழில்திரு ஏகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றெழில் நெல்நடு வோர்ஒலி பொன்மலைபோல்
போர்மிக்க செந்நெல் குவிப்போர் ஒலிகருப் பாலைஒலி
நீர்மிக்க மாக்கட லின்ஒலி யேஒக்கும் நேரிழையே.

(இ - ள்.) செம்மையான அணிகலன்களை அணிந்தவளே, கருமை மிகுந்த திருக்கண்டத்தின் ஓங்கும் அழகினைப்பெற்ற திரு ஏகம்பரது திருக்கச்சியில் அழகுமிகுந்த வனப்பினையுடைய நென் முடியினை நடுவோரது ஓசையும், பொன்னின் மலையாகிய மேருமலை யினைப்போல் கூட்டத்தில் மிக்க செவ்விய நெல்லைக் குவிப்போரது ஓசையும், கரும்பாலைகளின் தொழிலியக்கத்தால் உண்டாகும் ஓசையும் சேர்ந்து நீர் மிகுந்தபெரிய கடலினது ஓசையினையே ஒத்திருக்கும்.

(வி - ம்.) கார் - கருமை. ஏர் - அழகு. எழில் - ஓங்கும் அழகு. போர் - நெற்போர்; நெற்குவியல்.

நகரணிமை கூறல். (எசு)

[தலைவன் பொழில் மேம்பாடு கூறித் தளர்வு அகன்றோம் என்றல்.]

நேர்த்தமை யாமை விறற்கோடு வேடர் நெடுஞ்சுரத்தைப்
பார்த்தமை யாலிமை தீந்தகண் பொன்னே பகட்டுரிவை
போர்த்தமை யாலுமை நோக்கருங் கம்பர்கச் சிப்பொழிலுள்
சேர்த்தமை யாலிமைப் போதணி சீதஞ் சிறந்தனவே.

(இ - ள்.) எதிர்த்து முடியாதாகிய வெற்றியினையுடைய, கொடிய வேடர் வாழ்கின்ற நீண்ட காட்டினைப் பார்த்த காரணத்தால் இமைகள் தீந்து போயின. அழகிய கண்களையுடைய திருமகளை யொத்தவளே! யானையின் தோலினைப் போர்த்த காரணத்தால் உமையம்மையார் பார்த்தற்கு அச்சந்தரும் திருஏகம்பர் திருக் காஞ்சிக் கண் உற்ற சோலையின் வாய் நாமிருவரும் வந்து சேர்ந்தமையினால், இமையளவு காலத்தில் அழகிய குளிர்ச்சி நாம் அடைந்த வெம்மை நீங்க மேம்பட்டன.

(வி - ம்.) நேர்த்து - நேர்ந்து - எதிர்த்து. விறல் - வெற்றி. சுரம் - காடு; பாலை. பகடு - யானை. உரிவை - தோல். சீதம் - குளிர். நேர்ந்து என்பதும், சேர்ந்து என்பதும் எதுகை நோக்கி வலிந்து நின்றன. (எஎ)

[தலைமகன் தன் நகர்வளங் காட்டல்.]

சிறைவண்டு பாடுங் கமலக் கிடங்கிவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின் பொழிலிவை தீங்கனியின்

போறைகோண்ட வாழைப் போதும்புவை புன்சடை ஏகம்பனுர்
நறைகோண்ட பூங்கச்சி நாடெங்கும் இவ்வண்ணம் நன்னுதலே.

(இ - ள்.) நல்ல நெற்றியினையுடையவளே, இறகுகளையுடை வண்டுகள் பண்ணினை இசைக்கின்ற தாமரைகள் பொருந்திய மடுக்கள் இந்நிலைகளாம், வளமுள்ள பழுக்கும் காய்களின் பாரத்தினைக் கொண்ட பாளையுடனியைந்த கமுகினது சோலைகள் அவையாம்; இனிய பழங்களின் பாரத்தினைக் கொண்ட வாழையின் சோலை நடுவிலுள்ளனவாம்; அறுகுதங்கிய திருச்சடையினையுடைய திரு ஏகம்பனார் எழுந்தருளிய தேனினைக் கொண்ட பூமரங்கள் செறிந்த திருக்கச்சி நாடு முழுவதும் இவ்வழகைப் பெற்று விளங்கும்.

(வி - ம்.) நுதல் - நெற்றி. கமுகு - பாக்குமரம். புன்சடை - புல் - அறுகு. பொன்சடை என்பதே புன்சடை என வழங்குவதாயிற்றென்பதே பொருத்தம். நறை - தேன். (எஅ)

[இதுவுமது]

நன்னுத லார்கருங் கண்ணுஞ்சேவ் வாயும்இவ் வாறேனப்போய்
மன்னித ழார்திரு நீலமும் ஆம்பலும் பூப்பவள்ளை
என்னவேலாம் ஒப்புக் காதேன்று வீறிடும் ஏகம்பனுர்
போன்னுத லார்விழி யார்கச்சி நாட்டுளிப் போய்கையுளே.

(இ - ள்.) அழகிய நெற்றியினிடத்துப் பொருந்திய கண்ணினைப் பெற்றவராகிய திரு ஏகம்பனாரது திருக்கச்சி நாட்டுக்குள் நிலைபெற்ற அவ்விடங் காணப்படும் பொய்கைக்கண், நல்ல நெற்றியையுடைய பெண்களது கருமையாகிய கண்களும், சிவந்த வாயும் இவ்வாறு காணப்படுமென்று தெரிவிக்க இதழ்கள் தங்கிய அழகிய நீலப்பூவும், அல்லி மலரும் சென்று மலராநிற்க, வள்ளைத் தண்டுகள் எல்லாம், காதுகளுக்கு உவமை என்று கூறும்படி எக்காலத்தும் பெருமை பெற்று விளங்கும்.

(வி - ம்.) ஆம்பல் - அல்லிப்பூ. வீறிடும் - பெருமை கொள்ளும். பொன் - அழகு. (எகூ)

[இதுவுமது]

உள்வார் குளிர நெருங்கிக் கடுங்கிடங் கிட்டநன்னீர்
வள்வா ளைகளோடு செங்கயல் மேய்கின்ற எங்களையாட்
கோள்வார் பிறவி கோடாதஏ கம்பர் குளிர்குவளை
கள்வார் தருகச்சி நாட்டேழில் ஏரிக் களப்பரப்பே.

(இ - ள்.) எளியேங்கள் குடிமுழுவதையும் அடிமை கொண்டருளிய வரும், பிறவி வருமாறு செய்யாத திரு ஏகம்பர் எழுந்தருளியிருக்கும் குளிர்ந்த குவளை மலர்களினது தேனினது ஒழுகுகின்ற திருக்கச்சி நாட்டினது, அழகிய ஏரிவளமுள்ள இடப்பரப்பின்வளம்

அந்நாட்டினை உள்குவாரது உள்ளம் குளிரும்படி பல வளங்களுஞ் செறிந்து நீண்ட கிடங்குகளில் உழவர் பாய்ச்சிய நல்ல நீரின்கண் வள முள்ள வாளை மீன்களுடன் செந்நிறம் பொருந்திய கயல்மீன்கள் மேய் கின்றவாகும்.

(வி - ம்.) ஏரி - நீர் நிலை. உள்குதல் - தியானித்தல். (அ0)

[இதுவுமது]

பரப்பார் விசும்பிற் படிந்த கருமுகி லன்னநன்னீர்
தரப்பா சிகள்மிகு பண்போடு சேம்படர் தண்பணைவாய்ச்
சுரப்பார் எருமை மலர்தின்னத் துன்னுக ராவோருத்தல்
பொரப்பார் போலிநுத லாய்செல்வக் கம்பர்தம் பூங்கச்சியே.

(இ - ள்.) விளங்குகின்ற நெற்றியினையுடையவளே, எல்லாச் செல்வத்தினையும் எழில்பெறத் தருவோராகிய திரு ஏகம்பரது அழகிய திருக்கச்சியின்கண் விரிவாகிய வானத்தில் படிந்துள்ள கருமையாகிய மேகத்தை யொத்த நல்ல நீர்நிலை உயர்ந்த பாசிகளும், உயரும் குணத் துடன் கூடிய, நீர்ச் சேம்புகளும், நெருங்கியுள்ள குளிர்ந்த வயற்கண் பாலைச் சுரப்பிக்கின்ற எருமைகளானவை மலர்களை மேய, வலிமை நெருங்கிய முதலையின் ஆணனது அதனுடன் போர் செய்யக் காண்பாயாக.

(வி - ம்.) பரப்பு - விரிவு; விசாலம்; வியாபகம். விசும்பு - வானம். தரம் - உயர்வு. கரா - முதலை. (அக)

[இதுவுமது]

கச்சார் முலைமலை மங்கைகண் ணூரஎண் ணன்கறமும்
வைச்சார் மகிழ்திரு ஏகம்பர் தேவி மகிழவிண்ணோர்
விச்சா தரர்தொழு கின்ற விமானமுந் தன்மம்அரு
அச்சா லையும்பரப் பாங்கணி மாடங்கள் ஓங்கினவே.

(இ - ள்.) கச்சுப் பொருந்திய கொங்கைகளையுடைய, மலைமக ளாகிய, பெருமாட்டியார், திருஏகம்பர் மகிழும் வகை முப்பத்திரண்டு அறங்களும் நிலைபெறச் செய்து களிப்பினை யடையும் விரிவாகிய அறத்தினின்றும் நீங்காத அந்தந்த அறச்சாலையினையும், தேவர்களும் வித்தியாதரர்களும் வணங்குகின்ற விமானத்தினையும் உயர்ந்த மாளி கைகளையும் குறித்துக் காண்பாயாக. (அஉ)

[இதுவுமது]

ஓங்கின ஊரகம் உள்ளகம் உம்பர் உருகிடமாம்
பாங்கினில் நின்ற தரியுறை பாடகம் தேவ்இரிய
வாங்கின வாட்கண்ணி மற்றவர் மைத்துனி வான்கவிகள்
தாங்கின நாட்டிருந் தாளது தன்மனை ஆயிழையே.

(இ - ள்.) ஆராய்ந்தெடுத்த சிறந்த அணிகலன்களை அணிந்தவளே, திருமால் உறைகின்ற நாட்டின் நடுவணதாகும் உயர்ந்த திருவூரகமும், தேவர்கள் மனமுருகித் தொழும் இடமாகும், திருப்பாடகம் அதைச் சார்ந்து அயலிலுள்ளதாகிய பகைவர் பின்னிடும்படி எடுத்த வாள் போலும் கண்ணையுடையவளும் அவர் மைத்துனியும், சிறந்த வானர சேனைகளால் தாக்கப்பட்ட இலங்கைமாநகரின்கண் சிறையிருந்தவளாகிய மலர் மகளது இருக்கைகளாம்.

(வி - ம்.) திருவூரகம் நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று. இதுசார ஸ்ரீகர விமானத்தையுடையது. பெருமாள் உலகளந்த பெருமாள். பாடகம் பத்திர விமானம் உடையது. பெருமாள் பாண்டவர்தூதர், மற்று, தன்: அசைகள் மைத்துனி - மனைவி. (அ௩)

[இதுவுமது]

இழையார் அரவணி ஏகம்பர் நெற்றி விழியின்வந்த
பிழையா அருள்நம் பிராட்டிய தின்ன பிறங்கல் உன்னும்
நுழையா வருதிரி சூலத்தள் நோக்கரும் பொன்கடுக்கைத்
தழையார் பொழில்உது பொன்னே நமக்குத் தளர்வில்லையே.

(இ - ள்.) திருமகளை யொத்தவளே நிறைந்த பாம்புகளை அணிகளாகப் பூணப்பெற்ற திரு ஏகம்பரது நெற்றி விழியிலிருந்து ஓர் ஊழிக்கண் தோன்றிய கெடாத திருவருளையுடைய நம் தலைவிக்குரியது இந்த மலை. முத்தலை வேலினையுடைய மாகாளி புகுந்துவரும் காண்டற்கரிய பொன் போலும் கொன்றையின் தழைகள் நிறைந்த பொழில் (சோலைகள்) இதுவாகும்; நமக்கு இனித் தளர்ச்சியின்று, காண்பாயாக.

(வி - ம்.) இது பதி பரிசுரைத்தல். ஓர் ஊழிக்கண் உலகத்தைப் படைக்க வேண்டி இறைவன் இறைவியினைத் தம் ஐந்து திருமுகத்தினும் படைத்தனராதலின் நெற்றி விழியின் வந்த பிராட்டியென்றார். (அ௪)

[தலைமகன் தன் நகர் இதுவே எனக் கூறியது.]

தளரா மிகுவெள்ளங் கண்டுமை யோடித் தமைத்தழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படும் ஈங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழில்திரு ஏகம்பம் மற்றிது வந்திறைஞ்சி
உளரா வதுபடைத் தோம்மட வாய்இவ் வுலகத்துள்ளே.

(இ - ள்.) மடப்பத்தினையுடைய பெண்ணே உமையம்மையார் போக்கு அருத மிகுந்த வெள்ளத்தினை நோக்கி, இறைவராகிய தம்மை, ஓடிச்சென்று தழுவும்படி ஒன்றுடனொன்று நெருங்கிய வளையல் பொருந்திய கைகளினால் வடுவினை யடையும் ஒரு மாயச் செய்கையினை இவ்விடத்துச் செய்தவரது, வளங்கள் தங்கிய பெரிய சோலைகள் சூழ்ந்த திரு ஏகம்பம் இதுவாம். இத்திருவூரின் அணுகி

அவனைப் பணிந்து இந்த உலகத்துள் வாழ்ந்திருக்கும் வாழ்க்கையினை யடைந்தோம் நாம்.

(வி - ம்.) தளரா - போக்கு நீங்காத. கிறி - மாயம். (அ௫)

[கார்காலங் கண்டு வருந்திய தலைவி கூறியது.]

உலவிய மின்வடம் வீசி உருமதிர் வுள்முழங்கி
வலவிய மாமதம் பாய்முகில் யானைகள் வானில்வந்தால்
சுலவிய வார்குழல் பின்னரேன் பாரிஎனநினைந்து
நிலவிய ஏகம்பர் கோயிற் கோடியன்ன நீர்மையனே.

(இ - ள்.) பின்னிய நீண்ட கூந்தலினையுடைய தலைமகள் தாயை நோக்கி அன்னப் பறவையின் இலக்கணம் வாய்ந்த தாயே வன்மை யுள்ள கறுத்த மதங்கள் பாய்கின்ற மேகங்களாகிய யானைகள் உலாவு கின்ற மின்னலாகிய வடத்தினை எறிந்து இடியின் பேரொலியினை உள்ளே முழக்கி வானத்தில் வந்தால், நீங்கள் பின்பு என்னைக் காண மாட்டீர்கள் என்று எண்ணி அதற்குமுன் விளங்குகின்ற திருஏகம்பர் வீற்றிருந்தருளும் திருக்கோயிலின் திருமுன்பு எடுத்துச் செல்லுக என்றாள்.

(வி - ம்.) வீசி - எறிந்து. உரும் – இடி. அதிர்வு - பேரொலி. மாமதம் - கரியமதம்; மிக்கமதம். கோடி: கொள் + தி - கொடி. அன்னநீர்மையள் - அன்னத்தின் தன்மையள். (அ௬)

[வினைமுற்றி மீளுந் தலைமகன் காரை நோக்கிக் கூறியது.]

நீரேன்னி லும்அழுங் கண்முகில் காள்நெஞ்சம் அஞ்சலையேன்
றுரேன்னி லுந்தம ராயுரைப் பார்அம ராவதிக்கு
நேரேன்னி லுந்தகுங் கச்சியுள் ஏகம்பர் நீள்மதில்வாய்ச்
சேரேன்னி லுந்தங்கும் வாட்கண்ணி தானன்பர் தேர்வரவே.

(இ - ள்.) மேகங்களே, அழுகின்ற கண்களுடனும், கவலைகொண்ட மனத்துடனும் உள்ளவரை அஞ்ச வேண்டாம் என்று கூறுவோர் யாவரேயாயினும் அவர் உறவினரென்று கூறப்படுவர். ஆதலால், தேவர் உறையும் துறக்க உலகத்திற்கு ஒத்ததே என்றாலும் அமையும்; திருக்கச்சியின்கண் திரு ஏகம்பர் வீற்றிருந்தருளும் உயர்ந்த திரு மதிலின்கண் நீங்கள் சேர்ந்து தனக்கு அன்பனாகிய தலைவனது தேரினது வரவினை உண்மை எனக் கூறினும், வாள் போலும் கண் களையுடைய என் தலைவி உயிர் நீங்காது சிற்பள்.

(வி - ம்.) என்னிலும் - என்று சொல்லினும். முகில் - மேகம். அமராபதி - துறக்க உலகம். இது வரவெடுத்துரைத்தல். (அஎ)

[தோழி, கார்கண்டு தலைவர் வருவர், வருந்தாதொழிக என்றது.]

வரங்கோண் டிமையோர் நலங்கொள்ளும் ஏகம்பர் கச்சியன்னாய்
பரங்கொங்கை தூவன்மின் நீர்முத்தம் அன்பர் தந்தேரின்முன்னே

தரங்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன் ஆகத்தண் காந்தள் [கொத்தின்
கரங்கொண்டு பொற்சுண்ணம் ஏந்தவும் போந்தன கார்முகிலே.

(இ - ள்.) தேவர்கள வரத்தினைப் பெற்று எல்லா நலங்களையும் அடையுமாறு செய்யும் திரு ஏகம்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கச்சி நகரத்தை ஒத்தவளே நீ பாரமாகிய கொங்கைகளின்மீது கண்ணீராகிய முத்துக்களை உதிர்க்காதிருப்பாயாக; தலைவனது தேரின் முன்பாகக் கருமையாகிய மேகங்கள் உயர்வைப்பெற்று, மலர்களை யேந்திக், கொன்றை மலர்களைப் பொன் மணிகளாகக் குளிர்ந்த காந்தளாகிய கொத்துக்களின் கையிற்கொண்டு பொன்போலும் சுண்ணம் ஏந்தா நிற்கவும் வந்தன. (ஆதலால் நீ கலுழ்தலை ஒழி.)

(வி - ம்.) பரம் - பாரம். தூவல் - உதிர்த்தல். தரம் - உயர்வு. (அஅ)

[தலைவி கார்கண்டு துணைவயின் பிரிந்தார் வந்திலர் என்று வருந்திக் கூறியது.]

கார்முகம் ஆரவண் கைக்கொண்ட கம்பர் கழல்தொழுது
போர்முக மாப்பகை வெல்லச்சென் றார்நினை யார்புணரி
நீர்முக மாக இருண்டு சுரந்தது நேரிழைநாம்
ஆர்முக மாக வினைக்கடல் நீந்தும் அயர்வுயிர்ப்பே.

(இ - ள்.) சிறந்த அணிகலன்களை அணிந்தவளே, பினாகம் என்னும் வில்லினை வளவிய திருக்கையின்கண் நிரம்பக் கொண்டருளிய திரு ஏகம்பரின் திருவடிகளை வணங்கிப் பகைவரொடு போர் செய்வதை முன்னிட்டுப் பகைவரை வெல்லும்படி சென்றவராகிய தலைவர் நம்மை நினையார். கடல் நீரினைத் தனக்கு முகமாகக் கொண்டு, இருள் நிறங்கொண்டு பெருகிற்று; ஆதலால் நாங்கள் தலைவர் நீங்கின தாலுண்டான வெய்துயிர்ப்பினை யாரை வாயிலாகக்கொண்டு துன்ப மாகிய கடலினை நீந்துவோம்.

(வி - ம்.) கார்முகம் - பினாகி யென்னும் வில். இது சிவபெருமானுக்குரியது. புணரி - கடல். சுரந்தது - பெருகிற்று. அயர் வுயிர்ப்பு - பெருமூச்சு. (அகூ)

[தலைமகனது தேர்வரவை அறிந்த தலைவி மகிழ்ந்து கூறியது.]

உயிரா யினஅன்பர் தேர்வரக் கேட்டுமுன் வாட்டமுற்ற
பயிரார் புயல்பெற்ற தென்னநம் பல்வளை பான்மைகளாம்
தயிரார்பால் நெய்யொடும் ஆடிய ஏகம்பர் தம்அருள்போல்
கையிரா வளையுழந் தக்கச் சிறுத்தன கார்மயிலே.

(இ - ள்.) நீலநிறங்கொண்ட மயில்போலும் சாயலையுடையவளே, உயிரையே ஒத்த தலைவரின் தேர் வருகையினைக் கேட்டு மழை வரு

வதற்குமுன் வாடியிருந்த பயிரானது மிக்க மழை நீரினைப் பெற்றது போல, நம் பலவாகிய வளையல்களை அணிந்த தலைவியினது பான்மை கள் தயிர், நிறைந்த பால், நெய் இவைகளைக்கொண்டு திருமுழுக்கு ஏற்றருள்கின்ற திரு ஏகம்பரது தண்ணளிபோலத் தலைவன் நீங்கிய காலத்துக் கையினின்று கழன்ற வளையல்கள், அன்பர் தம் தேர்வரக் கேட்டுப் பொலிவு பெற்றதனால் அவ்வளையல்கள் அழுந்தவும் கச்சு களும் இறுக்கப் பெற்றன.

(வி - ம்.) புயல் ஆகுபெயராய் மழையை உணர்த்திற்று. பல்வளை அன்மொழித் தொகை. கையிரா-கையில் இராமல். தலைவன்வரக் கேட்ட தலைவிக்கு நிகழ்ந்த மெய்ப்பாடு தோழி கூறியது. (௯0)

[தோழி ஏறுகோள்கூறி வரைவு கடாதல்.]

கார்விடை வண்ணத்தன் அன்றேழ் தழுவினும் இன்றுதனிப்
போர்விடை பெற்றெதிர் மாண்டா ரேனஅண்டர் போதவிட்டார்
தார்விடை ஏகம்பர் கச்சிப் புறவிடைத் தம்பொன்நன்பூண்
மார்விடை வைகல் பெறுவார் தழுவ மழவிடையே.

(இ - ள்.) மேகவண்ணனாகிய கண்ணன் அந்நாளில் ஏழு ஏறு களைத் தழுவப் பெறினும் இப்போது ஆயர்கள் ஒப்பற்ற விடைப் போரினை அடையப் பெற்றுப் பலர் இறந்தார் என்று கூறி, மாலையினை யணிந்த விடையினை ஊர்தியாகக் கொண்ட திரு ஏகம்பரது திருக் கச்சியின் கண்ணுள்ள முல்லை நிலத்தின்கண் தம் திருமகளை யொத்த மகளின் நல்ல பணிகளைத் தம் மார்பின்கண் நிலைக்கப் பெறுவார். இளமையாகிய விடையினை வல்லவர் தழுவும்படி வரவிட்டனர்.

(வி - ம்.) கார் - மேகம். விடை - ஏறு; இடபம். அண்டர் - இடையர்; முல்லை நிலத்தார். போதவிட்டார் - வரவிட்டார் புறவு - முல்லை. பூண் - பணி; அணி; நகை. வைகல் - தங்கல்; நிலைபெறு தல். கண்ணன் நப்பின்னையை மணப்பதன் பொருட்டு ஏழு ஏறு களைத் தழுவினன் என்ப. இஃது ஏறுகோள் கூறி வரைவு கடாதல் என்னுந் துறை.

ஏறு தழுவுதல் என்பது, முல்லை நிலத்தவர் தம் சேரியின்கண் பெண் பிறக்கின் அப்பெண்ணினைப் பெற்றோர், தம் தொழுவத்து அந் நாளில் பிறந்த சேங்கன்றுகளை யெல்லாம் தாமே தம்பாலினை யுண்டு களித்து வலிமை பெற்று நின்றவைகளைத் தழுவினானுக்கு அக்கன்னி யினைக் கொடுப்பதாம். இவ்வுண்மை வருமாறு :

“படையார் கருங்கண்ணி வண்ணப் பயோதரப் பாரமுநுண்
இடையார் மெலிவுங்கண் டண்டர்க ளீர்முல்லை வேலியெம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட் டார்வியன் றென்புலியூர்
உடையார் கடவி வருவது போலும் உருவினதே.”

—அ. திருச்சிற்றம்பலக் கோவையார். ௧௩௬. (௯௧)

[தோழி பிறர்வரைய முயலுதலைக்கூறி வரைவு கடாயது.]

விடைபாய் கொடுமைஎண் ணுதுமே லாங்கன்னி வேற்கருங்கண்
கடைபாய் மனத்திளங் காளையர் புல்கொலி கம்பர்கச்சி
மடைபாய் வயல்இள முல்லையின் மான்கன்ரு டான்கன்றினம்
கடைபாய் தொறும்பதி மன்றிற் கடல்போற் கலந்தெழுமே.

(இ - ள்.) விடை பாய்ந்து முட்டுகின்ற கொடுமையினை நினையாது மேன்மையாகிய கன்னியின் வேல் போலும் கருமையாகிய கண்ணினது முடிவானது பாய்கின்ற மனத்தினையுடைய இளமையாகிய காளையர் விடைகளைத் தழுவுகின்ற ஓசையைக் கேட்டுத் திருஎகம்பரது மடைபாய் வயல் சேர் முல்லை நிலத்தின்கண் மான் கன்றுடன், ஆன் கன்றின் கூட்டங்கள், அந்நிலத்தினிடைப் பாய்ந்து செல்லுந் தோறும், திருக்கச்சித் திருப்பதிக்கண் மன்றங்கள் தோறும், உண்டாம் ஓசை கடலைப்போல் சேர்ந்து பெருகும்.

(வி - ம்.) கருங்கட்கடை - கடை - முடிவு. புல்குதல் - தழுவுதல். (கூஉ)

[தலைமகன் பாங்கனுக்கு இயலிடங் கூறுதல்.]

எழுமலர்த் தண்பொழில் ஏகம்பர் கச்சி இருங்கடல்வாய்க்
கொழுமணப் புன்னைத் துணர்மணற் குன்றிற் பரதர்கொம்பே
செழுமலர்ச் சேலல்ல வாளல்ல வேலல்ல நீலமல்ல
முழுமலர்க் கூரம்பின் ஓரிரண் டாவும் முகத்தனவே.

(இ - ள்.) மணம் எழுகின்ற மலர்கள் நெருங்கிய குளிர்ந்த சோலை சூழ்ந்த திரு எகம்பர் எழுந்தருளி யிருக்கும் திருக்கச்சி நகரத்தைப் பெரிய கடலினிடத்துக் கொழுவிய மணம் பொருந்திய கொத்துக்க ளமைந்த புன்னையின்கண், மணற் குன்றின்மேலுள்ள பரதகிலமாக்களின் பூங்கொம்பை யொத்தவரே வளம்பெற்ற தாமரையின் மீதுள்ள, சேல்மீன் அல்ல, வாள் அல்ல, வேற்படையும் அல்ல, நீலமலர் அல்ல, முற்றுதலமைந்த பரந்தகூர்மையாகிய அம்பினை யொப்ப ஓர் இரண்டு பொருள்கள் உன் முகத்தினிடம் அசையா நிற்கும்.

(வி - ம்.) எழு - மணம் எழுகின்ற. தண் - குளிர்ந்த. துணர் - கொத்து. பரதர் - நெய்தனில மக்கள். (கூ௩)

[தோழி தலைவியை நோக்கிக் கூறியது.]

முகம்பாகம் பண்டமும் பாகம்என் ருேதியமுதுரையை
உகம்பார்த் திரேல்என் நலமுய ரேகம்பர் கச்சிமுன்னீர்
அகம்பாக ஆர்வின் அளவில்லை என்னின் பவளச்செவ்வாய்
நகம்பால் பொழில்பெற்ற நாமுற்ற வர்கொள்க நன்மயலே.

(இ - ள்.) சிற்பநூலின்படி மாளிகை முதலியவற்ரு லுயர்ந்த திருக்கச்சிக்கண் எழுந்தருளி யிருக்கும் திரு எகம்பர் இடத்தின்

பாகமும், அருளிற் பாகமும், செல்வத்திற் பாகமும் தருவேன் என்று அன்புடன் அவள் பொருட்டு அன்று கூறிய பழமொழிகளை, இல்லையென மறந்து கூறுவாராயின், மலையடிவாரத்தில், சோலையினிடத்து அவரது நட்பைக்கொண்டு நம் வரவை நோக்கும், பவழம் போலும் சிவந்த இதழ்களையுடைய நம் தலைவியிடம் நாம் சென்று நீ அவரது சொல்லை நோக்குதலில் பயனென்? பல நாள்கள் எதிர்பார்த்திராத நீர் அவரிடங்கொண்ட மையல் ஒழிக எனக்கூறி அவரது மயலைத் தணித்துப் பதிக்கழைத்துச் செல்வோமாக.

(வி - ம்.) அகம் - இடம். முகம் - அருள். பண்டம்-செல்வம். ஆர்வின் - அன்பின். மூதுரை - பழமொழி. நகம்-மலை. பொழில்-சோலை. என்நலம் – பயன் யாது? யுகம் - பலநாள். (கூச)

[தோழி ஏதங் கூறி இரவுக்குறி மறுத்தல்.]

மயக்கத்த நல்லிருள் கோல் லுஞ் சுறவோ டெறிமகரம்
இயக்கத் திடுசுழி ஓதங் கழிகிளர் அக்கழித்தார்
துயக்கத் தவர்க்கரு ளாக்கம்பர் கச்சிக் கடலபொன் னூல்
முயக்கத் தகல்வு பொருள்கொண்க நீர்வரும் ஊர்க்கஞ்சுமே.

(இ – ள்.) வருத்தம் மிகுதி யுடையார்க்குத் தண்ணளி புரியாத திரு ஏகம்பரது திருக்கச்சி மாநகர்க்கண், வழியறியாமல் மயக்கத்தைத் தருகின்ற மிகுந்த இருளில் கடற்கண் உள்ளனவாகிய கொல்லுகின்ற சுறுமீன்களுடன், வாலால் மோதுகின்ற முதலைகள் இயங்குதலால் உண்டாகிய நீர்ச்சுழிகளும், வெள்ளமும், மிகுதியும் மேலெழுகின்ற வரிசை கொண்ட அக்கழிக்கரை வழியில் தலைவ, சேர்க்கைக்கண் சிறிதும் நீங்குதலைப் பொறுதவளாய்ப் பொன்மாலை யணிந்த எம் தலைவி நீர் வருகின்ற இந்த ஆருக்கு அச்சப்படுவாள். (ஆதலின் இவ்வழிவாரற்க.)

(வி - ம்.) நல் - மிகுதி. மகரம் - முதலை. ஓதம் - வெள்ளம். தார் – வரிசை. துயக்கம் - வருத்தம். பொன்னூல் - பொன்மாலை. கொண்க - தலைவ. (கூரு)

[தலைமகனைப் பிரிந்து நின்ற தலைவி கடலை நோக்கி வருந்திக் கூறியது.]

மேயிரை வைகக் குருகுண ராமது உண்டுபுன்னை
மீயிரை வண்டோ தமர்பு கடிய விரிகடல்வாய்ப்
பாயிரை நாகங்கோண் டோன்தொழுங் கம்பர்கச் சிப்பவ்வநீர்
தூயிரை கானல்மற் றுரறி வார்நந் துறைவர்பொய்யே.

(இ - ள்.) கொக்குக்கள் மேய்கின்ற இரைகளாகிய மீன்கள், எதிரிலிருக்கக் கள்ளுண்ட மயக்கத்தால் அதனை அறியாதனவாய்ப் புன்னை மரத்தின்மீது முயற்சியின்றி அமர்ந்திருத்தலை யுணர்ந்து, மிகுந்த வண்டுகள் தெரிவிக்கின்ற பரந்த கடற்கரைக்கண், சீறுகின்ற பாம்பினை அணையாகக்கொண்ட திருமால் வணங்குகின்ற திருக்

கச்சியின் கானற்கண், கடலே, நீயும் என்னை யொப்பக் கண்ணீரைத் துவி இரைந்து அழுகின்றாய்; அவர் மறைந்து வருதலை நீங்கினர். நமது சேர்ப்பரது பொய்யினை எவர் அறிய வல்லார்?

(வி - ம்.) குருகு - கொக்கு. உணரா - உணராமல். மீ - மீது. இரை - மிகுதி. இரை - இரைகின்ற. இது கடலொடு கூறல். (௬௬)

[தோழி தலைமகட்குத் தேர் வரவு கூறியது.]

போய்வரும் நெஞ்சினர் வஞ்சனை யாரையும் போகவிடா
மெய்வரும் பேரருள் ஏகம்பர் கச்சி விரையினவாய்க்
கைவரும் புள்ளொடு சங்கினம் ஆர்ப்பநம் சேர்ப்பர்திண்தேர்
அவ்வரு தாமங் களினம்வந் தார்ப்ப அணைகின்றதே.

(இ - ள்.) பொய் பேசுகின்ற மனமுடையார்களையும், வஞ்சக முடையார்களையும், அணுகவிடாத உண்மையாக வளருகின்ற மிகுந்த தண்ணளி புரிகின்ற திரு ஏகம்பரது கச்சிப்பதிக்கண் நம் தலைவரது அந்த வலியதேர் ஆண்டுப்படியும் பூவை முதலிய பறவைக் கூட்டங் களுடனும், சங்குகளின் கூட்டங்கள் ஒலிக்கவும் ஒழுங்குபட வருகின்ற அரிய யானைகள் ஒலிக்கவும் வாரா நின்றது.

(வி - ம்.) பேரருள் - பெருந்தண்ணளி. புள் – பறவை. தாமம் - யானை. இது தேர்வரவு கூறல். (௬௭)

இன்றுசெய் வோம்இத னில்திரு ஏகம்பர்க் கேத்தனையும்
நன்றுசெய் வோம்பணி நாளைஎன் றுள்ளிநெஞ் சேயுடலில்
சென்றுசே யாரை விடுந்துணை நாளும் விடாதடிமை
நின்றுசெய் வாரவர் தங்களின் நீள்நெறி காட்டுவரே.

(இ – ள்.) மனமே திரு ஏகம்பருக்குத் திருப்பணி முதலிய அனைத்தையும் இப்பொழுதே செய்வோம். நாளைக்கு இதனைக் காட் டிலும் நலமாகச் செய்வோம் என்று நினைத்து, உடம்பினை இடை விடாது, நாடோறும் அடிமைத் தொழிலை நிலைத்துச் செய்வா ருடைய துணையாக நின்று, உயர்ந்த நற்பதத்தைக் காட்டா நிற்பார். இவ்வகைப்பணி செய்யாரைக் கைவிடு.

(வி - ம்) எத்தனையும்-அனைத்தையும். உள்ளி-நினைத்து. (௬௮)

காட்டிவைத் தார்தம்மை யாம்கடிப் பூப்பெய்யக் காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்தொழும் ஏகம்பர் ஏதமி லாதஎம்மைப்
பூட்டிவைத் தார்தமக் கன்பது பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு வாமவர் பாதங்களே.

(இ - ள்) உலகம் வணங்கும், திரு ஏகம்பர் சிறிதும் பயனில் லாத நாம் தமக்கு, மணமுள்ள மலரைக் கொய்து அருச்சிக்கப் புலப் படுத்தி வைத்தனர். வேட்கைப்பெரு வெள்ளத்தினை, மிகச் செய் தவர் எமக்கு, அன்பு பூட்டி வைத்தவர்; தம்மிடத்து அன்பினை

யடைந்து நூறு செய்யுட்களைப் பாடும்படி வைத்தவர், அத்தகையார் திருவடிகளைப் பரவி வணங்குவாம்.

(வி - ம்.) கடி - மணம். காதல் - பேரன்பின் பெருக்கு; பெருவேட்கை: ஆசை வெள்ளம். ஏதும் - சிறிதும். எம்மை - எமக்கு. தம்மை - தமக்கு. உண்மை உணர்ந்து திருவடி யுணர்வாம். மூதறிவு திருவருளால் கைவரப்பெற்ற நற்றவத்தோர் தம்மையாண்டருளிய சிவபெருமான் முதன்மையாக உடனின்றியக்கத்தாம் அடிமையாக நின்று இயங்கும் மெய்ம்மையினை என்றும் மறவார். அதனால் அவர்கள் தம்மால் செய்யத்தகுவன சிவபெருமான் திருவடியினைத் தொழுதல் ஒன்றே எனத்துணிவர். அத்தொழுகையும் செந்தமிழ்த் திருப்பாட்டினுலாவதே தனிச் சிறப்பமைந்த தெனக் கொள்வர். மேல் வரும் பாட்டுடன் நிறைவுறுங் குறிப்பு மிதன்கணுள்ளது. இவ் வுண்மைகள் வருமாறு :

"வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி யாமே."—௧0. ௬எ௯௬.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடா தாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகா தாரே
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே
காட்டுவித்தால் ஆரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே."
—௬. ௯௫—௩. (௯௯)

பாதம் பரவியோர் பித்துப் பிதற்றினும் பல்பணியும்
ஏதம் புகுதா வகையருள் ஏகம்பர் ஏத்தேனவே
போதம் பொருளாற் பொலியாத புன்சொற் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளாமெனக் கொள்வர்மெய்த் தொண்டரே.

(இ - ள்.) அவன் திருவடிகளைத் தொழுது, ஒரு பேரன்பாகிய பித்து மொழிகளைப் பிதற்றிப் பலமுறை கூறினும் அவன் செய் செயலினைத்தையும், குற்றமுண்டாகாதபடி தம்மைப் போற்றிப் புகழ்ந்ததாகக் கொண்டு தண்ணளி புரிகின்ற திரு ஏகம்பரின் உண்மையடியவர்கள் பொருட் பொலிவால் மெய்யறிவு விளங்காத சிறுமையாகிய சொற்கள் சேர்ந்த நூல்களையும் மறையின்கண் விளங்கும் பொருளாகும் என்று ஏற்றுக் கொள்வர். இஃது அவையடக்கம்.

(வி - ம்.) பாதம்-திருவடி. பரவி-தொழுது. பித்து-பேரன்பு; பெருங்காதல். ஏதம் – குற்றம். போதம் - அறிவு. (௧00)

திருச்சிற்றம்பலம்.

௫. திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது

நேரிசை யாசிரியப்பா

திருச்சிற்றம்பலம்.

இருநில மடந்தை இயல்பினில் உடுத்த
பொருகடல் மேகலை முகமெனப் பொலிந்த
ஒற்றி மாநகர் உடையோய் உருவின்
பெற்றியொன் றுகப் பெற்றோர் யாரே
மின்னின் பிறக்கந் துன்னும்நின் சடையே *
மன்னிய அண்டம்நின் சென்னியின் வடிவே
பாவகன் பரிதி பனிமதி தன்னொடும்
மூவகைச் சுடரும்நின் நுதல்நேர் நாட்டம்
தண்ணொளி ஆரந் தாரா கணமே
விண்ணவர் முதலா வேறோர் இடமாக்
கொண்டுறை விசும்பே கோலநின் ஆகம்
எண்திசை திண்தோள் இருங்கடல் உடையே
அணியுடை அல்குல் அவனிமண் டலமே
மணிமுடிப் பாந்தள்நின் தாளிணை வழக்கே
ஒழியா தோடிய மாருதம் உயிர்ப்பே
வழுவா ஓசை முழுதும்நின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த
ஊனமில் ஞானத் தொகுதிநின் உணர்வே
நெருங்கிய உலகினில் நீர்மையும் நிற்றலும்
சுருங்கலும் விரிதலுந் தோற்றநின் தொழிலே
அமைத்தலும் அழித்தலும் ஆங்கதன் முயற்சியும்
இமைத்தலும் விழித்தலும் ஆகும்நின் இயல்பே
என்றிவை முதலா இயல்புடை வடிவினொ
டொன்றிய துப்புரு இருவகை யாகி
முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி
அத்திறத் தைம்பொறி அறுவகைச் சமயமொ
டேழுல காகி எண்வகை மூர்த்தியொ
டோழிதோ றாழி எண்ணிறந் தோங்கி

(பாடம்) * மின்னிய மின்னின் பிறக்க நின் கடையே.

எவ்வகை யளவினிற் கூடிநின்
௩௦ றவ்வகைப் பொருளும்நீ யாகிய இடத்தே.

க—க. இருநில...தாராகணமே

(இ - ள்.) கரைமோதுகின்ற கடலினை மேகலை அணியாக இலக்கணமமையப் பூண்ட பெரிய நிலமகட்கு முகம் என்று மொழியும்படி விளங்குகின்ற திருவொற்றிமா நகரினைத் திருக்கோயிலாகக் கொண்டெழுந்தருளி யிருப்போனே! தேவரீரின் திருச்சடைமுடி மின்னலைச் செய்கின்ற மின்னலின் செவ்விய ஒளியாகும்; உன்னுடைய திருமுடியின் வடிவம் அழிவில்லாத அனைத்துயிர்களும் நிலைபெற்றுள்ள அண்டங்களாகும். தீ, சுடர்க்கடவுள், குளிர்ந்த திங்கள் ஆகிய இவற்றுடன் மூன்று வகைப்பட்ட சுடர்களும் தேவரீரின் திருமுகத்திற் காணப்படும் திருக்கண்களாம். விண்மீன் கூட்டங்கள் குளிர்ந்த ஒளியினையுடைய மணிமாலையாகும்.

(வி - ம்.) இருநிலம் - பெரிய நிலம். பிறக்கம் - விளக்கம். பாவகன் - தீ. பரிதி - ஞாயிறு. தாராகணம் - விண்மீன் கூட்டம்.

க௦—உ௦. விண்ணவர்...தொழிலே

(இ - ள்.) தேவர் முதலிய மற்றவர்களும், தமக்கு உறைவிடமாகக் கொண்டு வாழ்கின்ற வானுலகம் அழகு மிகுந்த தேவரீரது திருமேனியாம்; எட்டுத் திக்குக்களும் வலியமைந்த திருத்தோள்களாம்; பெரிய கடல் உனது திரு ஆடையாம்; அழகு நிறைந்த அல்குலாகிய பிட்டிப்பக்கமும் நிலவுலகேயாம். மணி குயிற்றிய முடியணிந்த பாதாள உலகம் உன்னுடைய திருவடிகள் வழங்குமிடமாம். நிலை பெறாது ஓடினகாற்று வாங்கிவிடும் மூச்சாகவும், உலக மூற்றிலும் தவறாது உண்டாம் ஓசை முழுமையும் தேவரீரது திருவாய்மொழியாம்; அகன்ற தேவர் முதலாகிய நிலைபெற்ற உயிர்களிடத்துத் தோன்றும் குற்றமில்லாத மெய்யுணர்வுத் தொகுதி முற்றும் உனது பேருணர்வே, அடுக்காகச் செறிந்த உலகத்தின் குணமும், நிலைபேறும், ஒடுக்கமும், பரத்தலும், உண்டாதலும் தேவரீரது தொழில்களாம்.

(வி - ம்.) விசும்பு - வானுலகம். கோலம் - அழகு. ஒழியாது - நிலைபெறாது. மாருதம் - காற்று. உயிர்ப்பு - மூச்சு. நீர்மை - குணம். சுருங்கலும் - ஒடுங்கலும்.

உக—௩௦. அமைத்தலும்...இடத்தே

(இ - ள்.) படைத்தலும், துடைத்தலும், அதனது முயலுகையும் உனக்கு இயல்பாக உண்டாகின்ற உன் திருவிழிகளின் இமைப்பும் விழிப்புமாம் என்று கூறிய இவற்றினை முதலாகவுடைய இலக்கணத்தினையுடைய பல வடிவங்களுடன், பொருந்திய, பவழம் போலும் திருவுரு சிவையும் சிவமும் என இருவகைப்பட்டு, மூன்று வகைப்பட்ட தலை, இடை, கடை (அறிவு, ஆட்சி, அழுந்தல்) என்னும் மூன்று குணத்தினையுடைய, கருப்பை, முட்டை, வியர்வை, வித்து என்று

சொல்லப்படும் நால்வகைத் தோற்றத்து அத்தகுதியினையுடைய ஐம் புலன்களாய் அறுவகைச் சமயங்களுடன், ஏழு உலகங்களுமாகி, எட்டு வகைப் படிமங்களுடன், பலவூழிக் காலங்கள் அளவு கடந்து, உயர்ந்து எவ்வகைப் பெரிய சிறிய அளவுற்ற பொருள்களாலும் சேர்ந்து நிலை பெற்று அவ்வகையாகிய எல்லாப் பொருள்களும் நீயாக விளங்குகின்ற இடத்து, தேவரீரது திருமேனியின் தன்மையை ஒன்றாகப் பெற்று உள்குதலைச் செய்தோர் எவர்?

(வி - ம்.) துப்பு - பவழம். முத்திறக்குணம் - சாத்துவிகம், இராசதம், தாமதம்; (அறிவு, ஆட்சி, அழுந்தல்). எண்வகை மூர்த்தி - க. நிலம் உ. நீர் ௩. நெருப்பு ச. காற்று ரு. வானம் சு. திங்கள் எ. ஞாயிறு அ. ஆருயிர். ஊழி - உகமுடிவு.

இறைவனது பெருவடிவப்பெற்றி பேசவரியது. அவ்வுண்மை வருமாறு:

"பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்."

—அ. திருவெம்பாவை, ௧0.

"அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர் என்றறிக
அம்மையப்பர் அப்பரிசே வந்தளிப்பர்—அம்மையப்பர்
எல்லா உலகிற்கும் அப்புறத்தார் இப்புறத்தும்
அல்லார்போல் நிற்பார் அவர்."

—திருக்களிற்றுப்படியார், ௧.

"உலகமே உருவ மாக யோனிகள் உறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா உயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன்."

—சிவஞானசித்தியார், ரு. உ—சு.

'பார்தன்' என இடத்துறை பொருளை இடமாகத் தானியாகு பெயராற் கூறினர்.

இறைவன் வையமும் உயிரும் இயங்கி வாழ்வுற வேண்டுமென்று உணர்வின்கண் உன்னுதலாகிய திருக்குறிப்புக் கொண்டருளின் அங்ஙனம் நிகழும். அல்லாத இடத்து அந்நிகழ்வுகள் நிகழா. இவ் வுண்மை வருமாறு:

"கண்ணுதல் யோகி ருப்பக் காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித் திமவான் பெற்ற [ரார்.'"
பெண்ணினைப் புணர்ந்து யிர்க்குப் பேரின்பம் அளித்த தோ

—சிவஞானசித்தியார், க. உ—உ௫. (௬)

இடத்துறை மாதரோ டிருடம் பென்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை என்றும்
புலியதள் என்பொடு புனைந்தோய் என்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோய் என்றும்
அருவமும் உருவமும் ஆனாய் என்றும்
திருஅமர் மாலோடு திசைமுகன் என்றும்
உளனே என்றும் இலனே என்றும்
தளரான் என்றுந் தளர்வோன் என்றும்
ஆதி என்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராணன் என்றும்
இன்னவை முதலாத் தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கும் மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்வவர்க் கவ்வவை யாகி
அடைபற்றிய பளிங்கு போலும்
ஒற்றி மாநகர் உடையோய் உருவே.

க—எ. இடத்துறை... இலனே என்றும்

(இ-ள்.) ('ஒற்றிமாநகர் உடையோய்') திருவொற்றிமா நகரினைத் திருக்கோயிலாக் கொண்டு எழுந்தருளி இருப்போனே (உருவே) தேவரீரது திருவுருக்கள் இடப்பக்கத் துறையும் பெருமாட்டியுடன் கூடி இரண்டு திருமேனி எனவும், முற்றொழிப்பாகிய பேரொடுக்கக் காலத்துப் பேரூழி நடுவிரவின்கண் ஊழி நடத்தினைப் புரிந்தருளினாய் எனவும், புலித்தோலினை எலும்புடன் சேர்த்துப் பூண்டருளினாய் எனவும், பிச்சை பூண்டு திரிகின்ற வாழ்வில் பழகினவன் எனவும், திருமகள் அமர்ந்த திருமாலொடு நான்குமுகங் கொண்ட படைப்போன் எனவும், அருவத் திருமேனியும், உருவத் திருமேனியும் ஆகி இருந்தாய் எனவும், உள்ளவன் எனவும், எங்கணுமில்லாத பாழ்ம் பொருள் எனவும்;

(வி-ம்.) இடம் - இடப்பக்கம். மாதர் - பெருமாட்டி. நடம் - நட்டம்; கூத்து. நவிற்றுதல் - புரிதல்; செய்தல். அதள் - தோல். பலி - பிச்சை. பயிலுதல் - பழகுதல். திரு - திருமகள்.

அ—கு. தளரான்...போலும்

(இ - ள்.) தளராதவன் எனவும், தளர்வுறுவோன் எனவும், எப்பொருட்கும் முதல்வன் எனவும், பிண்டி மரத்தடியில் அமர்ந்த சினன் எனவும், அரசடியில் விளங்கிய முன்னவனாகிய ஆதி புத்தன் எனவும், இவ்வகையாகக் கூறிய பலவகைப்பட்ட மதநூல்களுடன் தாமறிந்த அளவினால், மனமயங்கி மாறுகொண்ட மதத்தைச் சேர்ந்த மனிதர்களின் தன்மையினைக் கண்டு வருந்துகின்ற அந்தந்தச் சமயத்தவர்க்கு அவரவர்கள் கொண்ட திருவுருவங்களேயாகிப் பொருந்தி யிருக்கின்ற இயல்பினன்; ஆதலால் அத்திருவுருவம் இலையினை யடைந்த பளிங்குக் கல்லை யொக்கும்.

(வி - ம்.) ஆதி - முதல்வன். அசோகு - பிண்டி. போதி - அரசு. பிணங்குதல் - மாறுபடுதல். அணங்குதல் - வருந்துதல். அடை - இலை. பளிங்கு - பளிங்குக்கல்.

தூய வெள்ளிய பளிங்கு பச்சையிலையினை அடுத்த பொழுது பச்சை நிறமாகக் காணப்படும். இது சார்ந்ததன் தன்மையே யன்றிப் பளிங்கின் இயற்கைத் தன்மையன்று. இயற்கைத் தன்மை வெண்ணிறமே யாம்.

உலகில் பல சமயத்தார் பல்வேறு வடிவங்களில் பல வகையாக வழிபடினும், அவ்வவ் வழிபாட்டினை ஆண்டாண்டு நின்று சிவபெருமானே ஏற்றுக்கொண்டருள்வன். பயனையும் அவனே அளித்தருள்கின்றான். இவ்வுண்மை வருமாறு :

"மனமது நினைய வாக்கு வழுத்தமந் திரங்கள் சொல்ல
இனமலர் கையிற் கொண்டங் கிச்சித்த தெய்வம் போற்றிச்
சினமுதல் அகற்றி வாழுஞ் செயலறம் ஆனால் யார்க்கும்
முனமொரு தெய்வம் எங்குஞ் செயற்குமுன் நிலையா மன்றே."

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும்இ றக்கும்பிறக்குமேல் வினையும் செய்யும்
ஆதலான் இவையி லாதான் அறிந்தருள் செய்வன் அன்றே."

"இங்குநாஞ் சிலர்க்குப் பூசை இயற்றினால் இவர்க ளோவந்
தங்குவான் தருவார் அன்றேல் அத்தெய்வம் அத்த னைக்காண்
எங்கும்வாழ் தெய்வம் எல்லாம் இறைவனா ணையினால் நிற்ப
தங்குநாஞ் செய்யும் செய்திக் காணைவைப் பால ளிப்பன்."

—சிவஞானசித்தியார், உ. உ-உக-உங.

"வாது செய்து மயங்கு மனத்தராய்
ஏது சொல்லுவீ ராகிலும் ஏழைகாள்
யாதோர் தேவ ரெனப்படு வார்க்கெலாம்
மாதேவ னலால் தேவர்மற் றில்லையே."

—கு. ௪௦௦—ச. (உ)

உருவாம் உலகுக் கோருவ னாகிய
பேரியோய் வடிவின் பிறிதிங் கின்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனில்
அப்பொரு ளுனக்கே அவயவ மாதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி யூட்டித்
தொன்னீர் வையகந் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்
நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்
ஓங்கிய மறையோற் கொருமுகம் ஒழித்ததும்
பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்
திறல்கெட அரக்கனைத் திருவிரல் உறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை எல்லாம்
நின்றுழிச் செறிந்தவை நின்செய லாதலின்
உலவாத் தொல்புகழ் ஒற்றி யூர
பகர்வோர் நினக்கு வேறின்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழின் அல்லது
புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந் தோரே.

க—கூ. உருவாம்...ஒழித்ததும்

(இ - ள்.) உருவமாகக் காணப்படும் உலகத்திற்கு, ஒருவனும் நிலைபெற்ற பெரியோனே! தேவரீரது திருமேனி யொழிந்த வேறு பொருள், இவ்வுலகத்தின்கண் இல்லாமையான் எவ்வகைப் பொருளாயினும் இவ்வுலகத்து உளதாம் எனின், அந்தப் பொருள் தேவரீர்க்கே, திருவுறுப்பாம்; ஆகையால் மதிக்கத்தக்க முப்புரங்களை ஒலிக்கின்ற தீக்கிரையாக்கி, மிக்க நீராற் சூழ்ந்த உலகத்தினைத் துயரினின்றும் நீங்க ஆராய்ச்சி செய்ததும், வேள்விக் கடவுளின் தலையை நீங்கச் செய்ததும், பெரிய துறக்க வுலகத்தை ஆள்வோனாகிய இந்திரனது தோள்களை நெரியச் செய்ததும் உயர்ந்த மறையோனாகிய நான்முகனுக்கு ஒரு முகத்தினை ஒழித்ததும்.

(வி - ம்.) அவயவம் - உறுப்பு. முன்னிய - மதிக்கத்தக்க. மூவெயில் - முப்புரம். முழங்குதல் - ஒலித்தல். தொன்னீர் - மிக்க நீர்.

க0—கஅ. பூங்கணை...உணர்ந்தோரே

(இ - ள்.) அழகிய மலர்க்கணையினைக் கைக்கொண்டுள்ள கருவேளாகிய மன்மதனைச் சாம்பராக நெற்றிக்கண்ணால் விழித்தெரித்ததும், இராவணனது வலிமை கெடும்படி திருவிரலால் ஊன்றியருளியதும் நமனை வலிமை குன்றும் வகை, பாசக் கயிற்றினை வீசிய குறிப்பினால்

உதைத்து வென்றதும் என்று இவை முதலாகிய முயற்சிகளெல்லாம் தேவரீர் இருந்த இடத்திலிருந்தே உண்டாயினவையாம். தேவரீரது செயல்களாம் ஆதலால், கெடாத பழையதாகிய புகழினையுடைய திருவொற்றியூரினைத் திருக்கோயிலாக் கொண்டோனே, உன்னைப் புகழ்வோர் தேவரீருடைய செறிவுக்கு, நீக்கமின்மையைக் கண்டறிந்த மெய்யுணர்வு நிலையினையுடையோர். "தேவரீரின் இயக்கத்தினால் உலகம் புடைபெயர்ந்து இயங்குவதன்றி வேறு காரியத்தாலாமெனப் புகழ்தலில் தம்மை மூழ்குவிப்பரோ? மெய்ப் பொருளினை அறிந்து கொண்டோர். (மூழ்குவியார் என்க.)

(வி - ம்.) வேள்-மன்மதன். அரக்கன் - இராவணன். உலவா - கெடாத.

சிவபெருமான் ஒருவனே விழுமிய முழுமுதல்வன். அவன்றன் திருக்குறிப்பால் உலகியல் நிகழ்ச்சிகள் அனைத்தும் நிரல்பட நிகழ்வன. திருக்குறிப்பென்பது அவன்றன் பேருணர்வில் கொள்ளும் குறிப்பேயாம். இதனைக் கண்ணுதல் எனவுங் கூறுப. சங்கற்ப மென்பதும் இதுவே. (சு)

பொருளுணர்ந் தோங்கிய பூமகன் முதலா
இருள்துணை யாக்கையில் இயங்கும் மன்னுயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினுந் திறலினுஞ் செய்தொழில் வகையினும்
வெவ்வே றாகி வினையொடும் பிரியா
தொவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்து நின்னிடை யாகியும்
பெருகியுஞ் சுருங்கியும் பெயர்த்துந் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளக்கம்
ஓவாத் தோல்புகழ் ஒற்றி யூர
மூவா மேனி முதல்வ நின்னருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே.

க—சு. பொருளுணர்ந்...ஒழுக்கம்

(இ - ள்.) உண்மைப் பொருள் இன்னதென்றறிந்து உயர்ந்த செந்தாமரையி லிருக்கும் படைப்போனாகிய நான்முகன் முதலாக இருளினை யொத்த உடம்பில் இயங்காநின்ற நிலைபெற்ற ஆன்மாக்கள் உருவத்தாலும், உணர்வாலும், பெருமையாலும். செயலாலும், செல் வத்தாலும், வன்மையாலும், செய்கின்ற தொழில் வகையாலும், தொழிலினின்றும் வேறுபடாது வேறு வேறாகி ஒன்றை யொன்று ஒவ்வாத பலபடச் செறிந்தவற்றுள் அவ்வுயிர்களின் ஒழுகுதல்.

(வி - ம்.) பூமகன் - நான்முகன். துணை - ஒத்த. யாக்கை - உடம்பு. ஒழுக்கம் - ஒழுகுதல்.

எ—கச. மன்னிய...மயக்கே

(இ - ள்.) நிலைபெற்ற கடலினுள் உயர்ந்த அலைகள் போலத் தேவரீரிடம் தோன்றி, நின்னிடை வளர்ந்தும், விரிந்தும், ஒடுங்கியும், மீண்டும் படைக்கப்பட்டும் நெருங்கி நின்றும் வேருக நின்ருய், விளங்குதல் ஒழியாத பழமையாகிய பெரும்புகழையுடைய திருவொற்றியூரினைத் திருக்கோயிலாகக் கொண்டு வீற்றிருந்தருள்பவனே, கெடாத திருமேனியை யுடைய தலைவனே, உன்னிடந்தோன்றிய உலக மயக்கத்தை உனது திருவருள் விளக்கம் பெற்றவர் அம்மயக்கம் இத்தன்மையதென்று அறிந்தால் அறிவரே அல்லது, நின் திருவருளைப் பெருத பிறர் தேவரீரது தன்மையை அறிய வல்லரோ? (அறியவல்லர் அல்லர்.)

(வி - ம்.) வேலை - கடவுள். ஓவா - ஒழியாத. ஆருயிர்கள் இயல்பினுல் வெவ்வேருவன. அதனுல் அவ்வுயிர்களைப் பற்றிய மல ஆற்றலும் வெவ்வேருயின. கடலில் தோன்றும் அலைபோல் உயிர்கள் இறைவனில் தோன்றும் என்னும் ஒப்பு நீரும் அலையும் தோற்றத்தால் வேருயினும் தன்மையால் ஒன்றேயாம். இறைவனும் உயிரும் தோற்றத்தாலும் தன்மையாலும் வெவ்வேறேயாம். எனவே கடல் என்றது நீருக்கும் நிலத்துக்கும் இடங் கொடுத்துக் கொண்டு எங்கும் நிறைவாயிருக்கின்ற வெளியேயாம். அதுபோல் உயிர் உலகங்கட்கு நிலைக்களமாக இறைவன் இடங் கொடுத்தருளுகின்றனன். அம்முறையினைக் குறிப்பதே இவ்வொப்புமையேயாம்.

இவ்வுண்மை வருமாறு :

“ மெய்ஞ்ஞானந் தன்னில் விளையா தசத்தால்
அஞ்ஞான முள்ளம் அணைதல்காண்—மெய்ஞ்ஞானம்
தானே யுளவன்றே தண்கடல்நீ ருப்புப்போல்
தானே யுளமுளவாத் தான்.”

—சிவஞானபோதம், எ. ௩—௩.

மேலும் வரும் வெண்பாவும் அதனை வலியுறுத்தும்.

“ வித்துண்டா மூல முளைத்தவா தாரகமாம்
அத்தன்தாள் நிற்றல் அவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனும் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து.”

—சிவஞானபோதம், க. உ—உ. (ச)

மயக்கமில் சோல்நீ யாயினும் மற்றவை
துயக்க நின்திறம் அறியாச் சூழலும்
உறைவிடம் உள்ளம் ஆயினும் மற்றது

கறைபட ஆங்கே கரந்த கள்ளமும்
செய்வினை உலகினிற் செய்வோய் எனினும்
அவ்வினைப் பயன் நீ அணுகா அணிமையும்
இனத்திடை இன்பம் வேண்டிநிற் பணிவோர்
மனத்திடை வாரி யாகிய வனப்பும்
அன்பின் அடைந்தவர்க் கணிமையும் அல்லவர்ச்
சேய்மையும் நாள்தோறும்
என்பினை உருக்கும் இயற்கைய ஆதலின்
கண்டவர் தமக்கே ஊனுடல் கழிதல்
உண்டென உணர்ந்தனம் ஒற்றி யூர
மன்னிய பெரும்புகழ் மாதவ
துன்னிய செஞ்சடைத் தூமதி யோயே.

௧—௮. மயக்கமில்...வனப்பும்

(இ - ள்.) மயங்குதலில்லாத சொல்லாகியவேதம் நீயேயாயினும், அவ்வேதங்கள் தளர்ச்சியுறும் வகை உன்னுடைய வன்மையை அறியா இடமும், நீயுறையுமிடம், மனமே எனனினும் அது காணாது குற்ற முறும்படி, அம்மனத்தில் மறைந்திருக்கும் கள்ளமும், செய்கின்ற செயல்களை, உலகத்துச் செய்பவன் என்றாலும், அத்தொழில்களின் பயன், நீ நெருங்காத நெருக்கமும், அடியவர் இனத்துச் சிவப்பே ரின்பப் பெருவாழ்வை விரும்பி, உன்னுடைய திருவடியினைப் பணி வோர் தம் மனத்தில் பேரின்பக் கடலாகிய பேரழகும்; மற்று இரண்டும் அசை.

(வி - ம்.) மயக்கம் - தெளிவின்மை: துணிவின்மை. நிலையாத உலகம், உடல்களை நிலைக்குமென்று எண்ணுதல். சொல் - வேதம்: ஆகுபெயர், துயக்கம் - தளர்ச்சி. உள்ளம் — மனம். கறை - குற்றம். அணிமை - நெருக்கம். வாரி - கடல். வனப்பு — பேரழகு. (வனப் பாற்றல்: பராசத்தி).

௯—௧௫. அன்பின்...தூமதியோயே

(இ - ள்.) நீங்காப்பேரன்பினுல், தேவரீரின் திருவடியை அடைந்தவர்க்கு நெருங்கி அருள்புரிதலும், அங்ஙனம் அணுகா தவர்க்கு நெடுந்தொலைவாதலும், எக்காலத்தும், எண்ணினவர் தம் உடலினை உருக்கும், இயற்கையினை உடையன; ஆதலால் இப் பேரின்பத்தினை மனத்தாற் கண்டவர்க்கே இறைச்சியாலாகிய உடம்பு, மாண்டு பிறவாது நீங்குதல், உண்மையாக உள்ளது; என்று திரு வருளால் அறிந்தோம். திருவொற்றியூரினைத் திருக்கோயிலாகக் கொண்டெழுந்தருளி யிருப்பவனே, மிக்க புகழ் நிலைத்துள்ள பெரிய தவநிலையானவனே, சிவந்த திருச்சடைமுடி பொருந்திய குற்ற மில்லாத நிலவினைப் புனைந்தருளியவனே.

(வி - ம்.) அணிமை - அருகு. சேய்மை - தொலைவு.

நன்னெறி நாற்படியுள் சீலம் திருக்கோவில் திருத்தொண்டிலும், நோன்பு சிறப்பொடு செய்யும் பூசனையிலும், செறிவு உள்ளத்து உள்குதலிலும், அறிவு உணர்வின்கண் உற்றழுந்தலிலும் நிகழ்வன. (௫)

தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யானென அமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனே றேறுதல்
இறைவன் யானென இயற்று மாறே
அதுஅவள் அவன்என நின்றமை யார்க்கும்
போதுநிலை யான்என உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்க தென்னிடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதன் நான்என நவிற்று மாறே
மூவிலை ஒருதாள் சூலம் ஏந்துதல்
மூவரும் யான்என மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யான்என உணர்த்திய வாறே
நிலநீர் தீவளி உயர்வான் என்றும்
உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருளுநற் பூதப் படையோய் என்றும்
தெருளநின்று உலகினில் தெருட்டு மாறே
ஈங்கிவை முதலாம் வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை உணர்த்தவும் உணராத்
தற்கோலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வண்மையிற் சுழலும் மாந்தர்க்
காதி யாகிய அறுதொழி லாளர்
ஓதல் ஓவா ஒற்றி யூர
சிறுவர்தஞ் செய்கையிற் படுத்து
முறுவலித் திருத்திநீ முகப்படும் அளவே.

௧—௧௦. தூமதி...நவிற்றுமாறே

(இ - ள்.) களங்கமற்ற பிறையினைத் திருச்சடையின்மீது அணிதல், குற்றமற்ற உண்மை ஒழுக்கத்தால் உணரப்பெற்ற வளரும் அறிவினாலுணரும் உண்மைப் பொருளாகிய பேரறிவுப் பேரொளி யானே என்று உலகுளோருக்குத் தெரிவித்த வகையாம். அறமே

வடிவமாகிய விடையினை ஊர்ந்தருள் புரிதல், அறவாழி அந்தணன் வடிவமாகிய விழுமிய முழு முதல்வன் யானே என்று அறிவித்த படியாம். அது என்றும், அவளென்றும் அவன் என்றும் (ஒருவன், ஒத்தி ஒன்று ஆண், பெண் அலி) உலகத்து உயர்திணை அஃறிணைப் பொருள்களாகி விரவி நிற்றல், மக்கள், தேவர், நரகர், விலங்குகள் ஆகிய அனைத்துயிர்களுக்கும் பொதுவாம் நிலையின் நின்று அருள் செய்வோன் என்று தெரிவித்த பொருளமைதியாம். மூன்று திருக் கண்களையுடையான் என்பது ஆகவனியம் காருகபத்தியம், தக்கிணாக் கினி என்று சொல்லப்படும் மூன்று வேள்வித்தீக்களும் வேள்வியின் கண் என்னில் அடங்கியது என்பதைத் தெரிவிக்கும் குறிப்பாம்; மறை வடிவாகிய மானாகிய மறியை திருக்கையின்கண் ஏந்தியருளுதல் அந்த மறைக்குரிய முதல்வன் யானே யென்று மொழிந்தவாறும்.

(வி - ம்.) தூமதி - தூய்மை பெறுதற்காம் இயல்புடைய மதி. மதி - அறிவு. இஃது ஆருயிர்களின் அடையாளமாகும். உயிர்களின் அடையாளமாம் உண்மை வரும் தமிழாகமத் திருப்பாட்டான் உணர்க :

"ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வாமுடியப் பார்."

—உண்மை விளக்கம், ௩—௨.

மதி - அறிவு; மதிக்கத் தகுந்தது. சிவபெருமானின் பேரறிவு பிறிதொன்றன் துணை வேண்டாது இயல்பாகத் தானாகவே விளங்குந் தனியறிவு. அம்மட்டுமன்று அனைத்தையும் ஓரியல்பானே ஒருங் குணரும் முற்றுணர்வு. இஃது அவன்றன் எண் பெருங் குணங்களில் சொல்லப்படும். "இயற்கை உணர்வினனாதல், முற்றுமுணர்தல்" என்பனவற்றான் அறியலாம்.

ஆருயிர்களின் அறிவு இயற்கையிலேயே இறைவன்றன் பேரறி வின் பெருந்துணையினை நாடியே நிற்கின்றது. அம்மட்டுமன்று ஒன்றனை அறியுங்கால் பிறிதொன்றனை அறியும் ஆற்றல் அவ்வுயிர் களுக்கு அமையவில்லை. ஆருயிர்கள் அழுந்தி யறியும் தன்மை யுடையன. அழுந்தி யறிதல் அனுபவித்தல். அனுபவம் பெற வேண்டிய தன்மையால் ஆருயிர்கள் குறைபாடுடையன. அனுபவ மனைத்தும் உயிர்களின் அறிவின்கண் நிகழ்வன. அதனால் உயிர் களின் அறிவு குறைமதி எனப்படும். இறைவன் குறைவிலா நிறை வினன். அவன் எல்லாப் பொருள்களையும் உயிர்களின் பொருட்டு அவ்வுயிர்களுடன் விரவி அறிவன். ஆனால் அவன் அனுபவியான்.

நூலாசிரியன் நூலினை நுகரான். நூல் கற்போனே நூலினை நுகர்வன். நூலினை உணர்த்தும் போதக ஆசிரியன் தன்பால் கற்கும் மாணவனின் பொருட்டு நூலினை உணர்வன். ஆயின் நுகரான். ஈண்டு நுகர்தல் என்பது தேர்வு எழுதிச் சான்றிதழ் பெறுதல். உயிர்கள் மலமறைப்பால் அறிவு சிறிதும் விளங்காது குறைமதியாகக் கிடந்தன. ஆண்டவன் தண்ணளியால் அளித்தருளிய உலகு உடல்

களின் துணைகொண்டு சிறிது அறிவு விளக்கம் எய்தப் பெற்றன. அதனாலும் அது குறை மதி யென்று அழைக்கப்பெறும். அம்மதி வளர்ந்து முதல்வன்றன் நிறையறிவில் அழுந்தும். அக்குறிப்பே "குறைமதியம் வளர வைத்தார்" என்பதே. வளர்தல் இறைவன் திருவடிச்சார்பினை எய்தி நிறைவுற்று முதல்வன்றன் முற்றறிவு எய்தினும் முதல்வனை ஒழித்து வேறொன்றனையும் அறியாதுறைதல். படியாத ஒருவன் பள்ளிக்கூடத்தில் சேர்ந்ததும் மாணவன் என்று பெயர் பெறுகின்றான். அது போல் ஆண்டவன் திருமுடியில் சேர்ந்த மதியும் தூமதி என்று அழைக்கப்பெறும். அவ்வுண்மை வருமாறு:

"உற்றலவு பிணியுலகத் தெழுமை வைத்தார்
உயிர்வைத்தார் உயிர்செல்லும் கதிகள் வைத்தார்
மற்றமரர் கணம்வைத்தார் அமரர் காணு
மறைவைத்தார் குறைமதியம் வளர வைத்தார்
செற்றமலி யார்வமொடு காம லோபஞ்
சிறவாத நெறிவைத்தார் துறவி வைத்தார்
நற்றவர்சேர் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே."

—சு. கச—சு.

'ஆனேறு அறவடிவம்' என்ப. அறம் என்பது பிறப்பறுதல் என்ப. பிறப்பறவே பெருமானால் ஆருயிர்கட்குப் பிறவி நல்கப்படு கின்றது. பள்ளியின் மேல்வகுப்புப்போன்று பிறப்பறும் இயல்பு மக்கட் பிறப்பிற்கே உள்ளது. மாணவர் பள்ளியில் சேர்ந்து படிப்பது கற்றுத்தேறிப் பள்ளியை விட்டு நீங்குவதற்கேயாம். மக்கட் பிறப்பின் பயன் பிறப்பற முயல்வதேயாம். இவ்வுண்மை காரைக்காலம்மையார் முதல்வன் பால் வேண்டிக்கொண்ட வேண்டுகோளால் நன்கு புலனும். அது வருமாறு:

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்."

—கஉ. காரைக்காலம்மையார், சுO.

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்."

—திருக்குறள், ந௬உ.

இதனாலும் மேலது நன்கு புலனும். அடலேறனது சிவ பெருமானையே நோக்கி நிற்கும் நிலைபோன்று நாமும் அவனையே அகத்தும் புறத்தும் நோக்கி நிற்பின் அவன் திருவடியை அடைவோம் என்பது குறிப்பாகும். மேலும் ஆனேற்றுக்கு விடை யென்பதும் ஒரு பெயர். விடை - விடுத்தல். யான் எனது என்னும் செருக்கினை விடுத்தல். அதுவே வேண்டுதல் வேண்டாமையின்மை. பின்னும் தன்னை ஆண்டவனுக்கு அடிமையாக ஒப்புவித்துத் தன் பற்றை விடுத்

துச் சிவன் பற்றை மேற்கொள்ளுதல் என்பதும் விடையென்பதன்கண் அடங்கும்.

அதுவே "உணர் வென்னும் ஊர்தியுடையாய் போற்றி" எனத் தனித்தமிழ் மறை ஓதுவதுமாம்: ஈண்டு உணர்வு என்பது சிவனுக்கு மீளா அடிமையாய் ஆட் செய்தல் என்பதாம்.

"அவனவளது வெனும் "தனித்தமிழ்ச் சிவஞான போத நூற் பாவின் அடியொற்றியதாம்" அது வவனவளென நின்றமை என்னும் தொடராம். ஈண்டுப் பொதுமை என்பது சிவபெருமான் கலப்பால் அவற்றுடன் விரவி ஒன்றாய் நிற்பினும் பொருட்டன்மையால் வேறே யாம் மெய்ம்மை உணர்த்துவதாகும்.

முக்கண் என்பது முத்தீ வேள்விக் குறிப்பாகும். சிவ வேள்வியும் வைதிக வேள்வியும் வெவ்வேறாம். வைதிக வேள்வி உலகப் பயனைத் தருவது. சிவ வேள்வி திருவடிப் பேற்றினை நல்குவது. இவ்வுண்மை சிவஞான முனிவரனார் இயற்றியருளிய சிவஞான போதப் பேருரைக் கண் காண்க.

சிவ வேள்வி சிவதீக்கைக்கண் செய்வது, சிவபூசைக்கண் செய் வது, அகவழிபாடாகிய ஞானபூசைக்கண் செய்வது என மூன்றாம். (செந்தமிழின் செய்வேள்வி செப்பிற் சிவதீக்கை, முந்துசிவ பூசையகம் மூன்று.)

அக்குறிப்பு திருஞான சம்பந்தப் பெருமானார் சிவபெருமான் பால் உலவாக்கிழி பெற்றுத் தந்தையாரிடம் அளித்தருளினர். அப்பொழுது சிவவேள்வி யெனக் குறித்தருளிய திருக்குறிப்பு வைதிக வேள்வியும் சிவவேள்வியும் வெவ்வே றென்பதே யாம். அது வருமாறு:

"ஆதி மாமறை விதியினால் ஆறுசூழ் வேணி
நாத னாரைமுன் னாகவே புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவும் திருக்கழு மலத்து
வேத வேதியர் அனைவரும் செய்யவும் மிகுமால்."

கஉ—சம்பந்தர், ௬உ௬.

சிவபெருமான் மான் கன்றினை இடது திருக்கையின்கண் ஏந்தி யருள்வது வேதமுதல்வன் தான் என்னும் குறிப்பினை புணர்த்துவ தாகும். ஒலி தோன்றுவது தூமாயையின் கண்ணாம். தூமாயை சிவ பெருமானின் நேர் ஆட்சியாகும். கை என்பது செய்கை. அவன்றன் நேர் செய்கை என்னும் குறிப்பே இதுவாம். மான்-பெருமை. சொல்லும் பொருளுமாம். இரண்டனுள் முதற்கண் சொல்லுரைக்க அதன்பின் அப்பொருள் தோன்றுவதால் சொல்லே பெருமையுடைத் தென்க. மந்திரங்களும் சொல்லானமைந்தமை யோர்க.

கக—க௮. மூவிலை...தெருட்டுமாறே

(இ - ள்.) ஒரு தாளில் மூன்று இலை கொண்ட சூலப்படையினை ஏந்தியருளுதல் படைத்தல் காத்தல், துடைத்தல்களுக்குரிய முத்தேவருமானவன் யானே என்று ஓதிய வகையாம், எண்பேர் வடிவமாய் நின்றருளினை என்பது இப்பரந்துபட்ட உலகினுக்கு

உண்மைப் பொருள் யானே யாவன் என்று உணர்த்தியருளிய வாறுகும்: நிலம், நீர், நெருப்பு, காற்று, விரிந்த வான மெனவும், கெடாத தொன்மையும் அழியாமையும் உடைய பொருள்சேர் புகழுடை யோய் எனவும், எல்லாப் பொருள்களுமானு யெனவும், நல்ல பூத கூட்டங்களைப் படைகளாகப் பெற்றுள்ளவனே எனவும், நிலைபெற்ற உலகத்தவர் அறிந்து கொள்ளும் பொருட்டுத் தெரிவித்த வகையாம்.

(வி - ம்) முத்தலைச் சூலத்தின் அடையாளம் படைத்தல் காத்தல் துடைத்தலாகிய மூன்று திருத் தொழில்களும் விழுமிய முழுமுதல் வன்றன் திருவருளால் நிகழ்த்தப்படுவனவாம். படைப்போன், காப் போன், துடைப்போன் ஆகிய முத்தேவர்களும் சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தனர். அவனும் அவர்கள் தவத்துக் கிரங்கியருளினன். அவர்களுக்குள் படைத்தற்ரெழிலை நான்முகனுக்கும் காத்தற் ரெழிலைத் திருமாலுக்கும், துடைத்தெற்ரெழிலை உருத்திரனுக்கும் நல்கியருளினன். இவ்வுண்மை வருமாறு :

"உரைத்தஇத் தொழில்கள் மூன்றும் மூவருக் குலக மோத
வரைத்தொரு வனுக்கே யாக்கி வைத்ததிங் கென்னை என்னின்
விரைக்கம லத்தோன் மாலும் ஏவலான் மேவி ஞேர்கள்
புரைத்ததி காரசத்தி புண்ணியம் நண்ண லாலே."

—சிவஞானசித்தியார், க. உ—சு.

முத்தேவர்களையுங் கொண்டு முதல்வன் முத்தொழில்களையும்[1] நிகழ்த்துவித் தருளும் பான்மையால் அம்மூவருமாய் நின்றருள்பவன் அவனே என்பதாம்.

கலித்தொகை ஒன்பதாம் செய்யுள் ''எறித்தரு கதிர் தாங்கி' எனத் தொடங்குவது. அதன்கண் "உறித்தாழ்ந்த கரகமும் உரை சான்ற முக்கோலும்" என்ற அடியிலுள்ள 'முக்கோல்' என்பதற்கு உரை வகுத்த நச்சினர்க்கினியர் ''அரி அயன் அரனென்னும் மூவரும் ஒருவரென்று சொல்லுதல் தன்னிடத்தே அமைந்த முக்கோல்" எனவும் "அரியயன் அரனென்னும் மூவரையும் ஒருவனுக வல்லது வேருக நினையாத" எனவும் உரைத்தனர். அவற்றை ஈண்டு நினைவு கூர்க.

மேலும் படைத்தல் காத்தல் துடைத்தலாகிய முத்தொழில்களும் மல நீக்கத்தின் பொருட்டு நேர்ந்தன. அதனுல் முத்தலை வேலினை மும்மலம் அகற்றுவதாகக் கொள்ளுதலும் ஒன்று. அது வருமாறு :

"அருள்பொழியும் திருமுகத்தில் அணிமுறுவல் நிலவெறிப்ப
மருள்பொழிமும் மலஞ்சிதைக்கும் வடிச்சூலம் வெயிலெறிப்ப
பொருள்பொழியும் பெருகன்பு தழைத்தோங்கிப் புவிஎத்தத்
தெருள்மொழிவன் தமிழ்நாட்டுச் செங்காட்டங் குடிச்சேர்ந்தார்."

—கஉ, சிறுத்தொண்டர், ௩டு.

"எண்வகை மூர்த்தி யென்பதிவ் வுலகினில், உண்மையானென உணர்த்தியவாறே" உடலை இயக்கு முண்மை உயிராதல் போல்

1. 'மூன்று மூர்த்தியுள்'. ஓ. அக—௩.

உலகை இயக்கு முண்மை உயிர்க்குயிராம் சிவனேயாம். இவ்வுண்மை மணிமேகலைக்கண் சைவவாதி கூறும் சால்பானுணரலாம். இதனல் தமிழ் நாட்டுத் தொன்மைச் சமயம் சைவசமயமே என்பது நன்கு பெறப்படும். அவ்வுண்மை வருமாறு :

" என்றவன் றன்னைவிட் டிறைவன் ஈசனென
நின்ற சைவ வாதிநேர் படுதலும்
பரசுநின் தெய்வம் எப்படித் தென்ன
இருசுட ரோடிய மானனைம் பூதமென்
றெட்டு வகையு முயிரும்யாக் கையுமாய்க்
கட்டிநிற் போனுங் கலையுருவி னேனும்
படைத்துவிளை யாடும் பண்பி னேனும்
துடைத்துத் துயர்தீர் தோற்றத் தோனும்
தன்னில் வேறு தானென்றி லோனும்
அன்னேன் இறைவன் ஆகுமென் றுரைத்தனன்."
—மணிமேகலை, உஎ சமயக்கணக்கர்.

கக—உகூ. ஈங்கிவை...அளவே

(இ - ள்.) இவ்விடத்து இவை முதலான பலவகை வண்ணங்களும் வடிவங்களும் வளருகின்ற உனது பெரும்புகழினைத் தெரியும்படி அறிவித்தருளவும், அறிந்து கொள்ளாத தம்மைத்தாமே கேடு செய்து கொள்ளும் தற்கொலி மாந்தர், தங்களிடத்துண்டாகிய சொற்களும் பொருள்களுமாகிய வளப்பங்களால் சொற்போரிட்டுத் திரியும் மனிதர்கட்கு முதல்வராகிய மறையோர் முதலியோரால் ஓதியறிய முடியாத திருவொற்றிமா நகரத்தினைத் திருக்கோயிலாகக் கொண்டு வீற்றிருந்தருள்பவனே, அத்தகைய வழக்கிடும் சழக்கர்தம் செய்கையினை அறிவு முதிராத சிறு பிள்ளைகளின் செயல்களிற் சேர்த்து அவர்கள் நின் திருக்குறிப்பில் வரும் அளவும் அவர் தம் செய்கைக்குச் சிறுநகை கொண்டெழுந்தருளி யிருக்கின்றாய்.

(வி - ம்.) சிவபெருமான் ஒன்றாய் வேறாய் உடனுமாய் நின்றருளும் மெய்ப்புணர்ப்பினன். அவன் அனைத்துமாய்க் கலந்தும் பொருட்டன்மையால்வேறாகவும், இயக்குதற் றன்மையால் உடனாகியும் நின்றருள்வன். அவன் அன்பினால் ஒன்றாவன் ஆங்கறிவால் வேறாவன், இன்பால் உடனாவன் ஈந்து. (கூ)

அளவினில் இறந்த பெருமையை யாயினும்
எனதுளம் அகலா தொடுங்கிநின் றனையே
மெய்யினை இறந்த மெய்யினை யாயினும்
வையகம் முழுதும்நின் வடிவெனப் படுமே
கைவலத் திலைநீ எனினுங் காதல்
செய்வோர் வேண்டுஞ் சிறப்பொழி யாயே
சொல்லிய வகையால் துணையலை யாயினும்

நல்லுயிர்க் கூட்ட நாயகன் நீயே
எங்கும் உள்ளோய் எனினும் வஞ்சனை
தங்கிய அவரைச் சாராய் நீயே, அஃதான்று
பிறவாப் பிறவியை பெருகாப் பெருமையை
துறவாத் துறவியை தொடராத் தொடர்ச்சியை
நுகரா நுகர்ச்சியை நுணுகா நுணுக்கினை
அகலா அகற்சியை அணுகா அணிமையை
செய்யாச் செய்கையை சிறவாச் சிறப்பினை
வெய்யை தணியை விழுமியை நொய்யை
செய்யை பசியை வெளியை கரியை
ஆக்குதி அழித்தி ஆன பல்பொருள்
நீக்குதி தொகுத்தி நீங்குதி அடைதி
ஏனைய வாகிய எண்ணில் பல்குணம்
நினைதொறும் மயக்கும் நீர்மைய ஆதலின்
ஓங்கு கடலுடுத்த ஒற்றி யூர
ஈங்கிது மொழிவார் யாஅர் தாஅஞ்
சொல்நிலை சுருங்கின் அல்லது
நின் இயல் அறிவோர் யார்இரு நிலத்தே.

க—க0. அளவினில்...சாராய்நீயே

(இ - ள்.) எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் அளவுகளிலும் கடந்த பெருமையினையுடையாய் ஆயினும் அடியேனது மனத்தினை விட்டு நீங்காமல் ஒடுங்கி நின்று அருள்கின்றனை; ஐந்து பூதங்களாலாகிய பூத உடம்புகளைக் கடந்த திருமேனியினைப் பெற்றுளை யாயினும், உலக முழுவதும் தேவரீர் திருவுரு எனப்படும்; அடியேன் கையின்கண்ணதாக நீ இல்லையாயினும், உன்னை உள்ளத்திடை உள்கிப் பேரன்பு கொள்வோர் வேண்டிய சிறப்புக்களை ஈந்தருள நீங்காய்; மேற்சொல்லிய வகைகளால் துணைவன் அல்லையாயினும் நின்பால் அன்பு பதிந்த ஆருயிர்கட்கு இன்பத்துன்பப் பயன்களை நுகர்விக்கத் தலைவன் நீயே யாவாய்- நிற்பனவும் நடப்பனவுமாகிய எல்லாப் பொருள்களிலும் நிறைந்துள்ளாய்; என்றாலும் வஞ்சனை பொருந்தியிருக்கிற மக்களை நீ சார்வாய் அல்லை.

(வி - ம்.) மெய்யினை - பூதவுடம்புகளை. இறந்த - கடந்த. மெய்யினை - திருமேனியினை. காதல் - பேரன்பு.

இறைவன் கொள்ளும் திருமேனியின் உண்மை வருமாறு :

"உலகினை இறந்து நின்ற தரனுரு என்ப தோரார்
உலகவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும் என்றும் ஓரார்

உலகினுக் குயிரும் ஆகி உலகுமாய் நின்ற தோரார்
உலகினில் ஒருவன் என்பர் உருவினை உணரா ரெல்லாம்."

—சிவஞானசித்தியார், க. உ—உ0.

க0—கக. அஃதான்று...அடைதி

(இ·ள்.) அதுவன்றி நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பினுள் ஒன்றினும் பிறவாது நினைப்பளவானே திருவருளால் தோன்றும் பிறப்பினை உடையாய், துறவாத துறவினை யுடையாய்; ஒருவராலும் தொடர முடியாத தொடர்ச்சியினை யுடையாய், துய்க்கப் பெருத துப்புரவினை உடையாய், நுணுகப் பெருத நுணுக்கினை யுடையாய், அகலப் பெருத அகற்சியினை யுடையாய், அணுகப்பெருத அணிமையினை உடையாய், ஒருவரானுஞ் செய்யப்படாத பெருஞ் செய்கையினை யுடையாய்; ஒருவரானும் சிறப்பிக்கப் பெருத சிறப்பினை யுடையாய், நின் அன்பரல்லாரிடம் வெம்மையை உடையாய், நின் அடியவரிடத்துத் தட்பத்தினையுடையாய், சிறப்பினை உடையாய், நொய்ம்மையினையுடையாய் செந்நிறத்தினையுடையாய், பசிய நிறத்தினை யுடையாய், வெண்ணிறத்தினையுடையாய், கருநிறத்தினையுடையாய், அனைத்துலகினையும் படைத்தருள்கின்ருய்; அவற்றைப் பேரொடுக்கக் காலத்து முற்றழிப்பாய் அழித்தருள்கின்ருய்; பலவகைப்பட்ட பொருள்களை விலக்குகின்ருய்; அவற்றை மீண்டுஞ் சேர்த்தருள் கின்ருய்; உன்னை யணுகாரை நீங்கியருள்கின்ருய், உன்னை அணுகி ஞேரை அடைந்தருள்கின்ருய். இவ்வனைத்தும் நின்னருளியல்பென்ப.

(வி – ம்.) தோன்ருத் துணையாய் நின்றருளும் சிவபெருமான் எல்லா வகையான உதவிகளையும் புரிந்தருளும் தன்மை வருமாறு :

"பல்லடியார் பணிக்குப் பரிவானைப் பாடியாடும் பத்தர்க்கன்
[புடையானைச்
செல்லடியே நெருங்கித் திறம்பாது சேர்ந்தவர்க்கே சித்திமுத்தி
[செய்வானை
நல்லடியார் மனத்தெய்ப்பினில் வைப்பை நானுறு குறையறிந்
[தருள்புரிவானை
வல்லடியார் மனத்திச்சை யுள்ளானை வலிவலந்தனில் வந்து
கண்டேனே."

—எ. கூஎ—உ.

வஞ்சகர் நெஞ்சத்தணுகாச் சிவபெருமான் மெய்ம்மை வருமாறு :

"பொய்யுடை யார்க்கரன் போலக லும்மகன் ருற்புணரின்
மெய்யுடை யார்க்கவ னம்பலம் போல மிகநணுகும்
மையுடை வாட்கண் மணியுடைப் பூண்முலை வாணுதல்வான்
பையுடை வாளர வத்தல்குல் காக்கும்பைம் பூம்புனமே."

—அ. திருச்சிற்றம்பலக்கோவையார், சஅ.

உ0—உ௫. ஏனைய...நிலத்தே

(இ - ள்.) பிறவாகிய அளவு இல்லாத பல குணங்கள், நினைக்குந் தோறும் மயக்குகின்ற குணத்தையுடையன. ஆகையால் நீர்மிகுந்த கடலைச் சூழலாக உடுக்கப்பெற்ற திருவொற்றி மாநகரினைத் திருப்பதி யாகக் கொண்டருள்வோனே, விரிந்த உலகத்தின்கண் தேவரீரது பெருமையினைக் கூறும் இதனைச் சொல்வாரது சொல்லும் நிலையும் சுருங்கி யொழிதலன்றி இக்காலத்துத் தேவரீரது இயல்புகளனைத் தினையும் அறியவல்லர் யாவர்? (ஒருவரும் இலர் என்பதாம்.) (எ)

நிலத்திடைப் போறையாய் அவாவினில் நீண்டு
சோலத்தகு பெருமைத் தூரா ஆக்கை
மெய்வளி ஐயோடு பித்தோன் றுக
ஐவகை நெடுங்காற் றுங்குடன் அடிப்ப
நரையெனும் நுரையே நாடோறும் வெளுப்பத்
திரையுடைத் தோலே செழுந்திரை யாகக்
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
மூடிய இருமல் ஓசையின் முழங்கிச்
சுடுபசி வெகுளிச் சுறவினம் எறியக்
குடரெனும் ஆலாக் கூட்டம்வந் தோலிப்ப
ஊன்தடி எலும்பின் உள்திடல் அடைந்து
தோன்றிய பல்பிணிப் பின்னகஞ் சுழலக்
கால்கையின் நரம்பே கண்ட மாக
மேதகு நிணமே மெய்ச்சா லாக
முழக்குடைத் துளையே முகங்க ளாக
வழுக்குடை மூக்கா றேதம்வந் தோலிப்ப
இப்பரி சியற்றிய உடலிருங் கடலுள்
துப்புர வென்னுஞ் சுழித்தலைப் பட்டிங்
காவா என்றுநின் அருளினைப் பெற்றவர்
நாவா யாகிய நாதநின் பாதம்
முந்திச் சென்று முறைமையின் வணங்கிச்
சிந்தைக் கூம்பினைச் செவ்விதின் நிறுத்தி
உருகிய ஆர்வப் பாய்விரித் தார்த்துப்
பெருகிய நிறையெனுங் கயிற்றிடைப் பிணித்துத்
துன்னிய சுற்றத் தொடர்கயி றறுத்து
மன்னிய ஒருமைப் பொறியினை முறுக்கிக்
கருமப் பாரெனுங் கடுவெளி எற்ற

தூமச் சோதிச் சுடர்க்குற நிறுத்திச்
சுருங்கா உணர்ச்சித் துடுப்பினைத் துழாவி
கூ௦ நெருங்கா அளவில் நீள்கரை ஏற்ற
வங்க யாத்திரை போக்குதி போலும்
ஓங்கு கடலுடுத்த ஒற்றியூ ரோயே.

க—கூ. நிலத்திடைப்...சுறவினம்எறியக்

(இ - ள்.) (பெரிய கடலினைச் சூழலாகப் பெற்றுள்ள திருவொற்றியூரினைத் திருக்கோயிலாகக் கொண்டருளியவனே!) பூமியின்கண் பாரமாகப் பலவகைப்பட்ட ஆசையால் மிகைப்பட்டுப் பலராலும் இன்னுரெனக் குறிப்பிடத்தக்க உடம்பே சேருகவும், உடம்பின்கண் ணியைந்த வாதமும், சிலேட்டுமமும் பித்தத்துடன் ஒன்றாக ஐந்து வகையாகிய பெருங்காற்றானது அவ்விடத்தில் கூடி வீசுதலால் நரை எனப்படும் நுரையானது ஒவ்வொரு நாளும் வெளுக்காநிற்கத், திரைதலுடைய தோலானது, வளமுற்ற அலைகளாகவும் இயைந்துள்ள புண்ணீரினால் உள்ளிடம் நிறைவடைந்து கவிந்துள்ள, இருமலோசையினால் முழக்கமடைந்து வெதுப்புகிற பசியும், சினமாகிய சுறாவின் இனங்கள் வீசுதலால்,

(வி - ம்.) பொறை - சுமை; பாரம். வளி - வாதம். ஐ - சிலேட்டுமம்; கோழை: நரை - வெண்மை. குருதி - புண்ணீர்; செந்நீர்; இரத்தம். சுடுபசி - வெதுப்புகிற பசி. ஐவகைக் காற்று: க. தும்மற்காற்று உ. விழிக்காற்று ங. கொட்டாவிக்காற்று ச. இமைக்காற்று ரு. வீங்கற்காற்று என்பன. இவை தொழில் வளி. வளி - காற்று. (இவை யொழிந்தவை அறிவுவளி. அவை, க. உயிர்க்காற்று உ. மலக்காற்று ங. தொழிற்காற்று ச. ஒலிக் காற்று ரு. நிரவு காற்று என்பன.)

க௦—உ௦. குடரெனும்...பாதம்

(இ - ள்.) குடல் என்கிற நீர்ப்பறவைகளின் கூட்டம், இரையகப் படுமென எண்ணி வந்து ஒலிசெய்யா நிற்க. இறைச்சியாலும் எலும்பி னுனுமாகிய உள்ளிடமாகிய மேட்டினைச் சென்று, உண்டாகிய வெவ் வேறாகிய நோயென்னும் பலவகைப்பட்ட அந்தச் சங்குகளானவை சுழலாநிற்கக் கையிலும் காலிலுமுள்ள நரம்புகளே பூகண்டமாக, சிறந்த கொழுப்பே உண்மையாகிய நீர்ச்சாலாகவும், ஓசைகளையுடைய ஒன்பது தொளைகளே கழிமுகங்களாகவும், வழுக்குதலையுடைய மூக்காகிய ஆற்றினின்றெழுகும், வெள்ளம் வந்து ஓசை செய்யவும் இத்தன்மையாக, அமைக்கப் பெற்றுள்ள உடம்பாகிய பெரிய கடலில் நுகர்ச்சி யென்கிற சுழியினிடத்தகப்பட்டு இவ்வுலகத்தின்கண் ஆ! வருக என்னும் நினது திருவருளினை யடைந்தவர்கள் தலைவனே மரக்கலமாகிய நுன் திருவடிகளை.

(வி - ம்.) குடர்-குடல். ஆலா-நீர்ப்பறவை. துப்புரவு-நுகர்ச்சி. ஆவா - ஆ வருக. நாவாய் - மரக்கலம். பின்னகம் - பலவகை.

உக--௩உ. முந்திச் சென்று...ஒற்றியூரோயே

(இ - ள்.) முதலாகப் போய் முறைமையாகத் தொழுது, மனமாகிய பாய்மரத்தினைச் செம்மையாகிய நிலைமையில் நிலைபெறச்செய்து, கரைந்த அன்பென்னும் பாயினைவிரித்து, வளர்ந்துள்ள திடம் என்கிற கயிற்றில்கட்டிய, நெருங்கியுள்ள சுற்றமாகிய ஒளியுடைய தீயகயிற்றினை அறுத்தெறிந்து, நிலைத்துள்ள தனிமை என்கிற பொறியினை சுழற்றிக் காமமாகிய நிலமெனும் கொடிய வெளியிடம் அல்லாத புகையோடு கூடிய ஒளியுள்ள சுடரினை நோக்கிக் குறைவில்லாத அறிவென்னும் துழாவு கோலினை துழாவிக்கொண்டு, நெருங்காதிற்கும் அளவின்கண் நீண்ட கரையினை எற்றுதற்கு யாத்திரை செய்விப்பாய் போலும்.

(வி - ம்.) கூம்பு - பாய்மரம். பூரித்து - விரித்து. துன்னிய - நெருங்கிய. பார் - பூமி; நிலம். தூமம் - புகை. சுருங்கா - குறையாத. யாத்திரை - பயணம். (அ)

ஒற்றி யூர உலவா நின்குணம்
பற்றி யாரப் பரவுதல் பொருட்டா
என்னிடைப் பிறந்த இன்னுப் புன்மொழி
நின்னிடை அணுகா நீர்மைய ஆதலின்
ஆவலித் தழுதலில் அகன்ற அம்மனை
கேவலஞ் சேய்மையிற் கேளாள் ஆயினும்
பிறித்தற் கரிய பெற்றிய தாகிக்
குறைவினில் ஆர்த்துங் குழவிய தியல்பினை
அறியா தெண்ணில் ஊழிப் பிறவியின்
மயங்கிக் கண்ணிலர் கண்பெற் றுங்கே
தாய்தலைப் படநின் தாளிணை வணக்கம்
வாய்தலை அறியா மயக்குறும் வினையேன்
மல்கிய இன்பத் தோடுடன் கூடிய
எல்லையில் அவாவினில் இயற்றிய வாகக்
கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது
எட்டனை யாயினும் யான்அவிழ்க் கறியேன்
துன்னிடை இருளேனுந் தூற்றிடை ஒதுங்கி
வெள்ளிடை காண விருப்புறு வினையேன்
தந்தையுந் தாயுஞ் சாதியும் அறிவுநம்
சிந்தையுந் திருவுஞ் செல்கதித் திறனும்
துன்பமுந் துறவுந் தூய்மையும் அறிவும்
இன்பமும் புகழும் இவைபல பிறவும்

சுவைஒளி ஊறோசை நாற்றந் தோற்றம்
என்றிவை முதலா விளங்குவ எல்லாம்
ஒன்றநின் அடிக்கே ஒருங்குடன் வைத்து
நின்றனன் தமியேன் நின்னடி அல்லது
சார்வுமற் றின்மையில் தளர்ந்தோர் காட்சிச்
சேர்விட மதனைத் திறப்பட நாடி
எய்துதற் கரியோய் யான்இனிச்
செய்வதும் அறிவனோ தெரியுங் காலே.

௧—௧௧. ஒற்றி...வணக்கம்

(இ-ள்.) திருவொற்றியூரினைத் திருக்கோயிலாகக் கொண்டருள்வோனே! கெடாத உனது பண்புகளைக் கடைப்பிடித்து முழுவதும் பரவுதல் பொருட்டாக என்னிடத்தில் உண்டாகிய துன்பந்தரும் புல்லிய சொற்கள் தேவரீரிடம் செருங்காத குணமுடையன. ஆதலால் ஆசைப்பட்டு அழுதலை மனையினின்றும் தனிமையில் ஏவலின் பொருட்டாகத் தொலைவின்கண் நீங்கிய தம்தாய்தான் அவ்வழுகையின் ஒலியினைக் கேளாளாயினும் நீக்குதற்கரிய தன்மைத்தாகி குழவியின் பசியின் குறைவினை நோக்கி அவள் தானே பாலினை உண்பிக்கும் அழகிய குழந்தையினது தன்மையினைத் தெரிந்துகொள்ளாது பல ஊழிகாலங்கள் பல பிறவிகள் எடுத்து மயங்கிக் கண்ணில்லாத குருடர்கள் கண்ணொளியினைப் பெற்றாற் போலத் தாய் வளர்த்தல் போல உமது திருவடி இணையின் வணக்கமானது,

(வி - ம்.) உலவா—கெடாத. நீர்மைய - தன்மைய. ஆவலித்து - ஆசைப்பட்டு. கேவலம் - தனிமை.

௧௨—௨௨. வாய்தலை...பிறவும்

(இ - ள்.) உண்டாதலைத் தெரிந்து கொள்ளாது பிறவியினால் மயக்கத்தை அடையும் தீவினையுள்ள அடியேன், மிடிந்துள்ள சிற்றின்பத்துடன் பிரிவுபடாது ஒன்றாகக் கூடிய அளவில் ஆசை என்னுங் கயிற்றினால் கட்டப்பட்டதாகக் கட்டப்பட்ட பாசபந்தத்தினைத் தேவரீரே அவிழ்த்தால் அல்லாமல் எள் அளவேனும் யான் இதனை அவிழ்த்தற்குச் செய்யும் சூழ்ச்சி அறிந்திலேன். நெருங்கிய இடத்தி லுள்ள அறியாமை ஆகிய இருள் என்கிற புதரின்கண், ஒதுக்கமாகத் தங்கியிருந்து வெறுவெளியைக் காணும்படி விருப்பத்தை அடைகின்ற தீவினையுள்ளவனாகிய யான் அத்தனும் அன்னையும், உயர்ந்த இனமும், அறிவும், நமது மனமும் செல்வமும், அடைய வேண்டிய நிலையின் வகையும் துன்பமும், துறவும், துப்புரவும், மற்றப்புலன்களும், இன்பமும் சீர்த்தியும் இவை பல பிறவும்,

(வி - ம்.) வாய்தல் - உண்டாதல். மறுக்குறும் — மயங்கும். எட்டனை - எள்தனை. துன்னுதல் - நெருங்குதல். அறு - புதர். தூய்மை - துப்புரவு.

உ௬—௬0. சுவைஒளி...காலே

(இ - ள்.) நாவாலறியும் சுவையும், கண்ணாலறியும் உருவும், உடம்பாலறியும் ஊறும், செவியாலறியும் ஓசையும், மூக்காலறியும் மணமும் இவை முதலாக கூறப்படும் அனைத்தையும், நின் திருவடிக்கே பொருந்தும்படி முழுதும் உளமுவந்து ஒப்புவித்தல் செய்து, தேவரீரது திருவடியல்லாது வேறு பற்றின்மையின், அடியேன் தனித்தவனாய் நின்னை நோக்கி நின்றனன். துன்பத்தால் தளர்ச்சி யடைந்தவர்கள் தங்களது அறிவால் சேர்ந்து தங்கும் இடத்தினை வகைப்பட ஆராய்ந்து அடைதற்கு அருமையானவனே, ஆராயுமிடத்து அடியேன் இனிச் செய்வதும் அறிவேனோ?

(வி - ம்.) தமி - தனி. காட்சி - அறிவு.

சிவபெருமானின் அளப்பருந்தன்மையின் உண்மை வருமாறு :

எண்ணில்பல் கோடி சேவடி முடிகள்
எண்ணில்பல் கோடிதிண் தோள்கள்
எண்ணில்பல் கோடி திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முக இயல்பும்
எண்ணில்பல் கோடி யெல்லைக்கப் பாலாய்
நின்றைஞ்ஞூற் றந்தண ரேத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர்ஏர் வீழி
இவர்நம்மை யாளுடை யாரே."

—கூ. சேந்தனார், திருவீழி—கூ.

அளவில் பிறவிகளின் உண்மையினை

"பெறுகின்ற எண்ணிலி தாயரும்" (பக்கம். சுக.)

என்னும் பாட்டானோர்க.

சிவபெருமானே பந்தனை யறுத்து ஆளாக்கு முண்மை :

"அறிவி லாதவெ னைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமெய்ந்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதஇன் னருள்கள்பெற் றிருந்துமா றுடுதி பிணநெஞ்சே
கிறியெ லாம்மிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத் தாயென்னைக் கெடுமாறே."

—அ. திருச்சதகம், ௬உ.

சிவபெருமான் திருவடியை அடையும் வழி வருமாறு :

"வாழ்த்துவாய் வாழத்தா தொழிவாய் மறுசுழியிட்
டாழ்த்துவா யஃதறிவாய் நீயன்றே—யாழ்த்தகைய
வண்டார் பொழிற்கயிலை வாழ்கென் றிருப்பதே
கண்டாய் அடியேன் கடன்."

— கக. நக்கீரர், கைலைபாதி—உ௬. (கூ)

காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வ போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்று மாகிய முதல்வ போற்றி
அணைதோறுஞ் சிறக்கும் அமிர்தே போற்றி
இணைபிறி தில்லா ஈச போற்றி
ஆர்வஞ் செய்பவர்க் கணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சினை யமிர்தா நயந்தோய் போற்றி
விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காண முன்பொருள் கருத்துறை செம்மைக்
காணி யாகிய அரனே போற்றி
வெம்மை தண்மையென் றிவைகுணம் உடைமையிற்
பெண்ணெ டாண்எனும் பெயரோய் போற்றி
மேவிய அவர்தமை வீட்டினிற் படுக்கும்
தீப மாகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி
மேலோய் போற்றி வேதிய போற்றி
சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி
பொருளே போற்றி போற்றி என்றுனை
நாத்தழும் பிருக்க நவிற்றின் அல்லது
ஏத்துதற் குரியோர் யார்இரு நிலத்தே.

க—கச. காலற் . அரனே போற்றி

(இ - ள்.) நமனைச்சினந்தருளிய திருவடியுடையானே வணக்கம், மூலப்பகுதிக்கு மூலமாகிய தூமாயை தூவாமாயைகளுக்கு வினைமுதற் காரணமாகிய முதல்வனே போற்றி, திருவொற்றி மாநகரைத் திருக் கோவிலாகக் கொண்டருளியவனே போற்றி, உலக முழுதும் உருவ மாகிய தலைவனே போற்றி, நெருங்குந்தோறும் இன்பம் வளரும் அமிழ்தமானவனே போற்றி, ஒப்பார் வேறுபிறர் இல்லாத உடை யானே போற்றி, தேவரீர் திருவடிக்கு அன்பின் பெருக்காகிய ஆர்வம்

செய்பவர்களுக்கு நெருங்கியருள்பவனே போற்றி, நீங்குதலில்லாத இனிய சுவையினையுடைய தேனை யொப்பானே போற்றி, வஞ்சனை யுள்ள மனிதர்களைத் திருவுளத்திற் கொள்ளாதவனே போற்றி. ஆலாலம் எனப்படும் பெருநஞ்சினை அமிழ்தமாக விரும்பினவனே போற்றி, விரிந்த கடலால் சூழப்பட்டுள்ள மண்மேல் உள்ளார்க்கு மூலமானவனே போற்றி. யானை புலி முதலிய காட்டு விலங்குகளின் புரிவாகிய உடையினை உடுத்தவனே போற்றி, மறைப்பொருள் அறியா முன்னைக்காலத்துப் பொருளினை யறியும்வகை முனிவர் வேண்ட அவ் வேதக் கருத்தினைத் தெரிவிக்கச் செம்மையுள்ள உரையாணியாகின்ற சிவபெருமானே போற்றி;

(வி - ம்.) காலன் - நமன். சீறுதல் - சினத்தல். மூலம் - மூலப் பகுதி. அணைதல் - நெருங்குதல். இணை - ஒப்பு. ஈச - உடையான். தீர்வில் - நீங்குதலில்லாத. ஆணி - உரையாணி. புரிவு-நீக்கம்.

கடு—உஎ. வெம்மை ... நிலத்தே

(இ - ள்.) வெப்பம், தட்பம் என்ற இவற்றைக் குணமாகக் கொண்டருளுதலால் பெண்ணுருவுடன் ஆணுரு வென்னும் அம்மை யப்பனும் திருப்பெயருடையோனே போற்றி, நின் திருவடியடைதற் பொருட்டு விரும்பியவர்களைப் பேரின்ப வீட்டின்கண் பேரின்பந் துய்ப்பிக்கும் மூதறிவுச் சுடராகிய சிவபெருமானே போற்றி, காத்தற் றொழிலினை இயைந்தியக்குவதாகிய அதிட்டித்தலைப் புரிந்து திரு மாலாய் நின்றவனே போற்றி, அதுபோல் படைப்புத் தொழிலை அதிட்டித்து அயனாய் நின்றவனே போற்றி, மேலான பொருள்கள் அனைத்திற்கும் மேலானவனே போற்றி, வேதியனே போற்றி, நில வோனே போற்றி, வேள்வித்தழலோனே போற்றி, வானவர்கோனே போற்றி, அனைத்திற்கும் தலைவனே போற்றி, தேவதேவனே போற்றி, அழகனே போற்றி, குமரனே போற்றி, இன்பக் கூத்தியற்றுபவனே போற்றி. கலப்பினால் எல்லாப் பொருளும் ஆனவனே போற்றி, போற்றி போற்றி என்று பலமுறை போற்றி மறையோதித்தேவரீரை நாத்தழும்பு ஏறும்படி புகழ்ந்து வழிபடுதலல்லது பெரிய நிலத்தின்கண் ஒப்புயர் வற்ற மேனிலைக்கண் ஏற்றுதற்குத் தக்கவர் யாவர்? (எவருமிலர் என்பதாம்.)

(வி - ம்.) தீபம் - மூதறிவுச்சுடர்; ஞானச்சுடர். நவிற்றுதல் - உளம் உவந்துரைத்தல்.

மூலத்தொகுதியின் மெய்ம்மை வருமாறு :

" தூலமாம் உருவி னுக்குச் சூக்குமம் முதல தற்கு
மூலமான் அதற்கு மூலம் மோகினி அதன்மு தற்றான்
மேலதாம் விந்து சத்தி சிவம்இவை மிசையாம் எல்லாஞ்
சாலஇன் றருகும் ஆன்மாச் சிவத்தினைச் சார்ந்த போது."

—சிவஞானசித்தியார், உ. உ—௬எ.

எங்குமாய் எல்லாமாய் எம்மான் நிற்கு முண்மை வருமாறு :

" இன்று நமக்கெளிதே மாலுக்கும் நான்முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை—என்றமோர்

மூவா மதியானை மூவே முலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு.''

—கக. அம்மை, அற்புதம். கக.

திருவடியின்பம் நினைக்குந்தோறும் புத்தமிழ்தா யிருக்கும் உண்மை வருமாறு :

'' சந்தித்த கூற்றுக்குக் கூற்ரும் பிணிக்குத் தனிமருந்தாம்
சிந்திக்கிற் சிந்தா மணிஆகித் தித்தித் தமுதமுமாம்
வந்திக்கில் வந்தென்னை மால்செய்யும் வானோர் வணங்கநின்ற
அந்திக்கண் ஆடியி னனடி யார்களுக் காவனவே.''

—கக. சேரமான், பொன்—அ௩.

'' உணர்தார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம் பலத்தொருத்தன்
குணர்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடை
[தோள்
புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்
மணர்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே.''

—அ. திருக்கோவையார், கூ.

இத்திரு மறையும் மேலதனை வலி யுறுத்தும்.

சிவனுக்கு இணையாவார் ஒருவருமிலர் என்னும் உண்மை வருமாறு:

"தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்கும் குடியல்லோம் யாது மஞ்சோம்
மேவினோம் அவனடியார் அடியா ரோடும்
மென்மேலும் குடைந்தாடி யாடு வோமே.''

—அ. திருச்சதகம், ௩0.

'' தீர்வி லின்சுவைத் தேனே போற்றி '' என்னும் உண்மை வருமாறு :

'' தினைத்தனை உள்ளதோர் பூவினில்தேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும் புள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.''

—அ. திருக்கோத்தும்பி—௩.

மாதிருக்கும் பாதியனும் சிவபெருமான் உண்மை வருமாறு :

"வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே
கலந்தான் வலநீ றிடஞ்சாந் தெரிவலம் பந்திடமென்
பலந்தார் வலமிட மாடகம் வேல்வல மாழியிடஞ்
சலந்தாழ் சடைவலந் தண்ணங் குழலிடஞ் [1]சங்கரற்கே."

—கக. சேரமான், பொன்வண்ணம், ௫.

அம்மையின் பால் ஓதப்பெறும் "சாந்"தென்பது நீரிற் குழைத்த திருவெண்ணீறு. நீறெனக் கூறப்படுவது சாம்பர் பூச்சுக்கிலையுடைய திருவெண்ணீறு. முற்றழிப்புக் காலத்துச் சிவபெருமான் உற்றுவந்து பூசும் முழுநீற்றுச் சாம்பல். "சாம்பரகலத் தணிந்தாய் போற்றி" என்பதனுனறிக. ஆங்கு அம்மை அப்பனுளடங்கு மெய்ம்மையால் சாம்பர் என்க.

"நாத்தழும்பிருக்க எத்துதல் நற்றமிழ் பாடலே" இதுவருமாறு :

"பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி அம்பலத்
தாடு நின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே."

—அ. திருச்சதகம், க00.

(இதன்கண் தனித்தமிழ்ப் 'போற்றி" மந்திரம் ஆறு அமைந்துள்ளன. அவை சிவபெருமானின் க. "பெண்மை உ. ஆண்மை ௩. வண்மை ௪. எண்மை ௫. உண்மை ௬. திண்மை" என்னும் சிறப்புப் பண்புகள் ஆறனையும் குறிக்கும் திருக்குறிப்பாகும்.[2])

பட்டினத்துப் பிள்ளையார் பாடலிரு தாற்றுப்பத்
தட்டியதாள் வாழ்கவருள் அன்பு. (க0)

பதினொராந் திருமுறையிலுள்ள

திருப்பாடல்கள்

முற்றும்.

---

1. 'தோலுந்துகிலும்'. அ. திருக்கோத்தும்பி—கஅ.
2. "ஏவியிடர்க்". கூ. எ௫—க0.

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

[எண்: பக்க எண்]

மேற்கோள் செய்யுள் அகரவரிசை

[எண்: பக்க எண்]

விலை ரூ. 6-25